# திருக்குறள் மெய்ப்பொருளுரை





பாவலரேறு பெருஞ்சித்திரனார்

3

# பெருஞ்சித்திரனார்
# திருக்குறள் மெய்ப்பொருளுரை

(உரைச் சுருக்கம்)

**PERUNCHITHIRANAR'S**
**THIRUKKURAL**
**A PHILOSOPHICAL BRIEF COMMENTARY.**
(THIRD PART)

**மூன்றாம் பகுதி**
குறட்பாக்கள் 101 முதல் 180 வரை


வெளியீடு

**தென்மொழி பதிப்பகம்,**

**பாவலரேறு தமிழ்க்களம்,**

*1, வடக்குப்பட்டுச் சாலை,*
*மேடவாக்கம், சென்னை – 601 302.*
*தொலைபேசி : 044 – 22771231*

| | | |
|---|---|---|
| பதிப்பு | | முதல் பதிப்பு : தி.பி. 2037 மீனம் 19 (02.04.2006) |
| நூல் தலைப்பு | : | **பெருஞ்சித்திரனார் திருக்குறள் மெய்ப்பொருளுரை உரைச் சுருக்கம் – மூன்றாம் பகுதி** |
| ஆசிரியர் | : | பாவலரேறு பெருஞ்சித்திரனார் |
| வெளியீடு | : | **தென்மொழி பதிப்பகம், பாவலரேறு தமிழ்க்களம்,** 1, வடக்குப்பட்டுச் சாலை, மேடவாக்கம், சென்னை – 601 302. தொலைபேசி : 044 – 22771231 |
| அச்சாக்கம் | : | தென்மொழி அச்சகம், சென்னை – 601 302. |
| தாள் | : | வெள்ளைத்தாள் |
| பக்கங்கள் | : | 336 |
| அளவு | : | மடி(தெம்மி) 1/8 |
| படிகள் | : | 1000 |
| விலை | : | உரு. 120/- |

# பெருஞ்சித்திரனார்
# திருக்குறள் மெய்ப்பொருளுரை
# உரைச் சுருக்கம்

அதிகார அடைவுகள்

*அறம்முப்பத் தெட்டு பொருளெழுப தின்ப*
*உறவிருபத் தைந்தென் றுரை.*

*பாயிரம் நான்காம் பயனறம்முப் பன்னான்காம்*
*ஆயும் பொருளெழுப தாகுமே -- தோயுமுண்மைக்*
*காதல் மனைவியொடு நுண்காமம் ஐயைந்தாம்*
*ஓதும் திருக்குறள்என் றோது.*

# வெளியீட்டுரை

**துரைமா. பூங்குன்றன்** அறி.இ., க.மு., மெய்.மு.,

நம் பாவலரேறு ஐயா அவர்கள், இயற்கையின் இயக்கங்கள், அமைப்புகள், போக்குகள் அனைத்தையும் மெய்ப்பொருளறிவோடு பொருத்தி இவை ஒரு நெறியோடுதான் இயங்கவல்லன எனக் கூர்ந்தாயும் பழக்கம் உள்ளவர்கள். அனைத்து வாழ்வியல், அறிவியல் அறிவும் உள்ளடக்கியதுதான் மெய்ப்பொருளறிவு என முறைப்படுத்திக் கொண்டவர்கள்.

எனவே, திருக்குறளின் கருத்துகள் மெய்யறிவுப் பார்வையில் பார்க்கத் தக்கன எனப் பார்வையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். அப்பார்வையில் மிகவும் புதுமையான பொருள்களை, ஆங்காங்குத் திருக்குறளைப் பற்றிய சொற்பொழிவுகளில் வெளிப்படுத்துவார்கள். அரசியல் நெருக்கடிக் காலமான 1975-76ஆம் ஆண்டுகளில் அற்றை அரசு இவ்வுலக நடைமுறை வாழ்வினின்று பிரித்து ஓராண்டுக் காலம் ஐயா அவர்களைக் கொடுஞ்சிறையில் வைத்திருந்த காலத்தில்தான் திருக்குறளை மெய்ப்பொருள் நோக்கில் நோக்கி, அதைச் சார்ந்தே உரையெழுத அவர்களுக்கு எண்ணம் எழுந்தது. எனினும் திருக்குறளுக்குத் தாம் உரை எழுத விழைந்த நோக்கத்தை ஐயா அவர்களே தம் பொது முன்னுரையில் விளக்கியெழுதியுள்ளார்கள். அப் பொது முன்னுரை ஒவ்வொரு பகுதியிலும் இடம் பெறவில்லையென்ற கரணியத்தால் அப்பகுதியை மட்டும் உடனடிப்பார்வைக்கு இங்கு அளிக்கிறோம். இதை முழுமையாகப் பொதுமுன்னுரை தொகுதியில் காணலாம்.

## "உரை எழுத விழைந்த நோக்கமும் சூழலும் உருவாக்கத் திட்டமும்!

அழிவற்ற நம் அரும்பெரும் திருக்குறள் நூலுக்கு இன்றுகாறும் நூற்றைம்பதுக்கு மேற்பட்ட உரைகள், அது தோன்றிய நம் அறத்தமிழ் மொழியிலும், அண்டை அயல் மொழிகளிலும் தோன்றித் துலங்கி, மூல நூலுக்கு உயிர்ப்பும் செழிப்பும் சிறப்பும் பரப்பும் உயல்வும் பயில்வும் ஊட்டி வருகின்றன. திருக்குறள் போல் உலகில் தோன்றிய வேறு எம்மொழி நூலுக்கும், எவ்வற நூலுக்கும் இப் பலர்பால் உரைப்பேறு வாய்த்ததில்லை என்று வலிந்தும் துணிந்தும் கூறலாம்.

மக்கள் குலம் முழுமையும் கருத்தினும் செயலினும் மேம்பாட்டினும் அளாவியும், அனைத்துக் காலத்தையும் இடத்தையும் தழுவியும் நிற்கும் ஒரு தனிப்பேறாய் நின்றிலங்கும் ஓர் அரும்பெரும் அரிய அறநூலுக்கு, இத்துணை மாந்தப் பார்வை செல்வதும், அதன் மேல் இத்துணை ஆய்வு நோக்குகள் கொள்ளுவதும் வியப்பன்று; உரைப் பெருக்கம் சார்வது செயற்கையுமன்று; இயற்கையே! இந்நிலை இந்நூலுக்குப் பெருமையே தவிர, எனைத்தானும் சிறுமையே அன்று.

ஆயினும், இந்நூலுக்கு இன்றுவரை வெளிவந்த எம் கண்களிற்பட்ட நூலுரைகள் யாவும், அந்நூலின் கருப் பொருளுக்கும் திருப்பொலிவிற்கும், அஃகியகன்ற அறிவுச் செறிவிற்கும், உணர்வுத்திணர்வுக்கும், மெய்ப் பொருளுக்கும், உய்ப்பு அருளுக்கும் ஏற்றவாறு செய்யப் பெற்றுள்ளனவோ எனில், எம்மைப் பொறுத்த அளவினும் எம் சிற்றறிவிற்கு எட்டிய உணர்வினும் இல்லை என்றே சொல்ல வேண்டியுள்ளது.

இது பற்றியெல்லாம், கடந்த அரசியல் இருட்காலமாகிய **1975-76**-ஆம் ஆண்டுகளில், யாம் சிறைப்படுத்தப் பெற்று, ஓராண்டுக் காலம், சென்னை, நடுவண் சிறையுள் வைக்கப் பெற்றிருந்த பொழுது, தீவிரமாகச் சிந்திக்கவும், அதன் வழித் தக்கவொரு தீர்வுக்கு எம்மைக் கொளுவிக்கவும் வேண்டியிருந்தது.

இவ் வகையில், எம் விழித்திறவுக்கு மொழிப்புலங் காட்டிய, விழுப்பெருந் தோன்றல், தமிழ்ப்பேராசான், மொழிஞாயிறு **ஞா.தேவநேயப் பாவாணர்** புலப்படுத்திய, **'திருக்குறள்**

தமிழ்மரபுரை'யும், எமக்கு ஒரு சிறிதும் நிறைவளிக்கவில்லையெனின், பிறர் பிற உரைகளெல்லாம் பற்றிக் கூறுதல், வறட்பாறைக்கண் வளந்தேடுதல் போன்றதே! சுருங்கக் கூறுமிடத்து, திருக்குறள் - பரிமேலழகர் உரையே ஒரு பொறுக்கு மணியாக உள்ளது எனலாம். ஆனால், அவரின் இன, மதக் காப்புணர்வாலும், தமிழறக் காழ்ப்பெரிவாலும், மூல விடங்களிலெல்லாம் பெய்து போகிய ஆரியப் பார்ப்பனீயச் சார்புரைகளாலும், அவர் பழிக்கப்பட வேண்டிய அல்லது கண்டிக்கப்பட வேண்டிய - ஒருவராகவே உள்ளாரேயன்றி, அவர் கண்டு காட்டிய உரையூற்றம் இல்லாமற் போமாயின், திருக்குறள் மணியின் முழு ஒளிச் சிதறலையும் உலகம் உணர்ந்திராது என்னும் உண்மையை யாரும் மறைத்தோ மறுத்தோவிடற்கியலாது. எனினும் பரிமேலழகர் உரையின் புரைகளைப் பாவாணர் காட்டிய ஒருவகைப் பாங்கு ஓரளவு போற்றுதற்குரியதே என்க. அது, திருக்குறள் நோக்கிற்கே ஒரு திருப்பத்தைத் தந்தது எனலாம். ஆயினும், அவரும் பெரும்பாலான விடங்களில் பரிமேலழகர் பதித்துச் சென்ற காலடிகளின் மேலேயே தம் காலடிகளையும் வைத்துச் சென்றுள்ளது யாவர்க்கும் எளிதே புலப்பட்டு விடும் தன்மையதே.

இனி, பாவாணர்க்கு யாம் தந்த உரைச் சிறப்புப் பாயிரத்துள்,

*'பத்துரைக்கு மேலும் பரிமே லழகரோ(டு)*
*ஒத்தவுரை நூறுசெய்தும் ஒன்றாமே - மெத்ததிரு*
*வள்ளுவனார் நூலுக்கு வாய்மை உரைசெய்தார்*
*தெள்ளுதமிழ்ப் பாவாணர் தேர்ந்து'*

- பாடல்: 1.

**'திருக்குறள் தமிழ்மரபுரைச் சிறப்புப் பாயிரம்'.**

*'தேவநே யன்என்னும் தேர்ந்தமதிப் பாவாணர்*
*தேவத் திருக்குறட்குத் தீர்ந்தவுரை - மேவியபின்*
*மற்றோர் உரைசெயவும் மாறுவரோ? மாறுவரேல்*
*கற்றோர் நகைப்பர் கலித்து'*

மேற்படிநூல், பாடல்: 10.

- என்றோர் உறுதி கூறியிருந்ததும், பின்னர் யாம் மேலும் ஓர் உரையெழுதத் துணிந்ததும், காலத்தால் நேர்ந்த கட்டாயக் கருத்து வெளிப்பாடுகளே! அவ்வெளிப்பாட்டிற்கும்

அம்மெய்ப்பொருள் உணர்வே கரணியமாக அமைந்ததெனில், அது புனைவோ பொய்யோ ஆகா தென்க.

இனி, திருக்குறள் பற்றிய பெருமை கூறுகையில், யாவரினும் மேலாகவும் சுருக்கமாகவும், இடைக்காடர்,

*'கடுகைத் துளைத்(து) ஏழ் கடலைப் புகட்டிக்*
*குறுகத் தறித்த குறள்'*

*தி.வ.மா:* 54.

என்றும், ஔவையார் அதனினும் நுட்பமாக,

*'அணுவைத் துளைத்(து) ஏழ் கடலைப் புகட்டிக்*
*குறுகத் தறித்த குறள்'*

- *தி.வ.மா:* 55.

- என்றும் கூறுவர். இங்கு இருவரும் அஃது ஒரு கடல் போன்றது என்று கூறியது எண்ணி வியக்கத்தக்கது. உண்மையிலேயே திருக்குறள் சிந்தனையளவிலும், சொல்லளவிலும் கருத்தளவிலும், காலத்தையும் இடத்தையும் அளாவிப் படர்ந்து விரிந்து கிடக்கும், அறிஞர்கள் கடப்பதற்கு அரிதான ஒரு கடலைப் போன்றதே! அக்கூற்று மிகையன்று; அருமையும் பெருமையும் ஒருமையும் மிக்கதே!

அஃது அவ்வாறாயின், அதற்கு உரையெழுதுவது என்பதும், அக் கடலைக் கடைந்து, கருத்து வெண்ணெய் எடுத்து, உண்மை நெய் உருக்குகின்ற அளப்பரும் அருஞ்செயலாகும் என்பதும் உணரத்தக்கதாகும். ஆனாலும் திருக்குறள் கடலில் ஒருவாறு நீந்தியும் மூழ்கியும் ஆழங்கண்டும் அகலம் பார்த்தும், ஆங்குற்ற அணிமணிகளையும், நனி செல்வங்களையும் வாரிக் கொணர்ந்து கரை சேர்ப்பதும், பிறர் அறியக் காட்டுவிப்பதும் மகிழ்விப்பதுமே அத்துறையின்கண் போந்துநிற்கும் அனைத்துப் பேரறிஞரினதும் செய்கையாகும் என்க.

,என்னை? அதற்குக் காரணம் அத்தனைச் சுரங்கப் பொருள்கள் அதில் உள. அத்தனை அறிஞர் பெருமக்களும் காலந்தோறும் அச்சுரங்கத்துள் இறங்கி அவரால் இயலும் அணிமணிகளைச் சேர்க்கும் அறிவுப் பணியே இவ்வுலகிற்கு அவர்கள் தரும் செல்வச் சேர்ப்பாகும்; அவர்கள் விட்டுச் செல்லும் திருவறிவு வைப்பாகும்.

எனவே, திருக்குறளுக்கு உரைகள் மிகுதி, அதன் அறிவுப் பெருக்கத்தையே உணர்த்தும், என்க.

'முன்னம்பலர் உரைகாணினும்
முதற்பாவலர் நூலோ
இன்னம்பலர் உரைகாணினும்
இயல்பிற்றது மெய்யே!
சொன்னம்பல வென்னில்சில
சொல்வல்லிது மாண்பார்
பொன்னம்பல நாமன்முதற்
புலவீர் நனிகேண்மின்!'

- தனிப்பாடல்.

- என்னும் ஒரு பழம் பாடலின் உண்மையை ஓர்க.

மெய்ம்மங்கள் என்றும் உண்மையின் வடிவங்களே. இருப்பு நிலைகளே. வானும், புடவிகளும், கதிரும், விண்மீன்களும், காற்றும், நெருப்பும், நீரும், உலகமும், உயிர்களும், உயிருடல்களும், இவையுள்ளடக்கிய இயற்கையும் மெய்ம்மங்கள்தாம். மாந்தனும் ஒரு மெய்ம்மமே! அவன் சிந்தனைகளும் ஒளியையும் காற்றையும் போலும் மெய்ம்மங்களே! இயற்கையும் மெய்ம்மக்கூறே. அவற்றின் வடிவமே! இனி, இன்னும் தெளிவாகச் சொன்னால், அணுக்களும், அண்டங்களும் அவற்றின் இயக்கங்களும் மெய்ம்மமே! அவற்றின் தவறும் சரியும்கூட மெய்ம்மமே! அவற்றின் விரிவும் விளக்கங்களும் கூட மெய்ம்மமே!

- இவற்றின் மெய்ம்ம இருப்பையே திருக்குறள் கூறுகிறது. மெய்ம்மங்களின் - இயற்கையின் சுழற்சியிலே மாந்த மெய்ம்மத்தை மட்டும் தனியே பிரித்தெடுத்துக் கூர்மைப் படுத்தி, அதன் இயக்க நிலைகளைக் காட்டும் முயற்சியே திருக்குறள். அதன் முடிவு காண்கின்ற முயற்சிகளே உரைகள். அவற்றின் வெற்றியும் தோல்வியும் காலத்தையும் கருத்தையும் பொறுத்தன.

மாந்தருள் ஆண், பெண் பெயர்களும், ஆணுக்குத் தந்தை, மகன், அண்ணன், தம்பி, நண்பன், உறவன், கணவன் - முதலிய பெயர்களும், பெண்ணுக்குத் தாய், மகள், அக்கை, தங்கை, நண்பி, உறவி, மனைவி - முதலிய பெயர்களும், மாந்த மெய்ம்மத்தின் இருப்பு மாற்றங்களே! இவர்தம் உறவையும்

உறழ்வையும், அவற்றால் விளையும் பயன்களையும் விளக்குவதே திருக்குறள். அவற்றை மேலும் நன்கு புலப்படுமாறு விளங்கச் செய்வனவே உரைகள்! அவற்றின் நுல்லியத்தைக் காண்பதே இம் மெய்ப்பொருள் உரை!

இனி, திருக்குறளில் இவ்வளவுதாம் சொல்லலாம் என்பதில்லை; இன்னமும் சொல்லலாம்; எவ்வளவும் சொல்லலாம். உலக உயிர்களில் சிறந்து நிற்கும் மாந்தனின் உறவுகளையும், துய்ப்புகளையும், இன்ப துன்பங்களையும், எழுச்சி ஒடுக்கங்களையும் ஒருவாறு அடையாளம் காட்டி விளக்கிக் கூறுகிறது, திருக்குறள். அவற்றை இஃது இன்னின்னது என்று சுட்டிக் காட்டுகிறது இவ்வுரை.

இதில் சாதியில்லை; இனமில்லை. மாந்த இனத்தை வேறு பிரிக்கும் எந்த வேற்றுமைக் கூறும் இதில் இல்லை, என்க.

காற்று, உலகெங்கும் வீசிக்கொண்டிருந்தாலும் ஓர் இடத்திலும் உறைந்து நின்று விடாதது போல், மாந்த இனம் பல்வேறு இயக்கங்கட்கு ஆட்பட்டிருந்தாலும், ஒன்றினும் உறைந்துவிடக்கூடாது என்பதே திருக்குறள் கூறும் மாந்த மெய்ம்மம்.

மாந்தன் இயங்குவதுதான் இல்லறம், அரசியல், பொருளியல், வாழ்வியல்!

அவன் நின்று நிலைத்துவிடுவது தான் துறவறம், பேரா இயற்கை!

இந்நிலைகளையெல்லாம் முற்ற முடிந்த நிலையில் அடையாளம் காட்டிப் பேசுவதுதான் இம் மெய்ப்பொருள் உரை!"

இயல்பாகவே ஐயா அவர்களின் மெய்ப்பொருள் நோக்குக்குத் திருக்குறள் மிகவும் பொருந்தி வந்ததை உணர்ந்தார்கள். தாம் உணர்ந்த மெய்ப்பொருள் உணர்வை வெளிப்படுத்தத் திருக்குறளை ஒரு களமாக எடுத்துக்கொண்டதாகவும் கூறினார்கள்.

நெருக்கடிக்காலச் சிறையினின்று வெளிப்பட்டபின், தாம் எழுதிய உரைக்குறிப்புகளைப் படியெடுக்கவும் பிரிக்கவும் துணையாளர்கள் தேவைப்பட்டனர். அப்போது அப்பணிச்சுமை பற்றி அனைவரிடமும்

விளக்கினார்கள். அக்கால் தலைமைச் செயலகத்தில் பணியாற்றிவந்த திரு. வடிவேல் இராவணன், மந்தைவெளிப் பள்ளித் தமிழாசிரியர் திரு. தமிழ்நாவன் போன்றோர் ஓரிரு திங்கள் தொடர்ந்து மாலை நேரங்களில் படியெடுத்தும் வகைப்படுத்தியும் உதவி செய்தனர்.

நாள் எந்நேரமும் உரையைப் பற்றிய எண்ணமும் பேச்சுமாகவே ஐயா இயங்கி வந்தார்கள். இதற்கிடையில் 1982 இறுதியில் திரு. இளமாறன் அவர்கள் பவானியில் திருக்குறள் தொடர் சொற்பொழிவு நிகழ்ச்சி ஒன்று அமைத்தார். இச்சொற்பொழிவின் பின் இந்நூல் விரைவில் அமைவதற்கான சூழல் அமைந்ததெனினும் நடைமுறைப் போக்கில் அச்சூழல் நில்லாமற் போனது.

இதற்கிடையில் ஐயாவின் மகளான தங்கை செந்தாழை பட்டம் முடித்து வீட்டில் இருந்த காலத்தில் இப்பணிக்குத் துணையாக இருந்தது குறிப்பிடத்தக்கது. எனினும் அவர்க்கும் மணவாழ்க்கை அமைக்கப்பட்டது.

அதன்பின் சரியான துணைச் சூழல்கள் வாய்க்காமலும் இல்லத்தில் ஏற்பட்ட சிற்சில சிக்கல்களாலும் உரை எழுதும் பணி தடைப்பட்டது. அதன்பிறகு அரசியலிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டு வந்தன. ஐயாவின் பணி இதழ் வெளியீடுகளிலேயே தொடர்ந்து இருந்தது. இதற்கிடையில் 1991 சூன் மாதம் செயலலிதா ஆட்சியின் கொடுமையான சூழல் தமிழகத்தில் தொடங்கியது. ஐயா அவர்கள் மிகவும் இச்சூழலால் தமிழினத்தை எண்ணி வருந்தியிருந்தார்கள். அத்துடன் ஐயாவின் கண்களில் கதிர்முறையில் அறுவை செய்ய நேர்ந்தது.

இவ்விரண்டு அழுத்தமான நிகழ்வு எண்ணங்களோடு தென்மொழி அச்சகம் சென்றிருந்தபோது, தென்மொழி அச்சகப் பெயர்ப்பலகை வேறு காற்றினால் வீழ்ந்திருந்தது கண்டு திடுக்குற்றார். இவைபோன்ற மனச்சுமையான எண்ணங்களோடு ஒருநாள் இரவு உறக்கத்தினிடையில் திடீரென்று விழிப்பு வந்தபோது திருக்குறள் உரையை முடித்துவிட வேண்டும் என்ற முனைப்புப் பீறிட்டு எழுந்தது.

இதன்படி முதலில் உரைச் சுருக்கத்தை வெளியிட்டுவிட வேண்டும் என்ற உந்துதலில் அதற்கான பணிகளை மும்முரமாகத் தொடங்கினார். தென்மொழியில் முன்வெளியீட்டுத் திட்ட அறிக்கைகள் வெளிவந்தன.

அச்சிடுவதற்காகப் பெருந்தொகை வேண்டியிருந்ததாகையால் அத்தொகையில் தென்மொழி நெஞ்சங்களான திருவாளர்கள் ஈரோடை அரசமாணிக்கனார், மா.செ. தமிழ்மணியார், நிலா. வேங்கடவனார் முதலியோர் ஐயா அவர்களிடம் நூல் வெளியீட்டிற்குத் துணையாகத் தொகை விடுத்திருந்தனர். மேலும் முன்வெளியீட்டுத் திட்டத்தின்படி தென்மொழி அன்புள்ளத்தினர் சிலரும் தொகை விடுத்திருந்தனர்.

கதிரச்சுக்கோப்பில் பணி விரைவுபடுத்தப் பெற்று 10.3.93 அன்று வெளியிட்டுவிடத் திட்டமிடப்பெற்றது. இவ்வாறு மும்முரமாகத் திட்டமிட்டுப் பணி முனைப்பில் இருந்தபோது 1993 சனவரி 26-ஆம் பக்கலில் 'தடா'வில் ஐயா சிறைப்படுத்தப்பட்டார்கள். இந்த முறை சிறை ஐயாவிற்கு மன நைவையும், உடல் நலிவையும் ஏற்படுத்தியது. ஏழு திங்கள் சிறை வாழ்விற்குப் பின் வெளிவந்த பிறகு மீண்டும் திருக்குறளை வெளியிடும் பணியில் முனைந்தார். திருத்தத்திற்குப் பின் உரை நீண்டது.

இல்லறவியல் பகுதி வரை (240 குறள்களுக்கு மட்டும்) முழு நிறைவுபடுத்திவிட்டு முடிக்கும்போது அதைப் பற்றி ஐயா அவர்கள் நகைச்சுவையாகக் குறிப்பிட்டுப் பேசுகையில், "இல்லறவியல் வரையில் முடித்துவிட்டேன். இனி, துறவறவியல்தான் போக வேண்டும்" என்று கூறினார்கள். ஆனால் வாழ்க்கையையே துறப்பார் என்று அப்போது யாரும் எண்ணிப் பார்க்கவில்லை.

ஐயா அவர்களின் மறைவிற்குப் பின்னர், உயிர் முயற்சியான இந்நூலை வெளியிட வேண்டும் என்ற துடிப்பு அனைவரிடமும் இருந்தது. ஆனால் குறிப்புகள் ஒன்றும் விடுபடாமல் தொகுத்து வருவதற்குக் காலம் எடுத்துக்கொண்டது. முதல் நூறு திருக்குறளுக்கான உரை முதல் பகுதியை தி.பி.2028 (10-03-1997)-இல் முதல் பதிப்பாக வெளிக்கொணர்ந்தோம். இப்போது ஐயா அவர்களின் 73-ஆம் ஆண்டு நிறைவையொட்டி 2006-இல் இந்த முதல் பகுதியின் இரண்டாம் பதிப்பை வாங்குவோரின் சுமையைக் கருதி, பொதுமுன்னுரையை முதல்தொகுதி எனப்பிரித்தும் அத்துடன் இரண்டாம் தொகுதி, மூன்றாம் தொகுதி, நான்காம் தொகுதியெனத் தனித்தனியாகவும் தொடர்ந்து வெளிக்கொணர்ந்துள்ளோம். மேலும் ஐயா அவர்கள்,

துறவறவியலுக்கு எழுதிய அதிகார முன்னுரையையும், அடுத்து அவர் தொகுத்திருந்த அனைத்துக் குறள்களுக்குமான அரிய குறிப்புரை களையும் தொடர்ந்து வெளியிடவுள்ளோம்.

ஐயா அவர்கள் இவ் வடிவங்களைப் பார்க்காமல் சென்றிருந்தாலும் அவர்கள் குறித்திருந்தபடியே பதிப்புரையைத் திருக்குறள்மணி புலவர் இறைக்குருவனார் அவர்களும் வெளியீட்டுரையை நானும், தகவுரையைச் சொல்லாய்வு அறிஞர் ப. அருளியார் அவர்களும் எழுத அவை இணைக்கப்பட்டுள்ளன. திரு. அருளியார் எழுதிய தகவுரையை ஐயா அவர்களே பார்க்க நேர்ந்தது.

இம் மூன்றாம் நான்காம் பகுதிகள் கையெழுத்துப் படியிலிருந்து தமிழ்நிலத்தில் கணினியச்சுக்குக் கொணர்ந்த திருவாட்டி. அ.மு. செந்தாமரை செம்பரிதி, திருவாட்டி. செல்லின் சீவராசு ஆகியோர்க்கும், இதைத்தம் வினையமுத்தங்களுக்கிடையில் அக்கறையோடு முன்பாதியை மெய்ப்புப் பார்த்தளித்த எம் அன்புறவான ஐயா புலவர். கி.த.பச்சையப்பனார் அவர்களுக்கும், உடல் நலக்குறைவாக இருந்தும் அதைப் பொருட்படுத்தாமல் தென்மொழி இல்லத்திலேயே வந்திருந்து மெய்ப்புப்பார்த்த எம் அன்பு தமையனார் புலவர் கு. அண்டிரன் ஐயா அவர்களுக்கும், தென்மொழி பதிப்பகம் வெளியிடும் நூல்களின் அனைத்துப் பணிகளையும் மேற்பார்வையிட்டு யியக்கிவரும் திருக்குறள்மணி புலவர் இறைக்குருவனார் அவர்களுக்கும், தென்மொழியின் சுமை நேர்ந்தபோதெல்லாம் ஐயாவின் காலத்திலிருந்தே தோள் கொடுத்துவரும் குடும்பவுறுப்பினரான தென்மொழி ஈகவரசன் அவர்களுக்கும், அனைத்து நூல்களுக்கும் முகப்பு அட்டைவடிவங்களை உருவாக்கிய எம் மூத்த மகன் செல்வன் மா.பூ. தமிழ்மொய்ம்பனுக்கும் மற்றும் இந்த நூல்கள் உருவாகத் துணைநின்ற அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அ-2 இல்லறவியல்

## அ-2-7 செய்ந்நன்றி அறிதல் - 11

### *அதிகார முன்னுரை:*

*'**செய்ந்நன்றி அறித**'லாவது, அன்பும் ஆர்வமும் காட்டி, இன்முகம் கொண்டு, இனிது விருந்தோம்பி, நண்பெனும் நாடாச் சிறப்புப் பேணி, உலக அழுத்தத்தான் தாம் உளஞ்சோர்வுற்றிருந்த பொழுது, உழையிருந்து, அகத்தானாம் இன்சொல் வழங்கி, இனியவை கூறிப் பண்பின் தலைப்பிரியாது, பணிவுடையாராய் ஆற்றுதல் செய்த தகைமை மறவாது என்றென்றும் நன்றி நினைந்து, போற்றி, உற்றவிடத்து அவர் உவக்குமாறும் உய்யுமாறும் உதவியாற்றுதல் என்க.*

*இவ்வுலகத்துள்ளார் பெரும்பாலாரும் தம்மையும் தம் குடும்பத்தாரையுமே எண்ணி, இல்லவிடத்தும் உள்ளவிடத்தும் தந்நலமே பேணிப் பொதுநலம் மறந்து வாழ்ந்து வருதல் கண்கூடு ஆகலான், அவ்வாறின்றி, அவர் தமக்கு முன்பொருகால் ஆற்றுதல் செய்தவரை அகத்து நினைந்து புறத்துப் பேணித் தாமும் நன்று செய்தல் பொது நலப் பேரறன் ஆகுமென்று அறிவுறுத்தியதாகும், இது.*

*நன்று செய்தல் நன்றியாயிற்று. இனிச் செய்த நன்றுக்குத் தாமும் தேவையானவிடத்து நன்று செய்தல் '**செய்ந்நன்றி அறிதல்**' ஆயிற்று. நன்று, நன்றியானது. நன்றுக்கு நன்று செய்தலைப் பிரித்துக் காட்டவே தனிச் சொல்லானது என்க.*

'**அன்புடைமை**'யான் '**விருந்தோம்பி**'யும், '**இனியவை கூறி**'யும் ஆற்றுவித்தார் செய்த நன்றியறிந்து போற்றிக் கொளல் நல்லறம் வழுவா இல்லறம் ஆகலின், அவற்றின் பின்னர் இது வைக்கப் பெற்றது, என்க.

உலகப் பொதுவுறவாண்மைக்கு இஃது இன்றியமையாத தாகலின் இது மறத்தல் கூடாதெனல் பொருட்டு '**அறிதல்**' என்னும் சொல் கூட்டி வலியுறுத்தினார் என்க.

## க0க. செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது. 101

பொருள்கோள் முறை : இயல்பு

**பொழிப்புரை:** ஒருவர், தமக்கு (இதற்கு முன்னர்) எவ்வுதவியும் செய்யாதிருந்த நிலையிலும், தாம் அவர்க்கு(த் தேவையான பொழுது தேவையான அளவில்) செய்த ஓர் உதவிக்கு, (இணையாக) இவ் வையகமும் வானகமுங்கூடச் செய்வது கடினம்.

**சில விளக்கக் குறிப்புகள்:**

1. **செய்யாமல் செய்த உதவிக்கு** - ஒருவர், தமக்கு (இதற்கு முன்னர்) எவ்வுதவியும் செய்யாதிருந்த நிலையிலும், தாம் அவர்க்கு(த் தேவையான அளவில்) செய்த உதவிக்கு (இணையாக).

   - '**செய்யாமற் செய்த உதவி**' என்பதில், உதவியினது பெருமையும், சிறப்பும், அருமையும் புலனாயின. 'செய்யாமல்' என்னும் சொல் செய்தாரையும் பிறரையும் ஒருங்கே குறிக்கும். இதுவரை 'செய்யாத உதவி' என்பதில் அவரையும், 'ஏதோ ஒரு காரணத்தால் செய்யவியலாத, செய்ய விரும்பாத அல்லது 'செய்ய அஞ்சிய' என்பதில் பிறரையும் குறித்தது.

   - பிறர் 'செய்யவியலாததை இவர் செய்தார்' என்பதில் பெருமையும், 'அவர் செய்ய விரும்பாததை இவர் செய்தார்' என்பதில் சிறப்பும், அவர் 'செய்ய அஞ்சியதை இவர் செய்தார்' என்பதில் அருமையும் புலனாயினவாறு.

   - **செய்தல்** - நிகழ்த்துதல் - ஆற்றுதல்

   - 'செயல்' என்னும் பொருளில் வருகின்ற அனைத்துத் தமிழ்ச் சொற்களும் 'உழவை' அடிப்படையாகக் கொண்டு வரும் விளக்கங்கள் முன்னரே (14-ஆம் குறள் விளக்கத்தில் காட்டப்பெற்றன).

2. **வையகமும் வானகமும் ஆற்றல் அரிது** - இவ்வுலகத்துள்ள நிலத்தையும், வானில் உள்ள மழைமேகத்தையும் வையகமும் வானகமும் என்றார். (வானம் இடவாகு பெயராக மேகத்தையும் சிறப்பாக மழை மேகத்தையும் அஃதாவது மழையையும் குறித்தது).

- நிலம் ஆற்றுதல் பயிர் விளைவை. வானகம் ஆற்றுதல் மழையை. ஆற்றல் - ஆற்றுதல் - உதவுதல். இங்கு மக்களுக்கு உதவுதல்.

**'ஆற்றுதல் என்பதொன் றலந்தவர்க் குதவுதல்'** (கலி.)

- என்றார் பிறரும்.

பயிரை நிலமும் அஃதாவது வையகமும், மழையை வானகமும் உருவாக்கி மக்களுக்கு உதவுதல், கேளாமலேயே செய்கின்ற உதவிகளாகும்.

இவ் வுதவிகளை, மக்கள் வையகத்திற்கும் வானகத்திற்கும் எந்த நலனும் செய்யமால் இருக்கும் போதே அவை செய்தலால் அவை செய்யாமற் செய்த உதவிகளாயின.

ஒருவர்க்கு இன்னொருவர், அவர் எந்த உதவியும் செய்யாமைப் போதே செய்த உதவியையும், வையகமும் வானகமும் மக்கள் ஏதும் அவற்றுக்கு உதவாமைப் போதே செய்யும் உதவியையும் ஒப்பிட்டுக் காட்டி, அவை ஆற்றுகின்ற உதவிகளைவிட அவ் வின்னொருவர் செய்யும் உதவி மேலானது என்னும் பொருள் பெறுமாறு இக் கருத்தைக் கூறினார் என்க.

அஃதாவது, ஒருவர் தமக்கு இதுவரை எந்த உதவியும் செய்யாதிருக்கும் நிலையிலும், தாம் அவர்க்குச் செய்கின்ற உதவிக்கு இணையாக இவ் வையகமும், வானகமுங்கூடச் செய்வது கடினம் - அரிது - என்றார் என்க.

என்னை? வையகம் மக்களுக்கு உதவும் பயிர் விளைவை அவர்கள் அதற்கு எந்த உதவியும் செய்யாத பொழுதே உண்டாக்கித் தருமெனினும், அவர்களுக்குத் தேவையான விடத்துத் தேவையான பொழுது தேவையானதைத் தேவையான அளவு தராமற் போவதால், அவ்வுதவி மக்களுள் ஒருவர் இன்னொருவர்க்கு, அவர்க்குத் தேவையானவிடத்துத் தேவையான பொழுது தேவையானதைத் தேவையான அளவில் செய்கின்ற உதவிபோல் சிறப்புப் பெறாது என்க. எனவே, இத்தகு சிறப்பான உதவிக்கு இணையாக அது செய்வது அரிது என்றார் என்க.

இனி, வையகத்தைப் போலவே, வானகமும் தன்னகத்துள்ள மழையையும் அவ்வாறு தருதல் அல்லது உதவுதல் அல்லது செய்தல் அல்லது ஆற்றுதல் அரிது என்றார் என்க.

இவ்வுலகின்கண், செய்யாமற் செய்த உதவிகளாகக் கருதப் பெறுபவை இரண்டே. அவை நில விளைவாகிய பயிர் விளையும், வான்விளைவாகிய மழையுமே ஆகும். இவ்விடத்துக் 'கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரி மாட்டு' என்னும் குறளும் நினைக்கற் பாலது. இவ்வுதவிகளுங்கூட மக்களுக்குள் ஒருவர்க்கொருவர் செய்யாமல் செய்யும் உதவி போல் முற்கூறிய ஏதுக்களால் பெருமையும் அருமையும் சிறப்பும் உடையன அல்ல. எனவே இவர்களது செய்யாமற் செய்த உதவிபோல் வையகமும் வானகமும் செய்வது கடினம் - அரிது என்றார்.

இனி, 'அரிது' என்னும் சொல் 'அறவே இயலாது' என்னும் பொருளைத் தராமல், ஓரிருகால் இயலும் என்னும் பொருளையும் தருவதால், ஒரோவொருகால் இயற்கையாக அவ்வாறு நிகழ்வதும் உளதாகலாம் என்று குறிப்பின் உணர்த்தினார் என்றலும் சாலும் என்க.

இனி, இக் குறட்பகுதிக்கு, மணக்குடவர், 'உலகமும் சுவர்க்கமும் நிறையாற்றுதல் அரிது' என்றும், பரிதியார், 'பூமி ஆகாசம் இரண்டும் நிகரல்ல' என்றும், காளிங்கர், 'உதவியின் பெருமைக்குக் கைம்மாறு சீர்தூக்கின் அவர்க்கு இம்மை மறுமை இரண்டுக்கும் நிறையாற்றுதல் அரிது' என்றும், இற்றைப் பாவாணர் உள்ளிட்ட பிறர் பிறரும் ஏறவும் தாழவும் அவர்களையொட்டியும் பற்றியுமே முற்றிலும் பொருந்தா வுரைகளையே புகன்றனர் என்க. அவை கொள்ளத்தக்கன வல்ல.

அவ்வாறு அவர்கள் தவறாகப் பொருள் கொண்டமைக்கு 'உதவிக்கு ஆற்றுதல் அரிது' என்று இயைபு படுத்திப் பொருள் கண்டதே காரணமாம் என்க. அதனை அவ்வாறு கொள்ளாமல் 'இணையாக' என்னும் ஒருசொல்லை இடையிட்டு, 'உதவிக்கு இணையாக ஆற்றுதல் அரிது' என்று வருவித்துப் பொருள் கொள்ளுதலே தக்கதும் ஒக்கதுமாம் என்க.

3. இதில், செய்த நன்றியை அறிதல் (நினைத்தல்) வேண்டிய இன்றியமையாமையை உணர்த்தினார்.

**க0உ. காலத்தி னால்செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது. 102**

**பொருள்கோள் முறை: இயல்பு.**

**பொழிப்புரை:** ஒருவர்க்கு (இக்கட்டான, தேவையான) காலத்தில் செய்த நல்லுதவி, (தம் மதிப்பிலும், பொருள் அளவிலும்) சிறியதாகவே

இருப்பினும், (அதன் இன்றியமையாமையை நோக்க), இவ் வுலகத்தை விட மிகவும் பெரியதாகவே அது கருதப்பட வேண்டுவதாகும்.

**சில விளக்கக் குறிப்புகள்:**

1. **காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும்** - ஒருவர்க்கு ஓர் இக்கட்டும், ஒரு தேவையும் வந்துற்ற காலத்தில் மற்றொருவர் செய்த உதவி, தம் தகுதியை நோக்கவும், பொருள் அளவைக் கருதவும், சிறியதாகவே இருப்பினும்,

 'உதவி வரைத்தன்று' - என்னும் குறளில் (105) தம் தகுதி நிலையும், 'தினைத்துணை' - என்னும் குறளில் (104) பொருள் அளவும் கூறுவார்.

 காலம் - நீண்டு சென்று கொண்டிருத்தலால் பொழுதைக் குறித்தது. கால் நீண்டது. நீண்டுள்ளதாலேயே உடல் உறுப்பையும் குறித்தது. காலுதல் - நீளுதல்.

 நீண்டு சென்று கொண்டிருப்பதாலேயே 'கால்' என்னும் சொல் 'காற்றை'யும் குறித்தது. கால் + து > காற்று (காத்து) து - பெயர்ச் சொல் ஈறு.

 சிறிது - 'சில்' என்னும் வேரடியாகப் பிறந்த சொல். அளவில் சிறுமையைக் குறிக்கும்.

 சில் - சில - எண்ணளவில் குறைவானது.

 சில் X பல் - பல - எண்ணளவில் நிறைவானது.

 நிறைய இருப்பதால் 'பல்' என்னும் உறுப்பையும் குறித்து நின்றது.

 சில் + து > சில்து > சிற்று > சிட்டு - அளவில் சிறிய குருவியைக் குறித்தது.

 சில்து - சிற்று - சிறிது - அளவில் கொஞ்சம்.

2. **ஞாலத்தின் மாணப் பெரிது** - இவ் வுலகத்தினும் மிகவும் பெரியது. ஞாலம் - உலகம். வானில் பற்றின்றித் தொங்கிக் கொண்டிருப்பதால் அப்பெயர் பெற்றது. ஞாலுதல் - தொங்குதல். (உலகம் என்னும் சொல்லுக்கும் அது தொடர்பான பிறசொற்களுக்கும் ஆன பிற விளக்கங்கள் முன்னரே (குறள்-1-இல்) தரப்பெற்றுள்ளன.

 மாண - பெரிய - இங்கு மிகவும் எனும் பொருள் தந்தது. மா - மாண் - பெரிய.

 மாணப் பெரிது - பெரிய பெரிது - மிகவும் பெரிது.

 - **'ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**
 **கருதி இடத்தால் செயின்'** - **484**

 - என்னும் குறளின் கருத்துப் படி, பெரியது ஒன்றாலேயே சிறியது

பெறப்படுவதாகலின், பெறுகின்று முயற்சி பெரியதும், பெறப்படும் ஞாலம் சிறியதும் ஆகியதை இங்குக் கருதுதல் வேண்டும்.

எனவே, காலத்தால் செய்யப் பெற்ற உதவியைப் பார்க்கினும் ஞாலம் சிறியதாயிற்று. ஆகலின் 'ஞாலத்தின் மிகப் பெரியது' என்றார், என்க.

3. இதனால், உதவி செய்வதில் பிறவற்றினும், செய்யப்பெறும் காலமே முகாமை வாய்ந்தது என்பது பெறப்பட்டது. முன்னர்ச் செய்யாமற் செய்யும் உதவியின் சிறப்பும் பெருமையும் கூறியவர், அது செய்யப்பட வேண்டிய காலத்தை முற்படுத்தி இதிற் கூறியதால், அதன் பின்னர் இது வைக்கப்பெற்றது.

## க0ங. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின் நன்மை கடலின் பெரிது. 103

**பொருள்கோள் முறை: இயல்பு.**

**பொழிப்புரை** : *(ஒருவர்க்கு உதவி செய்யும் பொழுது) அவரால் தமக்கு என்ன பயன் கிடைக்கும், எவ்வளவு பயன் கிடைக்கும் என்றெல்லாம் சீர்தூக்கிச் சிந்தித்துப் பாராமல் செய்கின்ற உதவியை நடுநிலையோடு ஆராய்ந்து பார்த்தால், அதனால் கிடைக்கும் நன்மை கடலினது நன்மையை விடப் பெரியது.*

**சில விளக்கக் குறிப்புகள்:**

1. **பயன்தூக்கார் செய்த உதவி** - *தாம் உதவி செய்பவரால் தமக்கு என்ன பயன் எவ்வளவில் கிடைக்கும் என்றெல்லாம் சீர்தூக்கிச் சிந்தித்துப் பாராமல் செய்கின்ற உதவி.*

   - பெரும்பாலும் ஒருவர்க்கு ஒருவர் உதவி செய்யுங்கால், அவரால் இவ்வுதவிக்கு ஈடாகத் தமக்குப் பின்னால் என்ன பயன் கிடைக்கும். எவ்வளவில் கிடைக்கும் என்று சிந்தித்துப் பார்ப்பதே உலகியல் வழக்கமாக உள்ளது. ஆனால் இவ்வாறெல்லாம் சிந்தித்துப் பாராமல் உதவி செய்தலே சிறப்பு என்றார். இத்தகைய உதவியே மேலான உதவி என்பது நூலாசிரியர் கருத்து. இங்குக் கீழுள்ள ஔவையாரின் பாடல் நினைக்கத் தகுந்தது.

**நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி**
**என்று தருங்கொல் எனவேண்டா - நின்று**
**தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்**
**தலையாலே தான்தருத லால்** - *வாக்குண்டாம்!*

இங்குத் தூக்குதல் என்பது துலாக்கோல் கொண்டு சீர்தூக்கிப் பார்ப்பதுபோல் ஆராய்ந்து பார்த்தலைக் குறித்தது. துலாக்கோலைத் தூக்கிப் பார்ப்பதால், தூக்குதல் ஆராய்ந்து பார்த்தலைக் குறித்தது என்க. தூ - மேல், வானம். கூ - நிலம், ஓரெழுத்தொரு மொழிகள். எனவே தூக்கு - என்பது, தரையினின்று மேலே உயர்த்திப் பார்ப்பதைக் குறித்தது, என்க.

2. **நயன் தூக்கின்** - நடுநிலையாக ஆராய்ந்தால் *(194)* நயன் - இங்கு நேர்மை, நடுநிலை, நீதி (வ.சொ.). (பார்க்க . பாவாணரின் தமிழ் மரபுரை, குறள்.97).

இந்நூலில் இச்சொல் **நயம், நயன்** என இயல்பு, போலி ஆகிய இருவகையிலும் பயன்படுத்தப் பெறுகிறது.

இவற்றுள் 'நயம்' என்னும் இயல்பான சொல் விருப்பம் என்னும் பொருளில், *147, 150, 439, 580, 1181, 1232* ஆகிய ஆறு இடங்களிலும்,

- **இணக்கம், உடன்படல்** என்னும் பொருளில் *1189, 1190* ஆகிய இரண்டு இடங்களிலும்,

- **நட்பு** என்னும் பொருளில் *860* ஆகிய ஓர் இடத்திலும்,

- **நன்மை** என்னும் பொருளில் *314, 998* ஆகிய இரண்டு இடங்களிலும்,

- **சிறப்பு** என்னும் பொருளில் *783* ஆகிய ஓர் இடத்திலும், ஆக மொத்தம் பன்னிரண்டு இடங்களிலும்,

- **நயன்** என்னும் ஈற்றுப் போலிச் சொல், விருப்பம் என்னும் பொருளில் *192, 197* ஆகிய இரண்டு இடங்களிலும்,

- **சிறப்பு** என்னும் பொருளில் *97* ஆகிய ஓர் இடத்திலும்,

- **நேர்மை, நடுநிலை, (நீதி)** என்னும் பொருள்களில் *103, 193, 194, 216, 219, 912* ஆகிய ஆறு இடங்களிலும்

ஆக மொத்தம் ஒன்பது இடங்களிலும் வருகின்றன.

எனினும், பொதுவாக நயம், நயன் இரண்டு சொற்களுக்கும் நடுநிலை அல்லது நேர்மை என்பதும் விருப்பம் என்பதுமே பொருளாகும்.

இனி, 'நயம்' என்னும் சொல்லே 'நாயம்', 'ஞாயம்' என்று வளர்ந்து நின்றது.

'நயம்' என்னும் சொல்லை வடநூலார் 'நியாயம்' என்று திரித்துக் கொண்டனர்.

3. **நன்மை கடலின் பெரிது** - அத்தகைய உதவியின் நன்மை கடலினது நன்மையினும் பெரிது என்பதாம்.

என்னை? 'கடலின் பெரிது' என்பதைக் 'கடலினும் பெரிது' என்று பொருள் கொள்வது, மிகைப்படுத்திக் கூறுவதாகும் (exaggeration).

அல்லது பொருளின்றி வெறுமையாகக் கூறியதாகிவிடும் என்க. இவ்வாறு கூறுவது அறநூலார்க்குப் பொருந்துவதன்று.

கதைபோல் கூறுவதும், கற்பனையாகக் கூறுவதும், அழகுபடுத்திக் கூறுவதும் அறநூலுக் கொவ்வா என்க.

'அவ்வாறாயின் எப்படி' என்று ஒரு வினாவெழுப்பின், இப்படி என்று எவரும் விடைகூறுதற் கியலாது.

பொருத்திக் கூறவியலாத உவமையோ, பொருள் தெளிவற்ற எடுத்துக் காட்டோ அறநூலுள் மேற்கொள்வது இழுக்காகும்.

'கடலைவிடப் பெரிது' என்று சிறுபிள்ளைத்தனமாக ஒரு பேச்சுக்குக் கூறுவது, உலகியலுக்கும், கலைக்கும், ஆரியத் தொன்ம (புராண)த்திற்கும் பொருந்துவதாகும். எனவே, நூலாசிரியர் கருத்து இஃதாதல் இயலாது.

பின்னை அவர் கருத்து ஏதுவாக இருக்குமெனில், கூறுவாம்.

கடல் பெரிதெனினும் அதன் நீர் நேரிடையாகக் குடித்தற்காகாது.

**மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்**
**உடல்சிறியர் என்றிருக்க வேண்டா - கடல்பெரிது**
**மண்ணீரும் ஆகா(து); அதனருகே சிற்றூறல்**
**உண்ணீரும் ஆகி விடும்.** - வாக்குண்டாம்.12.

என்றார் பிறரும்.

கடலால் கிடைக்கும் தனிமாந்த நன்மை உப்பு ஒன்றே. பொது மாந்த நன்மை மழை. மற்றும் அதனின்று கிடைக்கும் மீன்வகை. உணாவோ புலால் உண்பார்க்கே பொருந்துவது. இவற்றின் மேலும் அதனின்று கிடைப்பன முத்து, பவளம், சங்கு போலும் அணிமணிப் பொருள்களே. இவையனைத்தும் உடல் நலத்துக் குகந்தவையே, உள நலத்துக்கு ஆகியவை அல்ல.

ஒருவர்க்குச் செய்யும் உதவி அவரது மானம் காத்து உளத்துக்கும் வாழ்வுக்கும் நலஞ்செய்வதாகையால், அவ்வுதவி கடலினின்று கிடைக்கும் உதவியினும் பெரிது என்றார், என்க. இதனால்தான் 'நடுநிலையோடு ஆராய்ந்து பார்த்தால்' - நயன் தூக்கின் - என்றார். மற்றபடி நடுநிலையோடு ஆராய்ந்து பார்ப்பதற்கு அதில் ஒன்றும் இல்லை. அவ்வாறல்லாவிடில் அவையும் வெற்றுச் சொற்கள் ஆகிவிடுவது காண்க.

இனி, இக்குறளுக்கும் முன்னைக் குறளுக்குப் போலவே உரையாசிரியர் அனைவரும் பொருந்தாப் பொருளே புகன்றுள்ளனர் என்க.

மணக்குடவர், 'தமக்கு ஒருபயனை நோக்காதவராய்ச் செய்த உபகாரத்தால் உண்டாய நன்மையை ஆராயின் அதனாலுண்டாய நன்மை கடலினும் பெரிது' என்றும்,

*பரிதியார், 'பயன் தூக்காமல் செய்த நன்றிக்கு எழுகடலும் (தேவையில்லாத விளக்கம்) நிகரல்ல' என்றும்,*

*காலிங்கர், 'உதவியினது நன்மையைச் சீர்தூக்கின் அவ்வுதவித் தன்மையினது நன்மை கடலினும் பெரியதாம்' என்றும்,*

*பரிமேலழகரோ, 'இவர்க்கு இது செய்தால் இன்னது பயக்கும் என்று ஆராய்தலில்லாராய்ச் செய்த உதவியாகிய ஈரமுடைமையை ஆராயின் அதன் நன்மை கடலினும் பெரியதாம்' என்றுமே கூறுகின்றனர்.*

*இனி, இக்கால உரையாசிரியருள் மொழித்திறன் மிக்க மூதறிஞராகிய தேவநேயப்பாவாணரும், மேற்கண்ட உரையாசிரியர்களை யொப்பவே, 'இவருக்கு இன்னது செய்தால் நமக்கு இன்னது கிடைக்குமென்று ஆராயாது ஒருவர் செய்த உதவியின் அருமையை ஆய்ந்து நோக்கின், அதன் நன்மை கடலினும் பெரியதாம்' என்றே பொருளுரைத்ததோடன்றி, முன்னைய குறள் கருத்தையும் இணைத்துக் கொண்டு, 'காலத்தினாற் செய்த நன்றி பயன்தூக்கியதாகவும் இருக்கலா மாதலால், பயன் தூக்காது செய்த உதவியும் ஒருவகையில் பெரியதே என்றார்' என்று விளக்கமும் கூறுவார்.*

*- என்றிவ்வாறு கூறப்பெற்ற உரைகள் அனைத்தும் ஒரே உரை கல்லில் உரைத்துக் கண்ட முடிவுகளே ஆகலின் அவற்றுள் சிறப்போ, நூலாசிரியர் கருத்தோ இல்லை என்க.*

*இதனால், செய்யாமற் செய்யினும், காலத்தினால் செய்யினும், ஓர் உதவி பயன் கருதாமல் செய்ய வேண்டும். அதுவே பெரிது, சிறப்புடையது என்று பரிமாணம் கூறி விளக்கினார் என்க.*

*மேற்கூறிய மூன்று பாடல்களானும் செய்கின்ற உதவியினது பெருமையும், செய்வாரது சிறப்புத் தன்மையும் விளக்கிக் கூறினார்.*

*இனிச் செய்யப்பெறுகின்ற உதவியைப் பெற்றுக் கொள்வார்தம் சிறப்பு நிலைகளைக் கூறுவார்.*

**க0௪. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்**
**கொள்வர் பயன்தெரி வார். - 104**

**பொருள்கோள் முறை:**

***பயன்தெரிவார், தினைத்துணை நன்றி***
***செயினும் பனைத்துணையாக் கொள்வர்.***

**பொழிப்புரை:** *(கருவியாகிய) பொருட் பயனும், (கருமமாகிய) செயற் பயனும்*

நன்கு உணர்ந்தவர்கள் (தமக்கு ஒன்று உற்றவிடத்து, அளவிலும் பயனிலும்) தினைக்கு இணையாகப் பிறர் உதவி செய்தாலும், அதையே அவர் பனைக்கு இணையாகக் கருதித் தம் திறமையால் பல மடங்குப் பெருக்கிக் கொள்வர்.

**சில விளக்கக் குறிப்புகள்:**

**1. பயன் தெரிவார்** - செயற் கருவியாகிய பொருளினது பயனும், அதனைக் கொண்டு ஆற்றும் செயற்பயனும் நன்கு உணர்ந்தவர்கள்.

- இவ் வுலகில் உள்ளார் அனைவர்க்கும் அனைத்துக்கும் பொருள் தேவை என்றாலும், அதைப் பயனுடைய வழிகளிற் பயன்படுத்தத் தெரிந்தவர்கள் மிகச் சிலரே யாவர்.

- சிறிய பொருள் முதலீட்டைக் கொண்டு அதனையே ஏதானும் தமக்குத் தெரிந்த தொழிலில் அல்லது துறையில் ஈடுபடுத்தி, அதையே நாளடைவில் பலமடங்கு பெருகச் செய்யும் திறமையுடையவர்கள் ஒருசிலரே ஆவர்.

- அவர்களையே இங்குப் 'பயன்தெரிவார்' என்று விதந்து கூறுகிறார். பொருட்பயனும் செயற்பயனும் தெரியாதவர்கள், எத்துணைப் பேரளவு பொருளையும் பல ஆரவார வழிகளில் ஈடுபடுத்தி வீணடித்து விடுவது பெரும்பாலார்க்கும் இயல்பாக உள்ள உலகியல். **'வல்லவற்குப் புல்லும் ஆயுதம்'** என்னும் பழமொழியை ஓர்க.

**'நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்**
**கல்மேல் எழுத்துப்போல் காணுமே - அல்லாத**
**ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்**
**நீர்மேல் எழுத்துக்கு நேர்.** - வாக்குண்டாம் : 2

- என்னும் பாடலையும் காண்க.

**2. தினைத்துணை நன்றி செயினும்** - பயன் தெரிபவர்க்கு, அளவிலும் பயனிலும் தினைக்கு இணையாக ஒருவர் உதவி செய்தாலும்.

**3. பனைத்துணையாக் கொள்வர்** - பனைக்கு இணையாக அளவிலும் பயனிலும் அவ்வுதவியைப் பயன்படுத்திக் கொள்வர்.

தினை, பனை என்னும் எடுத்துக்காட்டுகளுக்கு மணக்குடவர் முதல் பரிதியார், காலிங்கர், பரிமேலழகர் உள்ளிட்டு இற்றைப் பாவாணர் வரை வெறும் சிறியது, பெரியது - என்னும் அளவுப் பொருள்களையே காணுவர். அது மிகவும் எளிதான அனைவரும் அறிந்த வெளிப்படையான வெள்ளிடைப் பொருளே என்க. இச் சிறப்பில்லாத பொருளை நூலாசிரியர் போலும் நுண்மாண் நுழைபுலம் மிக்க அறிவாசிரியர் வரையார், என்று வருந்தியுரைக்க.

தினைத்துணை, பனைத்துணை என்னும் சொற்களுள் உள்ள 'துணை' என்னும் சொல் வெறும் அளவுப் பொருளை மட்டும் குறித்ததன்று.

அவ்வாறு கருதவேண்டும் என்பது ஆசிரியர் நோக்கமாகத் தெரியவில்லை. அதற்குப் பயன்பொருளும் கொள்ளப் பெறுதல் அவர் கருத்தாதல் வேண்டும்.

அவ்வாறு கொள்ளின் துணை என்பதற்கு இணை என்னும் பொருளே சிறப்பதாகும். அக்கால் தினைக்கு இணையாக, பனைக்கு இணையாக என்று விளக்கம் பெறும்; அதில் பயன் பொருளும் கிடைக்கும்.

அஃதாவது தினை அளவில் சிறியதெனினும் விளைவுக்குப் பேருழைப்புப் பெறுவது. உழுதல், விதைத்தல், எருவிடல், நீர் பாய்ச்சல் அல்லது பருவமழை எதிர்பார்த்தல், காத்தல், அறுத்தல், அடித்தல் முதலியவை செய்து அல்லது செய்வித்துத்தான் பயன்பெறுதல் முடியும்.

ஆனால் பனைப்பயன் அவ்வளவு கடின உழைப்புத் தேவையில்லாதது. அதன் கொட்டையை எங்கேனும் ஓரிடத்தில் தூக்கி யெறிந்தாலும் அது கிழங்கூன்றி வேர்பிடித்து மரமாக வளர்ந்து பயன்தரக்கூடியது. அஃதாவது, வேறு எந்தப் பயிரினத்திற்கும் செய்கின்ற எந்த முயற்சியும் பனைக்குத் தேவையில்லை. அதன் கொட்டையை மண்ணில் பதிக்க வேண்டியதுதான். நீர்விடவுங்கூடத் தேவையில்லை; எருவோ காவலோ வேறெந்த உதவியோ இறுதிவரை அதற்குத் தேவையில்லை. இவ்வாறு எந்த முயற்சியும் தேவையில்லாமல், அல்லது ஒரு தினையளவு முயற்சியே செய்தாலும், அது வளர்ந்து மரமாகித் தரும் பயன்களோ மிகவும் பெரியன; சிறந்தன. என்னை?

அதன் மரமும், ஓலையும் வீட்டிற்கும், (ஓலை வேறு வகையில் அற்றைக் காலத்துச் சுவடிக்கும் (இவ்வொப்பில்லாத திருக்குறளும் அப் பனையோலைச் சுவடியில் எழுதப் பெற்றதே என நன்றி நினைக்க), அதன் காய் நுங்கும், பழச்சேறுவாயும் (இது 'சேவாய்' என்றும் வழங்கப் பெறுகிறது), அதன் பாளையினின்று வடிந்த பனஞ்சாறும், (இதுவும் 'தெளிவு' என்று வழங்கப்பெறுகிறது), அது முறுகிய கள்ளும், சாற்றைக் காய்ச்சிய கட்டியும் கண்டும் (பனங்கட்டியைப் பனைவெல்லம் என்றலும் கருப்பட்டி என்றலும் வழக்கு), என்றாகியவை உண்ணற்கும், இவை போகத் தும்பு, மட்டைகள், ஈர்க்குகள், ஓலைகள், செறும்புகள், நார்கள், குருத்தோலைகள் முதலிய பயன்படு பொருள்கள் ('தாலசாத்திரம்' என்னும் நூலுள் பனையின் வழி ஏறத்தாழ 800 பயன்கள் கிடைக்கும் என்று கூறுவதாக அறியப் பெறுகிறது).

பிற கழிவுகள் அடுப்புக்கும் எனத் தன்னை முழுவதுமாக ஈகங் கொடுக்கும் பனையினது பெருகிய பயனே போல், தினைத் துணை நன்றி பெற்ற பாடுபயன் தெரிவார், அச் சிறு உதவியையும் இருகை ஏந்திப் பெறுகை செய்து ஒன்றைப் பத்தாகவும் நூறாகவும் ஆயிரமாகவும் இலக்கமாகவும் கோடியாகவும் பயன்டுத்திப் பெருகு நலன் கொள்ளும் திறனையன்றோ, 'பனைத் துணையாக் கொள்வர் பயன் தெரிவார்' என்று வியந்து

காட்டுவார்.

இத்துணை விரிபொருளையும் எரிநெருப்பில் தீய்த்துவிட்டு, வெறும் கரிப்பொருளைக் கருப்பொருள் என்று கண்ட பொதுப் பார்வையை என்னென்பது என்றிரங்கி விடுக்க.

**'தினையனைத்தே ஆயினும் செய்தநன் றுண்டால்**
**பனையனைத்தா உள்ளுவர் சான்றோர் - பனையனைத்து**
**என்றும் செயினும் இலங்கருவி நன்னாட**
**நன்றில்லை நன்றறியார் மாட்டு'** - *நாலடி: 344.*

**- பாங்கறியாப்**
**புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரம்**
**கல்லின்மேல் இட்ட கலம்** - *'வாக்குண்டாம்' : 15*

*4. இஃது, உதவி பெறுவாரின் தகுதி கூறியது. எனவே முன்னவற்றின் பின் வைக்கப் பெற்றது.*

## க0ரு. உதவி வரைத்தன்(று) உதவி உதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து. - 105.

பொருள்கோள் முறை:

***உதவி உதவி வரைத்தன்று உதவி***
***செயப்பட்டார் சால்பின் வரைத்து***

பொழிப்புரை: *பொருள் அளவானும் செயல் அளவானும் ஒருவர்க்குச் செய்கின்ற உதவி அவ்வவ் வளவிலேயே மதிக்கத் தக்கதன்று; அது செய்யப்பட்டவரின் பெருமைக்குத் தக்கவாறு மதிப்பிடப் பெறுவதாகும்.*

சில விளக்கக் குறிப்புகள் :

***1. உதவி, உதவி வரைத்து அன்று*** - *பொருள் அளவானும் செயல் அளவானும் ஒருவர்க்குச் செய்கின்ற உதவி, அவ்வவ் வளவிலேயே மதிக்கத் தக்கதன்று.*

*பெரும்பாலும், உலகத்து ஒருவர் மற்றவர்க்கு ஒருகால் செய்கின்ற உதவி, பொருள் அளவினதும் செயல் அளவினதுமே ஆகும். எனவே, அவ்வுதவிக்கு அவர்கள் தரும் மதிப்பும் அவ்வவ் வளவினதாகவே கருதப்பெறுகிறது.*

*உதவி பெற்றவர், செய்தவரைப் பற்றிப் பிறரிடம் மதிப்பிட்டுப் பேசுங்கால், 'அவர் பெரிதாக என்ன செய்துவிட்டார்? அவரிடம் இருந்தது அல்லது*

அவரால் முடிந்தது அவர் உதவினார்' என்றவாறே பேசுவது இயல்பாக உள்ளது.

இது பற்றி எண்ணித்தான், உதவியை அதன் அளவாக மட்டும் மதிப்பிட்டுவிடக் கூடாது; அவர் ஓர் இக்கட்டான காலத்தில் அதைச் செய்தார் என்பதையும், தாம் இதற்கு முன்னர் அவர்க்கு ஏதும் செய்யாமல் இருந்த நிலையிலும், அதை அவர் செய்தார் என்பதையும், மேலும், அவ்வுதவிக்கு ஈடாகத் தம்மிடம் எதையும் எதிர்நோக்காது அதைச் செய்தார் என்பதையும், அது சிறிய அளவில் செய்திருந்தாலும் அதைக் கொண்டுதான் தாம் பேரளவில் வளர முடிந்தது என்பதையும், ஆன இந்நால்வகைக் கோணங்களிலும் அதை மதிப்பிட வேண்டும் என்பதையும் முன்னர்க் கூறியவர், இதில் ஐந்தாவது கோணமாக, அதைப் பெற்றுக்கொண்டவரின் மனப்பண்பையும் பிற பெருமைப் பாடுகளையும் கொண்டு அவ்வுதவிக்குப் பெருமை உண்டு என்று கூறுவார்.

வரை என்னும் சொல் அளவு என்னும் பொருள் தந்தது. அது மதிப்பீட்டு அளவு.

உதவி - உது என்னும் வேரடியாகப் பிறந்த சொல்.

உது - சேய்மைக்கும் (அது) அண்மைக்கும் (இது) இடையீடு பட்ட சுட்டுச் சொல். இங்குச் சுட்டுப் பொருளையன்றிச் செயற் பொருளைக் குறித்தது.

சேய்மையாக இருந்தவர் நம்மை நோக்கி வந்து இடையீடுபட்டு நிற்க, நாம் அவரை நோக்கிச் சென்று பரிமாறிக் கொள்ளும் நலனைக் குறித்தது. ஏற்ற இறக்கமில்லாத சமநிலை உறவை இது குறிக்கும். ஒருவர் நம்மை அவர்க்குச் சமமாகக் கருத முடியவில்லை யானால் நமக்கு அவரோ, அவர்க்கு நாமோ உதவிக் கொள்ளுதல் இயலாது. சமநிலையிலுள்ள இரண்டு நீர் நிலைகள் தடை தவிர்ந்தபோது, ஒன்றுடன் ஒன்று கலந்து பரிமாற்றம் நிகழ்வதுபோல் நிகழ்கின்ற நிலை இது.

மேல்நிலையிலுள்ள ஒருவர், தாழ்நிலையிலுள்ள ஒருவர்க்குப் பரிமாறுதல் உதவி என்னும் பொருளது அன்று; அது கொடை அல்லது ஈகை அல்லது தருமம் ஆகும். மகிழ்ந்து கொடுத்தல் கொடை, இரக்கத்தால் ஈவது ஈகை, அறம் கருதித் தருவது தருமம். தருமம் தூய தமிழ்ச் சொல்லே. இதை வடநூலார் 'தர்மம்' என்று திரித்து, அதற்கு 'அறக்கொடை' என்றும் 'அறவொழுக்கம்' என்றும் பொருள் கொண்டனர். பின்னர் அதற்கு 'வருண' நிறப்பிரிவுக்கும் 'ஜாதி'ப் பிரிவிற்கும் பரிமாணப் பொருள் கொண்டனர். எ-டு. மநுதர்மம், நாரத தர்மம். 'ஜாதி' - வடசொல். பிறப்பின்பால் வேறுபடுத்தப்பட்ட பிரிவு. ஜன் - ஜனி - (பிறப்பு) என்னும் வேரடியாகப் பிறந்த தமிழ்ச்சொல். 'சாதி' - சாத்து என்னும் வேரடியாகப் பிறந்த தமிழ்ச்சொல். கூட்டம்

என்று பொருள்பட்டுத் தொடக்கத்தில் கூட்டத்தையும், பிறகு மக்கள், விலங்கு, நீர்வாழ்வன, பறப்பன ஆகியவற்றின் கூட்டங்களையும், பிறகு வணிகக் கூட்டத்தையும், (சாத்தன், சாத்துவான், மாசாத்துவான் என்னும் பெயர்களைக் கவனிக்க.) (வணிகர்கள் ஓர் ஊரினின்றும் வேறூர்களுக்குச் செல்லும் பொழுது கூட்டம் கூட்டமாகவே செல்லும் வழக்கினர்.) (சார்ந்து (கூடிச்) செல்வதால் சார்த்து, சாத்து என வழங்கியது.), அதன் பின்னர்ப் பிற தொழில் கூட்டங்களையும், பிரிவுகளையும், (தச்சர், கொல்லர், தட்டார், பள்ளர் (வேளாளர்), பறையர் (பறையறைபவர்), துன்னர் (தையலர்), படகர் - படவர் - செம்படவர் (படகு ஓட்டுபவர்), முதலியார் (படைமுதல்வர், பொருள் முதலீடு செய்து வணிகம் செய்பவர்), வேளாளர் (வேளாண் தொழில் செய்பவர்), குடவர் (குடம் செய்பவர். குடவர் - குசவர்- குயவர். ட, ச-போலி. (எ-டு) பிட்டு - பிச்சு; ச-ய-போலி, பையன்கள்-பசங்கள்; முயல்-முசல், உயிர்-உசிர்) குறித்தது என்க. இதை மேலும் விரிக்கில் பெருகும்.

2. **உதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து :** அது செய்யப் பட்டவரின் பெருமைக்குத் தக்கவாறு மதிப்பிடப் பெறுவதாகும்.

- உதவி எவரும் எவருக்கும் செய்வதாகும். நல்லவர் ஒருவர் வேறு நல்லவர் ஒருவர்க்கு உதவுவது போலவே, தீயவர் ஒருவரும் இன்னொரு தீயவர்க்கும், திருடர் ஒருவர் இன்னொரு திருடர்க்கும், கொலைகாரர் ஒருவர் இன்னொரு கொலைகாரர்க்கும், கள்ளக்கடத்தல்காரர் இன்னொரு கடத்தல்காரர்க்கும், ஒழுக்கமில்லாதவர், இன்னொரு ஒழுக்கமில்லாதவர்க்குங்கூட உதவி செய்யலாம். ஆனால் அவ்வவ் வகையான உதவியெல்லாம் அவ்வவ் வகையில்தான் மதிக்கப் பெறும். ஆனால் நல்லவர் ஒருவர் பொதுத்தொண்டர் ஒருவர்க்குச் செய்யும் உதவி வேறு வகையில் மதிக்கப் பெறும். இன்னும் மேலே சென்று, நல்லவர் ஒருவர் அல்லது அறிவுநலமும் பொருள்வளமும் உள்ளவர் ஒருவர், மக்கள் நலத்துக்கும் முன்னேற்றத்திற்கும் உழைக்கின்ற அறிஞர்க்கும், பேரறிஞர்க்கும் அவரின் அறிவுழைப்பை மக்களுக்குப் பயன்படும் வகையில் பொருள் அளவிலோ செயல் அளவிலோ ஓர் உதவி செய்வதாக வைத்துக் கொண்டால், திருவள்ளுவப் பேராசானுக்கு ஏலேல சிங்கக் கப்பல் வணிகர் உதவியது போலவும், கம்பரது பாவியத் திறதை வெளிக் கொணரும் வகையில், சடையப்பர் உதவியது போலவும், கழகப் புலவர் பெருஞ்சித்திரனார்க்குக் குமணன் உதவியது போலவும், ஔவையாருக்கு அதியமான் நெடுமானஞ்சி உதவியது போலவும், பிற்காலப் புலவர்களாகிய சத்திமுற்றப் புலவர்க்குப் பாண்டியன் உதவியது போலவும், பார்வையிழந்த பாவலர் வீரஇராகவர்க்குச் சிங்கபூபதி என்னும் இலங்கையரசன் உதவியது போலவும், இக்காலத்து, இங்கிலாந்து, ஆங்கிலப் பேரகராதிப் பேரறிஞர்

முனைவர் சாமுவேல் சான்சனுக்குப் (Samuel Johnson) பெருந்தகைச் செல்வர் செசுட்டர் பீல்டு (Lord Chester Field) உதவியது போலவும், பொதுவுடைமைப் பேரறிஞர் காரல் மார்க்கசுக்குப் பெருஞ்செல்வர் எங்கல்சு உதவியது போலவும், பேரறிஞர் பீமாராவ் அம்பேற்கருக்கு பரோடா மன்னர் உதவியது போலவும், செயப்பட்டார் பெருமைக்கும் சால்புக்கும் எற்ற உதவிகளாக என்றென்றும் நின்று அவை பெருமையும் சிறப்பும் பெறுவனவாம் என்க.

இனி, இப் பாடலுக்குப் பழைய உரைகாரர்களான மணக்குடவரும், பரிதியாரும், காலிங்கரும், பரிமேலழகரும் இவ் வுதவியை, ஒருவர் செய்த உதவிக்குக் கைம்மாறாக உதவி பெற்றுக் கொண்டார் செய்யும் உதவியாகக் கருதி, அவ் வகையில் அவரால் திருப்பிச் செலுத்தப்பெறும் உதவி, பெற்றுக் கொண்டவரின் பெருமைக்கும் பெருந்தன்மைக்கும் சான்றாண்மைக்கும் தகுந்தவாறு அமையும் என்று பொருள் கூறியுள்ளனர்.

மணக்குடவர், 'முன்னே செய்த உதவியின் அளவன்று பின்பு செய்யும் மாற்றுதவி; அவ்வுதவி செய்யப்பட்டார் தன்மை எவ்வளவிற்று, அவ்வளவிற்று அவர் செய்யும் மாற்றுதவி' என்றும்,

பரிதியார், 'முன்னே ஓர் உதவி செய்யாமல் செய்த நன்றிக்குத் தான் ஒரு நன்றி செய்வோம் என்றால், அவனைக் கெடுக்க நினைவதற்கு ஒக்கும்; நினையாமற் செய்த நன்றியை நினைத்திருப்பதே நன்று' என்றும்,

காலிங்கர், 'உலகத்து உதவியாளரொருவர்க்கு உதவுகின்ற உதவி, பொருளினது வரம்பினை உடைத்தன்று; பின் பயக்கும் பெரும்பயன் மற்று என்னையெனின் அவ்வுதவியாளரால் ஓர் உதவிப் பொருளினைச் செய்யப்பட்டவர் தகுதி வரம்பினை உடைத்து' என்றும்,

பரிமேலழகர், 'கைம்மாறான உதவி காரணத்தானும் பொருளானும் காலத்தானுமாகிய மூவகையானும் முன் செய்த உதவியளவிற்றன்று; அதனைச் செய்வித்துக் கொண்டவர்தம் அமைதியளவிற்று' என்றும் கூறியுள்ளனர்.

இவ்வுரைகளுள் பரிதியார் உரை சிறிது வேறுபட்டுத் தோன்றுகிறது, எனினும் உதவிக்குக் கைம்மாறாகச் செய்யப் பெறும் உதவியைக் குறித்துத்தான் இயல்கிறது.

இற்றைப் பாவாணரும், பரிமேலழகரை ஒட்டியே பொருள் கூறிவிட்டுப் பின் விளக்கமாக, 'இக்குறள் கைம்மாறு பற்றியது என்பதற்கு அதில் ஒரு குறிப்புமில்லை. செய்யாமற் செய்ததும், காலத்தினாற் செய்ததும், கைம்மாறு கருதாமற் செய்ததும் பயனளவிற் பெரியதுமான நன்றிகள் இதுவரை கூறப்பட்டன. அவையல்லாது, பெரியார்க்குச் செய்த நன்றியென்றும் ஒரு சிறப்பு வகையுளது. அது இக்குறளிற் கூறப்பட்டுள்ளது' என்று விளக்கம் தந்துவிட்டு, மேலும்

இரண்டாம் உரையாக இன்னோர் உரையையும் கீழ்வருமாறு வரைவார்.

"ஒருவர் ஒருவர்க்குச் செய்த நன்றி மேற்கூறிய நால்வகை யுதவியளவினது மட்டுமன்று; நன்றி செய்யப்பட்டவரின் மேன்மையளவினதுமாகும்."

என்பது கூறி,

"இது, **'இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்**
**துணைத்துணை வேள்விப் பயன்'**

என்னும் கருத்தை யொத்தது. அங்குக் கூறியது விருந்தோம்பல் பற்றியது. இங்குக் கூறியது வேறுவகை நன்றி பற்றியது" என்று விதந்துங் கூறுவார்.

மொழியறிஞர் பாவாணர் அவர்களின் இரண்டாம் உரைதவிர அவரின் முதலுரையும், அவர்க்கு முன்னுரையாளர்களின் முழுவுரையும் ஏற்புடையனவல்ல. என்னை?

இவ் வதிகாரத்திற்கு ஆசிரியர் இட்ட தலைப்பு, **'செய்ந்நன்றி அறிதல்'** என்பதே. அதன் கொள்பொருள் ஒருவர் செய்த நன்றியை உணர்ந்து நினைந்திருத்தலே ஆகும். திருப்பிச் செய்தல் என்னும் கருத்தை அஃது அறிவிக்கவில்லை.

- **நன்றியறிதல்** வேறு; **நன்றிகாட்டுவது** வேறு. தமக்குத் தேவையான விடத்து உதவினார்க்குத் தாமும் அவர்க்குத் தேவையான விடத்துத் தம்மளவிலான உதவியைச் செய்வதே நன்றி காட்டுவதாகும். இது தவறன்று; கூடாததும் அன்று;

ஆனால் ஒருவர் செய்த உதவியைத் திருப்பிச் செய்வது, பெற்ற பொருளைத் திருப்பித்தரும் கடன்போலாகுமேயன்றி, முதலில் அவர் செய்தது உதவி என்று ஆகாதென்பதை உணர்தல் வேண்டும். உதவுவது உதவி. அது திருப்பிச் செலுத்தும் கட்டாயக் கடமைத் தகையது ஆகாது. அவ்வாறாயின் அவ் வுதவி பெருமையிழக்கும் என்பதே இங்கு உணரத்தக்கது.

- இவ்விடத்தில், உதவி பெற்றவர் ஒருவர், உதவி செய்தார் ஏதோ ஒரு வாழ்வு நிலையில் மெலிவுற்று வாடுங்கால், அவர்க்கு உதவி தேவைப்படுதலை யறிந்து, தம்மால் அவர்க்கு உதவ முடியுமாயின் இயன்றளவு உதவுவதும் போற்றத்தக்கதே. அவ்வுதவி அவர் செய்த உதவியினும் மேம்பட்டிருப்பின் இன்னும் பெருமை யுடையதே. ஆகவே உதவி செய்தார்க்குத் தாமும் உதவி செய்யக் கூடாது என்பதை முன்கூறிய கருத்தாகக் கொள்ளுதல் கூடாது. அவ்வாறாயின் அது நன்றியறிதல் ஆகாது என்றும் கொள்க.

- இனிக் கடன் தருவதும் ஒருவகையில் உதவி போலக் கருதப் பெறினும், அவ்வாறு கருதி உதவுவதும் கைம்மாற்றுக் கடன் போன்றதே. இதை ஆசிரியர் பெருமை உள்ளதாகக் கருதவில்லை என்பதை முன்னரே, 'பயன்தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின் நன்மை கடலின் பெரிது' என்னும் (103) குறளில் வேறுபடுத்திக் கூறியுள்ளார். அது திருப்பிப் பெற்றுக் கொள்ளப் பெறுவதானால் அஃது உதவி என்னும் பெருமையைப் பெறாது. அது பயன் கருதிச் செய்ததாகிவிடும் - என்பது அவர் கருத்து. அவர் முதலில் பயன் கருதிச் செய்யாமல் இருந்திருப்பினும், அதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுமிடத்து, அவர் அவ்வாறு கருதிச் செய்ததாகவே கொள்ளப்பெறும் என்பதால் அதற்குப் பெருமையில்லை என்றறிக. எனவே இதற்கு அப்பொருள் சாலாது.

- எனவே, இங்குப் பெறுபவர் பெருமையளவே, அவ்வுதவியினது பெருமையும் என்க. பெறுபவர் உயர்ந்த தகுதிகள் உடையராயின், அவ்வுதவியும் உயர்வாகவே மதிக்கப்பெறும் என்னும் பொருளே ஆசிரியர் கருத்தாதல் வேண்டும் என்க.

- இக் கருத்தையே அவர் வேறுவேறு இடங்களில் வேறுவேறு வகையாக உணர்த்தியுள்ளதையும் இந்நூலுள் காணலாம்.

- **'விருந்தோம்பல்'** அதிகாரத்துள், பாவாணர் உரையுள் எடுத்துக் காட்டப் பெற்ற 'இனைத்துணைத்து' என்னும் 87-ஆம் குறளில், 'விருந்து பேணப் பெறுபவர் பெருமைக்கேற்ப விருந்தின் பயனும் அமைகிறது' என்னும் பொருள், இக்குறளின் கருத்தை ஒட்டியதே.

- அடுத்துத் **'தெரிந்து செயல் வகை'** என்னும் அதிகாரத்துள் வரும்,

**நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு அவரவர்**
**பண்பறிந்து ஆற்றாக் கடை** **- 469**

என்னும் குறளில், "ஒருவர் பண்பை ஆராய்ந்து அறிந்து கொள்ளாமல் செய்யும் நல்ல செயல்களின் வழியும் தவறு உண்டாகும்" என்று இதே கருத்தை வேறு வகையில் கூறுவார். 'அஃதாவது உதவி செய்வது இங்குக் கூறப்பெறுகிறது. அங்கு நல்லது செய்வது பற்றிக் கூறப்பெறுகிறது. ஒருவர்க்கு நல்லது செய்வதும் உதவி செய்வது போலத்தான். எனவே உதவி யாருக்குச் செய்தால் நல்லது விளையும், யாருக்குச் செய்தால் சிறிது நல்லது, அல்லது தீமை விளையும் என்று எண்ணிப் பார்த்துச் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யும் பொழுது அவரது பண்பையும் பார்க்க வேண்டும்' என்பார். நல்ல சால்புடையார் என்பதில் நல்ல பண்பும், அறிவுத்தகுதியும் அடங்கும் அன்றோ?

- இனி, **'வலியறிதல்'** அதிகாரத்துள் வரும்.

**'ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்**
**போற்றி வழங்கும் நெறி'** **- 477**

என்னும் குறளுள், "ஒருவர்க்கு எதற்குக் கொடுக்கிறோம், ஏன் கொடுக்கப்படல் வேண்டும், எவ்வளவு கொடுத்தால் போதும் என்றவாறான முறையில் அளவிட்டறிந்து ஈவதுதான் அஃதாவது உதவுவதுதான், பொருளினது பயனைப் போற்றியவாறு வழங்குகின்ற முறையாகும்" என்னும் கருத்தையும் ஏறத்தாழ இதே நோக்கில்தான் கூறுவார்.

- இனி, அடுத்து **'சுற்றந்தழால்'** என்னும் அதிகாரத்தின்கண் வரும்

**'பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்**
**அதுநோக்கி வாழ்வார் பலர்'** **- 528**

என்னும் குறளுள், 'அரசன் தன்னைச் சூழ்ந்திருப்பவர்கள் அனைவரையும் ஒரே தரத்தினராகப் பொதுவாக நோக்கமால் அவரவர் தகுதி வரிசையில் நோக்கி, அவரைப் பேணிக் கொள்ளுவானாயின், அதன் பொருட்டாகவே அவர்கள் நிறைவடைந்து அவனை விட்டு விலகாமல் அவனுக்குத் துணையாக அவனுடனேயே இருந்து வாழ்வர்' என்னும் கருத்தைக் கூறுவதிலும் இக்குறளினது அடிச்சுவட்டைக் காணலாகும்.

மொத்தத்தில் நூலாசிரியர் கருத்து யாதாமெனில், பொருளாலும், செயலாலும் அல்லது வேறு எந்த வகையினாலும் ஒருவர் மற்றவர்க்கு உதவி செய்யும் பொழுது, அதைப் பெற்றுக் கொள்பவரின் தகுதி, திறன், குணநலன்கள் முதலிய சால்புத் தன்மைகளைக் கருத்தில் கொண்டே உதவுதல் வேண்டும் என்பதும், அப்பொழுதுதான் அவ்வுதவி சிறப்புக்கும் பெருமைக்கும் உரியதாகும்' என்பதே என்க.

மற்றவகையில் இதில் உதவி பெற்றுக் கொண்டவர் உதவி செய்தவர்க்குக் கைம்மாறாகத் தம் தகுதிப்பாடுகளுக்கேற்பத் திருப்பி உதவ வேண்டும் என்னும் கருத்துக்கு இடமில்லை என்று கூறி விடுக்க.

3. இவ் விரண்டு குறள்களாலும் உதவியைப் பெற்றுக் கொள்பவர் எத்தகையவராக இருத்தல் வேண்டும் என்பதை உதவி செய்பவர்க்கு உணர்த்தினார் என்க.

4. இனி. உதவி செய்யப்பட்டார் சால்புடையவராக இருப்பின், அவரை உணர்ந்து அவர்க்கு உதவியைச் செய்பவரும் ஒரு வகையில் சால்பு (பண்பு) உடையவராகவே இருத்தல் வேண்டும் என்னும் ஒரு குறிப்பும் இதில் உண்டு என்பதை உணர்ந்து மகிழலாம்.

5. மிகக் குறைந்த சொற்களைத் தக்க முறையில் பயன்படுத்தி மிகச் சிறந்த கருத்தை உணர்த்தும் குறள்களுள் இதுவும் ஒன்றாகி ஆசிரியரின் கூர்மையான சொல்லாற்றலையும் நுண்மாண் நுழைபுலத்தையும் புலப்படுத்திற்று என்க.

- இதனுள் பயன்படுத்தப் பெற்ற எட்டுச் சொற்களுள், 'உதவி' என்னும் சொல் மும்முறையும், வரைத்து என்னும் சொல் இருமுறையும் வந்து எண்ணிக்கையில் மூன்றைக் குறைத்து உதவி, வரைத்து, அன்று, செயப்பட்டார், சால்பின் ஆகிய ஐந்து சொற்களால் ஆக்கப் பெற்ற குறுங்குறட்பா இது என்று எண்ணி மகிழ்க.

- இத்தகைய பிற ஆங்காங்குச் சுட்டப்பெறும்.

**க0சு. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க**
**துன்பத்துள் துப்பாயார் நட்பு. - 106**

பொருள்கோள் முறை:

**மாசற்றார் கேண்மை மறவற்க**
**துன்பத்துள் துப்பாயார் நட்பு துறவற்க.**

**பொழிப்புரை :** *தம்மிடம் முன்பிருந்த (ஒன்றோ சிலவோ ஆன மனத்தினதும் செயலினதுமான) குற்றங்களை (அறிவுறுத்தி) அற்றுப் போகச் செய்தவரின் உறவாண்மையை என்றும் மறத்தல் வேண்டா. அதே போல் தமக்கு ஒரு துன்பம் நேர்ந்த பொழுது ஆதரவு தந்து, அதை நீக்கிக் காத்தவரை விட்டு நீங்குதலும் வேண்டா.*

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. நட்பு அதிகாரத்துள் வரவேண்டிய குறட்பா இது. மிக நுட்பமான செய்ந்நன்றியறிதல் உணர்வின் முகாமை கருதி இதில் வைக்கப் பெற்றுள்ளது.
2. இதன்கண் பிறர் உதவி பெற்றார் மறவாதிருக்க வேண்டிய உணர்வும், துறவாதிருக்க வேண்டிய உணர்வும் ஒருங்கே கூறப்பெற்றதைக் கவனித்தல் வேண்டும். இவையன்றி இதனுள் இவ்வதிகாரத்தின் முன்னுள்ள குறட்பாக்களின் இல்லாத இரண்டு சிறப்பு நிலைகள் - கருத்துகள் கூறப்பெற்றுள்ளன.

   ஒன்று, ஓர் உதவியை **மறத்தல் வேண்டா** என்பது. இரண்டு, ஓர் உதவியைத் **துறத்தல் வேண்டா** என்பது. அவையிரண்டையும் ஓரளவு விளக்கமாகப் பார்க்கலாம்.
3. **மாசு அற்றார் கேண்மை மறவற்க** - மாசு அறுத்தவர் உறவாண்மையை மறத்தல் வேண்டா.

   - இதில் மாசற்றார், கேண்மை என்னும் இரண்டு சொற்களிலும் முன்னைய உரையாசிரியர் வேறு வேறு பொருள்களைக் கண்டனர்.

- மாசற்றார் என்பதை ஒரே இணைச்சொல்லாகக் கொண்டு, அவர்கள் குற்றமற்றவர் அஃதாவது மனத்தகத்துக் குற்றமில்லாத பெரியோர்கள் அல்லது சிறந்தவர்கள் என்று அதற்குப் பொருள் கூறியுள்ளனர்.

- இவ்வாறு பொருள் கொள்வதில் சில தடைகள் உள்ளன. ஒன்று, மாசற்றவர் அஃதாவது குற்றமற்றவர் நட்பை ஏன் தவிர்த்தல் வேண்டா என்று கூறாமல், மறத்தல் வேண்டா என்று கூறுகிறார். மாசற்றவராக இருப்பின் அவர் தொடர்பைத் தவிர்த்தல் வேண்டா என்பதுதானே சரி' அவ்வாறு கூறாது மறத்தல் வேண்டா என்று கூறுவானேன்?

- அவ்வாறு கொள்வதானால், மாசற்றார் என்னும் சொல்லில் ஏதோ சிறப்புப் பொருள் இருத்தல் வேண்டும் என்பது.

- இதில், மாசற்றார் என்பதில், மாசு + அற்றார் என்னும் இரு சொற்களையும் இணைத்து ஒரே சொல்லாகக் கருதிப் பொருள் கொண்டால், குற்றமற்றவர் என்றே பொருள் வரும்.

அற்ற - அறு என்னும் வினையடியாகப் பிறந்த இறந்தகாலப் பெயரெச்சம்.

அற்ற - அறச் செய்த, நீங்கச் செய்த

அற்றார் - அறுத்தவர், அறச் செய்தவர்.

அற்றார் - இல்லாதவர் பொருளற்றவர், ஏழை - இஃது ஒரு பொருள்.

- அறு - அற்றல்; அற்றார் - அறச் செய்தவர் - நீக்கியவர். இஃது இன்னொரு பொருள்.

மாசு அற்றார் - மாசு நீக்கியவர் - மாசில்லாதவர்.

- மாசு நீக்கியவர் (தன்னளவில்) மாசு நீங்கியவர். (இது முதற் பொருள்)

- மாசு நீக்கியவர் (பிறரளவில்) - (இஃது இரண்டாவது பொருள்)

அவ்வாறானால், அதை மறத்தல் வேண்டா என்று சொல்வதில் சிறப்பில்லை. இன்னும் சொன்னால், அது சரியன்று போல் தோன்றும். அதனால் தவிர்த்தல் வேண்டா அல்லது துறத்தல் வேண்டா என்றே கூறியிருத்தல் வேண்டும். ஆனால் நூலாசிரியர் அவ்வாறு கூறவில்லை. மறத்தல் வேண்டா என்றே கூறியுள்ளார். அப்படி அவர் கூறியிருப்பதற்கு ஏதோ ஒரு காரணம் இருத்தல் வேண்டும். அஃதென்ன காரணமாக இருக்கும் என்பதை முதற்கண் நாம் சிந்தித்தல் வேண்டும்.

- அதற்குரிய காரணம் வேறு எங்கும் இருத்தல் முடியாது; சொல்லளவில் வருவித்தலும் இயலாது. எனவே அக்காரணம் மாசற்றார், கேண்மை என்னும் இரு சொற்களிலுந்தான் பொதிந்திருத்தல் வேண்டும் என்னும் முடிவுக்கே வரவேண்டியுள்ளது.

- முதலில், மாசற்றார் என்னும் இணைச் சொல்லுக்கு அவ்வாறே பொருள் கொண்டால், குற்றமற்றவர் என்றுதான் பொருள் கொள்ள வேண்டியிருக்கும். ஆனால், அதைப் பிரித்துப் பொருள் கொண்டால் வேறு பொருள் கிடைக்கும். அது மாசு + அற்றார் - மாசு அறுத்தவர் - அறச்செய்தவர் - நீங்கச் செய்தவர் என்று பொருள் வரும்.

- உலகில் பெரும்பாலாரிடம் இயல்பாகவே, அறியாமை காரணமாகவோ, வளர்ந்த சூழல் காரணமாகவோ சில மனமாசுகளும் செயல்குற்றங்களும் ஒட்டிக்கொண்டிருக்கும். ஒன்று, அவர் மிகுந்த பொய்கள் பேசுபவராக இருக்கலாம்; அல்லது பிறர் பொருளைத் திருடும் பழக்கமுள்ளவராக இருக்கலாம்; அல்லது குடிப்பழக்கத்தைக் கைக்கொண்டவராக வளர்ச்சி பெற்றிருக்கலாம்; அல்லது தவறான முறையில் பொருள் சேர்க்கும் நோக்கத்தைக் கொண்டவராக விருக்கலாம்; அல்லது பெண்கள் வகையில் ஒழுக்கங் கெட்டவராக இருக்கலாம்; அல்லது குடும்பப் பண்பாடுகளுக்கும், நடைமுறைகளுக்கும் மாறுபட்டவராக இருந்து, அவர்களுடன் இணக்கமாக நடந்து கொள்ளாத முரட்டுப் போக்குக் கொண்டவராக இருக்கலாம். இவ்வாறு, உலகியலில் எத்தனையோ பெயர்கள், இங்குக் கூறப் பெற்ற வகையிலும், வேறு வகையிலும் மனவழியானும் செயல்வழியானும் மாசு கொண்டவராக குற்றமுள்ளவராக வளர்ச்சி பெற்று, அவற்றினின்று விடுதலறியா வேட்கையினராகவும், மீளத் தெரியாமல் அவற்றுள் சிக்கி அல்லது மூழ்கித் தவிப்பவராகவும் இருக்கலாம். இவ்வாறு எத்தனையோ தொகையினரையும் வகையினரையும் நாம் காணலாகும். அவற்றினின்று மீட்கப் பெறாத வரை, அவர்கள் அவற்றிலேயே தொடர்ந்து மேற்சென்று வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் இயங்கித் தம் வாழ்வையே சிதறடித்துக் கொண்டும் பாழடித்துக் கொண்டும் இருக்கலாம். இவர்களால் அவர்கள் குடும்பத்தினர் படும் துன்பங்களும் துயரங்களும் கொஞ்சநஞ்சம் அல்ல.

- இத் தகவிலாரை நெருங்கி, அவரின் அகப்புற வுணர்வுகளைக் கண்டு காட்டி அறிவுறுத்தி அவர்களை நல்வழிப்படுத்திய நிலைகளும் பலவாக நாள்தோறும் நடந்து வருவதும் உலகியலில் கண்கூடாகக் காணப்பெறும் நிகழ்ச்சிகளாகும்.

- இவ்வாறு திருத்தமுற்றவர்களை நோக்கித்தான், அவ்வாறு தங்களின் மாசு அறுத்தவர்களை - குற்றங்களை உணர்த்திக் காட்டி நல்வழிக்குக் கொணர்ந்தவர்களை மறத்தல் வேண்டா என்று அறிவுறுத்தியது இக்குறளின் முற்பகுதி. இவ்வாறு அவர்களைத் திருத்தமுறச் செய்வதும் ஒருவகையில் - இன்னும் சொன்னால் பொருளுதவியைவிட - மிகச் சிறந்த பேருதவியே அருளுதவியே ஆகும். இதுவும் செய்ந்நன்றி யறிதலின் பாற்படுவதே ஆகும்.

- இனி, அவ்வாறு உதவி செய்தவர் நண்பர் முதலிய அயலாராகத் தான் இருக்க வேண்டும் என்பதில்லை; நெருங்கிய உறவினராகவும் இருக்கலாம்; மேலும், அவ்வுதவியும் பொருளாகவோ, செயலாகவோ தாம் இருக்க வேண்டும் என்பதில்லை; தம் வாழ்வு நிலையில் அக்கறையும் ஆர்வமும் கொண்டு, தம்மிடமுள்ள மனக் குற்றத்தையோ, செயல் குற்றத்தையோ அல்லது இரண்டு குற்றங்களையுமோ, போக்கிய அல்லது நீக்கியதாகவுமே இருக்கலாம். அதுவும் ஒருவகைப் பேருதவியே. அதைச் செய்தவர் - அதைச் செய்பவர் உறவினரே. இன்னுஞ் சொன்னால் அத்தகைய உறவாண்மை உடையவர்களால்தான் இவ்வருஞ் செயலைச் செயதற்கியலும். மற்று நண்பர்களுக்கோ, தம் மேலாளுநர்களுக்கோ இச் செயற்பாடு கடினமாகவோ இயலாததாகவோ இருக்கலாம். என்னை? குற்றம் செய்து கொண்டிருப்பவர் அதனின்று நீங்கா விருப்பமும் பற்றும் ஈடுபாடும் கொண்டவராக இருப்பாராகலின், அவர், பிறர் அறிவுரைகளை ஏற்க வேண்டுவதானால் அவர் அவர்க்கு நம்பிக்கையும், நட்புணர்வுக்கு மேலான ஓர் உரிமையழுத்தமும், உறவுக் கட்டும் கொண்டவராக இருத்தல் வேண்டும் என்க. அவ்வாறு செய்வதற்கு உகந்தவர்கள் உறவினர்களல்லாமல் வேறெவராகவும் இருத்தல் இயலாது என்பதை ஆழ்ந்து சிந்தித்து உணர்க.

- இங்குதான், நூலாசிரியர் தம் சொல்லாற்றலை, மிகக் கூர்மையாகக் கையாண்டுள்ளார். அதற்குத்தான் 'கேண்மை' என்னும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

கேண்மை - கேள் + மை - கேண்மை
- கிள் - கிளை - உறவு.
- கிள் - கேள் - கேண்மை - உறவினர்.
- நள் - பொருந்துதல் - இணைதல் - கூடுதல்
- நள் + பு - நட்பு

கேண்மையும் நட்பும் ஒன்றுபோல் தோன்றி ஒருபொருள் தருமெனினும் இரண்டு சொற்களும் ஒன்றன்று. கேண்மை உறவுப் பொருள் தரும்; நட்புப் பொருளும் தரும்.

- ஆனால், நட்பு உறவுப் பொருளைத் தரவே தராது.

- மேலும் கேண்மை நட்புப் பொருளையே குறிப்பதெனில், ஒன்றுக்குக் கேண்மை என்றும், ஒன்றுக்கு நட்பு என்றும் ஒரே பொருளில் இரு சொற்களைப் பயன்படுத்தும் சொல்லாடல் புலவரல்லர் நூலாசிரியர். நுண்ணிய சொல்லாண்மையும் கருத்து வல்லாண்மையும் உடையவர் அவர். இவ்வுலகில் **'பயனில சொல்லாமை'** என்னும் ஒரு கருத்தை ஓர் அதிகாரமாகவே விரித்துரைத்த பேரறிவாற்றலுடையவர் வேறு எவராகவும் இருத்தல் இயலாது. அத்தகைய பேரறிவும் பேராற்றலும்

கொண்டவரும் அவையறிந்து ஆராய்ந்து சொல்லும், சொல்லின் தொகை யறிந்த தூய்மையவரும் (711) நம் பேராசான் என்க. சொற்களைப் பயன்படுத்துவதில் இவர்க்கு இவரே நிகர். இவர் போலவோ, இவர்க்கு நெருக்கமாகவோ, தண்டமிழ் நூற்பரப்பில் வேறு எவரையுமே காணுதற்கும் கருதுதற்கும் எவராலும் இயலாது என்க.

- இனி, அக் கேண்மையரை ஏன் மறவாதிருத்தல் வேண்டும் என்று கூறுகிறார்; ஏன் துறவாதிருக்கக் கூறவில்லை - என்றும் சிந்தித்தல் வேண்டும்.

- அறிவுரைகூறிக் குற்றம் களைந்து தெருட்டியவர் எவராயினும் அவர் ஆசிரியர் போன்றவராவர். ஆசிரியரோ அறிவுரை கூறியவரோ எப்பொழுதும் மாணவர் அருகிலேயே இருத்தல் முடியாது; இருத்தலும் கூடாது. மாணவர்தாம் அல்லது அவரால் திருத்தமுள்ளவர்தாம் அவரை மறவாது நினைவு கூர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு மறவாது நினைந்திருக்கும் நிலையில்தான், திருந்தியவர் இனிமேலும் அக்குற்றங்களைச் செய்ய முற்படார்; அவ்வாறு நினைந்திருக்கும் மனம் அதற்கு இடங் கொடாமல் இருக்கும். இனி, திருத்தமுற்றவரும் தம்மைத் திருத்தியவரைச் சந்திக்கவோ அவருடன் தொடர்ந்து தொடர்பு கொள்ளவோ விரும்பமாட்டார். அவரைப் பார்க்குந் தொறும், தாம் முன்னிருந்த நிலை நினைவுக்கு வந்து, அவர்க்கு இயல்பாகவே ஒரு நாணமும், தலைக்குனிவும் தோன்றுமாகையாலும், அது போலவே அவ்வுறவினர்க்கு அவர் முன்னிருந்த நிலையை நோக்கி ஓர் அறவிக்கட்டுத் (தர்ம சங்கடம்) தலையெடுக்கும் ஆகையினாலும், அவ் விருவரும் தொடர்பு கொள்வகை, இவ் வகையில் இருவருமே விரும்பார் என்க.

- இந்நுண்ணிய மனவியல் உண்மைகளைக் கொண்டுதான் ஆசிரியர், அவர் கேண்மையைத் துறத்தலும் வேண்டா, துறவாமல் இருத்தலும் வேண்டா எனும் இருவிக்கட்டான நிலையில், அதை மறவாதிருக்க அறிவுறுத்தினார் என்க.

- மறவாதிருக்கக் கட்டளையிட்டது, அவர் மேலும் குற்றங்களைச் செய்யாதிருக்கவே, என்க.

- இனி, இத் தொடரைப் போலவே நட்பாராய்தலில் 'மருவுக மாசற்றார் கேண்மை, ஒன்றீத்தும் ஒருவுக ஒப்பிலார் நட்பு (800) என்னும் குறளிலும், மாசற்றார் கேண்மையும், ஒப்பிலார் நட்பும் வருகின்றன. அதிலுள்ள 'மாசற்றார் கேண்மைக்கு' இதுபோலும் பொருளைக் கொள்ள வியலாதவாறு 'மருவுக' என்னும் சொல் தடையாக உள்ளது. ஏனெனில் 'மருவுதல்' தழுவிக் கொள்ளுதல் என்னும் பொருள் தருவதால், ஏற்கனவே தொடர்பற்ற நிலையிருத்தலும், பின்னர்த் தொடர்பேற்படுதலும் புலப்படும். அவ்வகையில் அவ்விரு

சொற்களுக்கும் இங்குக் கொண்ட பொருளைக் கூறமுடியாது என்க. பிற விளக்கங்களை அவ்விடத்துக் காண்போம்.

**4. துன்பத்தில் துப்பாயார் நட்பு துறவற்க** - தமக்கு ஒரு துன்பம் நேர்ந்த பொழுதில், ஆதரவு தந்து, அதை நீக்கித் தம்மையும் தம் குடும்பத்தையும் காத்தவரை விட்டு நீங்குதலும் வேண்டா.

- துப்பு - உதவி, ஆதரவு, துணை.

- முன் பகுதியில் மறக்கக் கூடாத கேண்மையைக் கூறியவர், இத் தொடரில் துறக்கக் கூடாத நட்பைக் கூறுகிறார்.

- இதில், நட்பு என்னும் சொல் நேரிடையாகவே கையாளப் பெற்றது.

- துறவு - முனிதல், வெறுத்தல், விடுதல், விட்டு நீங்குதல் என்னும் பொருள்கள் உள.

- ஒன்றை வெறுத்தால்தான் அதனைவிட்டு நீங்குதல் இயலும்.

- எனவே 'துறவற்க' என்னும் சொல்லுக்கு வெறுத்தலும், விட்டு விடுதலும் கூடா என்னும் பொருள்களே பொருந்துவனவாம்.

- துன்பத்தில் ஆதரவாக இருந்து பேணிக் காத்த நண்பரை எந்தக் காரணத்தாலும் வெறுத்தல் வேண்டா; விட்டு விலகுதலும் வேண்டா என்று இருவகையிலும் அறிவுறுத்துவதாக இத்தொடர் பொருள் தரும்.

- இதில் ஒரு நுட்பம் கருதற்பாலது. முன்னரே அவர் துன்பத்திற்குத் துணையாக இருந்துள்ளார். அவரை வெறுக்க வேண்டிய அல்லது விட்டு விலக வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது - எவ்வாறு ஏற்படும் - என்று நோக்குதல் வேண்டும்.

- ஒருவேளை, தம்மிடம் மீண்டும் அவர் துன்பத்திற்குத் துணை கேட்பார் என்று அவராகவே விலகி நிற்க விரும்பலாம் - அல்லது, அவர் ஏதோ ஒரு வகையில் - நாம் விரும்பாத வகையில் - அல்லது வெறுக்கத் தகுந்த வகையில் - ஒன்றைச் செய்திருக்கலாம். அந்த நிலையில்தான், அவர் நம்மை விட்டு விலகியிருக்க விரும்பினாலும் நாம் அவரை வெறுக்கவோ விட்டு விலகவோ, அவரை இழக்கவோ வேண்டா என்று அறிவுறுத்துகின்றார். இதுதான் செய்ந்நன்றி அறிதலாகிய உணர்வு; நன்மனப் பண்பு.

- ஒருவேளை அவர் விரும்பத்தகாதொன்றை அல்லது வெறுக்கத் தக்கதொன்றைத் தமக்குச் செய்யினும் அவரைத் துறக்க வேண்டா என்கிறார்.

- இதனை, அடுத்துவரும், 'கொன்றன்ன இன்னா செயினும்' என்னும் (109) குறளில் மேலும் வலியுறுத்துவார்.

இனி, அவரைத் துறக்காமல் இருக்கச் செய்யும் அறிவுரை, அவரிடமிருந்து மேலும் நன்மை பெறுகின்ற நோக்கிலென்றால், அது

தந்நலமும், கரவு நோக்கும் ஆகாவோ எனின் ஆகாவாம் என்க. என்னை?

- அதற்கு முன்பு அவர் துணையிருந்த தன்மையைப் புலப்படுத்தும் **'துப்பாயார்'** (துணையாகியவர், ஆதரவாக விருந்தவர்) என்னும் சொல்லால், அவ்வுதவியை - ஆதரவை - அவரே நல்கியதும், தாம் கேட்டுப் பெறாததும் புலப்படுத்துகின்றன.

- அவர் துணைநின்றது தாம் கேட்டுப் பெறாத நிலையில் நிகழ்ந்த தாகலின், அத்தந்நலத்திற்கும், கரவு நோக்கத்திற்கும் இடமில்லை என்று கூறலாம் என்க.

துப்பு ஆயார் - துப்பு ஆகியவர் - அவரே துணைக்கு வந்தது புலப்படுகிறது.

- இதனால் பெறுவாரினதும், உதவினாரினதும் நறுந் தன்மைகளை உணர முடிகின்றது என்க. மேலும் நன்றியறிதல் உணர்வை வலியுறுத்துவது மீண்டும் உதவிபெற்றுக் கொள்ளும் நோக்கத்திலன்று என்பது வெளிப்படை.

- இனி, இக்குறளுள் கூறப்பெற்ற இரண்டாவது கருத்தை யொப்ப, வேறுவேறு நிலைகளில் வேறுவேறு பொருள்களை விளக்கும் நோக்கத்துடன், நூலாசிரியர் கூறியுள்ளதும் இதனுடன் இணை வைத்துக் கருதத் தக்கது.

- பொருட்பாவில், அரசியலில் **'பெரியாரைத் துணைக்கோடல்'** என்னும் அதிகாரத்துள் கூறப்பெறும்.

**'உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்**
**பெற்றியார்ப் பேணிக் கொளல்'** - **442**

**'பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே**
**நல்லார் தொடர்கை விடல்'** - **450**

- என்னும் குறள்கள் சிறப்பின் அரசர்க்குச் சொல்லப் பெறுவதேனும், பொதுவில் நட்புணர்வுக்கும் பொருந்துவனவே; அத்துடன் நன்றியறிதலுக்கும் இசைந்தனவே ஆகும்.

- இனி, அதே பாலில், நட்பியலில், பழைமை அதிகாரத்துள் வரும்.

**'எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்**
**தொல்லைக்கண் நின்றார் தொடர்பு'** **806**

- என்னும் குறளும் ஒருவகையில் இதே பொருளினதாகும்.

- அவ்வாறெனில், இது கூறியது கூறல் என்னுங் குற்றம் ஆகாதோவெனின் ஆகாது என்க. என்னை?

**'கூறியது கூறினும் குற்றம் இல்லை,**
**வேறொரு பொருளை விளைக்கு மாயின்'**

என்றார் இலக்கண நூலார் என்க.

5. இனி, இவை யிவ்வாறாக, இக் குறட்பாவிற்கு உரை தருவதில் பலரும் பல வகையாக வேறுபடுதலையும் மாறுபடுதலையும் ஓரளவு காணலாம்.

- மணக்குடவர், 'தனக்குத் துன்பம் வந்த காலத்து வலியாயினார் நட்பை விடாதொழிக' என்று முன்னுரை பின்னுரையாகவும், பின்னுரை முன்னுரையாகவும் காரணமின்றி, நூலாசிரியர் நிரல் முறையை மாற்றிக் கூறினார்.

- பரிதியார், குறளில் கூறப்பெறும் நிரல் முறையை மாற்றிக் கூறாமல், 'நன்றி என்றும் விடக்கடவனல்லன்; நல்லோர் சிநேகமும் என்றென்றும் விடக்கடவனல்லன்; துன்பம் வந்த போது, பலமாயினார் நட்பினை விடக்கடவனல்லன்' என்றே கூறினார்.

- காலிங்கரோ, மணக்குவடவர் போல் முன் பின்னாகக் கூறாமல், இயல்பாகவே பொருள் கூறினும், 'இங்குச் சொன்ன இருவகைப்பட்ட நன்றியையும் மறவாதவர் இம்மையின்கண் இன்பமும் மறுமையின்கண் இன்பமும் பெறுவர்' என்று இங்குக் கூறப்பெறாத இம்மை மறுமைக் கருத்தினையும் உடன்வைத்துக் கூறினார். இது தேவையற்றது.

- இனிப் பரிமேலழகரோ, காலிங்கர் கூறியதை யொப்பவே, நிரல் முறையை முன்பின்னாகக் கூறியும், இம்மை மறுமைப் பயன்களுடன் இணைத்துக் கூறியும் சென்றார். இவ்வாறு கூறுவது, அவரது வேதமதப் பார்வையை வலியுறுத்தவே என்க.

திருக்குறள் கருத்துகளில், முதலில் எங்காவது தம் மதத்தைப் புகுத்த வாய்ப்புளதா என்று பார்ப்பதும், அவ்வாறு வாய்ப்புள்ள இடங்களில், ஒரு சிறு சந்தையும் மிகப் பெரிய தொளையாக்கிக் கொண்டு, ஆரியவியல் கருத்துகளைத் திணித்து வைப்பதும் அவற்றால் என்றென்றும் தமிழரை நிலையான ஆரிய மத (இந்து மத) அடிமைகளாக்கி வைப்பதுமே அவர் கோட்பாடு, என்க.

- இவ் வகையில், வியப்பென்ன வென்றால், இந்நூலுக்குத் 'தமிழ் மரபுரை' எழுதிய பாவாணரும், மணக்குடவரும் பரிதியாரும் விழிப்போடு இம்மை, மறுமைக் கருத்துகளைத் தொடாமலிருந்ததைக் கண்டும் காணாதவர் போல், அவர்களைப் பின்பற்றாது, காலிங்கரையும், பரிமேலழகரையுமே பின்பற்றி மறுமை வரை விடாமல் சென்றதுதான்.

6. இதில், நன்றியறிதலில், ஒரு புது உத்தி காட்டியது புலப்பட்டது. அத்துடன், உதவி என்பது, பொருளளவானும், செயலளவானும் மட்டும் நில்லாது, மனத்தளவானும் அறிவளவானும், ஒருவருடைய குற்றங்களையும், முறைகேடுகளையும் கண்டித்துத் திருத்தி அவரை

நல்வழிப் படுத்தும் நிலையிலும் உதவுவது என்பதும், தமக்கு ஒரு துன்பம் வந்தவிடத்து, ஆதரவு காட்டி அத் துன்பத்தினின்று தம்மைக் காத்தவர் ஏதோ ஒரு வகையில் தம்முடன் தொடர்பு கொள்ளாதவராய் விலகி நின்றாலும், தாம் அவர் தொடர்பை விடாது மதித்துப் பற்றிக்கொள்ள வேண்டும் என்பதும், புலப்படுத்தப் பெற்றன என்க.

- இனி, இவ்விரண்டாவது கருத்தை, மேலும் ஒருபடி சென்று விளக்குமுகத்தான், அடுத்துப் பேசுவார்.

## க0எ. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
## விழுமம் துடைத்தவர் நட்பு. - 107

பொருள்கோள் முறை :

**தம்கண் விழுமம் துடைத்தவர் நட்பு**
**எழுமை எழுபிறப்பும் உள்ளுவர்.**

**பொழிப்புரை:** *தம்மை விழுத்திய துன்பத்துள் (எழமுடியாமல்) தாம் உழன்று கிடந்த பொழுது, அதை அறவே நீக்கித் தம்மை உய்யச் செய்தவர் நட்பைத் தாம் மட்டுமன்றித் தம்வழி எழுகின்ற ஏழு தலைமுறையினரும் நன்றியுணர்வுடன் நினைத்திருப்பர்.*

**சில விளக்கக் குறிப்புகள்:**

1. இப் பாடலும் நட்பதிகாரத்துள் வரவேண்டுவது போலும் கருத்துள்ளது. நன்றியறிதல் முகாமை நோக்கி இதன்கண் இடம் பெற்றுள்ளது.
2. சென்ற குறளில் 'துன்பத்துள் துப்பாயார் நட்பு' என்றதன் மேற்சென்று, அத்துன்பத்தின் மிகுதி நிலையினையும், அதனின்றுந் தம்மை உய்யச் செய்தாரது அருளாண்மையினையும் உணர்த்தி, அந்நன்றியறிதல் உணர்வையும் நீட்டித்துச் சொன்னது.
3. **தம்கண் விழுமம் துடைத்தவர் நட்பு** - தம்மிடத்துத் தோன்றித் தம்மை விழுத்திய துன்பத்துள் தாம் எழமுடியாமல் அழுந்தி உழன்று கிடந்த பொழுது, அதை அறவே போக்கித் தம்மை உய்யச் செய்தவர் நட்பினை.

 விழுமம் - வீழ்த்திய மிகுதுன்பம்.

இஃது, இருவகையாகப் பொருள்தரும் சிறப்புச் சொல்.

ஒன்று, சிறப்பு, பெருமை, மேன்மை என்னும் பொருள்களைத் தரும் 'விழு' என்னும் வேரடியாகப் பிறப்பது.

இரண்டு, வீழ்தல், தாழ்தல், கீழிறங்குதல், கெடுதல், சாதல் என்னும்

பொருள்களைத் தரும் 'விழு'(தல்) என்னும் வேர்ப்பொருள் அடியாகப் பிறப்பது.

மிகு துன்பத்தை உணர்த்தும் 'விழுமம்' என்னும் சொல், இந்நூலுள் இத்துடன் நான்கு இடங்களுள் கையாளப் பெறுகின்றன.

அது,

**வீயா விழுமம் - வீழாத (நீங்காத) துன்பம்** **(284)**

**உய்யா விழுமம் - உய்ந்துவர முடியாத துன்பம்** **(313)**

**எற்றா விழுமம் - எற்ற (மேலேற) முடியாத துன்பம்** **(603)**

- என்று அடைகொடுத்து, அத்துன்பத்தின் ஆழத்தையும் அகலத்தையும் புலப்படுத்தக் கூறப்பெற்றுள்ளது.

- விழுமம் என்றாலே விழுத்திய துன்பம் என்று பொருள்படுவதால், அதனின்று எழமுடியாமல் அழுந்தி உழன்று கிடந்தது' என்பது வருவிக்கப் பெற்றது.

துடைத்தவர் - அறவே நீக்கி அல்லது போக்கி உய்யும்படி செய்தவர்.

- துன்ப மிகுதியால் மீட்பு முயற்சியும் மிகுதியாக உணர்த்தத் துடைத்தல் என்னும் சொல் பயன்பட்டது.

4. **எழுமை எழுபிறப்பும் உள்ளுவர்** - தாம் மட்டுமின்றித் தம்வழி எழுகின்ற ஏழு தலைமுறையினரும் நன்றியுணர்வுடன் நினைத்திருப்பர்.

- அதிகாரப் பொருளால் நன்றியுணர்வு வருவிக்கப் பெற்றது.

- 'ஏழேழு தலைமுறை', 'ஏழேழு பிறவி' - என்பன உலகியல் வழக்கு.

- எழுபிறப்பு - என்னும் சொல்லுக்குரிய விரிவான பொருள் 62-ஆம் குறளின் பொருள் விளக்கத்துள் கூறப்பெற்றது. அதனை ஆண்டுக் காண்க.

- உள்ளுவர் - நினைப்பர் - உள்ளம் என்னும் பொருள் அடிப்படையில் பிறந்த சொல்.

5. இத்தொடர் பரிமேலழகருக்கு அவருடைய வேதமத (இன்றைய இந்துமத)க் கொள்கையைப் புகுத்துவதற்கு வாய்ப்பாக அமைந்து விட்டது. வெறும் வாயை மெல்பவர்க்கு அவல் கிடைத்தது போல், 'எழுமை எழுபிறப்பும்' என்னும் இரு சொற்களும் அவர்க்கு வெறும் அவலாக மட்டும் இல்லாமல் - வெல்லத்தோடு இணைந்த அவலாகிவிட்டது. எனவே அவர் பிறவிக் கொள்கையைக் கற்காரை (concrete) போல் இறுக்கிக் காட்டுகிறார். அவர் இந்த அடிக்கு, எழுமையினுடைய தம் எழுவகைப் பிறப்பினும் நினைப்பர் நல்லோர்' என்று உரை கூறிவிட்டு, 'எழுமை' என்றது, வினைப்பயன் தொடரும் ஏழு பிறப்பினை என்றும், 'துன்பம் துடைத்தலான் அவர்மாட்டு

உளதாகிய அன்பு பிறப்புத்தோறும் தொடர்ந்து அன்புடையராதல்' என்றும் விளக்கம் கூறுவார்.

- இவரது சிந்தனைக்கு அடிப்படையாகவே மணக்குடவர், பரிதியார், காலிங்கர் ஆகியோர் உரைகளும் அமைந்துள்ளன.

- இப் பகுதிக்குப் பாவாணர், 'ஏழேழு பிறவியளவும்' என்று உரை கூறிவிட்டு, 'ஏழுவகைப் பிறப்பிலும் நினைப்பர் என்பது பகுத்தறிவிற்குப் பொருந்தாமையின், ஏழேழ் மக்கள் பிறப்பு என உரைக்கப்பட்டது. அதுவும் உயர்வு நவிற்சியே. ஏழேழு என்பது கழிநெடுங் காலத்தைக் குறிக்க வந்த இருமடி நிறைவெண் என்று விளக்குவார். இவ்வாறு அவர் பிறவிக் கொள்கையை மறுத்தது, அவர் சார்ந்த கிறித்துவ மதத்திற்குப் பிறவிக் கொள்கை இல்லாமையால் இருக்கலாம் என்று கருத இடமுண்டு.

- பிறவிகள் உளவா, அவ்வாறு உளவாயிருந்தாலும் ஒவ்வொரு பிறவியிலும் ஒரே மனம் வந்து வாய்க்குமா, அவ்வாறு வாய்த்தாலும் உதவி செய்தவர் மனத்தை உதவி பெற்றவர் உணர வாய்ப்புளதா, அவ்வாறு உணரும்படி அவர்கள் அருகருகாகவும், அண்டையயலினராகவுமே பிறப்பரா - என்பவெல்லாம் அறிவியலாலும் ஏன் மெய்யறிவியலாலும் மெய்ப்பிக்கப் பெறாத செய்திகள் மட்டுமல்ல, மாந்தவுருவத்திற்கு அமைந்துள்ள எந்த உணர்வுறுப்பாலும், அறிவுறுப்பாலும் அறிந்து கொள்ளவே முடியாத செய்திகள் என்க! இவை மதவுணர்வாளர்களாலும், போலி மெய்யுணர்வாளர்களாலுமே கூறப்பெறுகின்ற செய்திகளாக உள்ளன.

மேலும், பிறவிக் கொள்கைக்கு உணர்வியல் அடிப்படையிலும், பொருள் (Matter), ஆற்றல் (Energy) என்னும் பூதவியல் அடிப்படையிலும் ஓரிரு வாய்ப்புகள் உளவாகத் தெரிந்தாலும், அவற்றை ஆய்வளவில் மெய்ப்பிப்பது கடினம். இது தொடர்பாகப் பல நூறு ஆவியியல் நூல்கள் வெளிவந்துள்ளன; வெளிவந்து கொண்டும் உள்ளன. ஆனால் அவற்றிலெல்லாம் கூறப் பெறுகின்ற நிகழ்ச்சிகளுக்கும் பதிவுகளுக்கும் இன்றுவரை அறிவியலாரின் எவ்வகை ஏற்பிசைவும் (அங்கீகாரம்) கிடைக்கவில்லை.

தமிழியலில் கூறப்பெறும் உயிரியலுக்கும், ஆவியியலுக்கும் பெருத்த வேறுபாடுகள் காணப்பெறுகின்றன. திருக்குறளில் முன்னரும் பின்னரும் கூறப்பெறும் உயிரியல் கொள்கைகூட நூலாசிரியர் கொள்கையாகத்தான் இவ்வுரை நூலுள் குறிப்பிடப் பெறுகின்றனவே தவிர, உரையாசிரியர் கருத்தாகக் கொள்ள வேண்டும் என்பதாக எவரும் கருதிக் கொள்ளக் கூடாது.

மெய்ப்பொருள் தொடர்பான கருத்துகள் உள்ளுணர்வுக் கருத்துகளே (Intuition). அவை முழுவதும் இப் பிறவித்

தொடர்பானவையே. இந்த உண்மைதான் மூளையியலிலும் மனவியலிலும் (Psychology) சொல்லப் பெறுகின்றனவே தவிர, முற்பிறவி நினைவுகளும் உண்மைகளும் அவற்றுள் பதிந்துள்ளனவாகவும், பதிவனவாகவும் அறியக் கூடவில்லை. இப்பொழுதைய பிறவியிலுள்ள மூளையிலும் மனத்திலும் மூளைதான் மனம் என்பது சரியில்லை; ஆனால் மூளைதான் மனத்தினது வேலையைச் செய்கிறது. இந்நூலுள் தேவையான இடத்துள் இவ் விரண்டிற்குமுள்ள வேறுபாட்டையும் தொடர்பையும் விளக்குவோம்.) இப்பொழுதைய நிகழ்ச்சிகள்தாம் பதியப் பெறுகின்றன என்பதும். அக்கருவிகள் அழியின் அவையும் அழிந்துபோகின்றன என்பதும் உண்மை. ஆனால் மனவுணர்வுகளும் ஆழமான அறிவுணர்வுகளும் விண்வெளி யணுக்களில் பதிவு பெறுகின்றன என்பது ஒருவகை மெய்யறிவியல் உண்மையாகும். இதையும் பிறகோ நிறைவுரையிலோ விளக்குவோம்.

அவ்வாறிருப்பின் அறிவியலால் அவ்வுணர்வுகளை வெளிப்படுத்திவிட முடியும். பொருளறிவியல் (Material Science) என்பதும், உள்ளுணர்வு (Intuition) என்னும் மனவியலறிவு என்பதும் வேறு வேறாயினும் ஒன்றுடன் ஒன்று மாறுபட்டதன்று. எவ்வகையான அறிவியல் பிரிவும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டவையே!

மனவியலிலும் (Psychology) வெளிநிலை மனவியல் (Para-Pshychology) என்றும் ஒருவகை சொல்லப் பெறுகிறது. ஆனால் இது இன்னும் தீர்க்கப் பெறாத முடிவுகளைக் கொண்டதாகவே கருதமுடியும்.

ஆனால், இந்நிலைகளாலெல்லாங்கூடப் பிறவித் தொடர் நிலைகள் இன்னும் உறுதி படுத்தப் பெறவில்லை என்றே அறிய முடிகிறது. நிகழ்பிறவி என்பதிலும் அதுதொடர்பான மெய்யறிவுண்மைகள் என்பதிலும்கூட அறிவியல் முழுமை பெற்றுவிடவில்லை. அறிவியல் வழியில் கண்டுபிடிக்கப் பெறவேண்டிய மாந்தவியல் கூறுகள் இன்னும் நிறைய உள்ளன. இருப்பினும் அவற்றுள் பிறவித் தொடர்பும் ஒன்றாக விருக்கலாமோ என்று கருதுவதற்குங்கூட மெய்யறிவியலில் இடமில்லை என்றே தோன்றுகிறது.

மெய்யறிவியல் என்பதும் உள்ளுணர்வு நிலையில் வெளிப்படும் ஒருவகை உண்மைகள்தாமே தவிரக் கணக்கியல் முறையில் சரிபார்க்கப் பெறும் முழு அறிவியல் என்று எவராலும் கூறிவிட முடியாது. அதற்கொரு சான்று: மெய்யறிவியலால் எல்லாம் வல்ல இறைப்பேராற்றல் உண்டு என்று சொல்ல முடியும்; அதைப் பிறர் உணரும்படி எடுத்துச் சொல்லவும் முடியும்; ஆனால் அஃது என்ன, எப்படி, எங்கு என்பனவற்றை எவராலும் சொல்லுதற் கியலாது.

இப்பொழுதைய நிலையில் இந்த அளவே எவராலும் கூறுதற்கியலும், இதற்குமேல் கூறுவதெனில் அது மதம் ஆகிவிடும். மதவியல் மாந்தவியலுக்குத் தேவையான கலை, கற்பனை போன்றதே தவிர உண்மையில்லை என்பது வெளிப்படை. கலை என்பது அறிவியலுக்கு எதிரானது (Art is the opposite of Science) என்பதே மெய்.

- இக் குறட்பாவுள், தாம் வீழ்ச்சியடையுமாறு தமக்குள்ள துன்பத்தை நீக்கியவரைத் தாம் மட்டுமன்றித் தம் வழிமுறையினரும் உணர்ந்து போற்றுவர் என்னும் தொடர் நன்றியுணர்வைப் புலப்படுத்தினாராகலின் முன்னதன் பின் இது வைக்கப் பெற்றதாம் என்க.

**க0அ. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**
**அன்றே மறப்பது நன்று. - 108**

**பொருள்கோள் முறை:** *இயல்பு*

**பொழிப்புரை:** *ஒருவர் செய்த உதவியை (எந்த நிலையிலும்) மறந்து விடுவது நன்மையாகாது; அதேபோல் அவரோ பிறரோ அறியாமையால் செய்த நல்லதல்லாததை (நினைவில் வைக்காது) அப்பொழுதே மறந்து விடுவதும் நன்மை பயப்பதாகும்.*

**சில விளக்கக் குறிப்புகள்:**

*1. நன்றி மறவாமையையும், நன்றல்லதை உடனே மறந்து விடுவது பற்றியும் கூறுவது இப் பாடல்.*

*2.* ***நன்றி மறப்பது நன்றன்று*** *- ஒருவர் செய்த உதவியை, எந்த நிலையிலும் மறந்து விடுவது நன்மையாகாது.*

*- ஒருவர் செய்த உதவியை எண்ணியிருத்தல் வேண்டும் என்னும் அதிகாரப் பொருளை வலியுறுத்துவதாகும் இக்குறள்.*

*- ஒருவர் செய்த உதவியை மறப்பது அல்லது எண்ணிப் பாராமல் தவிர்ப்பது என்பது இயல்பாலும், சூழலாலும் நேர்வது. அஃது உலகியல்.*

*- இயல்பால் மறந்துவிடுவதற்கு, அன்பில்லாமை, பொறாமை, வெறுக்கை முதலிய மனவேறுபாடுகள் காரணமாகும் என்க.*

*- தமக்கு ஒருவர் பொருளானும் செயலானும் உதவும் பொழுது, அவருடைய பொருள் வலிமையையும், செயல் வலிமையையும் ஒருவர் எண்ணி, அவற்றுடன் தம் பொருள் மெலிமையும், செயல் எளிமையையும் ஒப்ப வைத்து அவர் வளர்ச்சிக்காகப்*

பெருமைப்படலாம்; அல்லது அத்தகையவர் தம்பால் அன்புகொண்டு உதவுதல் குறித்து வியப்படையலாம்; ஆனால் சிலர் அவரால் தமக்கு உதவுகின்ற அளவில் பொருள் மிகுதியும் செயற் சாய்காலும் உள்ளனவே, அவை தமக்கு இல்லையே என்று மனத்தளவில் பொறாமைப் படலாம்; அல்லது மனத்திரிவு (விகார நினைவு) கொள்ளலாம். இவை நாளடைவில் தம் மனத்தில் படிப்படியாய் வளர்ந்து பெரியவாகி அவர்மேல் தாம் பகை கொள்ளும்படியோ, அவரைப் பொருட்படுத்தாமல் புறக்கணிப்புச் (அலட்சியம்) செய்யும்படியோ நினைவுகளை உருவாக்கலாம்.

- அல்லது, அவர் செய்த உதவியால் தாமும் முயன்று பொருளானும் செயலானும் முன்னிருந்த நிலையினும் மேம்பாடடையலாம். அக்கால், அவர் நல்ல தன்மைகள் பற்றி, ஏதாவது காரணம் கற்பித்துக் கொண்டு எள்ளலாம்; இகழலாம்; புறக்கணிப்பாக இருக்கலாம்.

- மேற்கொன்ன இவ் விரு நிலைகளானும் அவர் முன்னர்க் காலத்தானும் இடத்தானும் தமக்குச் செய்த உதவி, இற்றை நிலையில், சிறியதாகவும், பெருமையில்லாததாகவும் கருதப்படலாம்.

- இவ்வாறான மனவுணர்வுகளை ஒருவர் செய்த உதவியை மறக்கச் செய்கின்றன.

- ஆனால், அவ்வுதவியின் அன்றைய தகவு நோக்கி, அதனை மறவாமல் அவரை நன்றியறிதலுடன் நினைவு கூர்ந்திருத்தல் வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். அது நன்மை பயப்பது என்று அறிவுறுத்தவும் செய்கின்றார்.

- அவர் கூறிய நன்மை என்பது யாது?

- தமக்கு உதவி செய்தவர், அவ்வுதவியால் மேலும் பலவகையாலும் முயன்று தம் பொருள் நிலையிலும், செயல் நிலையிலும் முன்னேறி வருகிறார் என்று தெரிந்து, மகிழ்ந்து, அவர் மேன்மேலும் நன்கு ஈடேற, மீண்டும் அவர்க்கு உதவி செய்யக் காத்திருப்பார். இந்த நிலையில், உதவி பெற்றவர் தம்மை மதிக்காமல் புறக்கணிக்கிறார் என்று தெரியவந்தால், அவர் தாம் மேலும் அவர்க்கு உதவிசெய்யும் எண்ணத்தை மாற்றிக் கொள்ளலாம்; அல்லது தவிர்க்கலாம். இந்நிலை உதவி செய்யப் பெற்றவர்க்கு இழப்பாகும்.

- அடுத்து, உதவி பெற்றவர் ஓர் அருளாளர் செய்த உதவியால், தம் நிலைகளில் மேம்பட்டு முன்னேறி வருகின்றார் என்னும் செய்தியைக் கேட்க நேர்ந்த அல்லது அறிய வந்த, உதவிபெற்றவரின் நண்பர்களுள் சிலரும், அவரின் உழைப்பையும் விடா முயற்சியையும் கண்டு, உவகையுற்றுத் தாங்களும் அவர்க்கு ஏதேனும் ஒருவகையால் உதவுதற்கு

விருப்பம் கொண்டவர்களாகவும் இருக்கலாம். இந்நிலையில் அவர்க்கு முதலில் உதவியரை அவர் நன்றி நினைக்கவில்லை என்றும், அவரை இவர் மதிப்பதில்லை என்றும் தெரியவந்தால், அவர்களும் தாங்கள் அவர்க்கு மேலும் உதவுகின்ற எண்ணத்தை மாற்றிக் கொள்ளவோ, இத்தகைய நன்றியில்லாதவரிடம் தாங்களும் தொடர்பு கொள்வதைத் தவிர்க்கவோ செய்யலாம்.

இஃது, அவ் வுதவி பெற்றவர்க்கு மேலும் ஏற்படும் இரண்டாம் நிலை இழப்பாகும்.

ஆக, செய்த உதவியை நன்றி நினையாதவர் தமக்கு நன்மையில்லாத, மாறாகத் தீமை ஏற்படுத்திக் கொள்கிற நிலைகளால், 'நன்றி மறப்பது நன்மை தருவதன்று' என்று ஆசான் அறிவுறுத்துவார், என்க.

- நல் + து - நன்று - நன்மை.

செய்த நன்றை - நினைப்பது நன்றி.

- இனி, நன்றி என்னும் சொல் இருபொருளும் தரும்.

3. **நன்றல்லது அன்றே மறப்பது நன்று** - தமக்கு உதவி செய்தவரோ அல்லது பிறரோ ஏதேனும் ஒரு சூழலிலோ, அல்லது அறியாமையாலோ நன்றல்லாத ஒரு செயலைத்-(கவனிக்கவும்-தீமையான செயலை அன்று) தமக்குச் செய்யினும், அவர் முன்னர் உதவி செய்தவராக இருந்தால், அவ் வுதவியை நினைந்தோ, இதுவரை ஏதும் உதவி செய்யாதவராக இருந்தால், அவர் என்றாவது ஒரு நாள் தமக்கு, ஏதோ ஒரு வகையில் உதவக் கூடும் என்று நினைந்தோ, தாம் அவர்கள் செய்த நன்மையல்லாத செயலை ஏதோ ஒரு வகைக் காரணம் பற்றி அவர்கள் அவ்வாறு நடந்திருக்கக் கூடும் என்று பெருமனத்துடன் கருதி, அதனைப் பொருட்படுத்தாமல் இருப்பதுடன் அதனை நினைவிற் கொள்ளாமல் உடனே மறந்து விடவும் வேண்டும், அதுதான் நல்லது என்பார்.

மறப்பது - மறதி.

- மறு என்னும் வேரடியாகப் பிறந்த சொல்.

மனம் நினைவில் கொள்ள மறுப்பது.

நன்றல்லது - நன்மையல்லாதது.

தீமை - கெடுதல்.

கெடுதல் வேறு; நன்மையல்லாதது வேறு.

எதிர்ப்பது, கெடுதல் செய்வது தீமை.

சார்பாக இல்லாதது - புறக்கணிப்பாக இருந்து நல்லது செய்வதற்குப் பகரமாகப் பொருந்தாத ஒன்றைச் செய்வது, நன்றல்லது.

நோய்க்கு மருந்து தருவது நன்மை. தராமல் இருந்து விடுவது நன்மையல்லாதது. நஞ்சு தருவது தீமை.

ஏற்கனவே நன்மை செய்த ஒருவர், நல்ல மனத்தவராக இருப்பதால், அவர் நன்மையல்லாததைச் செய்வதோ நன்மை செய்யாமலிருப்பதோ செய்வாரே தவிர தீமை செய்யும் மனத்தினராக உளவியல்படி இரார் என்றார் என்க.

நன்றல்லாதது என்பதற்கு மணக்குடவரும், பரிமேலழகரும் 'தீமை' என்றும், பரிதியார் 'குற்றம்' என்றும், சொல் நுட்பமின்றிப் பொருள் தருவது பொருந்தா தென்க.

காலிங்கர் 'நன்மையல்லாதது' என்றே பொருள் தருவர்.

இனி, பாவாணரும் பிறர் சிலருங்கூடத் 'தீமை' என்றே பொருள் கொள்வர். அத்துடன் பாவாணர், 'நன்றி மறப்பது' என்பதற்கு விளக்கம் கூறுகையில், 'நன்மை செய்ததை மறந்து ஈடான நன்மை செய்யாமையும் தீமை செய்தலுமாம்' என்று ஆசிரியர் கருத்துக்கு மாறாகப் பொருள் தருவதும் பொருந்தாது என்க.

அடுத்து, 'ஈடான நன்மை செய்யாமை' என்று அவர் கூறும் விளக்கத்திற்கும் அதிகாரப் பொருளும், ஆசிரியரது சொல்லும் இடந்தரவில்லை என்க.

அன்றே - என்றது பொழுது விரைவு நோக்கி அப்பொழுதே என்று பொருள் தருவதாகும்.

4. இது, ஒருவர் செய்த நன்றியை மறவாது இருப்பதை வலியுறுத்துவதுடன், அவர் ஒரோவொரு நிலை நன்மையல்லாததைச் செய்யினும், அதை அவர் முன்னர் உதவிய தகைமை கருதிப் பொருட்படுத்தாமல் உடனே மறந்து விடுவதும் நன்மை பயக்கும் நடைமுறையாகும் என்பதையும் உடன் கூறினார் என்க.

- இனி, இக் கருத்தினும் ஒருபடி மேலே சென்று, நன்றியறிதலை அடுத்த குறளில் கூறுவார்.

**க0கூ . கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த**
**ஒன்றுநன் றுள்ளக் கெடும் - 109**

**பொருள்கோள் முறை:** இயல்பு.

**பொழிப்புரை :** தமக்கு, முன்னர் (ஓர் இக்கட்டான நிலையில்) உதவி செய்தவர், (பின்னர் ஏதோ ஒரு சூழலில்), தம்மை (மனத்தால்) கொன்று விட்டது

போலும் (துயர் தர வல்ல) ஒரு தீமையையோ கெடுதலையோ செய்தாலும், அந்நிலையில் (அவர்மேல், அதன் பொருட்டு வருத்தம் கொள்ளாமல்), தமக்கு அவர் முன்செய்த நல்லுதவி ஒன்றினை நினைத்தமட்டிலேயே, அவர்மேல் நின்ற மனவெழுச்சி கெட்டுவிடும்.

**சில விளக்கக் குறிப்புகள்:**

1. இது, 105-ஆம் குறட்பாவில் கூறப்பெற்ற 'செயப்பட்டார் சால்பின் வரைத்து' என்னும் பாடற்பகுதியில் உள்ள 'சால்பு' எனும் நிறைகுணத்தின் உண்மைத் தன்மையையும், பின்னர், **'சான்றாண்மை'** அதிகாரத்துள் வரும்

**'இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்**
**என்ன பயத்ததோ சால்பு.** -987

- எனும் குறட்பாவில் உணர்த்தப்பெறும் சால்பின் செயல் தன்மையையும், நன்றியறிதல் உணர்வோடு ஒப்ப வைத்துக் கூறப்பெற்றதாகும்.

2. இனி, நட்பியலில், **பழைமை** அதிகாரத்துள்,

**'அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்**
**வழிவந்த கேண்மை யவர்'** - 807

என்று வரும் குறட்பாவும் இத்துடன் நினைந்து மகிழத் தக்கதாம் என்க.

3. **கொன்றன்ன இன்னா செயினும்** - தமக்கு முன்னர் உதவியவர், ஏதோ ஒரு நிலையில் மனத்தளவில் தம்மைக் கொன்றுவிட்டது போலும் துன்பம் தரும் தீமை அல்லது கெடுதல் செய்தாலும்.

- அடுத்த தொடரில் வரும் 'அவர் செய்த ஒன்று' என்னும் குறிப்பால், 'முன்னர்த் தமக்கு உதவி செய்தவர்' என்னும் கருத்து வருவிக்கப் பெற்றது.

- கொன்றன்ன இன்னா - என்பதற்குப் பலரும் கொன்றாற் போல், கொன்றால் ஒத்த இன்னாதவற்றை, பொல்லாங்கை என்று பொருள் தருவர்.

ஆனால் கொன்றாற் போலும் மனத்துயரத்தை என்பதுதான் சரியான பொருளாகும்; தம்மைக் கொல்லுங்கால் உள்ள நிலையை ஒருவர் உணரமுடியாது ஆகலின், ஆனால், அவ்வாறான மனத்துயரை மட்டும் ஒருவர் உணரமுடியும் 'அக்கொடுமையைச் செய்ததற்குத் தம்மைக் கொன்றே இருந்திருக்கலாம்' என்று சிற்சிலகால் உள்ளம் மருகுகின்ற துயரை உள்ளத்தளவில் பெறுவது இயல்வது.

முன் உதவி செய்தவர், கொன்றன்ன இன்னா செய்வது எவரிடத்தும் என்றுமே நிகழ்வது இயல்பின்றாயினும், அவ்வாறு

ஒருகால் நிகழ்ந்த விடத்துக்கூட, அவர் செய்த நன்றியை நினைக்கும் உயர் உள்ளத்தைப் பெறுதல் வேண்டும் என்பது ஆசிரியர் கருத்தாம், என்க.

**'இன்னா செயினும் விடற்பாலர் அல்லாரைப்**
**பொன்னன்னாய் போற்றிக் கொளல்வேண்டும்'**
**- நாலடி : 225**

**'இன்னா செயினும் விடுதற் கரியாரைத்**
**துன்னாத் துறத்தற் குறுவதோ ?' - நாலடி : 226**

**'இன்னா செயினும் ... பழிகாணார் சான்றோர்'**
**- நாலடி : 227**

**'நல்லார் எனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை**
**அல்லார் எனினும் அடக்கிக் கொளல்வேண்டும்.**
**நெல்லுக்(கு) உமியுண்டு; நீர்க்கு நுரையுண்டு**
**புல்லிதழ் பூவிற்கும் உண்டு. - நாலடி : 221**

**'நண்பொன்றித் தம்மாலே நாட்டப்பட் டார்களைக்**
**கண்கண்ட குற்றம் உளவெனினும் காய்ந்தீயார். - பழமொழி : 16**

**'ஒருநன்றி செய்தவர்க்(கு) ஒன்றி எழுந்த**
**பிழைநூறும் சான்றோர் பொறுப்பர் கயவர்க்(கு)**
**ஒருநூறு நன்றிசெய்(து) ஒன்றுதீ தாகில்**
**ஒருநூறும் தீதாய் விடும்! - நாலடி : 357**

**'ஒன்றுதவி செய்யினுமவ் வுதவி மறவாமல்**
**பின்றையவர் செய்பிழை பொறுத்திடுவோர் பெரியோர்'**
**- வில்லிபாரதம்.**

- என்றார் பிறரும்.

4. **அவர் செய்த ஒன்று நன்று உள்ளக் கெடும்** - அவர் முன்னர் ஓர் இக்கட்டான நேரத்தில் ஓர் உதவி செய்திருந்தாலும், அதனை நினைக்கும் பொழுது, அவர் பின்னர்ச் செய்த கெடுமையும் அதனால் கொண்ட மனவெழுச்சியும் இல்லாமற் போகும் என்றவாறு.

- ஒன்று என்பது எண்ணிக்கையும் அளவையும் ஒருங்கே குறித்தது.

- உதவி ஒருமுறையே, சிறிதளவே செய்திருந்தாலும் என்றவாறு,

- உள்ளுதல் - ஆழ எண்ணுதல் - திரும்பத் திரும்ப எண்ணுதலுமாம். நினைத்தல் - மேலாக எண்ணுதல்.

- கெடுதல் என்பது இருபொருள் ஒருசொல்.

ஒன்று இல்லாமற் போதல்.

இன்னொன்று தீமை.

- இவ்வாறு முன்னர் உதவியவர், இத்தீமையை மனமறிந்து செய்திரார். ஏதோ ஒரு சூழலால் அவ்வாறு நேர்ந்திருக்கும் என்று எண்ணிப் பார்ப்பின் அவர்மேல் கொண்ட வெறுப்புணர்வு இல்லாமற் போகும் என்றது. இவ்வாறு தீமை விட்டு நன்மை எண்ணுவது உயர்ந்த மனப்பாங்கே என்க. இதுவும் நன்றியறிதலே.

5. இது, நன்மையல்லாததைப் பொறுத்தலினும், தீமையைப் பொறுத்தலின் மேம்பாடு கூறிற்று. ஆதலின் அடுத்து வந்தது.

## கக0. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
## செய்ந்நன்றி கொன்ற மகற்கு. - 110

பொருள்கோள் முறை:

**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம்**

**செய்ந்நன்றி கொன்றமகற்கு உய்வில்லை.**

பொழிப்புரை : *பிறர்க்கு நன்மையானவற்றை அழித்தல் செய்தார்க்கும், (அக்குற்றங்களினின்று தம்மை மறைத்துக் கொண்டு, வேறுபிற முயற்சிகளால்,) தாம் மேம்பாடுற வாய்ப்புகளுண்டு. ஆனால், தமக்கு ஒருவர் செய்த உதவியை நினைவழிப்பார்க்குத் தம் வாழ்வில் உய்வதற்கு வழியமைவதில்லை.*

சில விளக்கக் குறிப்புகள் :

1. செய்ந்நன்றி நினையாது மறத்தலால் நேரும் கேடு குறித்தது, இக் குறட்பா.

2. **எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்** - பிறர்க்கு நன்மையான எதை அழித்தல் செய்தார்க்கும், அக்குற்றங்களினின்று விடுவித்துக் கொண்டு, வேறு பிற முயற்சிகளால், தம்மை உய்வித்துக் கொள்ள வாய்ப்புகளுண்டு.

நன்றி கொல்லுதல் நன்மையானதை அழித்தல்.

- 'எந்நன்றி கொன்றார்க்கும்' என்றது எவ்வகையான நல்லதை அழித்தார்க்கும் எனற்கு. 'உம்'மை, சிறப்பும்மை.

நன்றியை 'அறம்' எனல் பொருந்தாது. அது நன்மை. மணக்குடவரும், காலிங்கரும் நன்மை யென்றே கொண்டனர். பரிமேலழகரே அதைச் சிறப்பித்து அறம் - அதுவும் பெரிய அறங்கள் - என்று, பின்னர்த் தம் கருத்தைப் புகுத்துதற்கு வழிவைத்துக் கூறுவார்.

அவரைத் தொடர்ந்த பாவாணரும் பிறர் சிலரும் அறம் என்றே கூறுவர்.

அறம் வேறு, நன்மை வேறு. அறம் நன்மையாகலாம், நன்மை அறமாகலாம், ஆனால் இரண்டும் தன்மையில் செயலில் வேறுவேறு.

- அறம் நன்மையாவது - குடிநீர்ப் பந்தல் வைத்தல்.

- நன்மை அறமாவது - எழுத்தறிவித்தல்.

அறமும் நன்மையும் வேறு வேறாவது:

தீமை செய்யாதிருப்பது அறம்:

ஆனால் நன்மையன்று.

தடிமன் (நீர்க்கோவை, சளி) பிடித்தால் வெந்நீர் அருந்துவது நன்மை; ஆனால் அஃது அறம் அன்று.

- மேலும், ஆசிரியர் இந்நூலுள் பதின்மூன்று இடங்களில் (67, 97, 102, 104, 108, 110, 117, 138, 422, 439, 652, 685, 994) 'நன்றி' என்னும் சொல்லையும்,

- முப்பத்தொன்பது இடங்களில், (38, 49, 92, 103, 108 (2), 111, 113, 125, 128, 150, 152, 157, 197, 222, 236, 253, 259, 297, 308, 323, 328, 379, 422, 456 (2), 469, 655, 673, 715, 815, 908, 932, 967, 1038, 1072, 1190, 1225) **'நன்று'** என்னும் சொல்லையும் பயன்படுத்துகின்றார்.

- இனி, நன்மையான செயல்களை அழித்தல் செய்வதற்கு எடுத்துக் காட்டுகள் சில:

- பிறர் வீட்டிற்கோ, பயிர் விளைந்த வயலுக்கோ தீயிடல், பிறர் பொருளைக் களவாடல், பிறர் வயலுக்குப் பாயும் நீரைத் தடுத்தல், பிறர் வயலில் விளைந்த பயிரை அழித்தல், உண்ணீர்க் குளத்தில் நஞ்சிடல், அல்லது மாசுபடுத்தல், பிறர் புழங்கும் வழியை அடைத்தல், பிறர்க்குரிய மரங்களை வெட்டுதல், பிறர் மக்களைக் கொலை செய்தல், பிறர்க்கு வரும் வாய்ப்புகளை வஞ்சனையால் தமக்காக்குதல், பிறர் உயிரினங்களுக்கு ஊறு செய்தல், பிறர்க்கு எதிராகப் பொய்ச்சான்று கூறி அவர்களைத் தண்டனைக்கு உள்ளாக்குதல், பிறர் பெண்களுக்குத் தீங்கிழைத்தல் - முதலியவை போன்றனவாம்.

இவ் வகையான குற்றங்களைச் செய்தான் ஒருவன் உய்வு பெறுதல் யாங்ஙன் எனில், கூறுவோம்.

பிற நன்றி கொல்லுதல் புறத்தது. அதை மறந்துவிடல் அவனால் இயலும். அதைத் தன் வலக்காரத்தாலும், பொருளாலும், சாய்காலாலும் மறைத்துத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும் இயலும். இந்நிலை உலகியலாகவும் உள்ளது.

- அவ்வாறு, ஒருவன் பிறர்க்கு நன்மையாம் தன்மைகளை அழித்து விட்டு, அக் குற்றங்களையும் மறைத்துவிட்டு, வேறு பிற பொருள் முயற்சிகளைச் செய்து தன்னை மேலேற்றிக் கொள்வதும் உலகியலில் இயல்வதாக இருக்கின்றது.

- இதையே ஆசிரியர் எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டு என்கிறார் என்க.

- இனி, 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்' என்னும் தொடருக்குப் பரிமேலழகர் மிகவும் வலக்காரமாகப் 'பெரிய அறங்களைச் சிதைத்தார்க்கும் பாவத்தின் நீங்கும் வாயில் உண்டாம்' என்று பொருள் கூறிப்,

- "பெரிய அறங்களைச் சிதைத்தலாவது, 'ஆன்முலை அறுத்தலும், மகளிர் கருவினைச் சிதைத்தலும், குரவர்த் தபுதலும் முதலிய பாதகங்களைச் செய்தல் (புறம் - 34)'. இதனால், செய்ந்நன்றி கோறலின் கொடுமை கூறப்பட்டது." - என்று விளக்கமும் தருகிறார்.

- அவர் எடுத்துக் காட்டும் புறநானூற்றின் 34-வது செய்யுள் கீழ்வருமாறு கூறுகிறது.

**"ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்**
**மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்**
**குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்**
**வழுவாய் மருங்கில் கழுவாயும் உளவென**
**நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்**
**செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லெனு**
**அறம்பா டிற்றே ஆயிழை கணவ"**

- என்பது அவர் காட்டிய செய்யுள் பகுதி.

- இதன் பொருள், "ஆன் (பசுமாட்டின்) பால்தரும் மடியை (முலையை) அறுத்த அறவுணர்வு இல்லாதவர்க்கும், தாலி யணிந்த மகளிரின் கருவைச் சிதைத்தவர்க்கும், பெற்றோர்க்குக் கொடுமை செய்தவர்க்கும், அவ் வறக்கொடுமைகளினின்று தப்பிப் பிழைக்கக் கழுவாயும் (வழியும்) உளவெனவும், நிலம் தன் நிலையினின்று பெயர்ந்து இயங்குவதாயினும் செய்த நன்றியைக் கொன்றவர்க்குத் தப்பிப் பிழைக்க வழியே இல்லையென, அறநூல் பாடியது, ஆயிழை கணவ!" - என்பது.

- இதில், முதற் பிழை என்னெனில், 'நன்றி' என்ற சொல்லுக்கு 'அறம்' என்று பொருள் கொண்டது. அவ்வாறு கொண்டதால் ஏற்பட்ட இரண்டாவது பிழை, அவ்வறத்தைக் கொல்வது என்பதற்கு மூன்று எடுத்துக்காட்டுகளைக் கூறியது.

அவை, ஆனின் (பால்தரு பசுவின்) முலையை அறுத்தல், திருமணம் ஆன பெண்டிரின் கருவை அழித்தல், பெற்றோர்க்குக் கொடுமை செய்தல் ஆகியன அம் மூன்று கரிசு (பாவ)ச் செயல்களான எடுத்துக்காட்டுகள். இவை புறநானூற்றுப் பாடலில் வருவன. இனி, அந்தப் பாட்டிலேயே இம்மூன்று கொடுஞ்செயல்களைச் செய்தவர்க்கு, அக்கரிசுகளை (பாவங்களை)ப் போக்கிக் கொள்ளத் தீர்வும் - கழுவாயும் - உண்டு. ஆகவே அவர்கள் அதைச் செய்து, அக்கரிசுளை (பாவங்களை)ப் போக்கிக் கொண்டு உய்ந்து விடமுடியும். ஆனால் செய்ந்நன்றி கொன்றவர்க்கு உய்தியே - தப்பிப் பிழைக்க வழியே இல்லை - என்று **'அறம்'** கூறுகிறது என்பது.

- இதில் 'அறம் கூறுகிறது' என்பதற்கு 'அறநூலாகிய திருக்குறள் கூறுகிறது' என்பதாகப் பொருள் கொண்டு, அக்குறள் இது தான் என்று பொருத்திப் பொருள் கொள்ளப் பெறுகிறது. இப் பொருளை முதலில் கூறியவர் பரிமேலழகரே ஆவர்.

- இங்கு **'அறம்'** என்று கூறியதற் கேற்பத்தான், பரிமேலழகரும் 'நன்றி' என்பதற்கு 'அறம்' என்று பொருள் கொண்டிருத்தல் வேண்டும். அவ்வாறு கொள்ளவே, அதன் வழி, அவ்வறக் கேடுகளுக்கான எடுத்துக்காட்டுகளையும் இங்குப் பொருத்திக் காட்டினார் என்க.

- அத்துடன், 'செய்தி கொன்றார்க்கு உய்தியில்லை' என்ற அடியையும், 'உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்னும் அடியோடு பொருத்தி, அதில் வரும் 'அறம் பாடிற்றே' என்னும் சொற்களுக்குத் 'திருக்குறளாகிய அறநூல் பாடியது' என்றும் பொருள்படுவதாகவும் அவர் கொண்டுள்ளார்.

- இதில், 'அறம்' என்ற சொல் திருக்குறளைக் குறிக்கும் என்பதற்கு, அதில் வரும் 'செய்தி கொன்றார்க்கு உய்தியில்லை' என்னும் அடியே சான்றாக உள்ளது. வேறு எந்தக் குறிப்பும் இல்லை.

- இனி, இங்குக் கூறிய 'அறம்' திருக்குறளைக் குறித்ததா அல்லது 'அறம்' என்ற பெயரில் இருந்திருந்த வேறு ஒரு நூலைக் குறித்ததா என்று நாம் ஆராய வேண்டுவதில்லை.

- அது கூறிய அறம் திருக்குறளைக் குறிப்பதாகவே கொண்டாலும், அதில் கூறப்பெறும் அறக்கேடுகளைத் திருக்குறள் எவ்விடத்தும் கூறவில்லை என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

- அதில் கூறியுள்ள அவ் வறக்கேடுகளுள் முதலாவது கூறப் பெறும் கொடுமை எப்படி நிகழக் கூடியது என்பதும் தெரியவில்லை. உண்ணும் பொருட்டு என்றாலும் மாட்டையே அறுப்பார்களே தவிர, பால்மடியை

மட்டுமே அறுத்திருக்க இயலாது. எனவே அஃதொரு கற்பிதக் கொடுமையே.

- இனி, அதில் இரண்டாவதாகக் குறிப்பிடப்பெறும் அறக் கொடுமை பெண்கள் அளவில் அன்றும் நிகழ்ந்திருக்கலாம்; இன்றும் அது நிகழ்வது கண்கூடாகவும் உள்ளது. இஃது ஒருவேளை கொடுமையாகக் கருதப் பெற்றாலும் அஃதொரு கரிசு (பாவம்) என்றாலும், இதற்குக் கழுவாய் என்னவாக இருக்கலாம் என்பது விளங்கக் கூடவில்லை. இன்றைய நிலையில் இச்செயல் கரிசு (பாவம்) என்று கருதப்பெறுவதும் இல்லை. தேவையானதே என்றும் கூறப்பெறுகிறது.

இனி, அதில் மூன்றாவதாகக் கூறப்பெற்ற பெற்றோர்க்குக் கொடுமை செய்தல் என்னும் செயல், முறைகேடு, பண்பற்ற செயல் என்று கருதப் பெறுமே தவிர, அஃதொரு கரிசு (பாவம்) என்று கருதப் பெறுவதில்லை.

- இனி, இச்செய்யுளடியைப் பிற்காலத்து அந்நூலைப் பதிப்பித்த உ.வே. சாமிநாதர் என்னும் பார்ப்பனப் புலவர், அவ்வடியையே 'குரவர்த் தப்பிய கொடியோர்' என்பதற்குப் 'பார்ப்பார் தப்பிய கொடியோர்' என்று பாடம் மாற்றிப் பதிப்பித்துள்ளதும் இங்குக் கருதத் தக்கது. இதுவும் ஒருவகைக் கரவான செயலே.

- எஃது, எவ்வாறிருந்தாலும் 'இவ்வறக் கேடுகளுக்கெல்லாம் கழுவாய் உண்டு என்பது, அறத்திற்கே மாசு கற்பிக்கும் கருத்தாகும்.

- பெரும்பாலும் கழுவாய் (பாவத்தைக் கழுவிக் கொள்ளும் வழி) என்பது, தமிழியல் அறநூல்களுள் கூறப் பெறுவதில்லை. 'தவறு தவறுதான்; குற்றம் குற்றந்தான்; அறக்கேடு அறக்கேடுதான்; அதற்குத் தண்டனைதான் தீர்வு' என்பதே தமிழியல் அறம் என்று அறியப் பெறுகிறது. திருக்குறளிலும் அத்தகைய அறக்கேடுகளோ, அவ்வறக் கேடுகளுக்கான கழுவாயோ, உய்தி பெறும் வழியோ எங்கும் கூறப்பெறவில்லை.

- மற்று, ஆரிய 'தர்ம' நூல்களுள் வேண்டுமாயின் கழுவாய் கூறப்பெற்றுள்ளது. அதனை வலியுறுத்தி ஆரியக் கோட்பாடுகளுக்கு உயர்வு கற்பிக்கவே பரிமேலழகர் இம் மயக்கமான பொருளையும் நேர்மாறான எடுத்துக்காட்டுகளையும் தந்தாராகக் கருதவேண்டியுள்ளது.

- இனிப் பாவாணரும் பரிமேலழகரையே தழுவிப் பொருள் கொண்டதால் அவருரை விளக்கத்தும் தெளிவில்லை, என்க.

- இனி, இக்கருத்துக்கு அரண்சேர்க்கும் எடுத்துக்காட்டுப் பாடல் புறநானூறு எனும் தமிழ் இலக்கியத்துள் வந்ததும் ஆரியக் கோட்பாடுகளை ஏற்றமாகக் கருதியே யல்லாது தமிழியல் அறத்தை நிலைநாட்டுவதற்கு அன்று என்றும் கருதவேண்டியுள்ளது என்க.

- இஃது, இவ்வாறான பல முட்டுப்பாடுகளைக் கொண்ட கருத்துகளுக்கு இடந்தருவதால், நாம் மேலே கூறிய பொருளாகிய, நன்மையை அழிக்கின்ற செயல் கருத்தும், அதற்கான எடுத்துக்காட்டுகளுமே இவ்வடிக்கு முற்றிலும் பொருந்துகின்ற கருத்துகள் என்று கொள்க.

3. **செய்ந்நன்றி கொன்ற மகற்கு உய்வில்லை** - *(ஆனால்) தமக்கு ஒருவர் செய்த உதவியை நினைவழிப்பார்க்குத் தம் வாழ்வில் உய்வதற்கு வழி அமைவதில்லை.*

*- செய்ந்நன்றி கொல்லுதல் - என்பது, ஒருவர் செய்த உதவியை நினைவினின்று அழித்தலாகும். அஃதாவது மறந்து போதலாகும். அவ்வாறு மறத்தல் போல் புறக்கணிப்பாக - மதியாது - இருத்தலும் ஆகும் என்க.*

*- செய்ந்நன்றி கொன்றவற்கு உய்வில்லை என்பது, 'அன்பி லதனை வெயில்போலக் காயுமே, அன்பி லதனை அறம்' (77) என்றாற் போல, ஒருவகைக் காப்புக் குறிப்பே என்க.*

*- மற்று, உலகியலில் இதற்கு நேர்மாறான விளைவுகளே உளவாதலைக் காணலாகும். எனவே, அறம் போன்றதோர் உணர்வு நடைமுறை, தானே இயங்குதல் தன்மை கொண்டது என்பதற்கு அடிப்படை அறிவியல் சான்று இல்லை என்க. இதனை,*

**'அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்**
**கேடும் நினைக்கப் படும்'** - ***169***

*என்னும் குறளாலும் உணர்த்துதல் காண்க.*

*- எனினும் உளவியல் அடிப்படையில் இதற்கோர் உள்பொருள் உண்டாம் என்க. என்னை?*

*- பிற நன்றி கொல்லுதல்* **புறத்தது** *எனின்,*

*செய்ந்நன்றி கொல்லுதல்* **அகத்தது** *என்க.*

*- எனவே அதனை மனம் மறத்தல் இயலாது, ஒருவர் செய்த உதவியை அறிவு நிலையால், ஒருவன் மறத்தல் செய்தாலும், மனநிலையால் (மனச் சான்றால்) மறக்கவியலாதவனாய் நிற்பானாகையால் அம் மனச் சான்றே அவனை நினைவாற் காய்ச்சி வாட்டும் என்க. அவ் வாட்டுதல் அவனைப் படிப்படியாய் மெலிவடையச் செய்து, அவன் அறிவு முயற்சிகளில் ஈடுபட்டு உய்ய நினைத்தாலும், மன அழிவு அவனை உய்யாமற் செய்துவிடும் என்க. என்னை?*

*மனம் ஒத்துழையாமை அறிவுப் பயனைக் கெடுக்கும் ஆகலின். இம்மனவியல் உண்மையை, ஆசிரியரே*

**'தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்**
**தன்னெஞ்சே தன்னைச் சுடும்'** - **293**

*என வருமிடத்தும் கூறுதலை உற்றறிக. மனவியல் மதவியலன்று; இயற்கையியல் - இயல்பியல். இதுவே இறையியலுமாகும். என்னை?*

*- பிற நன்றி கொல்லுதல் புறத்தது ஆகலின், அதனை மனச்சான்று மறந்து விடும். எனவே அவன் மனத்தாக்கமின்றி, அறிவு முயற்சியில் உயர்வு தோன்ற வாய்ப்புண்டு. இதனை 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்' என்னும், ஐயவுணர்வுக் கருத்தான் வெளிப்படுத்தி, 'ஒருவேளை அவனுக்கு உய்வு உண்டானாலும் உண்டாகும்; ஆனால் இவனுக்கு உய்வு உண்டாகாது' என்று தெளிவுக் கருத்தான் உறுதிப்படுத்துவதாலும் உணர்க.*

*- மற்றபடி, அவனுக்கு உய்வுண்டு, இவனுக்கு உய்வில்லை என்று, அறத்தெய்வத்தால் நிகழும் நிகழ்ச்சிகள் போலக் காட்டுவதற்கு அறிவியலில் வாய்ப்பில்லை என்க.*

4. *இதனால், செய்ந்நன்றி கொல்லுதலின் தீமையை இறுதியாகவும், உறுதியாகவும், அறுதியாகவும் உரைத்தது பெற்றாம்.*

# அ-2 இல்லறவியல்

## அ-2-8 நடுவு நிலைமை - 12

### அதிகார முன்னுரை

'நடுவு நிலைமை'யாவது, நடுவாக நிற்றல். அஃதாவது, சிக்கலுக்குரிய இரண்டு முறையீடுகளுக்கோ, இரண்டு தேர்வு நிலைகளுக்கோ, விற்றலுக்கும் வாங்குதற்குமான நிலையிலோ, ஓரம் சாராமல், மனத்தானும் சொல்லானும் செயலானும் நடுநிலையைக் கடைப்பிடித்தல். வெறுக்கையும் விழைவும் இன்றிச் சமநிலையாக ஒன்றை நோக்குவது. இன்னும், அது பொதுமையறம் கோடாமையுமாம்.

கோடுதல் ஒருபால் கோணித்தல் - சாய்தல். கோடாமை மனவுணர்வாலும் செயலுணர்வாலும் ஒருபுறத்தே சாய்ந்துவிடாமல், நிலைநிற்கும் தன்மை.

**'நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்கு அணி'** - **115**

என்றும்,

**'சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்(து)ஒருபால்**

**கோடாமை சான்றோர்க்கு அணி'** - **118**

என்றும், 'மனவுணர்வால் கோடாமையையும்,

**'வினைசெய்வான்**

**கோடாமை கோடாது உலகு'** - **520**

என்று, செயலுணர்வால் கோடாமையையும், சான்றோர்க்கு அணிகலன் ஆக்குவார்.

இதனை,

**'காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்**
**ஆய்தல் அறிவுடையார் கண்ணதே - காய்வதன்கண்**
**உற்ற குணம் தோன்றா தாகும் உவப்பதன்கண்**
**குற்றமும் தோன்றாக் கெடும்'** - *அறநெறிச்சாரம்:23*

என்றார் பிறரும்.

உலகியற்குள் புகுந்து வாழும் தன்மையர்க்கு வேண்டுவனவாகிய பொதுவுணர்வின் படிநிலைகளைச் சுட்ட விழைந்தவர், மாந்தத் தேவையின் முதலுணர்வாகிய **'அன்புடைமை'**யையும், அதனையடுத்த இரண்டாம் உணர்வாகிய **'விருந்தோம்பலையும்'**, அதற்குத் தேவையான மூன்றாம் உணர்வாகிய **'இனியவை கூறலை'**யும் அவைவழிப் பிறர் உணரத்தக்க நான்காம் உணர்வாகிய **'செய்ந்நன்றி அறிதலை'**யும், நிரல் நிறையாகக் கூறியவர், இனி, மனவுணர்வுகளை யடுத்ததும், செயலுணர்வுக்கு அடிப்படையாகியதுமான ஐந்தாம் உணர்வாக **'நடுவு நிலைமை'**யைக் கூறப் புகுந்தார் என்க. என்னை?

உலகப் பிறரிடத்துத் தொடர்பு கொள்ளும் இன்றியமையா உணர்வுப் படிநிலைகளாக உள்ள இவற்றின் அடிப்படையில்தான், ஒழுங்கமைதியுற்ற மக்களினத்தின் விழுமிய வாழ்வு அமைதல் இயலும் என்னும் கருத்துக் கொண்டவர், அவற்றை நுண்மையாகவும் திண்மையாகவும் விளக்கியும், தமிழிலக்கியப் பரப்பிலும், பிற அறிவியல் வெளிப்பாடுகளிலும், வாழ்வியல் நெறிமுறைகளிலும், இதுவரை வேறெங்கும் வேறெவரும் கடைப்பிடிக்காத முறைபயிற்றலை, நூலாசிரியப் பேராசான் கடைப்பிடித்தும் அவற்றைச் செப்பமாகவும், திட்பமாகவும், நுட்பமாகவும், ஒட்பமாகவும் உரைப்பது, உணர்ந்து போற்றுதற்கும், போற்றிக் கொள்ளுதற்கும், மகிழ்தற்கும் உரியதாம் என்க.

'நடுவு நிலை' என்பது பொதுமையறத்திற்கு மிகுதேவையானதொரு நல்லுணர்வு ஆகும். அது தனக்கும் பிறர்க்கும் நடுவாக நிற்கும் ஓர் உள்ளுணர்வு, **'பிறவும் தமபோல் செய்விக்கும்'** (120) ஒரு செயலுணர்வும் ஆகும், அது. மேலும் இவ்வுணர்வு அனைத்து வாழ்வினர்க்கும் செயலினர்க்கும் வேண்டுவதோர் உயர்வுணர்வுமாகும்.

செப்பமும் இதுதான்; நுட்பமும் இதுதான். ஒப்புணர்வும் இது தான்; மெப்புணர்வும் இதுதான். தகுதியும் இதுதான்; புகுதியும் (நுழை வாயிலும்) இதுதான். சமநிலையும் இதுதான்; சரிநிலையும் இதுதான். நேர்மையும் இதுதான்; ஓர்மையும் இதுதான். நயன்மையும் இதுதான்; இயன்மையும் இதுதான். அன்பும் இதுதான்; அறிவும் இதுதான்! இன்னும் தெளிவாகச் சொல்வதானால் உலகியல் அறவுணர்வுக்கும், மூல அறவுணர்வாகிய இறைமையின் பேரறவுணர்வுக்கும் இந் நடுநிலை உணர்வே இயங்கியல்

அடிப்படையாக உள்ளதெனலாம். இதில்தான் அதன் உணர்வு வடிவம் மாந்தவியலுடன் விளக்கம் பெறுகிறது. இறைமை உயிரினத்திற்கே நடுவு நிலையாக இயங்குகின்றதன்றோ?

இவ்வாறு, பொதுமைக்கும் பொதுவுடைமைக்கும் அடிப்படையாக உள்ள இவ் விறைமை சார்ந்த மனவியல் கோட்பாட்டை எவரும் சரிவரக் கடைப்பிடியாததால்தான், கோணல்மாணலுற்ற குமுகாய அமைப்பும், ஏற்றத் தாழ்வுற்ற பொருளியல் அமைப்பும், கரவும் வஞ்சகமும் உற்ற அரசியல் அமைப்பும் உலகெங்கணும் பரந்துபட்டுக் கிடக்கின்றன. அறம் திறம்பி மறம் மேலிட்டு, அல்லவை ஓங்கி, நல்லவை கூம்பியிருத்தற்கும் இவ்வுணர்வின்மையே கரணியமாம் என்க.

தானும் பிறனும், தாமும் பிறரும் ஒரே தன்மையர்தாம் என்றும், தனக்கும் பிறனுக்கும், தமர்க்கும் பிறர்க்கும் பொதுமையானவைதாம் இந் நிலமும் புலமும், வளமும் நலமும், வாழ்வும் சூழ்வும் என்றும், கருதற்கியலாத குறுகல் மனத்திற்கும் இந் நடுவுநிலை உணர்வு, கெடுவுற்றுக் கிடப்பதுதான் அடிப்படை ஏதுவாம் என்க.

எனவே, அது திரிந்தும் சரிந்தும் போயிருக்கின்ற மக்களிடத்து, அதனை மீட்டெடுத்து நிலை நிறுத்துவான் வேண்டி, இவ்வதிகாரத்தை, முன்னவற்றை யடுத்துச் சொன்னார் என்க.

இதனுள் அந் **நடுவுநிலைமை** பற்றிய விளக்கமும், அதன் தேவை, அதன் இன்றியமையாமை, அதன் பயன்பாடு, அதிலிருக்க வேண்டிய உறுதி, அஃதில்லாமற் போயின் வரும் தாழ்ச்சி, அதன் பெருமை, எண்ணத்தாலும் சொல்லாலும் செயலாலும் அது பேணப் பெற வேண்டிய வழிமுறைகள் ஆகியன பலவும் பலவகையாகவும் கூறப் பெறுகின்றன.

## கககக. தகுதி எனவொன்று நன்றே பகுதியால் பாற்பட்டு ஒழுகப் பெறின் -111

### பொருள்கோள் முறை :

**பகுதியால் பால்பட்டு ஒழுகப் பெறின்,**
**தகுதி எனஒன்று நன்றே.**

**பொழிப்புரை** : (உறவினர், நண்பினர், பகைவர், நொதுமலர் (பகையும் நட்பும் இல்லாத பொதுவர்), வேண்டியவர், வேண்டாதவர், தெரிந்தவர், தெரியாதவர், கற்றவர், கல்லாதவர், ஏழையர், செல்வர், இன்ன சாதியினர், இன்ன மதத்தினர், இளவர், முதுவர், ஆடவர், பெண்டிர் எனும்) பலவகையான மக்கள் பகுதியினரிடத்தும், (எவ்வகை வேறுபாடும், மாறுபாடும் இன்றிக்)

கடமையில் வழுவாது நின்று, கடைப்பிடித்து ஒழுகப் பெற்றால், நடுநிலை எனும் ஒன்று, மிகச்சிறந்த அறவுணர்வாகும்.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. இது, மிகவும் பொருள் பொதிந்த குறள், மிக விரிவான மூன்று வகையான உலகியற் பொருள்களைப் **பகுதி, பால், தகுதி** எனும் மூன்று சொற்களால் நுண்ணிதின் உணர்த்தியுள்ளது, ஆசிரியரின் நுண்மாண் நுழைபுலத்தைத் தெள்ளிதின் உணர்த்துகிறது, என்க.

**பகுதியால்** - என்னும் ஒரு சொல், 'பலவகையான மக்கள் பகுதியினரிடத்தும்' எனும் பொருள்பட்டு, அம்மக்கள் பகுதியினரை, உறவினர், நண்பினர், பகைவர், நொதுமலர் (பகையும் நட்பும் இல்லாத பொதுவர்), வேண்டியவர், வேண்டாதவர், தெரிந்தவர், தெரியாதவர், கற்றவர், கல்லாதவர், ஏழையர், செல்வர், இன்ன சாதியினர், இன்ன மதத்தினர், இளவர், முதுவர், ஆடவர், பெண்டிர் எனும் பலவகையினராக விரித்தும் பொருள் கொள்ளக் கூடியது. 'ஆல்' என்னும் உருபு இடத்துப் பொருளில் வந்தது.

(எ-டு) அவனால் வெளிப்பட்டது.

அவனிடத்தில் வெளிப்பட்டது.

**'பால்' - பட்டு** - என்னும் சொல், கடமை, நேர்மை என்னும் பொருள்பட்டு, கடமையில் - நேர்மையில் நின்று என்று விரியும் தன்மையது.

**'தகுதி'** - என்னும் சொல்லும் 'தகவு' என்னும் பொருள்தந்து நடுவு நிலையைக் குறித்தது.

"தமிழரின் ஏமாளித்தனத்தினால் 'யோக்கியதை' என்னும் வடசொல் வழக்கூன்றவே, தகுதி என்னும் தகுந்த தமிழ்ச்சொல் வழக்கு வீழ்ந்தது" - என்பார் பாவாணர் தம் மரபுரையில்.

2. **பகுதியால் பால்பட்டு ஒழுகப் பெறின்** - முன் கூறிய மக்கள் பிரிவினரிடத்தும், கடமையில் அல்லது நேர்மையில் வழுவாது நின்று, 'தகுதி' என்னும் நடுவு நிலை உணர்வு கடைப்பிடிக்கப் பெற்று ஒழுகப் பெறின்.

3. **தகுதி என ஒன்று நன்றே** - நடுநிலை எனும் ஒன்று மிகச் சிறந்த அறவுணர்வாகும் - நன்மையும் தருவதாகும்.

- இக் கூற்று, பெறின் எனும் ஐயவுணர்வுக்கு ஒரு தெளிவாக நின்றது.

- அவ்வாறு ஒழுகப் பெறாமலிருப்பின் இவ்வறம் ஓர் இழிவான, போலியான, பொய்ம்மையான நிலைக்கு உள்ளாகி விடும் என்னும் குறிப்புணர்த்தினார்.

- உலகில், பெரும்பாலார் நடுவுநிலை உணர்வைக் கடைப்பிடித்து ஒழுகுவதுபோல் நடிப்பதால், இவ் வறவுணர்வு உண்மையான பயனைத் தராது மக்கள் இடர்ப்பட ஏதுவாகின்றது. எனவேதான் பகுதியால் பால்பட்டு ஒழுகப் பெறின் மிக நன்மை விளையும் என்னும் கருத்து இவ்வாறு உணர்த்தப் பெற்றது, என்க.

## கக௨. செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து - 112

பொருள்கோள் முறை: இயல்பு

பொழிப்புரை : *எந்நிலையிலும் நடுவுநிலையைக் கடைப்பிடித்து ஒழுகுவான் தன் முயற்சியால் பெற்ற செல்வம், பலவாறும் சிதைந்துபடாமல், அவனுக்கும் அவனது பிறங்கடைக்கும் பயனையும் வலிவையும் உண்டாக்கும்.*

சில விளக்கக் குறிப்புகள் :

1. **செப்பம் உடையவன் ஆக்கம்** - எந்நிலையிலும் நடுவுநிலையைக் கடைப்பிடித்து ஒழுகுவான் தன்னுடைய முயற்சியால் பெற்ற செல்வம்.

   - உழைப்பால் ஆக்கப் பெறுதலின் **ஆக்கம்** செல்வமாயிற்று.

   - இருபுறத்தும் செம்மையாக நிற்றலால் **செப்பம்** நடுவுநிலையைக் குறித்தது.

   - செப்பம் உடையவன் தன் முயற்சியால் செல்வத்தை உருவாக்குவானாகலின், அதனை ஆக்கம் என்று குறித்தார்.

2. **சிதைவின்றி** - நேர்மையானும் நல்வழியானும் தன் உழைப்பானும் வந்த செல்வமாகலின், அல்வழியானும் பிறர் கொள்வழியானும் அழிக்கப் பெறாதாகலின் சிதைவின்றி என்றார் சிதைவு - சிதர்வு. சிற்சிறிதாக அழிதல்.

3. **எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து** - அவனுக்கும் அவனது பிறங் கடைக்கும் பயனையும் வலிவையும் உண்டாக்கும்

   - 'உம்' தொக்கு நின்று 'அவனுக்கும்' என்று பொருள் தந்தது.

   - எச்சம் - அவனுக்குப் பின் எஞ்சி நிற்பது. பெயர், புகழ், பொருள், பிறங்கடை அனைத்தையும் குறிக்கும்.

- ஏமம் + ஆப்பு - ஏமாப்பு. ஏமம் - காவல்

ஆப்பு - யாப்பு - கட்டு - காவற்கட்டு.

யாப்பு -மேல் கட்டுதலால், மூடுதல் பொருளையும் தரும் பெயர்ச்சொல் ஈறு.

மார் - யாப்பு - மாராப்பு;

பொல் - யாப்பு - பொல்லாப்பு

- செல்வம் வாழ்க்கைக்குப் பயன்படுவதால் பயனையும், பல காப்பு நிலைகளைத் தருதலால், வலிமையான காவலையும் தரும் என்றவாறு.

4. இது, நடுவுநிலையால் ஒருவன் பெறும் சிறப்பையும், அவன்றன் வழியினர் பெறும் பயனையும், வலிமையையும் எடுத்துக் கூறி, அதன் இன்றியமையாமையைக் கூறுதலால், அதன் பின்னர் வைக்கப்பெற்றது.

**கக௩. நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை**
**அன்றே ஒழிய விடல். - 113**

பொருள்கோள் முறை : இயல்பு

பொழிப்புரை : நன்மையே தருவதெனினும், நடுவு நிலைமை தவறுதலால் ஆகி வருகின்ற விளைவை, அது வரும் அவ் வேளையிலேயே ஏற்காமல் தவிர்த்து விடுக.

சில விளக்கக் குறிப்புகள் :

1. **நன்றே தரினும்** - நன்மையே தருவதெனினும், 'தரினும்' என்றது, தராது என்பதை உள்ளடக்கியது. இருப்பினும் உலகியல் முறையில், ஒருவேளை அதனால் நன்மையே வருவதெனினும் என்றவாறு, நன்று - நன்மை.

2. **நடுவு இகந்து ஆம் ஆக்கத்தை** - நடுவு நிலைமை தவறுதலால் ஆகிவரும் விளைவை.

- இகத்தல் - கடத்தல், நீங்குதல், தவறுதல்

இகந்து - கடந்து, நீங்கி, தவறி.

- ஆம் ஆக்கம் - ஆகி வரும் விளைவு

- அது செல்வம், பதவி, புகழ், பிற ஆக்கம் தரும் பொருள்கள் அனைத்தையும் குறிக்கும்.

3. **அன்றே** - அற்றையே, அப்பொழுதே, அவ்வேளையே - அதுவரும் அவ் வேளையிலேயே.

4. **ஒழிய விடல்** - தன்னிடம் வந்து பொருந்துமாறு அன்றி, நீங்குமாறு செய்து விடுக.

- விடல் - விடுக. கைவிடுக.

5. நடுவு நிலைமையைக் கடைப்பிடித்து ஒழுகுவானுக்கு முறையாகவும், அது தவறுவானுக்கு முறையில்லாத வழியிலும் வரும் உலகியற் பொருள்களின் வேறுபாடுகளையும் அவற்றின் நன்மை தீமைகளையும் அவற்றை முறையே ஏற்கவும் தவிர்க்கவும் வேண்டிய மனவுணர்வுகளையும் முன் பாடலினும் இதனினும் பாகுபடுத்திக் காட்டினார்.

**கககச. தக்கார் தகவிலர் என்பது) அவரவர்**
**எச்சத்தால் காணப் படும். 114**

**பொருள்கோள் முறை : இயல்பு.**

**பொழிப்புரை** : ஒருவர் நடுநிலை உள்ளவர் அல்லது இல்லாதவர் என்கின்ற உண்மை, அவரவர் வாழ்ந்து சென்ற பின், எஞ்சியுள்ள நிலைகளால் கண்டுகொள்ளப் பெறும்.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. ஒருவர் தாம் வாழ்கின்ற முறைகளை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாமல் இருப்பதே உலகியலாக உள்ளது.

- தாம் எவ்வாறான மனநிலை, குணநிலை, ஒழுக்கநிலை கொண்டவர், எவ்வகையாகப் பொருளை ஈட்டுகிறார், அவற்றை எவ்வெவ் வழிகளில் துய்ப்புக்காகவும் எதிர்கால வைப்புக்காகவும் செலவிடுகிறார் - முதலியனவெல்லாம் பிறர் அறிந்திடாத வண்ணமாகவே, மிகப் பெரும்பாலார் நடந்து கொள்வது இயல்பாக இருக்கின்றது. மேலும், நடுவு நிலை உணர்வு என்பது, எவராலும் எளிதில் வெளிப்படையாகக் கண்டுகொள்வதற்கியலாதது; ஒருவருடன் நெருங்கிப் பழகுவார்க்கும் அறிதற்கியலாதது; அடிமனத்துள் உறைவது; மனவியற் புலவராலும் ஆராய்ந்து அறிதற்குக் கடினமானது.

- இவ்வகையில், ஒருவர் பொதுமையறமான நடுவு நிலைமையுடன் நடந்து கொள்பவரா அல்லரா என்பது அவர் குடும்பத்தாரானும் கண்டுகொள்ள முடியாத அகநடைமுறையாகும்; அஃது, அவர் மறைவுக்குப் பின்னரே புறவெளிப்பாடாகப் புலப்படுகிறது. அதற்கு அவர் விட்டுச் சென்ற எச்சங்கள் சான்றுகளாக அமைகின்றன.

- இவ் வுலகியற் பேருண்மையை நூலாசிரியர் தம் பட்டறிவான் இப் பாடலில் உணர்த்திக் காட்டுகிறார்.

2. **தக்கார் தகவிலர் என்பது** - ஒருவர் நடுவுநிலை உணர்வுள்ளவரா, இல்லாதவரா என்னும் உண்மைநிலை.

- தகவு + ஆர் - தக்கார்.

- தகவு + இலர் - தகவிலர் - நடுநிலையில்லாதவர்.

3. **அவரவர் எச்சத்தால் காணப்படும்** - அவரவரும் தம்தம் வாழ்க்கையின் பின்னர் எச்சமாக விட்டுச்சென்ற நிலைகள் அல்லது பொருள்களால் கண்டுகொள்ளப்பெறும்.

- இதில் வரும் 'எச்சம்' என்னும் சொல்லுக்கு உரையாசிரியர்கள் சிறுசிறு மாறுபட்ட பொருள்களைத் தந்துள்ளனர்.

- நுண்மையாக நோக்கின் அவர்கள் வேறுபடுத்திக் காட்டும் அத்தனை பொருள்களும் எச்சத்தின் பாற்படும் என்பதும் ஓர் உண்மையாகும்.

- மணக்குடவர், எச்சத்தை 'ஆரவாரத் தொழில்' என்றார். இது, மிகையான எல்லை தாண்டிய விளக்கம்.

- பரிதியார், 'புதல்வரின் சற்குணம்' என்றார். இதற்கும் கரணியம் உண்டு.

- காலிங்கர், 'ஒழுக்கம்' என்று பொருள் தருவார். எச்சம் செயற் பொருளையும் தருமாகலின்.

- இனிப் பரிமேலழகரோ, 'எச்சத்தாற் காணப்படும்' என்னும் தொடருக்கு, 'அவரவருடைய நன்மக்களது உண்மையானும் இன்மையானும் அறியப்படும்' என்னும் பொருள் கூறித்

'தக்கார்க்கு எச்சம் உண்டாதலும், தகவிலார்க்கு இல்லையாதலும் ஒருதலையாகலின், இருதிறத்தாரையும் அறிதற்கு அவை குறியாயின' - என்று விளக்கமும் கூறியுள்ளார்.

- இவர் இவ்வாறு கூறுதற்கு 'மநுதர்ம' நூலும் ஒருவாறு காரணமாயிற்று எனலாம். அதன் மூன்றாம் பகுப்பில்,

'முக்கியமாய் உத்தமமான விவாகத்தால் பிறக்கும் பிள்ளைகள் சாதுக்களாய் இருப்பார்க்ள; நிந்திக்கத் தக்க விவாகத்தாற் பிறக்கும் பிள்ளைகள் துஷ்டர்களாய் இருப்பார்கள்' என்று கூறுப் பெற்றுள்ளது.

- இவர் உரைக்குச் சிறப்புரை விளக்கம் தந்த கோ. வடிவேலனார் அவர்கள், பரிமேலழகின்,

'தக்கார்க்கு எச்சம் உண்டாதலும், தகவிலார்க்கு இல்லை யாதலும் ஒருதலையாகலின்' - என்னும் தொடருக்கு,

'நடுவு நிலைமையுடையோர்க்கு நல்லபிள்ளைகள் உண்டாதலும், நடுவு நிலைமை இல்லாதவர்களுக்கு நல்ல பிள்ளைகள் இல்லையாதலும்' என்று சிறப்புரை கூறி, மேற்கூறிய 'மநுதர்ம' நூற்கருத்தை எடுத்துக் காட்டியதோடமையாது,

**'மகனுரைக்கும் தந்தை நலத்தை'**

**'பழியின்மை மக்களாற் காண்க'**

- எனும் 'நான்மணிக் கடிகை'ச் செய்யுள் பகுதிகளையும் காட்டி,

**'முக்குணம் தம்மின் மாறி**

**முயங்கிடும் தந்தைக் கப்போ**

**தெக்குணம் உதிக்கும் பிள்ளைக்**

**கதுகுணம் விதிய(து) ஆமால்'**

- என்னும் **'பெருந்திரட்டு'**ச் செய்யுளையும்,

**'தந்தைக் கெந்தக் குணமுதிக்கும்**

**சனிக்கும் பொழுதின் மைந்தர்க்கும்**

**அந்தக் குணமாம்'**

- என்னும் **'குறுந்திரட்டு'**ச் செய்யுளடியையும்,

**'செந்நெல்லால் ஆய செழுமுளை மற்றும்அச்**

**செந்நெல்லே ஆகி விளைதலால் - அந்நெல்**

**வயல்நிறையக் காய்க்கும் வளவயல் ஊர**

**மகனறிவு தந்தை யறிவு'**

- என்னும் நாலடியார் (367) வெண்பாவையும் மேற்கோள் காட்டியுள்ளார்.

- இங்குப் பரிமேலழகர் கூறிய 'நன் மக்கள்' என்னும் சொல்லை, அவர்மேல் கொண்ட ஆராப் பெருமையால், சிறப்புக் கருத்தாக விரித்து, 'வித்தின் வழி விளைவு' என்னும், மருத்துவ இயலுக்கும் ஒருவாறு இயைபுடையதாக மாற்றிப் பொருள் விளக்கியுள்ளார் வடிவேலனார் என்க. ஆனால், அவரதற்குப் 'புண்ணிய பாவ'க் கருத்தையே அடிப்படையாகக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

- இனிப் பாவாணருங்கூடப் பரிமேலழகர் கருத்தையே வழி மொழிந்து, 'தக்கார்க்கு நன்மக்களும், தகவிலார்க்குப் புன்மக்களும் பிறத்தல் இயல்பாகலின், 'அவரவர் எச்சத்தாற் காணப்படும்' என்று விளக்கமும் கூறி, 'எச்சம் என்னும் சொல், மக்களின் வாழ்க்கை மட்டுமன்றிப் பெற்றோரின் முகத் தோற்றமும் குணவமைதியும் எஞ்சி நிற்பதைக் குறிக்கும். அதனால் மக்கள் என்னும் சொல்லினும் தகுதியும் பொருட் பொலிவும் உடையதாம்' என்று மேலும் வேண்டாது விரிவும் கூறினார்.

- திருவள்ளுவர் கருத்து வேறு. இவர்களுடைய கருத்தும் விளக்கமும் வேறு. இவர்கள் கூறுவன வெல்லாம் மநுநூலாரின் 'புண்ணிய பாவ'க் கருத்தின் வேறு வேறு வடிவங்களே.

திருவள்ளுவர் கூறுவது, உயிரியல், உடலியல், மனவியல், மருத்துவ வியல் ஆகியவற்றுக்கு, மட்டுமன்றி, உலகியலுக்கும், இயங்கியலுக்குங்கூடப் பொருந்துவதாம் என்க. இவ்வாறு பொருந்த வுரைப்பதற்காகத்தான், அவர் யாப்பியல் முறைக்கும் எதுகைப் பொருத்தம் உடையதான 'மக்கள்' என்னும் சொல்லை நேரடியாகப் பெய்யாது, 'எச்சம்' எனும் எதுகைப் பொருத்தமின்றி வரும் சொல்லையே அங்குப் பொருத்தினார் என்க. இதிலிருந்தே இவ்வுரையாசிரியர்களெல்லாரும் ஒருதலையாகக் கொள்ளும் 'மக்கள்' என்னும் பொருளை மட்டுமே 'எச்சம்' என்னும் சொல்லால், ஆசிரியர் குறிக்கவில்லை என்பதைத் தெளிக. இனி, அவ்வாறு அது குறித்துவிடல் கூடாது என்பதே ஆசிரியர் கருத்துமாம் என்க. என்னை?

- நூலாசிரியர் 'மக்கள்' என்னும் சொல்லையே நேரடியாகப் பயன்படுத்தாமல், 'எச்சம்' என்னும் சொல்லையே ஏன் பயன்படுத்தியுள்ளார் என்பதைச் சிறிது ஆய்ந்து பார்ப்போம்.

- 'எச்சம்' என்னும் சொல்லுக்கு உள்ள பல பொருள்களில் 'மக்கள்' என்னும் பொருளும் அடங்குமே யன்றி, அதற்கு அதுவே முழுப் பொருள் ஆகிவிடாது என்று உணர்க.

- 'எச்சம்' எனும் சொல்லுள், ஒருவர் மறைவுக்குப் பின்னர் அவர் எச்சமாக விட்டுச் சென்ற பொருள்கள், அஃதாவது, அவர் சொத்துகள், செல்வங்கள், பண இருப்புகள், அவருக்குள்ள மதிப்பு, பெயர், புகழ், குடும்ப உறுப்பினர்கள், அவர் அறிஞராக இருப்பின் அவரின் எழுத்தோவியங்கள், வரைவுகள், நூல்கள், ஆராய்ச்சிக் குறிப்புகள், அவர் படித்த கருவிநூல்கள், கடன்கள் - முதலிய அனைத்து வைப்புகளும் அடங்கும் அன்றோ? இத்தனை விரிவான பொருள்களையும் மக்கள் எனும் ஒரு சொல் குறிப்பதற்கில்லை. ஒருவர் மறைவுக்குப் பின்னர் எஞ்சுபவர் அவர் மக்களாக மட்டுமே இருத்தல் இயலாது என்பது அனைவரும் அறிந்த ஒன்று. இதனை எவரும் எக்காரணம் கொண்டும் மறுத்தல் இயலாது. அவ்வாறிருக்கையில் எச்சம் எனும் சொல் மக்கள் எனும் அளவில் மட்டும் பொருள் தருவதாகக் கொள்வது எவ்வாறு பொருந்தும்?

எனவேதான் நூலாசிரியர் மிக விழிப்பாக மேற்கூறிய அத்தனைப் பொருள்களையும் குறிக்கும் 'எச்சம்' எனும் ஒரு சொல்லை இங்குப் பயன்படுத்தியுள்ளார் என்று கருதுதல் வேண்டும். அவரின் சொல் பயன்படுத்தம் குறித்து அவரின் நுண்மாண் நுழைபுலத்தை முன்னரே புலப்படுத்தியுள்ளோம்.

- மேலும், நூலாசிரியர், 'எச்சம்' எனும் சொல்லை இந்நூலுள் ஒன்பது இடங்களில் பயன்படுத்தியுள்ளார். அவற்றுள் இது தவிரப் பிற ஏழு இடங்களிலும் (112, 238, 674, (இருமுறை), 1004, 1012, 1076) 'எஞ்சி நிற்பது என்னும் பொருளையே, பரிமேலழகரும் பிறரும் கொண்டுள்ளனர். அவ்வாறிருக்க இங்கும் இன்னும் ஓர் இடத்திலும் (456) மட்டும், பரிமேலழகர் ஏன் அதற்கு 'மக்கள்' என்று பொருள் தருதல் வேண்டும். ஏனெனில், இவ்விடங்களில் மட்டுந்தான் தாம் எண்ணியவாறு மநுநூற் கருத்தை அஃதாவது ஆரிய வேதமதக் கருத்தை - அஃதாவது - பாவ, புண்ணியக் கருத்தை நுழைப்பதற்குச் சிறிது இடம் கிடைத்துள்ளது என்பதால் என்க. இவ்வாறு, ஊசி நுழைய வழி கிடைத்தால் உலக்கையை மட்டுமன்று, ஒட்டகத்தையே நுழைக்கும் திறனுள்ளவர் பரிமேலழகர்.

- 'மக்கள்' என்று பொருள் தருவதால் அவருக்குக் கிடைக்கும் வாய்ப்பு - நன்மை - என்னெனில், 'புண்ணியம்' செய்தவர்களின் - அஃதாவது - 'தர்மம்' செய்தவர்கள், நல்ல மக்களையும், அது செய்யாதவர்கள் அல்லது - 'பாவம்' - செய்தவர்கள் தீய மக்களையும் பெறுவார்கள் என்னும் வேதவழி, மநுதர்மக் கருத்தை வலியுறுத்தவே என்க.

- உண்மையில், மக்கள் தோற்றம் - அஃதாவது - மக்கள் பேறு குழந்தைகள் பெறுவது - மருத்துவ இயல், அறவியலின்படி, பெற்றோர்களின் உடற்கூற்றியல், மனவியல், மரபியல், பாலியல் முறைப்படியான விளைவு ஆகும். இஃது இத்துறையறிவு பெற்ற அனைவர்க்கும் நன்கு தெரிந்த உண்மை. இதில் 'புண்ணிய, பாவ'க் கொள்கை - அஃதாவது 'கர்மா'க் கொள்கை என்பது மத வழிப்பட்ட நம்பிக்கையே தவிர, அதில் வேறு அறிவியல் தொடர்பான உண்மைகள் இருப்பதாக எவரும் இதுவரை மெய்ப்பிக்கவில்லை.

கணியவியல் என்று கூறப்பெறும் 'சோதிட நூல்' என்பது, கோளியலும், கலையியலும் கலந்த ஒரு கதம்ப நூல். இதன் மூலமும் தமிழியலின் ஒரு பகுதியாகவே இருந்திருத்தல் கூடும் என்பது தமிழியலார் கொள்கை. இதன் வழியும் முழுமையும் இற்றை அறிவியலுக்குப் பொருந்துமாறில்லை. அதன் அடிப்படையே பல வழிகளில் அறிவியலுக்கு மாறுபட்டு உள்ளது. எனவே, உண்மை தெளிவாகத் தெரியப்படுத்தப் பெறுவதில்லை. இதன்படி பார்த்தாலும் வேதநூற் கொள்கை முடப்பட்டே நிற்கிறது.

- எனவே, எந்த வழியானும், அறவழி நின்றார்க்கு நன் மக்கள் பிறப்பதும், அறமல்லாத வழியில் நடப்பார்க்குத் தீய மக்கள் பிறப்பதும் உண்மை என்று கொள்வதற்கில்லை. தீமை நெறியைக் கடைப்பிடித்து ஒழுகுவார்க்கு நன்மக்கள் பிறப்பதும், அறநெறிப்பட்டார்க்குத் தீய

மக்கள் பிறப்பதுமான, எதிரிடை நிகழ்வுகளாக உள்ளதைப் பல வரலாற்றுச் சான்றுகள் மெய்ப்பித்து உள்ளன. இவற்றை யெல்லாம் முற்பிறவிக் கொள்கையுள் அடக்குவதும் அறியாமையே. அதுவும் மதுவியலின் மூட நம்பிக்கையின் பாற்பட்டதே.

எனவே, இது தொடர்பான பரிமேலழகர் கருத்தையோ அவரை ஒட்டிய பிற உரையாசிரியர்களின் கருத்துகளையோ ஏற்பதற்கு இடமில்லை. அவரது கருத்து வேண்டுமென்றே திணிக்கப் பெற்ற ஒரு கருத்தாகுமே யன்றி, உண்மைக்குப் பொருந்திய கருத்தோ, நூலாசிரியரது கருத்தோ ஆகாதென்று கூறி விடுக்க.

- இனி, 'எச்சம்' என்னும் சொல்லுக்குரியனவாக முன்கூறிய பல்வேறு எச்சப் பொருள்களில் ஒன்றையோ பலவற்றையோ நூலாசிரியர் கருத்தாக நாம் கொண்டாலும், அதிலும் இக் கருத்து நிறைவுற்றதாகக் கருதிவிடுவதற்கில்லை என்க. என்னை?

- ஒருவர், தம் எச்சமாக, அவர் செய்த ஒரு தொழில் அடிப்படையிலோ, ஓர் அரசு பணிநிலையின் அடிப்படையிலோ, நேர்மையாக, ஞாயமாகத் திரட்டப்பெற வேண்டிய மதிப்பீட்டு அளவுக்கு மீறித் தம் சொத்துகளை வைத்துச் சென்றாரெனில், அவரை நடுநிலைமையைக் கடைப்பிடித்து ஒழுகிய ஒருவராக எவ்வாறு கருதுவது? இயலாதன்றோ?

- அதேபோல், மற்றவர் ஒருவர் பெரும்புகழ் பெற்ற அறிஞராக மதிப்பிடப் பெறும் அளவுக்கு தம் நூலகத் திரட்டையோ, அச்சிட்ட நூல்களையோ, அச்சிடப் பெறாத ஆராய்ச்சி நூல்களின் கைப்படிகளையோ தம் எச்சங்களாக விட்டுச் சென்றுள்ளாரெனின், அவரின் கூர்த்தறிவுத் திறன் நோக்கி மட்டுமே, அவரைத் தம் வாழ்நாளில் நடுவுநிலைமையைக் கடைப்பிடித்தவராக எப்படி நாம் கருதிவிட முடியும்? 'அரம் போலும் கூர்மையராக விருந்து, மக்கட் பண்பில்லாத மரம் போல்வராக' (997) அவர் இருந்திருக்கலாம் அன்றோ? அந் நிலையில், தம்மையும் பிறரையும் ஒன்றுபோல் கருதும் நடுநிலை யுணர்வினராக அவர் இருந்திருக்க முடியும் என்று மதிப்பிடுவதற்குச் சான்று ஏது?

- இனி, வேறு ஒருவர், தம் குடும்பத்தினரையும், மக்களையும் நல்ல வகையில், கல்வி, பண்பு, முயற்சி ஆகியவற்றுள் மேம்பட்டு நிற்குமாறு விட்டுச் சென்றிருப்பினும், அவற்றை மட்டுமே கருத்தில் கொண்டு, அவரின் தகுதி நிலையை - அஃதாவது - அவர் நடுவு நிலையறத்தைக் கைக்கொண்டே வாழ்ந்திருந்தார் என்று நாம் எவ்வாறு உறுதி செய்வது?

- எனவே, பொருள் எச்சமோ, புகழ் எச்சமோ, அறிவு விளைவு எச்சமோ, மக்கள் எச்சமோ, அல்லது இவற்றுக்கு நேர் எதிரான இகழ், பழி முதலியவற்றின் எச்சமோ, அவரின் நடுவுநிலை உணர்வைத் தனித்த

மதிப்பீட்டு நிலையில், உணர்த்தி விடா என்பதை ஓர்ந்து உணர்க.

- அவ்வாறெனில், அவரின் நடுவுநிலை யறவுணர்வை அவர்க்குப் பின்னர்ப் பிறர்க்குணர்த்தும் எச்சம்தான் வேறு எத்தகையதோ, என்னவோ எனில் கூறுதும்.

- ஒருவரின் மறைவுக்குப் பின்னர் எச்சங்களாக உள்ள மேற்காட்டிய பொருள்களுள் யாதானும் தனித்த ஒன்றோ, ஒரு சிலவோ மட்டுமோ அவரின் தகுதி நிலையைக் கண்டுகொள்ள, வெளிப்படையல்லாத வாழ்வு நிலையமைந்த இவ் வுலகியல் சூழலில், சான்றாக அமையா வென்க. எனவே, அவர் விட்டுச் சென்ற எச்சங்கள் ஆவன, அவரின் வருவாய் அடிப்படை நிலைக்குத் தகுந்த பொருள்நிலை வைப்பு, அறிவுநிலை ஈட்டங்களின் தன்மை, அவற்றின் பெருமை அல்லது தகுதிப்பாடு, அவருக்குற்ற பெயர்ப் பரவலின் புகழ் அல்லது விளம்பரத் தன்மை, அவர் மனைவி, மக்களின் பின்றைய நடைமுறையும் தகுதிப்பாடும் - முதலிய நடுவுநிலையுணர்வுத் தொடர்புடைய எச்சங்களே அவர் தக்கவராக வாழ்ந்தாரா, அல்லது தகவிலராக மறைவு வாழ்க்கை செய்தாரா என்று கண்டு கொள்வதற்கான ஏதுப் பொருள்களாம் என்க.

4. இது, மனவியலும், பொருளியலும், அறிவியலும், உலகியலும் கலந்தியங்கும் ஒருவர் வாழ்வியலில் நடுவுநிலையுணர்வைக் கடைப்பிடித்தொழுகும் அருமைப் பாட்டையும், அவ்வாறு ஒழுகியவரின் பெருமைப் பாட்டையும் மிகவும் நுட்பமாக எடுத்துக் கூறுவதால், நடுவிகந்த ஆக்கம் பற்றிக் கூறிய முன்னயதன் பின் வைக்கப்பெற்றது.

## கசரு. கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்(கு) அணி - 115

**பொருள்கோள் முறை :** இயல்பு.

**பொழிப்புரை :** (முன் இருந்த) நலன்கள் குறைந்து வருவதும், (முன் இருந்ததற்கு மேல்) அவை பெருகி வருவதும், (உலகில் யாவர்க்கும்) இல்லாத நிகழ்வுகள் அல்ல. (அவை எல்லார்க்கும் பொதுவானவையே, ஆனால்) நற்குணங்கள் நிறைந்த பெரியோர்கள், (இவ் விறக்க ஏற்றங்களால்) தம் நெஞ்சத்துள்ள நடுவுநிலை (என்னும் நேர்மை) உணர்வில் திரிபடையாமல் இருப்பதே (அவர்களது) பெருமைக்கு உரியதாகும்.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. **கேடும் பெருக்கமும் இல்லல்ல** - முன் இருந்த நலன்கள் குறைந்து வருவதும், முன் இருந்ததற்கு மேல் அவை பெருகி வருவதும், உலகில்

யாவர்க்கும் இல்லாத நிகழ்வுகள் அல்ல.

- கேடு - நல்ல நிலையில் உள்ளது கெடுதல்.

பெருக்கம் - இருக்கின்ற நிலையில் மேலும் சிறப்பது.

- உலகில், நல்ல நிலையில் உள்ள ஒருவர் கேடு அடையும் பொழுது, மனம் குன்றி, அக்கேட்டினின்று மீளத் தம்மைக் காத்துக் கொள்ளத் தம் நேர்மை உணர்விலிருந்து மாறித் தாழும் அல்வழியில் பொருளை ஈட்டலாமோ என்று நினைப்பதும், வாய்ப்பு நேரின் அல்வழியில் நடந்து தம் நிலையைச் சரி செய்துகொள்ள முயல்வதும் இயல்பாக உள்ளது.

- அதேபோல், ஓரளவு நல்ல நிலையில் உள்ளவரும், தம் உழைப்பால் மேம்பாடு அடைந்து வரும்பொழுது, மனம் கிளர்ச்சியுற்று, அம் மேம்பாட்டை மேலும் ஒன்றுக்குப் பத்தாகப் பலமடங்கு பெருக்கிக் கொள்ளத் தம் நடுநிலை உணர்விலிருந்து பிறழ்ந்து - இன்னும் குறுகலான வழிகளில் ஈடுபட எண்ணுவதும், சூழ்நிலை வாய்ப்பாக அமையின், அவ்வழிகளையும் கடைப்பிடித்துத் தம் நலத்தையும் வளத்தையும் மேலும் மேலும் உயர்த்திக் கொள்ள முயல்வதுங்கூட இவ்வுலகில் உள்ளவர்களுக்கு இயல்பாக உள்ளது.

- இவ்வாறு, தம் மன நேர்மையில் கீழ்மையுற விரும்பாதவர்கள் கூடத் தமக்குத் தாழ்ச்சியும், உயர்ச்சியும் வருகின்ற வேளையில், முன்கூறிய அம் மனவுணர்வுகளால் தாக்கமுற்றுத் தம் நடுநிலை உணர்வில் தாழ்ந்து போகும் உலகியல்பை இங்கு எடுத்துக் கூறி, அக் கெடுதல்களும் வளப்பெருக்கமும் எல்லார்க்கும் வந்து வாய்க்கின்ற உணர்வுகளே என்று பொதுமைப் படுத்தினார், என்க.

- இந்நிலைகளைப் பரிமேலழகரும், காலிங்கரும், தீவினை நல்வினையால் வரும் கேடும் பெருக்கமும் என்று விளக்கப்படுத்திக் 'கர்மா'வியல் கோட்பாட்டை நிலைநிறுத்தினர் என்க. பாவாணரும் அதையே வழிமொழிந்தது மிகவும் வருந்தத்தக்கதே ஆகும். அவரும் மதஞ்சார்ந்த உணர்வினார் ஆகலான்.

- உலக மாந்தரின், இயல்பு இயங்கியலையெல்லாம் வினை, 'கர்மா' என்னும் நிலைகளுக்கே உட்படுத்திக் காட்டிவிடின், இங்குற்ற மக்களின அடிப்படையான அறிவியல், பண்பியல் கூறுகளுக்கே பொருளில்லாமற் போவதை அறிவாராய்ந்த பெருமக்கள் நன்கு எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

- அனைத்து நிலைகளுக்குமே முற்பிறவி வினைநிலையும் 'கர்மா' நிலைகளுமே அடிப்படை யெனில், இங்கு நாம் எண்ணுவதற்கும் இயங்குவதற்கும் அறமுரைத்தலும், ஆளுமை கூறுதலும் தேவையே

இல்லை என்க. இதில் தன் தனிநிலை ஆளுமை என்பது அடிபட்டுப் போதலை உணர்தல் வேண்டும். இக்கருத்தையே இக்குறள் மறுத்து, உலக இயங்கியல் நிலையே இவ்வாறு பள்ளமும் மேடுமாகப் பொதுநிலையிலேயே அமைந்துள்ளதைச் சுட்டிக் காட்டுவதையும் நாம் நன்கு உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

- முன் வினையின் பயனாய்க் கேடும் பெருக்கமும் வந்துள்ளனவாகக் கருதினால், அவ் விருநிலைகளாலும் திரிபடையாமல் நிற்க வேண்டிய சான்றோரின் செயலாளுமை எதன்பாற்பட்டது என்பதை அக்கருத்தினார் விளக்கியுரைத்தல் ஒல்லுமோ? ஒல்லாதென்க.

- இக் குளறுபடிகளை ஞாயப்படுத்தவே அவர்கள் 'கர்ம' (கன்ம) பயன்களை,

- **எச்சவினை** (சஞ்சிதம்) சென்ற பிறவிகளில் செய்யப் பெற்றுப் பயன் நுகராமல் நிற்கும் 'கன்மம்'.

- **இயங்குவினை** (பிராரத்தம்) இப் பிறவியில் நுகர்ந்து கொண்டு வரும், எச்சவினையின் பயன்.

- **எதிர்வினை** (ஆகாமியம்) இயங்குவினையில் நுகராமல் மீதமாவதும், இப்பிறவியில் செய்து வரும் கர்மங்களால், அடுத்த பிறவி நுகர்வுக்குத் தொகுத்து வருவதும்

- என்று மூவகையாகப் பகுத்தனர் போலும்.

- இதில், அவர்கள் (வேத மதத்தினர்) மிகக் கெட்டிக்காரத் தனமாகப் புளுகுவது என்னெனில், வினைகள் (அஃதாவது கர்ம(கன்ம)ங்கள் எப்பொழுதுமே செய்யப்படுகின்ற அப்பிறவியிலேயே நுகர்ச்சிக்கு வருவதில்லை என்பதும், அடுத்தடுத்த பிறவிகளிலேயே நுகர்ச்சிக்கு வரும் என்பதுவும் தாம்.

- நிலை இவ்வாறெனில், இவ் வினைப்பயன்கள் தொகுக்கப் பெற்று நிற்பதும், அவை ஒன்றன்பின் ஒன்றாக நுகர்ச்சிக்கு வருவதும், எங்கு, எப்படி, எவரால் என்பவற்றுக்கான விடைகளை அறிவியலடிப்படையில், அல்லது மெய்யறிவியல் அடிப்படையில் விடைகூறுவது மிகவும் இயலாதது, என்னை?

- ஒருவர் ஓரிடத்து ஒருவகையான தீநாற்றத்தையோ, நறுமணத்தையோ வெளிப்படுத்தின், அஃது அவரால், அல்லது அவரோடு இணைந்து நிற்கும் பலராலும், அங்கேயே அவ்விடத்தையே நுகர்ச்சிக்கு வருவதுபோல், ஒருவர் செய்யும் வினையினது பயன் அப்பிறவியிலேயே, அங்கேயே நுகர்ச்சிக்கு வாராதெனில் அவ் வினைப்பயன், அடுத்த பிறவியல் நுகர்ச்சிக்கு வரும் வரையில், காத்தும் சேர்த்தும் தொகுத்தும் - வைக்கப் பெறுவது எங்கு, எவரால், எப்டி என்பவற்றுக்கே விளக்கம் வேண்டும் என்க.

- இனி, இவற்றுக்கெல்லாம் விடையாக அவர்கள் எமதர்மனையும் அவனுடை பதிவாளனாகச் சித்திரகுத்தனையும் காட்டுகிறார்கள்.

**'சித்திரகுத்தன்** - இவன் சீவாத்மாக்கள் செய்யும் நல்வினை தீவினைகளைக் கிரமமாக எழுதி யமனுக்குக் கணக்குக் காட்டுவான்' - மதுரைத் தமிழ்ப்பேரகராதி.

'சித்திரகுத்தனார் - `The registrar of yama, who records the virtues and vices of mankind, and calculates the time when the lives of beings are to end, according to the destiny of each' - Winslow's, Tamil and English Dictionary.

- இந்தச் சித்திரகுத்தனின் கணக்குப் படி, ஒவ்வோர் உயிரினது எல்லை முடிவிலும், அதற்குரிய தண்டனையும், சிறப்பு நிலையும் எமவுலகிலேயே தரப்படுவதாக, ஆரியத் தொன்மக் கதைகளால் அறியப் பெறுகிறது.

- இது வெறும் கற்பனைக் கட்டுக்கதையே யெனினும், அதன்படியே, உயிர்கள் தாம் செய்த தீமை நன்மைகளுக்கேற்பத் தக்க தண்டனையும் வெகுமதியும் அங்கேயே தரப்பெற்று, அவ்வவ் வினைகளுக்குரிய தீர்வுகள் முடிவுக்குக் கொண்டுவரப் பெறுகின்றன என்றால், அவ்வுயிர்களின் மறுபிறவியில் மீண்டும் முன்பிறவி வினைகளுக்கான நன்மை தீமைகள் எவ்வகையில் தொடரும்; அவ்வகைக் கணக்கு யாரால் கையாளப் பெறுகிறது. இனி அவ் வினைகளே தாமாகவே செயல்படுகின்றனவோ எனில், அதுவும் விளங்குமாறில்லை. பல்லாயிரக்கணக்கான பொய்புரட்டுக் கற்பனைக் கட்டுக் கோட்பாடுகளில் இதுவும் ஒன்றாகவே இருப்பது இதன்வழி நன்கு புலப்படுகிறது என்க.

- எனவே, பரிமேலழகர் முதலியோர், பொருளுரைக்குமாறு கேடும் பெருக்கமும் அவரவர் முற்பிறவி வினைப்பயன்கள் அல்லவென்றும் அவை அவரவர் அறியாமையாலும், சரியான முயற்சியின்மையாலும், குமுகாய அழுத்தங்களாலும் அடக்கி ஒடுக்கி வைப்பதாலுமே வருகின்றவை என்று அறிந்து அவர்கள் கருத்துகளை ஒதுக்குக.

2. **நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்கு அணி** - நற்குணங்கள் நிறைந்த சான்றோர்கள் இயல்பாக வரும் இவ்வகையான இறக்க ஏற்றங்களால் தம் நெஞ்சத்துள்ள நடுவுநிலை என்னும் நேர்மை உணர்வில் திரிபடையாமல் இருப்பதே அவர்களது பெருமைக்கு உரியதாகும்.

- தங்களுக்கு வரும் துன்பத்தின் தாக்கங்களாலும், இன்பத்தின் பெருக்கங்களாலும் அவர்கள் மனத்தினது நடுநிலை உணர்வு மாறுபடுதல் கூடாது என்றார். அதுவே அவர்களது பெருமைக்கு

அழகும் பெருமையுமாகும் என்றார்.

- அணி - அழகு. பெருமையழகு.

- பிறவுறுப்புகளுக் கெல்லாம் அணிகள் பொன்னும் மணியும்; நெஞ்சத்திற்கு அணி நடுவுநிலை கோடாமையாம்.

- இயற்கையாக வரும் இத்துன்ப இன்ப நிகழ்வுகள் மாறுபடக் கூடியனவாகலின், அவற்றுக்குத் தக, தாமும் மாறுபடாமல் இருப்பதே தம் சான்றாண்மைக்குப் பெருமையாம்; அல்லாவிடில் இழுக்காம் என்றார் என்க.

**'நல்லா றொக்கின் தலைநின்றார் நல்கூர்ந்தும்**
**அல்லன செய்தற்கு ஒருப்படார் - பல்பொறிய**
**செங்கண் புலியேறு அறப்பசித்தும் தின்னாவாம்**
**பைங்கண் புனத்தபைங் கூழ்'** - **நீதிநெறி : 60**

3. இது, முன்னர்க் கூறிய குறளினது எச்சத்திற்கு ஒட்டி உரைக்கப் பெற்றதாகலின் அதன் பின்னர் இதை வைத்தார் என்க.

## கககூ. கெடுவல்யான் என்ப தறிகதன் நெஞ்சம் நடுவுஒரீஇ அல்ல செயின். - 116

பொருள்கோள் முறை :

**தன் நெஞ்சம் நடுவுஒரீஇ அல்ல**
**செயின்யான் கெடுவல் என்பது அறிக.**

பொழிப்புரை : (இதுவரை நடுவுநிலைமையைக் கடைப்பிடித்து ஒழுகி வந்த) தனது நெஞ்சம், அந் நடுவுநிலை உணர்வைத் தவித்துவிட்டு, அஃதல்லாவற்றைச் செய்யத் துணியுமாயின், அப்பொழுதே 'யான் இனிப் படிப்படியாகக் கெட்டுப்போவேன்' என்பதை அஃது அறிந்து கொள்ளட்டும்.

சில விளக்கக் குறிப்புகள் :

1. அறிவும் மனமும் வேறுவேறு என்பதை இக்குறளால் உணர்த்தினார்.

**சென்ற விடத்தால் செலவிடாது தீதொரீஇ**
**நன்றின்பால் உய்ப்பது அறிவு** - **422**

- என்பாராகலின்.

2. ஒருவர் தாழ்ச்சியுறுவதற்கு அவர் மனமே முதல் காரணம் என்பதும் இக்குறளால் அறியத்தக்கது.

மனம் கெடுமாயின் பண்பு கெடும்; ஒழுக்கமும் கெடும்; பின்பு வாழ்வும் கெடும் என்றவாறு.

**'மனந்தூயார்க்கு எச்சம் நன்றாகும்'** **- 456**

- என்னும் இடத்தும் இதை வலியுறுத்துவார்.

3. **தன் நெஞ்சம் நடுவுஒரீஇ அல்ல செயின்** - இதுவரை நடுவு நிலையைக் கடைப்பிடித்து ஒழுகி வந்த தனது நெஞ்சம் அந் நடுவுநிலை உணர்வைத் தவிர்த்துவிட்டு, அஃது அல்லாதவற்றைச் செய்யத் துணியுமாயின்.

- நடுவுஒரீஇ - நடுவுநிலை உணர்வைத் தவிர்த்துவிட்டு.

- ஒருவுதல் - தவிர்த்தல். ஒருவி என்றாகி இன்னிசை அளபெடையின் ஒரீஇ என்று நின்றது.

- நடுவுஒரீஇ - என்றதால், இதுவரை அது நடுவுநிலையைக் கடைப்பிடித்து வந்தது உணர்த்தப் பெற்றது.

- நெஞ்சம் செயின் என்றது, நினைவே வலிந்து செயலாவது பற்றி. இனி, நினைவானும் நடுவுநிலை தவிர்தலை எண்ணக்கூடாது என்றார் என்க.

- அல்ல - என்றது நடுவுநிலை அல்லாதவற்றை எனக் குறித்தது.

4. **யான் கெடுவல் என்பது அறிக** - யான் இனிப் படிப்படியாகக் கெட்டுப் போவேன் என்பதை அறிவான் அறிந்து கொள்ளட்டும்.

- கெடுதல் நிலையில் தாழ்தல், இழிதல்.

- அறிக - என்றது அறிவால் அறிந்து கொள்க. மனம் எண்ணுவதை அறிவு நெறிப்படுத்துவதை உணர்த்திற்று.

- யான் - என்றது மனத்தையும் அறிவையும் உடலையும், அம் மூன்றனது வாழ்வு இயக்கத்தையும் சேர்த்துச் சொன்னது.

- அல் - தன்மை ஒருமை எதிர்கால வினைச்சொல் ஈறு. அதன் பன்மை அம் - கெடுவம்.

- கெடுவது எவ்வாறெனின், மனம் நடுவு நிலையைத் தவிர்க்க எண்ணி, அது செயலுக்கு வருமிடத்து, 'இதற்கு முன்னர் அவ்வாறு இல்லாதவர், இக்கால் இவ்வாறு தாழ்ந்து இயங்குகின்றாரே' என்று பிறர் உணர்ந்து, இவரொடு தொடர்பு தவிர்தலும், ஆதரவை நீக்குவதும், மற்றும் இவரது ஆக்கத்தைத் தடுக்க முற்படுவதும், நடுவுநிலை தவறிச் செய்வதால் குற்றங்கள் நேர்ந்து, அவற்றால் ஒறுக்கப் படுவதும் படிப்படியாக நிகழும். ஆகையால், இவர் நிலையும் அதற்கேற்பத் தாழ்ந்து வரும் என்க. நிலை தாழவே இவர்க்குற்ற நலனும் வளனும் குறைந்து, துன்புற நேரும் என்றவாறு என்க.

- இதற்குப் பரிதியார், 'தனக்கு இறுதி வரும் என்ற காலம் நடுநிலைமையை விடும் என்றறிக' என்று விளக்கம் தருவது முன்

பின்னாகக் கூறும் முரணாம் என்க.

- நடுவுநிலைமை தவறுவதால் இறுதி வருமேயன்றி, இறுதி வரும் காலத்தே நடுவுநிலை தவறுதல் நேரும் என்பது இயங்கியலுக்கு மாறுபட்டதாம் என்க.

5. கேட்டினும் பெருக்கத்தினும் நடுவுநிலை தவறாது இருப்பவரின் மேன்மையை முந்தைய பாடலில் கூறியவர், இதில், அவ்வாறு தவறாது இருப்பதற்கான உத்தி கூறப்பெற்றதால், அதன் பின்னர் இதை வைத்தார்.

## கஎ. கெடுவாக வையாது உலகம் நடுவாக
## நன்றிக்கண் தங்கியான் தாழ்வு. - 117

பொருள்கோள் முறை :

**நடுவாக நன்றிக்கண் தங்கியான் தாழ்வு**
**உலகம் கெடுவாக வையாது.**

பொழிப்புரை : நடுவுநிலை பேணிப் பொதுமையறத்தின் கண்ணே நின்றவன், யாதாம் ஒருவகையில் தாழ்ச்சியுற்றாலும், அத் தாழ்ச்சியை உயர்ந்தவர்கள் கேடாகக் கருதி இகழ மாட்டார்கள்.

சில விளக்கக் குறிப்புகள் :

1. இது, நடுவுநிலை பேணிப் பொதுமையறத்தின் கண் நின்றவன், ஒரு வேளை தாழ்ச்சியுற்றாலும், அதனைச் சான்றோர் இகழ்ந்துரைக்க மாட்டார்கள். பெருமையாகவே கருதுவர், என்று அன்னாரை ஊக்கி உரைத்ததாகும்.

இக்கருத்தை, ஒப்புரவறிதல் (சமநிலை உணர்தல்) என்னும் அதிகாரத்தினும்,

**ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்**
**விற்றுக்கோள் தக்கது உடைத்து** - **220**

- என்று இன்னும் சிறப்பித்துக் கூறுவார்.

2. **நடுவாக நன்றிக்கண் தங்கியான் தாழ்வு** - நடுவுநிலை பேணிப் பொதுமையறத்தின்வழி நின்றவன், ஏதோ ஒருவகையில், தாழ்நிலையைப் பெற்றாலும், அத் தாழ்வினை.

- நன்றிக் கண் என்றது எல்லார்க்கும் நன்மை கருதும் நோக்கத்தில் பொதுமை பேணுதல் வழி.

கண் - இடப்பொருள்தரும். அவ்வறத்தின் இடமாக, வழியாக.

- தங்கியான் - நின்று ஒழுகியவன்..

தங்குதல் - நிற்றல் - நிலையாக நிற்றல்.

தக்கு - தங்கு.

- தாழ்வு - நிலையினின்று கீழிறங்குதல்.

- இழிதல்.

- நடுவுநிலை பேணுபவர் உலகியல் சூழ்வுகளைக் கடைப்பிடியார். ஆகையால், பொருள்நிலையில் தாழ்ச்சியுறவும் வழியுண்டு என்பதைக் குறிப்பால் உணர்த்தினார் என்க.

3. **உலகம் கெடுவாக வையாது** - உயர்ந்தோர் அதைக் கேடாகக் கருதி இழிவு கூறார்.

'உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே' என்றார் ஆகலின், உயர்ந்தோரைக் குறித்தது. இன்னும் அவரே மக்கள் மதிப்பீடு செய்தற்கு உரியவராம் என்க.

கெடுவு - கெடு என்னும் வினைச் சொல், உகர ஈறு பெற்றுப் பண்புப் பெயராக நின்றது.

4. நடுவுநிலை தவறிக் கெட்டவரின் தாழ்ச்சிகளை முன்னைய பாடல்களில் கூறியவர், அதில் தவறாது நின்றவர் தாழ்ச்சி யுறினும், அதை உயர்ச்சியாகவே பெருமையாகவே உலகோர் கருதுவர் என்றதால், அவற்றின் பின்னர், இது, வைக்கப்பெற்றது.

## ககஅ. சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்(து)ஒருபால் கோடாமை சான்றோர்க்(கு) அணி. - 118

**பொருள்கோள் முறை :**

**சான்றோர்க்கு அணி, சமன்செய்து சீர்தூக்கும்**
**கோல்போல் அமைந்(து)ஒருபால் கோடாமை.**

**பொழிப்புரை :** சால்புள்ள நடுநிலையாளர்க்குச் சிறப்பாவது, ஒரு சார்பாகச் சாய்ந்து நில்லாமல், சமநிலை நின்று, இரண்டு பொருள்களின் எடைச்சீர்மையை வரையறுத்துக் காட்டும் துலாக்கோலைப் போல் இயங்குவதே.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. இதுவரை, நடுவுநிலைமை பற்றிய சிறப்புகளையும் அதைப்

பேணாதவர்களின் தாழ்ச்சிகளையும் பலவாறாக உணர்த்திக் காட்டியவர், அந் நடுவுநிலைமைக்குக் காட்சியளவால் துலாக் கோலை உவமம் காட்டி அமைவு கூறினார் என்க.

2. **சான்றோர்க்கு அணி** - சால்பு நிறைந்த நடுநிலையாளர்களுக்குச் சிறப்பு.

- அணி - அழகு. அது புறவழகைக் குறியாது அகத்தின் அழகைக் குறித்தது என்க. எனவே சிறப்பு ஆனது.

- அணியப் பெறுவதால் அணியாயிற்று.

- சால்பு - நிறைகுணம். சால் - மிகுதி, நிறைவு. (தவசத்தால் அல்லது நீரால் நிரப்பப் பெற்று நிறைந்திருப்பதால் கொப்பரை சால் ஆயிற்று.)

- இனி, நிறைகுண நலன்களுக்கும், பண்பியல் நடைமுறைகளுக்கும் சான்றாக - எடுத்துக் காட்டாக - நிற்பதாலும், சான்றோர் (சான்றாளர்) என்று கூறுவதும் பொருந்தும் என்க.

- ஆங்கிலத்தில் பிறர்க்கு நடைமுறை எடுத்துக்காட்டாக - பின்பற்றுவதற்கு உரியவராக - இருப்பவர் examplery character எனப் பெறுவதையும் ஒத்து நோக்குக.

3. **சமன்செய்து சீர்தூக்கம் கோல்போல் அமைந்து** - சமநிலை நின்று, இரண்டு பொருள்களின் நிறைச் சீர்மையை வரையறுத்துக் காட்டும் துலாக் கோலைப் போல் அமைந்து - இயங்கி.

- சமன் செய்தல் - சம நிலையில் இருக்கச் செய்தல்.

- சமம் தூய தமிழ்ச் சொல்; சமன்.

- சீர்தூக்குதல் - சீர்மையை நிறுத்துக் காட்டுதல்.

சீர்தூக்கும் கோல் - துலாக் கோல்.

- துலாக்கோல் - எடை பார்க்கும் அளவி.

- துல் - துலை அளவு, சமநிலை, சமஅளவு.

- துல்லியம், துல்லிபம், சரிநிலை, மிகச் சமநிலை, நுண்ணியம்.

- துலா - ஒன்றுக்குச் சரியாகச் சமமாக உள்ள தன்மை. - அதை அளவிடும் துலாக்கோல், நிறைகோல்.

- துலாம் - சமநிலை அளக்கும் கோல். - நிறையளவி.

- ஐந்து வீசை = நூறு பலம் கொண்ட எடை அளவு.

துலாக்கோல் - 'தராசு' என்னும் அரபுச் சொல் வழக்குக்கு வருமுன்னர் பெருவழக்காக இருந்த தமிழ்ச்சொல்.

- இங்கு நடுவு நிலைக்கு எடுத்துக் காட்டாகத் துலாக் கோல் காட்டப் பெற்றது.

- துலாக்கோலின் இயல்பாம் தன்மைக்கு,

**'துலாக்கோல் இயல்பே தூக்குங் காலை**
**மிகினும் குறையினும் நில்லா தாகலும்**
**ஐயந் தீர்த்தலும் நடுவு நிலைமையோடு**
**எய்தக் கூறுப இயல்புணர்ந் தோரே'**
**'ஐயந் தீரப் பொருளை உணர்த்தலும்**
**மெய்ந்நடு நிலையும் மிகுநிறை கோற்கே'**

- என்னும் நூற்பாக்களை எடுத்துக் காட்டுவர், கோ. வடிவேலனாா என்பார்.

- 'ஏர்' உழவர்க்காம் கருவிபோல், 'துலாக்கோல்' வணிகர்க்கு ஆகும் - புழங்கும் - கருவி என்க.

4. **ஒருபால் கோடாமை** - ஒரு புறத்தே சாய்ந்து நிற்கும் தன்மை இல்லாமை.

'கொடு' என்னும் வளைவுக் கருத்தினின்று

கோடு - கோடுதல் தோன்றியது.

கோடுதல் - வளைதல்; கோடாமை - வளையாமை, சாயாமை.

- பால் - இடப் பொருள் தரும் சொல்.

பக்கத்தையும் குறிக்கும்.

- ஒருபக்கமாக - ஓரிடமாகச் சாயாமை.

5. இது, சமநிலை - நடுவுநிலைக்கு உவமை கூறிக் காட்சியளவையான் உணர்த்தியதாகலின் அவற்றின் பின்னர் வைக்கப் பெற்றது என்க.

## கககூ. சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா உட்கோட்டம் இன்மை பெறின் - 119

**பொருள்கோள் முறை:**

**உள்கோட்டம் ஒருதலையா இன்மை பெறின்,**
**செப்பம் சொல்கோட்டம் இல்லது.**

**பொழிப்புரை :** உள்ளத்தில் கோணல் உறுதியாக இல்லாமல் இருந்தால், நடுவு நிலையுணர்வு சொல்லிலும் கோணல் இல்லாமல் செய்யும்.

**சில விளக்கக் குறிப்புகள்:**

1. உள்ளத்துணர்வு (அறிவுத் துணையுடன்) சொல்லைத் தோற்றுவிக்கும். உள்ளம் தூவல் என்றால் அறிவு மை. இரண்டும் சேர்தலால் சொல்

உருவாகும். இந்தச் சொல்லே செயலுக்கு அடிப்படையாக இருக்கும். இத்தொடர்பை இந்தக் குறளில் நன்கு விளக்கிக் காட்டுகிறார் ஆசிரியர்.

2. **உள் கோட்டம் ஒருதலையா இன்மை பெறின்** - உள்ளத்தில் கோடுதல் இல்லாத உணர்வு, உறுதியாக இல்லாமை பெறின். உள்ளம் சம நிலையில் இருந்தால்தான் சொல்லும் செயலும் சமநிலையில் இருக்கும் என்பது ஒரு மனவியல் உண்மை.

**'தன் நெஞ்சு அறிவது பொய்யற்க'** **(293)**

**'உள்ளத்தால் பொய்யாது ஒழுகின்'** **(294)**

**'மனத்தொடு வாய்மை மொழியின்'** **(295)**

**'செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை**
**உள்ளறிவான் உள்ளம் கொளல்'** **(677)**

- என்பனவும்,

**'உள்ளத்தால் உள்ளலும் தீதே'** **(282)**

**'உள்ளத்தால் உள்ளான் வெகுளி'** **(309)**

**'உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்'** **(594)**

**'உள்ளத் தனையது உயர்வு'** **(595)**

**'உள்ளத்தின் உள்ளக் கெடும்'** **(622)**

**'உள்ளற்க உள்ளம் சிறுகுவ'** **(798)**

- என்பனவும் அது.

- எனவே, உள்ளத்தின்கண் கோடுதல் தன்மை உறுதியாக இல்லாமல் இருப்பின் - என்றார்.

- அவ்வாறு உறுதியாக இருந்தால்தான் சொல்லிலும் அந்தக் கோடுதல் தன்மை இல்லாமல் இருக்கும். அதையடுத்துச் செயலிலும் அஃது இல்லாமல் இருக்கும்.

- முன்னரே 'நெஞ்சத்துக் கோடாமை' (115) என்றதை மேலும் உறுதி செய்து கூறினார், என்க.

3. **செப்பம் சொற்கோட்டம் இல்லது** - நடுவு நிலைமை சொல்லிலும் கோட்டம் இல்லாது செய்யும்.

- அஃதாவது, மனம் கோடுதலில்லாமல் உறுதியாக இருந்தால் தான், அதிலுள்ள நடுவுநிலை உணர்வும் சொல் கோடுதல் இல்லாமல் செய்யும்.

- நடுவுநிலைமை உணர்வு பால் என்று கொண்டால், அப் பால் கெடாமலிருப்பதற்கு, அது வைக்கப்பெறும் கலமும் (ஏனமும்) தூய்மையாக இருத்தல் வேண்டும். இதனை

**'பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்**
**கலம்தீமை யால்திரிந் தற்று'** **-1000**

என்று அவர் **'பண்புடைமை'** அதிகாரத்துக் கூறுவதும் ஈண்டு எண்ணத் தக்கது.

நடுவு நிலைமை என்னும் பாலை வைக்கும் கலம் போன்றது மனம் என்று கொண்டால், அந்த மனம் தூயதாக இருக்க வேண்டுவது விளங்கும்.

4. இது, 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்' (34) என்பதை அடிப்படையாகக் கொண்டது, என்க.

## கஉ0 வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப் பிறவும் தமபோற் செயின். - 120

பொருள்கோள் முறை :

**பிறவும் தமபோல் பேணிச் செயின்**
**வாணிகம் செய்வார்க்கு வாணிகம்.**

பொழிப்புரை : (பிறர்க்கு விற்கப் பெறும்) பொருள்களை (அவை விற்கப் பெறும் வரை) தாம் வாங்கும் பொழுது விலை, புதுமை, பயன்படும் தன்மை முதலிய பிறவும் எவ்வாறு தாம் விரும்புவன போலும், வாங்குவன போலும் இருந்தனவோ, அவ்வாறான நிலைகளிலேயே (அவற்றின் விலையை மிகக் கூடுதல் செய்யாமலும் தரம் குறையாமலும்) பேணிக் காத்து, (ஓர் அளவான ஊதியத்திற்கு) விற்றல் செய்யின், வாணிகம் செய்வார்க்கு, அதுவே நடுவுநிலைமை தவறாத வாணிகம் ஆகும்.

சில விளக்கக் குறிப்புகள் :

1. உலக நிலையில், நடுவு நிலைமையுணர்வு ஒவ்வொரு மாந்தரிடத்தும் இருக்க வேண்டிய பொதுமையுணர்வு ஆகும் என்பதுதான் ஆசிரியர் இவ்வதிகாரத்து முகாமைப்படுத்திக் கூறுவது ஆகும்.

அத்தகைய நடுவுநிலையுணர்வு கேடும் பெருக்கமும் ஆகிய பொருளியல் தாக்கத்தும் மேம்பாட்டினுமே மாந்தனை அசைவுறச் செய்யும் என்பது உலகியலால் தெரியவரும் உண்மை. எனவே அந்நிலைகளிலெல்லாம் அவ்வுணர்வினை மன அசைவின்றிக் கட்டிக் காத்துக் கொள்ள வேண்டும் என்பதை முன்னுள்ள குறள்களில் பலவாறாக வலியுறுத்தினார்.

2. இதில், அப் பொருள்நிலை ஆட்சிக்குப் பெரிதும் ஆட்பட்ட தொழிலியல் கூறுகளில் முகாமையாகியதான வாணிகத்தைச் சான்றாக எடுத்துக் காட்டி, நடுவுநிலையைப் பெரிதும் அசைவுறச் செய்யும் தன்மைகள் அதில்தான் மிகுதியும் உள்ளதைச் சுட்டி, அதில் எவ்வாறு நடுவுநிலை பேணிக் காக்கப் பெறல் வேண்டும் என்பதை, ஒரு சோற்றுப் பதமாக உலகியலுடன் பொருத்திக் கூறுவார்.

உலகில் உள்ள மக்களில், பெரும்பாலும், பத்தில் ஒரு பங்கினரே, எப்பொழுதும் ஆட்சி, அதிகாரம், ஆளுமை போன்ற செயல்நிலைகளில் ஈடுபட்டுள்ளனர்; பத்தில் இரண்டு பங்கினர் உழவாண்மையில் ஈடுபட்டு, உணவுத் தேவைகளை நிறைவேற்றுதலில் உழைத்து வருகின்றனர்; இரண்டரைப் பங்கினர் அனைத்து நிலைகளிலும் 'கீழ்நிலை உதவியாளர்களாக இருந்து பணியாற்றுகின்றனர்; பத்தில் ஓர் அரைப் பங்கினர்' படை, காவல், பாதுகாப்பு முதலிய பணிகளில் ஈடுபடுத்தப் படுகின்றனர்; பத்தில் மேலும் ஓர் அரைப் பங்கினர் கல்வி, அறிவு, தொழில், அறிவியல் முதலிய நிலைகளில் ஈடுபட்டுள்ளனர்: மிகுதியுள்ள பெரும்பான்மையான மூன்றரைப் பங்கினர் முழுவதுமாகச் சிறிதும் பெரிதுமான பல்வேறு வகைப்பட்ட வாணிக நிலைகளில்தாம் ஈடுபட்டுள்ளனர் என்பதையும், உலகின் பொருளியல் நிலையே இவர்கள் கைகளில்தாம் உள்ளன என்பதையும் நாம் முதலில் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

எனவே, உலகின்கண் ஏதோ ஒருவகையில் வணிகத்தில் ஈடுபட்டுள்ள வாணிகர்களே மிகுதியாம் என்க.

இவ்வுண்மையினை ஓரளவு பட்டறிவானும் மெய்யறிவானும் உணர்ந்திருந்த ஆசிரியர், நடுவுநிலைமை யுணர்வு பெரிதும் அனைத்து மக்களுக்கும் பயன்படும் வாணிக மாந்தர்களையே வழக்குக்கு முன்னிறுத்தி, இவ்வுணர்வினை அவர்களே பெரிதும் நிலைநாட்டக் கடமைப்பட்டவர்களாக அறிமுகப்படுத்தி, அவர்களது நிலையின்கண் அவ்வுணர்வு கடைப்பிடிக்கப் பெறுதல் வேண்டும் என்பதை இங்கெடுத்துக் காட்டி வலியுறுத்தினார் என்க. மற்று, பிறர் பிறர் நிலையில் இவ்வுணர்வு நிலவொளி நிழல் போலவும், நீருள் நிழல் போலவும், நிழலுள் நிழல் போலவும் எளிதின் விளங்காதாகையால், அதனை எடுத்துக் காட்டாகக் கொண்டு இவ்வுணர்வினைத் தொடுத்துக் காட்டுதல் அரிது. ஆகையால், அவர்தம் நிலையில் இவ்வுண்மையைக் காட்டிலராம் என்றும் தெளிக.

மிகப் பெரும்பாலார்க்கு நடுஉநிலையுணர்வு என்று ஒன்றிருப்பதாகவே அறிய வாய்ப்பில்லை என்க. எனவே அது பற்றி அவர்கள் சிறிதும் உணர்வதிலர். இஃது இறைமையுணர்வின் முதன்மைநிலை உணர்வாதலின் அதனை இங்குத் தெள்ளிதின் உணர்த்தினார் என்க.

3. *பேணிப் பிறவும் தமபோல் செயின் - வணிகர்கள், ஒரு பொருளை வாங்குதல் முதல் அதை விற்பனை செய்யும் வரையும், அப் பொருளையும் அது தொடர்பான பிற நடைமுறைகளையும் தமக்காகத் தாம் நடந்துகொண்ட முறைபோலவே, நடுஉநிலையுணர்வோடு செய்வார்களாயின்.*

*- 'பிறவும் தமபோல் பேணிச் செயின்' என்பதற்குப் 'பிறர் பொருளையும் தம் பொருள் போலப் பேணிச் செயின்' என்றே பரிமேலழகர் பொருள் கொண்டு, 'பிறவும் தமபோல் செய்தலாவது, கொள்வது மிகையும் கொடுப்பது குறையும் ஆகாமல் ஒப்ப நாடிச் செய்தல் (பட்டினப் பாலை - 209, 210 )' என விளக்கமும் கூறினார்.*

*- 'பிறவும்' என்னும் சொல்லுக்குப் 'பிறர் பொருளையும்' என்று அவர் பொருள் கண்டுள்ளார்.*

*- இதில் 'பிறர் பொருள்' என்பது என்ன, அஃது எங்கு எப்படி என்பது தெளிவாக விளங்குமாறு இல்லை. ஒருவேளை தாம் வாங்கி விற்க வேண்டிய பொருளைத்தான் 'பிறர்பொருள்' (பிறர்க்கு உரிய பொருள்) என்று குறிப்பிடுகின்றாரோ, தெரியவில்லை.*

*- இவரைப் போலவே உரையாசிரியர் பலரும் பிறவும் என்பதற்கு அவ்வாறே பொருள் கண்டுள்ளனர்.*

*- 'பேணிப் பிறவும்' என்று வருவதை, 'பிறவும் தமபோல் பேணிச் செயின்' என்று கொண்டு கூட்டிப் பொருள் கண்டதால், 'பிறவும்' என்பதற்குப் 'பிறர் பொருள்களையும்' என்று பொருள் கொள்ள வேண்டுவதாயிற்று.*

*- பாவாணரும் இவ்வாறே கொண்டு, இவ்வாறே பொருளும் கண்டுள்ளார்.*

*- இது பிழை.*

*- 'பேணிப் பிறவும் தமபோற் செயின்' என்றே இயல்பாகப் பொருள் கொள்ளும் பொழுதே சரியான பொருள் கிடைப்பதை ஓர்ந்து உணர்தல் வேண்டும்.*

*- இவ்வாறு இயல்பாகவே தொடர்வழிப் பொருள் கொண்டால், 'வாங்கிய பொருள்களை அவை விற்குந்துணையும் பேணிப் பிற செயல் நடைமுறைகளையும் தாம் வாங்கும் பொழுது செய்தது போலவே செய்யின்' என்று பொருள் வரும். இதுவே சரியாக உள்ளது பற்றி முன் விளக்கத்தில் கூறப் பெற்றது. இப்பொருள் உரையாசிரியர் எவராலும் குறித்திராத ஒன்று.*

*- பேணுதல் - காத்தல். என்ன காத்தல்?*

*- பிறர்க்கு விற்பதற்காக வாங்கிய பொருள்களை அவை விற்கப் பெறும்வரை, தாம் வாங்கும் பொழுது, விலை, புதுமை, பயன்படுதன்மை*

முதலிய பிறவும், எவ்வாறு தாம் விரும்புவன போலும், வாங்குவன போலும் இருந்தனவோ, அவ்வாறான நிலைகளிலேயே, அஃதாவது அவற்றின் மிகக் கூடுதல் செய்யாமலும், தரம் குறையாமலும் பேணிக் காத்து (ஓர் அளவான ஊதியத்திற்கு) விற்றல் செய்யின் - என்றவாறு, என்க.

- அதுதான் இத் தொடரின் உயிர்ப் பொருளாம் என்க.

- இவ்வாறு செய்வதில்தான் தமபோல் பேணுதல் தன்மை உள்ளது.

- அவற்றை ஒன்றுக்குப் பத்தாக, நேர்மையற்ற விலைக்கு விற்பின், அந்நிலையில் அவற்றைத்தாம் வாங்க விரும்பி யிருக்கவோ, ஒருப்பட்டிருக்கவோ இருந்திருராதோ, அப்படித்தான் தமபோல் பிறர் வாங்குதல் பொழுதினும், அவ்வாறு செய்வது நடுநிலையற்றது என்று கருதுதல் வேண்டும் என்பதே ஆசிரியர் கருத்தாம் என்க. இல்லெனின், தம போல் பேணிச் செயின் என்பதற்குப் பொருளில்லாமற் போகும் என்க.

- இதில், 'கொள்வது மிகை கொளாது, கொடுப்பதும் குறை கொடாது' என்பது மட்டும் பொருளன்று.

- 'கொள்வது மிகை கொளாது' என்பது வாங்குபவர்க்கு உரிய கருத்தாகக் கொள்வது பொருந்தாது. கொடுப்பவர்க்கு உரிய கருத்தே அது. அதில் 'பேணுதல் தன்மை' என்பது எங்குளது என்பது விளக்கம் பெறவில்லை. பொருள்கள் வாங்கப் பெற்றபின், வாங்கியவர்க்குரிய கருத்தே அது. இதனை, இங்கு, நுண்ணிதின் நோக்கி உணர்தல் வேண்டும். பழுதுற்றவற்றைப் பிறர்க்கு விலைக்கு விற்றல் கூடாது என்பதற்காகவே அவ்வாறு கூறினார், என்க.

4. **வாணிகம் செய்வார்க்கு வாணிகம்** - வாணிகம் செய்பவர்க்கு அதுவே நடுவுநிலை தவறாத வாணிகம் ஆகும்.

- வாணிகம் - வாங்கி விற்கும் தொழில்.

 - வியாபாரம் - வடமொழிச் சொல்.

- பண் - பண்ணு - பண்ணியம் - விற்றற்குரிய பலபொருள்.

 - நுகர்பொருள்.

- பண் - வண் - வண்ணி - வண்ணித்தல் - பொருள்களின் வகை, தொகைகளை, அவற்றின் விலைகளை விளக்கிக் கூறுதல் செய்து விற்றல்.

- வணி - வண்ணி - வண்ணிகன் - வணிகன் - அவ்வாறு கூறி விற்றல் செய்பவன்.

- வணி - வாணி - வாணிகன் - அவ்வாறு விளம்புதல் - விளக்கிச் சொல்லுதலில் திறம் கொண்டவன்.

- அவ்வாறு செய்து விற்றல் செய்பவன்.

- வாணிகத்திற்கு 'ஊதியம்' என்று பிறர் பொருள் கொண்டது இரண்டாம் மடிப் பொருளே. வாங்கி விற்றலால் கிடைக்கும் கூடுதல் வருவாய்.

(எ-டு)

பரி - தோண்டு. பரித்தல் - தோண்டுதல் - முதற்பொருள்.

பரித்தல் - பரிதல் - பரிசல் - மரத்தில் தோண்டி நீரில் மிதக்க விடுதல் - செல்ல விடுதல் - இரண்டாம் மடிப்பொருள்.

பரிதல் - பரிசல் - பரிக்கப் பட்டது; தோண்டப் பட்டது. த-ச-போலி.

- விரிதல் விரிசல்; வரிதல் வரிசல்.

- கரிதல் கரிசல்; முரிதல் முரிசல்.

தூக்கு - தூக்குதல் முதற்பொருள்

- தூக்கிக் கட்டிய தொட்டில் இரண்டாம் மடிப்பொருள்.

- வணிகன் என்னும் சொல் வடக்கு (திராவிட) மொழிகளில் 'பணிகன்' என்று முதலிலும் 'பணியா' என்று பின்னரும் திரிந்தது.

- நடுவுநிலை திரியாமல் கடைப்பிடிப்பாகக் கொள்ளும் வாங்கி விற்றல் தொழிலே வணிகம் ஆகும்.

வேறு பிற தொழில்களிலும் நடுவுநிலை உணர்வு கடைப் பிடிக்க வேண்டுவது இன்றியமையாமை எனினும், வணிகத் தொழிலின்தான் அவ்வுணர்வு மிகுதியும் கடைப்பிடிக்க வேண்டுவது என்பதால், அத்தொழிலில் நடுவுநிலையுணர்வு எவ்வாறு கடைப்பிடிக்கப் பெறுதல் வேண்டும் என்பதை உலகியல் வழியாக உணர்த்தினார், என்க.

- முன்னர்த் துலாக்கோலைக் கூறியவர், இதில் அதன் செயற்பாட்டுத் தொழிலைக் கூறினார் என்க.

5. நூல்களுள் வணிகர்க் குரியனவாக எட்டுக் குணங்கள் குறிக்கப் பெறுகின்றன. அவை வருமாறு:

1. **தனிமையாற்றல்** - தனியாக நின்று இயங்கத் தெரிதல்.

2. **முனிவிலனாதல்** - சினம் இல்லாதவனாக இருத்தல்

3. **இடனறிந் தொழுகுதல்** - நாடு, நகரம், ஊர் முதலிய பல இடங்களையும், மக்களின் தன்மை வேறுபாடுகளையும் அறிந்து, அவற்றுக்குத் தகுமாறு ஒழுகத் தெரிதல்.

4. **பொழுதொடு புணர்தல்** - பருவம், காலம், நேரம் இவற்றுக்கு இயைந்தவாறு இயங்கத் தெரிதல்.

5. **உறுவது தெரிதல்** - அரசியல் நிலையிலும், உலகியல் நிலையிலும், மக்கள் நிலையிலும், பொருளியல் நிலையிலும், தொழில் நிலையிலும்

ஏற்படும், ஏற்படவிருக்கும் மாறுபாடுகளை முன்கூட்டி யறிந்து அவற்றுக்குத் தக ஒழுகத் தெரிதல்.

6. **இறுவது அஞ்சாமை** - இழப்பு, பொருள்தேசம், விலையேற்ற இறக்கம், வரி, தண்டம் முதலியவற்றால் ஊக்கம், உறுதி இழக்காமை.

7. **ஈட்டல்** - பொருள் விற்பனையில் ஊதியம் ஈட்டவும், செல்வத்தைப் பெருக்கவும் தெரிந்துள்ளமை.

8. **பகுத்தல்** - முதலீடு, வருவாய், கொடை, குடும்பம், சுற்றம் முதலியவற்றுக்குப் பொருளைப் பாகுபாடு செய்து, ஈடுபடுத்தத் தெரிந்துள்ளமை.

6. இது, நடுவுநிலை உணர்வை உலகியலில் கடைப்பிடிக்கும் முழுமை உணர்வைக் கூறியதாகலின், இதை முன்னவற்றை அடுத்தும், அதிகார இறுதியிலும் வைத்துக் கூறினார்.

# அ-2 இல்லறவியல்

## அ-2-9 அடக்கம் உடைமை -13

### அதிகார முன்னுரை

அடங்குதல் **அடக்கம்** ஆயிற்று. அஃது எழுச்சியுணர்வு அடங்கிய இயங்குதலாம்.

மாந்தர்க்கு மன

வெழுச்சி, அறிவெழுச்சி, உடல் எழுச்சி எனும் மூவகை எழுச்சிகள் உண்டு. அவை செருக்கால் வருவன. செருக்கு - மிகுதி. இதனை வடமொழியில் 'கர்வம்' என்பர். அகங்காரம் என்பதும் அது. அகம் காரம் - மனத்தினது மிகுந்த உணர்வு - இது தூய தமிழ்ச் சொல்.

அடக்கம் - அமைவு, ஒடுக்கம், தணிவு, பணிவு, பதவிசு ஆகியவை அடக்கத்தைக் குறிக்கும் தமிழியற் சொற்கள். சிற்சிறு வேறுபாடுகளும் உண்டு.

அடக்கத்தை வடமொழியில் 'பவ்வியம்' என்பர்.

**மனவடக்கம்** - பெரும்பாலும் புலனடக்கத்தைக் குறிக்கும். மன வெழுச்சியே **அகங்காரம்** அல்லது மனச்செருக்கு - எனப்பெறும்.

மனச்செருக்கு, 'தான்' என்னும் அகங்காரத்தால் வருவது. பிறரைத் தாழ்த்தித் தன்னை உயர்த்திக் கொள்வது.

இதனை **'யான் எனது என்னும் செருக்கு'** *(346)* என்பார் நூலாசிரியர்.

**அறிவடக்கம்** - அறிவுச் செருக்கின்றி இருப்பது.

**அறிவுச் செருக்கு** - அறிவு மிகுதியான் வருவது.

அது, கல்வி, உடைமை, பதவி அல்லது அதிகாரம், சாதி அல்லது பிறப்பு, சமயம் ஆகிய ஐவகை நிலைகளான் வரும் செருக்கு.

இதனை, **'ஒண்மை உடையம் யாம் என்னும் செருக்கு'** *(344)* என்பார் நூலாசிரியர்.

**மெய்யடக்கம் அல்லது உடலடக்கம்** - உடலான் அடக்கி இயங்குவது. உடல் செருக்கின்றி இயங்குவது.

அஃது, உடல்நலம், உடல்வளம், அழகு, வலிமை, திறமை முதலியவற்றான் ஏற்படும்.

இதனை, **'தகைச் செருக்கு' (916)** என்பார் நூலாசிரியர்.

இவற்றை, உரையாசிரியர் பலரும் மனம், மொழி, மெய்களால் அடங்குவது என்று பொருள் விரிப்பர். மொழி அறிவடக்கத்துள் அடங்கும் ஆகலின் தனிக்குறிப்புக் கொள்ளாது. அறிவின்றி மொழி தனியே நில்லாதாகலின்,

இவ்வகையான மனச்செருக்கு, அறிவுச் செருக்கு, உடல் செருக்கு ஆகியவை யின்றி, அடங்கி நிற்றல் அடக்கம் என்க. அது கொண்டிருத்தலால் **அடக்கம் உடைமை**யாயிற்று.

இம் மூவகைச் செருக்காலும் அவற்றின் கூறுகளாலும் ஒருவன் எழுச்சிபெறுவது, பலவகை எதிர்ப்புகளுக்கும், பகைக்கும், புறக்கணிப்புக்கும், குற்றங்களுக்கும், தண்டனைகளுக்கும், அவனை ஆளாக்கும் என்பதால், அவற்றின் எழுச்சியின்றி அடங்கியிருத்தல் வேண்டும் என்பார்.

அடங்கியியங்குதலே அடக்கம், அஃது அடங்கியொடுங்குதல் அன்று. அடங்கி யொடுங்குதல் கோழைமை. அஃது அடிமைத் தன்மைக்கும் உரிமையிழப்புக்கும் கொண்டு சேர்க்கும்.

மாந்தன் உலகியலில் ஈடுபடும் பொழுது அடங்கியொழுகுதல் வேண்டும். அடக்கம் என்பது, பிறர் நம்மை அடக்கி நாம் அடங்குவதன்று. நாமே அடங்கி நிற்றல் என்பதாம். அது தன்னடக்கம் என்பர்.

உலகில், அனைத்துக் கூறுகளாலும் நம்மினும் சிறந்து நிற்பவர்கள் பலருளராகையால், நாமும் அவரிடை அடங்கியொழுகுதலே நமக்கு நன்மை பயப்பதாகும். அவ்வாறு அடங்கியொழுக வில்லை யெனில், பிறரால் அடக்கப்படுவது உலகியலும் இயங்கியலும் ஆகும்.

அடக்கமிலாதவரை, உலகம் புறக்கணிக்கும்; குறைத்து மதிப்பிடும் அடங்கியொழுகுபவரைப் பண்பாளர் என்று புகழும். இதனை மக்கட்கு வேண்டிய பண்புகளுள் ஒன்றாக ஆசிரியரும் கூறுவர். அறிவின் மிகச் சிறந்தாரேனும் பண்பில்லாதவரை ஓரறிவுள்ள மரம் என்று அவர் இகழ்வர்.

**அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண்(பு) இல்லா தவர்.** - 997

- என்று 'பண்புடைமை' அதிகாரத்துள் கூறுதல் காண்க.

**'இடம்பட மெய்ஞ்ஞானம் கற்பினும் என்றும்**
**அடங்காதார் என்றும் அடங்கார் - தடங்கண்ணாய்**
**உப்பொடு நெய்பால் தயிர்காயம் பெய்திடினும்**
**கைப்பறா பேய்ச்சுரையின் காய்.** - நாலடி :117

**- 'மக்கட்கு**
**அணிகலன் ஆவது அடக்கம் - பணிவில்சீர்**
**மாத்திரை இன்றி நடக்குமேல் வாழும்ஊர்**
**கோத்திரம் கூறப் படும்.'** - நாலடி : 241

- என்றார் பிறரும்.

**'- தம்மினும்**
**கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்**
**எற்றே இவர்க்குநாம் என்று'**

- என்பதும், அது.

தம்மையும் பிறரையும் ஒன்றாகக் கருதும் நடுவுநிலை உணர்வே அடக்கத்திற்கு அடிப்படையாகலின், அதன்பின் இது கூறுவார்.

## கஉக. அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
## ஆரிருள் உய்த்து விடும். - 121

பொருள்கோள் முறை : இயல்பு.

பொழிப்புரை : அடங்கி யொழுகுதலாகிய தன்னடக்கம் அஃது உடையவரை, மக்கள் மனத்திலே அமர்ந்து (மறைந்தும் மறையாதவர்களாக நினைவு கூர்ந்து கொண்டிருக்கும்) புகழ் பெற்றவர்களின் வரிசையுள் ஒருவராகக் கொண்டு சேர்க்கும். அடக்கமின்மை (இவ் வுலகின் மறதிக்கு உள்ளாகிய) கடந்த காலத்தின் திண்ணிய இருளில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடும்.

**சில விளக்கக் குறிப்புகள்:**

1. இஃது, அடக்கத்தினது நன்மையையும், அடங்காமையின் நன்மையின்மையையும் கூறியது.

*2.* **அடக்கம் அமரருள் உய்க்கும்** - அடங்கியொழுகுதலாகிய தன்னடக்கம், இறந்தும் இறவாதவர்களாக மக்கள் மனத்தில் புகழுடன் அமர்ந்திருப்பவர்களின் வரிசையுள், அஃது உடையவர்களைக் கொண்டு சேர்க்கும்.

அடக்கம் - மனவடக்கத்தையும், அறிவடக்கத்தையும், மெய்யடக்கத்தையும் ஒருங்கே குறித்தது.

அமரருள் - இறந்தும் இறவாதவர்களாக மக்கள் மனத்திலே புகழுடன் அமர்ந்திருப்பவர்கள்

- அமர்தல் - வீற்றிருத்தல்.

அமர்தல் உடையவர் அமரர்.

- அமரர் என்னும் சொல்லுக்குத் தேவர்கள் எனப் பொருள் கொள்ளுவது மிகு கற்பனை உருவகம்; அவ்வாறு எவரும் இலராதலால்.

- இதற்கு மணக்குடவர், காலிங்கர், பரிமேலழகர் முதல் இக்காலப் பாவாணர் வரை அனைவரும் தேவர்கள் என்றே பொருள் கண்டனர். அஃது ஆரியவியலின் வழிவழிக் கற்பனையைப் பின்பற்றியது. தமிழியலில் அவ்வாறு ஒரு கோட்பாடு இல்லை.

- தமிழர் சமயங்களாகிய சிவனியத்தும் (சைவத்தும்), மாலியத்தும் (வைணவத்தும்) கூறப்பெறும் இத்தகு கற்பனைகளும் ஆரியவியல் தாக்கத்தால் ஏற்பட்டவையே.

- மக்களுக்காகவே வாழ்ந்தும், பிற மிகுதிறன் கொண்டவர்களாக இருந்தும், மிகுபுகழ் பெற்று, மக்கள் மனங்களில் என்றும் நிலையாக அமர்ந்திருப்பவர்களையே அமரர் எனல் பொருந்தும்.

- மற்றும், அடங்கியொழுகும் இயல்பினார், மக்கள் நலங் கருதியும், பிற அறிவுத் துறைகளில் ஈடுபட்டும், செயற்கரிய செய்து வாழ்ந்து மறைந்த பெரியாராகச் சிறந்து விளங்கி நிற்றலும், மக்கள் மனங்களில் அவர்கள் என்றென்றும் இடங் கொண்டிருப்பதும் இயல்பாம் என்க.

- நூலாசிரியர், இந்நூலுள் **'அமரர்'** என்னும் இச் சொல்லை இக்குறள் ஒன்றிலேயே பயன்படுத்தியுள்ளார். மற்று அவர், **புத்தேள், புத்தேளிர்** என்னும் ஒரு சார்புச் சொல்லை (58, 213, 234, 290, 966, 1323) ஆறு இடங்களில் பெய்திருப்பதும், தேவர்களையும், தேவருலகத்தையும் அவை குறித்தனவா என்பதும் தெளியுமாறில்லை. புத்தேள் என்னும் சொல்லாய்வுக்கு இன்றுவரை தெளிவான விளக்கமேதும் எங்கும் எவரும் கூறிற்றிலர். இச் சொல் வேறு பல நூல்களுள்ளும் ஆளப் பெற்றுள்ளது, அக்காலத்து இஃது ஏதோ ஒரு கற்பனை நம்பிக்கையின் அடிப்படையில் வழங்கப் பெற்றிருந்ததாகவே உன்னிக்கப் பெறும். இஃது ஓர் இடுகுறிப் பெயராக அக்காலத்துள் அனைவரும் அறிந்திருந்த ஓர் ஊராகவோ நாடாகவோ இருந்திருக்கலாம்; அங்கு வாழ்ந்திருந்த மிகு

*நாகரிகம் பண்பாடும் கொண்ட மக்களையும் 'புத்தேளிர்' என்னும் சொல் குறித்திருக்கலாம் என்பதே இன்றைய அளவில் தரமுடிந்த விளக்கமாகும் என்க.*

**உய்த்தல்** - *கொண்டு செலுத்துதல்.*

3. **அடங்காமை ஆரிருள் உய்த்து விடும்** - *தன்னடக்கம் இல்லாத தன்மை, கடந்த காலத் திண்ணிய இருளில் கொண்டுபோய்ச் சேர்த்து விடும்.*

**அடங்காமை** - *தன்னடக்க மின்மை.*

**ஆரிருள்** - *திண்ணிய இருள். உருவகமாய்க் கடந்த காலத்தைக் குறித்தது.*

*- முற்காலத்து இவ்வுலகின்கண் தோன்றி வாழ்ந்து மறைந்த பல்லாயிரங் கோடி மக்கள், கால இருளுள், (கால வெள்ளத்துள் என்பதும் வழக்கு) அச்சு, அடையாளமின்றிப் புதையுண்டு போயினர். அவ் வரலாறு இல்லாத மக்களுள் ஒருவராக அடக்க மில்லாதவர் மாய்ந்து மறைந்து விடுவர் என்பது ஆசிரியர் கருத்தாம் என்க.*

*- பெரும்பாலும் மக்கள் மனத்துள் இடங்கொண்டு பெரும்புகழ் பெற்று மறைந்தும் மறையாத சான்றோர் பலர் அடக்கமுடையவராயிருந்து ஆற்றற்கரிய அருஞ்செயல்களைச் செய்தவர்களாகவே இருப்பதை வரலாறு உணர்த்துகின்றது.*

*- அறிஞர்கள் அடக்கமில்லாதவர்களாக இருந்திலர் - என்பது.*

**'அடக்க முடையார் அறிவிலரென் றெண்ணிக்**
**கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்**
**ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்**
**வாடி யிருக்குமாம் கொக்கு'**

*- என்னும் பாடலால் விளங்கும்.*

*- இனி, அறிவிருந்தும் அடக்கம் இல்லாதவரை அறிவில்லாதவர் என்றே ஆசிரியர் குறிப்பதும் காண்க.*

**'ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்**
**பேதையில் பேதையார் இல்'** - ***834***

*- இனி, ஆரிருள் என்பதனை, மணக்குடவரும், பரிதியும், காலிங்கரும், பரிமேலழகரும் - 'நரகம்' என்றே பொருள் கொண்டனர்.*

*- இதுவும் இல்லாத மிகு கற்பனையே; ஆரியவியலே. தமிழியலில் 'நரகம்' என்று கூறப்பெறுவதில்லை.*

*- பாவாணரும் 'இருளுலகம்' என்று பொருள் கூறி, 'இருளுலகமாவது நரகம்' என்று விளக்கம் செய்வது வருந்தத் தக்கது; அவரின் சமயக்*

கொள்கை சான்றது. இனி, இவ்வாறு கூறியவர், அவ்வளவின் அமையாது, 'பண்டைக் காலத்தில் இருட்டறையுள் அடைப்பதும் ஒருவகைத் தண்டனையாயிருந்தமையின், நரகம் இருளுலகம் எனப்பட்டது என்றும் துணைவிளக்கமும் கூறி, அவரின் தவறான கருத்தை மெத்தனப்படுத்துவார். இதுவும் ஏற்றுக் கொள்ளத் தக்கதோ, தெளிவான கருத்தோ அன்று.

- 'அடக்கமின்மை' ஒருவேளை தண்டனைக்குரிய குற்றம் செய்தற்கு ஏதுவாக அமையலாமேயன்றி, அஃதே ஒரு தண்டனைக்குரிய குற்றமன்று.

- ஆனால், அடக்கமில்லாதவர் எதுவும் செயற்கரிய செய்தல் இயலாது போதல் இயங்கியல். காரணம், செயற்கரிய செய்தல், அமைந்து செய்யும் அடிப்படை கொண்டதாக இருப்பதே. அதனால், அவர் வாழ்வும் செயலும் மக்களால் நினைவு கூரத்தக்க அளவு பெருமை பெறுதலும், மக்கள் மனத்தில் அத்தகையர் அமர்வதும் இல்லாமல், கால இருளில் மங்கி மறைந்து போதலும் இயற்கையாம் என்க.

4. இனி, நூலாசிரியர் 'நரகம்' பற்றிய கருத்துடையவராக இருப்பது. அவர், நூலுள் *255, 835, 919* ஆகிய மூன்று இடங்களில் பயன்படுத்திய **'அளறு'** என்னும் சொல்லால் தெரிய வருகிறது.

**'அளறு'** என்பது அழுந்திய சேற்றுக் குழம்பைக் குறித்தாலும், தமிழ் நூல்களுள், 'நிரயம்' என்னும் நரகத்திற்கு ஓர் உருவகமாகவே குறிக்கப் பெறுகிறது. நிரயம் என்னும் ஒரு சொல்லும் நரகத்தைக் குறிப்பதற்கே பயன்படுத்தப் பெறகிறது. ஆனால் இச்சொல் இந்நூலுள் எங்கும் ஆளப் பெறவில்லையேனும், வேறு தமிழ் நூல்களுள் ஆளப் பெற்றிருப்பதும் கருதத் தக்கது.

அறிவியல் அடிப்படையிலோ, மெய்யறிவியல் அடிப்படையிலோ, துறக்கவுலகம் (சொர்க்கம்), நிரயவுலகம் (நரகவுலகம்) என்பன அறவே இல்லை என்பதே தெளிவு. தமிழ்ச் சமயங்களும், ஆரிய வரவுக்கு முன்னரே தோன்றியிருப்பினும், பிற்காலத்துத் தமிழ் மொழியுள் ஆரியங் கலந்தது போலவே, தமிழ்ச் சமயங்களுள்ளும் ஆரியங் கலந்தமை மறுக்க வியலாததாம் என்க.

- எனவே, வேதமதக் கொள்கைச் சார்பினதான 'மோட்ச, நரகக் கொள்கை தூய தமிழியலுக்குப் பொருந்தாததே என்றும், அதனை முழுமையாகவோ, பகுதியாகவோ நூலாசிரியர் ஒரோ விடங்களில் குறித்திருப்பினும் அஃது அறியாமையே அல்லது மூடநம்பிக்கையே அல்லது ஆரியத்தின் பாற்பட்ட அடிமைத் தன்மையே என்று அறிவினார் கருதுதல் வேண்டும்.

- ஆயினும், இதில் ஆசிரியர் குறித்திருக்கும் 'ஆரிருள்' உரையாசிரியர் பிறர் கருதுதல் போல், நரகத்தைக் குறிக்க வில்லை என்பதையும், அது காலவிருளையே குறித்தது என்பதையும் தீரத் தெளிந்து கொள்க.

## கஉஉ. காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
## அதனினூங் கில்லை உயிர்க்கு. - 122

பொருள்கோள் முறை :

**உயிர்க்கு ஆக்கம் அதனின் ஊங்கு**
**இல்லை காக்க பொருளா அடக்கத்தை.**

பொழிப்புரை : *மக்களுயிர்க்குப் பெருமை, செல்வம், வாய்ப்பு, புகழ் முதலிய பல்வகையான ஆக்கங்களை உருவாக்கித் தருவது அடக்கத்தை விட வேறில்லையாதலால், அதனை ஒரு முதலீட்டுப் பொருளாகக் காத்துக் கொள்ளுதல் வேண்டும்.*

சில விளக்கக் குறிப்புகள் :

1. **உயிர்க்கு ஆக்கம் அதனின் ஊங்கு இல்லை** - *மக்களுயிர்க்குப் பெருமை, செல்வம், வாய்ப்பு, புகழ் முதலிய பல்வகையான ஆக்கங்களை உருவாக்கித் தருவது அடக்கத்தை விட வேறில்லையாதலால்,*

*- மக்களுக்கு என்றதை உயிர்க்கு என்றது, மக்கள் தம் உடல் வாழ்க்கைக்குப் பின்னரும் சிறப்பு நிலையால் புகழ்பெற்று நிற்றலால் அதனை உயிர்மேலேற்றிக் கூறினார்.*

*- புகழ் உயிரைச் சார்ந்து நிற்றலை 'ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதிய மில்லை உயிர்க்கு' (231) என்னும் கூற்றாலும் உறுதிப்படுத்துவார்.*

*- அடக்கம், ஒருவரின் தகுதிப் பாட்டை மிகுத்துக் காட்டும் ஓர் ஒழுகு முறை.*

*- கல்வியானும் செல்வத்தானும் மிக்குயர்ந்தோனாயினும் அடக்கம் உடையவரையே மக்கள் அத்தகுதி நிலைப்பாடுகளினும் மேலாக மதிப்பர். - அது பெருமை யாயிற்று.*

*- அடக்கம் உடையவரிடமே அதிகார நிலையில் இடம் தருவர். அது புகழாயிற்று.*

*- பிறவும் அன்னவாறே ஆமென்க.*

2. **காக்க பொருளா அடக்கத்தை** - *(எனவே) மூல முதலீட்டுப் பொருளாக அடக்கத்தைக் காத்துக் கொள்க.*

- ஆக்கம் (ஊதியமாம்) தருவது மூலமுதல் (Capital). எனவே, அடக்கத்தைத் தனக்குள்ள முதலீட்டுப் பொருளாகக் காத்துக் கொள்க என்றார்.
- பொருளை, உறுதிப் பொருள் என்பார் பரிமேலழகர். அறம், பொருள், இன்பம் எனும் உறுதிப்பொருள் மூன்றனுள் பொருளும் உறுதிப் பொருளாயிற்று என்பது அவர் கருத்து.
- அதுவும் பொருள் மதிப்பினதே சிறப்பில்லை.
- ஆக்கம் என்பது மேல் ஆகிவரும் பொருளாக நின்று ஊதியத்தைக் குறித்ததாகலின், பொருள் என்பதை மூல முதலீடாகக் கொள்ள வேண்டுவது இயல்பாயிற்று. மூல முதலீட்டை எவரும் செலவழியார் ஆகலின் அஃது இறுதிவரை உறுதி பயப்பதுபோல், அடக்கமும் இறுதிவரை உறுதி பயப்பதாகும் என்றலான் என்க.
- இதற்குக் காலிங்கர் பொருள் விளக்கம் தருகையில், 'அடக்கம் உடைமையாய்க் கொண்டு உலகத்தில் யாவரும் தத்தம் குல மரபுக்குத் தக்க ஒழுக்கத்தினால் ஒழுகுதலே சிறந்தது' என்று கூறுவது ஆரியச் சார்பானதும் மிகையானதும் என்க. அது தேவையின்று எனக் கூறி விடுக்க.

3. இது, முன்னர்க் கூறிய அடக்கத்தைக் காத்து ஒழுக வேண்டிய இன்றியமையாமையைக் கூறலின் அதன் பின்னர் வைக்கப் பெற்றது.

## கஉந. செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து ஆற்றின் அடங்காப் பெறின் - 123

**பொருள்கோள் முறை :**

> ***அறிவு அறிந்து ஆற்றின் அடங்கப்***
> ***பெறின், செறிவறிந்து சீர்மை பயக்கும்.***

**பொழிப்புரை :** ஒருவர் தமக்குற்ற அறிவுணர்வை முற்றாக அறிந்து கொண்டு, அதன்வழி அவர் அடங்கியொழுகுவாராயின், அவ் வடக்கப் பண்பு, பிறர் அறி.ந்து, அவர்க்கு ஏற்ற பெருமையையும் புகழையும் தரும்படி செய்யும்.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. சென்ற குறளில் அடக்கம் ஆக்கம் தருவது, எந்நிலையில், எவவாறு என்பதை இதில் விளக்கினார்.
2. **அறிவு அறிந்து ஆற்றின் அடங்கப் பெறின்** - ஒருவர் இயற்கையாகத் தமக்குற்ற அறிவு உணர்வை முற்றாக அறிந்து, அதன் வழி அவர்

அடங்கி ஒழுகுவார் ஆயின்.

மக்கள் இயற்கையாகவே, அவரவர் மரபு, பிறப்பு நிலை, வளர்ச்சிச் சூழல், பயற்றுவிப்பு, தன்னூக்கம் முதலியவற்றின் வழி, ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான அறிவுணர்வைப் பெற்றிருப்பர்.

கழி இளமையில் அவர்க்குற்ற அறிவுணர்வு அவர்க்கு விளங்காவிடினும், நாட் செல்லச் செல்ல அந்நிலை அவர்க்குப் படிப்படியாய் விளங்கித் தோன்றும் என்பது மனவியல் உண்மை. என்னை?

**'நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்**
**உண்மை யறிவே மிகும்'** - ***373***

- என்பார் ஆகலின்.

அவ் வறிவு தமக்குத் தெளிவாக விளங்கித் தோன்றும் பொழுது, அவரவர் அவ்வவ் வறிவுத் துறையில் தம்மை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டு, மேலும் மேலும் அத் துறையில் முயன்று முழுமை பெறுவதே வாழ்க்கையின் வெற்றிக்கும் நிறைவுக்கும் உதவும் ஒரு வாழ்வியல் உத்தியாகும்.

- இக் கருத்தை நூலாசிரியரும் பல விடங்களில் எடுத்துக் கூறுவது காணத்தக்கதாகும்.

- **'தெரிந்து செயல் வகை'** அதிகாரத்துள் வரும்,

**'ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று**
**போற்றினும் பொத்துப் படும்'** - ***468***

என்பதும், **'வலியறிதல்'** அதிகாரத்துள் வரும்,

**'ஒல்வ(து) அறிவ(து) அறிந்ததன் கண்தங்கிச்**
**செல்வார்க்குச் செல்லாத(து) இல்.** - ***472***

என்பதும், **'ஆள்வினையுடைமை'** அதிகாரத்துள் வரும்,

**'அறிவறிந்து ஆள்வினை இன்மை பழி'** - ***618***

என்பதும், **'அவையஞ்சாமை'** அதிகாரத்துள் வரும்,

**'ஆற்றின் அளவறிந்து கற்க'** - ***725***

என்பதும் இக் கருத்தை மேன்மேலும் வலியுறுத்துவனவாகும்.

- **ஆறு** என்பது இவ் விடத்து, வழி, துறை என்று இரண்டு வகையானும் பொருள் தரும்.

**2. செறிவு அறிந்து சீர்மை பயக்கும்** - அவ்வடக்கப் பண்பு, பிறர் அறிந்து, அவர்க்கு ஏற்ற பெருமையையும் புகழையும் தரும்படி செய்யும்.

**செறிவு** - அடக்கம் எனும் பண்பு.

- ஆசிரியரும்,

**'நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்**
**முந்து கிளவாச் செறிவு'** - **715**

என்றவிடத்துச் 'செறிவு' என்பதை அடக்கம் என்றே கொண்டார்.

செறிதல்- நிறைந்திருத்தல். நிறை என்னும் சொல்லும் அடக்கத்தைக் குறிக்கும்.

- நிறைந்திருப்பது அடங்கியிருக்கும்.

**நிறைகுடம் தளும்பாது'** என்பது பழமொழி.

**'வற்றிய ஓலை கலகலக்கும் எஞ்ஞான்றும்**
**பச்சோலைக் கில்லை ஒலி'** - நாலடி : **256**

**"சிற்றுணர்வோர் என்றுஞ் சிலுசிலுப்பர் நன்றமைந்த**
**முற்றுணர்வோர் என்றும் மொழியாரே - வெற்றிபெறு**
**வெண்கலத்தின் ஓசை மிகுமே; விரிபசும்பொன்**
**ஒண்கலத்தின் உண்டோ ஒலி"** - **நீதிவெண்பா.**

- என்றார் பிறரும்.

- சீர்மை - பெருமையும் புகழும்.

**'சீர்மை சிறப்பொடு நீங்கும்'** - **915**

என்பதில் பெருமையும்,

**'சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்'** - **934**

என்பதில் புகழும் குறித்தமை காண்க.

- இவ்விடத்து இரண்டும் குறித்தது.

- **பயத்தல்** - பெற்றுத் தருதல்.

3. இஃது, அடங்கி ஒழுகுதலின் பயன்கள் கூறுதலால் முன்னதன் பின்னர் வைக்கப் பெற்றது.

## கஉச. நிலையில் திரியா(து) அடங்கியான் தோற்றம் மலையினும் மாணப் பெரிது. - 124

**பொருள்கோள் முறை :** இயல்பு.

**பொழிப்புரை :** தம் கடைப்பிடியிலிருந்து (எவ்வகையான ஏற்றத்தாழ்விலும்) சிறிதும் மாறுபடாமல் அறநெறியில் அடங்கியொழுகுபவனுடைய

முன்னேற்றம், ஒரு மலையினுடைய (வியப்பு, பெருமை, நிலைப்பு ஆகிய) தன்மைகளைவிட மிகவும் பெரியதாகும்.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. இஃது, அடக்கத்திற்கு மேலும் ஒருபடி சிறப்பும் வலிவும் ஊட்டிய கருத்தையுடையதாகும்.

   - அஃதாவது, அடங்கியொழுகுதல் சிறப்பு. அதே நிலையில் தம் கடைப்பிடியிலிருந்து எந்தச் சூழ்நிலையினும் வழுவாது இயங்குதல் வேண்டும். இனி, அதனினும் மேலாய் அறநெறியில் அவ்வியக்கம் இருத்தல் வேண்டும் என்று இறுகல் நிலை கூறுவார்.

   - எனவே, இக் குறளினது கருத்தில் அறன்வலியுறுத்தலும், நடுவுநிலைக் கருத்தும் பொருந்தி இயங்குதலைக் காணலாம்.

2. **நிலையில் திரியாது அடங்கியான்** - தம் கடைப்பிடியிலிருந்து, எவ்வகையான ஏற்றத்தாழ்வினும் சிறிதும் தளர்வுறாது, நெகிழ்ச்சி கொள்ளாது, அறநெறியில் அடங்கி ஒழுகுபவனின்.

- இதில், **'நிலையில்'** என்றது, தம் கடைப்பிடியில் கொள்கையில் உறைத்து நிற்பது.
- **'திரியாது'** என்றது, அறநெறிக்கண் மாறுபடாது நிற்றல் என்பது,
- **'அடங்குதல்'** என்றது, அடங்கி யொழுகுதல்.
- இதுபோல், ஒருவன் எந்நிலையிலும் நிலைகுலையாது - உளந்தளராது - உறைத்து நின்று இயங்குதல் வேண்டும் என்பதை வேறு சில இடங்களிலும் வலியுறுத்தியுள்ளார்; வலியுறுத்துவார்.

முன்னர், **'அறன்வலியுறுத்தல்'** அதிகாரத்தில்,

**'வீழ்நாள் படாஅமை நன்றாற்றின்'** - (38)

- என்றதிலும், 'இல் வாழ்க்கை' அதிகாரத்தில்,

**'ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை**
**நோற்பாரின் நோன்மை உடைத்து'** - (48)

- என்றதிலும், **'நடுவு நிலைமை'** அதிகாரத்தில்

**'கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்**
**கோடாமை சான்றார்க்கு அணி'** - (115)

- என்றதிலும், அந்'நிலையில் திரியாது ஒழுகுதல்' என்பது ஒவ்வொரு வகையில் வலியுறுத்தப் பெற்றதை உற்றுக் காண்க.

- இனி, வரும் **'சான்றாண்மை'** என்னும் அதிகாரத்திலும்,

**'ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு**
**ஆழி எனப்படு வார்'** - (989)

- என்று, 'நிலையில் திரியாது உறுதியின் கடைப்பிடிக்கும்' உணர்வை, இன்னும் ஒருபடி மேலே சென்று திண்ணிதாக வலியுறுத்துவார்.
- இவ்வாறு, எந்த உயர் உணர்வைக் கடைப்பிடித்து ஒழுகுதல் இன்றியமையாதது என்பதை, ஆங்காங்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டான் வலியுறுத்துவது, நூலாசிரியர் இயல்பு என்க.

3. **தோற்றம் மலையினும் மாணப் பெரிது** - விளங்கித்தோன்றுதல்- முன்னேறி நிற்றல், மலையைவிட மிகப் பெரியது.

- இக்குறளுக்கே இதில் உள்ள தோற்றம் என்னும் சொல்தான் மிகவும் முகாமை வாய்ந்தது. ஏனெனில் இதிலுள்ள மூலக் கருத்தையும், எடுத்துக்காட்டையும் பொருள் விளங்கும் வகையில் இணைத்து நிற்கும் கருத்து இச் சொல்லில்தான் உள்ளது.
- அந்நிலைகளைச் சற்று ஆழமாகப் பார்த்தல் வேண்டும்.

இக்குறளின் மூலக் கருத்து:

'தம் கடைப்பிடியிலிருந்து எவ்வகையான ஏற்றத்தாழ்விலும் சிறிதும் மாறுபடாமல் அறநெறியில் இயங்கும் ஒருவன்' - என்பது.

இதற்குரிய எடுத்துக்காட்டு,

'மலையினுடைய பெருமை' - என்பது.

- இவ்விரு முதற் கருத்தையும், எடுத்துக்காட்டையும் இணைக்கின்ற பணியை இதிலுள்ள 'தோற்றம்' 'மாண' 'பெரிது' என்னும் மூன்று சொற்களும் செய்கின்றன.

யாருடைய 'தோற்றம்' எனின் முதல் கருத்தில் உடையவனுடைய 'தோற்றம்' என்பது விடை.

'தோற்றம் எப்படிப்பட்டது' என்னும் வினாவிற்கு விடை தருவது, 'பெரிது' என்னும் சொல்.

'எப்படிப் பெரிது' என்னும் வினாவிற்கு விடை மலையினும் மாணப் பெரிது' - அஃதாவது, 'மலையைவிட மிகவும் பெரியது' என்பது.

- இவ் விளக்கங்களை வைத்துப் பொருத்தினால் கிடைக்கும் கருத்துக்கு முழு விளக்கமாக நிற்பது **'தோற்றம்'** என்னும் ஒரு சொல்லே என்க.

எனவே, 'தோற்றம்' என்பதற்கு ஆசிரியர் கருதிய சரியான பொருள் என்ன என்று உய்த்துணர்ந்தால்தான், 'மலையினும் மாணப் பெரிது' என்னும் எடுத்துக்காட்டு முடிவுக்குச் சரியான பொருள் கூற முடியும்.

- இல்லெனில், இவ் வுவமை வெறும் மிகுபுனைவு (exaggeration) எனும் அறநூலுக்குப் பொருந்தாத கற்பனைக் கருத்தாகி, நூலாசிரியர்க்கு இழுக்கைத் தந்து விடும் என்க. (குறட்பா 103-இல் உள்ள 'நன்மை கடலின் பெரிது' என்னும் அடிக்கான விளக்கத்தைக் காண்க.)

- இதில், 'தோற்றம்' என்பதற்கு மணக்குடவர், பரிமேலழகர் இருவரும் 'உயர்ச்சி' என்றும், பரிதியார், 'பெருமை' என்றும் பொருள் கூறுவர். இற்றைப் பாவாணரும் பிறர் சிலருங்கூட 'உயர்ச்சி' என்றே பொருள் கூறுவார்.
- இனி, 'உயர்ச்சி' என்றால் எது? உயரமா, மேன்மையா? அவருடைய 'உயரம்' உறுதியாக மலை உயரத்தைவிட இருக்கவியலாது. எனவே உயர்ச்சி, உயரமன்று.
- இனி, 'மேன்மை' என்றாலோ, பிறவென்றாலோ அப் பொருளைத் தெளிவாகக் குறிக்கவில்லை. எனவே அவர்களின் உரை ஐயப்பாட்டிற்கு உரியவாறு தெளிவின்றியே உள்ளது என்க.
- இனி, அவர்கள் கூறும் உயர்வு, சிறப்பாகத்தான் இருக்க முடியும் என்பதுகூட, அவர்கள் எடுத்துக்காட்டுக்குக் கூறும், 'மலையினது உயர்ச்சியினும் மிகப் பெரியது' - என்று முன்னைய இருவரும், பாவாணரும் கொள்ளும் பொருளில் அடிபட்டு விடுகிறது.
- எனவே அவர்கள் உயர்ச்சி என்று கூறுவது 'உயரத்தையே' என்றாகி விடுகிறது.
- இஃது எவ்வளவு பெரிய அறியாமை! அல்லது தெளிவின்மை என்று அறிவினார் நுணித்தறிக.
- எத்தகைய ஒருவனின் உயர்ச்சி அல்லது உயரமும், மலையை விட மிக உயர்ச்சியாக இருக்க முடியுமா என்பதற்கு அவர்கள்தாம் விடை கூறுதல் வேண்டும்.
- இதிலிருந்து என்ன தெரிகிறது எனின், சிக்கலான பொருள் தரும் ஒரு சொல்லுக்கு முன்னுள்ள உரையாசிரியர்கள் என்ன பொருளைக் கண்டு கூறினரோ, அதே பொருளை அதே சொல்லில் சொல்லி விடுதலே தமக்கும் தக்கது அல்லது எளிது அல்லது சிக்கலிலிருந்து தப்பித்துக் கொள்ள உதவுவது என்பதே, ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாகத் தமிழ்ப் புலவோர் கொண்ட கொள்கை என்று ஆகிவிடுகிறது.
- இதில் மணக்குடவர், இன்னொரு கொடுமையையும் கூறுகிறார்.
- அது, 'நிலையில் திரியாது' என்பதில் உள்ள நிலை என்பது, 'வன்னாச்சிரம தன்மம்'.
- அஃதாவது, 'வர்ணாச்சிரம தர்மம்' என்று, 'மனுதர்ம' நூலுக்கு வேறு நம்மை இட்டுச் செல்கிறார். அதனால், இவரும் ஓர் ஆரியப் பார்ப்பனராகவோ, அல்லது அடிமையாகவோ இருக்கலாகும் என்க.
- இனித் தோற்றம் என்பதற்குச் சரியான பொருள் 'விளங்கித் தோன்றுதல்' அஃதாவது முன்னேறி நிற்றல்' என்பதே என்க. என்னை?

- இத்தனை இடர்ப்பாடான கடைப்பிடிப்புகளோடும், அறவொழுக்கக் கோட்பாட்டில் திரிபடையாமலும் ஒருவர் நேர்மை உடையவராக இருந்து, அடங்கியொழுகி, உலகியலுக் கிடையில் முன்னேறி வருவதெனில், அஃது எத்துணைப் பெரிய ஆளுமை முயற்சியாக இருத்தல் வேண்டும் என்பதை அறிவினார் எண்ணிப் பார்த்து உணர்தல் வேண்டும் என்க.
- அவ் வரும்பெரும் முன்னேற்றத்தைத்தான் ஆசிரியர் வியந்து, 'அது மலையினும் மாணப் பெரிது' என்று போற்றுகிறார் என்க.
- இனித்தான் இம் முன்னேற்றத்தை எடுத்துக்காட்டுடன் பொருத்திக் காணுதலுக்கு ஒரு தேவை உண்டாகிறது.
- முதற்கண், 'மலையினும் மாணப் பெரிது' என்னும் தொடர்க்கு மேற் சொன்ன, பாவாணரை உள்ளடக்கிய முன்னைய உரையாசிரியர்தம் பொருள் என்னவெனின், 'மலையின் உயர்ச்சியினும் மிகப் பெரிது' என்பதே.
- இதில் பொருட்சிறப்பு என்ன என்பது நமக்குப் புலப்படுமாறு இல்லை.
- இவ்வாறு பொருளில் புரைச் சொற்களையும், புனைதரு வெற்றுச் சொற்களையும் மிடைந்து கூறுதல் நூலாசிரியர் போலும் நுண்மாண் நுழைபுலம் மிக்க ஒண்மாண் புலவர்க்கு ஒப்புதலா யிருக்குமோ என்று எண்ணிப் பார்ப்பின் வருத்தமே மேலிடுகின்றது.
- ஆரிய நூல்களான வேதங்களில் உள்ள ஒருசிறு சொல்லுக்கும் நூறு பொருள்களை வெளிய விரித்துப் பெருமை சாற்றும், ஆரியவியற் பூரிய புலவர்கள், இவ் வரும்பெறல் நூலுக்கு மட்டும் அரும்பொருள் காணாது வெறும்பொருள் கூறுவதன் நோக்கம், தமிழியலை மிகுதாழ்த்துவதே என நினைத்து மறுக்க வேண்டியுள்ள தென்க.
- ஒரு மலையினது சிறப்புக்கு மூன்று நிலைகள் உரியவாம் என்க. அவை, வியப்பு, பெருமை, நிலைப்பு ஆகியன.
- 'மலை' என்னும் சொல் மலைத்தல என்னும் வியப்புணர்வால் விளைந்த சொல்.
- மலையினது உயர்ச்சியும், பருமையும், கிடக்கையும், வளங்களும், நிலைப்பும் மாந்தரை மலைக்க (வியக்க) வைத்தலை யாரே மறுப்பர்?
- இம் மலைப்பின் அடிப்படையில் தோன்றிய வியப்பும், அதன் பருமையும், கிடக்கையும், வளங்களும் காட்டும் பெருமையும், அதன் அழிவுறாத நிலைத்தல் தன்மையும் அதன் சிறப்பை நமக்குப் புலப்படுத்துகின்றன அல்லவா?
- இது போலும் வியப்பையும், பெருமையையும், நிலைப்பையும் கொண்டதுதான், 'தன் கடைப்பிடியிலிருந்து, எவ்வகையான

ஏற்றத்தாழ்வு வந்த விடத்தும், தன் நிலையில் சிறிதும் மாறுபாடுறாமல், அறநெறியில் அடங்கியொழுகுபவனுடைய முன்னேற்றமும் - என்பது நூலாசிரியரது கருத்தாம் என்க. என்னை? இனி, அவ்வுணர்வுகளைத் தனித்தனியே எடுத்துப் பொருத்திக் காண்போம்.

**வியப்பு** - கடுமையான வெயிலுக்கும், பெரும்புயல் மழைக்கும், சீர்த்தடிக்கும் சூறாவளிக்கும் உருகாமலும், கரையாமலும், அசையாமலும் முன்னிருந்த நிலையிலேயே நிற்கின்ற ஒரு மலையைப் பார்க்கும் பொழுது ஏற்படுகின்ற வியப்பை விட,

- பலவாறான இல்லறவியல், உலகியல் இடர்ப்பாடுகளுக்கும் தாக்கங்களுக்கும், வாழ்வியற் கடுங் கடமைகளுக்கும், பொருளியல் விடாமுயற்சிகளுக்கும் இடையில், தாம் கடைப்பிடியாகக் கொண்ட அறநெறிக்கண் அசைவுறாது அம்மலை போன்று அடங்கியொழுகி நின்று, முன்னேறித் தோன்றுதல் மிகப் பெரும் வியப்பை அளிப்பதாகும் என்க.

பெருமை - மலையினது உருவிலும், பருமையிலும், கிடக்கையிலும், வளமையிலும், செழுமையிலும் (வளமை நீரினதும் நிலத்திணையினதும்; செழுமை மாழை, மணிகளது) பெரிது விளங்கும் மலையின் பெருமையைவிட,

- உறுதியினும், உழைப்பினும், ஊக்கத்தினும், நோக்கத்தினும், அடங்கியொழுகலினும், பிறர்நலம் கருதும் அறக்கடைப்பிடியினும் சிதைவுறாது நின்று முன்னேறித் தோன்றுதல் மலையினும் மாணப் பெருமை உடையதாம் என்க. என்னை?

அது, பூதவியங்கியலின் வலிமையுடையது; இது, உயிரியங்கியலின் எளிமையுடையது. எனவே மிகுந்த பொறாமை சேர்ந்ததாம் என்க.

**நிலைப்பு** - மலை நீண்ட நெடுங்காலம் நிலைப்பது. இயற்கை மாற்றத்தாலேயே அழிவுறுவது.

**'குன்றும் வானும் கோடி யாண்டுகள்**
**நின்று நிலைப்பன; நீயோ அழிபவன்!'** - 'கனிச்சாறு'

இம் மலையினது நிலைப்பை விட,

'அறத்தான் வரும் இன்பமும் புகழும்', (39)

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
தெய்வத்துள் வைக்கப் பெறும் பெருமையும்', (50)

'அன்புற் றமர்ந்த வழக்கால் இன்புற்று
எய்திய சிறப்பும்', (75)

'விருந்தோம்பிய வேள்விப் பயனும்', (87)

'இன்சொல் கூறிய அறத்தான்', (93)

'இம்மையும் மறுமையும் பெறுதகு வின்பமும்', (98)

'செய்ந்நன்றி யறிதல் உணர்வுடைமையால், - 101

வையகத்தினும், வானகத்தினும், கடலினும், - 103

ஞாலத்தினும் மாணப் பெற்ற பெருமையும்', - 102

'எச்சத்திற்கு ஏமாப்புத் தரும் ஆக்கமும்', - 112

'அமரருள் உய்த்து', - 121

- அடக்கம், அழிவிலாத நிலைப்பை நிலையின் திரியாது அடங்கியானுக்குத் தருமன்றோ?

ஈங்கு, இத்துணைச் சிறப்பியல்களும் பொருந்தப் பெற்று விளங்கும் அடங்கியான் முன்னேற்றம் மலையினும் மாணப் பெரிதன்றோ? ஆமென்க. எனவே, அதுவே ஆசிரியரது கருத்துமாம் என்க.

4. இஃது, அடக்கமுடைமையின் ஒழுகினார்க்கு விளையும் சீர்மையைக் கூறியது போலவே அவரின் வாழ்வியல் முன்னேற்றப் பெருமையையும் கூறியதால், அதன் பின்னர் வைக்கப் பெற்றதென்க.

## கஉரு. எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும் செல்வர்க்கே செல்வம் தகைத்து. -125

**பொருள்கோள் முறை :**

**பணிதல் எல்லார்க்கும் நன்றாம் அவருள்ளும்**
**செல்வர்க்கே செல்வம் தகைத்து.**

**பொழிப்புரை** : செல்வம், கல்வி, பதவி, அதிகாரம், தொழில், கலை முதலிய எந்நிலையில் தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவராக இருந்தாலும், அவரனைவர்க்கும் செருக்கின்றி அடங்கியொழுகுதல் நன்மை தருவதாகும். இவர்கள் அனைவருள்ளும், செல்வம் உடையவர்கள் அடக்கத்துடன் பணிவாக நடந்து கொள்ளுதல், அவர்களுக்குச் சொற்செலவு (செல்வாக்கு) என்னும் பெருமை தருவதாகும்.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. **பணிதல் எல்லார்க்கும் நன்றாம்** - செருக்கின்றி அடங்கி யொழுகுதல், செல்வம், கல்வி, பதவி, அதிகாரம், தொழில், கலை முதலிய எந்நிலையில் தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவராக இருந்தாலும், அவரனைவர்க்கும் நன்மை தருவதாகும்.

- எல்லார்க்கும் என்றது, வாழ்க்கை நிலையில் உள்ள எல்லாத் துறையினர்க்கும் என்று பொருள் பெறுவதால், அனைத்து

நிலைகளையும் கருதுதல் வேண்டுவதாயிற்று.

- இதுவரையும், இவ் வதிகார முழுமையும் அதிகாரத் தலைப்புக் கேற்ப **'அடக்கம்'** என்ற சொல்லையே பயன்படுத்தியவர் இவ்வோரிடத்தில்தான் **'பணிதல்'** என்னும் சொல்லைப் பயன்படுத்தியது கவனிக்கத்தக்கது.

- நூலாசிரியர், எல்லாத் திறத்தார்க்கும் பணிவு வேண்டியதை இந் நூலுள் பலவிடத்தும் பலவாறாகப் படைத்து மொழிதல் அறிவினார் நுண்ணிதின் அறிந்து ஒப்பு நோக்கி மகிழ்தற் பாலது.

- **செல்வர்க்குப்** பணிவு வேண்டும் என்பதை அவர் **'மானம்'** என்னும் அதிகாரத்துள்,

**'பெருக்கத்து வேண்டும் பணிதல்'** **- 963**

என்றும்,

- **கல்வி** நிலையுற்ற அறிஞர் பணிவாக நடந்து கொள்ள வேண்டும், அல்லாக்கால் அவர் கற்றறிந்தும் பேதைமை உடையவராக மதிக்கப் பெறுவர் என்பதைப் பேதைமை அதிகாரத்துள்,

**'ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்**
**பேதையின் பேதையார் இல்'** **- 834**

என்றும்,

- **பதவி, தொழில், கலை** முதலிய ஈடுபாட்டு நிலைகளுள் மேம்பட்டவர்கள் எவ்வாறு பணிவோடு நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பெருமை என்னும் அதிகாரத்துள்,

**'பணியுமாம் என்றும் பெருமை சிறுமை**
**அணியுமாம் தன்னை வியந்து'** **- 978**

என்றும்,

- **பதவி, அதிகாரம், அறிவுணர்வு, பண்புணர்வு** கொண்டவர்கள் எவ்வாறு பணிவாக நடந்து, தம்முடன் வேறுபட்டவர்களையும் மாறுபட்டவர்களையும் தமக்கு இயைபுடையவர்களாக மாற்றிக் கொண்டு, தம் தம் செயற்பாடுகளைத் திறமையாகச் செய்தல் வேண்டும் என்பதைச் **சான்றாண்மை** அதிகாரத்துள்,

**'ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்**
**மாற்றாரை மாற்றும் படை'** **985**

என்றும்,

- **அரசாளுமையில் உள்ள ஆட்சியாளர்கள்** தம்மைப் பற்றியும் தம்முடைய செயற்பாடுகள் பற்றியும், பிறர் திறனாய்வின் அடிப்படையிலும், பொதுநன்மை கருதியும், தாம் பொறுத்துக் கொள்ள வியலாதபடி

மிகக் கடுமையாகக் கருத்துகளைச் சொன்னாலும், அவற்றை எவ்வாறு பொறுத்துக் கொண்டு, பணிவுடையவர்களாக நடந்து கொள்ள வேண்டும் என்பதை,

**'செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்**
**கவிகைக்கீழ்த் தங்கும் உலகு'** - **389**

என்றும்,

- தம் இனநலம் கருதி மக்கள் தொண்டாற்ற விரும்பும் **பொதுநலத் தொண்டரும், தலைவரும்,** எந்த அளவில் அனைத்துத் தரத்து மக்களிடமும், தம்மைத் திறனாய்வு செய்து இகழ்ந்து அல்லது தாழ்த்திக் கூறும் பொழுதும், எவ்வாறு மிகவும் பணிவுடனும் அடக்கத்துடனும் நடந்து கொள்ளுதல், அந்த இன மேம்பாட்டிற்கு நல்ல பயன்தரும் என்பதைக் **குடிமை** அதிகாரத்துள்,

**'நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம்வேண்டின்**
**வேண்டுக யார்க்கும் பணிவு'** - **960**

என்றும்,

- நூலாசிரியர் பலபடக் கூறுவது அறிவார்வம் உள்ளவர்கள் நுணுகி உணரத் தக்கதாகும்.
- இனி, அவர் இவ்வளவின் அமையாது, **ஆண் பெண் உறவு மனவியலிலும்** நுழைந்து, காதன் மிக்க மனைவி கணவர் ஈடுபாட்டிலும், அவரவர்க்கு, அவ்வவ் விடத்து இருக்க வேண்டிய, இலங்க வேண்டிய பணிவுநுட்பங்களைக் கூறுவதும் எண்ணி வியக்கத் தக்கதும், மகிழத் தக்கதும் ஆகும்.

கணவனும் மனைவியும் எப்பொழுதும் எந்நிலையிலும் - குறிப்பாக அவர்கள் இருவரும் கூடலில் ஈடுபடும் நேரத்திலும், ஒருவர்க்கொருவர் அன்பான சொற்களை மட்டும் பரிமாறிக் கொண்டால் போதாது, கனிவொழுகும் பணிவான மொழிகளையே பேசிக் கொள்ளுதல் வேண்டும் என்று நூலாசிரியர் கூறும் நுட்பம், அவர் பாலியலிலும், மாந்த மனவியலிலும் எவ்வாறு மிகச் சிறந்த அறிவினார் என்று உணர்த்துவதை அறிந்து போற்றுதல் தக்கதாகும்.

தன் அன்புக் காதல் மனைவியின் வாயிதழ் நீர் கணவற்குப் பாலொடுதேன் கலந்தது போலும் சுவை தருவதாகும் என்று கூறவருமிடத்து, ஆசிரியர், அவ்வாயும், வாயிதழும் எல்லாப் பெண்டிர்க்கும் இயல்பாய் அமைந்துள்ள அழகிய பொதுவான செவ்விய வாய் என்றும், மலரிதழ் போலும் மெல்லிய இதழென்றும் மட்டும் உணரக் கூறாது, தன் கணவனிடம் பணிவான மொழிகளைப் பேசிப் பழகிய வாயாகவும் இதழாகவும் அவை இருத்தல் வேண்டும்,

அப்பொழுதுதான் அப் பரல்போலும் வெண்பற்கள் நிறைந்த வாயினது எயிற்றில் பாலும் தேனும் சுரந்து கலந்து கசியும் சுவையைத் தருகின்ற நீர் ஊறும் என்று, **காதற் சிறப்புரைத்தல்** என்னும் அதிகாரத்துள், கீழ்வரும் குறளில் கூறுவார்.

**'பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி**
**வாலெயிறு ஊறிய நீர்'** - ***1121***

- என்பது, அது.

- இனி, மனைவிமட்டும் அவ்வாறு பணிவொழுகும் மொழிகளைப் பேசுபவளாக இருப்பது போதாது, அக் கணவனும் அதே போல் பணிவான மொழிகளையே தன் மனைவியிடம் பேசுபவனாகவும் இருத்தல் வேண்டும் என்பதை, அம் மனைவியின் வாய்வழியாகவே கூறவைக்கும் கருத்தும், மேலும் அவரது அறிவாற்றலை வெளிப்படுத்திக் காட்டி மகிழ வைப்பதாகும். **நிறையழிதல்** என்னும் அதிகாரத்துள் வருவது இது:

- வேற்றூர் சென்று திரும்பிய தன் கணவனின் ஈடுபாட்டைப் பற்றித் தன் நெருங்கிய தோழியிடத்தில், அவன் வந்த மறுநாள் காலை, கூறுகிறாள்: 'என்ன செய்வது, தோழி! இத்தனை நாள்கள் என்னைத் தனிமையில் வாடவிட்டு விட்டுப் பிரிந்து சென்றவரிடம், அவர் மீண்டுவந்து என்னை நெருங்கிய நேற்றிராப் பொழுதில், சற்று விறைப்பாக இருந்து, அவரிடத்து என் பெண்மையைத் தருதற்கு விரும்பாதவள் போல், அவர் அணைப்பதைத் தவிர்த்துத்தான் நின்றேன்; ஆனால் என்னால் இயலவில்லையே! அவர் பல மாயங்கள் செய்யும் கள்வனைப் போல், என்னிடம் பணிவான மொழி என்னும் கருவியால், இறுகிக் கெட்டிப்பட்டிருந்த என் பெண்மை யுணர்வை உடைத்து, என் இன்பநலனைப் பருகிச் சுவைத்து விட்டாரே' - என்று.

**'பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்**
**பெண்மை உடைக்கும் படை'** - ***1258***

- இவ்வாறு, தன் நிறையழிவு நேர்ந்த கதையை மெல்லிய நாணவுணர்வுடன், அன்பும் அழகும் தோய்ந்த மொழிகளால் கூறுவது போலும் ஓர் இலக்கிய ஓவியத்தை, ஆசிரியர் வரைந்து பொலிவிப்பது, அவரின் நுண்ணிய மனநலத்தையும், திண்ணிய அறிவு நலத்தையும் நமக்குப் புலப்படுத்திக் காட்டுவதாகும்.

- என, இவ்விவ்வாறு, பணிவுணர்வு எவ்வெவ் வகையில், பல்வேறு மக்களுக்குப் பல்வேறிடங்களில் வேண்டுவதும் நன்மை செய்வதும் ஆகும் என்பதை, நமக்கு நூலாசிரியர் உற்றுணர்ந்து காட்டும் அமைவும் அழகுமே தனித்தனிச் சிறப்புடையவாகும், என்க.

2. **அவருள்ளும் செல்வர்க்கே செல்வம் தகைத்து** - மேற்கூறிய இவர்கள்

அனைவருள்ளும், செல்வம் உடையவர்கள் அடக்கத்துடன் பணிவாக நடந்து கொள்ளுதல், அவர்களுக்குச் சொற்செலவு (செல்வாக்கு) என்னும் பெருமை தருவதாகும்.

- பெரும்பாலும் அனைத்துச் செருக்கினும் செல்வத்தால் வரும் செருக்குப் பிறரால் மிகவும் வெறுக்கத் தக்கதாகும்.

- அவர்கள் செல்வமுடைமையால் இயல்பாகவே பிறர் அவர்கள்மேல் பொறாமையும் வெறுப்பும் கொண்டிருப்பர். அத்துடன் அவர்கள் செருக்குடன் நடந்தார்களாயின், அவ் வெறுப்பும் பொறாமையும் மேலும் மிகுந்து தோன்றிப் பகைமையையும் தோற்றுவிக்கும். அவர்களிடம் பணத்திற்காக உழைப்பவர்கள்கூட வேண்டா வெறுப்பாகத்தான் உழைப்பர்.

- இந்நிலையை மாற்றவும், இதற்குப் பகரமாக அவர்கள் மேல் பிறர் அன்பு கொள்ளவும் அவர்களது வாயுரைக்கு மதிப்புக் கொடுக்கவும் அவர்கள் விரும்பினால், அவர்கள் எல்லாரிடமும் பணிவாகவும் அன்பாகவும் நடந்து கொள்ளுதல் வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் சாய்காலும் (செல்வாக்கும்) பெருமையும் பெற முடியும்.

- இதில், 'செல்வம்' என்பதற்குப் பிற உரையாசிரியர்கள் 'சிறப்பு' - என்றும், 'நன்மை' என்றும், 'பாக்கியம்' என்றும், 'வேறொரு செல்வம்' என்றும், பலவாறாகப் பொருள் கொள்ளுவர். அவை அத்துணைச் சிறப்புடையன அல்ல.

- ஈண்டுப் 'பெருமை' என்பதும், அப்பெருமையும் சொற் செலவு - அஃதாவது சாய்கால் (செல்வாக்கு) என்பதால் கிடைத்தது என்பதுமே பொருந்தும் பொருளாம் என்றுணர்க.

3. இது, சென்ற குறளின்கண் வந்துற்ற 'தோற்றம்' என்பதற்குச் செல்வம், கல்வி, பதவி, அதிகாரம் முதலிய முன்னேற்றம் என்று பொருள் கொண்டதற்குப் பின் நிகழும் தன்மைகளையெல்லாம் விளக்கி, அவற்றின் ஏற்றத் தாழ்வுகளைப் பிரித்துக் கூறியதால், அதன் பின்னர் வைக்கப் பெற்றது என்க.

**கஉசு ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து. - 126**

பொருள்கோள் முறை :

**ஆமைபோல் ஒருமையுள் ஐந்து அடக்கல்**
**ஆற்றின் எழுமையும் ஏமாப்பு உடைத்து.**

**பொழிப்புரை :** ஆமையானது, தனக்கு ஏதாவது ஓர் இடர் நேரும் என்று உணரும் பொழுது, தனது உடல் இயக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் வகையில், தன் தலையையும், நான்கு கால்களையும் தன் முதுகினது பருத்த ஓட்டிற்குள் உள்ளிழுத்துக் கொண்டு, அடக்கித் தனக்குக் காப்பு ஏற்படுத்திக் கொள்வது போல், இல்லற வாழ்வினும், தன்னுடைய புறவுறுப்புகளாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து உணர்வுப் பொறிகளையும், அவ்வவற்றின் வழியே செல்ல விடாமல், அறிவால் அடக்கி யொழுகுதல் செய்வானாயின், அவ் வடங்குதல் தன்மை அவனது உயிரியக்கத்தினோடு பொருந்தி வலுப்பெற்று, அவ்வுயிர் மீண்டும் தொடர்ந்து எழுகின்ற பிறவிகள் தோறும் அவனுக்குக் காப்பாக நின்று உதவுதல் செய்யும்.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. இது, ஐம்புலன்களையும் அடக்கித் தன்வயப்படுத்தி, அறிவுவழி இயக்குவானுக்குற்ற பயன் கூறியது.

   - இதுவரை, மன அடக்கத்தையும் அறிவடக்கத்தையும் கூறியவர், இதில் அவற்றின் மூலச் செயற்பாட்டிற்குரிய பொறிகள் கூடிய உடலினது அடக்கத்தைக் கூறுவார்.

2. **ஆமைபோல் ஒருமையுள் ஐந்து அடக்கல் ஆற்றின்** - ஆமை யென்னும் நீர்வாழ் உயிரி, தனக்கு பிற உயிரிகளால் ஏதாவது ஓர் இடர் நேரும் என்று உணரும் பொழுது, தனது உடலியக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு ஒரு கல்லைப் போல் கிடந்து தப்பித்துக் கொள்ளும் வகையில், தன் தலையையும், நான்கு கால்களையும், தன் முதுகினது பருத்த ஓட்டிற்குள் உள்ளிழுத்துக் கொண்டு, அடக்கித் தனக்குக் காப்பு ஏற்படுத்திக் கொள்வது போல், இல்லற வாழ்வினனும், தன் மனத்தைக் கவர்ந்து உயிரை அலைக்கழிக்கும் நிகழ்வுகளின்று தன்னைக் காத்துக்கொள்ளத் தன்னுடைய புறவுறுப்புகளாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து உணர்வுப் பொறிகளையும், அவ்வவற்றின் வழியே செல்லவிடாமல், அறிவால் அடக்கி யொழுகுதல் செய்வானாயின்.

   - ஐந்து பொறிகளையும் அறிவான் அடக்கி யொழுகுதலை முன்னரே,

   **'உரனென்னும் தோட்டியான் ஓர்ஐந்தும் காப்பான்** - (24)

   என்று கூறினார்.

   **'சென்ற இடத்தால் செலவிடாது தீதுஒரீஇ**
   **நன்றின்பால் உய்ப்பது அறிவு'** - (422)

   என்று **அறிவுடைமை** அதிகாரத்தும் கூறுவார்.

   'ஐந்தடக்கல் ஆற்றின்' என்றது. ஐந்து பொறிகளையும் அடக்கி யொழுகுதல்.

- அடக்கி யொழுகுதலாவது, தேவையான இடத்துக் கொண்டு செலுத்தியும், தேவையல்லாத இடத்துத் தடுத்து நிறுத்தியும் செல்லும் குதிரைமேல் அமர்ந்து ஊர்வான் போல் என்க.

- ஆமை - காப்புடைய உயிரி.

ஏமம் - காப்பு - ஏமை - காப்புடையது.

ஏமை - ஆமை.

யானை ஆனையானது போல் என்க.

3. **எழுமையும் ஏமாப்பு உடைத்து** - எழுகின்ற பிறவிதோறும் உயிர்க்குக் காப்பாக அமையும் தன்மை உடையது.

'எழுமை' என்பதற்கு விரிவான விளக்கம் குறள் 62-இல் கூறப்பெற்றது. ஆண்டுக் காண்க.

ஏமம் + யாப்பு - ஏமாப்பு. யாப்பு - கட்டுவது; அமைவது.

- காப்பாக அமைந்தது.

மார் + யாப்பு - மாராப்பு ஆனதுபோல்.

- எழுமையும் என்பதற்குப் பாவாணரையும் உள்ளிட்டுப் பழைய உரையாசிரியர் அனைவரும், ஏழு பிறப்பு என்றே பொருள் கொள்வது பொருந்தாது என்பதற்கான விரிவு 62-ஆம் குறள் விளக்கத்திலேயே கூறப்பெற்றிருப்பது காண்க.

- அதற்கு இற்றைப் புலவர் ஓரிருவர் 'எக்காலத்திற்கும்' என்று பொருள் தருவதும், நூலாசிரியரின் பிறவிக் கொள்கையை மறைத்தும் மறுத்தும் கூறிய திரிபுரையே என்க. தமக்கு ஒப்பாத கருத்தை ஆசிரியர் மேல் ஏற்றிக் கூறுவது அறனுமாகாது, என்க.

4. இஃது, ஐம்பொறிகள் அடங்கிய மெய்யடக்கம் கூறியதால், முன்னவற்றின் பின் வைக்கப்பெற்றது.

O

## கஉஎ. யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
## சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. - 127

பொருள்கோள் முறை :

**யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்**

**சொல்லிழுக்குப் பட்டுச் சோகாப்பர்.**

பொழிப்புரை : ஐம்பொறிகளையும் ஒருவன் ஒருங்கே அடக்கி அல்வழியிற் செல்லாதவாறு காத்துக் கொள்ளவில்லையாயினும், அவற்றுள் ஒன்றான வாயுறுப்பாகிய நாவினை மட்டுமாகிலும் அவன் அடக்கிக் காத்துக்

கொள்வது நன்மை தரும். அவ்வாறு அவன் அதைக் காக்கத் தவறினால், பலவகையான இழிசொற்களுக்கும் பழிகூறலுக்கும் ஆளாகி, இறுதியில் குற்றஞ் சுமத்தப்பட்டுக் கடுஞ்சிறையும் காக்கவேண்டி வரும்.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. **யாகாவார் ஆயினும் நா காக்க** - ஐம்பொறிகளையும் ஒருவன் ஒருங்கே அடக்கி, அல்வழியிற் செல்லாதவாறு காத்துக் கொள்ள வில்லையாயினும், அவற்றுள் ஒன்றான வாயுறுப்பாகிய நாவினை மட்டுமாகிலும் அவன் அடக்கிக் காத்துக் கொள்வது நன்மை தரும்.

யா - யாவற்றையும், அவற்றை என்னும் சுட்டும், முற்றும்மையும் தொக்கன.

நா - நாவு என்பதன் கடைக்குறை.

- மாவு, மா என்றும் சாவு, சா என்றும் நோவு, நோ என்றும் நின்று பொருள் தருவது போல்,

- நாவுதல் - ஒலியெழுப்புதல் - கொழித்தல்.

காத்தல் - அடக்கி, அல்வழியிற் செல்லாதவாறு காத்தல்.

- **'காக்கப் படுக்கும் இந்திரியம் ஐந்தினும்**

**நாக்கல்ல தில்லை நணிபேணு மாறே' - வளையாபதி**

- என்றார் பிறரும்.

2. **காவாக்கால்** - காக்காதவிடத்து, அவ்வாறு அதை அவன் காக்கத் தவறினால்.

- கால் - இடப்பொருள் குறிக்கும் ஒரு வினையெச்ச ஈறு.

3. **சொல் இழுக்குப் பட்டுச் சோ காப்பர்** - இழிசொற்களுக்கும் பழி கூறலுக்கும் ஆளாகி, இறுதியில் குற்றம் சுமத்தப்பட்டுக் கடுஞ் சிறையும் காக்க வேண்டி வரும்.

- ஐம்பொறிகளுள்,

- கண், தவறானவற்றைக் கண்டாலும்,
- காது, தவறானவற்றைக் கேட்டாலும்,
- மூக்கு, தவறானவற்றை நுகர்ந்தாலும்,
- மெய், தவறானவற்றைத் துய்த்தாலும்,

- அக் குற்றங்கள் தம்மளவில் மட்டும் தீங்கு செய்வதைப் பிறர்க்குத் தெரியாதவாறு மறைத்து விடலாம்.

ஆனால் நாக்கை அடக்க இயலாதவன் குற்றம் பிறரால் அறியப்பட்டுத் தண்டனைக்குள்ளாவது வெளிப்படையாகலான், அவன் அதனால் பலவகையான இழிசொற்களுக்கும், பழி கூறலுக்கும் ஆளாகி,

இறுதியில் கடுஞ்சிறையும் காக்க வேண்டி வரும் என்றார்.

- **சொல்லிழுக்குப் படுதல்** - இழிசொற்களுக்கும் பழிகூறலுக்கும் ஆளாதல்.

- பேச்சுக்குப் பேச்சும், ஏச்சுக்கு ஏச்சும், இகழ்வுக்கு இகழ்வும், இழிவுக்கு இழிவும் தாழ்ச்சிக்குத் தாழ்வும் எதிராளியிடமிருந்தும் வருமாகையால், சொல்லிழுக்குப் படுதல் இயல்பாயிற்று.

- இனி, பேசிய பேச்சுகளை எதிராளி பிறரிடத்து மாற்றியும் ஏற்றியும், திரித்தும் வலித்தும் கூறிப் பரப்புவது பழியாயிற்று.

- **சோ காப்பர்** - கடுஞ்சிறை காப்பர்.

- கடுஞ்சிறையுள் அடைக்கப்பட்டு, எப்பொழுது வெளியில் விடுவரோ என்று காத்துக் கிடப்பர்.

- காத்துக் கிடத்தல் - எதிர்பார்த்து இருத்தல்.

- பொழுது காத்தான் - பொழுது எப்பொழுது போகுமோ அல்லது வருமோ என்று காத்துக் கிடந்தான் உலக வழக்கு.

- 'சோகாப்பர்' என்பதற்கு உரையாசிரியர் பலரும் பலவாறாகப் பொருள் கூறுவர்.

- அவர்களுள் மணக்குடவர் 'சோகிப்பார்' என்றும், பரிதியார் 'துன்பம் வரும்' என்றும், பரிமேலழகர், 'அல்லாப்பர்', செம்மாப்பர் என்பன போலச் சோகாப்பர் என்பது ஒரு சொல்' எனக்கூறி, 'துன்புறுவர்' என்றுமே பொருள் கூறுவர்.

- நாவினால் விளையும் கொடுமையை இவ்விடத்துச் சுட்டியவர், அதனால் வரும் நன்மையை இதற்கு எதிர்மறையாகச் **'சொல்வன்மை'** என்னும் அதிகாரத்துள் ஒரு கருத்தைக் கூறுவார்.

**'நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்**
**யாநலத்(து) உள்ளதூஉம் அன்று'** - **641**

- என்பது, அது.

- பரிமேலழகர் பொருளுக்கு விளக்கம் கூறவந்த புலவர் கோ. வடிவேலு அவர்கள், 'சோகாப்பர் என்பதில் துன்பம் என்னும் பொருளையுணர்த்தும் 'சோகம்' என்னும் பண்புப் பெயரின் விகாரமாகிய 'சோகாப்பு' என்பது பகுதி; அல்லாப்பர், செம்மாப்பர் என்பனவற்றில் அல்லாப்பு செம்மாப்பு என்பன பகுதிகள்' என்றும் கூறிப் பரிமேலழகரை வலுப்படுத்துவர்.

- ஆனால், இவற்றுக்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைத்துச் சொல்லாய்வுத் திறன் மிக்க மொழிஞாயிறு பாவாணர், சோகாப்பர் என்பதற்குக் 'கடுஞ்சிறை காப்பர்' என்று பொருள் கூறி, அதற்கான விளக்கத்தைக் கீழ்வருமாறு விரிவாக எடுத்துரைப்பது கண்டு ஏற்கத்தக்கது என்க.

"சோ என்பது அரிய பொறிகள் ஏற்றப்பட்ட சிறந்த **அரண். அஃது இராவணின் இலங்காபுரியிலும் வாணனின் சோணிதபுரத்திலும் இருந்தது.**

**'தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து**
**சோவரணும் போய்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த**
**சேவகன்'** - சிலப்.ஆய்ச்சியர் குரவை.

**'ஆனிரை தாங்கிய குன்றெடுத்தான் சோவின்**
**அருமை யழித்த மகன்'** - நான்மணி, 2.

சோ என்னும் சொல்லைப் பிற்காலத்தார் பொதுவான மதிற் பெயராகவும் ஆண்டு விட்டனர்.

**'சோமேல் இருந்தொரு கோளூ வெனின்'**

(சி.சி. மறைஞான தேசிகர் உரை).

காத்தல் என்பது காத்திருத்தல் அல்லது நிலையில்லாது தங்கியிருத்தல். Wait என்னும் ஆங்கிலச் சொற்கும் tarry, stay என்று ஆக்கசுபோர்டு ஆங்கிலச் சிற்றகர முதலி பொருள் கூறியிருத்தல் காண்க.

சோகா என்னும் சொல்லை வடசொல் தொடர்பினதாகக் காட்டல் வேண்டி, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகரமுதலி, அதற்குச் சோகம்யா என்று மூலங் குறித்திருப்பது பொருந்தாது. யாத்தல் கட்டுதல், அரை யாப்பு, கழல்யாப்பு, மார்யாப்பு (மாராப்பு), விதலையாப்பு முதலிய கூட்டுச் சொற்கள்போல் சோக(ம்) யாப்பு என்றொரு சொல்லின்மையும், அவ் விருபிறப்பியில் (Hybrid) யாப்பு என்னும் சொல் இயற்கையாகப் பொருந்தாமையும் நோக்குக.

இனி, சோ என்னும் சொல்லையும், வாணன் தலைநகர்ப் பெயரான சோணிதபுரம் என்பதன் சிதைவாக அவ் வகரமுதலி காட்டியிருப்பதும் குறும்புத்தனமாம். வாணனுக்கு முந்தின இராவணன் காலத்திலேயே சோவரண் இருந்தமையை நோக்குக"

- **திருக்குறள் தமிழ்மரபுரை.**

- எனவே 'சோகாப்பர்' என்பதற்குத் 'துன்புறுவர்' என்று பொருள் கொள்வது சொல் வரலாறும், மாந்த வரலாறும் அறியாதவர் கூற்றாம் என்று விடுக்க.

4. இது, பொதுவாக அனைவர்க்கும் இருக்க வேண்டிய நாவடக்கத்தை முகாமையாகக் குறித்தலாலும், முன்னைய குறளில் கூறப்பெற்ற ஐம்புலன் அடக்கத்தில் ஒருபுலன் ஆகிய நாப்புலன் (வாய்ப்புலன்) அடக்கத்தை உலகியலில் பெரிதாகக் கருத வேண்டியிருத்தலாலும், அதன் பின்னர் இதை வைக்க வேண்டியதாயிற்றென்க.

## கஉஅ. ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின் நன்றாகா(து) ஆகி விடும். - 128

பொருள்கோள் முறை :

**பொருள் பயன் உண்டாயின், ஒன்றானும்**
**தீச்சொல், நன்றாகாது ஆகி விடும்.**

*(அல்லது)*

**ஒன்றானும் தீச்சொல் உண்டாயின் பொருட்பயன்**
**நன்றாகா(து) ஆகி விடும்.**

பொழிப்புரை : *சொல்லப்படுகின்ற பொருள் பயனுடையதாயிருப்பினும், (அதை எடுத்துச் சொல்லுகின்ற சொற்களில்) ஒரே ஒரு சொல் தீச் சொல் உண்டெனினும், அப்பொருள் முழுவதும் நல்ல பயனைத் தராததாகிவிடும்.*

சில விளக்கக் குறிப்புகள் :

1. **பொருள்பயன் உண்டாயின்** - *கூறப்படுகின்ற பொருள் பயனுடையதாயிருப்பினும்.*

   **உண்டாயின்** - *உண்டாயினும், எச்சவும்மை தொக்கி நின்றது.*

2. **ஒன்றானும் தீச்சொல்** - *அவ்வாறு கூறப்பெறுகின்ற சொற்களில் ஒரே ஒரு சொல் தீய சொல்லாக இருப்பினும்.*

   *- உண்டாயின் என்னும் மேல் கருத்து முடிபை இதற்கும் பொருத்திக் கூறலாம்.*

   *'ஒன்றானும் தீச்சொல் உண்டாயின்' என்று கொண்டு கூட்டிச் சொல்லினும் இதே பொருள் கிடைக்கும் என்க.*

3. **நன்றாகாது ஆகி விடும்** - *அப்பொருள் முழுவதும் நல்ல பயனைத் தராததாகி விடும்.*

   *ஒருவர் சொல்லுகின்ற கருத்துகள் பயனுடையனவாக இருப்பினும், அவர் அவற்றைக் கூறுகின்ற சொற்களும் நல்ல சொற்களிலேயே இருக்க வேண்டும். அவ்வாறில்லாமல் அவர் பயன்படுத்துகின்ற சொற்களில் ஒரே ஒரு சொல் தீய சொல்லாக இருப்பினும், குடம் பாலில் ஒருதுளி நஞ்சு கலந்ததைப் போலும், வாய் நிறையக் கொட்டிய நிலக்கடலையை மெல்லும் பொழுது ஒரே ஓர் ஊசைக் கடலை (சொத்தைக் கடலை) இருந்துவிடின், வாய்க் கடலையை முற்றும் துப்பவேண்டி ஆவதுபோலும், அத்தனைக் கருத்துகளையும் அது கெடுத்துவிடும் என்க.*

4. *இக்குறளுக்கு உரையாசிரியர் பலரும் வேறுவேறு வகையாகக் கொண்டு கூட்டிப் பொருள் காண்பர்.*

- மணக்குடவர், 'ஒருசொல்லேயாயினும் கேட்டாருக்கு இனிதாயிருந்து தீய சொல்லின் பொருளைப் பயக்குமாயின் நன்மை யாகாததாகி விடும்' என்பார்.

- அவர் 'பொருட்பயன்' என்பதைத் தீய சொல்லுக்குப் பொருத்திக் கூறுவதால், அப்பொருள் கொள்ள நேர்ந்தது, அது பொருந்துவதன்று.

- பரிமேலழகர், 'தீயவாகிய சொற்களின் பொருள்களால் பிறர்க்கு வருந்துன்பம் ஒன்றாயினும், ஒருவன் பக்கல் உண்டாவதாயின் அவனுக்குப் பிற அறங்களால் உண்டான நன்மை தீதாய் விடும்' என்பார்.

- அவர் 'பொருட்பயன்' என்பதற்குத் 'தீய சொற்களால் வரும் துன்பம் ஒன்றாயினும்' என்று கூறுவது, 'பயன்' என்னும் சொல்லுக்குப் மாறுபொருள் கொள்வதாகின்றது.

- 'பயன்' என்னும் சொல்லுக்கு 'விளைவு' என்னும் பொருள் காண்பதும், 'நன்று ஆகாது ஆகி விடும்' என்பதற்குப், 'பிற அறங்களால் உண்டான நன்மை தீதாய் விடும்' என்று வெளியிலிருந்து கருத்தை வருவித்துச் சுற்றி வளைத்துப் பொருள் கொளவதும், அவ்வாறு கூறினும் அது பொருந்துவதாக இல்லாமல் இருப்பதும் கவனிக்கத்தக்கன.

- இனி, பாவாணரும், பரிமேலழகரை யொட்டியே பொருள் குழப்பம் செய்குவர்.

5. இவர்கள் இக் குழப்பப் பொருளும் வேறுவேறு பிழையான பொருளும் கூறுவதற்குக் கரணியம், இக்குறளின்கண் நூலாசிரியர் தளைப்பிழை நேராவண்ணம் முதலடி ஈற்றுச் சீரை ஆங்குப் பெய்து கூறியதே என்க.

'ஒன்றானாலும் தீச்சொல் உளதாயின் பொருட்பயன் நன்றாகாதாகி விடும்'

என்று இக்குறள் அமைந்திருப்பின், பொருள் தெளிவாகி விடும். ஆனால், இவ்வாறமைப்பின் 'உளதாயின் பொருட்பயன்' என்னும் வெண்சீர் வெண்டளை கெட்டுக் காய் முன் நிரை வந்து, யாப்புப் பிழைக்கும் என்றலாலும், வேறு சொல் கொண்டு ஆண்டு அப்பொருளைத் தளைப் பிழையின்றி அமைக்கலாகாது என்பதாலும், ஆசிரியர் அச்சொற்களை முன் பின்னாக அமைத்தார் என்க. அவ்வாறு அமைப்பினும் பொருள் பிழையாதிருப்பதும் கவனிக்கத் தக்கது. கொண்டுகூட்டுப் பொருள் கோள் முறை இத்தகைய இடங்கட்கே பொருந்துவதாகும்.

இவ்வாறு கொண்டுகூட்டுப் பொருள்கோள் முறையில் உள்ள சில குறள்கள் வருமாறு :

1. செய்யுள் அமைப்பு :

**'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவனடி சேரா தார்.'** **-10**

கொண்டுகூட்டுப் பொருள் கோள் முறை :

**'இறைவனடி (சேர்ந்தார்) பிறவிப் பெருங்கடல்**
**நீந்துவர் சேராதார் நீந்தார்'.**

- இதில், 'சேர்ந்தார்' என்னும் ஒரு புதுச்சொல்லையும் இணைக்க வேண்டியுள்ளது. இல்லெனில் பொருள் வராது. இது, வருவித்துக் கொண்டு கூட்டியது.
  - இதைச் 'சொல்லெச்சம்' என்பார் பரிமேலழகர்.
- இவ்வாறு செய்யுள் அமைப்பது பிழையில்லை. எடுத்துக் கொண்ட கருத்தைக் கூறப் போதுமான சொற்கள் செய்யுள் கட்டுக்குள் அமையவில்லையாயின், இவ்வாறு வருவித்துக் கொண்டு கூட்டிப் பொருள்கோள் முறையில், மிகச் சிறந்த புலவர்கள் அமைப்பது இழுக்கோ, சிறப்பின்மையோ அன்று. ஆனால், பொருட்சிறப்பு முகாமையானதாம்.

2. செய்யுள் அமைப்பு :

**'பெற்றான் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்**
**புத்தேளிர் வாழும் உலகு'.** **- 58**

கொண்டுகூட்டுப் பொருள்கோள் முறை :

**'பெண்டிர் பெற்றான் பெறின் புத்தேளிர் வாழும்**
**உலகு பெருஞ்சிறப்புப் பெறுவர்'.**

3. செய்யுள் அமைப்பு :

**'உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊன் உண்ண**
**அண்ணாத்தல் செய்யா(து) அளறு.'** **- 255**

கொண்டுகூட்டுப் பொருள்கோள் முறை :

**'உயிர்நிலை ஊன் உண்ணாமை உள்ளது உண்ண**
**அளறு அண்ணாத்தல் செய்யாது'.**

4. செய்யுள் அமைப்பு :

**'எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்**
**பண்புடைமை என்னும் வழக்கு'** **- 991**

கொண்டுகூட்டுப் பொருள்கோள் முறை :

**'யார்மாட்டும் எண்பதத்தால் பண்புடைமை என்னும்**
**வழக்கு எய்தல் எளிது என்ப'.**

- தீச் சொல் பொருட்பயன் என்னும் சொற்களை வைப்பு முறையிலேயே பொருள் கொள்வதால் நேர்ந்த பிழைகள் தெளிவானவை, என்னை?

- தீச் சொல் பொருட்பயன் உடையதாக இருத்தல் இயலாது. அது பொருட்பயன் தருவதாக இருப்பின் அது தீச்சொல்லும் ஆகாதாகலின் என்க.

- இதற்குப் பரிமேலழகர் அமைவு கூறுகையில், தீய சொல்லாவன: தீங்கு பயக்கும் பொய், குறளை, கடுஞ்சொல் என்பன' என்பார்.

- பொய், குறளை, கடுஞ்சொல் தீச் சொற்கள் ஆகா. தீய சொற்களும் ஆகா.

இங்கு, தீச்சொல் என்பது வேறு, தீய சொற்கள் என்பன வேறு.

தீச் சொல் - சொல்லே தீமையானது.

தீய சொல் - தீயவை சொல்லுதல்.

- சொற்களால் தீமை வருவது.

- **ஒன்றானும் தீச்சொல்** - என்று ஒருமைப்படுத்திச் சொல்வதன் நோக்கமே, அவை தீயவை தரும் சொற்களல்ல, அது தீச் சொல் - அஃதாவது, ஒரு சொல்லே என்று நன்கு புலப்படல் வேண்டியே என்க.

- தீய சொற்களாவன - இழுக்குச் சொல், இழிவுச் சொல், இடக்கர்ச் சொல், தீயவற்றை ஊக்குவிக்கும் சொல், மனவுணர்வை அறிவுணர்வைக் கெடுக்கும் சொல், சுடுசொல் முதலியன.

- **எடுத்துக்காட்டுகள் :**

1. **இழுக்குச் சொற்கள் :**

முட்டாள், மடயன், பேடி முதலியன.

2. **இழிவுச் சொற்கள் :**

தேவடியாள், பெட்டையன், நக்கு, பிடுங்கு முதலியன.

3. **இடக்கர்ச் சொற்கள் : (அவையல் கிளவி.)**

பீநாறி, மயிர், பெண்குறி, ஆண்குறிகளை வெளிப்படையாகச் சுட்டும் சொற்கள்.

4. **தீயவற்றை ஊக்குவிக்கும் சொற்கள் :**

கூட்டிக்கொடு, (கள்)குடி, கற்பழி முதலியன.

5. **மனவுணர்வைக் கெடுக்கும் சொற்கள் :**

கொல்லு, வெட்டு, கலாம்விளை முதலியன.

6. **அறிவுணர்வைக் கெடுக்கும் சொற்கள் :**

திருடு, கொள்ளையிடு, சுடு, சூறையிடு, தீயிடு, வழிப்பறி, வெட்டிப்புதை

முதலியன.

7. **சுடுசொற்கள் :**

ஒழுக்கமிலி, முல்லைமாறி, நேர்மையிலன், திருடன், செத்தொழி - முதலியன.

6. ஆசிரியர், **'சொல்வன்மை'** அதிகாரத்தில்,

**'ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்**
**காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு'** - **642**

- என்பதும் இதையொட்டியதே.

முன்னைய குறளில் உள்ள நாவடக்கம் கொள்ளாமல் போவதால் வரும் கேடுகளை இதிற் கூறியதால் அதன் பின்னர் இது வைக்கப்பெற்றது.

## கஉகூ. தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு. 129

**பொருள்கோள் முறை :**

**தீயினால் சுட்டபுண் உள்ஆறும் நாவினால்**
**சுட்ட வடு ஆறாதே.**

**பொழிப்புரை :** தீயினால் சுடப்பட்ட புண் உள்புறமாக ஆறி, வெளிப்புறத்து வடுவாகி நிற்கும்; நாவினால் சுடுசொல் கூறியதால் ஏற்பட்ட மனப்புண், புறத்தே ஆறி உள்ளத்து என்றும் வடுவாகி நிற்கும்.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. பொழிப்புரை, பரிதியாரின் உரையைத் தழுவியது, அது, சிறந்த தாகலின்.

2. **தீயினால் சுட்டபுண் உள் ஆறும்** - தீயினால் சுடப்பட்ட புண் உள்புறமாக ஆறி, வெளிப்புறத்து வடுவாகி நிற்கும்.

- சுடப்பட்ட புண்ணைச் சுட்டபுண் என்று, செயப்பாட்டு வினையைச் செய்வினையில் கூறினார்.

- தீயினால் சுடுவது, நெருப்பினால் சுடுவதோ கொள்ளியாற் சுடுவதோ அன்று. எரிதீயாற் சுடுவதாம்.

3. **நாவினால் சுட்ட வடு ஆறாதே** - நாவினால் சுடுசொல் கூறியதால் ஏற்பட்ட மனப்புண், புறத்தே ஆறி உள்ளத்து என்றும் வடுவாகி நிற்கும்.

- நாவினால் சுடுவது, பழிகூறுவது, சுடுசொல் கூறுவது, இழிசொல் கூறுவது, இடர்க்கர்ச் சொல் கூறுவது, தீயசொல் கூறுவது முதலியன.

- 'ஆறிப் போவதால் தீயினாற் சுட்டதனைப் 'புண்' என்றும், ஆறாது கிடத்தலால் நாவினால் சுட்டதனை 'வடு என்றும் கூறினார்' என்று விளக்கம் தருவர், பரிமேலழகர்.

- இனி, 'வடு' என்னும் சொல், தழும்பை மட்டுமன்றிப் பழியையும் குறித்தலால் *(549, 1079)* நாவினால் சுட்டவன்பால் நிற்கும் பழி மறையாது நிற்றலையும், ஒரு சார்பில், இது குறிக்கும், என்க.

- நாவினால் சுடுவது, புறத்தே ஆறுதல், செவியிற் பட்டு மறைதல்.

- சொல் சுட்டது, தம் மகன் அம்பிகாபதியின் தலையை வாங்கிய குலோத்துங்க சோழனைக் கம்பர்,

**- என் நெஞ்சிற்**

**'பட்டதடா நின்கொடுமை சோழாகேள் நின்குலத்தைச்**

**சுட்டதடா என்வாயிற் சொல்'**

- என்று சாவித்ததும் ஆம்.

4. இது, காவாத நாவினால் கூறப்பெற்ற தீச்சொல் கூறப் பெற்றவன் நெஞ்சில் ஆறாத வடுவாயும், கூறியவன் பாங்கில் மறையாத பழியாயும் நிற்றலைக் குறித்தலால், அவற்றின் பின் வைக்கப் பெற்றது.

## கஙு0. கதம்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து. - 130

பொருள்கோள் முறை :

**கதம் காத்துக் கற்று அடங்கல் ஆற்றுவான்**

**ஆற்றின் நுழைந்து அறம் செவ்வி பார்த்திருக்கும்.**

பொழிப்புரை : கடுஞ்சினத்தை அடக்கிக் காத்துக் கற்பவை கற்று அமைந்து நின்று அறத்தைக் கடைப்பிடிப்பவனது வழிக்கண் நின்று, பொதுமையறத்தின் பயன் அவனை அடையக் காலம் பார்த்திருக்கும்.

1. **கதம் காத்து** - கடுஞ்சினத்தை அடக்கிக் காத்து.

- கதம் - கனன்று வரும் சினம்.

- காத்தல் - அடக்கிக் காத்தல்.

2. **கற்று அடங்கல் ஆற்றுவான்** - கற்பவை கற்று அமைந்து நின்று அறத்தைக் கடைப்பிடிப்பவனது.

ஆற்றுதல் - அறத்தைக் கடைப்பிடித்தல்.

- கற்றலுக்கு முந்து நிலை சினத்தை அடக்கிக் காத்தலால் அதனை முன் வைத்துக் கூறினார்.

3. **ஆற்றின் நுழைந்து** - அவன் வழிக்கண் நின்று.

4. அறம் செவ்வி பார்த்திருக்கும் பொதுமையறத்தின் பயன் அவனை அடையக் காலம் பார்த்திருக்கும்.

- அறம் பார்த்திருக்கும் என்றது அறப்பயன் காலத்தால் வந்து சேரும் என்பதை உருவகித்துக் கூறியது.

- இதன் விளக்க விரிவை 77-ஆம் குறளின் விளக்கக் குறிப்பில் காண்க.

- செவ்வி - பொருந்திய காலம்.

**'மலரினும் மெல்லிது காமம் சிலரதன்**
**செவ்வி தலைப்படு வார்.'** - 1289

- என்னும் குறளுரையில் அதன் செவ்விய பொருளைக் காண்க.

- அறப்பயன் காலத்தால் வருவது. அதனை உணர்ந்த பலரும் வந்து உதவுவது.

- மற்று, பரிமேலழகரும், பரிதியாரும் பாவாணரும் உரைத்தது போல், அறக் கடவுளோ, தர்மதேவதையோ அறத்தெய்வமோ அன்று.

- உருவகம் உண்மை அன்று.

- சிலர் '**கற்றுக் கதம்காத்து**' என்று நிரை மாற்றிப் பொருள் கூறுவது நிகழ்வுப் பொருத்தமன்று.

5. இஃது, அடக்கமுடையவரே கற்றற்கும், அறஞ்செய்வதற்கும் உரியவர் என்பதும், அவர்க்கே அறத்தால் விளையும் பயன் கிடைக்கும் என்பதும் ஆகலின் முன்னதன் பின்னும், அதிகார ஈற்றிலும் வைத்துப் பொருள் நிறைவு செய்தது.

# அ-2 இல்லறவியல்

## அ-2-10 ஒழுக்கமுடைமை -14

### அதிகார முன்னுரை

**'ஒழுக்கு'** என்னும் பெயரடியாகத் தோன்றிய சொல் ஒழுக்கம். ஒழுக்கு - நீர் ஒழுக்கு.

நீர் ஒழுகும் பொழுது, அது துளி துளியாகவும், நிலத்தை நோக்கி நேராகவும் ஒழுகுவதால், திரட்சிப் பண்பும் நேர்மையுணர்வும் ஒழுக்கம் எனப் பெற்றன. துளி திரளும் பொழுது அளவும் அடிப்படையானது. எனவே அளவாக அடங்கி நிற்றலும் திரண்ட குணங்களும் நேர்மையும் ஒழுக்கத்தின் அடிப்படைப் பண்புகளாயின. மேலும் நீரினது ஒழுக்கு என்னும் பொழுது, அதன் சாயலும் (பண்பும்) ஒழுக்கப் பண்பாயிற்று.

நீர்மை - நீரினது தன்மை.

நீர் நிறமற்றது; சுவையற்றது; வடிவமற்றது. எடுக்கப் பெறுகின்ற கலத்தினது வடிவமும், கலக்கப் பெறுகின்ற பொருளினது சுவையும், வேட்கையைத் தணிக்கும் குணமும் நீர் கொண்டிருத்தல் போல், பழகுவார்க்குத் தக்கவாறு, அவர்க்குற்ற பண்பு நலன்களுக்கு ஒத்தவாறு, தாமும் இயங்கி, அவரது உள்ளத்தின் உணர்வு வேட்கையைத் தணிக்கும் அன்புணர்வைப் பொழிதலால், நீர்மை அன்புப் பண்பையும் குறித்த ஒழுக்கமாயிற்று.

***ரினும் இனிய சாயல் பாரி'*** - புறம்:105:7

- என்றார் கபிலர்.

**'பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்'**

- கலி:133:6

- என்றார் நல்லந்துவனார்.

**பாடறிந்து ஒழுகுதல் - பழகுவார் தன்மைக்குத் தக நடத்தல்.**

**'பயனும் பண்பும் பாடறிந்து ஒழுகலும்'** - நற்:160

எனவே, ஒழுக்கம் என்பது, நீர்மை, அளவான அடக்கம், திரண்ட குணநலம், நேர்மை, அன்புணர்வு, பிறர் தன்மைக்குத் தக நடத்தல் - முதலிய பண்புகள் கொண்டு ஒழுகுதலாயிற்று.

ஒழுக்கம் என்பதற்குப் 'பிறர் எவ்வாறு நம்மிடம் நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோமோ, அப்படியே பிறரிடம் நாம் நடந்து கொள்வது' என்று எளிமையாக விளக்கம் கூறினார் இசுலாமிய நெறி நிறுவனர் முகமது நபிகள் அவர்கள்

ஒருவன் ஒழுக்கமாக நடக்க வேண்டுவது, உலக ஒப்புரவின் தேவை. உலகச் சமநிலை அப்பொழுதுதான் எய்துதற் கியலும். பொருளியல் சமவுடைமைக்கும் அஃதாவது நிகரமை (Socialism)க்கும் பொதுவுடைமைக்கும் (Communism)க்கும் தனிமாந்தச் சமநிலை (Personal Equality)க்கு அடிப்படையாகும். தனி மாந்தச் சமநிலை ஒழுக்கத்தின்பாற் பட்டது.

அறிவியலும், உரிமையியலும், ஆட்சியியலும் மிகு வளர்ச்சி பெற்ற இக்காலத்தில் ஒழுக்கம் கருத்தளவில் எத்துணைச் சிறப்பாகக் கூறப் பெறினும், குமுகாயத்தில் பொருள் சமநிலை (Economical Equality)யும், சமவுரிமைப் பாங்கும் (Fairness of equal rights), ஆட்சியியல் சரிநிலையும் (Rights of political Unling) இருந்தால்தான், தனிமாந்த ஒழுக்கம் நிலைபெறுவதாகும். இல்லெனில் சிதைவுறவே செய்யும்.

**'ஒழுக்கம் பசியின்மை ஊன்றுதொழில் கல்வி**
**இழுக்கம் இவையிறப்ப எய்தும் வழுக்கலிலா**
**உள்ளத் தொழுக்கம் உயர்வொழுக்கம் ஆங்கதுவும்**
**கள்ளத் திடறும்அக் கால்'** - உலகியல் நூறு.

எனவே, அறவியல் கடைப்பிடியாகிய ஒழுக்கவுணர்வு, அறிவியல், அரசியல், உரிமையியல் தாக்கங்களால் சிதைவுற்றுத் தோன்றும் பொழுது, குமுகாயவியல், அறவியல் அறிஞர்கள் தனிமாந்த ஒழுக்கத்தை

நிலைநிறுத்தும் கட்டுப்பாடுடையவர்களாகச் செயல்படுகிறார்கள்.

**'அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை**
**நாடி இனிய சொலின்'** - 96

- என்பது ஆசிரியர் கருத்து.

நல்லவை நாடி இனியது சொல்வது அறிஞர்களுக்கு உரியது. எனவே அறிஞர் கடமையாக இதைச் சுட்டுவார். மதவியலாரின் படிற்றொழுக்கம் (மறைவின் இழுக்கு(Hypocrisy) ஆசிரியரால் மிகுவாகக் கண்டிக்கப் பெறுகிறது. (காண்க 'கூடாவொழுக்கம்' அதிகாரம்.)

வாழ்வியலில் தாழ்ச்சியுறும் பொழுது, பிறர் யாவரினும் ஒழுக்கமுடையார் வாய்ச்சொல்லையே பின்பற்றி நடக்கச் சொல்பவராய்,

**'இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே**
**ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்'** - 415

- என்னும் ஆசிரியர், ஒழுக்கம் உடையவரையே மாந்தச் சிறப்பினராகக் கருதும் கருத்து கவனிக்கத்தக்கது.

உலக நிலைகள் எவ்வளவு கீழ்மையடைந்து போயினும் குடிமை நலம் (Civism) விரும்புகிறவர்கள், தங்கள் ஒழுக்கக் கடைப்பிடிகளிலிருந்து தாழ்ந்து போகமாட்டார்கள் என்பதை ஆசிரியர் 'குடிமை' அதிகாரத்துள் கூறுதல் காண்க.

**'ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்**
**இழுக்கார் குடிப்பிறந் தார்'** - 952

இனி, 'சான்றாண்மை' அதிகாரத்துள்,

**'ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு**
**ஆழி எனப்படு வார்'** - 989

என்பதும் அக்கருத்தையே மேலும் உறுதிப்படுத்தும்.

ஆங்கிலத்தில் 'Discipline' - ஒழுக்கம் என்று கூறப்பெறும். ஏறத்தாழ இச்சொல் அதற்குப் பொருந்துமேயன்றி, மிகச்சரி என்று சொல்லமுடியாது. இச் சொல் அல்லாமல் ஆங்கிலத்தில் வேறு சில சொற்களும் ஒழுக்கத்தைக் குறிக்கப் பயன்படுத்தப் பெறுகின்றன. அவையும் அவற்றின் பயன்படு பொருள்களும் வருமாறு:

| ஆங்கிலத்தில் ஏதோ ஒருவகையில் ஒழுக்கத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பெறும் சொற்கள்: | | அவற்றின் மிகச் சரியான நடைமுறைப் பொருள்கள்: |
|---|---|---|
| Conduct | - | நடத்தை (நடந்து கொள்ளும் முறை) இயங்கு முறை - நன்னடத்தை. |
| Behavier | - | செயல்படும் தன்மை. (பலரோடு சேர்ந்துசெயல்படும் பொழுது நடந்து கொள்ளும் முறை) |
| Morality | _ | படிப்பினை நடைமுறை. பொது நெறிமுறைகளுக்கு ஏற்ப நடப்பது. 'Moral' என்னும் நெறிமுறை (நீதி முறை) அடிப்படையாக வழங்கும் சொல். |
| Manners | _ | மாந்தப் பாங்கு. Manlyness பழக்க வழக்க நடைமுறை. |
| Decorum | _ | கட்டுப்பாட்டு நடைமுறை. இடத்துக்கும் பணிக்குந் தக்கபடி கட்டுப்பட்டு நடத்தல். |
| Decency | _ | தகைமை, நடைமுறைப் பண்பு நலம், நன்னய நடக்கை, பொதுவொழுக்கம். |

*1.* **இயல்பொழுக்கம்** (The Natural Virtues)

*நற்குணம், நுண்மதி, நம்பிக்கையுணர்வு, நல்லார்வநலன் உணர்வு* (Optimism) -

இவ்வுலகமும் இதன் வாழ்வும் அனைத்தும் நல்லவையே எனும் மெய்ப்பொருள் கொள்கை. - இது இலேபனிட்சு (Leibnitz) என்பாரின் கருத்தியல். இக் கொள்கை உடையவர்(Optimist) - நம்பிக்கையுடையவர் எனப் பெறுவார். இதற்கெதிரான வுணர்வு சோர்வுக் கொள்கை. அது (Pessimism) எனப்பெறும். உலகில் எதுவுமே நல்லதில்லை - கெட்டதே என்னும் மனச் சோர்வுணர்வு. இக்கொள்கை யுடையவர் (Pessimist) - அவநம்பிக்கையாளர். தோல்விமனப் பான்மையினர், அடக்கம் முதலியவை.

2. **அடிப்படை ஒழுக்கம்** (Cardinal Virtues)

இதில் ஏழு பண்பியல்களை உள்ளடக்குகின்றனர்.

| | | |
|---|---|---|
| 1. நேர்மை | - | honesty, fidelity |
| 2. நுண்மதி | - | acumen, discrimination. |
| 3. மட்டுறுதி | - | Firmness |
| 4. மனவுரம் | - | Boldheartedness |
| 5. பத்திமை | - | faithfullness |
| 6. நம்பிக்கை | - | confidence, trustfulness |
| 7. பற்றார்வம் (அற ஆர்வம்) | - | virtuous |

3. **கற்பிப்பு (படிப்பினை) ஒழுக்கம்** (The Moral Virtues)

நேர்மை, சிறந்த பண்பு, நன்னடத்தை, நெறிமுறை, கட்டுப்பாடு, பொது ஒழுங்கு நடைமுறை யொழுக்கம்.

4. **இறையியல் ஒழுக்கம்** (Theological Virtues)

ஆறு அடிப்படையான இறையியல்களின்படி ஒழுகுதல். பத்திமை, நம்பிக்கை, பற்றார்வம் - (அற ஆர்வம்).

**ஆறு அடிப்படை இறையியல்களாவன :**

| | | |
|---|---|---|
| 1. கோட்பாட்டு இறையியல் | - | Dogmatic theology. |
| 2. இயன்முறை இறையியல் (இயற்கை) | - | Natural theology. |
| 3. நம்பிக்கை இறையியல் | - | Positive theology. |
| 4. கடவுள் வெளிப்பாட்டு உரைகளை அடிப்படை யாகக் கொண்ட இறையியல் | - | Revealed theology. |
| 5. கருத்தியல் இறையியல் | - | Speculative theology. |
| 6. நிறைமுறை இறையியல் | - | Systamatic theology |
| | - | இவ்விறையியல்களுக்குத் தகுந்தபடி ஒழுகுதல். |
| | - | இவை மதவியல் அல்ல. |

*5.* **மதவியல் ஒழுக்கம்** (Religious Virtue)

*மதக்கடைப்பிடி, பத்திமை, பூசை, வழிபாடு, மதம் சார்ந்த ஒழுக்க (ஆசார) நடைமுறைகள் முதலியன.*

இனி, **நடுவுநிலை** உணர்வால் அடக்கம் தோன்றுமாகலின் அதற்குப் பின் **அடக்கமுடைமை** கூறப் பெற்றது. அடக்கம் தோன்றிய பின் மாந்தனிடம் **ஒழுக்கவுணர்வு** கால்கொள்ளும். ஒழுகுதல் - பின்பற்றி நடத்தல், ஒழுக்கத்திற்கு அடக்கமே முதலுணர்வு.

**அடக்கம்** - மனம், அறிவு, உடல் அடங்குதல் தன்மை.

**ஒழுக்கம்** - மனம், அறிவு, உடல் இயங்குதல் தன்மை.

எனவே, ஒழுக்கமும் **மனவொழுக்கம், அறிவொழுக்கம், உடல் ஒழுக்கம்** எனப் பாகுபாடு பெறுகிறது.

**மனவொழுக்கம்** - பொய்யாமை, உண்மை, அன்புடைமை, நடுவு நிலைமை, பொறையுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, ஈகை, கள்ளாமை, வெகுளாமை, மானம் கருதுதல், பெருமை காத்தல் முதலியன.

**அறிவொழுக்கம்** - புறங்கூறாமை, பயனில சொல்லாமை, ஒப்புரவறிதல், கொல்லாமை, நட்புணர்வு, கள்ளுண்ணாமை, சூதாடாமை - முதலியன.

- இவ்வாறு, பல்வேறு ஒழுகலாறுகளைப் பல்வேறு கோணங்களில் வலியுறுத்திக் கூறுவதால், இஃது **ஒழுக்கநூல்** என்று கருதுதற்கும் ஒப்பாகும்.

ஒழுக்கம் இன்றெனின் தனிமாந்தச் சமநிலை கெடும்; தனி மாந்தச் சமநிலை கெடின், இல்லற அமைப்புக் கெடும்; இல்லற அமைப்புக் கெடின், குடிமைநலம் கெடும்; குடிமைநலம் கெடின், மாந்தத் தன்மை மாறுதலுற்று மீண்டும் விலங்குத் தன்மை மீதுற்று விளங்கும். இப் பேருண்மையை ஆசிரியர்,

**'ஒழுக்கம் உடைமை குடிமை; இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும்'** - ***133***

என்று நன்கு விளக்கி மக்கள் குலத்துக்கு எச்சரிக்கை செய்வார்.

ஒழுகலாறு இல்லெனின் உலகம் தன் இயல்பான நடைமுறையில் தாழ்ந்து, இழிந்து, மக்களினம் படிப்படியாய் அழிந்து மண்ணில் புதைந்து மாய்ந்துவிடும் என்று இவ் வறவாசிரியர் செய்யும் அறிவுரை அனைவரும் சிந்திக்கற் பாலது.

**'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்**
**மண்புக்கு மாய்வது மன்' - 996**

இதை ஒப்ப உரைத்தாரும் உளர்.

**'உடைப்பெருஞ் செல்வரும் சான்றோரும் கெட்டுப்**
**புடைப்பெண்டிர் மக்களும் கீழும் பெருகக்**
**கடைக்கால் தலைக்கண்ண தாகிக் குடைக்கால்போல்**
**கீழ்மேலாய் நிற்கும் உலகு' - நாலடி:368**

ஒழுக்கந்தான் பண்புக்கு அடிப்படை. ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பண்புணர்வே மக்களைக் கீழ்மை உயிர்களினின்று வேறுபிரித்துக் காட்டுவது. இன்னுஞ் சொன்னால் பண்புணர்வு - பறவைகள், விலங்குகளிடமும் உண்டு. ஒவ்வொரு பறவையிடமும், ஒவ்வொரு விலங்கினிடத்துங்கூட மக்கள் பண்பியல்களில் சில சிறந்திருப்பதைக் காணலாம். (அவை விரிக்கிற் பெருகும்.)

பண்பு இல்லாத உயிரினம் நிலைத்திணை (பயிரினம்) ஒன்று தான். அந்நிலத்திணை உயிர்களில் மேம்பட்டு நிற்பது மரம். எனவே மக்களினத்தில் மிகச்சிறந்து மேம்பட்ட அறிவுடையாராயினும் அவரிடம் மக்களுக்குரிய பண்பொழுக்கம் இல்லையெனில், அவர் மரம் போன்றவர்தாம் என்று நூலாசிரியர் கூறும் கருத்து கூர்ந்து நோக்கத்தக்கதாம் என்க.

**'அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண்(பு) இல்லா தவர்'. - 997**

எனவே, மக்களைப்போல் இருப்பவர்கள் எல்லாருமே மக்களுக்குரிய உறுப்புகளைப் பெற்றிருந்தாலும், மக்களுக்கே மிகவும் சிறப்பான ஒழுக்கப் பண்பு பெற்றிருக்க வில்லையானால் மக்கள் அல்லர் விலங்குகளே என்பார் பேராசான்.

**'உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றாம் வெறுத்தக்க**
**பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு' - 993**

என்பது, அது.

இறுதியாக, அவர் நூற்சிறப்பைவிட, அவர் வலியுறுத்தும் மக்கட் பண்பியல் சிறப்புகள் மிகவும் பெருமைக்குரியவை. இது தோன்றிய மொழியையும் இனத்தையும் உலக நிலையில் உயர்த்துவன. மக்கட் பண்பியல் சிறப்புகளிலேயே மிகவும் தலைமை சான்றது தனிமாந்த ஒழுக்கம். இத்தகைய ஒழுக்கவுணர்வை இவரைப்போல் விரிவாகவும் நுட்பமாகவும், வலியுறுத்தியும் இன்றுவரை கூறிய அறிவாசிரியர் தமிழ் இலக்கிய, அறவிலக்கிய, சமயவிலக்கிய நூலாசிரியர்களும் சரி, உலக நூலாசிரியர்களும்கூட, வேறு எவருமே இலர் என்பது, இவர்க்கு உலகின் தனிச் சிறப்பாண்மையைத் தருவதாகும்.

ஒழுக்கம் இல்லாதவனை உயிரில்லாதவன்; அவன் பிணம். பிணத்தின் மேல் எத்தனைப் பெருமைகள், சீர்மைகள் சிறப்புகள்தாம் சாற்றி என்ன பயன்? அச்சிறப்புகளும் சீர்மைகளும் பெருமைகளும் அவன் உயிரோடு உலாவும் பொழுதுதானே பொருளுடையவை. உயிரில்லாத பொழுது, அப் பிணத்தை மண்ணிலிடுவதைப் போல் அவையும் மண்ணிலிடத்தக்கவையே! எனவே ஒருவன் பெருமை யெல்லாம் உயிருள்ள பொழுதுதான்; உயிரற்ற பிணத்திற்கு அப்பெருமைகளால் என்ன பயன்?

ஒருவனுக்கு உயிர் மட்டுமன்று, உயிரைவிட மேலானது ஒழுக்கம். அவ்வொழுக்கத்தை ஒவ்வொருவரும் பேணிக் கொள்வதுதான் அவனுக்குப் பெருமை, சிறப்பு, சீர்மை எல்லாம் பிணத்துக்குப் பிணம் என்னும் இழிவு தவிரப் பெருமை, சிறப்பு, சீர்மை முதலிய எதுவும் இல்லாதது போல், ஒழுக்கமில்லாதவனுக்கும் எதுவும் இல்லை - என்று இவர் கூறும் கருத்திற் கிணையான கருத்து உலகில் வேறு எங்குமே இல்லை என்பதை உறுதியாகக் கூறலாம். அவை இவை,

**‘ஒருமை மகளிரே போலப் பெருமையும்**
**தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு’** - **974**

**‘ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்’** - **131**

இத்தனைச் சிறப்புடைய இவ்வதிகாரத்திற்கு முன்னுரை கூற வந்த மணக்குடவர் ‘ஒழுக்கம் உடைமை’யாவது, தத்தம் குலத்திற்கும், இல்லறத்திற்கும் ஏற்ற ஒழுக்கமுடையாராதல்’ என்று கூறுவது ஆரியவியலை வலியுறுத்திய வஞ்சகக் கூற்றாகும்.

இனி, பரிமேலழகரோ அதன்மேலும் ஒருபடி சென்று, ‘அஃதாவது, தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஓதப்பட்ட ஒழுக்கத்தினை உடையாராதல்’ என்று, வருணாச்சிரம (அ) தர்மத்தையே ஒழுக்கமாகக் கூறுதல் அடாததும், அவரது அறிவுக்கு இழுக்கானதும் ஆகும்.

இருவர்தங் கருத்துகளும் புரையும் புன்மையும் சான்றவை என்று கூறிப் புறம் விடுக்க.

**கநக. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்.** - **131**

பொருள்கோள் முறை : **இயல்பு.**

பொழிப்புரை : ஒருவனது தனியொழுக்கம் அவனுக்கு அனைத்துச் சிறப்புகளையும் தருவதால், அவ்வொழுக்கம் அவனது உயிரைவிடச் சிறப்பாகப் பேணப்பெறுதல் வேண்டும்.

சில விளக்கக் குறிப்புகள் :

1. **ஒழுக்கம் விழுப்பம் தரலான்** - ஒருவனது தனிநிலை ஒழுக்கம் அவனுக்கு அனைத்துச் சிறப்புகளையும் தருவதால்.

2. **ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்** - அவ்வொழுக்கம் அவனது உயிரைவிடச் சிறப்பாகப் பேணப் பெறுதல் வேண்டும்.

- பேணப்பெறுவது உடலே எனினும், அதன்வழி உயிர் பேணப் பெறுவதால் 'உயிரினும்' என்றார்.

- உடலுறுதி உயிர்க்கு உறுதி. எனவே உடல் ஒழுக்கம் உயிரைக் காப்பது.

- உடல் நோக்கியே அனைத்து முயற்சிகளும் செய்யப் பெறுகின்றன. அவ்வுடல் நலமின்றாயின், உயிர் கெடும்; அவ் வுடலை விட்டு ஏகும். எனவே, உடலை ஓம்பும் பொழுதே உயிரும் ஓம்பப் பெறுகிறது.

- உடலை ஓம்புவது, உணவுப் பொருள்களே என்றாலும், தாறுமாறாக இயங்கின் அவ்வுடல் கெடும். அஃது அவ்வாறு இயங்காமல் காப்பது ஒழுக்கம். ஒழுக்கம் இல்லாதவனின் உடல் கெடல் உறுதி. உடல் கெடுவது உயிர்க்கு இறுதி. உயிரை எவரும் நேரிடையாகக் காக்க முடியாது; உடல்வழிதான் உயிரைக் காக்க வியலும்.

- எனவே ஒழுக்கம் உடலைக் காப்பதன்வழி உயிரையும் காக்கிறது.

இவ்வாறு இயல்பாக உயிர் காக்கப்பெறும். பொதுத்தன்மையைவிட, இன்னும் சிறப்பு முயற்சியால் அவ்வுயிரை இன்னும் நீண்ட நாள் உடலில் தங்கியிருக்குமாறு செய்ய வேண்டுமானால், அவ்வுயிரைவிட ஒழுக்கத்தையே காக்க வேண்டும் என்று கூறினார். அப்பொழுதுதான், ஒழுக்கத்தின்வழி உடல் காக்கப்பெற்று, உடல்வழி உயிர் காக்கப்பெறும். மற்றபடி உயிரை ஓம்புவதற்கு வேறு முயற்சிகள் இல்லை என்று குறிப்புணர்த்தினார் என்க.

- உயிரை ஓம்புவது அல்லது காப்பது, அதனை நீண்ட நாள் உடலில் தங்கியிருக்கும்படி செய்வது.

- உயிர் இயல்பாகவே உடலைவிட்டுப் பிரிய விரும்புவதில்லை. உடல் முடமுற்று, நடையின்றி, நலிந்து, நாறிக் கிடப்பினும், அவ்வுயிர் விட்டுப் பிரிய மனமின்றி, அவ்வுடலோடேயே ஒட்டிக்கிடந்து வாழவே விரும்புகிறது.

எனவே, தனிமுயற்சியால் பேண வேண்டுவதில்லை; அவ்வாறு பேணவும் முடியாது. ஆகவே, உயிரைக் காக்க விரும்பின் உடலைக்காப்பது இன்றியமையாதது. உடலை வளர்ப்பது நன்னிலையில் வைத்திருக்க உணவு உதவுவது போல், உடலைக் காப்பது ஒழுக்கமே.

ஒழுக்கம் இல்லையாயின் உடல் கண்டிப்பாகக் கெட்டுப் போவது உறுதி. உடலின்றி உயிர் இயங்காது. எனவே உயிரைக் காக்க வேண்டின் ஒழுக்கத்தை அவ்வுயிரைவிட மேலாகக் காத்தல் வேண்டும் என்றார். ஒழுக்கத்தைக் காவாதவன் உடலையும் காக்க இயலாது; உயிரையும் காக்க வியலாது என்று குறிப்புணர்த்தினார்.

- இங்கும், இக்கருத்தினைத் தெளிவாக விளக்க, முன்னர்க் கூறிய (குறள் 119) ஓர் எடுத்துக்காட்டே சாலவும் பொருந்தும்.

- அஃதாவது, உயிரைப் பால் என்று கொண்டால், அப்பால் உள்ள கலம் (ஏனம்) உடல். உடலாகிய ஏனம் (கலம்) தூய்மையாக இருந்தால்தான், உயிராகிய பாலும் கெடாமல் இருக்கும். இங்கு உடல் தூய்மை என்பது ஒழுக்கம். உடல் தூய்மை அஃதாவது ஒழுக்கம் இல்லாது போனால் உடலாகிய ஏனம் கெட்டதாகி, அதிலுள்ள உயிராகிய பாலையும் கெடுத்துவிடும் என்னும் உவமையைப் பொருத்தி மகிழ்க.

**'பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்**
**கலந்தீமை யால்திரிந்தற்று'** - 1000

- ஒழுக்கமின்மையால் உடல் கெடுவது, ஒழுக்கம் இல்லாதவன் உடலைப் பல வகையிலும் வருத்துவது கண்கூடு. உடல் கழிகாமத்தின் வழிப்படுவது ஒழுக்கம் கெடுவதற்கு அடிப்படை. அதன்வழி உடலை இயக்குபவன் பல்வகைக் கொடிய நோய்களுக்கும் ஆளாகிறான். அக் காமவழி நோய்கள் உடலைப் பலவகையாலும் சிதைவுறச் செய்யும். செய்யவே, உடல் நலிவுற்று நாறி, உழன்று கெட்டு உயிரிழத்தல் செய்கிறது என்பதை உணர்க. உடல் கெட்டு உயிரிழப்பதைவிட, உடலை ஒழுக்கத்தால் பேணி உயிரைக் காப்பதே இங்குக் கூறப் பெறுகிறது.

- இஃது ஒழுக்கம் உடல் வளர்ச்சிக்கு மட்டுமன்று. உயிர் நிலைப்புக்கும் அடிப்படையானது ஆகலின், அதைக் காத்தல் அவ்வுயிரைக் காத்தலினும் இன்றியமையாதது என்று கூறலால், இது முன்னர்க் கூறப்பெற்றது.

**கநஉ. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்**
**தேரினும் அஃதே துணை.** - 132

பொருள்கோள் முறை :

**ஒழுக்கம் பரிந்துஓம்பிக் காக்க; தெரிந்து**
**ஓம்பித் தேரினும் அஃதே துணை.**

பொழிப்புரை : தன் ஒழுக்கத்தை மிகமுயன்று பேணிக்காத்துக் கொள்க. ஒருவற்கு வேண்டிய அனைத்து நிலைகளையும், அவற்றின் தேவைகளையும் சீர்தூக்கி ஆராய்ந்து உணர்ந்து, அவற்றுள் சிறந்த ஒன்றைத் தேர்ந்தாலும், அதுவே அவனைக் காக்கின்ற துணையாக உள்ளது.

சில விளக்கக் குறிப்புகள் :

1. இதில், ஒழுக்கம் காப்பதன் கடினமும், இருப்பினும் அதைக் காத்துக் கொள்ளும் இன்றியமையாமையையும் கூறுவார்.

2. **ஒழுக்கம் பரிந்து ஓம்பிக் காக்க** - தன் ஒழுக்கத்தை மிக முயன்று பேணிக் காத்துக் கொள்க.

பரிதல் - முயற்சியின் வருந்துதல்
- வருந்தி முயலுதல் - மிகு முயற்சி செய்தல்.

**'பரியினும் ஆகாவாம் பாலல்ல'** - 376

ஓம்புதல் - பேணுதல்.
- காத்தல் என்னும் பொருளும் உண்டு. எனினும் இதையடுத்து வேறாகக் காக்க என்பதால், இது பேணுதல் பொருளைக் கொண்டது.

**'பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர்'** - 88

ஒழுக்கம் தவறுதல் எளிது; காத்தல் மிகுகடினம்.

**'எளிது என இல்லிறப்பான்'** -145

- என்பது காண்க.

- புலன்கள் எப்பொழுதும் போராட்டத்திற்குரியன. எப்பொழுதும் அவை மனத்தின்வழிச் செல்வன. அறிவின்வழிச் செல்வதும், செலுத்துவதும் மிகு கடினம். அதனை

**'உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்'** - 24

என்பதானும்,

**'ஐந்தவித்தான் ஆற்றல்'** - 25

என்பதானும்,

**'சென்ற இடத்தால் செலவிடாது தீதொரீஇ**
**நன்றின்பால் உய்ப்பது அறிவு'** - 422

என்பதானும் அறிந்துணர்க.

- 'பரிந்து' என்பதற்கு மணக்குடவரும், பரிமேலழகரும், பாவாணரும் பிறரும் 'வருந்தி' என்றே பொருள் தந்தனர். அதுவும் ஒருவகையில் பொருந்துவதே எனினும், அவ் வருத்தம் முயற்சியால் வருவதன்றிப் பிறவற்றால் வருவதன்று. எனவே 'முயற்சியான் வருந்தி' என்பதே முழுப் பொருளாகும்.

- முயற்சி என்பது, அம் மனத்தினதும், அறிவினதும், உடலினதும் ஆன ஒழுக்க நடைமுறைகளைக் கடைப்பிடித்து ஒழுகுகின்ற பொழுது, அவை கண், காது, மூக்கு, வாய், மெய் ஆகிய புலன்களின்வழி அசைவுறுவன வாகும். என்னை?

- 'ஒழுக்கம்' என்பதில் பெண்வழிச் செல்லா ஒழுக்கமே தலையாயது என்றுணர்க. ஏனெனில் அதுவே மெய்வழி ஒழுக்கம். எனினும் அதுவே மனத்தையும் அறிவையும் மயங்கடிப்பது; மழுங்கடிப்பது. முதலிற் கண்ணையும் பின்னர் கருத்தையும் கவர்வது அதுதான். அஃதியற்கை. இயங்கியலும் மனவியலும், அறிவியலும், உடலியலும், பாலியலும் இணைந்த உணர்வு அது. எனவே, அதைத் தடுத்து நிறுத்துவது மனத்துறவு கொண்டார்க்கே அரிதென்க. அறிவை மட்டுமின்றி வீரத்தையும் அடிமைகொள்வது, அது. ஆண்மைக்கே வெல்விளியாக (சவாலாக) அமைவது அது. உலகோர் கண்களுக்கு உடனடியாக உறுத்துவதும் அதுவே ஆகும். எனவே, அப் பெண்ணொழுக்கமே பேரொழுக்கம் என்க.

- கண்விழி, ஒருத்தியின் பெண்மை யழகைக் கண்டவிடத்து, மனம் அதன்வழிச் செல்லுவது இயல்பு. அக்கால் அறிவால் அதனை அடக்கி மேற்செல்வது கடினம். இனி, அறிவும் அதன்வழிச் செல்லுமிடத்து அதைத் தடுத்து நிறுத்துதல் மிகவும் கடினம்.

'மணிமேகலை'யின் அழகைச் சாத்தனார் வண்ணிக்குமிடத்து, அவளை,

**'ஆடவர் கண்டால் அகறலும் உண்டோ**
**பேடியர் அன்றோ பெற்றியின் நின்றிடின்'**

- மணிமேகலை

என்பார்.

- காமத்தையும், காதலையும், ஆண்பெண் ஈடுபாடுகளையும் முன் வைத்தே உலக இலக்கியங்கள் எண்பது விழுக்காடு பேசும். தமிழ் இலக்கியங்களும் இதற்கு நெறி (விதி) விலக்கில்லை.

- காமத்தையும் அதன் நுண்ணிய தன்மையையும் முன்வைத்து இந்நூலுளும் நிறையப்பேசப் பெறுகின்றன.

**'மலரினும் மெல்லிது காமம்'** **- *1289***

என்பார் ஆசிரியர். இனி, இதை மட்டும் கூறாமல்,

'சிலர் அதன் செவ்வி தலைப்படுவார்' என்று கூறும் பின் பகுதியில், காம நூலுள் பெரும்பாலும் தெரிவிக்கப் பெறாத, ஆனால் மிகவுண்மையான செய்தியை ஆசிரியர் தெரிவிப்பது அவரின் உடலியல், பாலியல் பேரறிவையே காட்டும். (விளக்கம் ஆண்டுக் காண்க).

தமிழிலக்கியங்களுள் காமச்செறிவான நூல்களும் பலவுள. கற்றறிந்தார் ஏத்தும் 'கலித்தொகை'யில் பலபகுதிகளில் காமச் செறிவுண்டு. காமம் காதல் இரண்டு சொற்களும் உடலியலையும் உளவியலையும் அடிப்படையாகக் கொண்டு குறிக்கப் பெறுவனவேனும், காமம் இல்லாத காதல் வாழ்வியலுக்குப் பயன்படுவதில்லை. காதல் இல்லாத காமம் உண்டு. ஆனால் காமம் இல்லாத காதல் இல்லை; இருந்தாலும் பூவாத செடி போல் சிறப்புத் தருவதில்லை.

- என்றாலும் உலகில் எல்லாரும் காமத்தை வெளிப்படையாகப் பேசுவதில்லை. ஆனால் எல்லாருமே அதை நிறைய நினைக்கின்றனர். வாய்ப்பும் சூழலும் இருந்தால் ஒழுக்கத்தை அவ்வகையில் தவற விடுபவர் இருபாலரிலும் பெரும்பாலார். எனவேதான் மறைமுக ஒழுக்கக் கேடுகள் என்றென்றும் நிகழ்ந்து கொண்டிருப்பதாகக் குமுகவியல் அறிஞர்கள் கருதுகின்றனர். பாலியல் அறிஞர்கள் அதனினும் மேலாக மதிப்பிட்டுக் காட்டுகின்றனர். உலகியல் நடைமுறை நிகழ்வுகளும் அதை உறுதிப்படுத்துகின்றன. மாந்தக் குற்றங்களும் பெரும்பாலும் அதை யொட்டியே நடைபெறுகின்றனவாகக் கூறலாம்.

உலகில் முதன்முதலாக நடந்த குற்றமும் பெண்ணை முன்னிலைப் படுத்தித்தான் நடந்திருத்தல் வேண்டும். அஃது, ஒரு பெண்ணை அவள் விருப்பமில்லாமல் ஓர் ஆண் தொட்டது, துய்த்ததாகத்தான் இருந்திருக்க முடியும். அதிலிருந்தே படிப்படியாக எல்லா வகைக் குற்றங்களும் உருவாகி வளர்ந்திருத்தல் வேண்டும்.

இன்றுங்கூட, உலகெங்கணும் மாந்தர் செய்யும் அனைத்துக் குற்றங்களுக்குமான அடிப்படை ஒரு பெண்ணிடந்தான் தோன்றுகிறது.

- நூலாசிரியர் காலத்தில் **'காமம்'** என்னும் சொல் அழுத்தமாக காதலுணர்வைக் குறித்ததாகக் கொள்ளலாமே தவிர, இன்றைய நிலையில் பொருள்கொள்வதுபோல் அவ்வளவு தாழ்வாகவோ, இன்னும் சொன்னால் இழிவாகவோ கருதப் பெறவில்லை.

- சொல்லளவில் அல்லது பொருளளவில் அது காலத்துக்குக் காலம் வேறுபட்டு வந்தாலும், செயலளவில் அவ்வுணர்வு மக்களிடம் ஒரே அளவாகத்தான் இருந்து வந்திருக்கிறது; இருந்து வருகிறது; இருந்து வரும், ஏனெனில் அது மக்கள் இயங்கியல், இயற்கையியல். எதற்குமே புறம்பான நிலைகள் இருத்தல் போல் இதற்கும் இருக்கலாமே தவிர, அறவே இல்லை என்று கூறிவிட முடியாது.

- எனவே, ஒழுக்கவியலை நினைக்கும் பொழுது, அதற்கு மிக அடித் தளமான ஆண்பெண் ஈடுபாட்டு நிலைகளை அஃதாவது காம வியலைப் புறந்தள்ளி விடுதற்கியலா நிலையில், அதைப் பற்றி விளக்கமாகவும் விரிவாகவும் கூற வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. ஏனெனில் ஒழுக்கமே அதுவென்றுதான் - அதன் தூய்மைத்தன்மைதான் - என்று உலகம் பொருளறிந்து வைத்திருக்கிறது.

- பொய்கூறுபவனை, திருடுபவனை, குடிப்பவனை, ஏமாற்றுபவனை ஏன் கொலையாளியைக் கூட 'ஒழுக்கம் கெட்டவன்' என்று உலகம் சொல்வதில்லை. அத்தகையவர்களைக்கூட, பொய்யன், திருடன், குடிகாரன், ஏமாற்றுக்காரன், கொலைகாரன் என்றுதான் அந்நிகழ்வுகளின் அடிப்படையில் உலகம் அழைக்கின்றது. ஆனால் காமநெறி தவறுபவனைத்தான் **'ஒழுக்கமில்லாதவன்'** என்று கூறுகிறது. இஃது ஏன் என நாம் எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

- **புறவுலகத்திற்கு அஞ்சி ஒழுக்கம் காப்பது, அல்லது ஒழுக்கம் காப்பது போல் நடப்பது அல்லது நடிப்பது - ஒழுக்கம் - ஆகாது.**

இதனை ஆசிரியர்.

**'வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்**
**ஐந்தும் அகத்தே நகும்'** - 271

என்று மிகவும் கண்டித்தும் எள்ளியும் கூறுவார்.

அவர் விரும்புவது உள்ளம் - நெஞ்சம் - அறிய ஒழுகுவது. அவரே உலகியலை முன்வைத்துக் 'கூடா ஒழுக்க' அதிகாரத்துள் கூறுவது மிகவும் கவனிக்கத் தக்கது.

**மனத்தது மாசாக மாண்டார் நீராடி**
**மறைந்(து)ஒழுகும் மாந்தர் பலர்** - 378

என்பதில் அவர் கூறும் 'மாந்தர்' பொது மாந்தரே. துறவியர் மட்டும் அல்லர்.

- இவற்றுக்குக் காரணம் என்ன?

**ஆண் பெண் ஈடுபாடு அல்லது அதுபற்றிய உணர்வு - அஃதாவது காமவுணர்வு இயற்கையிலேயே மிக வலிவானது. அஃது ஒழுக்கவியலை அடிப்படையாகக் கொண்டதன்று. உள்ள வியலையும், உடலியலையும், பாலியலையும் அடிப்படையாகக் கொண்டது.**

- ஒழுக்கவியல் - இல்லறவியல், அறவியல், குமுகாயவியல், அரசியல், பொருளியல், சமயவியல் போல் மக்கள் பண்பட்ட நிலையில் அமைத்துக் கொண்டது.

- அரசியலில் எத்துணை அறநெறிகள் கூறப்பெறுகின்றன. ஆனால் அவற்றை அரசியலில் ஈடுபடுவோர் கடைப்பிடித்தா இயங்குகின்றனர்? ஒழுகுகின்றனர்?

இல்லறவியலில் எத்தனைக் கட்டுப்பாடுகள் வகுக்கப் பெற்றுள்ளன. ஆனால் அவற்றில்தாம் எத்தனை நெருடல்கள்; நெகிழ்வுகள்; சரிவுகள், சாய்வுகள்!

- பொருளியலில் மாந்தரால் ஒப்புக்கொள்ளப்பெறும் சமநிலை அமைப்பு இன்னும் ஏற்படவில்லையே, ஏன்?

- குமுகாயவியலில் எத்தனை மேடுபள்ளங்கள்!

- அறவியலில் எத்தனைப் பொய், புரட்டல்கள்!

- சமயவியலில் எத்துணை ஏமாற்றங்கள், இழுக்குகள், பூசல்கள், கொடுமைகள்!

- இப்படித்தான் ஒழுக்கவியலிலும் நம் குறிக்கோள்கள் இன்னும் மலர்ச்சியுறவில்லை.

- மக்கள் அனைவருமே ஏதோ ஒன்று அல்லது சில வகைகளில் இழுக்கம் உடையவர்களாகவே உள்ளனர் என்பது மிகப் பெரும்பாலும் உண்மை.

- நூலாசிரியர் காலத்தும் அந்நிலை இருந்தது; இன்றும் உள்ளது; இனியும் இருக்கும். ஏன்? இவ்வுலகம் உள்ளளவும் இருக்கும்.

- அஃது ஏன் எனில், காமவுணர்வின் வலிவு. அங்குத்தான் ஒழுக்கமே வழுக்குகிறது. அதன் வலிமையை வீழ்த்தத்தான் கடும் முயற்சி - மனத்தளவிலும், அறிவளவிலும், செயலளவிலும் தேவை என்று ஆசிரியர் கூறுவார்.

எனவேதான் **'பரிந்து ஓம்பிக் காக்க'** என்று மிகமுயன்று, ஒழுக்கத்தைப் பேணி, அதுமட்டும் போதாது, அதை நிலையாகவும் காத்துக் கொள்ளுக என்று அழுத்தம் கூறி அறிவுறுத்துவார். மேலும், அத்துடன் அவர் நில்லாது, **'தெரிந்து ஓம்பித் தேரினும் அஃதே துணை'** என்று உலக வழக்கியலோடு பொருத்திக் காட்டி, அளவையியல் (தருக்கவியல்) முடிபோடு தெளிவுறக் கூறுகிறார்.

- எனவே 'பரிந்து' என்பதற்கு 'வருந்தி' என்னும் பொருளைவிட 'மிகமுயன்று' என்னும் பொருளே மிகப் பொருந்துவதாம் என்க.

- இனி, எல்லா ஒழுக்க நிலைகளும், காம ஒழுக்கத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளதை நுண்ணோக்கிப் பார்க்கின் உணர்தற் கியலும்.

- வீரங்கூடக் காமத்தை - அஃதாவது காதலை - அடிப்படையாகக் கொண்டதே என்பதை உலக இலக்கியங்கள் அனைத்துமே கூறும். காதல் என்பது இளமை வரம்பிட்ட உணர்வாகவும் காமம் என்பது பாலுணர்வு வரம்பிட்ட உணர்வாகவும் இருப்பதை உணர்க.

'காமம்' வீரத்தையும் அடிப்படுக்கும் வலிமை சான்றது.

**'ஒண்ணுதற் கோஓ உடைந்ததே ஞாட்பினுள்**
**நண்ணாரும் உட்குமென் பீடு'** - **1088**

என்பதில், காதலின் அஃதாவது காமவுணர்வின் முன் வீரம் உடைந்து சிதறுவதை ஆசிரியர் கூறுவது சிந்திக்கத்தக்கது.

காமவுணர்வு பற்றி - அதன் வலிமையும் கவர்ச்சியும் பற்றி - ஆசிரியர் கருத்துகள் மிகவும் வலிவும் பொலிவும் சான்றன.

**'காமக் கடல்'** - **1164**
**'காமக் கடும்புனல் நீந்திக் கரை காணேன்'** - **1167**
**'உள்ளினும் காமம் இனிது'** - **1201**
**'இனிதே காண் காமம்'** - **1202**
**'காம நோய்' (1280) 'அல்லல் நோய்'** - **1301**
**'மறப்பேன் மன் காமத்தை'** - **1253**
**'உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்**
**கள்ளுக்கில் காமத்திற் குண்டு'** - **1281**
**'காமம் விடு; ஒன்றோ நாண்விடு'** - **1247**

- எனப் பெறுபவை காமத்தின் வலிவைக் காட்டுவனவாம். கட்குடியினும் காமம் வலிவானது.

- இவையன்றி வேறு இலக்கியங்களுள்ளும் அதன் வலிவு சாற்றப் பெறுவது சிந்திக்கத் தக்கது.

**'பெரிதே காமம்; உயிர்தவச் சிறிதே'**
**(துவ-மிக) - கலி:137**

**'இளமையும் காமமும் ஓராங்குப் பெற்றார்**
**வளமை விழைதக்கது உண்டோ? - கலி:18**

**'காமத்தீ நீருட் புகினும் சுடும்' - கலி:144**

**'வீழ்வார்கண் தோன்றும் தடுமாற்றம் ஞாலத்துள்**
**வாழ்வார்கட் கெல்லாம் வரும்' - கலி:145**

**'குளிப்பினும் காமம் சுடுமே குன்றேறி**
**ஒளிப்பினும் காமம் சுடும்' - நாலடி:90**

**'உள்ளினும் சுட்டிடும் உணருங் கேள்வியில்**
**கொள்ளினும் சுட்டிடும் குறுகி மற்றதைத்**
**தள்ளினும் சுட்டிடும் தன்மை ஈதினால்**
**கள்ளினும் கொடியது காமத் தீயதே' - கந்த.மாயை:11**

காமம் வெறியாகி உள்ளத்தை ஆட்கொள்கிறது.

**'வெறிஎன உணர்ந்த உள்ளம்' - நற்.47**

**காமத்தால் உள்ளத்தோடு அறிவும் ஆட்டங்காண்கிறது.**

**'அறிவும் உள்ளமும் அவர்வயின் சென்று' - கலி:64**

**'அறிவும் அருர் உழந்து ஏங்கி' - கலி:127**

**'அறிவும்தம் அறிவாய்ந்த அடக்கமும்**
**நாணொடு வறிதாக உருற்றும் காமம்' - கலி : 138**

கண்ணளவாகவே காமம் எத்துணை மகிழ்ச்சி தருகிறது! உள்ளத்தைப் பற்றியிழுக்கிறது!

**'காமம் போல் கண்டார் மகிழ்செய்தல் இன்று!' - 1090**

இனி இதற்கும் மேல் சென்று பெண் தகையையே கூற்று என்று நினைக்கச் செய்கிறது, காமம்.

**'பெண்டகை கூற்று' - 1083**

**'கண்டார் உயிருண்ணும் தோற்றம்' - 1084**

**'மாதர்கொல் மாலும்என் நெஞ்சு' - 1104**

காமத்தைத்,

'தண்ணென்னும் தீ' - 1104

என்பார். அது தீயினும் கொடியது! ஆனால் 'அது குளிர்ச்சி தருகின்ற தீ' என்பார் ஆசிரியர்.

ஒரு பெண் நோக்குவது காம உணர்வுள்ளவர்க்கு எத்துணை இடர் செய்கிறது!

**'நோய் செய் நோக்கு'** - 1091

**'செற்றார் போல் நோக்கு'** - 1097

**'கண்டார் உயிருண்ணும் கண்'** - 1084

**'நோக்குதல் தாக்கணங்கு தானைக் கொண்டது'** - 1082

- இனி, பிற விலக்கியங்களுள், பெண்களுக்கு அமைந்த அழகுறுப்புகள் எவ்வெவ்வாறு வண்ணிக்கப் பெறுகின்றன என்பதற்கு ஓர் அளவேயில்லை. இயற்கையில் வேறு எந்தப் படைப்பும் இவ்வளவில் வண்ணிக்கப் பெறுவதில்லை.
- அவைதாம், அவர்கள்மேல் காதல்கொண்ட காதலரை எவ்வெவ்வாறு கருதச் செய்கின்றன என்பதை, ஒரு மேற்போக்காகப் பார்ப்பார்க்கும் காமத்தின் வலிவு எத்தகையதாக உள்ளது என்பது நன்கு விளங்கும், என்பதால் அவ் விலக்கியங்களுள் உள்ள வண்ணனைகளில் சிலவற்றை ஈங்குக் காட்டுவாம். (விரிவு அஞ்சி, அவ்விலக்கிய நூல்களின் பெயர்கள் சுட்டப் பெறவில்லை).

**கண் :**

**'அமர்த்த சேயரி மழைக்கண்'**

('மழைக்கண்' என்பது குளிர்ச்சி பொருந்திய கண்)

**அல்குபடர் உழந்த அரிமதர் மழைக்கண்**

**அலமரல் அமருண் கண்**

**ஆய்மலர் உண்கண்**

(உண்கண் மை உண்கண், அல்லது உண்ணுகின்ற கண்).

**ஆய்மலர் மழைக்கண்**

**ஆயிதழ் உண்கண்**

**இருள்மை ஈர் உண்கண்**

**இளமாங்காய் போழ்ந்தன்ன கண்**

**ஏந்தெழில் மழைக்கண்**

**கயலேர் உண்கண்**

**கயமலர் உண்கண்**

**குவளை அன்ன ஏந்தெழில் மழைக்கண்**

**கொன்றைப் பூவின் பசந்த உண்கண்**

**சேயரி மழைக்கண்**

*(சேயரி - சிவந்த வரிகளையுடைய)*

**சேயரி பரந்த மாயிதழ் மழைக்கண்**

*(மாயிதழ் - கரியமலர்)*

**நீள்வரி நெடுங்கண் வாள்**

**நுண்ஏர் புருவத்த கண்**

*(ஏர் - அழகிய)*

**நெய்தல் உண்கண்**

**பகழியன்ன சேயரி மழைக்கண்**

*(பகழி - அம்பு)*

**பனிமலர்க் கண்**

**புதுமலர் மழைக்கண்**

*புணர்ந்தமை கரிகூறும் மழைக்கண் (கரி - சான்று)*

**புரியவிழ் நறுநீலம் புரையுண்கண்**

**பூவொடு புரையும் கண்**

*(புரைதல் - ஒத்தல்)*

**பூப்போல் உண்கண்**

**பொங்குஅரி பரந்த உண்கண்**

**பேரமர் மழைக்கண்**

*(அமர் - அழகு, விருப்பம், வெறி)*

**மலர்ஏர் உண்கண்**

*(ஏர் - ஒத்த)*

**மலர் பிணைத்தன்ன மாயிதழ் மழைக்கண்**

**மலர்ந்த காந்தள் நாறி**

*கவிழ்ந்த கண் (பார்வை பெயர்தல்)*

**மாயிதழ்க் குவளை உண்கண்**

**மாயிதழ் மழைக்கண்**

**கையெழில் மலருண்கண்**

நுதல் (நெற்றி)

'ஒளி பூத்த நுதல்'
'காமர் சுடர்நுதல்'
'குவளை யொடு பொதிந்த
குளவி நாறு நறுநுதல்' (காட்டு மல்லிகை)
'குடிக்கு விளக்காகிய ஒண்ணுதல்'
'சுடர் புரை திருநுதல்' (புரை-ஒத்த)
'சுரும்பு இமிர் சுடர்நுதல்'

(சுரும்பு இமிர் - வண்டு மொய்க்கின்ற)

'செம்பொறித் திருநுதல்'
'தண்ணிய கமழும் ஒண்ணுதல்' (ஒளிர்நுதல்)
'தண்ணறுங் காந்தள் முகையவிழ்ந்து
ஆனா நாறும் நறுநுதல்'

(ஆனா - நீங்காமல்)

'திலகம் தைஇய தேங்கமழ் திருநுதல்'
'நறும்புகை சூழ்ந்து காந்தள் நாறும்
வண்டுஇமிர் சுடர் நுதல்'
'நறுநுதல்'
'பசலை பாய்தரு நுதல்' '(பசும்பொன் நிறம்)
'பிறை நுதல்'
'பிறையேர் சுடர்நுதல்'
'பிறையேர் திருநுதல்'
'பிறை வனப்புற்ற மாசறு திருநுதல்'
'பிறையென மதிமயக்கறூஉம் நுதல்'
'மணம் நாறு நறுநுதல்'
'முல்லைப் பசுமுகைத் தாதுநாறும் நறுநுதல்'

முகம்:

'அகல்மதி தீங்கதிர் விட்டது போலும் முகம்'
'தீங்கதிர் மதியேய்க்கும் திருமுகம்'
(தீங்கதிர் - குளிர் ஒளி; ஏய்க்கும் - ஒத்த)
'துகளறு வாள் முகம்' (ஒளி)

இதழ்:

'அடர்பொன் என்னச் சுடர்இதழ்'
'தாமரை அல்லிசேர் ஆயிதழ் அரக்குத்
தோய்ந்தவை போல் இதழ்'
'சேயிதழ்'
'மலரிதழ்'
'பவள ஒளி படரிதழ்'
'கொவ்வை யிதழ்'
'கோவைக் கனி உறழிதழ்'
'மெல்லிதழ்'
'நேரிதழ் ஆம்பல் நிரையிதழ்'
'பூவிதழ்'
'போதின் நிறம் பெறும் ஈரிதழ்'

வாய்:

'அமிழ்து பொதி துவர்வாய்'
'இலங்கு முத்து உறைக்கும்
'எயிறு கெழு துவர் வாய்' (சிவந்த)
'பொலம் புனை மகரவாய்'
'சில்மொழித் துவர்வாய்'
'முள் எயிறு துவர் வாய்'
'மூள் எயிற்று அமிழ்தம் ஊறும் செவ்வாய்'

நகை (பல், எயிறு, முறுவல், வாயூறும் நீர்)

'ஊடினும் இனிய கூறும் இன்நகை'
'ஊறுநீர் அமிழ்து ஏய்க்கும் எயிறு'
'செறிமுறைப் பல்'
'செறி முறை வெண் பல்'
'செறி எயிறு'
'செறிந்த ஏர் முறுவல்'
'தாழ் நீர் முத்தின் நகை ஏய்க்கும் முறுவல்'
'மணமௌவல் முகையன்ன, (மல்லிகை)
மாவீழ் வார்நிரை வெண்பல்'

(மா - அழகு)

'முள் எயிறு'

'முத்து ஏர் வெண்பல்'

'முள் உறல் முளை எயிறு'

'முள்நுனை தோன்றாமை முறுவல் கொண்டு
அடக்கித்தன் கண்ணினும் முகத்தினும் நகுபவள்'

'முளை வாள் எயிறு' (வெள்ளிய)

'முறுவல் இன் நகை'

'முகைஏர் எல்எயிற்று இன் நகை'

'முருந்துஏர் வெண்பல் முகிழ்நகை'

(முருந்து - மயிலிறகின் அடி)

'மூரல் முறுவல்' (புன்னகை)

'நறுமுல்லை நேர்முகை ஒப்ப நிரைத்த
செறிமுறை பல்'

'வாலெயிற்று அமர் நகை'

'வாலெயிறு ஊறிய வசையில் தீம் நீர்'

'பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்' - 1121

மொழி (கிளவி) :

'அன்புறு கிளவி'

'இனிபுரை கிளவி'

'இன்மணிச் சிலம்பின் சின்மொழி'

'செந்தார்க் கிளி ஓரன்ன கிளவி'

'செவ்வழி யாழ் நரம்பு அன்ன கிளவி'

'தேம் மொழி'

'பேதுறு மடமொழி'

(பேதுறு - மயங்கச் செய்)

(மடமொழி - கள்ளம் கவடு அற்ற மொழி)

'மகிழ்செய் தேமொழி'

'மெல்லிய இனிய மேவறு தகுந
இவை மொழி'

'நரம்பு ஆர்த்தன்ன தீம் கிளவி'

நோக்கு:

'நோக்குதல் தாக்கணங்கு
தானைக் கொண்டன்னது உடைத்து' - 1082

'கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து' -1085

'கண்டார் உயிருண்ணும்............ கண்' -1034

'நடுங்குஅஞர்.... செய்யும் கண்' -1086

'இருநோக்கு இவள் உண்கண் உள்ளது; ஒருநோக்கு
நோய்நோக்கு; ஒன்று அந்நோய் மருந்து' -1091

'சிறுநோக்கம்..... காமத்தின் பெரிது' -1093

'கண்ணொடு கண்ணினை நோக்குஒக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல' -1100

'மதைஇய நோக்கு' (மதர்ப்பு)

'பிணையெழில் நோக்கு'

'மருளிகொள் மடநோக்கு'

கூந்தல் (ஐம்பால், ஓதி, கூழை, கோதை, கதுப்பு, முடி)

'அறல் அவிர் நீள் ஐம்பால்'

'அணிநிறங் கொண்ட மணிமருள் ஐம்பால்'

'இருள்வணர் ஒலிவரும் புரிஅவிழ் ஐம்பால்'

'அவிழ் இணர்த் தேம்பாய்
மராஅம் கமழும் கூந்தல்'

'இரும்பல் ஒளிவரும் கூந்தல்'

'இருள் உறழ் இருங் கூந்தல்'

'இருள் உறு கூந்தல்'

'எல்லுறும் மௌவல் நாறும் பல்லிரும் கூந்தல்'

'ஐவகைக் கூந்தல்'

'ஐதாக நெறித்தன்ன அழகொளிர் கூந்தல்'

'ஒள்ளிழை வாருறு வந்தல்'

'ஒலிமென் கூந்தல்'

'ஒடுங்கு ஈர் ஓதி'

'கமழ்அகில் ஆரம் நாறும் அறல்போல் கூந்தல்'
(அறல் - கருமணல்)
'சாந்து உளர் கூழை'
'சோர்ந்து வீழ்கதுப்பு'
'குவளைக் குறுந்தாள் நாள்மலர் நாறும்
நறுமென் கூந்தல்'
'குவளை நாறும் கூந்தல்'
'தண்ணிய கமழும் தாழிருங் கூந்தல்'
'தண்நறும் நெய்தல் நாறும்'
'பின்னிரும் கூந்தல்'
'தண்ணெனத் தகரம் நீவிய துவராக் கூந்தல்'
'தண்ணறுங் கதுப்பு'
'தாழ் கதுப்பு'
'தாது சூழ் கூந்தல்'
'தேம் கமழ் கதுப்பு' (நறுமணம்)
'தேம் பாய் கூந்தல்'
'தேம் கமழ் ஐம்பால்'
'தேம் மறப்பு அறியாக் கமழ் கூந்தல்'
'நரந்தம் நாறும் இருங் கூந்தல்' (கத்தூரி)
'நரந்தம் நாறும் குவையிருங் கூந்தல்' (குவிந்த)
'நறுவீ ஐம்பால்' (வீ - மலர்)
'நலம்மிகு கூந்தல்'
'நறுமென் கூந்தல்'
'நெய்யிடை நீவி மணியொளி விட்டன்ன
ஐவகைக் கூந்தல்'
'நெறி இருங் கதுப்பு'
'பனிமலர்க் குவளை உள்ளகம் கமழும் கூந்தல்'
'புயல் நெடுங் கூந்தல்' (மேகம்)
'புறந்தாழ்வு இருண்ட கூநதல்'
'பூக்கமழ் கூந்தல்'
'பெருந்தண் சாந்தம் வகைசேர் ஐம்பால்'

'பொம்மல் ஓதி'
'போது ஆர் கூந்தல்'
'மலர் வேய்ந்த கூந்தல்!'
'மாயிதழ்க் குவளைப் போது நாறும்
அம் சில் ஓதி'
'மாரிவீழ் இருங் கூந்தல்'
'முகம் புதை கதுப்பு'
'வண்டு படு கூந்தல்'
'விரி ஒலி கூந்தல்'
'விரிந்து ஒலி கூந்தல்'
'வீ பெய் கூந்தல்'
'தோட்டார் கதுப்பு' (பூவணிந்த) -1105

தோள் :

'அமிழ்தின் இயன்றன தோள்' -1106
'கண்நிறைந்த காரிகைக் (அழகு)
காம்பு ஏர் தோள்' -1272
'காரிகை தோள்' -1262
'பணைத் தோள்' -1234
'மணந்தநாள் வீங்கிய தோள்' -1283
'மென்தோள்' -1103, 1265, 1279, 1325.
'அமைக் கவின் கொண்ட தோள் இணை'
'தடமென் பணைத்தோள்'
'திருந்திழை மென்தோள்'
'தொண்டி யன்ன பணைத்தோள்' (கலப்பைக் கிழங்கு)
'நலம்மிக நந்திய'
'நயம்வரு தடமென்தோள்'
'நடாஅக் கரும்பு அமன்றதோள்'
'நேரிறைப் பணைத்தோள்'
'வீங்குஇறைத் தடைஇய, அமை மருள் பணைத்தோள்'
'பணையெழில் மென்தோள்'
'பரந்த சுணங்கின் பணைத்தோள்'

'பெருந்தோள்'
'மறப்ப அரும் பணைத்தோள்
மாண்எழில் வேய் வென்ற தோள்'
மெல்லிறைப் பணைத் தோள்'
'வேய் மருள் பணைத்தோள்'
'வேய்புரை மென்தோள்'
'வேய் என விறல் வனப்பு எய்திய தோள்'
*(விறல் - பெருமை)*

*ஆகம் : (மார்பு, நெஞ்சு)*

'அலர்முலை ஆகம்'
'அணிமுலை ஆகம்'
'பூண்தாழ் ஆகம்'
'பொறிகிளர் ஆகம்'
'சுணங்குஅணி ஆகம்' (தேமல்)
'நுண்ணெழில் மாமைச் சுணங்கணி ஆகம்'
'மெல்லிய நெஞ்சு'

*நுகப்பு : (இடை, நுடங்கு)*

'ஒழுகு நுண் நுசுப்பு'
'நல்கூர் நுசுப்பு'
'வயல் மலர் ஆம்பல்'
'கயல் அமை நுடங்கு' (இடையணி)

*முலை :*

'கடாஅக் களிற்றின் மேல் கட்படாம் மாதர்'
'படாஅ முலைமேல் துகில்' -1087
'அரும்பிய சுணங்கின் அம்பகட்டு இளமுலை' (தேமல்)
'அம்மெல் ஆகம் நிறைய வீங்கிக்
கொம்மை வரிமுலை'
'அண்ணாந்து ஏந்திய வனமுலை'

*'இடைமுலை'*

'எதிர்த்த தித்தி முற்றா முலை' (தேமல்)

'ஐய பிதிர்ந்த சுணங்கனி மென்முலை'
'கருங்கண் வெம்முலை'
'குளன் அணிதாமரை பாசரும்பு விட்டன்ன

இளமுலை'

'கோங்கின் முதிரா இளமுகை யொப்ப
எதிரிய தொய்யில் பொறித்த வனமுலை'
'சுணங்கு வளர் இளமுலை'
'சுணங்கு அணி வனமுலை'
'நல்அக வனமுலை'
'மதர்எழில் பூண்அக வனமுலை'
'மாண்முலை'
'மீவரும் இளமுலை'
'முகிழ் முகிழ்த்தன்ன முலை'
'வளைந்து ஏந்து இளமுலை'
'வெம்முலை'
'முதிர்கோங்கின் முகை என
முகம் செய்த குரும்பை என
பெயல் துளி முகில் என
பெருத்தநின் இளமுலை' - கலி : 56

கை, முன் கை:

'ஈர் நறுங் கை'
'தொகுவளை முன்கை'
'தொடி நிரை முன்கை'
'தொடி செறி யாப்பமை முன்கை'
'மயிர் வார் முன்கை'
'மயிர் வார்ந்த அரிமுன் கை'

வளை :

'இலங்கு ஏர் எல் வளை'
'கோல் அமை குறுந்தொடி'

விரல் :

'காந்தள் மெல்விரல்'

'நறாஅ அவிழ்ந்தன்ன மெல்விரல்'

(நறாஅ - அனிச்சம் பூ, குங்குமப்பூ)

குறங்கு : (தொடை)

'சேர்ந்து செறி குறங்கு'

கால் :

'அரும்பிய சுணங்கின் கணைக்கால்'

அடி:

'ஒள்ளிதழ் அவிழகம் கடுக்கும் சீறடி

'மெல்லிய மேவந்த சீறடி' (சிறிய)

'கதநாய் நல்நாப் புரையும் சீர்அடி' (அழகிய)

'பஞ்சி மெல் அடி'

அல்குல் (அடி வயிற்றுக்குக் கீழும், கருவாய்க்கு மேலும் உள்ள தட்டுப் பகுதி)

'ஆய்தழை நுடங்கும் அல்குல்'

'ஐது அமைந்த அகன்ற அல்குல்'

(ஐது - மென்மையானது, அழகிது)

'ஐது அகல் அல்குல்'

'தட அரவு அல்குல்' (பாம்பின் தலை)

'திதலை அல்குல்' (பொறித் தேமல்)

'பல்பூம் பகைத்தழை நுடங்கும் அல்குல்'

'பல்காழ் அல்குல்'

'பூந்துகில் அல்குல்'

'தேர்அகல் அல்குல்'

மேனி :

'எழில் மா மேனி'

'குறிஞ்சி நாள்மலர் புரையும் மேனி'

'சாந்தம் நாறும் நறியோள்'

'தளி பொழி தளிர் அன்ன எழில் மேனி' (மாந்தளிர்)

'தளிர் அன்னோள்'

'திருமேனி புரையும் மேனி' (ஒத்த)

'நறுந்தண்ணிய நல்மா மேனி'

'பாவை அன்ன வனப்பினள்'

'பாவையர் குளிர்ந்த மேனி'
'பொன்னேர் மேனி'
'பொன்போல் மேனி'
'மாண உருக்கிய நல்பொன் மணிஉறீஇ
பேணித் துடைத்த மேனி'

*இயல் : (சாயல், நடை)*

'அணிநடை' (அழகு)
'அசை நடை'
'அணிமயிலன்ன அசை நடை'
'மயில் ஓரன்ன சாயல்'
'மடமிகு குறுமகள்'
'மாழை மடமான் பிணைஇயல்'
'நனிநாண் உடையள்'

*நலம் : (நுகர்ச்சி இன்பம்)*

'மத்தம் பிணித்த கயிறுபோல் நின்நலம்
சுற்றிச் சூழலும் என் நெஞ்சு'

*இனி, பொதுவாகப் பெண்ணின் அனைத்து உறுப்புகளும் ஒரு வண்ணிக்கப் பெற்றுள்ள சில செய்யுளடிகள் வருமாறு :*

'வேய்எனத் திரண்டதோள்
வெறிகமழ் வணர் ஐம்பால்,
மாவென்ற மடநோக்கின்
மயிலியல் தளர்பு ஒல்கி
ஆய்சிலம்பு அரிஆர்ப்ப
அவிர்ஒளி இழை இமைப்ப,
கொடியென மின்னென
அணங்கென யாதொன்றும்
தெரிகல்லா இடையின்கண்
கண்கவர்பு ஒருங்கு ஓட-' கலி:57
'வார்உறு வணர்ஐம்பால்
வணங்குஇறை நெடுமன்தோள்
பேரெழில் மலருண்கண்

பிணையெழில் மான்நோக்கு
கார்எதிர் தளிர்மேனி
கவின்பெறு சுடர்நுதல்
கூர்எயிற்று முகைவெண் பல்
கொடிபுரையும் நுசுப்பினாய்!
நேர்சிலம்பு அரிஆர்ப்ப
நிரைதொடிக் கைவீசினை,
ஆருயிர் வெளவிக் கொண்டு' - கலி:58.

'சுணங்கணி வனமுலை
சுடர்கொண்ட நறுநுதல்
மணங்கமழ் நறுங்கோதை
மாரிவீழ் இருங்கூந்தல்
நுணங்கு எழில் ஒண் தித்தி
நுழைநொசி மடமருங்குல்
வணங்கிறை வரிமுன்கை,
வரிஆர்ந்த அல்குலாய்!' - கலி:60.

'முழுமதி புரைமுகமே, முரிபுரு வில்லிணையே,
எழுதரு மின்னிடையே - எனை இடர் செய்தவையே!
மருவிரி புரிகுழலே, மதிபுரை திருமுகமே,
இருகயல் இணைவிழியே, - எனை இடர் செய்தவையே!'

- சிலப். 7, 14-15.

'கண்ணினும் கதவநின் முலையே!
முலையினும் கதவநின் தடமென் தோளே!' - ஐங் : 361.

(கதவ - சூடு)

'ஆய்இதழ் உண்கண்; அலர்முகத் தாமரை;
தாள் தாமரை; தோள் தமனியக் கயமலர்;
எம்கைப் பதுமம்; கொங்கைக் கயமுகை;
செவ்வாய் ஆம்பல்' பரிபாடல் 8 : 113-116.

- இனி, காமஞ்சால் இளவன் ஒருவன், ஏமஞ்சால் இளையள் ஒருத்தியைக் கண்டு, தன்னிலை மறந்து ஏதுஞ்செய்ய வியலாமல் பேதுற்று, அவளைப்

போல்வாரைத் தெருவின்கண் நடமாட விட்டதே தவறு; அதற்கு அரசனே பொறுப்புடையவன்; அத்தகைய பெண்டிர் தெருவின்கண் விடப்பெறுங்கால், மத யானை ஒன்று நீர்நிலைக்கு அழைத்துச் செல்லப் பெறுகையில், 'எல்லாரும் ஓடி ஒளிந்து கொள்ளுங்கள்' என்று பறையறைந்து முன்னறிவிப்பதுபோல், இவளன்னோர் வருகைக்கும் பறையறைந்து அல்லாமல் செல்லற்க என்று அறிவியாமற் போன அரசனே குற்றமுடையவன்' என்று குற்றஞ்சாட்டுதல் ஒரு பாடலின் கண் கூறப்பெறுகிறது. அஃது இது:

**'பேதுற்றாய் போலப் பிறர்எவ்வம் நீஅறிவாய்,**
**யாது ஒன்றும் வாய்வாளாது இறந்தீவாய்! கேள் இனி,**
**நீயும் தவறுஇலை; நின்னைப் புறங்கடைப்**
**போதர விட்ட நுமரும், தவறுஇலர்;**
**நிறையழி கொல்யானை நீர்க்கு விட்டாங்கு,**
**பறை அறைந்தல்லது செல்லற்க' என்னா**
**இறையே தவறுடையான்'** **கலி:56**

- இனி, இன்ன பாடல்கள் நிறையவுள.

- இங்குக் காட்டப்பெற்ற வண்ணனைப் பாடலடிகள் அனைத்தும் கடைக்கழகக் கால இலக்கியங்களிலிருந்தே எடுக்கப் பெற்றவை. இவையன்றி, இடைக்கால, பிற்கால, இக்கால இலக்கியங்களுள், அவை வரவர வலிந்தும் பொலிந்தும், இன்னும் பலபடியாக மிகுந்தும், வெளிப்படையாகவும் கூறப்பெற்றுள்ளன; கூறவும் பெறுகின்றன. அவற்றை அவ்வவ் விடங்களுள் கண்டு கொள்க.

- இனி, இக்காலத்தில் இவ்வாண்பெண் ஈடுபாட்டு நிலை கழகக் கால இலக்கியங்களைவிட, பன்னூறு மடங்கு தாறுமாறாக வளர்ந்தும் இழிந்தும் நிற்கின்றதை அறிஞர்கள் சிந்திக்க வேண்டும். அவற்றுள் ஒருசோற்று ஒருபதமாகவும், பொது மக்களுடன் மிகுதொடர்புடைய திரைக்கலையில் வருவனவற்றுள்ளேயே சிறந்த இசைமேதை பாபநாசம் சிவன் என்னும் இசைப்புலவரால் எழுதப் பெற்றதாகவும் உள்ள இரண்டு இசைபாடற் பகுதிகள் இங்கு தரப்பெறுகின்றன. அவை தூய காதலுணர்வு சான்றன வெனினும், அவை மறவுணர்வையும் தாண்டி எவ்வாறு மேலோங்கி நிற்கின்றன என்பதைக் கவனிக்கவும்.

**'உலகினில் இன்பம் வேறுண்டோ ?**
**உயிர்களுக்கோர் ஆறுதல் உண்டோ ?**
**மலரயன் படைப்பில் ஆணொடு பெண்ணும்**
**குலவி மகிழுமொரு கலவி இன்பமல்லது**

**பிரம்மன் நாவில் கொண்டான்;**
**பெருமாள் மார்பில் கொண்டான்;**
**அரன்மெய்ப் பாதிகொண்டான்; பேசவாயுண்டோ ?'**

**'சந்திர சூரியர் போங்கதி மாறினும்**
**வீழினும் நமக்கென்ன ?**
**இந்த இன்பமே சொந்தமதானால்**
**வானுலகும் வேண்டேன்'**

- இவை, ஈண்டு, இவ்வகையில் ஓரளவு விரிவாகவும் செறிவாகவும் காட்டப் பெறுவதன் நோக்கம் என்னெனில், மக்கள், எப் பருவத்தினராகவும், எத்திறத்தினராகவும், எம்மதத்தினராகவும், எவ்வொழுக்கத்தினராகவும் இருப்பினும், வேறு எந்த வுணர்வினும் காமவுணர்வு அவர்களிடம் இயற்கையாகவே அவர்களின் மனத்திலும், அறிவிலும், உடலிலும் நிறைந்தியல்வதும், அதனை நீக்கவோ, குறைக்கவோ, செயல்வழிப் படுத்தவோ இயலாமல் நெருடல் மனத்தினராகவும் வருடல் அறிவினராகவும், வாய்ப்பிருப்பின் திருடல் உணர்வினராகவும் இருப்பதையும், அவர்கள் அத்தகைய இயல்புணர்வை மீறி, ஒழுங்கு காப்பது மிகு கடினமாகவும், மீறிய முயல்வினதாகவும் உள்ளதென்பதை உணர்த்துவான் வேண்டியே என்க.

- நூலாசிரியர் போலும் வாலறிவுடையோருங்கூட இவ்வுணர்வை அடையாளம் கண்டு காட்டியிருப்பது அறிதற்பாலதாகும்.

- உலகம் காமத்தில் தொடங்குகின்றது; காமத்தில் நடக்கின்றது; காமத்தில் முடிவடைகிறது. உலகோரை மிகுதியும் வருத்துவது, வறுமையைவிடக் காமமே என்றால் தவறில்லை.

- இனி, காமம் தவிர்க்கவியலாத இயல்புணர்வு என்பதால், அதனை அறிவு நூலாசிரியர்களும், அறநூலாசிரியர்களும், மத நூலாசிரியர்களும், மருத்துவ நூலாசிரியர்களும், ஒருமித்து, அம் மீதுறு உணர்வைக் கட்டுப்படுத்தி முறைவழிப்பட நிறை கூறினர்; தொடர்ந்து கூறியும் வருகின்றனர்.

- ஒழுக்கம் தன்னைத் தான் கொண்டு ஒழுகுவது என்றும், அப் பொழுதுதான் ஒருவன் பெருமைக்குரிய செயல்களைச் செய்தற்கியலும் என்றும் வலியுறுத்துவார் அறிவாசிரியரும்.

**'ஒருமை மகளிரே போலப் பெருமையும்**
**தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு'** - **974**
**'பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்**
**நாணாக நாணுத் தரும்'** - **902**
**'எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க்கு எஞ்ஞான்றும்**
**பெண்சேர்ந்தார் பேதைமை இல்'** - **910**
**'.... வினைவிழைவார் வேண்டாப் பொருளும் அது'** - **901**

- என்றெல்லாம் அவர் தெளிவுறுத்திக் கூறும் கூற்றுகள் கவனிக்கத் தக்கன.

- எனவே, 'பரிந்து' என்பதற்கு மிகமுயன்று என்று முதற்பொருளும், 'தன் நெஞ்சையும் அறிவையும் உடலை வருத்தியேனும்' என்று துணைப் பொருளும் கூறி, அச் சொல்லின் பொருள் ஆழத்தையும் உணர்வாழத்தையும் உணர்க.

3. **தெரிந்து ஓம்பித் தேரினும் அஃதே துணை** - ஒருவற்கு வேண்டிய அனைத்து நிலைகளையும் அவற்றின் தேவைகளையும், (பலவாறு) ஆராய்ந்து உணர்ந்து, அவற்றுள் சிறந்த ஒன்றைச் சீர்தூக்கித் தேர்ந்தாலும் அவ் வொழுக்கமே அவனைக் காக்கின்ற துணையாக உள்ளது.

- இவ்வடியில் ஆசிரியர் பயன்படுத்திய சொற்கள் மிக எளியவாக இருப்பினும் அவை மிகவும் கூரியவை.

- 'தெரிந்து' என்பதற்குக் கல்வி வழியாகவும் கேள்வி வழியாகவும் மக்களின் அனைத்துத் தேவைக் கூறுகளையும், ஆராய்ந்து உணர்ந்து தெளிந்து - எனப் பொருள் பெருகுதலை அறிதல் வேண்டும்.

- வெறுமே 'தேரினும்' என்னாது 'ஓம்பித் தேரினும்' என்றது, 'சீர் தூக்கிப் பார்த்துத் தேரினும்' என்று பொருள் தரவேண்டி என்க.

- ஓம்புதல் என்பதற்குச் 'சீர்தூக்கி' என்னும் பொருளும் உண்டு. 'சீர்தூக்கி, அவ் வேண்டுதல் உணர்வுகளின் நன்மை தீமைகளை நடுவுநிலையாகச் சிந்தித்துத் தேரினும்' என்று பொருள் பெருகுதல் உணர்க.

- 'அஃது துணை' என்றது, அது மற்று வேறு எந்தக் கடைப்பிடியும் இல்லாது, அது வொன்றே ஒருவரின் அனைத்து முயல்வுகளுக்கும் துணையாக நிற்பது - எனல்வேண்டி ஏகாரம் தேற்றம்.

**'இழுக்கத்தின் மிக்க இழிவில்லை; இல்லை**
**ஒழுக்கத்தின் மிக்க உயர்வு'** - **பழமொழி : 64**

என்றார் பிறரும்.

4. இஃது, 'உயிரினும் ஓம்பப் படும்' என்பதற்கான விளக்கமாய் அமைந்ததாகலின், அதன் பின்னர் வைக்கப் பெற்றது.

## கங௩. ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும். - 133

**பொருள்கோள் முறை : இயல்பு.**

**பொழிப்புரை :** ஒழுக்கம் உடைமையே குடும்ப அமைவுக்கும், குடியமைவுக்கும் குமுக அமைவுக்கும் காரணம். அதில் பிறழ்ச்சி தோன்றி இழுக்கம் நிகழுமாயின், அம் மூன்று அமைப்புகளும் கெட்டு, மக்கள் பிறவிச் சிறப்புத் தாழ்ந்து, அடுத்துள்ள விலங்குப் பிறவிநிலை ஆகிவிடும்.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. இஃது, அவ் வொழுக்க நிலையால் ஏற்பட்ட பொது அமைவுச் சீர்மைகளையும், அது தாழ்ந்து தவிரும் நிலையில் தோன்றும், விலங்கு நிலையையும் விளக்கியது.

2. **ஒழுக்கம் உடைமை குடிமை** - ஒருவனின் தனியொழுக்க நிலைகளே, இல்லறமாகிய குடும்ப அமைப்பிற்கும், அதன் வழித்தாய குடிநிலை அமைப்பிற்கும், அதன் வழித்தாய குமுக அமைப்பிற்கும் காரணம் ஆகும்.

தனியொழுக்கத்தின் அடிப்படையாகத்தான் இல்லறவியல் என்னும் குடும்ப அமைப்பு அமையும்; இல்லெனில் இல்லற அமைப்புக் கெடும். என்னை?

குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் தம்தம் தனிநிலை ஒழுக்கத்தில் ஈடுபடும் பொழுதுதான் குடும்பப் பிணைப்பு கெடாமல் இருக்கும். அவருள் கணவனோ, மனைவியோ, பிள்ளைகளோ ஒழுக்கத்தைக் கடைப்பிடியாமல் போவராயின் அக் குடும்பம் சிதைவடைதல் உறுதி.

இனி, குடும்ப அமைப்புச் சிறந்து நின்றால்தான் குடியமைப்பும் சிதைவுறாமல் நிற்கும்; அவ்வாறு அதுசிறந்து நின்றால்தான் குமுக (சமுக) அமைப்புச் சிதர்வுறாமல் இருக்கும்.

எனவே, தனிநிலை ஒழுக்கமே, குமுக அமைவிற்கு அடிப்படை என்க.

- இத் தொடரில் மிகவும் கவனிக்க வேண்டிய சொல் 'குடிமை' என்பது. குடி - குடிமை.

- ஒன்று, குடும்பம்.

அப்பொருள், 171, 502, 601, 603, 604, 609, 681, 704, 794, 887, 888, 952, 954, 957, 992 ஆகிய குறள்களில் கையாளப் பெறுகின்றது.

- இரண்டு, குடியின மக்கள் அஃதாவது மொழியின மக்கள்.

அப்பொருள், குடிசெயல் வகை (அதிகாரம்), 1022, 1023, 1025, 1028, 1030 ஆகியவற்றில் கொள்ளப் பெறுகிறது.

மூன்று, குடிமக்கள் (குமுகாயம் - பல இனமக்கள் கலந்தது)

அப்பொருள், 381, 390, 542, 544, 549, 554, 632 ஆகிய குறள்களில் கையாளப் பெறுகின்றது.

- 'குடிமை' என்னும் சொல் 'குடி' என்னும் பெயரடியாகப் பிறந்த பண்புப் பெயராதலின் இம் மூன்று பொருள்களையும் அச் சொல் சுட்டும் என்க. அப்பொருள்களை அவ்வவ் விடங்களை நோக்கிக் கொள்ளுதல் வேண்டும் என்க. 'மை' - பண்புப் பெயரீறு, ஆண் - ஆண்மை; பெண் - பெண்மை.

- எனவேதான், இவ்விடத்தில் அச்சொல், இம் மூன்று பொருளையும் ஒரு சேரக் குறிக்குமாறு ஆசிரியர் மிக நுட்பமாகக் கையாளுவார்.

- இம் மூன்று பொருள்களும் தனித்தனியாக வராமல் அடுக்கு முறையில் இவ்விடத்தில் வந்தது என்க.

(எ-டு) பகை என்பது குடும்பப் பகையையும் குறிக்கும்; குடிப் பகையையும் குறிக்கும்; அரசுப் பகையையும் குறிக்கும் ஒருசொல்.

குடும்பப் பகை : 146, 434, 887, 995 முதலியவை.

குடிப்பகை : 304, 450, 735, 872, 883, 884, 885, 888 முதலியவை.

அரசுப்பகை: 727, 734, 744, 763, 861, 863, 867, 874, 875 முதலியவை.

3. **இழுக்கம் இழிந்த பிறப்புஆய் விடும்** - ஒழுக்கத்தின்கண் பிறழ்ச்சி தோன்றி இழுக்கம் நிகழுமாயின், அம் மூன்று அமைப்புகளும் கெட்டு, மக்கள் பிறவிச்சிறப்புத் தாழ்ந்து, அடுத்துள்ள விலங்குப் பிறவிநிலை ஆகிவிடும்.

- ஒழுக்கத்தின் எதிர்நிலை இழுக்கம்.

- ஒழுக்கம் இழிந்தநிலை இழுக்கம்.

- ஒழுக்கத்தின் பாற்பட்டு நின்ற மக்கள் அது பிறழ, மக்கட்குரிய மாந்தவியல் சிறப்புக் கூறுகளாய பண்பு, நாகரிகக் கூறுகள் முதலியன இல்லாமற் போய், விலங்குத் தன்மைகள் மேலோங்கி, மக்கட்பிறவி

என்னும் சிறப்புத் தன்மைக்கு உரியர் ஆகாமல், விலங்குகள் போல் வாழத் தொடங்கி விடுவர் என்பார், என்க. என்னை?

**'ஊண்உடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல**
**நாண்உடைமை மாந்தர் சிறப்பு' - 1012**

**'உறுப்புஒத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க**
**பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு' - 993**

**'அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண்பு இல்லா தவர்' - 997**

**'தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்**
**நிலையின் இழிந்தக் கடை' - 964**

- என்றவாறு, மக்களின் ஒழுக்கம் கெடின், அவர்கள் விலங்குகள் போல் கீழ்மை நிலைக்கும், பண்பாடும் நாகரிகமும் எய்தாக் காட்டு விலங்காண்டி (காட்டு மிருகாண்டி - காட்டு மிராண்டி) நிலைக்கும், மரம் போல் ஓரறிவுயிர்த் தன்மைக்கும், இன்னும் கீழான மயிர் போலும் இழிவான பொருள் தன்மைக்கும் இணையாக மதிக்கப் பெறுவர் என்பார் ஆகலின்.

- இந்நிலைகள் படிப்படியான கீழ்மை நிலைகளைக் காட்டுவன என்க.

- பண்பு, நாகரிகச் சிறப்புக் கூறுகளே மக்கள் என்னும் ஆறறி உயிர்நிலைக்கு ஏற்றவை என்பது அறிஞர்களின் ஒத்திணைந்த கருத்து.

- அவை, குடும்ப அமைவு நிலை, குடியமைவு நிலை, குமுகாய அமைவு நிலை, ஆட்சியமைவு நிலை, பொருள் பகிர்வு நிலை, அறமுறை நிலை - முதலிய நாகரிக நிலைகளும்,

- மொழி வளர்ச்சி, இலக்கிய இலக்கண ஆக்கம், கலை, கல்வி, பொதுநலம், அறவுணர்வு முதலிய அறிவு நிலைகளும்,

- அன்புடைமை, விருந்தோம்பல், நன்றியறிவு, நடுவுநிலைமை, ஒழுக்கமுடைமை, பண்புடைமை, ஈகை, ஒப்புரவறிவு, வாய்மை, மானமுடைமை, நாணமுடைமை முதலிய பண்பியல் நிலைகளுமாம் என்க.

- அறிவு நிலைகள் நாகரிகத்துள் அடங்கும் **நாகரிகம்** என்பது **புறக்கூறுகளின் வளர்ச்சி.**

- **பண்பாடு,** பண்பியல் - என்பது **அகக் கூறுகளின் வளர்ச்சி.**

- இவ்விரு கூறுகளும், அவற்றின் வளர்ச்சியும் மக்கள் அல்லாத பிற உயிரினங்களுக்கு இல்லை.

- ஆனால், அவற்றிற்கு மக்களின் பிற உயிரியல் செயற்பாடுகளான ஊண் உண்ணல், உடையணிந்திருத்தல் போலும் நிறம், தோற்றம், பொலிவு, காப்பு முதலியவும், ஆண்பெண் மருவுதல், இன்பங் கொள்ளுதல், உயிர்ப்பெருக்கம் செய்தல், கூடிவாழ்தல், தலைமைதாங்கல், பகையொழித்தல், உறையுள் அமைத்தல் முதலியன யாவும் உண்டு எனல் அனைவரும் அறிவதே. இவ்வுண்மைதான், மேற்காட்டிய,

'ஊண் உடை எச்சம்' (1012) என்னும் மெய்யுரையிலும் விளக்கப் பெற்றுள்ளது.

- காட்டு விலங்காண்டிகளும் கயமை மாந்தர்களும், பிற மக்களைப் போலவே, ஐம்பொறிகள் செயலுறுப்புகள், பிற அறிவு விளக்க நிலைகள் முதலிய யாவற்றிலும் மக்களை ஒத்திருப்பினும், பண்பும் ஒழுக்கமும் இல்லாது, 'மேவன செய்து' (1071) இயங்குவதால், பண்பில்லாதவர்கள் அவர்களைப் போன்றவரே என்னும் உண்மையை.

**'உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால்'** (993) என்னும் வாய்மையுரையிலும்,

- அறிவில் கூர்மையுடையராக விருந்தும், பண்பு வளர்ச்சியில்லா அறிவுடையவர்கள், பிற பயன்களைக் கொண்டிருப்பினும், மக்கள் தன்மையில்லாமல் ஓரறிவுயிராகவுள்ள மரம் என்னும் இடித்துரையை, 'அரம்போலும் (997) என்னும் பொய்யாமொழியினும்,

- மாந்த நிலையினின்று இழிந்து நிற்பவர் தலையினின்று இழிந்து, பெருமையிழந்து நிற்கும் மயிரினுக்கு இணையாகக் கருதப் பெற வேண்டியவரே என்னும் உண்மையைத்

'தலையின் இழிந்த மயிரனையர்' (964) என்னும் சால்புரையிலும் ஆசிரியர் விளக்குவது காண்க.

- எனவே, 'இழுக்கம்' இழிந்த பிறப்பாய் விடுதலை நூலாசிரியரே அவ்வவ் விடங்களில் காட்டுவது அவர் கருத்தைத் தெள்ளிதின் உணர்த்தவே என்க.

- இஃதிவ்வாறிருக்க, நம் முன்னைய உரையாசிரியர்களான மணக்குடவரும், பரிமேலழகரும் அவர் சார்பினர் பிறரும் கொண்டு கூறும் உரை நல்லறிவினார் நகைக்கத்தக்கதும், நன்மக்களாயினார் நாணத்தக்கதும், நடுநிலையாளர் கடியத் தக்கதுமான இழுக்குரையாதல் காண்க.

- இதற்கு உரையெழுதுகையில், மணக்குடவர்.

'ஒருவன் இழிந்த குலத்தானாயினும் ஒழுக்கமுடையவனாக, உயர் குலத்தானாம்; அதனைத் தப்பி ஒழுகுவனாயின், உயர் குலத்தனாயினும் இழிகுலத்தானாயே விடும்' என்று பொழிப்புரை கூறி, 'இது குலம் கெடும் என்றது' என்று விளக்கமும் கூறுவார்.

- இவர் கருத்து உலகியல் நடைமுறைக்கு ஒத்து வராதது. என்னை? உயர்குலத்துப் பிறந்தவர்கள் எத்தனையோ பெயர்கள் ஒழுக்கம் தவறுதல் உடையவர்களாயிருப்பது வெளிப்படை. ஆனால் அவரெல்லாரையும் எவரும் தாழ்ந்த குலத்தினராகக் கீழிறக்கி விடுவதில்லை. அதேபோல், எத்தனையோ பெயர்கள் கீழ்க்குலத்தவர்கள் ஒழுக்க நெறியுடையவர்களாக இருப்பினும் அவரை உலகம் அவர் கூறும் உயர் குலத்தவராக மதிப்பிட்டு விடுவதில்லை. எனவே, இது வெறும் கண்துடைப்புக் கருத்தே, இதற்கு மணக்குடவர் காலத்திலும் சரி, அவர்க்குப் பின்னும் சரி வரலாற்றுச் சான்றுகள் இல்லை. சமய வரலாற்றில் ஒருசிலர் அவ்வாறு கருதப் பெற்றதாக வரலாற்றில் எழுதிவைத்த செய்திகளும் புனைவு கலந்த செய்திகளே. அவற்றிலுங்கூட, அச்சமயக் குரவர்கள் சிலர் உயர்வினராகக் கருதப்பெற்றதும், அவர்தம் இறுதியடையும் பொழுதே! அப்பொழுதுங்கூட அவர்கள் இன்றுவரை உயர்குலத்தினராகச் சொல்லப் பெற்றதும் இல்லை; மதிக்கப்பெற்றதும் இல்லை. வரலாற்றில் என்றும் அவர்கள் இழிகுலத்தவராகவேதாம் கூறப்பெறுகின்றனர்; அல்லது மதிக்கப்பெறுகின்றனர்.

- கண்ணப்பன் வேட்டுவ குலத்தினராகவும், திருநீலகண்ட யாழ்ப்பாணன் குயவர் குலத்தினராகவும், நந்தன் பறைக் குலத்தினனாகவுமேதாம் இன்றும் குறிப்பிடப் பெறுகின்றனர். அவர்கள் உயர்குலத்து ஆரியப் பார்ப்பனர்களாக என்றும் கொள்ளப் பெற்றதும் இல்லை; மதிக்கப் பெறுவதும் இல்லை. அவர்கள் உருவங்களைக் கல்வடிவங்களாக்கிக் கோயிலில் வைத்திருப்பதும், அவர்களை இறைவன் துறக்கவுலகத்தில் தன் அடிகளில் இணைத்துக் கொண்டான் என்று கதைகள் படிப்பதும், மதக் கவர்ச்சிக்கும், மத விளம்பரங்கட்கும், மக்களை மேலும் மேலும் அம்மதங்களில் சேர்ப்பதற்கும் ஆன சூழ்ச்சிகளே, அவை நாடகக் கதையியல் உத்திகளே என்க.

- இனி, மணக்குடவரின் இறுதி விளக்கமான 'இது குலம் கெடும்' என்பது, ஆரியவியலாரின் அல்லது ஆரியப் பார்ப்பனரின் 'நிறப்பகுப்பு', 'பிறவிப் பகுப்பு' என்னும் வர்ணாச்சிரமக் கொள்கையை ஏற்றுக் கொள்வதும், நிலைப்படுத்துவதுமான ஒரு மறைமுக நடவடிக்கையே - என்க. இத்திருக்குறளில் இவ்வகையான கருத்துகளுக்கு என்றும் எங்கும்

இடமில்லை என்றுகூறிப் புறந்தள்ளுக.

இனி, இவரையடுத்த பரிமேலழகரும், தம் உரைநூலுள், இவர் கருத்தை இன்னும் மெருகேற்றியும், வெளிப்படையாகவும்,

'எல்லார்க்கும் தத்தம் வருணத்திற்கேற்ற ஒழுக்கமுடைமை குலனுடைமையாம்; அவ் வொழுக்கத்தில் தவறுதல், அவ் வருணத்தில் தாழ்ந்த வருணமாய் விடும்' என்று உரை கூறி,

'பிறந்த வருணத்துள் இழிந்த குலத்தாராயினும் ஒழுக்கம் உடையவராக உயர்குலத்தராவர் ஆகலின் 'குடிமையாம்' என்றும், உயர்ந்த வருணத்துப் பிறந்தாராயினும் ஒழுக்கத்தில் தவறத் தாழ்ந்த வருணத்தராவர் ஆகலின், 'இழிந்த பிறப்பாய் விடும்' என்றும் கூறினார். உள்வழிப்படும் குணத்தினும் இல் வழிப்படும் குற்றம் பெரிதென்றவாறு' என்று விளக்கமும் கூறுகிறார்.

இவருரை ஒழுக்கத்திற்கே இழுக்கம் கற்பிப்பதாகும். 'திருக்குறள்' போலும் தமிழியல் அறநூலுக்கு உரையெழுதும் அறிவையும் வாய்ப்பையும் பெருமையும் பெற்றிருந்தும் இவர் குலப் பிரிவின் கொடுங்கடைப்பிடியான வருணாச்சிரமக் கொள்கையையும் பிறவிக் கொள்கையையும் விடாமல் மனத்தானும் அறிவானும் செயலானும் பற்றியிருப்பது அவரின் மதமூட நம்பிக்கையே தெளிவாகக் காட்டுகிறது என்க.

இவருக்கும் மணக்குடவர்க்குக் கூறிய மறுப்புரையே பொருந்தும் - போதும் - என்க.

இவர்களினின்று நாம் பெறுவது, இவரனையர் மூட மதத் தழும்பு, இவ் வாரிய மதமான வேதமதம் இருக்கும் வரை அழியாது என்பதும், '**திருக்குறள்**' போலும் தமிழியற் கொடுமுடி நூலுங்கூட, இவர் மதவழித்தாயது என்று கூறித் தமிழினத்தினார் அனைவரையும் இறுதிவரைத் தம் மத அடிமையராக வைத்திருப்பதுமே, இவர்களின் அறிவு, ஒழுக்கம், கடைப்பிடி, செயற்பாடு, மூச்சு, வாழ்க்கை முதலியவாம் என்று உறுதியாக உணர்ந்து கொள்ளுவதுதான் என்க.

4. இஃது, ஒழுக்கம் மக்களின் வாழ்வியலுக்கு எத்துணை இன்றியமையாதது என்னும் கருத்தை முந்தைய குறளுக்கு விளக்கமாகக் கூறுவதால் அதன் பின்னர் வைக்கப் பெற்றது, என்க.

## கந.ச. மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான் பிறப்பொழுக்கம் குன்றக் கெடும் - 134

பொருள்கோள் முறை:

பார்ப்பான் ஒத்து மறப்பினும் கொளலாகும்
பிறப்பு, ஒழுக்கம் குன்றக் கெடும்.

**பொழிப்புரை :** *ஆரியப் பார்ப்பனன் தன் பிழைப்புக்காக மனனம் செய்யப்பெற்ற, வேத மந்திர ஒத்துகளை மறந்து போனாலும், அவற்றை மீண்டும் படித்து நினைவிற் கொள்ளுதல் இயலும். ஆனால், அவன் உயர்வுடையதாகக் கருதிக்கொள்ளும் தன் பிறவிப்பெருமை. தன்னொழுக்கம் குறையுமானால், இல்லாமற் போய்விடும்.*

சில விளக்கக் குறிப்புகள் :

1. **பார்ப்பான் மறப்பினும் ஒத்துக் கொளலாகும் -** *ஆரியப் பார்ப்பனன் தன் பிழைப்புக்காக மனனம் செய்யப் பெற்ற, வேத மந்திர ஒத்துகளை மறந்து போனாலும், அவற்றை மீண்டும் படித்து நினைவிற் கொள்ளுதல் இயலும்.*

- *பார்ப்பானை, ஆரியப் பார்ப்பான் என்று வேறு பிரித்தது, தமிழப் பார்ப்பான் உளனாகலின். என்னை?*

- *பார்ப்பான் என்பது ஒரு தொழிலடியாகப் பிறந்த சொல். தமிழர் சமய வேத, ஆகம நூல்களைக் கோயில் வழிபாட்டுக்கு அடிப்படையாகக் கொண்டு பார்ப்பதும், அவற்றின்படி கோயில் கடவுளர்க்குத் தமிழ்வழித் திருப்பூசை, திருப்பலி முதலியன செய்தலாலும் அத்திருப் பணிசெய்வார் பார்ப்பார், குருவர், குருவன்மார், குருக்கள், அந்தணர் எனப்பெற்றனர்.*

- *ஆரியப் பார்ப்பனர், தென்னகம் வந்த பின்னர், ஏற்கனவே அரசர்க்கு மதக் கருமங்களையும் சடங்குகளையும் செய்து வந்த தமிழக் கருமகாரர்களுக்குப் பகரமாக, ஆரியப் 'புரோகிதர், (கிருத்திகர்) அமர்த்தப் பெற்றனர். பின்னர் அவரே கோயில் வழிபாடு செய்யவும் அற்றைத் தமிழ் அரசரால் பணிக்கப் பெற்றனர். அக்கால் அவரும் பார்ப்பார், குருக்கள், அந்தணர் எனப்பெற்றனர். அவர்கள் தமிழ் வேத, ஆகமங்களுக்குப் பகரமாகத் தங்களின் வேத, (நிகம)ங்களையே பொருளென்று மேற்கொண்டு பார்ப்பார் ஆயினர்! (நச்சினார்க்கினியர் கலித்தொகை உரை)*

- *அவர்களுக்கு முன்னிருந்த தமிழ்ப் பார்ப்பாரிடமிருந்து இவர்களை*

வேறுபடுத்திக் காட்டவே, இவர்களை ஆரியப் பார்ப்பனர் என வழங்குதலாயிற்று.

நாளடைவில், முழுக் கோயிலாட்சி வந்துற்ற பின்னர், அவரே பார்ப்பனர் ஆயினர். (அவருள் ஒருவன் பார்ப்பான்).

அவர்கள் வேத நிகம (ஆரிய வேதவழி ஆகமங்கள் 'நிகமங்கள்' எனப் பெற்றன.) வழித்தாய மந்திரங்களை (ஓத்துகளை) மனப்பாடம் செய்து, அரசக் கருமியங்களையும், கோயில் வழிபாடுகளையும் செய்து வாழ்க்கை நடத்தலாயினர்.

- அவர்கள் அவ் வோத்துகளை வழிவழியாக மனனம் செய்து வருவது, இயல்பாயிற்று. அவற்றை அவர்கள் பயிலாத நிலையிலோ, அல்லது மறந்துவிடும் நிலையிலோ அவர்கள் அப்பணிகளில் தொடர்ந்து ஈடுபடுத்தப் பெறாமல், வாழ்வுப் பாட்டிற்குத் தொல்லைப்படல் நேர்ந்தது.

- எனவேதான், இந்நிலையை முன்னிருத்தி, 'பார்ப்பான் வேத ஓத்துகளை மறந்தாலும் மீண்டும் படித்து அவற்றை மனத்தில் கொள்ளல் இயல்வதாகும்; ஆனால அவன், தன்னொழுக்கத்தை மறந்து, அல்லொழுக்கம் கொண்டு, இழுக்கம் எய்துவானாயின், அவன் பிறப்பிலேயே தன்னைச் சிறப்புடைய படைப்பினனாகக் கருதிப் பெருமைபட்டுக் கொள்ளும் நிலை இல்லாமற் போகும்' என்று, தன்னொழுக்கத்தின் பெருமையை இவ்வழி எடுத்துக் காட்டினார் என்க.

2. **பிறப்பு, ஒழுக்கம் குன்றக் கெடும்** - ஆனால், அப் பார்ப்பான் தான் பிறப்பிலேயே உயர்படைப்பினனாகக் கருதிக் கொள்ளும் தன் பிறவிப் பெருமை, தன் ஒழுக்கம் குறையுமானால், இல்லாமற் போய் விடும்.

- ஆரியப் பார்ப்பான் தான் பிறப்பிலேயே உயர்படைப்பினனாகக் கருதிக்கொள்ளும் பெருமை, அவர்களின் வேதத்தில், வர்ணாச்சிரம தர்ம நூல்களில் சொல்லப் பெற்றிருக்கிறது. இதனைப் 'பிராமணர்கள், பிரம்மன் என்னும் படைப்புக் கடவுளினது முகத்தினின்றும், சத்திரியர்கள் (அரச குலத்தினர்) அவனது தோளினின்றும், வைசியர்கள் (வணிகர்கள்) அவனது தொடைகளின்றும், சூத்திரர்கள் (அவர்களல்லாத தமிழினத்தவர் உட்பட்ட பிறர் அனைவரும்) அவனது கால்களினின்றும் பிறந்தனர்' என்னும் பொருள்படும், கீழ்க்காணும் (ரிக்வேதம்) செய்யுளால் கண்டு கொள்க.

**'பிராமணோசிய முக மாசீத்:**
**பாகு ராஜன்ய க்ருத:**

**ஊரூத தஸ்ய யத் வைசிய:**

**சூத்ரோ அஜா யத:'**

- இனி, பிராமணரை உயர்த்திக் கூறும் இன்னொரு சொலவகம் வருமாறு:

**தைவா தீனம் ஜகத்ஸர்வம்;**

**மந்த்ரா தீனந்து தைவதம்;**

**தன்மந்த்ரம் பிராமணா தீதம்;**

**பிராமணா மம தைவதம் !**

இதன் பொருள் : உலகமெலாம் தெய்வத்திற்குள் அடக்கம்; தெய்வம் மந்திரத்திற்குள் அடக்கம்; மந்திரம் பிராமணர்க்குள் அடக்கம். பிராமணனே நம் தெய்வம்.

- அதனை அடிப்படையாகக் கொண்டே அவர்கள் தங்களை அனைவரினும் உயர் பிறப்பினராகக் கருதிக் கொள்ளும் தருக்கத் தகைமை இன்றுவரை விடாமல் கடைப்பிடிக்கப் பெற்று வருகிறது.

- அவர்கள், கோயிற் பணிகளில் ஈடுபடும் பொழுது அங்குத் தெய்வப் பணிகளுக்காகவும், கலைப்பணிகளுக்காகவும் பெண்டிரும் அமர்த்தப் பெறுதல் தொன்று தொட்டே நிகழ்ந்து வருகிறது. அக்கால் அவர்கள்வழி, இப் பார்ப்பனர் ஒழுக்கம் கெடுதலும் இயல்பாகிறது. அவ்வாறு ஒழுக்கம் கெடினும், இவர்கள் குலப்பெருமைகளையே குன்றாமல் பேசி, அவ்வொழுக்கக் கேட்டினை ஒருபொருட்டாய் மதியாமையும் மறைக்கின்றமையும் உடனாகவே நிகழ்ந்து வருகின்றன. இவற்றை யுட்கொண்டே, நூலாசிரியர் இவர்களின் பிறவிச் செருக்கையும், தீய வொழுகலாறுகளையும் கண்டிக்கும் வகையில், இக் கருத்தினை இங்கு எடுத்துக் கூறினார், என்க.

**சால ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று. - நல்வழி : 31**

- இனி, இவர் இவ்வாறு கூறும் நிலையைத் திசைதிருப்பவே, காலிங்கரும், பரிமேலழகரும், 'ஒழுக்கம்' என்னும் சொல்லுக்கு, 'வருண வொழுக்கம்' அஃதாவது தங்கள் 'பிராமணர்' குலத்திற்கு உரிய குலவொழுக்கம் என்று பொருள் படும்படி உரையும் விளக்கமும் எழுதியுள்ளனர்.

பரிமேலழகர் எழுதிய உரைக்குத் தெளிவுரை எழுதிய கோ. வடிவேலு என்பார் *(1918)* 'ஆசாரம் குறைய' என்று எழுதியிருப்பதும், அஃதோடமையாது,

'சிறப்புடைய வருணத்தவராகிய பிராமணருக்கு ஆசாரம் குறையச் சாதி கெடும் என்று சொல்லினமையின், ஆசாரங் குறையச் சாதிகெடும் என்னும் இவ் விஷயம் மற்றைய சாதியாருக்கும் கொள்ளப்படும்

என்று கூறியது உபலட்சணமாம்' என்று நச்சுத்தனமாக அடிக்குறிப்பு எழுதியிருப்பதும் கவனிக்கத் தக்கனவும் கண்டிக்கத் தக்கனவுமாம், என்க.

'ஆசாரம்' என்பது பெரும்பாலும் குலவொழுக்கத்தையே குறிக்கும் சொல்லாகக் கருதப்பெற்று வருகிறது. இங்கு நூலாசிரியர் ஒழுக்கம் என்று கூறுவது குலமோ மதமோ தழுவாத தனிமாந்த ஒழுக்கமும் பொதுவொழுக்கமுமேயாம். பொதுவொழுங்கிற்கும், தனியொழுங் கிற்கும் ஒத்துவராமல், தங்கள் குல, மதவொழுக்கங்களுக்கே கட்டுப்படும் அவர்கள், ஆசிரியர் கூறும் ஒழுக்கமும், அக் குல, மத வொழுக்கங்களையே என்று திசை திருப்புவது, ஒன்றால் அறியாமையாக இருத்தல் வேண்டும். அன்றால் மக்களை ஏமாற்றக் கரவாகத் தங்கள் வேதமதக் கொள்கைகளை நிலைநிறுத்திக் கொள்ளும் முயற்சியாக இருத்தல் வேண்டும், என்க.

- இனி, பேரறிஞர் பாவாணரும், இதில் உள்ள ஒழுக்கம் என்பதைத் 'தமிழவொழுக்கம்' என்று புடைமாறி உணர்ந்து, 'பிராமணன் தமிழ்நாட்டில் தமிழவொழுக்கத்தைக் கடைப்பிடிக்கக் கூறிய கூற்றாக' இதைக் கூறியிருப்பது குறையுரையும் புரையுரையுமே ஆகும்.

நூலாசிரியர் கூறுவது பொதுமாந்தவொழுக்கமே தவிர, தமிழ வொழுக்கம் என்பதாகப் பிரித்துக் கூறுவது அன்று. காலிங்கரும் பரிமேலழகரும் அதைக் குலவொழுக்கமாகக் கொண்ட பிழையையே இவரும் வேறு கோணத்தில் தமிழவொழுக்கம் என்பதாகக் கூறுவது, அவர்கள் அடித்த மாங்காயையே இவர் வேறு கோணத்திலிருந்து அடித்தது போலவே கருதப்படும் ஆகலின் அவருடையது சரியான கருத்தன்று என்று கூறி விடுக்க.

- இனி, பேரறிஞர் கா.சுப்பிரமணியனார் போன்றவர்களும், இக்குறளில் வரும் 'பார்ப்பான்' என்னும் சொல்லுக்கு, 'ஆரியப் பார்ப்பான்' என்று நேரடிப் பொருள் தருவதால் இழுக்கோ, ஏதமோ என்று கருதியோ என்னவோ 'நூல் கற்பான்' என்று பொருள் கூறுவது, தேர்பொருள் தெற்கிருக்க, வடக்கே போய் வழுப்பொருளைக் கண்டதற் கொப்பாகும். என்னை?

- நூல்கற்பானுக்குக் குடிப்பிறப்பு எதற்கு? நூல் 'கற்பான் ஒழுக்கத்தில் குறைவு பட்டானாயின் அவனது குடியின் சிறப்பு அழிந்துவிடும்' என்று அவர் உரைகாணின், குடிச்சிறப்பு இல்லாதவன் ஒருவன் நூல் கற்றவனாக இருக்க இயலாதோ என்னும் வினாவுக்கு விடையில்லாமற் போகும். 'நூல் கற்பது' பொதுநிலை. இதற்குக் குடிச்சிறப்போ, குலச்சிறப்போ, மதச்சிறப்போ தொடர்பில்லை.

- கற்றலுக்கும் மேலான குலச்சிறப்பு உடையவனாகத் தன்னைக் கருதிக் கொண்டிருப்பவன் ஆரியப் பார்ப்பான் ஒருவனே. அதுவும் அக்கற்றலையும் ஓத்து (வேத மந்திரம்) என்று கூறித், தான் கூறுவது பார்ப்பானையே என்று உறுதிப்படுத்துவார். எனவே அவனைக் குறித்ததே இக்கூற்று. அதனை எந்நோக்கம் கொண்டும் மூடி மறைக்கத் தேவையில்லை, என்க.

- நூலாசிரியர் 'பார்ப்பார்' என்று பன்மையில் ஒரு சொல்லையும் இந்நூலுள் பயன்படுத்தியுள்ளார் (285). அங்கு அது, பார்ப்பவர், காண்பவர் என்னும் பொருளைக் குறிக்கும்.

- ஆனால் இங்கு அவர் 'பார்ப்பான்' என்று ஒருமைப் படுத்திச் சொன்னது, அக்குலமுடையானையே. அவனே குலத்தால் அஃதாவது பிறப்பால் பெருமை கருதுபவன். நூல் கற்பார் எவரும் பிறப்பால் பெருமை கொள்வதில்லை. 'பிறப்பு, ஒழுக்கம் குன்றக் கெடும்' என்னும் தொடரில் 'பிறப்பு' என்பதே எழுவாய். 'பிறப்பு' என்பதற்குக் 'குடிச்சிறப்பு' என்று பொருள் கொண்டு இடர்ப்படத் தேவையில்லை என்க. 'ஓத்தை மறந்தால் கற்றுக் கொள்ளல் இயலும்; ஆனால் ஒழுக்கத்தை மறந்தால் பெருமையாகக் கருதிக் கொண்டுள்ள பிறப்பு என்பதால்வரும் பிறப்பினால் வரும் - சிறப்பு கெடும்' என்று ஆசிரியர் கூறுவது, அவ்வாறு பிறப்பினால் சிறப்புக் கருதும் குடியை மட்டுமே குறிக்கும். எல்லாக் குடியையும் அது குறிக்காது. அவ்வாறு பிறப்பினால் சிறப்புக் கொள்ளும் கருதும் குடி பார்ப்பனக் குடியே என்பதைத்தான் பொருளாகக் கருதுதல் வேண்டும் என்பதற்காகவே, முதலில் கூறிய கருத்தடியில் 'பார்ப்பான்' என்னும் சொல்லைச் சேர்த்தார். அதுவும் ஒருமையில் கூறினார்.

- இச்சொல்லுக்குப் பார்ப்பனர்களான மணக்குடவரும் காலிங்கரும் பரிமேலழகருமே, 'பார்ப்பான்' என்று தாங்களும் திருப்பியெழுதக் கையும் மனமும் கூசி, 'பிராமணன்' என்றும், 'அந்தணன்' என்றும், உரை கூறியிருக்க, அறிஞர் கா.சு. போன்றவர்கள் ஏன் அதை மூடிமறைத்தல் வேண்டும் என்பது விளங்கவில்லை.

இவர்கள் இவ்வாறு செய்தாலும், பிறப்பால் குலப் பெருமை கருதும் பார்ப்பன உரையாசிரியர்களே அதற்கு நாணாமல் பொருள் கொண்டிருப்பது, அக்கருத்து 'உண்மையாம்' என்பதால் என்க.

3. இது, முன்னர்க் கூறிய 'ஒழுக்கம் உடைமை குடிமை' என்னும் கருத்துக்கும், 'இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்' என்பதற்கும் எடுத்துக்காட்டாகக் கூறப்பெற்றமையின், அதன் பின்னர் வைக்கப் பெற்றதென்க.

## கநரு. அழுக்கா(று) உடையான்கண் ஆக்கம்போன்(று) இல்லை ஒழுக்கம் இலான்கண் உயர்வு - 135

பொருள்கோள் முறை :

**அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று,**
**ஒழுக்கம் இலான்கண் உயர்வு இல்லை.**

பொழிப்புரை : பொறாமை, கெடுநினைவு, தீய எண்ணம் முதலிய மனக் கசண்டுகள் உடையவனிடம் மக்கட்கு ஆக்கம் தரும் நல்விளைவுகள் இல்லாததுபோல், தன்னொழுக்கம் இல்லாதவனிடம் வாழ்க்கை மேம்பாடு இருப்பதில்லை.

சில விளக்கக் குறிப்புகள் :

1. இஃது, அகவொழுக்கம் இல்லாதவனிடம் மக்கள் நலம் கருதும் ஆக்கமான விளைவுகள் இல்லாததுபோல், புறவொழுக்கம் இல்லாதவனிடம் வாழ்க்கை மேம்பாடு இருப்பதில்லை - என்பதைக் குறித்தது.

2. **அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று** - பொறாமை, கெடுநினைவு, தீய எண்ணம் முதலிய மனக்கசண்டுகள் உடையவனிடம், மக்கட்கு ஆக்கம் தரும் நல்விளைவுகள் இல்லாதது போல்.

- 'அழுக்காறு' என்பது பொறாமை மட்டுமன்று. அழுக்கு + ஆறு என்று பிரிபடும் இச்சொல், அழுக்கு நினைவுகள் அத்தனையும் குறிப்பதாகும்.

அழுக்கு நினைவுகள் - அழுக்கு வழிகள் - உள்ளக் கசண்டுகள். உள்ளத்தின் தீய நினைவுகள் அனைத்துக்கும் 'பொறாமை' உணர்வே அடிப்படையாக இருப்பதால் அப்பொருளையே முகாமையாகக் கொள்ள வேண்டி உள்ளது.

பொறாமை உணர்வு கொண்ட மனமுள்ளவன், அதைத் தொடர்ந்து, கெடுநினைவு, தீய எண்ணங்கள், தீய செயல்கள் முதலிய படிப்படியான கொடுமை நினைவுகளிலேயே தன் சிந்தனையைச் செலுத்துவான் ஆகலின், அவனிடம் பொதுநலம் - மக்கள்நலம் - கருதும் ஆக்கமான எண்ணங்களும், செயல்களும் தோன்றுவதற்கு வழியில்லாமல் போகிறது.

உள்ளதாதல் வேறு, உடையதாதல் வேறு. உள்ளது - ஒன்றைத் தனியாகக் கொண்டிருப்பது. தேவையில்லையெனில் அதைக் கைவிட்டு

விடமுடிவது - உள்ளது.

உடையது - தன்னோடு ஒன்றியிருப்பது. ஒருவனோடு கை, கால் முதலிய உறுப்புகளைப் போல இணைந்து இருப்பது. தேவையில்லையெனில் அதைத் தவிர்க்க இயலாதது - உடையது.

- 'அழுக்காறு உள்ளவன்' என்னாது, 'அழுக்காறு உடையவன்' என்றது, அதற்குத்தான்.

- அவ்வாறு உள்ளவனிடந்தான், பிறர்நலம் கருதும் - பொதுநலம் கருதும் - ஆக்கமான சிந்தனைகள் தோன்றுவதில்லை. எனவே அத்தகைய செயற்பாடுகளும் விளைவதில்லை.

- 'ஆக்கம்' என்னும் சொல், 'செல்வம்' என்றும் பொருள் தருமெனினும், அஃது ஒன்றையே குறிக்காது. நலந்தரும் ஆக்கமான எண்ணங்கள், மக்கள் நன்மை கருதிய செயல்கள் - பொதுவுணர்வுகள் - கொண்ட விளைவுகள் தோன்றுவது இல்லை - என்றார் என்க.

- உலகியலிலும் இச்சொல் 'பல நற்செயல்களைக்' குறிப்பது இயல்பாகவுள்ளது.

'இதைத் தேடினாய்; அதைத் தேடினாய்;

இதுவரை ஏதாவது 'ஆக்கமான' செயலைச் செய்தாயா'

என்று கேட்பது மக்கள் வழக்கு.

- இவ்விடத்தில் 'ஆக்கம்' என்பது மக்களுக்கு நலம்தரும் ஏதாவது பொதுப்பணி - என்றே பொருள்படுவது காண்க.

எனவே, 'ஆக்கம்' என்பதற்கு இவ்விடத்துச் 'செல்வம்' என்றுமட்டும் பொருள்கொண்டால், அஃது அறிவுக்கும் உலகியலுக்கும் பொருத்தமாயிராது. ஏனெனில் அழுக்காறு உடையவனிடம் செல்வம் இருப்பது, சிலரிடம் அளவுக்குமேல் குவிந்திருப்பது - உலகியலாக உள்ளதை உணர்தல் வேண்டும். அதுமட்டுமன்று, அழுக்காறு முதலிய தீய குணங்கள் இல்லாதவனிடம் செல்வம் இல்லாமலிருப்பதும், சிலருக்குக் கேடுகள் நிகழ்வதும், அதுபோல், உலகியலாக - அதுவும் பெரும்பாலான உலகவுண்மையாகவும் உள்ளதை ஆசிரியரே கூறுவதைக் காணலாம்.

**'அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும், செவ்வியான்**
**கேடும் நினைக்கப் படும்'** - **169**

என்பது, அது. இன்னும் அவர், வேறு சில இடங்களிலும் அவ்வுலகியலை வெளிப்படுத்துவார்.

- தகாதவர்களுக்கு - தீய நெஞ்சம் உடையவர்களுக்குப் பொருள் ஆக்கம் இல்லாமல் இல்லை. மற்றவர்களிடம் உள்ள செல்வத்தைக் காட்டிலும் அவர்களிடம் மிகுதியாகவே கூட இருக்கலாம் என்பது உலகியலாக உள்ளதை ஆசிரியர் ஒப்புவதையும், உரைப்பதையும் காண்க.

**'பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள'** - **241**

**'களவினால் ஆகிய ஆக்கம்'** - **283**

**'கல்லார்கண் பட்ட திரு**
**நல்லார்கண் பட்ட வறுமை'** - **408**

**'பழிமலைந்து ஆக்கிய ஆக்கம்'** - **657**

**'சலத்தால் பொருள் செய்தல்'** - **660**

*(சலத்தால் - வஞ்சகத்தால்)*

**'பொருளல்லவரைப் பொருளாகச்**
**செய்யும் பொருள்'** - **751**

**'சிறப்புந்தான் சீரல்லாதவர் கண் படும்'** - **977**

*(சிறப்பு - செல்வம் முதலிய)*

**'கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு**
**அடுக்கிய கோடி உண்டு'** - **1005**

'ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்கென்(று)
**ஈதல் இயல்பிலா தான்'** - **1006**

**'அற்றார்க்கொன்று ஆற்றாதான் செல்வம்'** - **1007**

**'நச்சப் படாதவன் செல்வம்'** - **1008**

**'அன்பொரீஇத் தற்செற்று அறம்நோக்காது**
**ஈட்டிய ஒண்பொருள்'** **1009**

இனி, பிறரும் அதை உணர்த்தினார்.

**'சிறியவன் செல்வம் போல்**
**சேர்ந்தார்க்கு நிழல் இன்றி'** **-கலி: 10.**

**'புல்லறி வாளர் பெருஞ்செல்வம்'** **-நாலடி: 8**

**'பீடிலார் பெருஞ்செல்வம்'** **- நாலடி: 261**

**'இழிந்த மாந்தர் கைப்பொருள்கள்'** **- திருவிளை-நாட்டுச்:6**

**'வள்ளன்மை யில்லாதான் செல்வம்'** **- நீதிநெறி: 67.**

- இவ்வாறு, 'அழுக்காறு உடையார் கண் செல்வம்' இல்லாமல் இல்லை; செல்வம் இருக்கும். எனவே இங்கு ஆக்கம் என்பதற்குச் 'செல்வம்' என்னும் பொருள் கொள்ளுதல் பொருந்தாமற் போகும் என்க.

- ஆகவே, அதற்கு 'அறவுணர்வான் வரும் அல்லது செய்யப் பெறும் ஆக்கம்' என்றே பொருள் பெறலாகும்.

- இப்பொருளையே நூலாசிரியரும் 'அழுக்காறாமை' அதிகாரத்தும் வலியுறுத்துவர். அதே கருத்தைத்தான், இங்கு வலியுறுத்தி, ஒழுக்கக் கருத்தோடு அதனை இயைபு படுத்திக் கூறுவார் என்க. அஃது இது;

**'அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்**
**பேணாது அழுக்கறுப் பான்'** - **163**

3. **ஒழுக்கம் இலான்கண் உயர்வு இல்லை** - தன்னொழுக்கம் இல்லாதவனிடம் வாழ்க்கை மேம்பாடு இருப்பதில்லை.

- உயர்வு என்பதற்குக் காலிங்கரைத் தவிர உரையாசிரியர் அனைவரும் உயர்வு என்றே பொருள் கண்டனர். காலிங்கர் ஒருவர் தாம் 'பெரிய மேம்பாடு' என்று பொருள் கொண்டுள்ளார். அது பாராட்டத்தக்கது.

- ஒழுக்கமில்லாதவர்களும் பலநிலைகளில் சிறந்தே விளங்குவதும் தவிர்க்க முடியாத உலகியலாக உள்ளது. எனவே, உயர்வு என்னும் சொல் வாழ்க்கை நிலையைக் குறித்ததாகக் கொள்வது 'தனியொழுக்கத்தைப் பற்றிக் கவலையுறாத' இக்காலத்திற்குப் பொருந்தாத கருத்தாகி விடுகிறது.

- ஆனால், ஒழுக்கமிலாதவனை அனைவரும் மேலானவனாகக் கருதுவது இல்லை. பெருமையாகவும் நினைப்பதில்லை. எனவே அவனுடைய சிறப்பு நிலைகளும் அவனை மேம்பட்ட ஒருவனாகக் கருதச் செய்ய உதவுவதில்லை. அந்நிலையிலுள்ளவனுடைய பதவியாலும் பட்டத்தாலும் அவனை ஒருவாறு செல்வச் சிறப்பும் அறிவுச் சிறப்பும் கொண்டவனாக மக்கள் கருதுவார்களே தவிர, **அவன் வாழ்க்கையை மேம்பாடு கொண்டதாக - மக்கள் பின்பற்றத் தகுந்ததாக - நினைப்பதில்லை.**

நூலாசிரியர் காலத்தில், ஒருவேளை ஒழுக்கமில்லாதவனை உயர்நிலையில் அமர்த்த அன்றைய ஆட்சியும், குமுகாயமும் மறுத்திருக்கலாம். அவனுக்கு உயர்வு ஏதும் தராமலும் இருந்திருக்கலாம். - ஆனால், இன்று அந்நிலை அடியோடு மாறிவிட்டது என்று கூறமுடியாதெனினும், பெரும்பாலும் அவ்வாறு இல்லை என்பதை மறுத்தற் கியலாது.

4. இஃது, ஒழுக்கமிலாதவனிடம் வாழ்க்கை மேம்பாடும், பெருமையும்

*குமுகாய மதிப்பும் இராது என்பதைக் குறித்ததால், முன்னதன் பின்னர் வைக்கப்பெற்றது.*

## கஙகூ ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின் ஏதம் படுபாக்(கு) அறிந்து. - 136

பொருள்கோள் முறை :

**உரவோர், இழுக்கத்தின் ஏதம் படுபாக்கு**
**அறிந்து, ஒழுக்கத்தின் ஒல்கார்.**

பொழிப்புரை : *மனவுரமுள்ள அறிஞர், ஒழுக்கக் கேட்டினால் வரும் குற்றங்களாகிய இழிவு, பழி, கேடு முதலியன ஏற்படுவதை முன்னரே அறிந்து, தாம் கடைப்பிடித்தொழுகும் தன்னொழுக்கத்தில் குறைவுபடார்.*

சில விளக்கக் குறிப்புகள்:

1. **உரவோர் இழுக்கத்தின் ஏதம் படுபாக்கு அறிந்து** - மனவுரமுள்ள அறிஞர், ஒழுக்கக் கேட்டினால் வரும் குற்றங்களாகிய இழிவு, பழி, கேடு முதலியன ஏற்படுவதை முன்னரே அறிந்து,

- **உரவோர்** - மனவுரமுள்ளவர் அறிஞர்.
- **இழுக்கம்** - ஒழுக்கக் கேடு, அதனால் இழுக்கு வருவதால் இழுக்கம் ஒழுக்கக் கேட்டைக் குறித்தது.
- **ஏதம்** - குற்றம். இங்கு இழுக்கத்தால் வரும் இழிவு, பழி, கேடு முதலியவற்றைக் குறிக்கும்.

**படுபாக்கு** - படுவதை, உண்டாவதை, ஏற்படுவதை.

**பாக்கு** - வழக்கிழந்த ஓர் எதிர்கால வினையெச்ச ஈறு.

(எ-டு) உண்பாக்கு வந்தான்.

- ஒழுக்கக் கேட்டினால் எந்த எதிர்நிலை ஏற்படவில்லையாயினும், அதனால் வரும் இழிவையும், பழியையும் கேட்டையும் தவிர்க்கவியலாது என்க.

இழிவு - பலரும் இழிவாகக் கருதும் தாழ்ச்சி.

பழி - பெண்ணடிமை என்னும் பழித்தலுக் காளாவதும், பெண் பழிக்கு ஆளாவதும்,

கேடு - பொருள்கேடும், உடல்கேடும், இழிவாலும் பழியாலும் ஏற்படும் மன உலைவும், மானக்கேடும்.

2. **ஒழுக்கத்தின் ஒல்கார்** - தாம் கடைப்பிடித்து ஒழுகும் தன்னொழுக்கத்தில் குறைவு படார்.

ஒல்குவது - குறுகுவது; குறைவு படுவது.

3. இஃது, ஒழுக்கமில்லாதவர்க்கு வாழ்வியல் மேம்பாடு இல்லை என்பதுடன், இழுக்கும் ஏதங்களும் வேறு வரும் என்றதால், அதன் பின்னர் வைக்கப்பெற்றது.

## கஙஎ. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி - 137

**பொருள்கோள் முறை :**

**ஒழுக்கத்தின் மேன்மை எய்துவர்**
**இழுக்கத்தின் எய்தாப்பழி எய்துவர்.**

**பொழிப்புரை :** எவரும் ஒழுக்கத்தினால் மேன்மேல் பெருமையை பெறுவர்; ஒழுக்கம் தவிர்தலால் இதுவரை அடையாதனவும், அடாதனவுமான பழிகளை அடைவர்.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. **ஒழுக்கத்தின் மேன்மை எய்துவர்** - எவரும் ஒழுக்கத்தினால் மேன் மேலும் பெருமையே பெறுவர்.

**மேன்மை** - மேன்மேலும் பெருமைக்குரிய நிலை; மேலாம் நிலை.

- பதவி, செல்வம், அதிகாரம் முதலியவற்றால் ஒழுக்கம் உடையவர் தகுதி மதிக்கப்பெற்று, மேலும் மேலும் சிறப்பும் பெருமையுமே பெறுவர்.

2. **இழுக்கத்தின் எய்தாப் பழி எய்துவர்** - ஒழுக்கம் தவறுதலால் இதுவரை அடையாததும், அடாததுமான பழிகளை அடைவர்.

**இழுக்கம்** - ஒழுக்கம் இழுக்கியதால் இழுக்கம் ஆயிற்று.
- இழுக்குதல் - தவறுதல்.

**எய்தாப்பழி** - இதுவரை அடையாதபழி - அடாத பழி.

- பொய் கூறுவது, திருடுவது, பிறர்க்குக் கேடு செய்வது போன்றவற்றால் எய்தும் பழியினின்றும் வேறு பிரித்துக் காட்ட, இதுவரை எய்தாத பழி என்றார்.

- இனி, செய்தது ஒன்றெனினும் செய்யாத பலவும் இணைத்துக் கூறும் அடாத பழியும் என்றவாறு.

- இவ்விடத்து,

'பகைபற்றி அடாப்பழி கூறியவழி அதனையும் இழுக்கம் பற்றி, உலகம் அடுக்குமென்று கொள்ளுமாகலின் 'எய்தாப் பழி எய்துவர்' என்றார்'

- என்று பரிமேலழகர் கூறும் விளக்கம் சிறப்புடையது என்க.

- பழிக்கப் படுவதால் பழியாயிற்று.

3. ஒழுக்கத்தால் ஏற்படும் உயர்வும், இழுக்கத்தால் நேரும் இழிவும் கூறப்பெற்றதால், முன்னதன் பின் இது வைக்கப் பெற்றது.

## கூஅ. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும். - 138

**பொருள்கோள் முறை :**

**நல்லொழுக்கம் நன்றிக்கு வித்தாகும்**
**என்றும் தீயொழுக்கம் இடும்பை தரும்.**

**பொழிப்புரை :** மனம், அறிவு, உடல் ஆகிய மூவகையாலும் கடைப்பிடித்து ஒழுகுகின்ற ஒழுக்கம், பலவகையான நன்மை விளைவுகளுக்கும் விதை போல் இருந்து உதவும். ஆனால், செய்தக்காலும் செய்த பின்னரும் தீயொழுக்கம் விடாது துன்பம் தந்து கொண்டேயிருக்கும்.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. **நல்லொழுக்கம் நன்றிக்கு வித்து ஆகும்** - மனம், அறிவு, உடல் ஆகிய மூவகையினும் கடைப்பிடித்து ஒழுகுகின்ற ஒழுக்கம், பல வகையான நன்மை விளைவுகளுக்கும் விதைபோல் இருந்து உதவும்.

**'நல்லொழுக்கம்'** என்றதால், மனத்தாலும் அறிவாலும் உடலாலும் கடைப்பிடித்து ஒழுகுகின்ற முழு ஒழுக்கம் என விரிக்க வேண்டியதாயிற்று. என்னை? ஒழுக்கக் கூறுகள் 'நல்ல' என்பது ஒழுக்கக் கூறுகள் முழுமையும் குறிக்குமாகலின்.

**நன்றி :** நல்ல செயல் நன்மை தரும் விளைவு

- நல்லொழுக்கம் கடைப்பிடிப்பவர்க்கு உலகியல் அளவியல், நல்ல விளைவுகள் விளைவது உறுதியாதலை இதில் கூறினார்.

- 'நன்றி' என்பதற்கு வழக்கம்போல், தொன்மை உரையாசிரியர்களான மணக்குடவரும், பரிதியும், பரிமேலழகரும் 'முத்தி' என்றும், 'இம்மை மறுமை' என்றும், அறம், புண்ணியம் என்றுமே ஆரியவியல் சார்பாகவே பொருள் கொள்வது, எந்த உலகியல் விளைவுகளுக்கும் அவர்கள் வேதமத வழியாகவே பொருள் கொள்ளும் நோக்கத்தை உறுதி செய்வதாகும்.

- உலகியலில் இயல்பாக நடைபெறும் நன்மை, தீமை நிகழ்வுகளுக்குங்கூட, அவர்கள் 'புண்ணிய, பாவ' நிலைகளைக் காரணம் காட்டுவது, மக்களுடைய நல்லுணர்வுகளையும், நம்பிக்கைகளையும், உறுதிப்பாடுகளையும், முயற்சிகளையும் கெடுப்பதாகும்.

- இந்த வகையில், காலிங்கர், 'தனக்கு எல்லா நன்மைக்கும் துணைக் காரணமாகும். அது யாதோ எனின், நன்னெறியுடைய சான்றோரும் நூல்களும் நன்று என்று அவரவர்க்கு அடுப்பதாகச் சொன்னவற்றின் சாரமானது' என்று - பொருள் தருவது பெரிதும் மெச்சத் தக்கது என்க. ஆனால் அது நன்கு விளங்குமாறில்லை.

- மேலும் ஆரியமதவியலார், எந்த நன்மைச் செயலும் இவ்வுலகத்திலேயே விளைவு தரும் என்னாது, மறுமையில் தான் பயன்தரும் என்று இட்டுக்கட்டிப் பொய்யின் பொருள் தருவது, மக்களுக்குச் செய்யும் வஞ்சகமும், ஏமாற்றுவதும், சூழ்ச்சியுமாகும். இதனால், இவ்வுலக வாழ்வையே நம்பிக்கை யிழக்கச் செய்வதாகும் இவர்கள் கூற்று.

- இவர்கள், 'வித்து' என்பதற்கும், 'காரணம்' என்று பொருள் தருவதும், சுற்றி வளைத்துப் பொருள் கூறுவதாகும்.

இயல்பாகவும் வெளிப்படையாகவும் பொருள் தெளிவுள்ள சொற்களுக்குங்கூடக் குழப்பமாகவும், மயக்கமாகவும் இவர்கள் பொருள் தருவது, அக் குழப்பத்தினும், மயக்கத்தினும் வேதவியல் கருத்துகளுக்கு ஏற்றம் தேடிக்கொள்ளும் கரவு முயற்சியேயாம் என்று கண்டு தெளிக.

2. **என்றும் தீயவொழுக்கம் இடும்பை தரும்** - செய்த பொழுதினும், செய்த பின்னரும் தீயொழுக்கம் விடாது துன்பம் தந்து கொண்டேயிருக்கும்.

- **தீயொழுக்கம்** - தீமையான ஒழுக்கம் - அஃதாவது இழுக்கம்.

- **'என்றும்'** என்றது, 'அன்றும், இன்றும், என்றும்' என்றவாறு அஃதாவது, தீயொழுக்கம் நடந்த பொழுதும், நடந்த பின்னரும், இனித்தொடர்ந்தும் என்றவாறு. என்னை? தீயொழுக்கம் நடந்தபொழுது மனத்தளவில் துன்பமும், பின்னர் அதன் தாக்கம் அறிவளவிலும், அதன் பின்னர் உடலளவிலும் துன்பம் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும் என்றார், என்க.

- **'இடும்பை'** - நானாபுறத்தும் வரும் துன்பம், இடுதல் - இட்டு நிரப்புதல்.

தீயொழுக்கினன், கண்களில் எப்பொழுதும் ஒழுக்கக் கேட்டுக்குரிய சூழல்களையே பார்ப்பதால், நல்ல காட்சியால் வரும் இன்பத்தை அவன், இழந்து நிற்கிறான். அதனாலும் துன்பப்படுகிறான்.

- அவன் காதுகளில் எப்பொழுதும் தீயொழுக்கச் சூழலில் அவன் செவிமடுத்த ஒலிகளே நிறைந்திருப்பதால், வேறு பிற நல்லொலிகளைக் கேட்க விரும்பாமல், அவற்றால் வரும் இன்பங்களை இழந்து நிற்பான். அதனாலும் துன்பப் படுகிறான்.

- அவனின் நுகர்ச்சியும், சுவையும், உடலும் என்றுமே முன்னது போலும் தீயொழுக்க நிகழ்வுக்கே அங்காந்து ஏங்கி நிற்பதால், அவ்வப்பொழுது மேன்மேல் வந்துறும் புதுப்புது நன்னிகழ்வுகளில் அவன் மனம் படியாமல் போகிறது. அதனால் அவன் உள்ளத்தில் எப்பொழுதுமே ஒருதுயரச் சூழலே, எதையோ இழந்து தவிப்புறும் துன்புணர்வே, சூழ்ந்து, அவனை அன்றாடப் புதுமை உலகச் செயல்களில் ஈடுபாடு கொள்ளவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கும்.

- அவன் அறிவும் மேற்சிந்தனையின்றிப் பழைய அல்லொழுக்க இன்பத்திலேயே அலமந்து, அது போலும் ஒரு சூழலையே அவாவிக் கிடக்கின்றது.

அவன் உடலும், ஆங்கு நிகழ்ந்த மறைவொழுக்கக் கேட்டிலேயே திளைத்து மூழ்கித் தினவுற்றுக் கிடப்பதால், நடைமுறை நிகழ்வுகளில் ஈடுபட்டுத் திளைக்காமல் அல்லலுற்றுக் கிடக்கின்றது.

ஈங்கிவற்றாலும், பொருள் இழப்பாலும், புலனிழப்பாலும், பழிதூற்றலாலும் அவன் அமைவும் அமைதியுமின்றி என்றும் இடும்பையுள்ளேயே மூழ்கிக் கிடப்பான் என்று தெற்றெனஅறிந்து கொள்க.

**'தீயொழுக்கம் தரும்'** என்றது, தீயொழுக்க உணர்வுகள் தொடர்ந்து தரும் என்றவாறு,

- இதற்குப் பரிமேலழகர் பொருள் கூறுகையில் 'தீயொழுக்கம் பாவத்திற்குக் காரணமாய் இருமையினும் துன்பம் பயக்கும்' என்று உரைப்பார்.

- இஃது, அவரின் ஆரியவியலின் அடிப்படைக் கூறு.

- உலகியல் நிகழ்வுகளுக்கு உரிய விளைவுகளும் உலகியலே சார்ந்தன. அவற்றுக்குப் புண்ணிய பாவ உணர்வு பூசப்பெறுதல், அவர்களின் மதவியற் கோட்பாடாம் என்க.

- மாந்தவியலுக்கு மதிப்பளியாத தன்மையே அவர்களின் மதவியலாகும்.

- மதவியல் என்பது புறப்பார்வை, மாந்தவியல் என்பது அகப் பார்வை.

- மாந்தவியல் நிகழ்வுகளுக் கெல்லாம் மதவியற் பொருள் கொள்ளுவது, இல்லறவியலில் இருந்து கொண்டு, அதற்குப் புறவியலாகிய துறவறத்தை நினைப்பது போலாகும். அறிவுப் பிறழ்ச்சியே என்க.

- அறிவு, ஆங்காங்கு நிகழும் நிகழ்வுகளுக்கு, வேறொரு கற்பனை யிடத்துப் பொருத்தி விளைவு காண்பது. எனவேதான் மதவியல் மயக்கவியல், அறிவு மழுக்கவியல் என்று மாந்தவியல் அறிஞர் கருதுவர்.

- மேலும், தீயொழுக்கம் தொடர்ந்து தீமையும் துன்பங்களும் தருவது போல், நல்லொழுக்கம் தொடர்ந்து, தமக்கு மட்டுமன்றி, அவரைச் சார்ந்தாருக்கும், ஏன் பிறங்கடையினருக்குங்கூட நன்மை தருவது என்னும் குறிப்பைத்தான் 'வித்து' என்னும் சொல்லால் உணர்த்துவர். என்னை?

- வித்து, தான் விளைந்து பயனைத் தருவது போலவே, அடுத்தடுத்து அப்பயன் தொடர்பயனாக அடுத்து அதுபோலவே பல வித்துகளையும் உருவாக்குதலும், அவ்வவ் வித்துகளால், அவ்வக் காலங்களிலும், அவ்வவ் விடங்களிலும் உள்ள மக்களினம் பயன் பெறுதலும் தொடர்ந்து நிகழ்வனவாகும்.

- எனவே, ஒழுக்கக் கேடன், தனக்கு மட்டுமன்றித் தன்னைச் சேர்ந்தார்க்கும், சார்ந்தார்க்கும் கேட்டைத் தொடர்ந்து விளைவிப்பது போல், நல்லொழுக்க முடையவனும், அவனைத் தொடர்ந்த மாந்தப் பயிர்களுக்கு நல்வித்தாக அமைவதையும் குறிப்பால் உணர்த்தினார் என்க. இல்லெனில் 'வித்து' என்னும் சொல்லை அவர் பயன்படுத்தத் தேவையின்றாம் என்க.

- ஓர் ஒழுக்கக் கேடனுடைய உடலில் பற்றிய நோயும் உள்ளத்தில் இடங்கொண்ட தீயவுணர்வுகளும், அறிவில் அளாவிக் கிடக்கும்

அறியாமை இருளும், அவனுடைய குடும்பத்தார்க்கும், அவர்களை அடுத்துவரும் கொடியினர்க்கும், அவர்களை அணைந்து வரும் குலத்தினர்க்கும், அவர்களைக் கொண்டு உருவாகும் குடியினர்க்கும், அவர்களை உள்ளடக்கிக் கிடக்கும் இனத்தினர்க்கும், அவர்களை உறுப்பாகக் கொண்ட நாட்டினர்க்கும், அவர்கள் அடங்கிய உலகத்தினர்க்கும் தொடர்ந்து பற்றுவதாகும் என்பது, கால நீட்சியால் கண்டு அறியப்பெறும் உண்மையாம். 'பார்த்தீனியம்' எனும் நச்சுச் செடி பரவுதலைப் போன்றது, அது (1008).

- இதுபோலவே, நல்லொழுக்க முடையானின் நல்லுணர்வும், நல்லறிவும், நல்லுடலும் பொதித்த நற்செயல்களை விளைவிக்கும் நல்வித்துகளின் வளர்ச்சியும், பரவுதலும், நல்லுலகம் சமைவதற்குக் காலநீட்சியில் உதவுவதாகும்.

- இது, மனம், அறிவு, உடல் ஆகிய மூவியக்கத்திற்கும் நன்மை தரும் 'பயன்மரம் உள்ளூர்ப் பழுத்ததைப்' (216) போன்றதாகும்.

- இத்தகைய நல்லொழுக்கம், நன்றி, வித்து - என்னும் மூன்று உலகப் பொதுநலத்திற்கும், பொது அறத்திற்கும் அடிப்படையாகிய கூறுகளை, ஒருவன் தனிநலத்துக்கு உகந்த கூறுகளாக்கி, அவனுக்கு அவை இம்மைப் பயனையும் 'மறுமை' (மறுவுலக)ப் பயனையும் தருவனவாகும் என்று பரிமேலழகர் உள்ளிட்ட, பாவாணர் வரம்பிட்ட உரையாசிரியர் பலரும் கூறுவது, அவர்களின் பரந்துபட்டு வளராத குறுகிய வுணர்வையும், அதற்குக் காரணமாகிய அவர்தம் மதச்சார்பையுமே காட்டுவதாகும் என்று கருதி விடுக்க.

3. இது, முன்னைய குறளில் கூறப்பெற்ற மேன்மைக்கும், பழிக்கும் விளக்கமாக அமைந்திருத்தலின், அதன் பின்னர் நிரலிடப் பெற்றதாம் என்க.

## கந௯. ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய வழுக்கியும் வாயால் சொலல் - 139

**பொருள்கோள் முறை** :

**தீய வழுக்கியும் வாயால் சொலல்,**

**ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே.**

**பொழிப்புரை** : தீமை பயக்கின்ற சொல்லையோ, கருத்தையோ, வாய் தவறியும் தம் நல்லுரை பகரும் வாயால் சொல்லுதல், ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பவர்க்குப் பொருந்தாது.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. இது, மனம், அறிவு, உடல் ஆகியவற்றால் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பவர், வாய்தவறியுங்கூட, தீமை பயக்கின்ற சொல்லையோ கருத்தையோ கூறுதலும் பொருந்தாது - கூடாது - என்னும் நாவொழுக்கம் கூறியது.

2. **தீய வழுக்கியும் வாயால் சொலல்** - தீமை பயக்கின்ற சொல்லையோ, கருத்தையோ தம் நல்லுரை பகரும் வாயால் சொல்லுதல்.

**தீய** - தீமை பயக்கின்ற சொல்லையோ, கருத்தையோ என்று இரண்டையும் அடக்கிக் கூறினார்.

- உரையாசிரியருள் மணக்குடவர், பரிதியார், காலிங்கர் ஆகியோரும், பாவாணர் உள்ளடங்கிய பலரும் 'தீய' என்னும் சொல்லுக்குத் 'தீய சொற்கள்' என்றே பொருள் கூறியுள்ளனர்.

அஃது ஒருவகையில் நிறைபொருள் ஆகாது.

'தீச்சொல்' என்னினும் யாப்புப் பிழையாதிருக்க, 'தீய' என்று பெய்ததாலும், அது, பன்மையும் குறித்ததாலும், தீமை தரும் சொல்லும் கருத்தும் என்றே பொருள் கொள்ளுதல் தக்கது. என்னை?

- தீய சொற்களின்றி, இடக்கரடக்கலாகத் தீய கருத்தையும் ஒருவர் கூறவியலும் ஆகலான், என்க.

(எ-டு) 1. அவன் தன் தலைமேல் இருப்பதற்குச் சமம்

(தலைமேல் இருப்பது - 'மயிர்')

2. அவனை என் காலில் கிடப்பதை எடுத்து அடிப்பேன்.

(காலில் கிடப்பது - செருப்பு)

- 'மயிர்', 'செருப்பு' இரண்டும் தீயசொற்கள் அல்வாயினும் கூறுகின்ற உணர்வால் அவை தீயவாயின. இங்குக் கருத்துகள் தீயவை. ஒருவரை இழிவு படுத்துபவை.

**வழுக்கியும்** - நாத் தவறியும், வாய்தவறியும் , 'மறந்தும்' என்று முன்னையர் பொருள் தருவதும் சரியன்று. அது மனத்தினது உணர்வு ஆகையான்.

**வாயால் சொலல்** - சொல்லுதல் வாயேயெனினும் 'வாயால்' என்று கூறியது, ஒழுக்கமுடையவராகலின் அவர் வாய் நல்லுரை கூறிப் பழகியிருக்கும் ஆகலான், 'அந் நல்லுரை பகரும் வாயால்' என்று சிறப்பித்தார்.

தீய சொல்வது மனத்தில் நினையாமலும், அறிவால் சிந்தியாமலும், பிறர் சொல்லக்கேட்ட பழகுணர்வால், வாய் முந்துணர்வால்

கூறிவிடுவது வாய்தவறிச் சொல்வதாகும் என்க. தவறுதல் - முறை தவறுதலாம்.

3. **ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே** - ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பவர்க்குப் பொருந்தாது.

'ஏ'காரம் தேற்றம். உறுதிப் பொருள் தந்தது.

- **'ஒழுக்கம் உடையவர்க்கு'** என்றதால், இஃது ஏற்கனவே ஒழுக்கம் கடைப்பிடிப்பவர்க்குச் சொல்லப்பெற்றது என்னும் குறிப்புணர்த்தினார்.

**ஒல்லாவே** - என்பதற்கு முன் கூறிய உரையாசிரியர் அனைவரும் பிறர் சிலரும், 'முடியாது' 'இயலாது' 'பிறவாது' என்று பொருள் தருவர்.

- இயலாத - முடியாத - ஒன்றை நெறியாகக் கடைப்பிடியாகக் - கூறுவது தேவையின்றாகலின், அப் பொருள் பொருந்துவதன்று. மேலும் 'வழுக்கியும்' என்னும் சொற் பயன்படுத்தமும் வறிதாகிவிடும்.

- வழுக்கியும் என்று கூறுவது, அச்சொல் வெளிவந்த நிலையே அன்றி, அடங்கிய நிலையன்று.

- இயலாதது, முடியாதது என்பன சொல் வெளிவராத நிலை என்க.

- மேலும் சொல்வெளிவராமல் அடங்கி நின்ற நிலையில் அது தீய சொல்லோ கருத்தோ என்று எவ்வாறு அறிவது?

- எனவே, 'வழுக்கியும்' என்பதும், 'தீய' என்பதும், 'சொலல்' என்பதும் 'அவர்தம்' வாயினின்று தவறுதலாகத் தீய சொல்லோ கருத்தோ வெளிவந்த நிலையினையே உறுதிப்படுத்தும் சொற்கள் என்க.

- ஆகவேதான் 'அவ்வாறு' வெளிவருதல் அவர் கடைப் பிடித்தொழுகும் பெருமைக்கு அவ்வாறு கூறியது. அல்லது கூறுவது 'பொருந்தாது' 'கூடாது' என்று கடிந்து நெறி கூறினார் என்க.

- சொல் வராது, சொல்ல இயலாது, முடியாது என்பது, 'ஊமையனால் பொய் கூற இயலாது' என்பதைப் போன்றது.

- சொல்லுதல் நிகழ்ந்ததைக் கொண்டுதான் 'அவ்வாறு சொன்னது அல்லது சொல்வது பொருந்தாது அல்லது கூடாது; எனவே இனி அவ்வாறு வாய்தவறியும் கூறற்க' என்று ஒழுக்க நெறி கூறினார் என்க.

- இனி, பரிமேலழகர் இங்கும், மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டது போல, தீய சொற்களுக்கு விளக்கம் தருகையில்,

'பிறர்க்குத் தீங்கு பயக்கும் 'பொய்' முதலியனவும், வருணத்திற்கு உரிய வல்லனவுமாம்' என்று தம் ஆரியக் குறும்பைக் காட்டியிருப்பது

அவரைத் தலைசிறந்த அறிஞராகக் கருதுவதற்கும் தயக்கத்தைத் தருகிறது. என்னை?

**'அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**

**மக்கட்பண்(பு) இல்லா தவர்'** - 997

என்பாராகலின்,

சொல்லுகின்ற சொற்களிலும் 'வருண' வேறுபாடு கற்பிக்கும் அவரது மாந்தப் பண்பின்மைதான் என்ன!

அவருடைய உரை, நூலாசிரியரின் தூய்மையான அறவுணர்வை - பொதுமை உணர்வை, 'வருண' வேறுபாடுகளையும், ஆரிய வேத வழியான, பொதுமாந்தவியலுக்குப் பொருந்தாத உரைகளைக் கூறி அவர் மாசுபடுத்தும் நோக்கந்தான் என்னவோ? அவர் போலியரே அறிவர் என்றுகூறி அகலுக.

3. இஃது, ஒழுக்கமுடையவர், தாம் கூறும் சொல்லிலும் கருத்திலுங்கூட விழிப்பாய் இருத்தல் வேண்டும் என்பது கூறியது.

**கசo உலகத்தோ(டு) ஒட்ட ஒழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார்** - **140**

**பொருள்கோள் முறை :**

**பலகற்றும், உலகத்தோடு ஒட்ட**

**ஒழுகல் கல்லார் அறிவிலாதார்.**

**பொழிப்புரை :** பலவகையான (அறிவு, அறம், கலை முதலிய) நூல்களைக் கற்றவரானாலும், உலகின் தேர்ந்த பண்பியல் நிலைகளோடு பொருந்தி ஒழுகத் தெரியாதவர்கள் அறிவில்லாதவர்களே!

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. **பல கற்றும்** - பலவகையான அறிவு, அறம், கலை முதலிய நூல்களைக் கற்றவரானாலும்.

உலகில் கற்பவரெல்லாரும் விரும்பிக் கற்பது அறிவு நூல்களும், அறநூல்களும், கலைநூல்களுமே யாகும். அவற்றின் பின்னரே, அறிவியல் நூல்களையும், அளவியல் நூல்களையும், தொழிலியல் நுண்தொழிலியல், மெய்ப்பொருள் நூல்களையும் அவர்கள் தேவை நோக்கியும், சிறப்பு நோக்கியும் கற்கப் புகுவர். என்னை?

வாழ்வியலுக்குத் தேவை முதலிற் கூறப்பெற்ற நூல்களேயாம் என்க.

2. **உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லால் அறிவிலாதார்** உலகினர் தேர்ந்த பண்பியல் நிலைகளோடு பொருந்தி ஒழுகத் தெரியாதவர்கள் அறிவில்லாதவர்களே.

**உலகத்தோடு** - உலகத்தோர் இதுவரை தேர்ந்து கொண்ட பண்பியல் நிலைகளோடு. என்னை?

- உலகம் அறிவியலார் வயப்பட்டு இயங்குவதெனினும், இதுவரை அது தேர்ந்து கடைப்பிடித்து ஒழுகும் பண்பியல் நிலைகளால்தான் நிலைப்பெற்று இயங்குகின்றது.

- அறிவியலார் வயப்பட்டு இயங்கும் உலகம் பல முன்னேற்றங்களை விளைவாகக் கொண்டதேனும், மக்கள் வாழ்வியலுக்கு அடிப்படையானவை இதுவரை வாழ்ந்த சான்றோர்களின் தேர்ந்து கொண்ட பண்பியல் கூறுகளே என்பதை அவ்வறிவியலாளரும் ஒப்புவர்.

- இதனை, நூாலசிரியரும் பல்வேறிடங்களில் பல்வேறு வகையாக வலியுறுத்தி ஒப்புவதும் காண்க:

- அவர் **'பண்புடைமை'** அதிகாரத்துள்,

**'பண்புடையார்ப் பட்டுண்(டு) உலகம் அதுவின்றேல்**
**மண்புக்கு மாய்வது மன்'** - **996**

**'அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண்பு இல்லா தவர்'** - **997**

என்று கூறி,

**'நயனொடு நன்றி புரிந்த பண்புடையார்**
**பண்புபா ராட்டும் உலகு'** - **994**

**'அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்**
**பண்புடைமை என்னும் வழக்கு'** - **992**

என்று, அதற்கு விளக்கமும் கூறுவர்.

- இனி, உலகம் என்பது பண்புடைமையும் ஒழுக்கமும் கொண்ட சான்றோர்பாற் பட்டது என்க. என்னை? எல்லாவகையான நன்னிகழ்வுகளும் அவர்தம் வழியாக நிகழ்வனவே என்பது அறிஞர் முடிபு. அவையே உலகவழக்கு எனப்பெறும். அவர் வழித்தாம் இல்லறமும் பிறவறங்களும் நிகழ்த்தப் பெறுதல் வேண்டும் என்பதும், அப்பொழுதுதான் அவை சிறக்கும் என்பதும் நூல்வல்லார் குறிப்பு.

அவ் வழக்குகள்தாம் நூல்களுள் எழுதப்பெறுதல் வேண்டும் என்பது தமிழியல் இலக்கிய வழக்குமாம் என்க.

**'வழக்குஎனப் படுவது உயர்ந்தோர் மேற்றே**
**நிகழ்ச்சி அவர்கட் டாக லான'** - **தொல்:1592.**

(வழக்கு - உலக வழக்கு)

**'உயர்ந்தோர் கிளவியும் வழக்கொடு புணர்தலின்**
**வழக்குவழிப் படுத்தல் செய்யுட்குக் கடனே'** - **தொல்: 1168.**

**'இடித்து வரை நிறுத்தலும் அவரதாகும்**
**கிழவனும் கிழத்தியும் அவர்வழி நிற்றலின்'** - **தொல் : 1101.**

ஏனெனில்,

**'பெரியோர் ஒழுக்கம் பெரிது'** - **தொல்: 1096.**

- எனவே, 'உலகம்' என்பது சான்றோரையும், 'உலக ஒழுக்கம்' என்பது அவர் கொண்ட பண்பியலையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதை நன்கு விளங்கிக் காண்க.

இக்கருத்தையே நூலாசிரியரும்,

**'உலகம் தழீஇயது ஒட்பம்'** - **425**

**'எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு**
**அவ்வ துறைவது அறிவு'** - **426**

- என்று அறிவிலக்கணத் தானும்,

**'செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து**
**இயற்கை அறிந்து செயல்'** - **637**

- என்று, இயங்கியல் இலக்கணத்தாலும் எடுத்துக்கூறி, இவ்வறிவினதும், பண்பினதும், இயங்கியலினதும் ஆகிய உண்மைகளைக் கற்றறிந்தும், அதன்படி ஒழுகாதவர்களைப் பேதையுள் பேதைகள் என்றும் கடிகிறார்.

**'ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்**
**பேதையின் பேதையார் இல்'** - **834**

என்பது காண்க.

- இனி, இதற்கு விளக்கம் கூறுகையில், பரிமேலழகர்,

'இஃது, ஒழுக்கமாவது உயர்ந்தார் ஒழுகின நெறியில் ஒழுகுதல் என்பதும், அவ்வொழுக்கம் கல்வியினும் வன்மையுடைத்து என்பதும் கூறிற்று' என்பது அறிக.

- இனி, காலிங்கர், இதற்கு உரையாக,

'உயர்ந்தோராகிய அந்தணர் முதலாக எண்ணப்பட்ட பெரு மரபினருள் ஒருவன் இவ்வில்லற மரபினனாகலான், மற்றிவன் தானொழிந்த உயர்ந்தோர் கருத்தோடு பொருந்தத் தன் மன ஒழுக்கத்தை ஒழுகுதல் சிறந்தது' என்பது நேரிய உரையன்று, என்க.

3. இஃது, ஒழுக்கம் கல்வியின் அடிப்படையால் மட்டன்றி, உயர்ந்த பண்பினார் கொண்ட பண்பியல் அடிப்படையில் அமைவதாம் என்று முடிபாகக் கூறுதலின் இறுதியில் கூறப்பெற்றது, என்க.

# அ-2 இல்லறவியல்

## அ-2-11 பிறனில் விழையாமை -15

### அதிகார முன்னுரை

'பிறனில் விரும்பாமை' என்பது, 'பிறனுக்குரிய இல்லாளை (மனைவியை)க் காமத்தின் விரும்பாமை' என்று கூறியது, விழைதல் ஆசையால் (காமத்தால்) விரும்புதல்.

பிறனுடைய உடைமைகளைத் தான் விரும்பாமை என்னும் நிலையில், இஃது உடல் விழைவால் நேரும் முதல் குற்றமாம் என்க.

பிற பொருள்களை விரும்புதல் இதனை அடுத்தது.

தன்னொழுக்கத்தைக் கடைப்பிடித்து ஒழுகுபவன், பிறர்பாலும் அத்தகைய பொதுவொழுக்கத்தைக் கடைப்பிடித்து ஒழுகுதல் நேர்மையான கடைமையாதலின், இஃது 'ஒழுக்கமுடைமை' யினை அடுத்துக் கூறப்பெற்றது, என்க.

மக்களினம் படிநிலை வளர்ச்சி பெறாமல், காட்டு விலங்குகள் போல் வாழ்ந்திருந்த பொழுது, முதன்முதல் 'அச்சம்' என்னும் அறியாமை உணர்வு தலையெடுத்தது, முதல் அறிவியல் வளர்ச்சியாம் என்க.

'அச்சம்' என்னும் அறியாமை உணர்வினின்று 'துணிவு' என்னும் அறிவு துலங்கியது.

துணிவினின்று எதிர்ப் பாலாரிடம் 'அன்பு' என்னும் ஈடுபாட்டுணர்வு மலர்ச்சியுற்றது. இது முதலாவது 'மனவியல்' வளர்ச்சி.

பின்னர், அஃது 'உணர்வுப் பகிர்வு' உணர்வாக வளர்ச்சியுற்றது, முதல் பண்பியல் வளர்ச்சி.

'உணர்வுப் பகிர்வு' பின், ஆண்பெண் காதலுணர்வையும், 'கூட்டக் கலப்பு' என்னும் குழுவுணர்வையும் கால்கொள்ளச் செய்தது, இரண்டாவது பண்பியல் வளர்ச்சியாம்.

இவ் விரண்டாவது பண்பியல் உணர்வின் அடிப்படையில், இலை, தழையுடுத்தல் நாகரிகம் தோன்றியது. பின்னர் அதுவே தோலாடை, பருத்தியாடை நாகரிகமாகப் படிநிலை வளர்ச்சி பெற்றது.

தொடக்கத்தில், தன் இணைவுக்குரியாளைப் பிறர் கூட்டத்தினின்று தனிப்படுத்தித் தனக்குரிய இணைவுறுப்பாகிய இடையுறுப்பைப் பிறர் காட்சியினின்றும் விழைவினின்றும் மறைக்க வேண்டிய தேவையினால், தழையுடை பயன்படுத்தப் பெற்றது.

இத் தழையுடை, தமிழரின் கழகக் கால இலக்கிய வளர்ச்சிக் காலம் வரை தொடர்ந்து நின்று, அவ் விலக்கியங்களிலும் பரவலாகக் காணப்பெறுவதே தமிழரின் பழம்பெரும் நாகரிகத் தொன்மையைக் காட்டுவதாகும்.

**'பல்பூம் பகைத்தழை நுடங்கும் அல்குல்'** - **நற்:8**

**'.................................. சேர்ந்து செறிகுறங்கின்**
**பிணையல்அம் தழை தைஇ'** - **நற்:170**

(குறங்கு - தொடை,
குறங்கின் பிணையல் - பெண்ணுறுப்பு)

**'கோடுஏந்து அல்குல் தழையணிந்து'** - **நற்:368**

**'வயல்வெள் ஆம்பல் உருவ நெறித்தழை**
**ஐதுஅகல் அல்குல் அணிபெறத் தைஇ'** - **நற்:390**

**'தழையணி அல்குல் மகளிர்'** - **குறுந்:125**

**'திருந்துஇழை அல்குற்குப் பெருந்தழை உதவி'** - **குறுந்:214**

**'துத்திப் பாந்தள் பைத்துஅகல் அல்குல்**
**திருந்திழைத் துயவுக் கோட்டு அசைத்த பசுங்குழைத்தழை'**
- **குறுந்:294**

**'தழைதாழ் அல்குல்'** - **குறுந்:345**

**'ஒண்தழை அயரும் துறைவன்**

**தண்தழை விலைஎன நல்கினள்'** - ஐங்:146

**'கானல் ஞாழல் கவின்பெறும் தழையள்'** - ஐங்:180

**'ஆய்தழை நுடங்கும் அல்குல்'** - ஐங்:291

**'தண்தழை உடையை'** - அகம்:7

(உடையை - உடை உடுத்தவளே)

**'மணிப்பூம் பைந்தழை தைஇ'** - அகம்:20

- இவ்வாறு, தழைஉடை அணிந்ததுதான், மக்கள் இனத்தில் பண்பாட்டின் மூன்றாவது படியும், நாகரிகத்தின் முதல் படியும் என்க.

கழகக் கால இலக்கியங்களுள் தழையுடை காணப்பெறும் நிலை, நாகரிகம் நன்கு வளர்ந்திருந்த, மாழை (உலோக)க் காலத்தினும் தாண்டியது எனினும், அஃது, அத்தொன்மைப் பழக்கவுணர்வின் தொடர்ச்சிச் சாயலே என அறிதல் வேண்டும்

தொடக்கக் காலத்துப் பனையோலைச் சுருட்டினால் ஆகிய காதோலை, இன்னும் தென்புலத் தமிழப் பெண்டிர் அணிகின்ற சாயலைப் போன்றது, அதுவென்க.

தழையுடை நாகரிகத்தின் பின் மக்களின் மனப்பண்பும், வாழ்வியலின் புறவளர்ச்சிகளும் படிப்படியாக வளர்ச்சி பெற்றன.

அதே பொழுது, பண்பாட்டின் கூறுகளும் கூடவே வளர்ச்சியுறத் தொடங்கின. அவ்வகையில் பெண்பாலார்க்கு **நாணவுணர்வும்,** ஆண் பாலார்க்கு **மானவுணர்வும்** கொஞ்சங் கொஞ்சமாகக் காலூன்றி வளரத் தொடங்கின. நாணவுணர்வும், மானவுணர்வும் மாந்தப் பொது வுணர்வுகள் ஆகின.

இந் நாணவுணர்வு தான் விலங்கினத்திடமிருந்து மாந்தனை முதன் முதல் வேறு பிரித்தது. நாணவுணர்வும், மானவுணர்வும் விலங்குகளிடம் இல்லை.

மாந்தப் பண்பியலின் அடிப்படை உணர்வுகளான இந் நாணவுணர்வையும், மானவுணர்வையும், ஆசிரியர் வலியுறுத்தியும், விளக்கியும் கூறும் நூற்பகுதிகள் கவனிக்கத் தக்கன.

**''ஊண்உடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல**
**நாண்உடைமை மாந்தர் சிறப்பு'** - 1012

**''ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாண்என்னும்**
**நன்மை குறித்தது சால்பு'** - 1013

- இவை யிரண்டு கருத்தானும் விலங்குகளுக்கும் மக்களுக்கும் வேறுபாடு

காட்டப்பெற்றது.

''நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும்' - 960

''நாணுடையான் கண்ணே தெளிவு' - 502

- இவை யிரண்டு கருத்தானும் நாணுடைமையின் நன்மை கூறப் பெற்றது.

''படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்' - 172

''குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு' - 794

''ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார்' - 952

- இம் மூன்று கூற்றானும் நாணுடையவரின் பெருமை கூறப் பெற்றது.

- இனி, சான்றோர் பிறரும் நாணத்தைப் பெருமைப்படுத்தி உரைத்தவை.

''உயிரினும் சிறந்த நாண்' - நற்:17

''நாணு நன்கு உடைமை' - நற்:160

''விடும் நாண் உண்டோ ?' - குறுந்:239

''நாணுடை நெஞ்சே!' - ஐங்:112

''உயிரினும் சிறந்த தன் நாண்' - கலி:147

''உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் ஒழுக்கின் கற்புச்சிறந் தன்று' எனத்
''தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சம்' - தொல்: 1059:1-3

-இனி, நாணம் போலவே மானவுணர்வும் ஆசிரியரால் மக்களின் சிறப்புணர்வாக மதிக்கப் பெறுதல் காண்க.

''உயிர்நீப்பர் மானம் வரின்' - 969

''இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழு(து) ஏத்தும் உலகு' - 970

''மருந்தோ மற்(று) ஊன்ஓம்பும் வாழ்க்கை பெருந்தன்மை
பீடழிய வந்த விடத்து' - 967

''- மானம்
அழியா ஒழுக்கத்தின் மிக்கதூஉம் இல்லை
பழியாமல் வாழும் திறம்' - அறநெறிச்சாரம்: 62

என்றார் பிறரும்.

முந்துதமிழ் மக்களே அவற்றை மாந்தப் பண்பியல் உணர்வுகளாக வளர்த்தெடுத்து, அக நிலையிலும், புற நிலையிலும், பற்பல நடைமுறைத் திருத்தமுறச் செய்து, வரைதுறையின்றி யிருந்த ஆண்பெண் ஒழுகலாறுகள் சான்றோர்களால் கண்டிக்கப்பெற்றும், கடியப்பெற்றும் திருமண வாழ்க்கையே கற்பு வாழ்க்கை எனப் போற்றிக் கொண்டனர்.

அக்கால் முல்லைநில நாகரிகம் தொடங்கியது 'முல்லை' என்னும் சொல் கற்பைக் குறித்ததும், இதனடிப்படையிலேயே என்க.

இந்தக் கற்பிக்கப் பெற்ற ஆண் பெண் ஒழுக்கமுறையான கற்பு நிலை. மக்களிடம் படிப்படியாக வளர்ச்சி பெற்று, ஒருத்திக்கு ஒருவன், ஒருவனுக்கு ஒருத்தி என்னும் கடைப்பிடியாக வளர்ந்து, இல்லற அமைப்பு ஏற்பட்டது. அதனடிப்படையில் மணமுறை வலியுறுத்தப் பெற்றது.

தமிழியல் நெறிப்படி, மணத்திற்கு முன்னர் ஈடுபடும் ஆண், பெண் ஒழுகலாறு '*களவு*' என்றும், மணம் செய்து கொண்டபின் ஈடுபடும் ஒழுகலாறு கற்பு என்றும் கூறப்பெற்றன.

களவொழுக்கக் காலத்தும் ஆண்மகனிடம் அவன் விரும்பும் பெண்ணை, அல்லது அவன் களவில் பழகும் பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள வலியுறுத்தப்பெற்றது.

இஃது, அகத்திணை (அகவொழுக்கம்) இலக்கணத்துள் வரைவு கடாவுதல் (திருமணத்தை வற்புறுத்தல்) என்னும் ஒரு துறையாகவே விரிந்தது.

**'கற்பெனப் படுவது காணமொடு புணரக்**
**கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்**
**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே'**

**- தொல் : 1088**

**'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப'** **- தொல் : 1091**

(ஐயர் - பெரியார்; கரணம் - நிகழ்முறை சடங்கு)

- எனும் இவ் விரண்டு தொல்காப்பிய நூற்பாக்களும் அந்நிலைகளை விளக்குதல் காண்க.

திருமணம், வரைவு, வரைதல் எனப்பெற்றது. வரைதல் - ஆண், பெண் ஒழுக்கத்திற்கு வரை - எல்லை - இடல். திருமணம் செய்யாது, தம் விருப்பம் போல் ஒழுகும் பெண்டிர் 'வரைவின் (வரைவு + இல்) மகளிர்' எனப்

பெற்றனர். அவர்கள் பொன்னுக்கோ, பொருளுக்கோ, தங்களிடம் தொடர்பு கொள்ள வரும் ஆடவர்களிடம் தங்களின் கற்பை விற்றனர். அவர்களுக்கு **முல்லைமாறிகள்** என்றும் குமுகாய நிலையில் இழித்துரைக்கப் பெற்றனர். (முல்லை - கற்பு; மாறுதல் - விற்றல்). அவர்களுக்கு பரத்தை (பரந்துபட்டு ஒழுகுபவள்) என்னும் பெயர் இலக்கிய வழக்காக வேரூன்றியது. பிற்காலத்து அவர்கள் **விலைமகளிர், பொருட்பெண்டிர்** என்றும் அழைக்கப் பெற்றனர்.

பலர் தொடர்புடைய பெண் பரத்தை எனப் பெற்றது போல், பலர் தொடர்புடைய ஆண் **பரத்தன்** (1311) என இழித்துரைக்கப் பெற்றான்.

இல்லற வாழ்வு கொண்டவர்கள் இத்கு பேணா ஒழுக்கத்திற்கு நாணினர். (தொல்: 1096: 15). 'பெரியோர் ஒழுக்கம் பெரிது' எனப் பேணினர். (தொல்:1096: 17). 'பெரியோர் சென்ற அறவழிப் பிழையாது' (மதுரைக்.:192) இல்லறம் ஒழுகினர். - 'ஆன்றோர் சென்ற நெறிவழிச் செல்பவனையே மக்கள் மதித்தனர்'.

> **'ஆன்றோர் செல்வழி வழாஅச்**
> **சான்றோன்'** - நற் : 223

அன்றைய ஆடவரின் பரத்தையர் தொடர்பு மறுக்கப்பெற்றது; இகழப்பெற்றது. அதனால் இல்லறத்துப் பல பூசல்கள் விளைந்தன.

மனைவி, இல்லக் கிழத்தி எனப்பெற்றாள். மனைவி தவிர, வரைவில் பெண் ஒருத்தியுடன், திருமணமானவன் தொடர்ந்த தொடர்பு கொண்டால், அவள் அவனின் **காமக்கிழத்தி** எனப்பெற்றாள்.

ஆடவர் தம் காமக் கிழத்தியரொடும், சிலகால் பரத்தையரொடும் கொண்ட தொடர்பு பழந்தமிழ் இலக்கியங்களுள் காணப் பெறுகிறதே தவிர, **பிறனொருவன் மனைவியொடு கொள்ளும் தொடர்பு, யாமறிந்த வரையில் அவற்றுள் யாண்டும் காணப்பெறல் இல்லை.** தமிழியல் மரபில் அத்தீயவொழுக்கம் பேணப்பெறுவதும் காணப் பெறுவதும் இல்லை; ஓரிரண்டு நிகழ்வுகள் உலகியலில் காணப் பெறினும், இலக்கியங்களுள் காட்டப் பெறுவது இல்லை.

ஆனால், ஆசிரியர் காலத்து அவ் வழுவொழுக்கமாம் பிறனில் விழைதல் கண்டிக்கவும் இகழவும் பெறுதல், அக்கால், அது தலையெடுத்திருந்தது என்பதையே காட்டுகின்றது, என்க. அதற்கு ஆரியர் வரவே காரணமாயிருத்தல் வேண்டும் என உய்த்துணரப் பெறுகின்றது. அவர்தம் ஊடுருவலால் கெட்ட தமிழியல் பண்பாட்டுக் கூறுகளுள் இதுவும் ஒன்றாயிருத்தல் வேண்டும் என்பது தெளிவாகிறது.

ஏனெனில், ஆரியர் வழியில் அவர்தம் மனைவியர் வேறு பிறரிடம் மேவுதல், அவர்தம் அதர்வன வேதத்துள்ளும் அவ்வாரிய

இலக்கியங்களுள்ளும், அவர்தம் இதிகாச, புராணங்களுள்ளும் மிகவும் பரவலாகக் காணப்பெறுகின்ற செய்தியாகும். அவர்தம் காம நூல்களுள்ளும், இவ் வழுவொழுக்கம் 'பரடகீயம்' அல்லது 'பரரதிகம்' என்னும் பெயர்களால் விளக்கப்பெறுவது, நோக்கத்தக்கது. வாத்சாயனாரின் காமசூத்திரம், கொக்கோக முனிவரின் 'கொக்கோகம்', காமாந்தகரின் காமசாத்திரம் ஆகிய நூல்களுள் அதனைக் கண்டு கொள்க.

இத் தகைவிலா அல்லொழுக்கத்திற்கு, வான்மீகியார் இராமாயணமும் வியாசரது மகாபாரதமும் அவற்றுள் வரும் இந்திரன், சூரியன், சோமன், வருணன், அக்னி, விஷ்ணு, பிரம்மன், தாருகா கானகத்து இருடிகள் போன்றவர்களின் பிறன்மனை விழைந்த களவொழுக்கக் கதைகளுமே சான்றுகளாக நிற்கின்றன. அவர்தம் தேவியரும் அத் தீயவொழுக்கினரே.

வால்மீகி இராமாயணம், தொன்மைக்கால அசாம் பகுதியில் இருந்த இலங்கா என்னும் நாட்டில் நடந்த ஒரு சிறுகதை தழுவிய ஒரு பெருங்கதையே. அதில் கூறப்பெறும் இராவணா என்னும் அரசன் ஒரு சிற்றரசனே. அவன் தமிழ்ப் பாண்டியப் பேரரசன் தென்னிலங்கை இராவணன் அல்லன். (தென்னிலங்கை என்று கூறும்பொழுதே வடஇலங்கை ஒன்றிருந்தது, பெறப்படுகிறது. வட விலங்கையில் நடந்த அக்கதையைத் தென்னிலங்கையில் நடந்ததாக வான்மீகியும் அவரைப் பார்த்துக் கம்பனும் கதைசெய்தது வரலாற்றுப் பிழையே).

- தென்னிலங்கை இராவணன் சீரிய வொழுக்கினன். அவன் தன் மனைவியைத் தவிர வேறு பெண்களை ஏறெடுத்தும் பார்த்தவ னல்லன். பிறன்மனை நோக்காத பேராண்மையுடையவன்.

- வான்மீது காட்டிய இலங்கை அரசன் தொன்மை அசாம் பகுதியில் நீர்சூழ அமைந்திருந்த 'லங்காபுரி' என்னும் சிறு தீவப் பகுதியை ஆண்டிருந்த பிராகிருதப் பேரரசன் 'இராவணா' என்பவனே. (முனைவர் சங்காலிய).

- அசாம், இலங்காபுரி, 'ராவணா' என்னும் அரசனை, நம் தொன் பாண்டியத் தென்னிலங்கை இராவணனாகக் கொண்டு நம் பெரும்பாவியப் பெரும்பாவலன் கம்பனும், வடமொழிப் பாப்புலவர் வால்மீகியை மொழிபெயர்த்துக் கூற, தமிழியல் பண்பாட்டுக்கேற்ப இராமாயணம் பாடிவிட்டான்.

- இதனால், தமிழ்ப்பேரரசன் தென்னிலங்கை இராவணனுக்குப் 'பிறனில் விழைந்த' பொருந்தாப் பெரும்பழி விழுந்துவிட்டது. இது வரலாறு தெரியாமையால் நேர்ந்த பிழையே யன்றித் தமிழியற் பண்பாட்டில் நேர்ந்த இழுக்கன்று.

- கம்பன் ஆரியர் சூழ்ச்சியறியா அருந்தமிழ்ப் பாவலன். ஆரியர் செய்த சூழ்ச்சி அதுமட்டுமன்று. கம்ப இராமாயணம் எழுதப் பெற்று அரங்கேறிய

பின்னர், கம்பனின் பாவலர் மரபு வளரக் கூடாதென்று, அவன் மகனும் பெரும் புலவனுமான அம்பிகாபதிக்கும் குலோத்துங்கச் சோழன் மகள் அமராவதிக்கும் நேர்ந்த மெய்ம்மைக் காதலை அரசனிடம் குற்றமாய் விரித்துக் காட்டி, அரசனைக் கொண்டு, சூழ்ச்சியால் அம்பிகாபதியில் தலையை வெட்டுவித்துப் புலமை மரபை ஆரியர் அழித்தனர் என்க.

இவ் வாரியர் தீயொழுக்கத்தினை நூலாசிரியரும் நூலும் 'கயமை' அதிகாரத்துள் குறிப்பாகக் கடிவது உன்னத் தக்கது.

**'தேவர் அனையர் கயவர் அவருந்தாம்**
**மேவன செய்தொழுக லான்'** - *1073*

(இதற்குப் பரிமேலழகர் தரும் பூசிமெழுகல் உரை மெய்ப்பொருளன்று. விளக்கம் ஆங்குக் கூறப்பெறும்.)

எஃது எவ்வாறாயினும், ஆரிய அயலார் தமிழ்நிலத்துள் புகுந்து, தமிழியற் பண்பாடுகளை ஆரியப் பண்பாடுகளாகக் கொண்டும், ஆரியப் பண்பாடுகளைத் தமிழியற் பண்பாடுகளிற் கொடுத்தும், ஊடுருவல் செய்தும் அவற்றில் நிறைநிலையைக் குறைத்தும், ஒரு பண்பாட்டியல் புரட்டல் நிகழ்ந்து கொண்டிருந்த காலத்தில்தான், நூலாசிரியர், தமிழ் முன்னையோர்தம் தமிழியற் பண்பாட்டின் தனிச் சிறப்பினை நிலை நாட்டுதற்கு இந்நூல் தந்தார் ஆகையால், அன்று தமிழகத்துப் புகுந்த அல்லொழுக்கமாகிய இப் 'பிறனில் விழைதலை'யும் கண்டிக்கவும் கடியவும் வேண்டியிருந்த தென்க.

இனி, 'பிறனில் விழைதல்' இங்கு ஒருபாற் குற்றமாகக் குறிக்கப் பெறினும், இஃது இருபாற் குற்றமே என்க.

இருபாலார் நிலையினும் நிகழப்பெறும் குற்றமாக இஃதிருப்பினும், ஆடவர்பால் நிகழும் ஒருவழிக் குற்றமாக, இங்குக் குறிக்கப் பெறுதல் அவர் ஆளுமையுடையவராகக் கருதப்பெறுவதாலேயே என்க.

பிறரது உடைமையைத் தான் வெளவுதல் குற்றமும் அறனல்லாத செயலும் ஆகையால், பிறரது உயிருடைமையாகிய பிறன்மனைவியைத் தான் விழைவதும், வாய்ப்பின் நுகர்வதும் உயிர் வழிக் குற்றமே என்க.

பொதுநலவுணர்விற்கு இது மாசு கற்பிப்பதும், தடையேற் படுத்துவதுமாகையானும், இது, பெரும்பாலும் ஒன்றிப் பழகும் இல்லறத்தார் கண்ணே நிகழ்வதாகையானும், இஃது 'இல்லறவிய'லிலும், ஒழுக்கமுடைமை கடைப்பிடிப்பார் பெண்ணியலார் வழிநிகழும் இக்குற்றம் கடியவேண்டுவனவற்றுள் தலைமையாய குற்றமாகலின், இஃது 'ஒழுக்கமுடைமை'யின் பின்னும் வைக்கப் பெற்றதென்க.

மற்று, பரிமேலழகரும் பாவாணரும் கூறுவதுபோல், 'இஃது, ஒழுக்கமுடையார் மாட்டே நிகழ்வது ஆகலின், ஒழுக்கமுடைமையின் பின் வைக்கப்பட்டது' என்பது, அத்துணைப் பொருத்தமுடையதன்று; என்னை? அவர் ஒழுக்கமுடையாராயின் இக் குற்றத்தின்பால் படார் ஆகலின்.

## கசக. பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து அறம்பொருள் கண்டார்கண் இல் - 141

**பொருள் கோள் முறை :**

> ***ஞாலத்து, அறம்பொருள் கண்டார்கண்***
> ***பிறன்பொருளாள் பெட்டுஒழுகும் பேதைமை இல்.***

**பொழிப்புரை :** உலகில், அறத்தினது உண்மைப் பொருளைத் தெளிவாக நன்கு உணர்ந்துகொண்டவர்களிடத்துப் பிறனது இல்லறத்திற்குப் பொருளாகி நிற்பவளாகிய அவன் துணைவியை விரும்பி, அவளிடம் தவறாக ஒழுகும் பேதைமை இருப்பதில்லை.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. ***ஞாலத்து அறம் பொருள் கண்டார்கண்*** - உலகில் அறத்தினது உண்மைப் பொருளைத் தெளிவாக நன்கு உணர்ந்து கொண்டவர்களிடத்தில்.

- **ஞாலம்** - எதனது பற்றும் இல்லாமல் தொங்கிக் கொண்டிருக்கும் உலகம்.

- ***அறம், பொருள்*** - பொதுமை அறத்தினது உண்மைப் பொருளை.

- **கண்டார்கண்** - தெளிவாக நன்கு உணர்ந்து கொண்டவர்களிடத்தில்

- 'அறம்பொருள்' என்பதற்கு, இதுவரை பொருள் கண்ட உரையாசிரியர் அனைவரும் 'அறநூலையும் பொருள் நூலையும்' என்றே பொருள் கூறியுள்ளனர்.

- பிறனுக்கு உரியாளை விரும்புவது பொதுமை அறத்தின் வழிப்பட்ட குற்றமே தவிரப் பொருள் வழிப்பட்ட குற்றமன்று என்று தெளிதல் வேண்டும்.

அது பிழையென்றுணர்வதற்கு அறவுணர்வறிவே போதுமானது. பொருளியல் அறிவு அதற்குத் தேவையில்லை. பொதுவொழுக்கம் அறத்தின்பாற்பட்டது.

எனவே, 'அறம் பொருள் கண்டார்' - என்பதற்கு 'அறமும் பொருளும்' என்று உம்மைத் தொகையாகக் கொண்டு விரித்துப் பொருள் கொள்வதை விட, வேற்றுமைத் தொகையின் விரிவாகக் கொண்டு, 'அறத்தினது பொருளை நன்கு ஆய்ந்து கண்டார்' என்று பொருள் கொள்வதே மிகச்சரியான பொருளாம் என்க. என்னை?

- பொருளியல் நூலில் 'இல்லறவொழுக்கம்' சாற்றப் பெறாமல், அறவியல் நூலின்கண்ணே அது சாற்றப்பெறும் ஆகலின்.

- அறவியல் நூலின்கண் கூறப்பெறும் பொதுவொழுக்கத்தின் கூறுபாடுகளுக்குள்ளேயே தன்னொழுக்கமும், பொதுவொழுக்கமும் அடங்கும்.

- இல்லறம் மேற்கொண்டு ஒழுகுபவன். தன்னைப் போல் அண்டை யயல் இல்லறத்தார்களையும் கருதவேண்டும் என்பது பொது அறம்.

- ஏனெனில் தன் மனைவிமீது தான்கொண்ட அன்பையும் பாதுகாப்பையும் போலவே, அண்டை யயல் வீட்டானும் அவனுடைய மனைவி மேலும் அன்பையும் பாதுகாப்பையும் மேற்கொண்டு இயங்குவானாகையால், அதற்கு இடையூறாகத் தான் இயங்குவது, பொதுவறத்திற்கே கேடாய் முடியும் என்று உணர்ந்திருக்க வேண்டும் என்பதே நூலாசிரியர் கருத்தாம் என்க. இதுவே மனவியலுக்கும் உலகியலுக்கும் மாந்த உளவியலுக்கும் பொருந்துவதாம் என்க.

- இவ்வறவுணர்வு ஒன்றே, அவன் அறநூலைக் கற்று உணர்ந்திருக்க வேண்டிய ஒன்று.

- மற்று, பொருள் நூலின்கண், இவ்வகைக் குற்றத்திற்கு அரசுத் தண்டனை உண்டு என்பது கூறுப்பெற்றுள்ளது கொண்டு, அஃதுணர வேண்டியே பொருள்நூலும் ஆயப்பெறுதல் வேண்டும் என்று கருதிப் பொருளுரைப்பது சரியான மனவியல் உணர்வு அன்று. அக்கால், அறநூலின் மதிப்புணர்ந்திருத்தலுக்கும், அதனை ஆய்ந்து கற்றிருத்தலுக்கும் பொருளில்லாமல் போகும் என்க.

- மேலும், இக்குற்றம் நிகழவேண்டாமல் எச்சரித்துத் தடுக்க வேண்டும் என்பதுதான் ஆசிரியர் கொள்கையே தவிர, அது நிகழ்ந்து தண்டனை பெறவேண்டும் என்பதோ, அத்தண்டனையைக் காட்டித்தான் இதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதோ அவர் நோக்கமன்று.

- மேலும், இக்குற்றத்தின்பாற் படுபவன் அறநூலைக் கற்றவனாகவோ, அதனை ஆய்ந்து பொருள் கண்டவனாகவோ இருப்பதில் பொருளில்லை என்க.

- எனவே, இவ் வல்லொழுக்கம் நிகழாமல் இருப்பதற்கு அறநூல் அறிவே போதும் என்றலால், பொருள் என்னும் சொல் பொருள் நூலை ஆய்ந்து தேர்தல் என்னும் கருத்துக்கே இடமில்லை என்க.

- தன் சார்பாகவும், தன் இல்லறச் சார்பாகவும் எவ்வகையான குற்றம் நிகழக் கூடாது என்று ஒருவன் நினைக்கின்றானோ, அதே குற்றத்தைப் பிறர் சார்பாகவும், பிறரின் இல்லறச் சார்பாகவும் தான் நிகழ்த்தக் கூடாது என்று எண்ணி ஒழுகுவதே பொதுவொழுக்கமும் அறமும் ஆகும், என்க.

**2. பிறன் பொருளாள் பெட்டு ஒழுகும் பேதைமை இல்** - பிறனது இல்லறத்திற்குப் பொருளாகி நிற்பவளாகிய அவன் துணைவியை விரும்பி, அவளிடம் தவறாக ஒழுகும் பேதைமை இருப்பதில்லை.

- இவ் விடத்தும், 'பிறன் பொருளாள்' என்பதற்கும் முன்னைய உரையாசிரியர் அனைவரும், 'பிறனுடைய பொருள்ஆம் தன்மை யுடையாளை' என்றும், 'பிறனுடைய பொருள்' என்றுமே பொருள் தருவர். அது, பெண்மையைத் தாழ்த்தும் உணர்வினைத் தரும் என்க. அஃது ஆசிரியர்க்கு இழுக்குத் தருவதாகும்.

- மனைவி ஒருவனது உயிர்த்துணை. அவளை அவனுடைய உடைமைப் பொருளுள் ஒன்றாகக் கருதுவது மாந்தப் பொதுமைக்கே இழுக்காகும். எனவே பெண்மைக்கு இழுக்குத் தரும் இப்பொருள் சால்புடையதன்று; பெருமையுடையதுமன்று.

- ஆகவே, 'பிறன் பொருளாள்' என்பதற்குப் 'பிறனது இல்லறத்திற்குப் பொருளாகி நிற்பவளாகிய அவன் துணைவி' என்பதாகப் பொருள் தரவேண்டியுருந்தது என்க. இதுவே ஆசிரியர் கருத்தாதல் வேண்டும் என்பது ஒருதலை.

- **பெட்டு** - விரும்பி

- பெள் + து - பெட்டு

பெள் - விருப்பம். **பெண்** - விரும்பப்படுபவள். பிறரால், அஃதாவது பெற்றோரால், கணவனால், மக்களால், உறவினரால் என அனைவராலும் விரும்பப் பெறுபவள் பெண்.

- ஆனால், பிற ஆடவர் ஒருத்தியை விரும்புவது, திருமணத்திற்கு முன் நிகழினும் திருமணத்திற்குப் பின்னர் நிகழ்வது அல்லொழுக்கமாம் என்க. அக்கால் குமுக நிலை சீர்கெடும் என்பது பொதுவறம். இது கடைப்பிடிக்கப்பெறல் வேண்டும் என்பதே குமுக அமைப்பியலாம் என்க.

- **பெட்டு ஒழுகுதல்** - விரும்பி நடத்தல்.
- இங்கு 'ஒழுகுதல்' என்னும் சொல் விரும்பி நடக்கும் அனைத்துச் செயல்களையும் குறித்தது,
- அனைத்துச் செயல்களாவன, அடிக்கடி இல்லம் வருதல், தேவையின்றி அவளிடம் பேச விரும்புதல், வரைதுறையின்றிப் பொய்யாய் நகைத்துப் பேசுதல், ஏதாம் ஒரு பொருளைக் கொடுத்தல், வாங்கல், கணவனில்லாத நேரம் பார்த்தோ, வீட்டில் யாரும் இல்லாமல் தனிமையில் உள்ள நேரம் பார்த்தோ வருதல், உரையாடல், அவளுக்கோ அவளுடைய கணவனுக்கென்றோ, அவளின் குழந்தைகளுக்கென்றோ, விருப்பமான அல்லது தேவையான ஒரு பொருளை வாங்கி வந்து தனிமையில் அவளிடம் தருதல், அவளது உடல்நலம் உசாவுதல், அதில் அக்கறை காட்டல், அவளின் உடைகளை, நகைகளை, தேவைகளை மற்றும் அழகினைப் பற்றி அவளிடம் தனிமையில் உரையாடுதல், அவளும் கணவனும் வீட்டிற்கோ விருந்திற்கோ பொழுது போக்கிற்கோ வரும்படி அவளிடம் அழைப்பு விடுத்தல், அவள் குடும்பத்தின் பொருள் தேவையை அவள்வழி அறிந்து அவளிடமே தனிமையில் உதவுதல் போலும் பலவகைச் செயல்கள் என்க.
- பேதைமை - ஈங்குக் கூறப்பெறும் அனைத்தும் வேண்டுமென்றும், பொய்யாகவும் செய்யப்பெறும் செயல்களும் அவற்றுக்கான மனவிழைவும், அவற்றின் விளைவு அறியாமையால் நிகழ்த்தப் பெறுவனவாகையால் பேதைமை என்றார்.

3. இஃது, இல்லறவியலில் நிகழ்த்தப்பெறும் தீய ஒழுகுதல் ஆகையானும், அறவுணர்வு பற்றிக் கற்றுணர்ந்தார்கண் நிகழக்கூடாது என்பதானும் இவ்வதிகார முதலிலேயே கூறினார் என்க.

## கசஉ. அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை நின்றாரில் பேதையார் இல். - 142

**பொருள்கோள் முறை** : இயல்பு

**பொழிப்புரை** : பொதுமை அறத்தைக் கடைப்பிடியாமல் அதற்குக் கீழே நின்றவர்கள் எல்லாருள்ளும், பிறனது இல்லின் புறவாயிலிற் போய், அவன் மனையாளுக்காகக் காத்து நின்றாரைவிடப் பேதையார் இல்லை.

சில விளக்கக் குறிப்புகள் :

1. **அறன்கடை நின்றாருள் எல்லாம்** - பொதுமை அறத்தைக் கடைப்பிடியாமல், அதற்குக் கீழே நின்றவர்கள் எல்லாருள்ளும்.

அறன் கடை - அறத்திற்குக் கீழ் (நிற்றல்)

- அறத்தின் கீழ் - அறத்தின் நில்லாது தாழ்ந்து நிற்றல்

- கடை - இறுதி, கீழ், தாழ்வு (தாழ்ச்சி)

**கடை** - கீழ்.

'சான்றோர்க்குக் கொன்றாகும் ஆக்கம் கடை' - 328

(இங்கு, 'கடை' என்னும் சொல் 'கீழ்' என்னும் பொருளைத் தந்தது.

கடை - இறுதி.

'கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை' - 663

(இங்கு, 'இறுதி' எனும் பொருள் தரும்.)

கடை - தாழ்ச்(சி)

'கல்லாதவரின் கடையென்ப' - 729

(இங்கு, 'தாழ்ச்சி' என்று பொருள்பட்டது.)

'அறன்கடை' என்பதற்குப் பரிமேலழகர் **'பாவம்'** என்று கொண்டது வேதவழிப் பொருள் என்க.

- பரிதியாரும் 'கடையாகிய பாவத்தில்' என்றதும், அது.

- பாவாணரும் 'தீவினை' என்று பொருளுரைத்து, 'அறிவின் எல்லைக்கு அப்பாற்பட்ட தென்னுங் கருத்தால் 'கரிசு' (பாவம்) அறங்கடை எனப்பட்டது' என்று விளக்கம் கூறினார்.

- **'பாவம்'** தமிழ்ச்சொல் அன்று.

- ஆசிரியர் பயன்படுத்திய சமற்கிருதச் சொற்களுள் இதுவும் ஒன்று.

(பிற சொற்களை ஆங்காங்குக் காட்டுவம்)

- 'பாவம்' என்பதற்குத் தீவினைப்பயன் என்றே பொருள் கொள்ளப்பெறுகிறது.

- இதற்கு ஆங்கில - தமிழ் அகராதிப் பேரறிஞர் 'வின்சுலோ' (Winslow) விளக்கம் தருகையில்,

'Demerit, accumulated results of evil actions attaching to the soul'

(தொகுத்த கொடுவினைகளின் விளைவாகி, உயிரொடு இணைந்து, அதனைத் தாழ்த்துவது)

- என்று விளக்குகிறார்.

- இதற்கு எதிரான சமற்கிருதச்சொல் '**புண்ணியம்**' என்பதாகும். இதற்கும் தமிழில் சொல் இல்லை. 'நல்வினைப் பயன்' என்றே சொல்லப்பெறுகிறது.

- 'புண்ணியம்' என்பதற்கும் பேரறிஞர் வின்சுலோ விளக்கம் கூறுகையில்

'Merit of virtuous actions performed in former births attaching to the sould and, bringing blessings'

(முன்பிறவிகளில் செய்த நல்வினைகளின் தகுதிப்பாடுகள் உயிரொடு தொடர்ந்து வந்து அருள்கின்ற நற்பயன்கள்)

- **பாவம், புண்ணியம்** ஆகிய இரண்டு சொற்களுக்கும் தமிழில் நேரான தனிச்சொற்கள் இல்லாமலிருப்பது கொண்டே, இக்கோட்பாடுகள் பழந்தமிழர்க்கு உடன்பாடில்லை என்பதைத் தெளிவாக உணரலாம். அதுமட்டுமன்று, பாவம், புண்ணியம் இரண்டு சொற்களுக்கும் ஆங்கிலத்திலும் சரியான சொற்கள் இல்லாமலிருப்பதும் கருதத் தக்கது.

- 'பாவம்' என்பதற்கு Sin, Vice, Evil, Crime என்னும் சொற்களே பயன்படுத்தப்பெறுகின்றன. அவை வேறுவேறு பொருள்களையே குறிப்பனவாகும். அவை நேரிடையாகப் பாவத்தைக் குறியா.

Sin - தீமை, கொடுமை;

Vice - குற்றம், தீயொழுக்கம்;

Evil - கொடுஞ்செயல். கேடு, துன்பம்.

Crime - குற்றம்.

- அதேபோல் **புண்ணியம்** என்ற சொல்லுக்கும் Virtue, moral, religious merit, purity, holiness என்னும் சொற்களே பயன்படுத்தப்பெறுகின்றன.

- இவை இதற்கு நேரிய பொருள் தருவதில்லை.

Virtue- அறம், அறச்செயல், நற்செயல்.

moral- ஒழுக்கம், படிப்பினை

religous merit- மதச்சிறப்புச் செயல்

purity- தூய்மை, தூய்மைச் செயல்

holiness- புனிதச் செயல், நற்செயல், தெய்வத்தன்மையுள்ள

- ஈங்கு, இவற்றால் ஆங்கிலேயர்களுக்கும் இச்செயல்கள் விளங்குவதில்லை என்றே கருதவேண்டியுள்ளது.

2. **பிறன்கடை நின்றாரில் பேதையர் இல்** - பிறனது இல்லின் புற வாயிலிற் போய், அவன் மனையாளுக்காகக் காத்து நின்றார்ப் போலப் பேதையர் இல்லை.

- பிறன்கடை நின்றாரில் - பிறனது இல்லின் புறவாயிலிற் போய், அவன் மனையாளுக்காகக் காத்து நின்றாரைவிட.

- 'பிறன்கடை' என்பதற்கு 'பிறனது வாயிற் கண்' என்றே பரிமேலழகரும் பிறரும் பொருள் கொண்டுள்ளனர்.

-'கடை' என்பதற்கு 'வாயில்', 'கதவு' என்றும் பொருள் கொள்ளலாம்.

ஆனால், களவின் காரணமாகவும், அச்சத்தின் காரணமாகவும் பிறன்மனை நயக்கும் பேதையர் நேரிய முன் வாயிலிற் சென்று நிற்பர் என்பதினும், வீட்டின் பின்புறம் உள்ள புறவாயிற் கண்ணே, அவளுக்காகக் காத்து நிற்பர் என்பதே உலகியற் பொருத்தமும். மனவியற் பொருத்தமும் உடையதாம், என்க.

- இனி, பேதையார் என்பதற்கும் பரிமேலழகர்,

'அறமும் பொருளும் இழத்தலே யன்றிப் பிறன்கடை நின்றார் அச்சத்தால் தாம் கருதிய இன்பமும் இழக்கின்றாராகலின் 'பேதையாரில்' என்றார்' - என்று விளக்கம் தருவார்.

- இதில் 'இன்பம் இழப்பதால், பேதை' என்பது அத்துணைப் பொருந்திய பொருளன்று. அச்சத்தால் தாம் பெறும் இன்பத்தில் குறைவு தோன்றலாம் எனினும், அவர்கள் இன்பத்தை இழப்பது என்பது மனவியற்கும் உடலியற்கும் பொருந்துமாறில்லை. என்னை?

'திருட்டு மாங்காய் சுவையுடைத்து' என்றல் உலக வழக்காகலின்.

- இன்பம் இல்லையாயின், அச்சம், நாணம், மானமிழப்பு, பழி, தண்டம், பூசல், உயிரிழப்பு ஆகிய இத்தனைத் தாக்கங்களையும் மீறி, இத் தீயவொழுக்கம் மக்களிடைத் தோன்றிப் பரவாது. எனவே, இன்பம் இழத்தல் காரணமாக நூலாசிரியர் 'பேதையார்' என்று குறித்திரார்.

- அறச்செயலில் ஈடுபடாதவர் எல்லாரும் - அஃதாவது, அறன்கடை நின்றார் யாவரும் - அறத்தைப் பின்பற்றற்குரிய கடுமை உணர்ந்தும், இயலாமை காரணமாகவும், பொருளின்மையாலும், அல்லது பொருள்கருதி அல்வழிகளைக் கடைப்பிடிக்கும் நசையாலும், பிற பதவி,

அதிகாரம், பகட்டு வாழ்க்கை முதலிய நோக்கங்களுக்காகவும், இன்னவன்ன பிற மன, உடல் களிப்பிற்காகவுமே அறவழிகளில் ஈடுபடாமல் வாழ்வது உலகியலாக உள்ளது.

- இனி, இன்னோர் எல்லாரும் உளவுரன் இல்லாதவர், அறிவுத் திறனற்றவர், ஏழையர், பொருளாசையர், தந்நலத்தவர் மற்றுப் பிறராகவே கருதப் பெறுவர்.

- ஆனால் பிறனில் விழைபவர் பெண்ணாசையால் அறவழி தவறியவர். ஆகையால், அறிவில்லாதவரினும் கீழ்ப்பட்ட பேதையர் ஆவார், என்க.

- ஆசிரியரும் இதையொட்டியே,

**'பேணாமல் பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்**
**நாணாக நாணுத் தரும்'** - 902

**'பேதைமை என்பதொன்று யாதெனின் ஏதங்கொண்டு**
**ஊதியம் போக விடல்'** - 831

- என்று விளக்குவது கருதத்தக்கது.

**'வாமம் கனிந்த பிறன்மனைவியை**
**ற்மதிக்கும் பேதை'**

விநா.அரசி.29 **'தன்மனை யாளைத் தனிமனை இருத்திப்**
**பிறன்மனைக் கேகும் பேதையும் பதரே'**

- வெற்றிவேற்கை : 70

- என்றார் பிறரும்.

3. முன்னுள்ள பாடலில் கூறிய 'பேதைமை' இதில் எத்தகைத்து என்று விளக்குவார் ஆகையால் அதன் பின்னர் இது வைக்கப்பெற்றது.

## கசங. விளிந்தாரில் வேறல்லர் மன்ற தெளிந்தாரில் தீமை புரிந்(து)ஒழுகு வார். -143

பொருள்கோள் முறை :

**தெளிந்தார் இல் தீமை புரிந்து ஒழுகுவார்**
**மன்ற விளிந்தாரில் வேறல்லர்.**

பொழிப்புரை : இவர் தமக்குத் தீங்கு செய்யார் என்று தெளிவாக நம்பியவர் இல்லத்தில் (அவர் மனைவியை விரும்புதலாகிய) தீமை செய்து ஒழுகுபவர், உறுதியாக இறந்துபோனவரைவிட வேறு அல்லர் (இறந்தவரே).

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. **தெளிந்தார் இல்** - இவர் தமக்குத் தீங்கு செய்யார் என்று தெளிவாக நம்பியவர் இல்லத்தில்.

- ஐயப்பாடின்றி நம்பியதால் தெளிந்தார் என்றார்.

  **'ஐயத்தில் நீங்கித் தெளிந்தார்'** - 353

2. **தீமை புரிந்து ஒழுகுவார்** - அவர் மனைவியை விரும்புதலாகிய தீமை செய்து ஒழுகுபவர்.

- இல்லத்துத் தீமை புரிதல் என்றதால் மனைவியை விரும்புதலாகிய தீமை என்பது வருவிக்கப் பெற்றது.

3. **மன்ற விளிந்தாரின் வேறு அல்லர்** - உறுதியாக இறந்து போனவரைவிட வேறு அல்லர். இறந்தவரே.

'ஒழுக்கம் உயிர்' (131) என்றலால் ஒழுக்கம் இலாதவர் உயிரிலாத ராகி இறந்தவரானார்.

'இனி', 'இவர் நமக்குத் தீங்கு செய்யார்' என்று நம்பியவராக இவர் நடந்து கொள்ளாமையால், அவர் நம்பிக்கைக்குரியவர் இறந்து போனவர் ஆயினார்.

- இனி, இத்தன்மையினார் கண்டுகொள்ளப்பெற்றால், அவள் கணவனால் உயிருக்கும் ஊறுநேரும் குறிப்பையும் 'விளிந்தார்' என்னும் சொல்லால் உணர்த்தினார் என்க.

- விளிவு இறப்பு. விளிந்தார் இறந்தார்.

- 'மன்ற' என்பது உறுதிப்பொருள் தரும் இடைச்சொல்.

  - **'மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும்'** -தொல் : 750

4. முன்னைய குறளில் இத்தீயவொழுக்கம் கொண்டாரைப் பேதை என்றவர் இதில் பிணம் என்று கடிந்ததால், அதையொட்டி இது வைக்கப்பெற்றது, என்க.

**கசச. எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்**
**தேரான் பிறனில் புகல்.** - 144

**பொருள்கோள் முறை :**

**தினைத்துணையும் தேரான் பிறன்இல்**
**புகல், எனைத்துணையராயினும் என்னாம்.**

**பொழிப்புரை :** *தினை அளவானும் இது தவறு என்று ஆராய்ந்து சிந்தியாமல், பிறன் இல்லத்தில் புகுந்து, அவன் துணைவியொடு தொடர்பு கொள்பவன், எத்துணைச் சிறப்புற்றவராயினும் என்ன, (அவன் அச்சிறப்பினை இழந்தவனே!)*

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. **தினைத்துணையும் தேரான் பிறன்இல் புகல்** - *தினை அளவானும் இது தவறு என்று சிந்தியாமல் பிறன் இல்லத்தில் புகுந்து, அவன் துணைவியொடு தொடர்பு கொள்பவன்.*

**தினைத்துணை** - *தினை, இவ்விடத்து அளவு குறித்தது. தினைத் துணைச் சிறிய அளவேனும்.*

**தேரான்** - *இது தவறு என்று ஆராய்ந்து சிந்தியாமல்.*

**பிறன்இல் புகல்** - *பிறன் இல்லத்தில் புகுந்து, அவன் துணைவி யொடு தொடர்பு கொள்வது.*

- *அதைச் செய்பவன்.*

- *பிறனது இல்லத்தில் புகுவது என்று இடக்கரடக்காகக் கூறினார்.*

2. **எனைத்துணையராயினும் என்னாம்** - *(அத்தகையவர்கள்) எத்துணைச் சிறப்புடைவராக இருப்பினும் என்ன ஆம்? அவர்கள் அச்சிறப்பினை இழந்தவர்களே!*

- *அத்தீயவொழுக்கம் கடைப்பிடிப்பவர்கள், செல்வம், கல்வி, பதவி, அதிகாரம் முதலிய எந்த நிலையில் சிறப்புப் பெற்றவர்களாயினுந்தாம் என்ன? அத்தீயவொழுக்கம் காரணமாக அச்சிறப்புகளை இழந்தவர்களே ஆவர்.*

- *நூலாசிரியர் காலத்திலிருந்து பிறனில் விழையும் இத் தீயவொழுக்கம் நடைபெற்றுவருவதையும், அவ் விழிவொழுக்கத்தில் செல்வம், கல்வி, பதவி, அதிகாரம் முதலிய நிலைகளில் மேம்பட்டவர்களும் சிறப்புற்றவர்களுங்கூட ஈடுபட்டு வருவதையும், இக்குறள் குறிப்பிட்டுக் கூறுவது, கவனிக்கத் தக்கது.*

3. *மேலே கூறப்பெற்ற குறளில், இத் தீயவொழுக்கத்தில் வெளிப்படையாக ஈடுபடுபவர்களைப் பற்றிக் கூறியவர், இதில் தம் சிறப்பியல்புகளால், அக்குற்றத்தை மறைமுகமாகச் செய்பவர்களின் இழிவைக் கூறி எச்சரித்துக் கூறுவதால், அதன்பின் இது வைக்கப்பெற்றது.*

**கசரு. எளிதென இல்லிறப்பான் எய்தும்எஞ் ஞான்றும்**
**விளியாது நிற்கும் பழி. - 145**

**பொருள் கோள் முறை :**

***எளிது என இல் இறப்பான் எஞ்ஞான்றும்***
***விளியாது நிற்கும் பழி எய்தும்***

**பொழிப்புரை :** *யாதோ ஒரு காரணமாய்ப் பிறன் துணைவியின் தொடர்பு எளிதாகக் கிடைத்தது என்று கருதி, அவன் இல்லத்தே சென்று, அளவு கடந்து ஈடுபடுவான், எக்காலத்தும் அழியாமல் நிற்கும் பழியினை எய்துவான்.*

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. ***எளிது என இல்இறப்பான்*** - *யாதோ ஒரு காரணமாய்ப் பிறன் துணைவியின் தொடர்பு எளிதாகக் கிடைத்தது என்று கருதி, அவன் இல்லத்தே சென்று அளவுகடந்து ஈடுபடுவான்.*

- *காரணம் இருபுறத்ததாகவும் இருக்கலாம்.*

*அது, செல்வம், பதவி, அதிகாரம், அழகு, கணவனது உடற்குறை - முதலியவற்றுள் யாதோ ஒன்றோ சிலவோ இருந்து, பிறன் மனைவியது தொடர்பு எளிதாகலாம்.*

- ***இல்இறத்தல்*** - *பிறனது இல்லத்தின் கண்ணே சென்று அளவு கடத்தல், இறத்தல் - அளவு கடத்தல்.*

***'ஏதிலான் தாரம் நம்பி எளிதென இறந்து'* - *சீவக.: 2769.***

2. ***எஞ்ஞான்றும் விளியாது நிற்கும் பழிஎய்தும்*** - *எக்காலத்தும் அழியாமல் நிற்கும் பழியினை எய்துவான்.*

- *விளியாது - அழியாது.*

- *பழி - பிறரால் பழித்துக் கூறப்பெறும் செயல்.*

- *பழி - இருகுடும்பத்தும், மக்களையெல்லாம் முன்வைத்துக் கூறப் பெறும் ஆகலான் எக்காலத்தும் அழியாது நிற்கும் என்றார்.*

3. *முன்குறளில் எனைத்துணையராயினும் என்றதால், இவ் விழிவொழுக்கம் எளிதானது கூறப்பெற, அதனையடுத்து இது நின்றது.*

**கசசா பகைபாவம் அச்சம் பழிஎன நான்கும்**
**இகவாவாம் இல்லிறப்பான் கண். - 146**

பொருள் கோள் முறை :

*இல்இறப்பான் கண் பகை, பாவம்*

*அச்சம், பழி - என நான்கும் இகவாவாம்.*

பொழிப்புரை : *பிறனது இல்லம் சென்று, அவன் மனைவியிடத்து முறை தவறி நடப்பானிடத்து, (அவளுடைய கணவன் மற்றும் உறவினரிடமிருந்தும், தன் மனைவி மற்றும் உறவினரிடமிருந்தும் வரும்) பகையும், (அந்நிகழ்வால் வரும்) அறக்கேடும், (அத் தீயவொழுக்கம் என்றேனும் ஒருநாள் வெளிப்பட்டுவிடுமோ என்னும்) அச்சமும், (அவ்வாறு வெளிப்பட்டவிடத்து வரும்) பழியும் ஆகிய நான்கு விளைவுகளும் நீங்காமல் பொருந்துமாம்.*

சில விளக்கக் குறிப்புகள் :

1. **இல்இறப்பான் கண்** - *பிறனது இல்லம் சென்று, அவன் மனைவியிடத்து முறைதவறி நடப்பவனிடத்து.*
2. **பகை** - *அவளுடைய கணவன் மற்றும் உறவினரிடமிருந்தும், அதே போல் தன்மனைவி மற்றும் தன் உறவினரிடமிருந்தும் வரும் பகையும்;*
3. **பாவம்** - *அந்நிகழ்வால் வரும் அறக்கேடும்; ('பாவம்' என்னும் சொல் விளக்கத்திற்குரிய முழு விளக்கமும் 142ஆம் குறள் விளக்கத்துள் காண்க.)*

**'பிறன்வரை நின்றாள் கடைத்தலைச் சேரல்**
**அறன் அன்றே'** - **நீதிநெறி விளக்கம்:76**

**'பிறன்மனை புகாமை அறம்எனத் தகும்'**
- **கொன்றை வேந்தன்:61**

*என்றார் பிறரும்.*

4. **அச்சம்** - *அத்தீயவொழுக்கம் என்றேனும் ஒருநாள் வெளிப்பட்டு விடுமோ என்னும்* ***அச்சமும்.***

**'பிறன் தாரம்**
**நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்(று)**
**அச்சத்தோ டிந்நாற் பொருள்'** - **நாலடியார்:82**

**'புக்கவிடத்(து) அச்சம்; போதரும் போ(து) அச்சம்;**
**துய்க்கும் இடத்(து) அச்சம்; தோன்றாமல் காப்(பு) அச்சம்;**
**எக்காலும் அச்சம் தருமால்; எவன்கொலோ**
**உட்கான் பிறன்இல் புகல்'** - **நாலடியார் : 83**

5. **பழி** - அவ்வாறு வெளிப்பட்டவிடத்து வரும் பழிச் சொல்லும் .

**'-பிறனில்**

**பிழைத்தான் எனப்பிறரால் பேசப் படுமேல்**

**இழுக்காம்'** - **அறநெறிச்சாரம் : 149**

**'செய்தாயேனும் தீவினையோடும் பழியல்லால்**

**எய்தாது எய்தாது'** - **கம்ப. ஆரணிய. மாரீசன் : 182**

**'காணின் குடிப்பழியாம்'** - **நாலடி : 84**

6. **என நான்கும் இகவாவாம்** - ஆகிய நான்கு விளைவுகளும் நீங்காமல் பொருந்துமாம்.

- **'என நான்கும்'** என்று எண்ணுப் பெயரால் குறித்தது, கருத்துறுதிக்காக என்க.

- **இகத்தல்** - நீங்குதல், கடத்தல்.

இகவா - நீங்கா x இகவும் - நீங்கும்.

7. இதில் கூறப்பெறும் விளைவுகளை முறையே அச்சம், பகை, பழி, பாவம் - என்று நிரல்படுத்துவதே பொருந்துமெனினும், செய்யுள் அமைப்பு நோக்கியும் பொருளுறுதி நோக்கியும், பகை, பாவம், அச்சம், பழி என முறைப்படுத்தினார், என்க.

8. முன்னர்க் கூறிய பழியுணர்வுடன், மேலும் மூன்று விளைவுகளைக் கூறியதால், அதற்குப் பின்னர் நிரல் பெற்றது.

## கசஎ. அறனியலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலாள் பெண்மை நயவா தவன். - 147

**பொருள்கோள் முறை :**

**பிறன் இயலாள் பெண்மை நயவாதவன், அறனியலால் இல்வாழ்வான் என்பான்.**

**பொழிப்புரை** : பிறனுடைய இயங்குதலுக்குத் துணையோளாகிய அவன் மனைவியனது பெண்மையை விரும்பாதவனே, அறத்தின் இயங்குதலுக்கு உரிய முறையில் இல்வாழ்வை நடத்துபவன் என்று கூறப்பெறுவான்.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. இது, தான் கடைப்பிடித்து ஒழுகும் தனியறத்திற்கும், பொதுவாகக் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய பொதுமை அறத்திற்கும் இயைபு கூறியது. என்னை?

ஒவ்வொருவரும் பொதுவறத்தைக் கடைப்பிடித்தொழுகும் பொழுதே. தன்னறக் கடமைகளுக்கும் பெருமையும் சிறப்பும் உண்டாம் என்றவாறு.

2. **பிறன் இயலாள் பெண்மை நயவாதவன்** - பிறனுடைய இயங்குதலுக்குத் துணையவளாகிய அவன் மனைவியினது பெண்மையை விரும்பாதவனே.

**இயல்** - இயல்பு, இயங்குதல் தன்மை, பொருந்துதல், இணங்குதல், இயைபாக இருத்தல் முதலிய பொருள்கள் தரும் சொல்.

**இயலாள்** - இயங்குதலுக்கு உரியவள்.

**பெண்மை** - விரும்பப்படும் தன்மையான் வந்த பெயர்.

- அழகு, சாயல், உருவம், மென்மை, நளினம் முதலிய நயத்தல் பொருள்களை உள்ளடக்கிய சொல்.

**நயத்தல்** - விரும்புதல், மனவுணர்வும் உடல் உணர்வும் கலந்த மேவுதலுணர்வு.

3. **அறனியலால் இல்வாழ்வான் என்பான்** - அறத்தின் இயங்குதலுக்கு உரிய முறையில் இல்வாழ்வை நடத்துபவன் என்று கூறப் பெறுவான்.

**அறன்இயலால்** - அறத்தினது இயங்குதலுக்கு உரிய முறையில்.

- அறமாகிய பொதுமை நல உணர்வின் அல்லது நெறியின் அடிப்படையில், என்னென்ன முறையில் எவ்வெவ்வாறு இயங்க வேண்டுமோ, அன்னன்ன முறையில் அவ்வவ்வாறு இயங்கும் தன்மையில்.

**இல்வாழ்வான் என்பான்** - தன் இல்வாழ்க்கையை நடத்துகிறவன் என்று பிறரால் சொல்லப் பெறுபவன்.

- **என்பான், எனப்பெறுபவன்** - எனும் இரண்டு முடிவுகளுக்கும் பொதுவாக 'என்பான்' என்றார்.

- அது, தானே கூறுதற் பொருளும், பிறரால் கூறப்பெறுதல் பொருளும் தந்தது.

4. இது, பிறனொருவன்தன் இல்லறத்திற்குத் துணைவியாகிய அவன் மனைவியை, இன்னோர் இல்லறத்தில் ஈடுபட்டவன் விரும்பாமையே, அறமாகிய பொதுமை வாழ்வியலுக்குப் பொருந்திய அறம் ஆகும் என்றது.

**கசஅ. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு**
**அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு. - 148**

**பொருள் கோள் முறை :** *இயல்பு.*

**பொழிப்புரை :** *பிறனுடைய மனைவியை, (மனம், அறிவு, உடல் ஆகிய) மூன்று உணர்வுகளுடனும் நோக்காத (கட்டுப் படுத்தப் பெற்ற) சிறந்த ஆண்மை, நற்குணங்கள் நிறைந்த சான்றோர்க்குத் தாம் கடைப்பிடிக்க வேண்டிய அறநெறி மட்டும் அன்று; மிகச் சிறந்தமைந்த தன்னொழுக்கமும் ஆகும்.*

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. *பொதுவாகச் சொல்லப் பெற்று வந்த பிறனில் விழையாத இவ்வறவொழுக்கம், இதன்வழிச் சான்றோர்க்குச் சொல்லப்பெறுகிறது. ஏனெனில், அவர்களின் பெருமையும் தகுதியும் நோக்கி, அவர்களைப் பிறர் அனைவரும் தத்தம் மனைகளுக்கு அழைக்கவும், அவர்களொடு தம் மனைவி மக்களை நெருங்கிப் பழகுவிக்கவும் வாய்ப்புண்டாகலின், அதனைப் பயன்படுத்திக் கொண்டு, சான்றாண்மையுடையாரும் ஒரோவொருகால், தம் புலனுணர்வு மிகுதியான், பிறன்மனை நயக்கலாகாது என அவர்க்கு எச்சரித்துக் கூறினார் என்க.*

2. **பிறன்மனை நோக்காத பேராண்மை** - *பிறனுடைய மனைவியை மனம், அறிவு, உடல் ஆகிய மூன்று உணர்வுகளுடனும் நோக்காத (கட்டுப் படுத்தப் பெற்ற) சிறந்த ஆண்மை.*

- **'நோக்குதல்'** *என்னும் சொல் மனவுணர்வு, அறிவுணர்வு, உடலுணர்வு ஆகிய மூன்றுணர்வுகளும் கலந்த பார்வை என்று பொருள்படுவது. (இதன் விரிவான விளக்கத்தைக் குறள் எண்.90-இல் காண்க.)*

- **பேராண்மை** - *கட்டுப்படுத்தப்பெற்ற சிறந்த ஆண்மை என்க. என்னை?*

- *ஆண்மை என்பது ஆளுமை. பெண்மை உட்பட உலகியற் கூறுகள் அனைத்தும் ஆளுமை செய்தல். பீடழிதல் ஆண்மையன்று.*

**'திருவினும் நல்லாள் மனைக்கிழத்தி யேனும்**
**பிறன்மனைக்கே பீடழிந்து நிற்பர்' - நீதிநெறிவிளக்கம் : 79**

- *என்றார் பிறரும்.*

*'ஒருவனுக்கு ஒருத்தி' என்னும் உலக மீமிசை மாந்தக் கோட்பாட்டை முதற்கண் இலக்கிய வடிவாய் அறநெறிப்படுத்திய நூல் இது.*

மனையற வாழ்வியல் நெறிப்படி, 'தன்னைத்தான் கொண்டொழுகும் ஒருவர்' *(974)* தனக்கெனவுற்ற ஒருத்தியைத் தானாள்வதே தன் முழு ஆளுமைத் திறனையும் வினைவழிப் படுத்தும் ஓர் இயல்பியல், அறிவியல். உடலியல், மனவியல், உலகியல் கோட்பாடாகும் என்க. என்னை?

அக் கோள்நிலை பிறழ்கின்றவழி, தன் முழு ஆளுமைத் துய்ப்பும், இருபாலார்க்கும் சிதர்வுறும் என்பது உடலியல், பாலியற் கொள்கை. என்னை?

ஓரறிவுத் துய்ப்பு இரண்டாகிய வழி, நுகர்ச்சிப் பரப்பு விரிவுறுமாம். என்க. அங்ஙன் நுகர்ச்சிப் பரப்பு விரிவுறவே. அதன்மேற் செலுத்தும் அறிவழுத்தப் பரப்பும், அறிவாளுமைத் திறனும் குறைவுறுமாம் என்க. எனவே, அவ்விடத்து முற்றாளுமை இராது. மனவுணர்வு வழியினும், உடலுணர்வு வழியினும் இதே விளைவு உருவாதலும் இயல்பாம் என்க.

முற்றாளுமை இன்மை ஆளுமைக் குறைவேயாம்.

- இயல்பினமைந்த ஐம்புலத் துய்ப்பாகிய பெண்மை *(1101)* எழுச்சி, ஒருவனின் முற்றாளுமை நிலைக்கே அடங்கி நிறைவுறுவதாகும். முற்றாளுமை இரண்டன்வழிச் சிதர்வுறுமிடத்து, ஒன்றின் ஓரோவழி ஆளுமை இருப்பினும், அதனால் பெண்மை நிறைவுறாதாம், என்க.

பெண்மையை நிறைவுறுத்தாதது நிறையாளுமையன்று; குறையாளுமையே என்றார், என்க. எனவே, இங்கு நிறையாளுமையைப் பேராளுமை - அஃதாவது - பேராண்மை என்று பெருமைப்படுத்தினார் என்க.

- இவ்வுண்மையை 1107ஆம் குறளில் குறிப்பாகவும் தெளிவாகவும் உணர்த்தினார்.

2. **சான்றோர்க்கு அறன் ஒன்றோ, ஆன்ற ஒழுக்கு** - நற்குணங்கள் நிறைந்த சான்றோர்க்குத் தாம் கடைப்பிடிக்க வேண்டிய அறநெறி மட்டுமன்று; மிகச் சிறந்தமைந்த தன்னொழுக்கமும் ஆகும்.

**சான்றோர்** - ஏறத்தாழ முப்பத்தேழு குணநலன்களும் பண்புகளும் நிறைந்தவர் என்பதை, ஆசிரியர் ஆங்காங்கே வெளிப்படுத்துவார். அத்தகையவர்,

**'கல்வி கேள்விகளில் சிறந்தவர்'** **69**

**'நெஞ்சத்தில் நடுநிலைமை உடையவர்;**
**எந்நிலையிலும் அதில் கோடாதவர்'** **115**

'செயலிலும், சமன்செய்து சீர்தூக்கும்
கோல்போல் அமைந்தவர்' - 118
'பயனில சொல்லாதவர்' - 197
'பொய் சொல்லாதவர்' - 299
'உயிர்க்கொலை செய்யாதவர்' - 328
'இனநலம் கருதுபவர்' - 458
'மனநலம் நன்கு உடையவர்' - 458
'பிறரால் பழிக்கப்படும் வினை செய்யாதவர்' - 656
'பழிவரும் வழியில் பொருள் திரட்ட
விரும்பாதவர்.' - 657
'மானம் உடையவர்' - 662
'நண்பர்தம் பிழை பொறுப்பவர்' - 802
'நட்பு உரிமை (கெழுதகைமை) தருபவர்' - 804
'கட்குடியை வெறுப்பவர்' - 923
'ஆரவாரம் இல்லாதவர்' - 956
'தன்னொழுக்கம் உடையவர்' - 974
'பெருமையுடைய அருமைச் செயல்கள்
செய்பவர்' - 975
'செருக்கு இல்லாதவர்' - 979
'புறங் கூறாதவர்' - 980
'நல்லவையே செய்பவர்' - 981
'குணநலன்கள் கொண்டவர்' - 982
'அன்புடையவர்; நாணம் உடையவர்;
ஒப்புரவு (பொதுமையுணர்வு) உடையவர்;
கண்ணோட்டம் (இரக்கம்) உடையவர்;
வாய்மை (உண்மை) உடையவர்.' - 983
'பிறர்தீமை சொல்லாதவர்' - 984
'பணிவுடையவர்' - 985
'தம் தோல்வியை இளையவர்களிடத்திலும்
ஒப்புக் கொள்பவர்' - 986
'கெடுதல் செய்தவர்க்கும் நல்லதே செய்பவர்' - 987
'வறுமையுற்ற விடத்தும் செப்பமாக இருப்பவர்' - 988

**'எவ்வகையான உலக மாறுதல்களுக்கும்**
**தந்நிலை திரியாதவர்'** - ***989***
**'பிறரை இகழாதவர்'** - ***995***
**'மக்கள் பண்புடையவர்'** - ***998***
**'தீமை செய்வதற்கு நாணுபவர்'** - ***1014***
**'பிறரிடம் போய்த் தமக்கென்று இரவாதவர்'** - ***1064***
**'ஒருமுறை சொன்னால் செய்யும்**
**மனப்பாங்கு உடையவர்.'** - ***1078***

- *இத்தகைய சீரிய குணநலன்களும், பண்பாடுகளும் கொண்டவராக இருப்பினும் 'காமவுணர்வு' மிகவும் வலிந்த தீப்போன்றதாகலின் (1159) சான்றோரும் அக்கால் மனம் இடறாது எச்சரிக்கையாக இருத்ல் வேண்டும் என்றார்.*

- *அறன் ஒன்றோ : அறநெறி ஒன்று மட்டுமோ.*

- *ஒன்றோ - எண்ணிடைச் சொல்.*

- *ஆன்ற ஒழுக்கு : அமைந்த ஒழுக்கம்.*

*ஆன்ற - நிறைந்த, மேலான, உயர்ந்த, வலிய, சிறந்த - என்ற பொருளும் தருவது.*

*3. அறவழியில் இல்வாழ்க்கை ஆற்றுதல், சான்றோர்க்கும் இயல்பாகலின், முன்னதன் பின் இதனைக் கூறினார், என்க.*

**கசசகூ. நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பின்**
**பிறற்குரியாள் தோள்தோயா தார்.** - **149**

**பொருள்கோள் முறை :**

**நாமநீர் வைப்பில் நலக்கு உரியார் யார் எனின்**
**பிறற்கு உரியாள் தோள் தோயாதார்.**

**பொழிப்புரை :** *அச்சம் தருகின்ற கடலால் சூழக்கொண்டது போக, எஞ்சிய இருப்பாக உள்ள நிலப்பகுதியின்கண் வாழ்கின்ற மக்களினத்துள், அனைத்து நன்மைகளையும் பெறுதற்கு உரியவர் எவர் எனில், பிறனுக்கு உரிய ஒருத்தியினது தோள்மேல் சாய்ந்து படியாதவர்.*

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. இது, மக்களுள் எல்லா நலன்களுக்கும் உரியவர் எவர் எனப் பொதுமைப் படுத்திச் சொன்னது.

2. **நாமநீர் வைப்பில்** - அச்சம் தருகின்ற கடலால் சூழக் கொண்டது போக, எஞ்சிய இருப்பாக உள்ள நிலப்பகுதியின் கண் வாழ்கின்ற மக்களினத்துள்.

- நாமம், நீர், வைப்பு - என்னும் மூன்று சொற்களை இணைவாகப் பொருத்தித் தாம் கருதிய முழுப் பொருளையும் அடக்கிக் காட்டியுள்ள ஆசிரியர்தம் சொல்திறனும் பொருள் திறனும், உலக நிலநூலறிவும், அஃகி யகன்ற அறிவாழமும் எண்ணிப் போற்றுதற்கும் மகிழ்தற்கும் வியத்தற்கும் உரிய வென்க.

நமதருமைச் செந்தமிழ்த் திருமொழியின்கண் அல்லது வேறெம் மொழியினும் இத்தகு சொல்லடைவுத் திறன் வாய்த்தல் அரிது.

- **நாம்** - 'அச்சம்' என்னும் பொருள்தரும் உரிச் சொல்.

**'பேம்நாம் உரும்என வரூஉம் கிளவி**
**ஆமுறை மூன்றும் அச்சப் பொருள'** - தொல் : **848.**

'நாம்' என்னும் உரிச்சொல் 'நாம' என ஈறு திரிந்து நின்றது.

- **நாம நீர்** - அச்சம் தரும் கடல்.

கடல் அச்சம தருவது என்றது, அதன் ஆழமும், அகலமும், உள்ளே உயிர் வாழும் உயிர்கொல் உயிரினங்களும், அதனுள் இயங்கும் சுழலும் சூறாவளியும், எழுச்சியும் வீச்சும் முதலியன கொண்டு என்க.

**நீர் வைப்பில்** - கடல் நீர் சூழக் கொண்டது போக, எஞ்சிய இருப்பாக உள்ள நிலப்பகுதியுள் வாழ்கின்ற மக்களினத்துள்.

'வைப்பு' எனும் சொல் 'எச்சமாக வைக்கப் பெற்ற - எச்சமாக இருக்கின்ற நிலம் - என்று பொருள்தரினும், இங்குப் பேசப் பெறுவது அதில் வாழ்கின்ற மக்களைப் பற்றியதாகலின் எனும் உய்த்துணர்வு கொண்டு பொருள் விரிவு பெறுகிறது என்க.

3. **நலக்கு உரியார் யார் எனில்** - எல்லா நன்மைகளையும் பெறுதற்கு உரியவர் எவர் எனில்.

நலக்கு - நலத்திற்கு.

நலம் + அத்து + இன் + கு - எனும் சொற்பகுப்பில் உள்ள அத்து, இன் ஆகிய சாரியைச் சொற்கள் தொக்கி, முதலும் ஈறும் சேர்ந்து (நலம்+கு) 'நலக்கு' என்று நின்றது.

- மக்கள் யாவருமே எல்லா நலத்துக்கும் உரியவர் எனினும், அவரவர் உரிமைக்கு உகந்த பொருள்களைக் கொண்டு, அவரவர் நலன்களைத் துய்த்துக் கொள்வதே வகுக்கப் பெற்ற பொதுமை அறமாக உள்ளது என்பது உணர்தற் பாலது. அதனையே இக்குறளின்கண் அடுத்துவரும் கருத்தால் வலியுறுத்தினார் என்க.

4. **பிறற்கு உரியாள் தோள் தோயாதவர்** - பிறனுக்கு உரிய ஒருத்தியினது தோள்மேல் சாய்ந்து படியாதவர்.

**பிறற்கு** - பிறனுக்கு

**உரியாள்** - இல்லற வாழ்க்கைக்கு உரிமைப்படுத்தப் பெற்றவள். அவனுக்கு 'உரியாள்' இவளெனின், இவளுக்கு உரியான் 'அவன்' என்றதும் கூறாது கூறப்பெற்றது. எனவேதான் இங்கு 'உரிமை' என்னும் சொல்லைப் பெய்தார் என்க.

**தோள் தோயாதவர்** - தோள்மேல் தோயாதவர் - இடக்கரடக்கல்.

- **தோள்தோய்தல்** - தோள் தழுவுதல், தோள்மேல் சாய்ந்து படிதல், புணர்ச்சியின் உயாவருத்தம் தீரப் பெண்ணின் தோள் மேல் சாய்ந்து படிதல் என்க.

- இது புணர்ச்சிக்குப் பின் நிகழ்வது.

- **தோய்தல்** - தோளழுந்தப் படுத்தல்.

5. பொதுமை அறம் கருதிய ஒருவர், இன்னொருவரது உரிமை வாழ்க்கையில் தலையிடுவதும், அவரது வாழ்வு நலனையும் கட்டுக்கோப்பையும் சிதைப்பதும் மிகு தவறாகும். அத்தகையவரை எவரும் விரும்பார். எல்லாரும் வெறுப்பர். எனவே, அவர்க்குப் பொது நன்மைகள் வருவதும் குறையும். அதற்கு அவர் உரிமை கோரவும் இயலாது. ஆகவேதான், பிறற்கு உரியாள் தோள் தோய்பவர் பொதுமை நலம் பெறுதற்கு உரியரல்லர் என்று கூறினார் என்க.

ஒருவர் செய்யும் பிற ஒழுக்கக் கேடுகளை அனைவரும் அவ்வளவாகப் பொருட்படுத்த மாட்டார்கள். அவனைப் பல கூறித் திருத்தவும் முற்படுவர். சிலகால் திருத்தியும் விடுவர். ஆனால் பிறனில் விழையும் ஒழுக்கக் கேட்டினை அனைவரும் கூடிக் கடிவர்; அவருடன் தொடர்பு கொள்ளவும் விரும்பார். அவரைக் கண்டாலும் முகஞ் சுளிப்பர். எனவே, அனைவர்க்கும் உண்டான பொது உரிமைகள் அவர்க்குத் தடுக்கப்படும் என்றார். இன்னும் சிற்றூரராயின் அவர் ஊராரினின்றும் சிற்சிலகால் ஊரினின்றும் ஒதுக்கி வைக்கப்பெறுதலும் நேரும் என்க.

6. இதில், வெறும் 'உலகத்து' என்று கூறாமல், 'அச்சந்தரும் கடலால்

சூழப் பெற்றது போக எஞ்சிய நிலப்பகுதியாகிய உலகத்து' என்று தேவையின்றி உவமைப் பொருளை வண்ணித்துக் கூறியது ஏன் எனில், அஃதன்று;

உலகம் முழுமையும் மக்களின் முழு உரிமைக்கும் உகந்தது தான் எனினும், அதில் அதனதன் ஆளுமைப் பகுதி நிலமென்றும், கடலென்றும் இயற்கையாகவே பிரிக்கப் பெற்றிருத்தல் போல், இம் மக்களினத்துள்ளும் அவரவர் ஆளுமைக்குள்ள பகுதி அவரவர் உரிமைக்கு உள்ளதே என்பதை உணர்த்தவும்,

- பிறன் ஆளுமை உரிமைக்குட்பட்ட பெண் ஒருத்தியைத் தான் போய் ஆள முயலுதல், பொதுமையான இயற்கையறம் அன்று என விளக்கிக் கூறவுமே, என்க.

- அதினும், வெறும் 'கடல் என்னாது', 'அச்சம் தரும் கடல்' என்றது, அவ்வாறு பிறன் ஆளுமை உரிமையில், தான் குறுக்கிட்டுப் போய் மேல் ஆளுமை பெற நினைப்பது, பின் விளைவு நோக்க, அச்சம் தருவதாம் என்றும் விளக்கவே என்க. என்னை?

நிலத்துள்ளார் அனைவரும் சேர்ந்து முனையினும், கடல் நீரை வென்றி கொள்ளுதல் இயலாது எனும் உத்தி கூறி.

'அஞ்சுவது அஞ்சாமை பேதைமை; அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்' - **428**

என்றும் அறிவு தெருட்டினார் என்க.

7. முன்னைய குறளில் சான்றோர்க்குக் கூறியவர், இதில் பொதுவில் நலன் வேண்டுவார் அனைவர்க்கும் கூறியதால், அதன் பின்னர் இது வைக்கப் பெற்றதென்க.

## கரு0. அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள் பெண்மை நயவாமை நன்று. - 150

**பொருள்கோள் முறை : இயல்பு.**

**பொழிப்புரை :** அறச் செயல்களைக் கடைபிடியாத ஒருவன், அறமல்லாதவற்றையே செய்யினும், அவன், பிறனது இல்லற எல்லைப் பட்டு நிற்பாளின் பெண்மை நலத்தை விரும்பாமலிருப்பது அனைவர்க்கும் நல்லது.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. *அறன் வரையான்அல்ல செயினும் - அறச்செயல்களைக் கடைப்பிடியாத ஒருவன், அறமல்லாதவற்றையே செய்யினும்.*

*அறன் வரையான் - அறத்தை வரைந்து கொள்ளாதவன் கடைப்பிடியாதவன்.*

**வரைதல்** - உரிமைப்படுத்திக் கொள்ளுதல், மேற் கொள்ளுதல், கடைப்பிடித்தல்.

**அல்ல செயினும்** - அறமல்லாதவற்றையே செய்யினும்.

அவை, பொய்கூறுதல், புறங்கூறுதல், விருந்தோம்பாமை, வறியார்க் கொன்று ஈயாமை, நடுவுநிலையில்லாமை. தீவினை செய்தல் - முதலியவை.

2. **பிறன் வரையாள் பெண்மை நயவாமை நன்று** - பிறனது இல்லற எல்லைப்பட்டு நிற்பாளின் பெண்மை நலத்தை விரும்பாமை நன்று.

**பிறன் வரையாள்** - பிறனது இல்லற எல்லைப்பட்டவள்.

**வரை** - எல்லை. இங்கு இல்லற எல்லை.

பிறனுக்கு மனத்தால் உரியவள்.

**பெண்மை** - பெண்மை நலம்.

-இவ்விடத்து அவன் விரும்புதற்குரிய வகையில், தன் மனைவியிடத்து இல்லாத அழகு, பண்பு, கவர்ச்சி முதலிய நலன்கள்.

**நயத்தல்** - ஆசையான் விரும்புதல்.

- மற்ற அறமல்லாத செயல்களைச் செய்யினும் இதைச் செய்யக் கூடாது என்றார்.

ஏனெனில், மற்றையவை தன்னொழுக்கத்தின்றாற் பட்டவை. அவற்றை அவன் செய்தால் அவனுக்கு மட்டுமே தீங்கு தருபவை. ஆனால், பிறன்மனை நயத்தல் பொதுவொழுக்கத்தின் பாற்பட்டது ஆகையினால், அனைவர்க்கும் குமுகாய வொழுங்கிற்கும் கேடானது.

எனவே அதைச் செய்யாதிருப்பது அனைவர்க்கும் நல்லது என்றார்.

- இது, கேடுகள் பலவற்றுள்ளுள் பெருங்கேடு இஃதென்றது.

**'பிறன்வரை நின்றாள் கடைத்தலைச் சேறல்**
**அறன் அன்றே'** - **நீதிநெறி விளக்கம் : 76**

- என்றார் பிறரும்.

3. இவ்வாறு, அறமல்லாத செயல்கள் பலவற்றுள் ஒரு செயலைப் பிரித்துக் கூறி, அவை செய்யினும் இது செய்தலாகாது என்று தேர்ந்து கூறுதல் நூலாசிரியர் கடைப்பிடிக்கும் ஓர் உத்தியாம் என்க. இது,

**'பல்பொருட்கு ஏற்பின் நல்லது கோடல்'** -தொல் : 1610 : 16

எனும் உத்தியாம்.

இந்நூலின் கண் இதுபோல் வந்த குறட்பாக்களைக் காண்க.

**'செய்ந்நன்றியறிதல்'** அதிகாரத்துள்,

**'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு'** - 110

என்றதும், **'அடக்கமுடைமை'** அதிகாரத்துள்,

**'யாகாவா ராயினும் நாகாக்க'** - 127

என்றதும், **'புறங்கூறாமை'** அதிகாரத்துள்,

**'அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்**
**புறங்கூறான் என்றல் இனிது'** - 181

என்று வருவதும், **'பயனில சொல்லாமை'** அதிகாரத்துள்,

**'நயனில சொல்லினும் சொல்லுக சான்றோர்**
**பயனில சொல்லாமை நன்று'** - 197

என்று வருவதும், **'தீவினையெச்சம்'** எனும் அதிகாரத்துள்,

**'எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை**
**வீயாது பின்சென்று அடும்'** - 207

என்று வருவதும், **'பகைத்திறந் தெரிதல்'** அதிகாரத்துள்,

**'வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க**
**சொல்லே ருழவர் பகை'** - 872

என்று வருவதும், **'பெரியாரைப் பிழையாமை'** அதிகாரத்துள்,

**'எரியார் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்**
**பெரியார் பிழைத்தொழுகு வார்'** - 896

என்று வருவதும், அது.

4. இவ் வதிகாரத்தின் கண், 'பிறன் மனைவி'யைக் குறிக்க, நூலாசிரியர், மிகவும் பண்பாடும், பொருண்மையும் நிறைந்த வகையில், ஐந்து புதுப்புனைவுச் சொற்களைப் பெய்திருப்பது, இவரின் தனித்த

சொல்லாட்சித் திறனையும் மிகச் சிறந்த நல்லுளத்தையும் காட்டி நிற்பது, அறிந்து மகிழ்தற்குரியது. அவையும், அவற்றின் பொருள்களும் வருமாறு:

1. **பிறன் பொருளாள் (141)** - பிறனது இல்லறத்திற்குப் பொருளாகி நிற்பவள்.
2. **பிறன் இயலாள் (147)** - பிறனுடைய இயங்குதலுக்குத் துணையாகியவள்.
3. **பிறன்மனை (148)** - பிறனுடைய மனைக்கு உரியவள்.
4. **பிறற்குரியாள் (149)** - பிறனுக்கு உரிமையுடையவள்.
5. **பிறன்வரையாள் (150)** - பிறனது இல்லறத்திற்கு எல்லைப்பட்டு நிற்பவள்.

5. இது, மற்ற அறச்செயல்களைச் செய்யாமல், அறமல்லாத செயல்களையே செய்பவன், பிறனுக்குரியவளை விரும்பாமல் இருப்பானாயின் அஃது எல்லார்க்கும் நன்றாம் என்று முடித்துக் கூறியதால் அதிகார இறுதிக்கண் நின்றது.

# அ-2 இல்லறவியல்

## அ-2-12 பொறையுடைமை -16

### அதிகார முன்னுரை

'**பொறையுடைமை**' என்பது 'பொறுத்துக்கொள்ளும் தன்மை உடைமை'.

பொறை - சுமை.

சுமையை உடல் பொறுத்துக் கொள்ளுதல் போல், பிறர் தமக்குச் செய்யும் தீங்குகளையும், துன்பங்களையும், இன்னாத இழிவுச் சொற்களையும் மனம் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும் என்பது.

இஃது, உலகியலில் பொது நடைமுறைக்கான ஓர் ஒழுகல் முறை ஆகும்.

எனவே, இதனை ஆசிரியர் அறவுணர்வின் பாற்படுத்தி வலியுறுத்துவார் ஆயினார். மேலும் இவ்வுணர்வு இல்லறத்தார்க்கே பெரிதும் வேண்டியதால், இல்லறவியலில் இதனைச் சேர்த்தார்.

**பொறுத்துக்** கொள்ளுதல், **தாங்கிக்** கொள்ளுதல், **நோன்று** கொள்ளுதல், ஏற்றுக் கொள்ளுதல் - ஆகிய தொடர்கள் ஒருசார்புப் பொருளுடையன.

**பொறை** - சுமை - உடல் தாங்கும் சுமை.

பொறுத்தல் - உடல் சுமையைப் பொறுத்தல்.

**'சிவிகை பொறுத்தான்'** - 37

**'யாக்கை பொறுத்த நிலம்'** - 239

**'ஆற்றுவார் மேற்றே பொறை'** - 1027

**தாக்கு** - தாங்கு. உடலுக்கு வருகின்ற தாக்கங்களைத் தாங்கிக் கொள்ளுதல்

தாங்குதல் பொறுத்துக் கொள்ளுதல்.

**'பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி'** - 733

**'இருநிலந்தான் தாங்காது மன்னோ பொறை'** - 990

**நோ - நோய் - நோன்றல்** - நோன்மை - பொறுத்தல். நோன்று கொள்ளுதல் பொறுத்துக் கொள்ளுதல். உடல்நோயைப் பொறுத்துக் கொள்வது போல்.

**'நோற்பாரின் நோன்மை உடைத்து'** - 48

**'உற்ற நோய் நோன்றல்'** - 261

**பார் - நிலம் - பாரம்** - சுமை - கனம்.

ஏல் - ஏந்து - ஏற்றுக்கொள்ளுதல்.

ஏந்து - ஏந்தல் - தாங்கிக்கொள்ளுதல்.

**'பிழைத்த வேல் ஏந்தல் இனிது'** - 772

இவ்வகையில்,

1. உடல் சுமைபோல் வரும் மனச்சுமையைப் **பொறுத்துக்** கொள்ளுதல்.

2. உடலுக்கு வருகின்ற தாக்கங்களைத் தாங்கிக் கொள்ளுதல் போல், மனத்திற்கு வரும் தாக்கங்களையும் **தாங்கிக்** கொள்ளுதல்.

3. நோயை உடல் நோன்று கொள்ளுதல் போல், மனத்துக்கு நோய்போல் வரும் துன்பங்களையும் **நோன்று** கொள்ளுதல்.

4. நிலம் அதன் மேலுள்ள சுமைகளை ஏந்தி ஏற்றுக் கொள்ளுதல் போல், மனம் அதற்கு வரும் எண்ணச் சுமைகளையும் **ஏற்றுக்** கொள்ளுதல் வேண்டும். அஃதாவது தாங்கிக் கொள்ளுதல் வேண்டும் - என்பவற்றை நன்கு விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

- பிற்கால உரையாசிரியர் சிலர் **'பொறையுடைமை'**யைப் **'பொறுமை உடையவராய் இருத்தல்'** என்று பொருள் கூறுவர். அது பொருத்தமின்மையாதல் அறிக.

**பொறுமை** வேறு; **பொறையு**டைமை வேறு.

**பொறுமை** - அமைவு - அமைந்திருத்தல்.

- இது மனவுணர்வின்பாற்பட்ட **இயல்புக்** குணம். இயற்கையாய் இருப்பது.

- துன்பத்தைத் தாங்கிக் கொள்ளும் அறவுணர்வன்று. மேலும் இவ்வுணர்வு அடக்கத்தின் பாற்படும். அது முன்னரே கூறப்பெற்றது.

**பொறை** - சுமை - சுமை பொறுத்தல்

- இஃது அறிவுணர்வால் மன உணர்வை அடக்கிக் கொள்ளுதல்.

- இது குணமன்று; அறமுயற்சி. செயற்கையாய் இருக்கச் செய்வது.

இனி, நூலாசிரியர், உவமைகளைக் கையாளுவதில் வல்லரும், நுண்ணுணவர்வுள்ளாரும் ஆகையால், சுமையைத் தாங்கிக் கொள்வதற்கு நிலத்தையே பலவிடங்களிலும் எடுத்துக்காட்டாய்க் கூறுவதைக் கவனிக்க வேண்டும்.

நிலக்குப் பொறை நிலத்துக்குச் சுமை.

**'நிலம் போல..... பொறுத்தல் தலை'** - **151**

**'வையம்..... ஆற்றும் பொறை'** - **189**

**'கடுங்கோல்....... நிலக்குப் பொறை'** - **570**

**'கண்ணோட்டம்..... இலார் நிலக்குப் பொறை'** - **572**

**'இசைவேண்டா ஆடவர்..... நிலக்குப் பொறை'** - **1003**

இதனையே ஒத்து உரைப்பார் பிறரும்.

**'நின் புரத்தலும் நோன்மையும் ஞாலத்துள'**

- பரிபாடல் **:43:28**

இனி, நூலாசிரியர் இந்த உண்மையை மிக நுண்மையாக இன்னோர் இடத்தில் கையாளுதல் உற்று நோக்கி மகிழத்தக்கது.

அது, 'சான்றோர் தம் சான்றாண்மையில் குன்றி விடுவராயின், இவ் வலிய நிலமும் தன் சுமையைத் தாங்காதாகி விடும்' - என்பது.

**'சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்**
**தாங்காது மன்னோ பொறை'** - **990**

இனி, பொறுத்துக் கொள்ள வேண்டியனவற்றுள் குறைகள், குற்றங்கள், வரைமீறிய செயல்கள் முதலியன அடங்கினும், அவற்றுள் முதன்மையானதும், தலையாயதும், அடிக்கடி நிகழ்வதும், உடனுக்குடன் நெஞ்சில் உறைப்பதும், மானம் கருதுவதும் ஆகிய இழிவான - கடுமையான

- பொருந்தாத - தகாத - சொற்களைப் பொறுத்துக் கொள்வதுதான் என்பார், ஆசிரியர்,

**'தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை'** - 151

**'ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும் கண்ணோடிப்**
**பொறுத்தாற்றும் பண்பே தலை'** - 579

அத்தகையவர்கள், உலக இன்பங்களை யெல்லாம் துறந்து, உயிரினங்கள் உள்ளிட்ட மாந்தர் அனைவரும் பொறுத்துக் கொள்ள இயலாத தம் உடற்பசியையும் பொறுத்துக் கொண்டு, தவம் நோற்பவர்களை விடவும் சிறந்தவர்கள் - பெரியவர்கள் - என்றுரைப்பார், ஆசிரியர்.

**'துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்**
**இன்னாச்சொல் நோற்கிற் பவர்'** - 159

**'உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்**
**இன்னாச்சொல் நோற்பாரின் பின்'** - 160

இனி, சான்றோர் பிறரும், மற்றவர் கூறும் இன்னாச் சொற்களைப் பொறுத்துக் கொள்வதையே பெரிதாகக் கூறுவதைக் காணலாம்.

பெரும்பாலும், பிறரைப் பழித்தும் இழித்தும் கூறுபவர்கள், தமக்கு இணையில்லாதவர்களாக - தாழ்ந்தவர்களாக - கயவர்களாக - அறிவில்லாதவர்களாக அல்லது அறிவிருந்தும் பேதையர்களாக - தம்மை மதியாதவர்களாகவே இருப்பர். அத்தகவிலார்கள் கூறும் பழிச்சொற்களையும், இழிசொற்களையும் பொறுத்துக் கொள்வதே தம் தகுதிக்கு உகந்ததாம் என்பர்.

**'நேர்த்து நிகரல்லர் நீரல்ல சொல்லியக்கால்**
**வேர்த்து வெகுளார் விழுமியோர்'** - நாலடி : 64

**'கல்லெறிந் தன்ன கயவர்வாய் இன்னாச்சொல்**
**எல்லாரும் காணப் பொறுத்துய்ப்பர்'** - நாலடி : 66

**'அறிவெனப் படுவது பேதையார் சொல் நோன்றல்'** - கலி :133

**'பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்'** - கலி : 133

**'பெரியோ ராயின் பொறுப்பது கடனே'** - வெற்றிவேற்கை : 31

**'நெறியின் நீங்கியோர் நீரல கூறினும்**
**அறியா மைஎன்(று) அறிதல்வேண்டும்'** - சிலப். ஊர்காண்.:

நூலாசிரியர் அறக்கூறுகளை வகுத்துக்கூறுமிடத்து, அன்புடைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பொறையுடைமை என்றவாறு உடைமைப்பொருளில் கூறுவது, இவையும் மக்களது பொருளுடைமையைப்

போல் தங்களின் உடைமைச் செல்வங்களாகக் கொண்டு பேணப் பெறவேண்டுவன என்று குறித்தற் பொருட்டாம் என்க.

இனி, அறக்கேடுகளிலேயே பெரியதும் கொடியதுமாகிய அறக்கேடு பிறனில் விழைதல் ஆகையால், அஃதொருகால் கணவன், மனைவியர்பால் நிகழினும் இல்லறத்தில் உள்ளோர், அதனையும் பெரிதாகக் கருதித் தத்தம் எதிர்கால வாழ்வை இழிவும் இழப்பும் பழிப்பும் சிக்கலும் உடையதாக ஆக்கிக் கொள்ளாமல், அதனைக் கண்டித்துப் பொறுத்துத் திருத்திக்கொள்ள வேண்டுமென்று அறநோக்கான் கருதியே, இப் **'பொறையுண்டைமை'**யைப் **'பிறனில் விழையாமை'** அதிகாரத்தை அடுத்து வைத்தார் என்க.

## கஙக. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
## இகழ்வார்ப் பொறுத்தல் தலை. - 151

**பொருள்கோள் முறை :** இயல்பு.

**பொழிப்புரை :** தன்னை ஆழத் தோண்டிக் குழிபறிப்பாரையும் நிலமானது தாங்கிக் கொண்டிருத்தல் போல், தம்மைச் சொல்லாலும் செயலாலும் இகழ்ந்து, தம் நல்வாழ்வுக்கு ஊறு செய்பவரையும் தாம் பொறுத்துக் கொள்ளுதலே மிகச்சிறந்த பொதுமை அறம் ஆகும்.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. பொறுத்துக் கொள்ளும் பொதுமையறத்தில் தலையாயதும், மிகச் சிறந்ததும் ஆகியது, பிறர் தம்மை இழிவு செய்தலையும் தம் நன்னிலைக்கு இடையூறு செய்தலையும் பொறுத்துக் கொள்ளுதலே ஆகும் என்பதற்கு இதை அதிகாரத்து முதற்குறளாக வைத்தார் என்க.
2. **அகழ்வரைத் தாங்கும் நிலம்போல** - தன்னை ஆழத் தோண்டிக் குழிபறிப்பாரையும் நிலமானது தாங்கிக் கொண்டிருத்தல் போல.

**அகழ்தல்** - ஆழத்தோண்டிக் குழிபறித்தல். குழிபறித்தல் நிலத்துக்கு ஊறுசெய்யும் செயலால் வருவித்தது.

- தோண்டுதலோடு அமையாது குழிபறிக்கும் நோக்கத்தையும் குறித்தது.

- தோண்டுதல் இகழ்வதும், குழிபறித்தல், தம் நன்னிலைக்கு ஊறு செய்தலும் சேர்ந்து, உவமை உவமேயத்தோடு நன்கு பொருந்துவதாகும் என்க.

**தாங்குதல்** - பொறுத்தல். குழிபறிப்பாரைத் தாங்கிக் கொள்ளுதல் சுமந்து நிற்றல்.

3. **தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை** - தம்மைச் சொல்லாலும் செயலாலும் இகழ்ந்து, தம் நல்வாழ்வுக்கு ஊறு செய்பவரையும், தாம் பொறுத்துக் கொள்ளுதலே மிகச் சிறந்த பொதுமை அறம் ஆகும்.

**இகழ்வார்** - தம்மைச் சொல்லாலும் செயலாலும் இகழ்பவர்.

- நிலத்தை மண்வெட்டியால் தோண்டும் ஒலிக்குறிப்பை இங்குச் சொல்லுக்கும், குழிபறிப்பைச் செயலுக்கும் பொருத்தி மகிழ்க.

- நிலம் நன்னிலைக்கண் இருந்து, அகழ்தலால் ஊறுபாடு எய்தியது போல், தம்மை இகழ்ந்த சொல்லாலும் செயலாலும் தம் நன்னிலை வாழ்வு ஊறுபடுத்தப் பெற்றதைக் குறிப்பால் உணர்க.

**பொறுத்தல்** - பொறுத்துக் கொள்ளுதல் மனத்தாலும் அறிவாலும் தாங்கிக் கொள்ளுதல்.

தலை - தலைசிறந்தது. மிகச்சிறந்த பொதுமை அறமாம் என்க. என்னை? அறமே பொதுமை உணர்வாகலின்.

(காண்க : **'அறத்துப்பால்'** முன்னுரை)

4. கடுமையான, இழிவான, இகழ்வான சொற்களைப் பொறுத்துக் கொள்வதே அறிவுடைமை என்பதைச் சான்றோர் பிறரும் ஒப்புவர்.

**'எள்ளிப் பிறர்உரைக்கும் இன்னாச்சொல் தன்நெஞ்சில்**
**கொள்ளி வைத்தாற்போல் கொடிதெனினும் - மெள்ள**
**அறிவென்னும் நீரால் அவித்தொழுகல் ஆற்றின்**
**பிறிதெனினும் வேண்டா தவம்' - அறநெறிச் : 101.**

**'நீர்த்தன்றிக்**
**கீழ்மக்கள் கீழாய சொல்லியக்கால் சொல்பவோ**
**மேன்மக்கள் தம்வாயால் மீட்டு' - நாலடி : 70**

**'நேரல்லர் நீரல்ல சொல்லியக்கால் மற்றது**
**தாரித்(து) இருத்தல் தகுதி' - நாலடி : 72**

(தாரித்தல் - பொறுத்தல்)

**'ஆய்ந்த அறிவினர் அல்லாதார் புல்லுரைக்கும்**
**காய்ந்தெதிர் சொல்லுபவோ கற்றறிந்தார் ?' - பழமொழி : 268**

5. இனி, 'நிலம்' என்பதை நூலாசிரியர் பொதுவாகப் பெண்ணுக்கும், சிறப்பாக 'இல்லக் கிழத்தி'க்கும் உவமையாகக் காட்டுவார்.

**'செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து**
**இல்லாளின் ஊடி விடும்' - 1039**

(இங்குக் குறிப்பாகக் 'கிழவன்' கணவனையும் 'நிலம்' இல்லாளையும் குறித்தன. விளக்கம் ஆண்டுக் காண்க.)

**'நல்லாண்மை என்ப(து) ஒருவற்குத் தான்பிறந்த**

**இல்லாண்மை ஆக்கிக் கொளல்'** - **1026**

(இங்குப் 'பிறந்தஇல்' என்னும் இணைச்சொல், பொதுவாகத் தான் பிறந்த நிலத்தையும் அஃதாவது நாட்டையும், 'இல்' என்னும் தனிச்சொல் மறைவாக மனைவியையும், 'ஒருவன்' என்பது அவள் கணவனையும் குறித்தன. விளக்கம் ஆண்டுக் காண்க.)

**இலம்என்று அசைஇ இருப்பாரைக் காணின்**

**நிலம்என்னும் நல்லாள் நகும்'** - **1040**

(இங்கு 'இருப்பார்' என்பது பொதுவாக 'இல்லாது வறுமையுற்ற ஒருவனை'யும், 'மறைவாகக் கணவனை'யும், 'நிலம்' என்னும் நல்லாள் பொதுவாக விளைநிலத்தையும், மறைவாக 'மனைவி'யையும் குறித்தன. விளக்கம் ஆண்டுக் காண்க.)

**'புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு**

**நீர்இயைந்(து) அன்னார் அகத்து.'** **-1323**

(இங்கு 'நிலம்' மனைவியையும், 'நீர்' கணவனையும் குறித்தன. விளக்கம் ஆண்டுக் காண்க.)

- இங்கு, இவ்வெடுத்துக் காட்டுகளின்வழி, நிலம் என்னும் இல்லக் கிழத்தியால் ஒரோவிடத்து இழிவு நேரினும், அதைப் பிறனொருவன் செய்யினும், அதனால், தன் இல்லற நல்வாழ்வுக்கு ஊறுபாடு நேரினும், அக்கொடுமையினையும் பொறுத்துக் கொள்ளுதல் தலையாய அறவுணர்வேயாம் என்னும் முந்தைய அதிகாரத் தொடர்கருத்தை, அதிகாரத் தலைப்பால் மட்டுமன்றி, (காண்க : முன்னுரை இறுதிப் பத்தி) இவ்வதிகாரத் தொடக்கப் பாடலாகிய இதனினும் இயைபு காட்டிக் குறிப்புணர்த்தினார் என்பது உணர்த்த வேண்டி என்க.

6. இதற்கு, **'மணக்குடவர்'**

**'இது பொறுத்தானென்று இகழ்வாரில்லை; அதனைத்**

**தலையாகக் கொள்வார் உலகத்தார் என்றது'**

- என்று விளக்கம் தருவது சிறப்பு, என்க.

**கருஉ. பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை**
**மறத்தல் அதனினும் நன்று. - 152**

பொருள்கோள் முறை :

***என்றும் இறப்பினைப் பொறுத்தல் (நன்று;)***
***அதனை மறத்தல் அதனினும் நன்று.***

**பொழிப்புரை** : *எந்த நிலையிலும் பிறர் அளவுமீறிச் செய்யும் கொடுமையைப் பொறுத்துக் கொள்ளுதல் நல்லது. அவ்வாறு பொறுத்துக் கொள்வதினும், அவர் செய்த அத்தீமையை மனத்தில் வையாமல், மறந்து விடுவது மிக நன்மை பயப்பதாகும்.*

**சில விளக்கக் குறிப்புகள் :**

***1. என்றும் இறப்பினைப் பொறுத்தல் நன்று*** - *எந்த நிலையினும் பிறர் அளவு மீறிச் செய்யும் கொடுமையைப் பொறுத்துக் கொள்ளுதல் நல்லது.*

- *என்றும் - என்றது, எக்காலத்தும், எவ்விடத்தும், எச் சூழலினும் என்று முந்நிலைப் பொருளும் குறித்தது.*

- *'காலத்தும்' என்றது, தமக்குற்ற நல்ல காலத்தும், அல்ல காலத்தும் என்றவாறு.*

- *'இடத்தும்' என்றது, தாம் வாழ்விடத்தும், செல்லிடத்தும் என்றவாறு.*

- *'சூழல்' என்றது, தாம் தனித்து நின்ற நிலையினும், பலர் சூழ நின்ற நிலையினும் என்றவாறு.*

- *'நல்ல காலத்தும்' என்றது, தாம் பொருளும் திறனும் உற்றுத் தமக்குக் கேடுசெய்தாரைப் பொருளாலும் திறனாலும் மேற்சென்று கண்டிக்கவும் தண்டிக்கவும் இயன்ற காலம்.*

- *'அல்ல காலத்தும்' என்றது, தாம் பொருளும் திறனும் அற்றுத் தமக்குத் தீமை செய்தாரை மேற்சென்று கடியவும் தடியவும் இயலாத காலம். தாம் நலிந்துள்ள காலம்.*

- *'வாழ்விடத்து' என்றது, தாம் வலிந்து நின்று ஆளுமை பெற்ற இடம்.*

- *'செல்லிடம்' என்றது, தம் வலிமையும் ஆளுமையும் இழந்து நிற்கும் அயலிடம். என்னை?*

**'நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்**
**நீங்கின் அதனைப் பிற' - 495**

- என்றாராகலின்.

- 'தனித்து நின்ற நிலை' என்றது, தமக்குத் துணையாவார் எவருமில்லாத தனிநிலை.

- 'பலர் சூழநின்ற நிலை' என்றது, தமக்குத் துணையாவாரும், தம்மை மதிப்பாரும் சூழ நின்ற பொது அவையம்.

**இறப்பினை** - அளவு இறந்த (மீறிய, கடந்த) நிலை. இங்கு அளவுக்கு மீறிச் செய்யும் கொடுமையைக் குறித்தது.

**பொறுத்தல்** - அத்கு நிலையினும் தான் அறிவையும், மானத்தையும், உடல் எழுச்சியையும் தணித்துப் பொதுமை அறவுணர்வால் பொறுத்துக் கொள்ளுதல்.

**நன்று** - நல்லது. இச் சொல் யாப்பு இடங்கொடாமையால் தொக்கி நின்றது.

- அடுத்துள்ள கருத்துத் தொடரில் வந்துள்ள 'அதனினும் நன்று' என்னும் சொற்களில் உள்ள ஒப்பு 'உம்'மையாலும், 'நன்று' எனும் முடிபாலும், இங்கு 'நன்று' எனும் தொக்கி நின்ற சொல் வருவிக்கப் பெற்றது.

- பரிமேலழகரும் பாவாணரும் பிறர் சிலரும் 'பொறுத்தல்' என்பதையே ஏவல் வினையாகக் கொண்டு கருத்தை முடித்தது பொருந்தாது.

- ஆயினும், மணக்குடவரும், காலிங்கரும் அவ்வாறு முடிக்காமல், 'நன்று' கொண்டு முடித்தது நன்று.

- இனி, 'நன்று' என்பதற்கும் 'சிறப்பு' என்று சிலர் தரும் பொருள் சிறப்பன்று. 'நல்லது' என்பதே செயல்நிலைப் பொருள் என்க. என்னை?

'சிறப்பு' எனும் மெச்சுபொருளால் பயனேது?

'நல்லது' பொறுத்துக் கொள்ளப் பெற்றான் ஒருகால் மனம் மாறுதலும், பொறுத்தானுக்கு நன்றியுணர்வால் பணிந்து துணையாதலும் கூடுமாகலின்.

**'செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்; அல்லிடத்துக்**
**காக்கிலென் காவாக்கால் என் ?' - 301**

- என்னும் குறள் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

2. **அதனை மறத்தல் அதனினும் நன்று** - அவ்வாறு பொறுத்துக் கொள்வதினும், அத்தீமையை மனத்தில் வையாமல் மறந்து விடுவது மிக நன்மை பயப்பதாகும்.

**அதனை** - அவர் செய்த தீமையை.

- இச்சுட்டுச் சொல், அத் தீமையை மட்டுமே குறியாது, அதைப் பொறுத்துக் கொண்ட பெருமைச் செயலையும் சேர்த்தே குறிப்பதென்பதும் சிறப்பாகும், ஏனெனில் அஃதொரு பெருமித எண்ணம் ஆகையால்.

- 'இதனை யாம் பொறுத்தேம் என்று கருதாது, அப்பொறுத்தமை தன்னையும்' என்று காலிங்கர் விளக்கம் தருவது போற்றத்தக்கது.

**மறத்தல்** - மறந்து விடுதல்.

- இங்கு ஒரு மனவியல் உண்மையை நாம் கவனித்தல் வேண்டும்.

- பெரும்பாலும் 'மறத்தல்' என்பது தானே நிகழ்வது, இஃதொரு 'தன்விழைவில்லாச்' (அனிச்சைச்) செயல்.

- அதை மனம் செய்வது யாங்ஙன் எனில், அதை அறிவால் பெரிதாகக் கருதாத விடத்து, அச்செயல் (மறதி) தானே நிகழுமாம் என்க, என்னை?

- 'எண்ணுதல்' என்பது அறிவும் மனமும் இணைந்த செயல்.

எண்ணாதவிடத்து, அறிவுணர்வு விலகி நிற்றலால், மனம் மட்டும் அவ்வெண்ணுதலைத் தானே நிகழ்த்தாதாம் என்க.

எவ்வாறெனில், அறிவு திரையும், மனம் ஓவியமும் போல என்க. திரையில்லா விடத்து ஓவியமும் இல்லாதல் போல, அறிவு இணையாவிடத்து, மனத்தின்கண் நினைவு நிகழாதாம் என்க. என்னை?

**'சென்ற இடத்தால் செலவிடாது தீதுஒரீஇ**
**நன்றின்பால் உய்ப்பது அறிவு'** - **422**

- என்றாராகலின்.

- எனவே, ஒருவர் செய்த தீமையையும், அதைப் பொறுத்தலும் ஆகிய தொடர்நிகழ்வை அறிவு துன்பப்பட்டும், பெருமிதப்பட்டும் நினையாவிடத்து, மனமும் தன் உணர்வில் அவற்றைக் கொள்ளாது மறந்துவிடுதல் இயல்பாம் என்க.

- நூலாசிரியரும் இந்நூலுள் 'மறத்தல்' உணர்வைக் குறிப்பிடும் இடங்களில் எல்லாம் அறிவை முன்வைத்தே கூறுதல் காண்க.

**'அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை; அதனை**
**மறத்தலின் ஊங்கில்லை கேடு'** **- 32**

- இங்கு நன்று தீதுணர்தலும், அவற்றுள் நன்றல்லாததை மறப்பதும், அறிவு.

**'மறப்பினும் ஒத்துக் கொளலாகும்' -** **- 134**

-இதிலும், மறப்பதும், பின் அதை ஓதிக் கொள்வதும் அறிவு.

**'மறந்தும் பிறன்கேடு சூழற்க'** **- 204**

- இங்கும், சூழ்தலைச் செய்வதும் செய்யாது மறப்பதும் அறிவு.

**'மறந்தார்கொல் மற்றையவர்கள் தவம்'** **- 263**

இதினும், தவத்தை மறப்பது, அறிவு.

**'மறத்தல் வெகுளியை யார்மாட்டும்'** **- 303**

- இங்கும் வெகுளியைச் செய்வதும், அதை மறப்பதும், அறிவு.

**'அறுதொழிலோர் நூல் மறப்பர்'** **- 560**

- இங்கும், நூல் மறத்தலைச் செய்வது அறிவு.

**"ஊடற்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து**
**கூடற்கண் சென்றதென் நெஞ்சு'** **- 1284**

- இங்கு, ஊடலைத் தூண்டியது அறிவு; அதைமறந்து கூடலைத் தூண்டியது மனம்; அதற்குத் துணை நின்று மனத்தை வலுப்படுத்தியது, உடல். (மனம், அறிவு, உடல் இம் மூன்று உணர்வினும் அமைந்ததே செயல். இவற்றுள் எவையேனும் இரண்டு சேர்ந்து, மூன்றாவதுணர்வைத் தள்ளிச் செயல் நிகழ்த்தும் இன்னோர் உண்மை காட்டப்பெற்றது).

**'உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்**
**ஒள்ளமர்க் கண்ணாள் குணம்'** **- 1125**

- இங்கு, மறக்க முயன்றது மனம்; ஆனால் அவள் குணத்தை எண்ணுதலால் மறக்கச் செய்யாது நினைக்கச் செய்தது, அறிவு.

- ஈங்கு எடுத்துக் காட்டிய உணர்வுகளினின்று, அறிவுணர்வே மனத்தை நினைக்கச் செய்வதும், அது தேவையில்லாத விடத்து மறக்கச் செய்வதும் ஆகும் என்பது உறுதிப்பட்டது, என்க.

- எனவே, பிறர் செய்த தீமையை மறக்க உதவுவது அறிவுணர்வே ஆகலின், அவ்வறிவுணர்வால் அவர் செய்த தீமையின் கொடுமையையும், அதைப் பொறுத்துக் கொண்டதால் தமக்கு ஏற்பட்ட பெருமிதத்தையும் ஒருசேர மறந்துவிடுதலே மிகு நன்மை பயப்பது என்று உணர்த்தினார் என்க.

அதனினும் நன்று - அப் பொறுத்தல் நன்மையினும் அத் தொடர் நிகழ்வை மறத்தலால் ஏற்படும் நன்மை மிக்கதாம் என்றார், என்னை?

- அதை மறத்தலால், தாம் மேன்மேலும் அறவுணர்வில் ஈடுபடுவதும், அதனால் பற்பல நன்மைகள் நிகழ்வதும், அவற்றின்வழி உள்ளம் ஊக்கம் இழவாமல் தம் வாழ்வியற் கடமைகளைச் செய்வதும் இயல்வதாகலின். இல்லெனின், அவர் செய்த தீமைகள் எப்பொழுதும் மனத்தின்கண் ஊடாடி நிற்பவும், அதனால் உள்ளம் ஊக்கம் இழப்பதும், அந்நிலை தம் பொதுஅற ஈடுபாட்டிற்குப் பெருந்தடையாய் இருப்பதும், அதுபற்றி வாழ்வியல் நன்மை கெடுவதும் இயல்பாம் என்க. இந்நிலை அத் தீமையினும் தீமை தருவதாம் என்றும் உணர்க.

3. இது, முன் குறளில் கூறிய பொறுத்தல் தன்மையின் நன்மையையும், அதனைவிட அதை மறத்தல் தன்மையால் விளையும் பெரும் நன்மையையும் கூறியதால், அதன் பின்னர் இது வைக்கப் பெற்றது, என்க.

## கருரு. இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை. - 153

**பொருள் கோள் முறை : இயல்பு.**

**பொழிப்புரை :** இல்லாமையுள் கேடான இல்லாமையாவது, வரும் விருந்தை எதிர்கொள்ளாமல் தவிர்ப்பது. அதுபோல் வல்லமையுள் மிகுந்த வல்லமையாவது, பேதையர் செய்த தீமையைப் பொறுத்துக் கொள்வது.

**சில விளக்கக் குறிப்புகள் :**

**1.இன்மையுள் இன்மை விருந்துஒரால்** - இல்லாமையுள் கேடான இல்லாமையாவது, வரும் விருந்தை எதிர்கொள்ளாமல் தவிர்ப்பது.

**இன்மையுள் இன்மை** - இல்லாமையுள் கேடான இல்லாமையாவது.

- இதற்கு உரையாசிரியர் அனைவரும் 'வறுமை' என்றே பொருளுரைப்பர்.

- இன்மை 'வறுமை' மட்டுமன்று. வேறுசில இன்மைகளும் சேர்ந்த தன்மை.

- 'வறுமை' என்பது பொருளின்மை மட்டுமே குறிப்பது.
- 'இன்மை' பொருளின்மை, அன்பின்மை, பண்பின்மை, பொது நலமின்மை போன்றவற்றையும் குறிக்கும்.
- இங்கு ஆசிரியர் குறித்தது பொருளில்லாத வறுமையை மட்டுமன்று. அதற்குவெறும் இன்மையே போதுமானது. ஆனால் அவர் குறிப்பிட விரும்பியது அவனிடமுள்ள வேறு சில இன்மைகளுமாம். எனவே, 'இன்மையுள் இன்மை' என்று குறித்தார் என்க.
- வறுமையை எத்தனைமுறை அடுக்கிச் சொன்னாலும் அதற்கு முழுப்பொருளும் வறுமைதான்.
- ஆனால், அவர் கூறவந்தது வெறும் வறுமையை மட்டுமன்று; இனி மிகைப்பட்ட வறுமையையும் அன்று.

அத்துடன் வேறுசில இன்மைகளும் பொருளாவதை, அவர் அடுத்து வரும் கருத்தால் உணர்த்துவர்.

- எனவே, முதலிற் கூறப்பெற்ற இன்மை, இல்லாமையும், அடுத்து வரும் இன்மை கேடான இல்லாமையுமாம்.
- ஒரு பண்புச்சொல் இருமுறை அடுக்கிவரின், இரண்டாவது சொல் இயல்பாகவே மிகுதியைக் குறிக்கும்.

(எ-டு)

அழகு அழகு - அழகு, மிக அழகு.

நல்லது நல்லது - நல்லது, மிக நல்லது.

இழிவு இழிவு - இழிவு, மிக இழிவு.

- ஆனால் இங்கு முதல்வந்த 'இன்மை'யொடு, 'உள்' என்னும் உடைமை குறித்த சொல்லும் சேர்வதால், கேடான, இழிவான, கீழான என்னும் மிகைப் பண்புச்சொல் ஒன்று தேவையாகிறது.

(எ-டு)

இழிவு இழிவு - இழிவில் கீழான இழிவு.

வறுமையுள் வறுமை - வறுமையுள் கேடான வறுமை.

கயமையுள் கயமை - கயமையுள் இழிவான கயமை.

**விருந்து ஒரால்** - வரும் விருந்தை எதிர்கொள்ளாமல் தவிர்ப்பது.

- எத்துணை இல்லாமை அல்லது வறுமை இருந்தாலும், அதன் காரணமாக, வருகின்ற விருந்தைத் தவிர்ப்பது அல்லது நீக்குவது (பரிமேலழகர்) அல்லது விடுவது (பாவாணர்) அன்பின்மையையும்,

பண்பின்மையையுமே குறிக்கும்.

- விருந்தோம்பலுக்குப் பொருள் முகாமையில்லை என்பது ஆசிரியர் கருத்து. என்னை?

அதிகாரத்தை அடுத்த 'இனியவை கூறல்', 'விருந்தோம்பல்' அதிகாரத்தில் அவர் கூறுபவை இவை :

**'அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து**
**இன்சொலன் ஆகப் பெறின்'** - **92**

(விருந்துக்கு ஏதாவது ஈவதைவிட, மனமகிழ்ந்து, முகமலர்ச்சி காட்டி, இனிய சொற்களைக் கூறுதலே போதும்.)

(இத்துடன் ஒருகுவளை நீர் கொடுப்பது இன்னும் மேலாம்)

- அதையடுத்து அதே அதிகாரத்தில் அவர்கூறும் இன்னொரு கருத்தும் எண்ணத் தக்கது.

**'முகத்தான் அமர்ந்து இனிதுநோக்கி அகத்தானாம்**
**இன்சொ லினதே அறம்'** - **93**

(முகம் மலர்ச்சியுடன் வரும் விருந்தை எதிர்கொண்டு அழைத்து வந்து, இருக்கை தந்து, அவர்தம் முகம் நோக்கி அமர்ந்து, இனிமையாக நோக்கி, உள்ளத்திலிருந்து வரும் இனிய சொற்களைப் பேசி மகிழ்விப்பதே பொதுமை அறமாகும் - அஃதாவது 'விருந்தோம்பல்' அறமாகும்).

- இனி, இதனினும் மிகத்தெளிவாகத் 'தம்பால் உண்பதற்கே ஒன்றும் இல்லாத ஏழைமை - வறுமை - படிந்து இருப்பினும், வந்த விருந்தினர் யாராக இருப்பினும், அவரை அன்புடன் மகிழ்விக்கும் இன்சொல்லால் பேசி நிறைவு செய்வதே போதும். அவர்கள் நம் நிலையைத் தாமே உணர்ந்து, நம்மைத் தாழ்வாக நினைப்பதற்கு இடமில்லை; இவ்வாறு செய்வது நம் வெறுமையையும் போக்கும்' - என்னும் கருத்தில்.

**'துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்**
**இன்புறூஉம் இன்சொ லவர்க்கு'** - **94**

- எனவே, 'இன்மை'யை வறுமை என்று பொருள் தருவதினும் 'இல்லாமை' என்று பொருள்படுத்துவதே, அத்தகையவர்பால், பொருளில்லாமையுடன் அன்பில்லாமையும் பண்பில்லாமையும், விருந்தோம்பும் தகைமையில்லாமையுங்கூட உண்டு என்பதால்; மேலும் அது கேடான இல்லாமையாகும் என்று பொருள் கொள்ளும்படி,

'வறுமை' என்று குறியாது 'இல்லாமை' என்று குறித்தார் என்க.

- இனிச் சிலர் இத் தொடர்க்கு, 'கொடிய வறுமையிலும் வறுமையாவது, வந்த விருந்தினரைப் பேண முடியாமை' என்று பொழிப்புத் தருவது, பொருந்தாமையினும் பொருந்தாப் பொருளதாம், என்க.

- இங்கு ஆசிரியர் குறிப்பது 'விருந்தினரைப் பேண முடியாமை' அன்று, 'விருந்தைத் தவிர்ப்பது', விருந்தைத் தவிர்க்கும் நிலை வேறு; பேணமுடியாத நிலை வேறு. இனி, பேண முடியாததால் தவிர்ப்பது - இன்னும் கீழானதாம் என்று விடுக்க.

- 'விருந்தோம்புவது' என்பது 'வயிறு முட்ட உண்ணவும் தின்னவும் கொடுத்துத்தான் பேண வேண்டும் என்பதன்று.' 'பருக நீர் தரினும், பச்சைக் கீரையை அவித்துப் படைப்பினும் அன்புடன் தந்து, இனிமையுடன் பேசிப் பண்புடன் பழகுவதே சிறந்த விருந்தோம்பலாம்' என்பது கீழ்வரும் ஔவையார் பாடல்களால் உணர்க.

**'வெய்தாய் நறுவிதாய் வேண்டளவும் தின்பதாய்**
**நெய்தான் அளாவி நிறம்பசந்த - பொய்யாய்**
**அடகென்று சொல்லி அமிழ்தத்தை இட்டார்**
**கடகம் செறிந்தகை யார்'**

**'காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே**
**மாணொக்க வாய்திறக்க மாட்டாதே - வீணுக்கென்**
**என்பபெல்லாம் பற்றி எரியுதே ஐயையோ**
**அன்பிலாள் இட்ட அமிழ்து.'** - தனியன்.

- இனி, 'ஓரால்' என்பது 'ஒருவல்' என்பதன் திசைவு. - நீக்குவது, தவிர்ப்பது என்னும் பொருள் தருவது.

- தழுவல் என்பது 'தழால்' (சுற்றம் தழால் 53-ஆம் அதிகாரத் தலைப்பு) என்றானது போல, ஒருவல் - 'ஓரால்' என்று ஆனது.

- இனி, 'இன்மையுள் இன்மை' என்பதற்கு, மணக்குடவர், 'வலியின்மையுள் வைத்து வலியின்மை யாவது' என்று பொருள் தருவதும்,

காலிங்கர், 'இனிமைகளுள் வைத்து மிகவும் இனிமையாவது' என்று பொருள் படுத்துவதும், வியப்பும், நகைப்பும் தருவனவாம்.

2. **வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை** - அதுபோல், வல்லமையுள் மிகுந்த வல்லமையாவது, பேதையர் செய்த தீமையைப் பொறுத்துக் கொள்வது.

**வன்மையுள் வன்மை** - வல்லமையுள் மிகுந்த வல்லமையாவது.

- வல்லமை - வலிமை யென்று பொருள்படலாமெனினும், அவ்வாறு குறிப்பின், பெரும்பாலும் அஃது உடல் வலிமையையே குறித்ததாகும். இங்கு, வல்லமை என்பது மூவுரனையும் (உடல். மனம், அறிவு) குறிக்கும். ஒருவர் செய்த தீமையைப் பொறுத்துக் கொள்வதற்கு இம் மூன்று நிலைகளும் செயற்படுதல் வேண்டும். அதுவே வலிமையுள் வலிமையாகும்.

**மடவார்ப் பொறை -** பேதையர் செய்த தீமையைப் பொறுத்துக் கொள்வது, 'மடவார்' என்பதற்கு அறிவில்லாதவர் என்றே அனைத்து உரையாசிரியர்களும் உரை தருவர். அது மிகு பொருத்தமின்று.

- அறிவில்லாமை வேறு - மடமை வேறு.

- அறிவு வளர்ச்சியும் மன வளர்ச்சியும் இல்லாமையே மடமை.

மடம் - மழுங்கிய தன்மை.

- மனம் மழுங்கிய தன்மையல் பிறரின் அன்புணர்வும் பண்புணர்வுகளும் உணரப்பெறா.

- அறிவு மழுங்கிய தன்மையில் பிறரின் சிறப்பு இழிவுகள், உயர்வு தாழ்ச்சிகள் உணரப்பெறா.

- எனவே 'மடவார்' பேதையரே ஆவர். பேதைமை அறிவும் மனமும் மழுங்கிய தன்மை, என்னை?

கீழுள்ள குறட்பாக்களில் அறிவுணர்வும், மனவுணர்வும் மழுங்கிய பேதைத் தன்மை ஆசிரியரால் கூறப்பெற்றுள்ளமை காண்க.

**'அஞ்சுவ தஞ்சாமை பேதைமை' - 428**

**'மடிமடிக் கொண்டொழுகும் பேதை' - 603**

**'பேதை பெருங்கழீஇ நட்பின் அறிவுடையார்**
**ஏதின்மை கோடி உறும்' - 816**

**'பேதைமை என்பதொன்று யாதெனின் ஏதங்கொண்டு**
**ஊதியம் போக விடல்' - 831**

**'நாணாமை, நாடாமை, நாரின்மை யாதொன்றும்**
**பேணாமை பேதை தொழில்' - 833**

**'ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை**
**பெருஞ்செல்வம் உற்றக் கடை' - 837**

**'கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் பேதை**
**குழாஅத்துப் பேதை புகல்' - 840**

- இனி,

**'பேதைக்கு உரைத்தாலும் தோன்றா துணர்வு'** - பழ:399

**'பேதைக்கு உரைத்தாலும் செல்லா துணர்வு'** - சிறுபஞ்ச:23

- தமிழில் ஒரே பொருள் குறித்த சொற்கள் பலவுள வேனும், அவை தம்முள் சிறுசிறு உணர்வு வேறுபாடுகளும் அறிவு வேறுபாடுகளும் உண்டு.

அவை பொதுவான தன்மையுடையவர்தம் பயன்படுத்தத்தில் உணரப்பெறாவாயினும், நூலாசிரியர் போலும் நுண்மாண் நுழைபுலம் (407) மிக்கவர்தம் கூரிய சொற்பயன்படுத்தத்தால் உணரப் பெறும். என்னை?

**'அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்**
**தொகையறிந்த தூய்மை யவர்'** - 711

அவராகலின் என்க. அவர் 'அறிவறிந்தவரும்' சொல்லின் 'செறிவறிந்தவரும்' ஆவர்.

- மேலும் அவர், விருந்தோம்பல் ஓம்பாதவரை, 'மடவார்' என்னும் சொல்லால் (89) முன்னரே புலப்படுத்தியுள்ளதும் இங்குக் கருதத்தக்கது.

அன்ன மடவாரே, இங்கும் அறிவார்க்குத் தீங்கு செய்பவராகவும் குறிக்கப்பெற்றுள்ளார் என்க. அவரே அறிவும் பண்பும் அற்றவர் ஆகலான்.

இச்சொல் இந்நூலுள் இவ்விரண்டே இடங்களில் மட்டுந்தான் பயன்படுத்தப் பெற்றுள்ளதையும் கருதுதல் வேண்டும்.

- மேலும் இங்கு 'வன்மை' என்னும் சொல்லும் வெறும் உடல் வல்லமையை மட்டும் குறிப்பதற்குப் பயன்படுத்தப் பெறவில்லை. மனவலிமையையும், அறிவு வலிமையையும் சேர்த்தே இச்சொல்லால் குறிப்பிடப்பெறுகிறது. ஏனெனில், பேதைமையால் ஒருவன் கூறும் சொற்களை ஒருவர் பொறுத்துக் கொள்ளவேண்டுமாயின், அவர் அவன் கூறும் தடிப்பமான சொற்களை முதலில் அறிவான் உட்கொண்டு, அதை அவன் அச்சொற்களின் பொருள் அறியாமல் பயன்படுத்துகிறான் என்பதையும், பின்பு மனத்தால் அச்சொற்களின் பொருள் உணர்வுகளைச் செரித்து, அதன்வழி, அவன் இழிவு, சிறப்பு, இடம் தகுதி முதலியவற்றை உணராமல் கூறுகிறான் என்றும் உணர்ந்து கொண்டு, அதன் பின் தன்னுடைய மானவுணர்வால் வெகுண்டெழும் உடலின் எழுச்சியை அடக்கிக் கொண்டு, பொறுமை மேற்கொள்ளல் வேண்டும். இவ் வனைத்து உணர்வு நிலைகளும் ஒன்றன் பின் ஒன்றாக

இங்குக் கூறப்பெறினும், உடனுக்குடன், இடைவெளியின்றிச் செயல்படுமாறு ஒருங்கு நிகழ்வனவாகும் என்று உணர்க.

மேலும் உளவியல் படியும், உடலியல்படியும், ஓர் எழுச்சியுணர்வு செயல்படுத்தப் பெறுவழி, அஃது உடலின் கண் தேக்கப்பெற்று, உடல் வலிமையையும் மன வலிமையையும் மிகுவிக்கும் என்பது இயங்கியல் கோட்பாடாகும் என்க.

அவ் வகையில் மடவாரின் தீங்குச் செயல்களால் தூண்டப் பெற்ற வன்மையுணர்வுகள் அறிவென்னும் நீரால் அவித்தொழுகலாற்றின், அவ்வன்மை மேலும் வன்மை பெறும் என்னும் இயங்கியல் கோட்பாட்டின் அடிப்படையிலேயே இங்கு நூலாசிரியர் 'வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை' என்று கூறினரே யன்றி, இலக்கிய நயத்திற்காகவோ, அறப்பெருமையை மிகுவித்தற்கோ கூறவில்லை என்பதை உணர்தல் வேண்டும்.

- விருந்தோம்பாததை முன்னரே மடமை என்றும், அது மடவார்கண் உண்டு என்றும் ஆசிரியர் முன்னரே கூறியுள்ளமை இங்கு நினைவுகூரத் தக்கது.

**'உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா**
**மடமை மடவார்கண் உண்டு' - 89**

3. இனி, இக்குறளில் ஆசிரியர் கையாண்டுள்ள 'இன்மையுள் இன்மை' 'வன்மையுள் வன்மை' எனும் சொல் நயமும் சொல்லமைப்பும், இந்நூலுள் வேறு சில இடங்களிலும் கையாண்டுள்ளது கண்டு மகிழத் தக்கது. பெரும்பாலும் இத்தகைய சொல்லாட்சியைத் தமிழ் இலக்கியப் பரப்பில் வேறு புலவர் எவரும் கையாளவில்லை என்பது ஆசிரியரின் தனிச் சொல்லாட்சி சிறப்பைக் காட்டுகிறது, என்க.

**'செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்' - 411**
**'இன்மையுள் இன்னாது உடைமை' - 558**
**'இடும்பைக்கு இடும்பை படுப்பர்' - 623**
**'இன்பத்துள் இன்பம் விழையாதான்**
**துன்பத்துள் துன்பம் உறுதல் இலன்' - 628**
**'கற்றாருள் கற்றார் எனப்படுவர்' - 722**
**'பேதையின் பேதையார் இல்' - 834**
**'அறிவின்மை இன்மையுள் இன்மை' - 841**
**'இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்**
**துன்பத்துள் துன்பம் கெடின்' - 854**

'ஆற்றுவார் ஆற்றல் இகழாமை
போற்றுவார் போற்றலுள் எல்லாம் தலை' - 891

'ஆற்றுவார் ஆற்றல் பணிதல்' - 985

'இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது' - 1041

'அறிதோறும் அறியாமை கண்டற்றால்' - 1110

'கொடியார் கொடுமையின் தாம்கொடிய' - 1169

'உணலின் உண்டது அறலினிது' - 1326

4. இது, சிறந்த ஓர் எடுத்துக் காட்டைக் கூறி, பிறர், அதுவும் பேதையர் செய்த தீமையைப் பொறுத்துக் கொள்ளுதல் கோழைமையோ, மென்மையோ அன்று. அது வன்மையுள் மிகவும் வன்மையானது என்று வியந்து கூறி, முன் குறளின் கருத்துக்கு வலிவூட்டியதால், அதன் பின்னர் வைக்கப்பெற்றது, என்க.

5. இஃது எடுத்துக்காட்டு உவமையணிச் செய்யுள்.

## கருசு. நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை போற்றி ஒழுகப் படும் - 154

**பொருள் கோள் முறை :** இயல்பு

**பொழிப்புரை :** ஒருவர் வேறு பிற குணநலன்களாலும் அற ஒழுகலாறுகளாலும் நிறைவுற்றிருக்கும் தன்மை அவர்க்கு நீங்காமலும், அவ்வாறு நீங்குவதால் இழுக்கும் தாழ்வும் ஏற்படாமலும் இருக்க வேண்டுமானால், அவரிடம் உள்ள பொறுத்துக் கொள்ளும் உணர்வைக் கைவிட்டுவிடாமல் மதித்துத் தொடர்ந்து கடைப்பிடித்தல் வேண்டும்.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. **நிறையுடைமை நீங்காமை வேண்டின் -** ஒருவர் வேறு பிற குணநலன்களாலும் அறவொழுகலாறுகளாலும் நிறைவுற்றிருக்கும் தன்மை அவர்க்கு நீங்காமலும், அவ்வாறு நீங்குவதால் இழுக்கும் தாழ்வும் ஏற்படாமலும் இருக்க வேண்டுமானால்.

நிறையுடைமை - சால்புடைமை.

நிறைவு சால்பு.

குணநலன்களும், அற ஒழுகலாறுகளும் நிறைந்து நிற்கும் தன்மை.

**நீங்காமை வேண்டின்** - தம்மை விட்டு நீங்காமலிருக்க வேண்டுமானால்.

- நீங்காமை விரும்புதல், நீங்கினால் ஏற்படும் இழுக்கும் தாழ்வும் அறிந்திருத்தலால்.
- எனவே அக்கருத்து வருவித்து உரைக்கப்பெற்றது.
- நிறையுடைமை நீங்குதல், பொறையுடைமை போற்றி ஒழுகா விடில் என்க. அஃதாவது, பொறையுடைமை நீங்கிய பின்னர் நிகழ்வது.

2. **பொறையுடைமை போற்றி ஒழுகப்படும்** - அவரிடம் உள்ள பொறுத்துக் கொள்ளும் உணர்வைக் கைவிட்டுவிடாமல் மதித்துத் தொடர்ந்து கடைப்பிடித்தல் வேண்டும்.

**பொறையுடைமை** - பொறுத்துக் கொள்ளும் உணர்வு - தன்மை.

**போற்றி ஒழுகப்படும்** - மதித்துத் தொடர்ந்து கடைப்பிடித்தல் வேண்டும்.

**போற்றுதல்** - மதித்துப் பேணுதல்.

**ஒழுகுதல்** - தொடர்ந்து கடைப்பிடித்தல்.

'பொறுத்தல் தன்மை மதிக்கப்பெற்றுத் தொடர்ந்து கடைப்பிடிக்கப் பெற்றால்தான், நிறையுடைமை நீங்காமல் நிற்கும்' என்பது கருத்து, என்னை?

- பேதையரும், அறிவிலாதவரும் கூறுகின்ற அல்லது செய்கின்ற தீமையைப் பொறுத்துக் கொள்ளும் பொறையுடைமையை ஒருவர் போற்றிக் காத்துக் கடைப்பிடிக்கவில்லையெனில், அவர்க்குள்ள நிறைகுணநலன்களும் ஒழுக்கங்களும் நீங்கும் என்பது எவ்வாறெனில், கூறுதும்.
- ஒருவர், பொறையுடைமையைப் போற்றி யொழுகாவிடில், பேதையர் கூறும் அல்லது செய்யும், கொடுஞ் சொற்கள் அல்லது தீமையான செயல்கள், இவர் உள்ள உணர்விலும், அறிவுணர்விலும், உடல் உணர்விலும் கிளர்ச்சியையும் எழுச்சியையும் உண்டாக்கும்.

அக்கால், இவர்க்குச் '*சினம்*' தோன்றும்; அஃதொரு நிறையிழப்பு.

சினம் தோன்றவே '*அடங்காமை*' தோன்றும்; அஃதோர் அறக்கேடு.

அடங்காமை தோன்றவே '*நடுவு நிலைமை*' அகலும்; அஃதொரு நிறையிழப்பு. நடுவு நிலைமை அகலவே '**இன்னாச்சொல்**' கூறவேண்டியிருக்கும்; அஃதோர் அறக்கேடு; நிறையிழப்பு.

இன்னாச்சொல் கூறிய பின்னும் எழுச்சியுணர்வு அடங்காமல், '*இன்னா செய்ய*' வேண்டியிருக்கும். இதுவும் பெரியதொரு நிறையிழப்பு; அறக்கேடு.

இன்னா செய்தல் பின்பு '*தீவினையாக*' வளரும். இஃதொரு நிறையிழப்பு.

அத்தீவினையின் எதிர்த்தாக்கத்திலிருந்து, தம்மைக் காத்துக் கொள்ள

'வாய்மை'யை இழந்து, பொய்கூற வேண்டிவரும்.

அத்தீவினை செய்தலும், வாய்மையிழப்பும் சேர்ந்து பெருகி வளர்ந்து, **'பகையுணர்வு'** தோன்றிக் 'கொலை' வரை கொண்டு செலுத்தும்.

அதன்பின், வாழ்வே சிறப்பிழந்து, முட்டுப்பெற்று, உயிரிழப்பு நேரினும் நேரும்.

- இவ்வாறு, கீழ்மையர் சொல்லும் இழிசொற்களையும் தீமைச் செயல்களையும், பொறுத்துக் கொள்ளாவிடில், அது, படிப்படியே, தாம் முன் கொண்டிருந்த நிறையுடைமைகளை யெல்லாம் ஒவ்வொன்றாகக் கையிழக்கச் செய்து, உயிர்க்கிறுதி தந்து விடுமாகலின், அனைத்து அறவுணர்வுகளுக்கும், சான்றாண்மைக் குணங்களுக்கும் அடிப்படையாகிய, பொறையுடைமையைப் போற்றியொழுகச் சொன்னார் என்க.

'பொறையுடைமை' நீங்கின் வெகுளி (சினம்) தலையெடுப்பது நிறையிழப்புகளைத் தரும் என்பதை, 'நீங்கான் வெகுளி நிறையிலன்' (864) என்பதால் உறுதிப்படுத்தினார், என்க.

- **'போற்றி யொழுகப்படும்'** என்பதில் உள்ள 'படும்' என்னும் சொல், வேண்டும் என்று பொருள்தரும் துணைவினை என்பார், பாவாணர்.

3. இஃது, அனைத்து அறக்கூறுகளினும் 'பொறையுடைமை'யே தலையாயது, அடிப்படையானது என்று எடுத்துக்கூறி, அதன் இன்றியமையாமையை முடிவாக வலியுறுத்தியதால், முன்னைய மூன்றுக்கும் இறுதியாக வைக்கப்பெற்ற தென்க.

**கருரு. ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்**
**பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. - 155**

**பொருள் கோள் முறை :**

**ஒறுத்தாரை ஒன்றாக வையாரே;**
**பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து வைப்பர்.**

**பொழிப்புரை :** ஒன்றுமறியாப் பேதையர் கூறுகின்ற கடுஞ்சொற்களையும், செய்யும் தீமைகளையும் பொறுத்துக் கொள்ளாமல், வெகுண்டெழுந்து அவர்களைத் தண்டித்தவர்களை உலகத்தார் ஒரு பொருட்டாக மதியார். ஆனால், அவர்களின் அறியாமையை எண்ணி, அவற்றைப் பொறுத்துக் கொண்டவர்களை உலகத்தார் தம் உள்ளத்தில் வைத்துப் பெருமை நினைந்து போற்றிப் புகழ்ந்து கொண்டிருப்பர்.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. ***ஒறுத்தாரை ஒன்றாக வையாரே*** - ஒன்றுமறியாப் பேதையர் கூறுகின்ற கடுஞ்சொற்களையும், செய்யும் தீமைகளையும் பொறுத்துக் கொள்ளாமல், வெகுண்டெழுந்து அவர்களைத் தண்டித்தவர்களை உலகத்தார் ஒரு பொருட்டாக மதியார்.

***ஒறுத்தாரை*** - தண்டித்தவர்களை.

- தண்டிப்பதற்குரிய காரணங்களும், தண்டிக்கப்படுபவர்களும் வருவித்துக் கூறப்பெற்றன.

***ஒன்றாக*** - ஒரு பொருட்டாக.

***வையார்*** - மதியார்.

- உலகத்தார் என்பது வருவிக்கப்பட்டது.

- வைத்தல் - மதித்துப் போற்றுதல்.

- 'ஏ'காரம் தேற்றம். உறுதிப்பொருள் தந்தது.

2. **பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து** - ஆனால் அவர்களின் அறியாமையை எண்ணி அவற்றைப் பொறுத்துக்கொண்டவர்களை உலகத்தார் தம் உள்ளத்தில் வைத்துப் பெருமை நினைந்து, போற்றிப் புகழ்ந்துகொண்டிருப்பர்.

**பொறுத்தாரை** - அத் தீமைகள் செய்தவர்களுக்குத் திருப்பித் தீமைகள் செய்யாமலோ, அவர்களைத் தண்டியாமலோ பொறுத்துக் கொண்டவர்களை.

**பொன்போல் பொதிந்து** - பொன்னைப் பேழைக்குள் இட்டுக் காத்து வைப்பதைப் போல். 'பொன்' என்றும் எவ்விடத்தும் மதிக்கப் பெறுவதால், அதைப் போல் என்றார்.

**வைப்பர்** - உலகத்தவர் நினைந்து மதித்துப் போற்றிப் புகழ்ந்து கொண்டிருப்பர்.

- உள்ளத்தில் வைத்துக் காத்து.

**பொதிதல்** - தன்னுள் அடக்கி வைத்துப் பேணுதல்.

> **'பொன் பொதிந்தன்ன'** - **- நற் : 26 : 8.**
>
> **'ஆர்கலி வானம் நீர்பொதிந்து இயங்க'** **- நற் : 364 : 3.**

(மேகம் நீரைத் தன்னுள் அடக்கி வைத்து)

> **'மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகை**
> **இரும்பனம் பசுங்குடைப் பலவுடன் பொதிந்து'** **குறுந் : 168 : 1 -2**

(மழைக் காலத்து மலர்ந்த பிச்சிப் பூ மொட்டுகளை நீர் தெளித்து

பனையோலையில் பொதிந்துவைத்து)

**'அலங்கு வெயிற் பொதிந்த தாமரை**

**உள்ளகத் தன்ன'** **- குறுந் : 376 : 56.**

(அசையும் வெயிற் கதிரை வாங்கிய தாமரை அதைத்தன் இதழ்களுக்குள்ளே வைத்துப் பொதிந்து கொண்டது போல்)

**'அரிபெய்து பொதிந்த தெரிசிலம்பு'** **- அகம் : 321 : 15.**

**'இருள்கழி நெய்தல் இதழ்பொதிந்து'** **- கலி : 145 : 39.**

**'தொடையமை பன்மலர்த்தோடு புனைந்து'** **- அகம் : 335 : 13.**

**'மிக்க கனம் பொதிந்தநூல்'** **- நாலடி : 341.**

(கனம் - அறம்)

- ஊத மக்கள் நலம் கருதி உழைத்த ஏசு பெருமான், தம்மைக் காட்டிக் கொடுத்துக் குறுக்கத்தில் அறையும் கொடுந் தண்டனை பெற்றுத் தந்த ஊதாசு என்னும் தம் உழையனை (சீடனை), அவன் தனக்குச் செய்த கொடுமையைப் பொறுத்து, மன்னிக்குமாறு இறைவனிடம் முறையிட்ட வேண்டுகைக்காக, அவரை இன்றுவரை மக்கள் பேணிக் கொள்வது இங்குக் கருதத்தக்கது.

3. இஃது, ஒறுத்தார்க்கும் பொறுத்தார்க்கும் உள்ள இழிவு சிறப்புகளைக் கூறியதால் முன்னதன் பின்னர் வைக்கப்பெற்றது.

## கருசு .ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ். - 156

**பொருள் கோள் முறை :** இயல்பு.

**பொழிப்புரை :** பிறன் தமக்குச் செய்த தீமையைப் பொறுத்துக் கொள்ளாது அவனைத் தண்டித்தவர்க்குத் தாம் தண்டித்த அவ்வொரு நாள் மட்டுமே இன்பமாய் இருக்கலாம். ஆனால், அத்தீமையைப் பொறுத்துக் கொண்டவர்க்கு இவ்வுலகம் அழியும் அளவும் புகழ் இருந்து கொண்டிருக்கும்.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. **ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்** - பிறன் தமக்குச் செய்த தீமையைப் பொறுத்துக் கொள்ளாது, அவனைத் தண்டித்தவர்க்குத் தாம் தண்டித்த அவ்வொரு நாள் மட்டுமே இன்பமாய் இருக்கலாம்.

**ஒறுத்தார்க்கு** - தண்டித்தவர்க்கு அதிகாரத் தலைப்பு நோக்கியும் முன்னைய குறள்கள் நோக்கியும், தண்டித்த சூழல் வருவித்துக் கூறப்பெற்றது.

**ஒருநாளை இன்பம்** - தண்டித்த அவ்வொரு நாள் மட்டுமே இன்பமாய் இருக்கலாம்.

**2. பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ்** - ஆனால், அத் தீமையைப் பொறுத்துக் கொண்டவர்க்கு இவ்வுலகம் அழியும் அளவும் புகழ் இருந்து கொண்டிருக்கும்.

**பொறுத்தார்க்கு** - அத்தீமையைப் பொறுத்துக் கொண்டவர்க்கு.

**பொன்றும் துணையும்** - அழியும் வரையும். இறுதியில் அழியப் பெறும் பொருள் 'உலகம்' ஆதலின் அது வருவித்து உரைக்கப் பெற்றது.

- பொன்றுதல் - அழிதல்.

- இங்கு, இன்றைய அறிவியலார் கூற்றுப்படி 'உலகம் என்றேனும் ஒருநாள் அழிவுறும்' என்னும் கருத்தை, அறிவியல் முளைவிடாத அன்றே ஆசிரியர் தம் மெய்யறிவான் அறிந்து கூறியது, வியந்து போற்றற் குரியது.

- 'பொன்றும் துணையும்' என்பதற்கு உலகம் உள்ளளவும் என்பதற்குத் 'தாம் சாமளவும்' என்று மணக்குடவரும், 'உலகம் உள்ள அளவும்' என்று காலிங்கரும் பிறர் சிலரும் பொருள் கூறியது சொற்பொருத்தம் இன்றாம்.

**புகழ்** - புகழ் இருந்து கொண்டிருக்கும்

- இங்கு 'ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால், பொன்றாது நிற்பதொன்றில்' (233) என்று ஆசிரியர் 'புகழ்' அதிகாரத்தில் கூறுவது கவனிக்கத்தக்கது.

இனி, பொறுத்தார்க்குப் பொன்றுந்துணையும் புகழ் என்னும் வாய்மையுரைக்கு எடுத்துக்காட்டாக இரண்டொரு வரலாற்று நிகழ்வுகளை இங்குக் காண்க.

இசுலாம் நெறியை உருவாக்கியவரும், வாழ்வு முழுவதும் பிறர்க்கு எடுத்துக்காட்டாய் விளங்கிய இறைச் சான்றோரும் ஆகிய முகமதுநபி பெருமகனார் தாம் வாழ்ந்த மதீனா நகரத்தில், நாள்தோறும் ஒரு குறிப்பிட்ட சாலையில் நடந்துசெல்லும் பொழுதெல்லாம், அவர்மேல் குப்பைகளையும் கூளங்களையும் வாரிக் கொட்டியும், இழிவான சொற்களால் ஏசிப் பேசியும் மகிழ்ந்து வந்தவளும் அவர் கொள்கைகளைப் பிடிக்காதவளுமான முதுமகள் ஒருத்தி, சில நாள்கள் அவ்வாறு செய்யமலிருப்பதைக் கண்டு, துணுக்குற்று, அவளைப் பற்றி அக்கம் பக்கத்துள்ளாரை உசாவிய பொழுது, அவள் நோய்வாய்ப் பட்டுப் படுத்த படுக்கையாயிருப்பதை யறிந்து, உடனே அவள் இல்லம்

சென்று, இரக்கத்துடனும் அன்புடனும் கனிவுடனும் அவள் படுக்கையை நெருங்கி, அவளை நோக்கி, நலம் கேட்டு, அவள் நிலைக்கு வருந்தியதும், அவள் அவரின் உயர்ந்த தன்மைக்கு நெகிழ்ந்து, மனந்திருந்தி, தான் அவர்க்கிழைத்த பிழைக்கு வருந்தி, நபிகள் நாயகத்திடம் தன்னைப் பொறுத்துக் கொள்ளும்படி கேட்டதும், அவ்வாறே அவர் அம் முதுமகளைக் குற்றம் கூறாது தேற்றி, அவள் நோய்நீங்க, இறைவனை இறைஞ்சித் தொழுததும்;

- பின்னொருகால், அப் பெருமகனார், அரபு நாட்டின் அரசராய் இருந்தபொழுது, ஒருமுறை, போரில் சிறைப்பிடித்து வரப்பெற்ற நூற்றுக்கணக்கான எதிரிப்படை வீரர்களைத் தங்கட்கு அடிமைகளாக வைத்துக்கொள்ள, நபி பெருமகனாரிடம், அவர் தம் படைவீரர்கள் கேட்க, அவர்களுக்கு அமைவு கூறி, அவர்கள் அனைவரையும் மன்னித்து, விடுதலை செய்யச் சொன்னதும், அந்நிகழ்ச்சியை அவர் அருகிருந்து பார்த்த அவரின் அருமை மகள் பாத்திமா அவர்கள், 'அப் படைவீரர்களுள் ஒருவரைத் தம் இல்லத்திற்குப் பணிசெய்ய அனுப்பித்தரும்படி கேட்டபொழுதும், பெருமகனார், அதை மறுத்துத் தம் அன்பு மகளிடம் அப்பணிகளைத் தாமே செய்துகொள்ளும்படி அமைவு செய்து பணித்ததும்;

- ஆகிய நிகழ்ச்சிகள், வரலாற்றில் இன்றுகாறும் நின்று பொலிவதையும் இக்குறளொடு பொருத்தியுணர்ந்து மகிழ்க.

-இவற்றுடன், இங்குக் கருதத்தக்க இன்னொரு வரலாற்று நிகழ்வும் காண்க.

- ஒருநாளைக்கு ஒருமுறை ஒருவீட்டிலேயே சென்று உணவு கேட்டுக் கிடைத்தால் உண்டும், கிடைக்காவிட்டால் உண்ணாமலும் நோன்பு கடைப்பிடித்து வந்த கௌதம புத்தர், ஒருநாள், ஒருவீட்டின் முன் உணவு கேட்டு நிற்க, சிறிது நேரத்தில் அவ்வீட்டுக்காரன் வெளியே வந்து, இவரை ஏறஇறங்கப் பார்த்து, இவர் உடல் தோற்றத்தையும், துறவுக் கோலத்தையும் கண்டு இகழ்ந்து, 'உறுப்புகள் குறைவில்லாத உடலை வைத்துக்கொண்டு, எங்கேனும் சென்று, உழைத்துப் பிழைக்காமல், இரந்துண்ண வந்து விட்டாயே, உனக்கு வெட்கமாயில்லையா' என்று கேட்டு இகழ்ந்தும், வேறு பலவாறு சுடுசொற்களால் இழிவாகவும் நெடுநேரம் ஏசிக் கொண்டிருக்க, அவற்றையெல்லாம் அமைதியுடனும், புன்னகை தவழும் முகத்துடனும் கேட்டுக் கொண்டிருந்த புத்தர் பெருமான், அவன் ஏசிமுடித்து ஓய்ந்ததும், 'அப்பா, நீ எனக்கு ஏதாவது உணவு கொண்டுவந்து கொடுத்தால், நான் அதை ஏற்றுக் கொள்ள மறுத்தால் என்ன செய்வாய்' என்று கேட்க,

'நான் உனக்கு எந்த உணவும் தரமாட்டேன்; அவ்வாறு கொடுத்தாலும், நீ அதை ஏற்றுக் கொள்ள மறுத்தால், திருப்பி நானே எடுத்துக் கொண்டு போவேன்' என்று எள்ளலாய்க் கூற,

'அப்படியானால், நீ இதுவரை கொட்டிய சொற்களை நான் எடுத்துக் கொள்ளவில்லை; அவற்றை நீயே வைத்துக் கொள்' என்று அமைதியாய்க் கூறித் திரும்பி, அன்று தன் கடமை முடிந்துவிட்டதால் வேறுவீடு போய் இரவாமல், பட்டினியாய் இருந்த அப்பெருமகனாரின் தகைமையறிந்து தான் உலகம் இன்றளவும் அவரைப் போற்றுதல் செய்வதும், இவ்விடம் கருதி உணரத்தக்கது.

3. இது, முன்னைய குறளில் கூறப்பெற்ற, 'பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து வைப்பர்' என்னும் கருத்துக்கு மேல் விளக்கமாக அமைந்ததால், அதன் பின்னர் வைக்கப்பெற்றது.

## கருஎ. திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
## அறனல்ல செய்யாமை நன்று. - 157

**பொருள்கோள் முறை : இயல்பு.**

**பொழிப்புரை** : தான்தாங்கிக் கொள்ளும் திறன் அல்லாத தீமைகளைத் தனக்குப் பிறர் செய்யினும், அதன் பொருட்டு அவர்க்கு வரவிருக்கும் துன்பத்திற்காக மனம் வருந்தி, அவர்க்குத் தான் மேலும் அறமல்லாதவற்றைச் செய்யாமலிருப்பது நல்லது.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. **திறனல்ல தன்பிறர் செய்யினும்** - தான்தாங்கிக் கொள்ளும் திறன் அல்லாத தீமைகளைத் தனக்குப் பிறர் செய்யினும்.

- **திறன் அல்ல** - தான் தாங்கிக் கொள்ளும் திறன் அல்லாத தீமைகள்.

- பொறுத்துக் கொள்ள இயலாத நிலையில் செய்யப் படுவதால் தீமைகள் என்னும் சொல் வருவிக்கப்பெற்றது.

- **தன்பிறர்** - தனக்குப் பிறர்.

- **செய்யினும்** - செய்தாலும்

- இங்கு, திறனல்ல என்பதற்கு உரையாசிரியர் அனைவரும், 'செய்யத்தகாதவற்றை' (பரிமேலழகர்) 'தகுதியில்லாதவற்றை' (மணக்குடவர்) 'புகழல்லாத காரியத்தை' (பரிதியார்) 'செய்யத் தகாத

கொடியவற்றை' (பாவாணர்) என்றே பலவாறு பொருள் கொள்ளுவர்.

- ஆனால் இப்பொருள் அந்தச் சொல்லுக்கு எந்த வகையானும் பொருந்தாது, அஃதொரு கருது பொருளே.

- எனவே, அதற்குரிய சரியான பொருள், 'தான் தாங்கிக் கொள்ளும் திறனல்லாதவற்றை' என்பதுதான். இதுவே அனைத்து வகையானும் பொருந்து பொருள் என்பதைச் சொல்லியலும் சொற்பொருளியலும், மனவியலும் அறிந்தவர் உணர்வர் என்க.

- தான் தாங்கிக்கொள்ள இயலாதவற்றை ஒருவன் தனக்குச் செய்யினும், அதைத் தாங்கிக்கொள்வதே பொறையுடைமையின் சிறப்பு ஆகும் என்க.

**2. நோ நொந்து** - அவ்வாறு செய்ததனால், அவர்க்கு நேரவிருக்கும் துன்பத்திற்காக மனம் வருந்தி,

- இங்கு 'நோ நொந்து' என்பதற்கும் பரிமேலழகரும், பாவாணரும், 'உம்மை எரிவாய் நிரயத்து (நரகத்தில்) வீழ்வர்கொல் என்று பரிந்து' - என்றே, நாலடியார் 58-ஆம் பாடலைக் காட்டி விளக்கம் தருதல் உலகியற்குப் புறம்பான வைதிகக் கூற்றாம்.

- இங்குச் செய்யும் குற்றத்திற்கு, ஒருவன் நிரயத்திற்கு (நரகத்திற்குப் போய்த் தண்டனை பெறுவதென்றல் பொருந்தாத கற்பனைப் புளுகே.

- மற்று அஃதாயின், அனைத்துக் குற்றங்கட்குமே, இங்குத் தண்டனை வழங்க அரசும், அறமன்றும் இருப்பதில் பொருளில்லையன்றோ?

- அறத்தின் பயன் இறப்பிற்குப் பின்தான் கிடைக்கும் என்பது, அறிவியலுக்கும், உலகியலுக்கும் பொருந்துமாறில்லை. மற்று அறிவியலுக்கும் மெய்யறிவியலுக்குங்கூட ஏற்காது.

- இத்தகைய கற்பனைக் கோட்பாட்டாலேயே, அல்லவை பெருகியும் நல்லவை குறுகியும் வருகின்றன, என்க.

- இனி, 'நோ நொந்து' என்பதற்கு, மணக்குடவர், உலகியலுக்கும், மனவியலுக்கும் ஒருவாறு பொருந்தும் வகையில்,

'அவற்றை (அத் தீமைகளை)த் தானும் செய்தால் அவர்க்கு உளதாம் நோவுக்கு நொந்து' என்று பொருள் தருவர்.

இப்பொருளும் ஒருவகையில் சிறந்ததேயாம்.

- ஆனால், இதனைவிட, அவ்வாறு தீமை செய்தவன், என்றேனும் ஒருநாள், அல்லது எவ்விடத்தேனும் ஓரிடத்து, அக்குற்றத்திற்கென அரசாலும், அறமன்றத்தாலும், கண்டுகொள்ளப் பெற்றுப் பெறவிருக்கும்

தண்டனைக்காக வருந்தப்போகும் உறுதியால், அதற்காகத் 'தான் உளம் வருந்தி' என்றலே உலகியலுக்கும், அறவியலுக்கும் மிகப் பொருந்துவதாம் என்க.

3. **அறனல்ல செய்யாமை நன்று** - அவர்க்குத் தான் மேலும் அறமல்லாதவற்றைச் செய்யாமலிருப்பது நல்லது.

**அறனல்ல** - அறச்செயல் அல்லாதன. அவை, அவனைப் போலவே இழித்தல், பழித்தல் முதலிய இன்னா கூறுதல், அவனைப் பற்றிப் பிறரிடம் புறங்கூறுதல், அவனுக்கு நேரிடையாகவோ, மறைமுகமாகவோ தீமை செய்தல், அவனுக்குப் பிறர் செய்ய விரும்பும் நலன்களைத் தடுத்தல், அவன் வாழ்க்கைக்கு இடையூறு செய்தல், அவன் குடும்பத்தார்க்குத் துயர் விளைவித்தல் முதலிய செயல்கள்.

**செய்யாமை** - இவற்றைச் செய்யாதிருத்தல்.

**நன்று** - நல்லது.

- இவற்றைச் செய்யுங்கால், மேலும் பகை வளர்ந்து, அவனும் தொடர்ந்து துயர்தந்து கொண்டிருக்கவே செய்வானல்லது அடங்கி நில்லான். அந்நிலை நமக்கு மேலும் மேலும் துயரையும் தீங்கையும் தந்து கொண்டேயிருக்குமாகையால் அவற்றைத் தவிர்க்கக் கூறினார் என்க.

4. இது, உலகம் புகழ்தல் மட்டுமன்று. தமக்கும் உலகியலில் நன்மையே விளையும் என்றலால் முன்னதன் பின்னர் இது வைக்கப்பெற்றது.

## கருஅ. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம் தகுதியான் வென்று விடல். - 158

**பொருள் கோள் முறை : இயல்பு.**

**பொழிப்புரை :** தமக்குற்ற உடல்வலிமை, மனவலிமை, ஆள்வலிமை, செல்வ வலிமை, சாய்கால் வலிமை, அதிகார வலிமை முதலியவற்றின் மிகுதிப்பாட்டால், இயல்பின் மிக்க தீமைகளைச் செய்தவர்களைத் தாமும் அங்ஙனே செய்து தோல்வியுறாமல், தம் பொறையுடைமையால் அமைந்திருந்து வெற்றிகொள்வதே தக்கது.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. **மிகுதியான் மிக்கவை செய்தாரை** - தமக்குற்ற உடல்வலிமை, மனவலிமை, ஆள்வலிமை, செல்வ வலிமை, சாய்கால் வலிமை, அதிகார வலிமை

முதலியவற்றின் மிகுதிப்பாட்டால், இயல்பின் மிக்க தீமைகளைச் செய்தவர்களை.

**மிகுதியான்** - மிகுதியான உடல் வலிமை, மனவலிமை, ஆள்வலிமை, செல்வ வலிமை, சாய்கால் வலிமை, அதிகார வலிமை ஆகியவற்றால்.

- 'மிகுதியான்' என்பதற்கு உரையாசிரியர் பலரும் 'மனச்செருக்கால்' என்று மட்டுமே பொருள் தந்துள்ளனர். அது முழுப் பொருளன்று. என்னை? மனச்செருக்கு ஒன்றால் மட்டிலுமே ஒருவன் பிறர்க்குத் தீமை செய்து விடுவதில்லை. அம் மனச்செருக்கிற்குங்கூட அவனிடம் பின்புலமாக உள்ள உடல்வலிமை, ஆள்வலிமை, செல்வவலிமை, சாய்கால் (செல்வாக்கு) வலிமை, அதிகார வலிமை முதலியவை துணையாக நிற்பது உலகியலால் தெரியக்கூடுவது.

- எனவே, அவற்றின் மிகுதிப்பாடுகளையும் சேர்த்தே பொருள் கூறுதல் வேண்டும். மற்றபடி, 'மிகுதி' என்னும் ஒரு சொல்லிற்கே 'மனச்செருக்கு' என்னும் பொருள் வந்துவிடாது.

**மிக்கவை** - இயல்பின் மிக்க தீமை. இயல்புக்கு மாறாகத் தீயவற்றைச் செய்தல்.

ஏதாவதொரு தவறுநேர்ந்தாலும் கடிந்த சொல்ல வேண்டியதற்கு, இழிவாக ஏசுதலும், அறைதல், அடித்தல், உறுப்புகள் ஊறுபடத் தாக்குதல், பொருள் பறித்தல் - முதலிய தீயவை செய்தலும் மிக்கவை செய்தலின்பாற்படும்.

- மற்றபடி தவறு ஒன்று நேராதவிடத்து ஒருவரும் தீயவை பேசுதலோ, செய்தலோ நிகழ்த்தார். எனவே, இயல்பின் மிக்க தீயவை செய்தலே 'மிக்கவை' என்க.

- முன்னைச் சொல் போலவே, 'மிக்கவை' என்னும் இச்சொல்லுக்கும் உரையாசிரியர் நேரிடையாக 'தீயவை' என்று பொருள் தருவது மிகைப் பொருளே என்க.

**செய்தாரை** - செய்தவர்களை.

**2. தாம் தம் தகுதியான் வென்றுவிடல்** - தாமும் அங்ஙனே செய்து தோல்வியுறாமல், தம் பொறையுடைமையால் அமைந்திருந்து வெற்றி கொள்வதே தக்கது.

**தகுதி** - அமைவு, அமைந்திருத்தல்.

தக்கு நிற்றல் தகுதி.

**தகுதி** - அறிவு, பண்பு, தன்மை, ஒழுக்கம், நடுவுநிலை (111) முதலியவாறு இடம் கருதிப் பல பொருள்படும்.

- இவ்விடத்து அமைதிப்பண்பு என நின்று பொறையுடைமையைக் குறித்தது.

- மற்று, தீமை செய்தார் தமக்குற்ற மிகுதித் தன்மையால் செய்தாராகையால் தாமும் அவருக் கெதிராக, அவரைப் போலவே வெகுண்டெழுந்து ஏதாவது செய்தால், தோல்வியுறுவது உறுதியாகலின், அது செய்யாது பொறையுடைமையின் அமைந்திருந்து அவரை வெற்றிகொள்க என்றார் என்க.

- அமைந்திருந்து வெற்றிகொள்ளுதல் என்பது, அவர் மேலும் மேலும் தமக்குத் தீங்கு செய்யாமல் அடங்கி விடுவதால் அது தமக்கு வெற்றிகொண்டது போலாம் என்க. என்னை?

- தீமை செய்ய முடிந்த அவரை, அவ்வாறு செய்யாமல் தணிப்பது வெற்றி என்க.

- இவ்விடத்து,

'தாமும் அவர்கண் தீயவற்றைச் செய்து தோலாது, பொறையான் அவரின் மேம்பட்டு வெல்க என்பதாம்'

- என்று பரிமேலழகரும்,

'சரிக்குச் சரிதீங்கு செய்யும் இழுக்க வெற்றி ஒழுக்கத் தோல்வி யென்றும், தீயவை செய்தாரைப் பொறுத்துக்கொள்ளும் ஒழுக்க வெற்றியே உண்மையான வெற்றி யென்றும் உணர்த்தற்குத் 'தகுதியான் வென்றுவிடல் என்றார்'

- என்று பாவாணரும் விளக்கங்கள் தருவர்.

3. இது, வலிமை மிகுதியினாலே தீங்கு செய்தாரையும் தம் பொறையுடைமை வலிமையினாலே வென்றுவிடல் சாலும் என்று முன்னையதை யொட்டிக் கூறியதால் அதன் பின்னர் வைக்கப்பெற்றதென்க.

**கருகூ. துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்**
**இன்னாச்சொல் நோற்கிற் பவர். - 159**

**பொருள்கோள் முறை :**

**இறந்தார்வாய் இன்னாச்சொல் நோற்கிற்பவர்,**
**துறந்தாரின் தூய்மை உடையர்.**

**பொழிப்புரை** : வாழ்வு நெறியின் எல்லை மீறிக் கீழ்மையுற்றவரின் வாயினின்று வெளிவரும் கொடிய சொற்களைப் பொறுத்துக் கொள்பவர், இல்லறத்தைத் துறந்து தவம் மேற்கொண்டொழுகும் துறவியரை விடவும், மனம், மொழி, மெய்களால் தூய்மையுற்றவர் ஆவர்.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. **இறந்தார் வாய் இன்னாச் சொல் நோற்கிற்பவர்** - வாழ்வு நெறியின் எல்லை மீறிக் கீழ்மையுற்றவரின் வாயினின்று வெளிவரும் கொடிய சொற்களைப் பொறுத்துக் கொள்பவர்.

**இறந்தார்** - வாழ்வு நெறியின் எல்லை மீறிக் கீழ்மையுற்றவர்.

**வாய் இன்னாச் சொல்** - வாயினின்று வெளிவரும் கொடிய சொற்களை,

- 'வாய் இன்னாச்சொல்' என்றது, அவர் வாயினின்று வேறு இனிய சொற்களே வராமை குறித்தது.

**நோற்கிற்பவர்** - நோன்றுகொள்ளுகிறவர்; பொறுத்துக் கொள்பவர்.

2. **துறந்தாரின் தூய்மை உடையர்** - இல்லறத்தைத் துறந்து தவம் மேற்கொண்டொழுகும் துறவியரை விடவும், மனம், மொழி, மெய்களால் தூய்மை யுற்றவர் ஆவர்.

**துறந்தார்** - இல்லறத்தைத் துறந்தவர். இங்குத் துறவைவிட அவர் நோற்கும் தவமே முன்வைத்துச் சொல்லப் பெறுவதால், 'தவம் மேற்கொண்டொழுகும் துறவியரை விடவும்' எனக் கூறவேண்டியதாயிற்று.

**தூய்மை உடையர்** - மனம், மொழி, மெய்களால் தூய்மையுற்றவர்.

- மனத்தூய்மை - பல்வேறு வகையான உலகியல் நிகழ்வுகளுக்கிடையில், தம் மனத்தை இல்லறத்தின்கண் ஊன்றி, அவ்வில்லறத்தின் அகப்புறச் சுமைகளையும் நோன்று (பொறுத்து), அவ்வில்லறத்தாரையும் அறத்துவழி ஒழுகச் செய்து, தாமும் தம் அறவழியினின்று இழுக்காமல் நிலை நிற்பது, மனத்தைத் தூய்மையுறச் செய்வதால் மனத் தூய்மை குறிக்கப்பெற்றது. என்னை?

'மனந்தூயார்க்கு எச்சம் நன்றாகும்' என்றாராகலின், அத்துடன்,

> **'ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை**
> **நோற்பாரின் நோன்மை உடைத்து'** **48**

- என்று முன்னரே கூறியுள்ளதும் கவனிக்கத் தக்கது.

- **மொழித்தூய்மை** - மனம் தூய்மையுறுவதால், மொழியும் தூய்மையுறும் என்றவாறு.

- இறந்தார் வாய் இன்னாச்சொல் போல் தானும் மொழியாது நிற்றலால் மொழித்தூய்மையும் பெற்றார் என்க. என்னை?

**'மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு**
**தானஞ்செய் வாரின் தலை'** - 295

என்பார் ஆகலின்,

இனி, அதன்மேலும்,

**'உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்**
**இன்னாச்சொல் நோற்பாரின் பின்'** - 160

என்றும் அடுத்து மொழிவார்.

- மெய்த்தூய்மை - இனி, இல்லறத்தாரின் உடம்பு, துறவறத்தாரின் உடம்பைவிடத் தூய்மை பெற்றது. எவ்வாறெனில், துறவியர் உடம்பு அவரின் நன்மைக்கு மட்டுமே உழைப்பது.

இல்லறத்தாரின் உடம்பு பலருடைய நன்மைக் கெனவும் உழைப்பது. இல்லறத்துள்ளார் அனைவர்க்கும் உணவு தரும் கொள்கையான், அங்குள்ளார் அனைவரும் பிறர்க்கென உடல் உழைப்புத் தரவேண்டியுள்ளது. பொது நலம் கருதுதலின் தனிநலம் கருதும் உடலைவிட, அது தூய்மைப் பயன் கொண்டது என்க. என்னை?

**'ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை**
**மாற்றுவார் ஆற்றலின் பின்.'** - 225

- என்பாராகலின்.

- எனவே, துறந்தாரினும், இறந்தார்வாய் இன்னாச்சொல் நோற்கிற்பவரின் தூய்மை புலப்படுத்தப்பெற்றது என்க.

- இவ்விடத்துப் பரிதியார் கூறும் ஒரு கருத்து நினைதற்குரியது. அது, 'துறந்தார் பெரியோரானாலும் தவத்தின் பெருமையினாலே ஒருவரைச் சாபமிடுவர்; இவன் இல்லறத்திலே இருந்தும், தனக்கு ஒருவர் செய்த குற்றம் பொறுப்பவன் ஆதலின் பெரியவன் என்றவாறு'.

3. இஃது, அதிகாரக் கருத்தை முடித்துக்கூறும் தன்மையில், துறவியரைவிட இல்லறத்தார் இன்னாச்சொல் நோற்பதால் பெருமையுடையவர் என்னும் முதற்கருத்தைக் கூறியதாயிற்று.

## கசுO. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும் இன்னாச்சொல் நோற்பாரின் பின். - 160

**பொருள் கோள் முறை** : இயல்பு.

**பொழிப்புரை** : உண்ணாமை மேற்கொண்டு பசியைப் பொறுத்துத் தவம் நோற்கும் துறவியர் பெரியவர்தாம். எனினும் தாழ்ந்தவர் சொல்லும் இன்னாத கொடுஞ் சொற்களைப் பொறுத்துக் கொள்பவரினும் அவர் பிற்பட்டவராகவே மதிக்கப் பெறுவர்.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. **உண்ணாது நோற்பார் பெரியர்** - உண்ணாமை மேற்கொண்டு பசியைப் பொறுத்துத் தவம் நோற்கும் துறவியர் பெரியவர்தாம்.

**உண்ணாது நோற்பார்**, தமக்குறும் உடற்பசியைப் பொறுத்துக் கொண்டு தவம் மேற்கொள்வதால் பிறரினும் பெரியராக மதிக்கப் பெறுவர்.

உணவு உடலுக்கு ஊற்றம் தருவது. உண்ணாதிருப்பின் உடலூற்றம் படிப்படியாய்க் குறைந்துபோம். உடல் நலிவுறும். அந்நிலையில் தவம் மேற்கொள்வது மிகவும் கடினமேயாம்.

உடல் ஊற்றமிழப்பதால் உடற்புலன்கள் எழுச்சிகுன்றி ஒடுங்கியிருக்கும். உடற்புலன்கள் எழுச்சியின்றிப் போகுமாறு இருத்தலால், சில நாள்களில் பசியும் இயல்பாகக் குன்றிப் போய்விடும். பிறகு பசியடக்க வேண்டியில்லாமலும் ஆகிவிடும்.

இம்முயற்சிகள் அனைத்தும் செயற்கையாகத் தம் உயிர் நலம் கருதி அவர் செய்வித்துக் கொள்வது. மற்றபடி இம்முயற்சிகளாலும் அவர் தவ மேற்கொள்வதாலும் பிறர்க்கு ஏதும் பயனில்லாது போதல் வெளிப்படை.

ஆயினும், அம்முயற்சி, செய்வதற்கு அரிதாகலின் அவர் பெரியர் என்று கருதப்பெறுவர்.

'செயற்கரிய செய்வார் பெரியர்' (26) என்றாராகலின்.

2. **பிறர் சொல்லும் இன்னாச்சொல் நோற்பாரின் பின்** - தாழ்ந்தவர் சொல்லும் இன்னாத கொடுஞ்சொற்களைப் பொறுத்துக் கொள்பவரினும் அத்துறவியர் பிற்பட்டவராகவே மதிக்கப் பெறுவர்.

**பிறர்சொல்லும் இன்னாச் சொல்** - பிறர் என்றது பேதையரும், தாழ்ந்தவரும், கீழ்மையரும்.

அவர் சொல்கின்ற தீய கொடுஞ்சொற்கள் இன்னாச்சொல்.

இனிய அல்லவையும் இனிய பயவாதவையும் இன்னாச் சொற்களாம்.

அவை செவிவழிச் சென்று மனத்தையும் அறிவையும் எழுச்சி கொள்ளச் செய்வன. மானவுணர்வைத் தூண்டி வெகுளியை - சினத்தை உருவாக்குவன.

நோற்பாரின் பின் - எனவே அச் சொற்களை மனவுணர்வாலும் அறிவுணர்வாலும் பொறுத்துக் கொள்பவர், பசியை அடக்கிக் கொள்பவரினும் மிக்க ஆற்றலுடையவராதல் வேண்டும்.

இல்லறத்திலிருந்து கொண்டு பொதுமையறம் பேணும் ஒருவர், தாமுற்ற மனவெழுச்சியையும் அறிவெழுச்சியையும் பிறர்க்காக - தம் இல்லறத்துள்ளவர்க்காகவும், தாம் கடைப்பிடித்தொழுகும் பிற பொதுமைநல அற மேம்பாட்டிற்காகவும் - அடக்கிக் கொள்ள வேண்டியவர் ஆகிறார். எனவே அவர் ஆற்றல் மிகவும் வலியதும், பொதுநலம் சான்றதுமாம் என்க.

- மற்று, உண்ணாது நோற்பவர்க்கு உணர்வெழுச்சியில்லை. உணர்வடக்கமே உண்டு. எனவே, அவர் யார் மேலும் சினமோ, கொடுநினைவோ கொள்ள வழியில்லை.

- இவ்வாறு எழுச்சியுணர்வற்ற ஒருவர், தன்னலத்துக்காக அடங்கிக் கிடப்பதே இயல்பு. அவர் அடக்கியது உடற்பசியையே. அஃதாவது வெறும் தசைப்பசியையே. அது மற்ற பொதுமாந்தரைக் காட்டிலும் இவர்க்குப் பெரிதாக இருக்கலாம். அதன்பொருட்டாகவே இவர் பெரியர் என்று மதிக்கவும் பெறலாம்.

- ஆனால், பிறர் கூறும் சொற்கள் மனம், அறிவு, உடல் மூன்றினையுமே எழுச்சி கொள்ளச் செய்வன.. அதனால் உயிர்த் துடிப்பும் குருதிக் கொதிப்புங்கூட உண்டாகக் கூடுவன.

இத்தகு வுணர்வெழுச்சியை ஒருவர், அதுவும் இல்லறம் மேற்கொண்டிருக்கும் ஒருவர், அடக்கிக் கொள்வதென்பது மிகமிகக் கடினமானதாகும். அத்தகு மிகவும் கடினமான தொன்றைச் செய்பவர், அவ்வுண்ணாமை மேற்கொண்டு தவம் மேற்கொள்ளும் துறவியரை விடவும் மிகமிகப் பெரியவரன்றோ? எனவே, அவரின் பின்னர்தாம் இவர் பெருமையும் பெரியவர் என்பதும் ஆகும் என்றார், என்க.

3. இஃது, இவ்வதிகாரப் பொருளின் முற்றமுடிந்த பொருளாகவும், பொறையுடைமை மேற்கொள்ளுவாரின் பெருமையை அனைவரினும் மேம்படுத்திக் கூறுவதாகவும் உள்ளதால் இறுதிக்கண் நிறுத்தப்பெற்ற தென்க.

# அ-2 இல்லறவியல்

## அ-2-13 அழுக்காறாமை -17

### அதிகார முன்னுரை

'அழுக்காறாமை' என்பது 'அழுக்காறு கொள்ளாமை' என்னும் பொருள் தரும் ஒருசொல். எதிர்மறைத் தொழிற்பெயர்.

அழுக்கறு + ஆ + மை.

'ஆ' எதிர்மறை இடைநிலை.

'மை' பண்புப் பெயரீறு.

(நன்மை, தீமை, வறுமை, குடிமை என்பவற்றில் உள்ளது போல்)

இவ்விரண்டும் சேர்ந்து உடன்பாட்டுவினைச் சொற்களை எதிர்மறைத் தொழிற்பெயர்ச் சொற்களாக மாற்றுகின்றன.

வரல் - வராமை. (எதிர்மறை)

தரல் - தராமை. (எதிர்மறை)

செலல் - செல்லாமை. (எதிர்மறை)

செயல் - செய்யாமை. (எதிர்மறை)

அவைபோல்,

அழுக்கறு + ஆ + மை - அழுக்கறாமை.

'அறாமை' முதல் நீண்டு 'ஆறாமை' என்று ஆகிறது.

வராமை - வாராமை.

தராமை - தாராமை.

- என்பன போல. (பாவாணர். தமிழ் மரபுரை)

அழுக்கறு - பொறாமைப் படுதலைத்தவிர் (ஏவல் முன்னிலை)

அழுக்காறு - பொறாமைப்படுதல் (தொழிற்பெயர்)

அழுக்காறாமை - பொறாமைப்படாதிருத்தல்.

(எதிர்மறைத் தொழிற்பெயர்)

அழுக்காறு - பொறாமை. (பொறு + ஆ + மை)

- பொறுத்துக் கொள்ளுதல் என்னும் பொருள்படும் தன்னுணர்வு ஒழுக்கச் சொல், நாளடைவில் உணர்வின் வளர்ந்து, பிறர் ஆக்கத்தைப் பொறுத்துக் கொள்ளாமையாக வளர்ச்சிபெற்று, அவர் மேற்கொள்ளும் 'பொறாமை' உணர்வைக் குறிப்பதாக நிலைபெற்றது.

மற்றபடி, **அழுக்காறு** என்னும் பொறாமையைக் குறிக்கும் சொல்லாட்சி, திருக்குறள் தவிர வேறு எந்தக் கழகநூல்களிலும் வரவில்லை.

'பொறாமை' என்னும் சொல்கூடப் பொறுத்துக் கொள்ளாமைப் பொருளில்தான் வந்துள்ளதே தவிர, திருக்குறளில் வரும் பொறாமைப்படும் 'அழுக்காறு' என்னும் பொருளில் எந்தக் கழக இலக்கியத்தும் வரவில்லை. தொல்காப்பியத்துள் வரும் 'பொறாமை' (1206-8) என்னும் சொல்லும் 'பொறுத்துக் கொள்ளாமை'ப் பொருளிலேயே வருகிறது.

வெளிப்படையாகச் சொன்னால், பொறாமையுணர்வு தரும் எந்தச் சொல்லும் கழக இலக்கியங்களுள் இல்லை. ஆகையால், ஒரு வேளை இந்த உணர்வுங்கூட ஆரிய வரவால் தோன்றிய உணர்வாக இருக்குமோ என ஐயுற வேண்டியுள்ளது. தமிழியற் பண்பாட்டிற்கு உரியதல்லாத உணர்வுக்குச் சொல் ஏது?

இன்றைய நிலையில் பொறாமையுணர்வைச் சிறுசிறு வேறுபாட்டுடன் குறிக்க, **காழ்ப்பு, வன்மம்** இரண்டு சொற்களும் அகராதிகளுள் குறிக்கப்பெறுகின்றன. ஆனால் அவைகூடப் பொறாமையுணர்வின் மீறிய சொற்களாகவே விளங்குகின்றன.

பொறாமை - envy -பிறர் ஆக்கம் கண்டு பொறாமை.

காழ்ப்பு - grudging - வெறுப்புடன் கூடிய பொறாமை.

வன்மம் - Malice - பழிவாங்கும் பொறாமையுணர்வு.

இந் நூலிலுங்கூட, இவ்வதிகாரத்தில் தவிர, பொறாமையுணர்வைக் குறிக்க வேறு சொற்கள் எங்கும் வரவில்லை.

'பொறுமை' வேறு 'பொறை' வேறு போல,

'பொறுத்துக் கொள்ளாமை' வேறு,

'பொறாமை' வேறு.

பொறுத்துக் கொள்ளாமை - தன்னளவில் நிகழ்வது.

பொறாமை - பிறர் அளவில் நிகழ்வது.

இங்கு 'அழுக்காறு' குறிக்கப்பெறுவது பிறர் ஆக்கம் கண்டு பொறுத்துக் கொள்ளாமல் மன எரிச்சல் கொள்ளும் பொறாமை உணர்வையே.

அழுக்கு - மாசு, கசடு.

'புலனழுக்கற்ற' - அறிவின்கண் மாசு அற்ற. - புறம் : 126 : 11

பொதுவான 'மாசைக்' குறிக்கும் 'அழுக்கு' என்னும் சொல் இங்கு 'மன மாசை' 'மன அழுக்கை'க் குறித்தது.

உடலில் சேரும் அழுக்குப் போல் - மனத்தில் சேரும் அழுக்கு - 'மாசு' எனும் சொல்லால் குறிக்கப்பெறுகிறது.

**'மனத்துக்கண் மாசு'** - **34**

**'மருள்தீர்ந்த மாசறு காட்சி'** - **199, 352**

(மருள் - மன மயக்கம்)

**'மனத்தது மாசுஆக'** - **278**

**'மாசு அற்றார் கேண்மை'** - **106, 800**

**'மாசு அற்றார் கோள்'** - **311, 392, 646**

**'மன மாசு'** - **மணி. 9-59, 12-85, 21-49, 22-96**

**'மல்லல் உள்ளமொடு மாசுஅற விளங்கிய'** - **பதிற்று-பத். 7-11**

**எனவே,**

'அழுக்கறு' என்பது மன அழுக்கை, மன மாசை அகற்று என்று பொருள் தந்தது.

அவ்வாறு,

1. மனத்தில் சேரும் **முதல் அழுக்கு** - மாசு - பிறர் ஆக்கம் கண்டு பொறுத்துக் கொள்ளாமையே ஆகும் - பிறர் ஆக்கம் கண்டு பொறாமைப்படுவதாவது, அவர்தம் கல்வி, செல்வம், அதிகாரம், மதிப்பு முதலியவற்றைக் கண்டு பொறுத்துக் கொள்ளாமை. **பொறாமைப்படுதல் -** இது **மனத்துள்** நிகழ்வது.

2. மனத்தின் இரண்டாவது **மாசு -** அழுக்கு - அவ்வாறு ஒருவரின் ஆக்கம் கண்டு பொறாமைப்பட்ட பின், அவரது ஆக்கத்தைப் போல் தானும் பெற விரும்புதல் - வெஃகுதல் - அவாவுதல், இதுவும் மனத்துள்ளே நிகழ்வது.

- ஆக, இவை இரண்டும் **மனத்துவழிக்** குற்றங்கள்.

*3. இனி, மனத்தால் வெஃகியதைப் புறவுணர்வாக ஆக்கி, பொறாமைப்பட்டவரைப் பற்றியும், அவர் ஆக்கத்தைப் பற்றியும் பலவாறாகப் பலரிடமும் **புறங்கூறுதல்** - கோள் சொல்லுதல்.*

*- இது **மூன்றாவது நிகழும் குற்றம்.** புறத்தே நிகழ்வது; அத்துடன் **மொழிவழி** நிகழ்வது.*

*4. இதையடுத்து, நான்காவதாக நிகழும் குற்றம், அவ்வாறு புறங்கூறும்போது இல்லாததும் பொல்லாததுமாகப் பயனில கூறுவது. இதுவும் புறத்தே நிகழும் **மொழிவழிக்** குற்றம் என்க.*

*- ஆக, இவையிரண்டுமே மொழிவழிக் குற்றங்கள் ஆகும், என்க.*

*5. அதன்பின்னர், தன் பொறாமைக்குக் காரணமானவர்க்குத் தீயது செய்தல். இது ஐந்தாவதாக நிகழும் குற்றம். இதுவும் புறநிகழ்வு.*

*- இவ்வாறு, இவ் ஐவகைக் குற்றங்களும் மிகுதிப் பட்டுக் கொண்டே போய், இறுதியில் களவு, கொலை நிகழ்வுகளாக வளரும் தன்மையுடையன.*

*- எனவே, அனைத்துக் குற்றங்களுக்கும் அடிப்படைக் குற்றமாக 'அழுக்காறாமை'யைக் குற்றங்கள் வரிசையில் முன் வைக்கிறார், என்க.*

*- இதற்கு முன் நல்லறவுணர்வுகளாகிய **அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றி யறிதல், நடுவு நிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, பொறையுடைமை** - ஆகிய ஒன்பது அறவுணர்வுகள் - அறவொழுக்கங்கள் - அறக்கடைப்பிடிகள் - கூறப்பெற்றன.*

*- இனி, அவற்றையடுத்து, **அழுக்காறாமை, வெஃகாமை** ஆகிய இரண்டு மன மாசுகளும், அவற்றைத் தொடர்ந்து, **புறங்கூறாமை, பயனில சொல்லாமை** ஆகிய இரண்டு மொழி மாசுகளும், அவற்றைத் தொடர்ந்து, **தீவினையச்சம்** எனும் உடல் மாசும் (குற்றமும்) இல்லறவியலில் கூறப்பெறும் என்க.*

*பிறவற்றை ஆங்காங்கு அவ்வற்றின் நிகழ்விடங்களுக்குத் தக்கபடி கூறுவார்.*

*இந்நூலுள் அழு.க்காறு (பொறாமை) என்னும் சொல், 35, 135, 161, 163, 164, 165, 166, 167, 168, 170 - ஆகிய பதினோர் இடங்களிலும், அவற்றுள்ளும் இவ்வதிகாரத்தில் மட்டும் ஒன்பது இடங்களிலும்,*

*அழுக்காறு - பொறாமை, 161, 165, 167, 168,*

*அழுக்காற்றின் - பொறைாமையின், 162, 164, 166,*

*அழுக்கறுப்பான் - பொறாமைப்படுவான், 163,*

*அழுக்கற்று - பொறாமைப்பட்டு, 170*

*என்னும் வகையில் பயன்படுத்தப் பெற்றிருக்கின்றன.*

இச்சொல், வேறு கழக இலக்கியங்களுள் இப்பொருளில் எங்கும் பிறரால் கையாளப் பெறவில்லையாகலின், இந் நூலாசிரியரே இச்சொல்லை, இந்தப் பொருளில் உருவாக்கிக் கொண்டாராதல் வேண்டும் என்று கருதுதற்கு இடமுண்டு என்க.

## கசுக. ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்(து) அழுக்கா(று) இலாத இயல்பு. - 161

**பொருள்கோள் முறை :**

**ஒருவன் தன் நெஞ்சத்து அழுக்காறு**
**இலாத இயல்பு, ஒழுக்காறாக் கொள்க.**

**பொழிப்புரை :** ஒருவன் தன் உள்ளத்தில் மாசுகள் இல்லாமல் இருக்கின்ற இயற்கையான தன்மையைத் தொடர்ந்து தான் பேணுகின்ற ஒழுக்க நெறியாகக் கடைப்பிடிக்க!

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. இயற்கையாகவே, தொடக்கத்தில் எல்லாருடைய உள்ளத்திலும் மாசுகள் இல்லாமல் இருக்கும். இதனை **இயல்பு** என்றார்.

இயற்கையான படைப்புகள் அத்தனையும் தொடக்கத்தில் மாசுகளற்ற தன்மையிலேயே தூய்மையாகப் படைக்கப் பெறுகின்றன. (பிறவியிலேயேகூட குறைகள் இருக்கும். ஆனால் மாசுகள் இரா).

உடல், உள்ளம், அறிவு, ஐம்பொறிகள் முதலிய உயிர்ப்பொருள் கூறுகளும்,

மழைநீர், காற்று, விசும்பு, நெருப்பு, நிலம் ஆகிய பூதப் பொருள்களும்,

செடி, கொடி, மரங்கள் முதலிய இயற்கைத் திணைகளும் கூட, தொடக்கத்தில் தூய்மையாகப் படைக்கப்பெற்றே, பிறகு படிப்படியாக மாசுகள் எய்துகின்றன.

மாந்தரது உள்ளமும் அவ்வாறே, தொடக்கத்தில், இயற்கையாக மாசுகளின்றியே இருக்கும். உலகியலில் அது படியப் படியத் தான் தன் தூய்மைத் தன்மையை இழக்கின்றது - என்னும் இயங்கியலின், மனவியலின் பேருண்மையை இக்குறள் விளக்குகின்றது மிகு சிறப்பானது.

எனவே, தொடக்கத்தில் இருக்கின்ற மாசில்லாத உள்ளத்தின் தூய்மைத் தன்மையத் தொடர்ந்து பேணி, நிலைநிறுத்திக் கொள்வதையே, தான்

கடைப்பிடித்தொழுகும் ஒழுக்கவுணர்வாக, ஒருவன் கொள்ளுதல் வேண்டும் என்று கூறுவது, இப் பாடல், என்க.

2. **ஒருவன் தன் நெஞ்சத்து அழுக்காறு இலாத இயல்பு** - ஒருவன் தன் உள்ளத்தில் மாசுகள் இல்லாமல் இருக்கின்ற இயற்கையான தன்மையை.

**'ஒருவன்'** என்றது அனைவர்க்கும் பொருந்தும்.

**நெஞ்சம்** - உள்ளம், மனம், அகம்.

நெஞ்சம், உள்ளம், மனம் மூன்றும் ஒருபொருள் குறித்த சொற்களாயினும் அவற்றின் நுண்பொருள்களால் வேறுபடுவன. மனத்தினது மூன்று செயல் நிலைகளை அவை குறிக்கும்.

**மனம்** - சேர்வது, பொருந்துவது என்னும் பொருளது.

- அஃதாவது, எண்ண அலைகளை வாங்குவது.

**நெஞ்சம்** - நினைவுகளை இருத்திக் கொள்வது. அடிக்கடி நினைவு கூர்வது.

**உள்ளம்** - நினைவலைகளை உருவாக்குவதும் வெளிப்படுத்துவதும்.

**அகம்** - உள் மனம்

**ஆழ்மனம்,** அடிமனம்.

(மிகப் பழைய உணர்வுகள் பொதிந்திருப்பது).

(இவற்றின் விரிவான விளக்கங்கள் நிறைவுரையில் கூறப்பெறும்.)

**அழுக்காறு** - மன அழுக்குகள்.

மன மாசுகள்.

இலாத இயல்பு - மனத்தில் மாசுகள் படியாமல் இருக்கும் இயற்கையான இயல்பு நிலையை.

மாசுகள் இல்லாமல் இருப்பதுதான் இயல்பு என்றார்.

இயற்கையாகத் தூய்மையுள்ள ஒருபொருளை, மாசு படியாமல் - தூய்மை கெடாமல் வைத்துக் கொள்வதே நம் முயற்சி என்பார்.

3. **ஒழுக்காறாக் கொள்க** - அதனையே தாம் தொடர்ந்து பேணுகின்ற ஒழுக்கநெறியாகக் கடைப்பிடிக்க.

- மனத்தில் அழுக்குச் சேரவிடாமல் கடைப்பிடிப்பதையே, தன் புற ஒழுக்கங்களுக்கு அடிப்படையான அகவொழுக்கமாகக் கொள்க.

- புறவொழுக்கங்களுக்கு அடிப்படையானது அகத்தின்கண் அழுக்காறு

இலாத இயல்பு என்பது முன்னுரையில் விளக்கப் பெற்றது.

- 'மனந்தூய்மையே' (455) முதல் ஒழுக்கம். அதுவே 'நெஞ்சத்து அறம்' (288) என்றார்.

4. இது, பிறனுடைய ஆக்கமும் முயற்சியும் கண்டு பொறாமைப்படாத இயல்பான மனவொழுக்கந்தான், ஒருவனுடைய புற ஒழுக்கங்களுக்கு அடிப்படையானது என்றலின், இதுவே அதிகாரத்து முதற்பாடலாக நின்றது.

## கசுஉ. விழுப்பேற்றின் அஃதொப்ப(து) இல்லையார் மாட்டும் அழுக்காற்றின் அன்மை பெறின். - 162

**பொருள்கோள் முறை :**

***யார் மாட்டும் அழுக்காற்றின் அன்மை பெறின்,***
***விழுப்பேற்றின் அஃதொப்பது இல்லை.***

**பொழிப்புரை :** எத்தகையவரிடத்தும், அவர்தம் நிலைகண்டு, பொறாமை இல்லாத மனவுணர்வை ஒருவன் பெற்றால், பெருமை மிக்க பெறுமதிகளுள் அதைப்போல் சிறந்தது வேறு இல்லை.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. **யார் மாட்டும் அழுக்காற்றின் அன்மை பெறின்** - எத்தகையவரிடத்தும், அவர்தம் நிலைகண்டு, பொறாமை இல்லாத மனவுணர்வை ஒருவன் பெற்றால்.

- யார் மாட்டும் - எத்தகையவரிடத்தும்.

'யார் மாட்டும்' என்பதற்கு உரையாசிரியர்கள் அனைவரும் பொதுவாகவே, யார்மாட்டும், யாவர்மாட்டும் என்றே பொருள் தந்திருக்கின்றனர்.

எனவே, சிறிது விளக்கமாக, ஒருவர் பொறாமைப் படத் தக்கவர்கள் யார் யாராக இருக்கக்கூடும் என்பதை மனவியல்படி சிந்தித்தல் வேண்டும்.

- அஃதாவது, தம்மைவிடக் கல்வி, செல்வம், பதவி, அதிகாரம், சாய்கால் உடையவர்கள், தம்மை யொத்தவர்கள், தாம் பகையாக நினைக்கக் கூடியவர்கள், தம்மினும் தாழ்ந்த நிலையிலுள்ளவர்கள் - எனப் பல நிலையில் உள்ளவர்களிடத்தும் என்று பொருள்தருதல் வேண்டும்.

- அழுக்காற்றின் அன்மை பெறின் - பொறாமை அல்லாத மனவுணர்வை ஒருவன் பெற்றால்.

அழுக்காற்றின் அன்மை - பொறாமை அல்லாத தன்மை.

2. **விழுப்பேற்றின் அஃதொப்பது இல்லை** - பெருமை மிக்க பெறுமதிகளுள், அதைப்போல் சிறந்தது வேறு இல்லை.

- விழுப்பேற்றின் - விழுமை மிக்க பேறுகளுள் பெறுமதிகளுள்.

- மாந்தன்தன் வாழ்நாளில் பெறத்தக்க பேறுகள் பலவுள. அவை, புகழ், உடல்நலம், அழகு, இளமை, நோயின்மை, வாழ்நாள், நல்லூழ், கல்வி, அறிவு, துணிவு, வலிமை, வெற்றி, நுகர்ச்சி, நன்மக்கள், நெல், பொன் எனும் பதினாறு என்ப. இவைதவிர பொறாமையின்மை ஒரு பெருமைக்குரிய பேறு என்பார், ஆசிரியர். என்னை?

- பொறாமை யிருந்தால் முன்கூறப் பெற்ற பேறுகள் சிறப்பிழக்கும்; எனவே பொறாமையின்மை பெருமைக்குரிய பேறு - 'விழுப் பேறு' என்றார்.

- பொறாமையின்றி யிருந்தால்தான் ஒருவர் பெறுகின்ற மற்ற பேறுகளைப் பிறர் மதிப்பர். இல்லெனின் மதியார் என்பது மட்டுமன்று; வெறுக்கவும் செய்வார் - என்பதாம். எனவே பிறவற்றிற்குப் பெருமைதரும் பேறு இதுவென்றார், என்க.

- இனி, இதைத் தவிர வேறு பேறு இல்லை என்றும் சிறப்பித்தார்.

3. இது, முன்னைய கருத்துக்கு மேலும் விளக்கம் கூறுவதாகையால், அதன் பின்னர், வைக்கப்பெற்றது.

**கசூங. அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறன்ஆக்கம்**
**பேணாது அழுக்கறுப் பான். - 163**

பொருள்கோள் முறை :

**பிறன்ஆக்கம் பேணாது அழுக்கறுப்பான்,**
**அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான்.**

**பொழிப்புரை** : பிறனுடைய ஆக்கங்களை, அவனது முயற்சியாலும் உழைப்பாலும் வந்தவை என்று போற்றிக் கொள்ளாமல் பொறாமை கொள்பவன், தன்னுடைய அறமுயற்சிகளால் வரும் ஆக்கங்களை விரும்பாதவனே ஆவான்.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. பிறனாக்கம் பேணாது அழுக்கறுப்பான் - பிறனுடைய ஆக்கங்களை, அவனுடைய முயற்சியாலும் உழைப்பாலும் வந்தவை என்று போற்றிக் கொள்ளாமல், பொறாமை கொள்பவன்.

பிறனாக்கம் - பிறனது கல்வி, பொருள், பதவி, அதிகாரம் முதலிய ஆக்கங்களை.

பேணாது - அவை அவனுடைய முயற்சியாலும் உழைப்பாலும் வந்தவை என்று போற்றிக் கொள்ளாமல்.

அழுக்கறுப்பான் - பொறாமை கொள்பவன்.

- பிறனுடைய ஆக்கங்கள் அவனவனுடைய முயற்சியாலும் உழைப்பாலும் வந்தவை என்று கருதுதல் வேண்டும். அவை ஒருவேளை தவறாக வந்தவையே எனினும், அதுபற்றி யெல்லாம் தாம் எண்ணிக் கொண்டிராமல், தமக்குற்ற அற முயற்சிகளிலேயே தாம் கவனம் செலுத்துதல்தான் தம்முடைய ஆக்கத்தைப் பெருக்கிக் கொள்ளும்வழி என்க.

2. அறனாக்கம் வேண்டாதான் என்பான் - தன்னுடைய அறமுயற்சிகளால் வரும் ஆக்கங்களை விரும்பாதவனே ஆவான்.

- தன்னுடைய இயல்பான அறமுயற்சிகளில் ஈடுபட்டு, அதன்வழித் தனக்கும் பிறர்க்கும் வருகின்ற ஆக்கங்களை விரும்பாதவனே, பிறருடைய ஆக்கங்களைக் கண்டு பொறாமைப்பட்டுக் கொண்டிருப்பான் என்றார்.

- பரிமேலழகரும், காலிங்கரும், பாவாணருங்கூட 'அறனாக்கம்' என்பதற்கு, 'அறமுயற்சிகளால் வரும் ஆக்கம்' என்று பொருள் கொள்ளாமல், அறன், ஆக்கம் என்று பிரித்து, 'மறுமைக்கு வேண்டிய அறனும், இம்மைக்கு வேண்டிய செல்வமும்' என்று பொருள் கொள்வது, நூலாசிரியர் கருத்தைத் திரிபு செய்வதாகும். அதற்குக் காரணம் அவர்கள் எதையும் மதவழியாகச் சிந்திப்பதே ஆகும்.

அறத்தின் வழியாக வரும் ஆக்கத்தையே நூலாசிரியர் பலவிடங்களிலும் விதந்து பேசுவார். ஒவ்வொன்றுக்கும் இம்மை, மறுமைக் கோட்பாடுகளையே கொண்டிருந்தால், உலகியலே நடைபெறாது என்க.

ஆசிரியரின் மனவியல் அவரின் பலவகையான சொற்பயன்படுத்தங்களால் தெரிய வருகிறது.

**'அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை'** - **32**

**'செப்பம் உடையவன் ஆக்கம்'** - **112**

**'அறம் கூறும் ஆக்கம்' - 328**
**'மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்' - 427**
**'அரண் சேர்ந்தாம் ஆக்கம்' - 492**
**'அருப்பறா ஆக்கம்' - 523**
**'நெடிதாக்கம்' - 562**
**'துணை நலம் ஆக்கம்' - 651**
**'மன்னிய ஆக்கம்' - 692**
**'இகல் காணான் ஆக்கம்' - 859**

- *மேலும், நூலாசிரியர் 'ஆக்கம், அஃதாவது செல்வமும் பிறவும் முயற்சிகளால்தாம் வரும்' என்பதில், வேறெவர்க்கும் இல்லாதவாறு, அத்துணை அழுத்தமான கொள்கையுடையவர். இதில் அவரின் நோக்கம் அறம் ஒன்றே. அஃதாவது பொதுமை நலமே அனைத்து ஆக்கத்திற்கும் அடிப்படையாக இருத்தல் வேண்டும் என்பது அவர் கருத்து. இம்மையோ மறுமையோ இங்குவரத் தேவையும் இல்லை; அஃது, உண்மையும் இல்லை.*

- *இவற்றைக் கீழ்வரும் அவர் கூற்றுகளால் உணர்க.*

**'ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா**
**ஊக்கம் உடையான் உழை' - 594**
**'முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்' - 616**
**'தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்' - 619**

3. *இது, பிறன் ஆக்கங்களைக் கண்டு அழுக்காறு என்னும் பொறாமைப்பட்டுக் கொண்டிருப்பவன், தன்னுடைய ஆக்கம் கருதும் அறவழிச் செயல்களைச் செய்யமுடியாமற் போவதால், ஆக்கம் இழந்துவிடுவான் என்பதை எடுத்துக் கூறுவதால், முன்னதன்பின் வைக்கப் பெற்றது.*

## கசுச. அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின் ஏதம் படுபாக்கு அறிந்து - 164

பொருள்கோள் முறை :

**இழுக்காற்றின் ஏதம் படுபாக்கு அறிந்து,**
**அழுக்காற்றின் அல்லவை செய்யார்.**

**பொழிப்புரை :** பிறர்மேல் பொறாமை கொள்ளும் தவறான உணர்வினால், தமக்குக் கேடு உண்டாவதை அறிந்து கொள்ளும் அறிஞர்கள், அத்தீய உணர்வினால் அறத்திற்கு மாறான செயல்களைச் செய்ய மாட்டார்.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. **இழுக்காற்றின் ஏதம் படுபாக்கு அறிந்து** - பிறர்மேல் பொறாமை கொள்ளும் தவறான உணர்வினால், தமக்குக் கேடு உண்டாவதை அறிந்து கொள்ளும் அறிஞர்கள்.

இழுக்காறு - அதிகார முறையினால் இழுக்காறு என்பது, அழுக்காறு - பொறாமை கொள்ளுதலைக் குறித்தது.

ஏதம் - கேடு, துன்பம், குற்றம் (136), (275), (831).

- பொறாமையினால் வரும் கேடு முன்னுரையில் உணர்த்தப் பெற்றது.

அறிந்து - முன்கூட்டியே அறிந்து.

'அறிந்து' எனலால் அறியப்பெற்ற 'அறிஞர்கள்' வருவிக்கப் பெற்றது. என்னை?

**'அறிவுடையார் ஆவது அறிவார்'** - **427**

**'எதிரதாக் காக்கும் அறிவினார்'** - **429**

என்றார் ஆகலின்.

2. **அழுக்காற்றின் அல்லவை செய்யார்** - பிறர்மேல் பொறாமை கொள்ளும் தீய உணர்வினால் அறத்திற்கு மாறான செயல்களைச் செய்யமாட்டார்.

-இங்கும் 'அறிந்து' எனும் சொல்லிற்குப் பரிமேலழகரும், அவர் வழிச் செல்லும் பாவாணரும், 'இருமையிலும் துன்பம் - கேடு - வருதலையறிந்து' என்று தம் இயல்புப்படி, இம்மை, மறுமைக் கொள்கைக்கு அரண் சேர்ப்பர். அது மாந்தவியலுக்கு, மதவழிச் செய்யும் அச்சுறுத்தம் என்று தவிர்க்க.

3. இஃது, பொறாமையினால் வரும் கேட்டை அறிஞர்கள் முன்னறிவார்களாகையினால், அவர்கள் அவ்வுணர்வினைக் கடைப்பிடியாமை குறிக்கப் பெற்றதால், பிறனாக்கம் பேணாது அழுக்கறுத்தலின் பின்னர் வைக்கப் பெற்றது.

## கசுரு. அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார் வழுக்கியும் கேடுஈன் பது - 165

**பொருள்கோள் முறை :**

*ஒன்னார் வழுக்கியும் கேடு ஈன்பது*
*அழுக்காறு உடையார்க்கு அதுசாலும்.*

**பொழிப்புரை** : *பகைவர் கேடு செய்யத் தவறினாலும், பொறாமை கொண்டவர்க்கு, கேடு தருவதற்கு, அப் பொறாமை எண்ணம் ஒன்றே போதும் (வேறு பகைவர் வேண்டியதில்லை) என்க.*

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. **ஒன்னார் வழுக்கியும் கேடு ஈன்பது** - *பகைவர் கேடு செய்யத் தவறினாலும், (பொறாமை கொண்டவர்க்கு) கேடு தருவதற்கு,*

*ஒன்னார் - பொருந்தாதவர்கள் - பகைவர்கள்.*

*ஒன்றுதல் - பொருந்துதல்.*

*வழுக்கியும் - தவறியும் கேடுசெய்யத் தவறினாலும்.*

*- ஒன்னார் என்றதால், வழுக்கியும் என்பதுடன் 'கேடுசெய்ய' என்னும் செயலெச்சம் வருவிக்கப் பெற்றது.*

*கேடு ஈன்பது - கேடு தருவதற்கு.*

*ஈன்பது - உருவாக்கித் தருவது.*

*- செயப்பாட்டுப் பொருளால் செயப்படு பொருளாகிய 'பொறாமை கொண்டவர்க்கு' என்னும் சொற்றொடர் இங்கும் வருவிக்கப் பெற்றது.*

2. **அழுக்காறு உடையார்க்கு அது சாலும்** - *பொறாமை கொண்டவர்க்கு, கேடு தருவதற்கு, அப் பொறாமை எண்ணம் ஒன்றே போதும் என்க. வேறு பகைவர் வேண்டியதில்லை என்றவாறாம் என்க.*

*- அப் பொறாமை எண்ணம் ஒன்றே, அடுத்தடுத்துப் பல கேடுகளுக்கும் காரணமாகலின். அதுவே சாலும் - அமையும் - என்றார் (விளக்கம் முன்னுரையில் காண்க.)*

*- 'அதுவே' என்பதன் 'ஏ'காரம் தொக்கது.*

3. *இது, முன்னைய குறளில் உள்ள 'ஏதம் படுபாக்கு' என்பதற்கு மேலும் ஒரு விளக்கம் தருதலின் அதன் பின்னர் வைக்கப் பெற்றது, என்க.*

## கசுசு. கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும். - 166

**பொருள்கோள் முறை :** இயல்பு.

**பொழிப்புரை :** *இருப்பவன் இல்லாதவனுக்குக் கொடுப்பதைப் பார்த்துப் பொறாமைப்படுபவனுடைய சுற்றம் உடுப்பதற்கும் உண்பதற்கும் ஏதுமின்றி ஏழைமைப்பட்டு அழிவுறும்.*

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. **கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம்** - *இருப்பவன் இல்லாதவனுக்குக் கொடுப்பதைப் பார்த்துப் பொறாமைப்படுபவனுடைய சுற்றம்.*

- *கொடுப்பது - என்றதால், கொடுப்பவனும், அதைப் பெற்றுக் கொள்பவனும் ஆகிய இருவரையும் கூற வேண்டியதாயிற்று.*

- *கொடுப்பவன் இருப்பவனாகவும் பெற்றுக் கொள்பவன் இல்லாதவனுமாக இருத்தல் இயல்பென்க.*

- *இருப்பவன் இல்லாதவனுக்குக் கொடுப்பதைப் பார்த்துப் பொறாமைப்படுவது, தனக்கு அதைக் கொடுக்கவில்லையே என்று மனம் மறுகுவது.*

*சுற்றம் - என்றதால் தன்னையும் உள்ளடக்கினார், என்க.*

*- தன்னைக் கூறாது சுற்றத்தை மட்டும் கூறியது அழிவின் விரைவு கருதி.*

2. **உடுப்பதும் உண்பதும் இன்றிக் கெடும்** - *உடுப்பதற்கும் உண்பதற்கும் ஏதுமின்றி ஏழைமைப்பட்டு அழிவுறும்.*

*உடுப்பதும் உண்பதும் - என்பதில், உடுப்பதை முன்வைத்துக் கூறியது, உண்டு உயிர்வாழ்வதற்காக உடுப்பதை முதலிற் தடுத்தது. அதன் பின்னர் உண்ணவும் இன்றி ஏழைமைப்படுவர் என்று செயல் நிறையாகக் குறித்தார் என்க.*

*இன்றிக் கெடும் - முதலில் உடுப்பதற்கு இன்றிப் பிறகு உண்ணுவதற்கும் இன்றிப் படிப்படியாக ஏழைமைப்பட்டு இறுதியில் அழியும் என்றவாறு.*

*- இவ்வாறு நிகழ்வது தானே நிகழ்வதன்று; தன்னால் நிகழ்வது. என்னை?*

*- பிறர்மேல் பொறாமைப்பட்டுக் கொண்டிருப்பவன் மனம் புழுங்கி, வேறு முயற்சிகள் செய்யாது, மடி கொண்டு, பின் சோர்வுற்றுத் தளர்ந்து போவது இயல்பாம் என்க.*

**'முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்' (616)**

*என்றாராகலின்.*

- *இந்நிலை பொறாமை கொள்ளும் ஓர் உணர்வினால் மட்டும் விளைவதன்று. அதனையடுத்தடுத்து வரும் அறக்கேடுகளால் என்க. (அதிகார முன்னுரை பார்க்க.)*

- *இவ்விடத்து,*

**'எடுத்துஒருவ ருக்குஒருவர் ஈவதனின் முன்னே**
**தடுப்பது நினக்குஇதுஅழ கோ, தகைவில் வெள்ளி**
**கொடுப்பது விலக்குகொடி யோய், நினது சுற்றம்**
**உடுப்பதும் உண்பதுவும் இன்றிவிடு கின்றாய்'**

- *எனும் கம்ப இராமாயணப் பாடலை எடுத்துக் காட்டுவர் விளக்கவுரையாசிரியர் கோ. வடிவேலனார்.*

3. *இது, முன்னைய குறளின் கேடு என்பதற்கு, விளக்கமாகலின், அதன்பின் வைக்கப்பெற்றது.*

## கசுஎ. அவ்வித்(து) அழுக்கா(று) உடையானைச் செய்யவள் தவ்வையைக் காட்டி விடும். - 167

**பொருள்கோள் முறை :**

***அழுக்காறு உடையானைச் செய்யவள்***
***அவ்வித்துத் தவ்வையை காட்டி விடும்.***

**பொழிப்புரை :** *பொறாமை உடையவனைச் செய்யவள் (திருமகள்) மனத்தைச் சுருக்கிக் கொண்டு தன் மூத்தாளுக்குக் (மூதேவிக்குத்) காட்டி விட்டு அங்கிருந்து பெயர்ந்து விடும்.*

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. *இக் குறளில், நூலாசிரியர், அவர் காலத்து வழங்கியிருக்கின்ற இரண்டு உருவகப் பெயர்களைப் பயன்படுத்திப் பொறாமை உடையவன், செல்வ நிலையை முன்னரே பெற்றிருந்தாலும், நாளடைவில் சோம்பலுற்றுச் செயல்திறம் குன்றி, ஏழைமையை எய்தி விடுவான் என்னும் கருத்தைக் கூறுகிறார்.*

2. *இதில் பயன்படுத்தப் பெறும் இரண்டு உருவகச் சொற்கள் செய்யவள், தவ்வை என்பனவாம்.*

செய்யவள் - செயலுக்கு உரியவள்; செல்வ நிலைக்கு உரியவள்; (சிவந்த மேனியள் என்பது இரண்டாம் நிலைப் பொருள். அவள் திருமகள். திரு - செல்வம். திருமகள் - செல்வ நிலைக்கு உரியவள்; எனவே செல்வத்தைத் தருபவள்.

- இவ் வுருவகம் 'ஆரியவியல்' சார்பானது; அவரின் தொன்ம (புராண)க் கதைகள் வழிப்பட்டது. தமிழியலில் இவ்வுருவக வழக்கு இல்லை.

- இக்காலத்து 'இலக்குமி' (லஷ்மி) என வழங்கும் செல்வத்துக்குரிய தெய்வத்தைக் குறித்தது.

- இதேபோல், தவ்வை எனும் சொல் தமக்கை எனும் பொருளது. இத் தெய்வம் 'இலக்குமி'க்கு எதிரான, சோம்பல், முயற்சியின்மை, ஏழைமை ஆகிய இல்லாமைக்கு உருவகமாக வழங்குவது.

- பொறாமை உணர்வுடையவனிடம் 'செல்வம்' இருப்பதில்லை; ஒருவேளை முன்னரே இருப்பினும், விரைவில் அவன் முயற்சியின்மையாலும், சோம்பலாலும் வறுமை எய்திவிடுவான், என்னும் கருத்தினை, இவ்வுருவகச் சொற்கள் வழி, ஆசிரியர்,

'பொறாமை உடையவனை, 'செல்வ மகள்' (செய்யாள்), மனங்கொள்ளாமல் வெறுத்து, அவனிடமிருந்து வெளியேறி விடுவாள்'.

'அவ்வாறு வெளியேறும் பொழுது, அவனை, அவள் தமக்கை (தவ்வை)யாகிய 'வறுமை மகளு'க்கு அடையாளம் காட்டி அவள் வந்து அங்குத் தங்குமாறு கூறிவிட்டுப் போய் விடுவாள்.'

- என்று உருவகித்துக் கூறுகிறார்.

- இதை இவ்வாறு கூறுவது தேவையில்லாததெனினும், இன்றைய அறிவியல் வளர்ச்சி நிலைக்குப் பொருந்தாத தெனினும், அவர் காலத்து மக்கள் நிலைக்கும், ஏன், இக்காலத்து மூட மக்கள் நிலைக்குங்கூட, பொருந்துவது கருதத்தக்கதாம், என்க.

- இதுபற்றி முன்னரே (குறள் 84இன் பொருள் விளக்கத்துள்) விளக்கப் பெற்றுள்ளது.

- நூலாசிரியர், 'செல்வமகள்' என்பதற்குப் பயன்படுத்தும் 'செய்யாள்' (84), 'செய்யவள்' (167), தாமரையினாள் (617) எனும் மூன்று சொற்களும், அவளின் மூத்தவளாகிய 'வறுமை மகள்' என்பதற்குப் பயன்படுத்தும் 'தவ்வை' (167), 'முகடி' (617, 936) ஆகிய இரு சொற்களும், கழக இலக்கியங்களுள் வேறு எங்குமே பயன்படுத்தப் பெறவில்லை.

- அதேபோல், இவ்வதிகாரத்துள் பயன்படுத்தப்பெறும், 'அவ்வித்து' (167), 'அவ்விய' (169) எனும் இரண்டு சொற்களுங்கூட, கழக இலக்கியங்களுள் எங்குமே பயிலப்பெறவில்லை.

- ஆக, இவ் வேழு சொற்களும் ஆசிரியர் பயன்படுத்திய அல்லது உருவாக்கிய சொற்களாகவே கருதவேண்டி உள்ளது.

- செய்யவளுக்குப் பொதுவாக வழங்கும் 'திருமகள்' எனும் சொல்லுங்கூட, கழகக் காலத்திற்குப் பிந்திய சிலப்பதிகாரம், மணிமேகலை நூல்களுள்ளும், அவற்றுக்குப் பிந்திய மதவியல் சார்ந்த நூல்களுள் மட்டுமே பயிலப்பெறுகிறது.

- இவற்றின்வழி, அறியப் பெறுவது என்னெனில், 'ஆரியவியல்' சார்பான கருத்துகளைத் தமிழ்மக்கள் தொடக்கக் காலத்து ஏற்காமல் புறக்கணித்துப் பின்பு அரசுநிலை அழுத்தங்களாலும், குமுகநிலை நெகிழ்ச்சியாலும், மதநிலையின் தொடர்ந்த கருத்துப் பரப்புதலாலுமே, காலப்போக்கில் படிப்படியாய் வேண்டா வெறுப்பாக ஏற்றுக் கொண்டிருக்கலாம் என்பது புலப்படுகிறது, என்க.

3. **அழுக்காறு உடையானைச் செய்யவள் அவ்வித்து** - பொறாமை உணர்வு உடையவனைச் செய்யவள் (திருமகள், செல்வ மகள்) மனத்தைச் சுருக்கிக் கொண்டு.

அவ்வித்து - மனத்தைச் சுருக்கிக் கொண்டு - இச்சொல்லுக்கு உரையாசிரியர்கள், 'பொறாது' (பரிமேலழகர்), 'அழுக்காறு செய்து (மணக்குடவர்), 'பொறாது' (பாவாணர்) - என்று பலவாறு பொருள் தருகின்றனர்.'

- இதற்கு மூலச் சொல்லாகிய 'அவ்' என்னும் சொல்லுக்குச் சுருங்குதல், குறுகுதல், இறுகுதல் - என்னும் பொருள்கள் உண்டு.

- செய்யவளாகிய 'செல்வ மகள்' ஏதோ ஒருவகையில் முன் இவனொடு நின்றவள், அவனது பொறாமை உள்ளத்தைக் கண்டு, மனத்தைச் சுருக்கிக்கொண்டு இவனை விட்டு நீங்குவது குறித்தது.

- மனத்தைச் சுருக்குதல் - பரந்த உளத்தொடு அன்பும் இரக்கமும் உடையளாயிருந்தவள், அவ்வுணர்வுகளைச் சுருக்கிக் கொள்ளுதல்.

4. **தவ்வையைக் காட்டி விடும்** - தன் அக்கையாகிய 'வறுமை மகளு' (மூதேவி)க்கு 'நீ இவனைச் சென்றடை' என்று அடையாளம் காட்டிவிடும் என்றவாறு.

- அவ்வை - பெரியவள் - மூத்தவள் - அக்கை.

தம் + அவ்வை - தவ்வை.
உம் + அவ்வை - உவ்வை.
எம் + அவ்வை - எவ்வை.
நும் + அவ்வை - நுவ்வை.

- இதைப் போன்ற வழக்குகள்

உம் + அக்கை - உமக்கை.
எம் + அக்கை - எமக்கை.
நும் + அக்கை - நுமக்கை.
தம் + அக்கை - தமக்கை.

உம் + தாய் - உந்தாய்.
எம் + தாய் - எந்தாய்.
நும் + தாய் - நுந்தாய்.
தம் + தாய் - தந்தாய்.

உம் + ஐ - உந்தை.
எம் + ஐ - எந்தை.
நும் + ஐ - நுந்தை.
தம் + ஐ - தந்தை

உம் + பின் - உம்பி.
எம் + பின் - எம்பி.
நும் + பின் - நும்பி
தம் + பின் - தம்பி.

உம் + கை - உங்கை.
எம் + கை - எங்கை.
நும் + கை - நுங்கை.
தம் + கை - தங்கை.

'தவ்வையைக் காட்டிவிடும்' என்று இரண்டாம் வேற்றுமை உருபு, 'தவ்வைக்குக் காட்டி விடும்' என்று நான்காம் வேற்றுமைப் பொருளில் வந்திருப்பது, வேற்றுமை மயக்கம்.

5. முன்னைய குறளில் உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும் என்பதற்கு, இதில் ஓர் உருவக விளக்கம் கொடுத்திருப்பதால் அதன் பின்னர் இது வைக்கப் பெற்றது.

**கசு அ. அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்**
**தீயுழி உய்த்து விடும்.** **- 168**

**பொருள்கோள் முறை: இயல்பு.**

**பொழிப்புரை :** பொறாமை எனும் ஒப்பிலாத ஒரு கெடும்பன், அஃது உடையவனை, அவன் செல்வத்தை அழித்துத் தீய வழிகளில் கொண்டு சேர்த்து விடும்.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. **அழுக்காறு என ஒரு பாவி** - பொறாமை எனும் ஒப்பில்லாத ஒரு கெடும்பன்.

ஒரு பாவி - என்றதால், ஒப்பிலாமை கூறப்பெற்றது.

- பாவி - பாவம் செய்வதற்கு உரியவன்.

- பாவம் - தீவினை (146)

- வடசொல்.

(விளக்கம் 146-ஆம் குறள் விளக்கத்தில் கூறப்பெற்றது. ஆண்டுக் காண்க.)

2. **திருச்செற்றுத் தீயுழி உய்த்து விடும்** - திருவினைச் செற்று - செல்வத்தை அழித்துத் தீய வழிகளில் கொண்டு சேர்த்துவிடும்.

திரு - செல்வம்.

- அழகு, சிறப்பு, மேன்மை, பொலிவு, பேறு, தெய்வத் தன்மை, கவர்ச்சி, துய்ப்பு, பெருமை முதலிய உயர்நிலைப் பொருள்கள் தரும் சொல். அவற்றைத் தருகின்றதால் செல்வத்திற்கும் பொருளானது.

செறுதல் - அழித்தல், கெடுத்தல்.

செற்று - அழித்து, கெடுத்து.

- தீயுழி - தீயவழி.

- உழி இடம், பக்கம் என்று பொருள்படும் சொல். எனவே தீய இடம், தீய பக்கம், தீய வழி எனும் சார்புப் பொருள் கொண்டது.

- 'தீயுழி உய்த்துவிடும்' என்பதற்கு, மணக்குடவர் 'தீய கதி' என்று கூறி, நரகம் என்று விளக்கியும் பரிமேலழகரும் பரிதியும், பாவாணரும் 'மறுமைக் கண் நரகத்திற் புகுத்தி விடும்' என்றும் வேண்டாது பொருள் கூறுவர்.

- பாவாணர் ஒருபடி மேற்சென்று 'தீயுழி என்பது எரிவாய் நரகத்தின் பெயர்' என்று வேண்டாது விளக்கமும் கூறுவார்; அவர் கிறித்துவம் சார்ந்தவர் ஆகலின்.

- கிறித்துவமும் வேத மதமாகிய ஆரியமும் இற்றை இந்து மதமும்,

இம்மை, மறுமைக் கோட்பாடுகளில் ஒருசார்பினவாகலின் அவர் அவ்வாறு கூறவேண்டுவதாயிற்று.

- மற்று, 'மோட்சம்' 'நரகம்' என்பன அறிவியலுக்குப் பொருந்தா. ஆரியவியலின் கற்பனைக் கூறுகளே!

- நூலாசிரியரும் அறிவியல் விளக்கமற்ற அக்காலத்தவராகலின், மதஞ்சாராதவரெனினும், மதவியல் கற்பனைகளில் மயங்கியவரே, என்க.

3. இது, முன்னைய குறளில் கூறப்பெற்ற, செல்வம் அழிதலும், வறுமை புகுதலும் ஆகிய கருத்துக்கு மேலும் ஒரு விளக்கம் தருதலின், அதனையடுத்து வைக்கப்பெற்றது.

## கசுகூ. அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான் கேடும் நினைக்கப் படும் - 169

**பொருள்கோள் முறை : இயல்பு**

**பொழிப்புரை :** குறுகிய மனமுடையவனின் ஆக்கக் கூறுகளும், நேர்மையுடையவனின் கேடுகளும் (எவ்வாறு நேர்ந்தன என்று அவர்கள்) எண்ணிப் பார்ப்பின் அவர்களுக்கே புலப்படும். (மற்றவர்க்கு அவ்வாறு எளிதில் புலப்படாது.)

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. இஃது, ஓர் உலகச் சிக்கலை முன்னிறுத்திய குறள். அறவுணர்வின் மெய்ம்மத்திற்கு வெல்விளியாக (சூளுரையாக) அமைந்த குறள் இது. இதற்கு உண்மைப் பொருள் காணவியலாமையால், ஆரியவியலின் 'தலைவிதி'க் கோட்பாட்டிற்கு இலக்காகிப் போனது; இரையாகி நின்றது. ஆரியவியலாரே இதை வேண்டுமென்றே சிக்கலுடையதாக ஆக்கினர் எனலும் ஆகும்.

2. **அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும்** - குறுகிய மனமுடையவனின் ஆக்கக் கூறுகளும்.

- அவ்விய - குறுகிய, கோணலுற்ற எனினும் பொருந்தும்.

- நெஞ்சத்தான் - நெஞ்சம் உடையவனின், மனமுடையவனின்.

- ஆக்கமும் - ஆக்கக் கூறுகளும்.

- செல்வம் எனும் நேரிடைப் பொருளைவிட, செல்வமும் அதன்வழி

விளையும் நலக்கூறுகளும் வளக்கூறுகளும் என்று அகலக் கூறவேண்டுவதாயிற்று.

- நலக்கூறுகள் - உடல்நலம், உண்ணல், உடுத்தல், உறைதல் முதலிய நன்மைக் கூறுகள்.

- வளக்கூறுகள் - மேலும் மேலும் வருவாய் பெருகுவதற்குரிய நிலபுலங்கள், எய்ப்பில் வைப்புகள், போக்குவரத்து வாய்ப்புகள், ஏவல்கள், எடுபிடிகள், காவல் கட்டுகள் அரசப் பதவிகளும் அவற்றால் வரும் சலுகைகளும் தாராளங்களும் முதலியன.

- குறுகிய நெஞ்சத்தானுக்குச் சிற்சிலகால் இவ் வாய்ப்பு வசதிகள் சேர்வதும், பெருகுவதும் உலகியலின் பெரும்பான்மையாக இருக்கிறது.

- குறுகிய நெஞ்சத்தவன் என்பவன், பொறாமை, ஒழுங்கின்மை, நேர்மையின்மை தீயவை நினைதல் செய்தல் தன்மைகள் உடையவனும், குடியன், கூத்தன், கூத்தியன், களவன், கடத்தன், கட்குடி வணிகன், பெண்டு தரகன், பெருங்கடற் கொள்ளையன், முதலாயினோரும்.

- இத் தகாத் தன்மையுடையவனெல்லாம் ஆக்கங்கள் சேரப் பெறுதலும் அவை கூரப்பெறுதலும், முன்வினைப் பயனெனல் முழுமூடர்க்கும் ஒவ்வாது. என்னை?

- முன்வினை நல்வினையாகி, இப்பிறப்பில் இவ்வாறு நலமும் வளமும் சேருமெனின், அவ்வினைப் பயன் ஏன் அவனை இழிஞனாகச் செய்தல் அல்லது இயக்குதல் வேண்டும் என்னும் வினாவிற்கு விடையின்மை காண்க.

- அஃதவ்வாறாதல், அவனின் இப்பிறப்பைச் சார்ந்த வினைகள் என்பதும், அவற்றிற்கு அடுத்துவரும் பிறவியில் பயன் சாரும் என்பதும் விடையாமெனில்,

முன்னைப் பிறவியின் வினைப்பயன் செல்வத்தை மட்டுந்தான் சாருமோ, மனத்தையும் அறிவையும் சாராதோ எனும் வினாவிற்கு விடை முட்டுப்பாடு நேரும் என்க.

- இனி, முற்பிறவியின் வினைவிளைவுகளின் எல்லை முடிவு எவ்விடத்தென்பதற்கும், இப்பிறவியின் வினைத்தொடக்கம் எதுவென்பதற்கும் விடைகூறுதல் இயலாதென்க.

3. **செவ்வியான் கேடும்** - நேர்மையுடையவனின் கேடுகளும்,

- செவ்விது - நேரிது. ஒழுங்குடையது.

கேடும் - கேடுகளும்.

- கெடுதல்களும்.

அஃதாவன, வறுமையும், செயல்வழி, அறிவுவழி, மனவழித் துன்பங்களும்.

- செயல்கள் முட்டுப்படுதலும் - ஊதியமின்மையும், பேருழைப்பும், ஓய்வின்மையும் - முதலியன, செயல் வழித் துன்பங்கள்.

- அறிவு பாராட்டாமை, பேணிக் கொள்ளாமை, அவமதிப்பு, வாய்ப்பின்மை முதலியன அறிவுவழித் துன்பங்கள்.

- பொருளின்மையால், குடும்பம் பேணாமை, உற்றமும் சுற்றமும் இடையூறு தரல், மக்களை மேம்படுத்த வியலாமை, இழிசொல், அவச்சொல் கேட்டல் முதலியன மனவழித் துன்பங்களாம்.

- இவையும், இவையன்னவும் ஒருவனுக்கு முன்வினைப் பயன் வந்துறாமையால் என்றலும், அல்லது தீவினைப்பயனால் என்றலும் எவ்வாறு பொருந்தும்?

- இவ்வத்தனை இடிபாடுகளும், இழிபாடுகளும் பொருளுடைமை ஒன்றின் வழியே சரியாகும் எனில்,

- பொருளுடைமையும் இன்மையும் மட்டுந்தாம் வினையின் விளைவு என்றாகாதோ?

அவ்வாறுதாம் எனில் அவ்வினை அறிவுக் குருடும் மனக் கோட்டமும் கொண்டதே என்க.

- என்றிவ்வாறான கருத்துகளில் சிக்குண்டு, பரிமேலழகர் முதல், பாவாணர் வரையுள்ள உரையாசிரியருள் பெரும்பாலார் உழல்வரெனில், அவர்தம் அறிவுத் தெளிவின்மையும், மத மயக்கப் புதைவுமே காரணமாம் என்று எண்ணி விடுக்க.

4. **நினைக்கப்படும்** - இத்தகு பொருந்தாநிலைகள் எவ்வாறு நேர்ந்தன என்று அவர்களே எண்ணிப் பார்ப்பாராயின், அவர்களுக்கே அவற்றின் காரணங்கள் புலப்படும். மற்றவர்க்கு அவ்வாறு எளிதில் புலப்படா என்க. என்னை?

- அவ்விய நெஞ்சத்தானுக்கு நேர்ந்துவரும் ஆக்கங்கள், அவன் தவறான, தாறுமாறான, அறமல்லாத, நேர்மையல்லாத, இழிவழிகளில் ஈட்டியவைதாம் என்பதும்,

- செவ்வியான் கேடுகள், தாம் நேர்மை வழியால் முயன்றதும், உண்மை கருதி பொய்கூறாமையால் நேர்ந்த இழப்புகளும், ஒழுங்கு கடைப்பிடிப்பதால், ஒழுங்கின்மையால் வரும் வருவாய்கள் கைநழுவிப்போனதும் முதலாகிய இழப்புகளாலும், ஏமாற்றில்லாத

நடைமுறைகளால் நேர்ந்த வரவுத் தவறுதல்களாலும் நேர்ந்தவை இத்துன்பங்களும் கேடுகளும் என்பதும்,

அவரவர் எண்ணிப் பார்ப்பின் அவர்களுக்கே புலப்படும் என்றவாறு - என்க.

- இனி, இவ்விருவகைக் கூறுகளையும் மேலும் நன்கு விளங்கிக் கொள்ளுதல் சாலவும் நன்று.

- அவ்விய நெஞ்சத்தான் குறுகிய உளத்தவன்; பொறாமை நெஞ்சினன் ஆகலின், அவன் முயற்சிகள் அனைத்தும் எந்த வழி நோக்கியும் அமையும் என்க. அவனிடம் ஒழுங்குணர்வு இராது; நேர்மை இராது; உண்மையிராது; பொருளை எவ்வாறேனும், எது செய்தேனும் ஈட்டுதல் வேண்டும் என்னும் தணியா ஆசை கொண்டு பலவழியானும் செல்வம் சேர்ப்பான்.

எனவே அவன்பால் ஆக்கங்கள் வந்து குவியும். இவை யெல்லாம் சேர்வதற்கும், அவன் முற்பிறவிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அவன் முற்பிறவியின் நல்வினைப் பயனால் இவை நேர்வதெனில், அந்நல்வினைப் பயனால் அவன் அறநெஞ்சினனாகவும் அறிவோனாகவுமன்றோ பிறந்திருத்தல் வேண்டும். நன்மனத்தையும், நல்லறிவையும் தராதது எவ்வாறு நல்வினைப் பயனாக இருத்தல் இயலும்? நல்வினைப் பயன் செல்வத்தை மட்டும் - ஆக்கத்தை மட்டுந்தான் தருமோ? ஏன் அஃது அறிவைத் தராது? அறவுணர்வைத் தராது? நல்வினைப் பயன் நல்லியல்புகளையும் நல் விளைவுகளையுமன்றோ தருதல் வேண்டும். அவனுக்கு அவ்வியல்புகளும் அவ்விய நெஞ்சமும் வாயாததற்கு வேறு வினையும், ஆக்கம் சேர்வதற்கு வேறு வினையும் உண்டோ?

இனி, அதுபோலவே செவ்வியான் நேர்மையுள்ளவனாகவும், ஒழுங்குணர்வு உள்ளவனாகவும், உண்மையினனாகவும், அறமல்லாத வழிகளில் பொருள் சேர்க்கும் எண்ணம் கொளளாதவனாகவும் இருத்தல் இயல்பானதன்றோ?

**'படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யான்'** - 172

**'பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்**
**கழிநல் குரவே தலை'** - 657

என்றிருப்பான். மேலும், நூலாசிரியரே அச் செவ்வியான் தன்மைகளைக் கூறும் பொழுது, அவன் ஏழைமைப் பட்டாலும் படுவனே யல்லாது, பொருள் சேர்க்கும் பொருட்டு அல்லன செய்து ஒழுகான் என்று பலவிடத்தும் பலவாறும் கூறுவது காண்க.

**'இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற**
**புன்மையில் காட்சி யவர்' - 174**

**'நயனுடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும்நீர**
**செய்யாது அமைகலா ஆறு' - 219**

**'அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்**
**புல்லார் புரள விடல்' - 755**

**'இன்மை ஒருவர்க்கு இளிவன்று சால்பென்னும்**
**திண்மை உண்டாகப் பெறின்' - 988**

**'அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்**
**குன்றுவ செய்தல் இலர்' - 954**

**'கெடுவாக வையாது உலகம் நடுவாக**
**நன்றிக்கண் தங்கியான் தாழ்வு' - 117**

**'சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்**
**கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று.' - 660**

- மேலும் அறிவு முயற்சியும் அறமுயற்சியும் உடைய செவ்வியான், பொருள் முயற்சியில் பெரிதும் ஈடுபடான்.
- பொருள் முயற்சி பெரிதும் உடைய அவ்விய நெஞ்சத்தானோ, அறிவு முயற்சியிலும் அறமுயற்சியிலும் பெரிதும் ஈடுபடுவதில்லை.
- இஃதிரண்டும் உலகியல்; உலகத்தியற்கை, என்னை?

**'இருவேறு உலகத்(து) இயற்கை; திருவேறு;**
**தெள்ளிய ராதலும் வேறு' - 374**

என்பாராகலின்.

**'பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள' - 241**

என்றும் மொழிவார். மற்றும்,

**'மரீஇத்தாம் கொண்டாரைக் கொண்டக்கால் போலாது**
**பிரியுங்கால் பிறர்எள்ளப் பீடின்றிப் புறம்மாறும்**
**திருவினும் நிலையில்லாப் பொருளையும் நச்சுபவோ?' - கலி : 8**

**'அறத்தின் ஈட்டிய ஒண்பொருள் அறவோன்**
**திறத்து வழிப்படூஉம்' - மணி : உலக. 3-4**

**'நல்லார் ஒழுக்கின் தலைநின்றார் நல்கூர்ந்தும்**
**அல்லன செய்தற்(கு) ஒருப்படார்' - நீதிநெறி : 61**

**'சீரியர் கெட்டாலும் சீரியர் சீரியரே!'** - வாக்கு : 18

**'ஒற்கத்தாம் உற்ற விடத்தும் உயர்ந்தவர்**
**நிற்பவே நின்ற நிலையின்மேல் - வற்பத்தால்**
**தன்மேல் நலியும் பசிபெரி தாயினும்**
**புன்மேயா தாகும் புலி'** - பழ : 118

**'தனம்சிறிய ராயினும் தார்வேந்தர் கேட்டால்**
**மனம்சிறிய ராவரோ மற்று'** - வாக்கு : 28

- என்றார் பிறரும்.

எனவே, எத்துணையளவு ஏழைமைப்படினும், செவ்வியர் தம் நிலையினின்று தாழ்ந்து பொருள் தேடித் தமக்குற்ற நிலையைச் சரிசெய்து கொள்ள முற்படாமையாலும், அவர்களின் பிற அறவாக்க - அறிவாக்க முயற்சிகளினின்று பெயரார் ஆகையினாலும், அவர்கள் தமக்கு வரும் கேடுகளினின்று மீள முடியாதவர்களாகவே இருப்பர்.

இவ்வகையில், செவ்வியார்க்குக் கேடு வருதல் பழவினை என்று ஆராய்ந்து காணப்படும் என்று பரிமேலழகர் கூறி,

**'இம்மைச் செய்தன யான்அறி நல்வினை**
**உம்மைப் பயன்கொல் ஒருதனி உழந்துஇத்**
**திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது'**

என்று, கோவலனை நோக்கி மாடலன் கூறும் கூற்றை (சிலப். அடைக்கலக்.91-93) எடுத்துக்காட்டாகக் கூறுவர்.

பாவணரோ, அதே பாட்டடிகளையும் கூறி, அதன்மேற் சென்று,

**'என்செயலால் ஆவது யாதொன்று மில்லை இனித்தெய்வமே**
**உன்செயல் தீவினை யாதொன்றும் இல்லைப் பிறப்பதற்கு**
**முன்செய்த தீவினை யோஇங்கு னேவந்து மூண்டதுவே'**

என்னும் பட்டினத்தடிகளின் பாட்டையும் எடுத்துக்காட்டி, 'அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும், செவ்வியான் கேடும்' ஆகிய 'இருநிலைமையும் இயற்கைக்கும் அறநூற் கொள்கைக்கும் மாறாயிருப்பதால், அவற்றிற்குக் கரணியம் பழவினையே என்பது ஆராய்ச்சியால் அறியப்படும்' என்றார்.

இவர்கள் இருவரும் ஆராய்ச்சி என்றது, 'நினைக்கப்படும்' என்னும் சொல்லையே. ஆராய்ச்சி அல்லது ஆராயப்படும் என்பதற்கு 'நினைக்கப்படும்' எனும் சொல்லைப் பயன்படுத்துபவரல்லர் நூலாசிரியர்.

நல்லவனுக்குக் கேடு வருவதும், கெட்டவனுக்கு நன்மை வருவதும், ஆராயாமல் கூறுவதுதான் 'பழவினை' என்பதே தவிர, ஆராய்ச்சி செய்து பார்த்துத்தான் அம் மூடக்கருத்தைக் கூற வேண்டுமென்பதில்லை. ஆராய்ச்சி யில்லாததுதானே மூட நம்பிக்கை. அதற்கு ஆராய்ச்சி எதற்கு? கண்ணைமூடிக்கொண்டு அதை நம்பிக்கைவழிக் கூறிவிடலாமே!

இக் கருத்தை நாம் மறுத்துக் கூறுவதுதான் ஆராய்ச்சியின் பாற்பட்டது. அதன் ஆய்வு நிலைமைகளைத் தாம் நாம் முந்தைய பத்திகளில் கூறினோம்.

- இனி, இன்னொரு கருத்தையும் நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

- உலக மக்களிடை பொதுவாகவே ஒரு தவறான நம்பிக்கை ஒன்று உள்ளது. அது மூடநம்பிக்கை என்றாலும் தவறில்லை. ஆனால் மிகவும் கவனிக்கத் தக்கதும் விளங்கிக்கொள்ளத் தக்கதும் ஆகும்.

-அஃதாவது, நல்லவனுக்கு - செவ்வியனுக்கு - நேர்மை, உண்மை, ஒழுக்கம் இவற்றைக் கடைப்பிடிப்பவனுக்கு - (இதில் இறைநம்பிக்கையையும் சேர்த்துக் கொள்வதில் தவறில்லை; ஆனால் தேவையில்லை.) எப்பொழுதும் நன்மைகளே நடக்கும் என்பது. அவனுக்கு இறைவனே அல்லது அவன் வணங்கும் தெய்வமே முன்னின்று உதவுவான் என்பது வரை அந்நம்பிக்கை உயர்ந்து நிற்கிறது. இந் நூலாசிரியரிடமும் அந்நம்பிக்கை உள்ளது என்பதற்குக் கீழ் வரும் குறட்பாக்களே சான்று.

**'வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல'** - *(4)*

**'குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்**
**மடிதற்றுத் தான்முந் துறும்'** - *(1023)*

(இவற்றின் பொருள் விளக்கங்களை ஆங்காங்குக் காண்க.)

- ஆனால் இதனினும் மேலான மாந்த இயங்கியல் உணர்வும் அவரிடத்து இருந்துள்ளது என்பது,

**'தெய்வத்தான் ஆகா(து) எனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்'** - *619*

- என்னும் குறளால் புலப்படுத்துவார். (இதற்குப் பரிமேலழகர் கூறும் வலக்காரமான உரை ஆண்டு விளக்கப் பெற்று மெய்யுரை காட்டப்பெறும்.)

- அவ்வகையில் அத்தகைய நல்லவனுக்கு - செவ்வியனுக்கு - நன்மை நடந்தால், அஃது இறைவனின் உதவி என்று பெருமிதப்படுவதும், தீமைகள் - கொடுமைகள் - துன்பங்கள் நடந்தால், அவை அவன் தலை 'விதி' - முன் செய்த தீவினைப் பயன் என்பதாகக் கூறி மழுப்புவதாகவும் உள்ளது. (நன்மை நடந்தால் 'நல்வினைப் பயன்' என்று நினைப்பது கொஞ்சமே!)

- அதேபோல், தீயவனுக்கு - கெட்டவனுக்கு - அஃதாவது அவ்விய நெஞ்சத்தவனுக்கு - தீமை நடந்தால், அஃது இறைவன் தரும் தண்டனை - என்று மற்றவர் மகிழ்வதும், நன்மைகள், பொருள் நலன்கள் நடந்தால், அவை அவன் முன்செய்த 'புண்ணியம்' - நல்வினைப் பயன் என்பதாகக் கூறிச் சரிகட்டிக் கொள்வதும் (சமாளித்துக் கொள்வதும்) ஆக உள்ளது. (தீமைகளைத் 'தீவினைப் பயன்' என்று, இவ்விடத்து நினைப்பதும் கொஞ்சமே!)

- இவ்விரண்டு நடைமுறைகளும் மதவியலை அதுவும் ஆரிய மதமாகிய வேதவியலை, உயர்த்திக் காட்டக் கூறப்பெறும் கற்பனையான கதைப்பு (கதை) நிகழ்ச்சிகளே தவிர உண்மை யல்ல. - திட்டமிட்டு எழுதப் பெற்ற கதைகளில் மட்டும் இவை நிகழ்ந்தனவாகக் கூறப்பெற்றுள்ளனவே தவிர, அவ்வாறு இறை நம்பிக்கை உள்ளவனுக்கோ, அல்லது நன்னெறியில் வாழ்ந்த நல்லவர்களுக்கோ, செவ்வியர்களுக்கோ என்றும் எங்கும் நிகழ்ந்தனவாக வரலாறு இல்லை. (அவ்வாறு எடுத்துக்காட்டுடன் கூறி எவரும் மெய்ப்பபித்துவிட முடியாது)

- இறை இறக்கப் பிறவிகள் (அவதாரங்கள்) என்று கூறப்பெறும், மாந்த வாழ்வினர்க்கேகூட, அஃதாவது, இராமனுக்கோ, பாண்டவர்களுக்கோ (அக்கதைகளும் கட்டுக் கதைகளே! இருப்பினும் அவற்றிலும்கூட) அல்லது இயேசுவிற்கோ, முகமது நபி அவர்களுக்கோ கூட, அவ்வாறு நன்மைகள் நடக்கவில்லை என்பது உணரத்தக்கது.

தெய்வ இறக்கம் என்று கூறப்பெறும் இராமன், பதினான்கு ஆண்டுகள் தன் தம்பியொடும் மனைவியொடும் காடேகித் துன்புற்றதும், சீதை அங்குச் சிறையெடுக்கப் பெற்றதும், இறுதியில் இருவரும் துன்ப முடிவு எய்தியதும்,

பாண்டவர்களும் நல்லவர்களாக செவ்வியர்களாக இருந்தும், பன்னீராண்டுகள் காடேகித் துன்புற்றதும், பின் ஓராண்டு நாட்டில் கரந்து வாழ்ந்து இடர்கள் பட்டதும்,

தேவதூதன் எனப்பெறும் இயேசுவும் பலவகையானும் துன்புறுத்தப் பெற்று, இறுதியில் குறுக்கத்தில் அறையப் பெற்றதும்,

- அதேபோலும், இறைத் தூதராகக் கருதப்பெற்றவராகிய முகமதுவும், மக்காவிலும் மதீனாவிலும் பலவகையான துன்பங்களுக்கு ஆளானதும்,

- ஆழ்ந்து எண்ணத்தக்கன.

எனவே, இவ்வுலகில் தோன்றி மக்கள் நலனுக்கே உழைத்த அறவாணர்களாகிய செவ்வியர்கள், நல்லவர்கள் - அனைவருமே வாழ்க்கை முழுவதும் பலவகையான துன்பங்களுக்கும், கெடுதல்களுக்குமே ஆட்பட்டிருக்கின்றமையே வரலாற்றில் தெரிய வருகிறது. அவர்களின் இந்த நிலைகளுக்கு அவர்தம் முன்பிறவி வினைகளே காரணம் என்று கூறமுடியுமா?

- அறவியலுக்கு மக்களிடையில் மதிப்பும் பெருமையும் ஆதரவும் இருக்குமே தவிர, இறையியல் அடிப்படையில் எவ்வகைத் தனிச்சிறப்போ, அரிய ஆற்றல்களோ, இருப்பதில்லை; அதேபோல், இயற்கைக்கு மாறான, அறிவியலுக்குப் பொருந்தாக வியத்தகு நிகழ்வுகளோ - நடந்துவிடுவதற் கில்லை. அவ்வாறு கதைகளில் கூறுவதெல்லாம் இறையியலுக்கும், அதனினும் மூட நம்பிக்கைகள் நிறைந்த மதவியலுக்கும் ஏற்றம் தருவதற்கான உத்திகளே தவிர வேறில்லை.

- உலகியல் வேறு; உயிரியல் வேறு; அதேபோல்

அறவியல் வேறு; அறிவியல் வேறு; அதேபோல்

இறையியல் வேறு; மதவியல் வேறு!

- இவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வகையில் இயைபுகள் உண்டே தவிர, இயற்கைக்கு மாறான நிகழ்வுகள் இல்லை.

- அறவியலான் - செவ்வியான் - ஓர் இறைப் பற்றாளன் தொட்டால் இரும்பு பொன்னாகாது!

- அதேபோல் மறவியலான் - அவ்விய நெஞ்சத்தான் - கெடும்பன் தொட்டால் பொன் இரும்பாகிவிடாது!

- ஓர் அறவியலான், செவ்வியான் - ஓர் இறைப் பற்றாளன் வீட்டு விளக்கு எண்ணெயின்றித் தண்ணீரில் எரியாது!

- அதேபோல் ஒரு மறவியலான் அவ்விய நெஞ்சத்தான் வீட்டு விளக்கு எண்ணெய் ஊற்றினால் எரியாமல் போகாது. தண்ணீர் ஊற்றினால் அணையாமலும் இருக்காது.

- அறவியலாளன் அறவுணர்வுடையவன்; அறிவுணர்வுடையவன்; மனவொழுக்கமுடையவன். அதனால் எல்லா விளைவுகளும்

முயற்சியின்றி வந்து விடா.

- அவன் நிலம் வித்தாமல் விளையாது; உணவின்றி அவன் உடல், நலம் பெறாது. மருந்தின்றி அவன் நோய் நீங்காது.

- திருடன் அவன் பொருளைத் திருடாமல் போக முடியாது. தீ வைத்தால் அவன் வீடு எரியாமல் போகாது.

- அவனைக் கொலை செய்தால், அவன் உயிர் போகாமல் இருந்து விடாது.

- புத்தன் எவ்வாறு இறந்தான்? அவன் அதுவரை தின்னாமலிருந்து தின்ற பன்றியிறைச்சி அவனைக் கொன்றது.

- சாக்ரடீசு எவ்வாறு இறந்தான்? கொடுக்கப்பட்ட நஞ்சை அவன் வாங்கி உண்டான்; அந்நஞ்சு அவனைக் கொன்றது.

- ஆர்க்கிமிடீசு எவ்வாறு இறந்தான்? உரோமானிய வீரன் ஒருவன் அவன் தலையை வாளால் வெட்டினான்; அவன் இறந்தான்.

- கலிலியோ எவ்வாறு இறந்தான்? கோபுரத்தின் உச்சியிலிருந்து அவனைத் தள்ளிவிட்டார்கள். கீழே விழுந்து அவன் இறந்தான். அவர்களெல்லாரும் அவ்விய நெஞ்சத்தவர்களா? செவ்வியர்கள்; சிறந்தவர்கள்; யாரினும் உயர்ந்தவர்கள்!

- இவன் நல்லவன்; செவ்வியன்; ஒழுக்கமுடையவன்; நேர்மையாளன்; இறை நம்பிக்கையன்; ஆனால், இவனைக் கொலை செய்து விட்டார்களே என்றால், அதுதான் உலகியல்; உலக இயங்கியல்!

- உலகியல், உலக இயங்கியல், பூதவியல், அறிவியல் அடிப்படையில். இறையியல் அடிப்படையில்கூட இயற்கைக்கு மாறான விளைவுகள் ஏற்படா?

- மதவியலில் மட்டும் அவ்வாறு நிகழ்ந்தனவாகக் கதை சொல்லப்படுகின்றன என்றால், அதன் பெருமையை, போலித்தன்மையை வானளாவி உயர்த்திக் கூறுதற்கு, அம்மதவியலார் கொண்ட சூழ்ச்சிகள் அவை; மக்களை ஏமாற்ற அவர்கள் கையாளும் தந்திரங்கள் அவை.

எனவேதான், அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும், செவ்வியான் கேடும் அவர்களின் மதவியற் கொள்கைக்கு முரணாக உள்ளனவே என்று, அவற்றுக்கு முன்பிறவி வினைப்பயன் என்று, பொருந்தாத, இல்லாத, உலகியல், உயிரியல், அறிவியல், மெய்யறிவியல் தன்மைகளுக்கு மாறான முறையில் விடை கூறுகிறார்கள். இஃது ஆராய்ந்து கூறுவதும்

அன்று; உண்மையும் அன்று! ஆரிய மதத்தின், இந்து மதத்தின் நச்சுவேர் இதுதான்!

- இன்னும் சொன்னால்,

அறவியல், குலமகள் போன்றது. குலமகளுக்கு ஏழைமை, வறுமை, கெடும்புகள் வரும்; வரலாம்! அதற்காக ஒழுக்கம் கெடமாட்டாள்.

மறவியல் - அஃதாவது அவ்விய நெஞ்சங் கொண்ட தீமையியல், விலைமகள் போன்றது. ஏழைமை, வறுமை இருந்தால், ஒழுக்கம் கெட்டேனும் அவற்றைப் போக்கி, நலமும் வளமும் பெற்றுக் கொள்வாள்.

- அதற்காக, 'நான் குலமகள் ஆயிற்றே; நான் நலமும் வளமும் ஆக்கமும் பெறமுடியவில்லையே' என்றால், முயற்சி செய்ய வேண்டும். ஆனால், ஒழுக்கம் கெடுத்து நலம் தேடிக்கொள்ளும் விலைமகளைப் போல அன்று.

- ஒழுக்கம் கெட்டுப் பொருளீட்டுவது வேறு; ஒழுக்கம் கெடாமல் பொருளீட்டுவது வேறு!

- ஒழுக்கம் கெட்டுத்தான் பொருளீட்ட வேண்டும் என்பது இயற்கை நெறிமுறையன்று.

பொருளீட்டுவதற்கு வேறு வேறு அறமுறைகளும் ஏராளமாக உண்டு.

புல்பிடுங்கி விற்றுப் பொருளீட்டுவது முதல், அயல்நாட்டு வாணிகம் செய்து பொருளீட்டுவது வரை நேர்மையான பொருளீட்டும் முறை - முயற்சிகள் பல்லாயிரக் கணக்கில் உண்டு.

- தங்கம் வேறு; இரும்பு வேறு.

- தங்கம் மதிக்கப் பெறும் இடத்தில் மதிக்கப்பெறும். இரும்பு பயன்படும் இடத்தில் பயன்படும். இதுதான் உலகியல்.

- வணிகத்தைப் பொறுத்த அளவில், ஓர் அயிர மாத்திரி (கிலோ) தங்கம், ஆயிரம் அயிரமாத்திரி இரும்புக்குச் சமமாக இருக்கலாம்.

ஆனால் வீடு கட்டுவதற்குத் தங்கம் பயன்படாது. இரும்புதான் பயன்படும். தங்கம் இருந்தால் வீடு கட்டமுடியுமா? ஆனால், இரும்பு இருந்தால்தான் வீடு கட்ட முடியும். - இவற்றுள் எது உயர்ச்சி? எது தாழ்ச்சி.

- மானம் காக்க உடை வேண்டும்;

ஆனால், தங்கத்தை உடையாக அணியமுடியாது.

உண்ண உணவு வேண்டும்;

ஆனால், தங்கத்தைக் கொண்டு உடையும்

வாங்க முடியும்; உணவும் பெறமுடியும்.

- எதைஎதை எதுஎதால் செய்துகொள்ள முடியுமோ,

அதைஅதை அதுஅதால் செய்துகொள்வதுதான் உலகியல்!

- அவ்விய நெஞ்சத்தான் அல்வழிகளில் - அறமல்லாத தீய வழிகளில் பெரும்பொருள் ஈட்டலாம்; ஆனால், அது நிலைக்காது. அதைத்தான்,

**'சலத்தால் பொருள்செய்(து) ஏமார்த்தல் பசுமண்**
**கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று!'** - **660**

என்று, பசுமண் கலத்தில் நீரைத் தேக்கி வைத்தது போல் ஒழுகியும், கலத்தையே கரைத்துக் கொண்டும் போய்விடும் என்பார், ஆசிரியர்.

- இவ்வாறு நிகழ்வது அறவியலாலோ, இறையியலாலோ நிகழ்வதன்று; உலகியலால், உலக இயங்கியலால் வரும் நிகழ்ச்சியே!

- பெரும் பெரும் வல்லாண்மை வாய்ந்த கொள்ளையரும் கொலையரும் பொருளீட்டிச் சேர்த்த குவை, அடுத்து நிகழும் ஆட்சியியல்பால், எவ்வெவ்வாறு பறித்தெடுக்கப் பெறுகின்றன என்பது அன்றாடம் தெரியவரும் நிகழ்வுகளாய் உள்ளனவே!

**'அழக்கொண்ட எல்லாம் அழப்போம்; இழப்பினும்**
**பிற்பயக்கும் நற்பா லவை'** - **659**

என்று நூலாசிரியர் வலியுறுத்துவார். இவர் 'போம்' என்பது இறையியலோ, தீவினைப் பயனோ அல்ல. உலகியல்; அறவியல்; ஆட்சியியல்!

- அதுபோலத்தான்,

- குலமகள் ஏழைமையில் வாழலாம்; ஆனால் அவள் நிலைப்பாள்; நெடுநாள் வாழ்வாள். உடம்பு அழிந்த பின்னும் நினைவால், புகழால் வாழ்வாள்! இஃதே அறவியலும், உலகியலும் ஆம்!

- விலைமகள் செல்வத்துள் புரளலாம்; ஆனால் அவள் நிலைக்க வியலாது. பல்வகை நோய்களால் அவள் நலிவாள்; நைவாள்; அதனால் விரைவில் அவள் மடிவாள்; உடம்பும் நிலைக்காது; பெயரும் நிலைக்காது; அவ்வாறு நிலைத்தாலும் புகழொடு அது தோன்றாது; இகழொடுதான் தோன்றியிருக்க முடியும். இதுவும் அறவியல்; உலகியலும் அது! இறையியல் அன்று!

**'தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்**
**தோன்றலில் தோன்றாமை நன்று'** - **236**

- என்று ஆசிரியர் அறைவதும் அது!

- இதுபோலத்தான்,

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும், செவ்வியான் கேடும் நினைக்கப்படும்; நினைத்துப் பார்க்கப் புலப்படும் - என்றார்.

- மற்று, கரணிய கருமியத்தால் நிகழும் உலகியலையும், அறிவியலையும், அறவியலையும், இறையியலையும் பிரித்துப் பார்த்து உணரத் தெரியாமல், எல்லாவகையான நிகழ்வுகளுக்கும் மதவியல் அடிப்படையிலேயே, அதுவும் ஆரியவியலான வேதமத - இந்தமத - அடிப்படையிலேயே பொருள்கொண்டு, அஃது ஒன்றே காரணம் என்று, உலகியலையும் பார்த்தால், முன்பிறவிப் பயன், இம்மை, மறுமை, பாவம், புண்ணியம் - என்னும் மூடக் கருத்துகள்தாம் புலப்படும், என்க.

- இவை அறிவியலுக்கும் அறவியலுக்கும், இறையியலுக்கும், மெய்யறிவியலுக்கும், உயிரியங்கியலுக்கும் மாறுபட்டன மட்டுமல்ல, வேறுபட்டனவும் தவறானவையும் ஆகும் என்க.

5. முன்னைய குறளில் அழுக்காறு திருச்செற்றுத் தீயுழி உய்த்து விடும் என்பதற்கு மாறாகவும், சிற்சிலகால் அவ்விய நெஞ்சத்தான் ஆக்கம் பெறுதலும் உண்டு என உலகியல் கூறுதலின், அதற்குப் பின் இது வைக்கப் பெற்றது.

## கஎ0. அழுக்கற்று அகன்றாரும் இல்லைஅஃது இல்லார் பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல். - 170.

**பொருள்கோள் முறை : இயல்பு.**

**பொழிப்புரை :** பொறாமை உணர்வு கொண்டவர் தம் நிலையில் அகற்சி பெற்றுச் சிறப்புற்றதும் இல்லை; அவ்வாறு இல்லாத நல்ல மனம் கொண்டவர் தாம் வளர்ந்த நிலையிலிருந்து சுருங்கி, இல்லாதவராகிப் போனாரும் இல்லை.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. இஃது இவ்வதிகாரத்தின் முற்ற முடிந்த கருத்தாகச் சொல்லப் பெற்றது.

2. **அழுக்கற்று அகன்றாரும் இல்லை** - பொறாமை உணர்வு கொண்டவர் தம்நிலையில் அகற்சி பெற்றுச் சிறப்புற்றதும் இல்லை.

அகன்றார் - தம்நிலையில் அகற்சிப் பெற்றுச் சிறப்புற்றவர்.

அகற்சி - வளர்ந்து பெருகிய நிலையைக் குறித்தது.

3. **அஃது இல்லார் பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல்** - அவ்வாறு பொறாமை இல்லாத நல்ல மனம் கொண்டவர் தாம் வளர்ந்த நிலையிலிருந்து சுருங்கி, இல்லாதவராகிப் போனவரும் இல்லை.

- பெருக்கத்தின் தீர்ந்தார் - தாம் வளர்ந்த நிலையிலிருந்து சுருங்கி இல்லாதவராகிப் போனவர்.
- பொறாமை மனம் இல்லாத நல்ல குணம் கொண்டவர் தம்மைச் சுற்றியுள்ளவர்களால் பல வகையானும் ஊக்கம் பெறுவதற்குரியவராக மதிக்கப் பெறுவார். ஆகையால் அவர் வளர்ச்சிக்கு அனைவரும் உதவுபவராகவும் ஆக்கந் தருபவராகவுமே இருப்பாராகையால், அவர் படிப்படியே வளர்ச்சி பெறுபவராகவும், அவ் வளர்ச்சியிலிருந்து தாழாதவராகவுமே இருத்தல் உலகியல் உண்மையாகும்.
- பொறாமை கொள்பவரை அவ்வாறு யாரும் பாராட்டிக் கொள்வதில்லை.

எனவே அவர் வளர்ச்சியுறுதல் இல்லை என்றவாறு.

4. இஃது, இவ்வதிகாரத்தின் முற்ற முடிந்த கருத்தாகக் கூறப்பெற்றதால், இறுதியில் வைக்கப் பெற்றது.

# அ-2 இல்லறவியல்

## அ-2-14 வெஃகாமை -18

### *அதிகார முன்னுரை*

'வெஃகாமை'யாவது விரும்பாமை.

'வெஃகுதல்' விரும்புதல். 'வெஃகாமை' விரும்பாமை. இதனின் சிறப்புப் பொருள், அஃதாவது மேற்பொருள் 'பொருள் விரும்பாமை'. அதனின் மேற்பொருள் 'பிறர்பொருள் விரும்பாமை' - இம் மூன்றாம் நிலைச் சிறப்புப் பொருளே இவ் வதிகாரப் பொருளாக நின்றது, என்க.

விரும்புதல், பொருள் விரும்புதல், பிறன்பொருள் விரும்புதல் ஆகிய இம் மூன்று பொருள்களிலுமே வெஃகுதல் என்னும் சொல் கழக இலக்கியங்களில் வந்துள்ளது.

*1.* 'விரும்புதல்' என்னும் பொருளில் 'வெஃகுதல்' ,

**'ஊரன் தொடர்புநீ வெஃகினை ஆயின்'** - **நற் : 290-4**

**'வினை வெஃகி நீசெலின்'** - **கலி : 10-21**

**'பழியொடு வரூஉம் இன்பம் வெஃகார்'** - **அகம் : 112 : 11-12**

**'பொன்கிணர் நறுமலர்ப் புனை வெஃகி'** - **அகம் : 126 : 15**

**'வேற்கண்ணாள் என்றிவளை வெஃகன்மின்'** - **நாலடி : 17 : 2**

**'வெஞ்சுரம் தேர்ஓட வெஃகிநின்(று) அத்தமாச்**
**சிந்தையால் நீர்என்று செத்து'** **- கைந்நிலை : 24 : 1-2**

2. 'பொருள் விரும்புதல்' - என்னும் பொருளில் 'வெஃகுதல்'

**'இல்லது நோக்கி இளிவரவு கூறாமுன்**
**நல்லதுவெஃகி வினை செய்வார்'**

(நல்லது - பொருள்) - பரி : 10 : 87-88

**'ஆறுஇன்றிப் பொருள் வெஃகி'** **- கலி : 10-5**
**'பொருள் வெஃகி.. காதலர் முன்னிய ஆரிடை'** **- கலி : 10-21**
**'ஆறுஇன்றிப் பொருள் வெஃகி**
**அகன்ற நாட்டு உறைபவர்'** **- கலி : 26 : 20**
**'பல்பொருள் வெஃகும் சிறுமையும்'** **- திரிகடு : 38 : 3**

3. 'பிறர் பொருள் விரும்புதல்' என்னும் பொருளில் 'வெஃகுதல்':

**'வேற்றுப் பொருள் வெஃகாது**
**மையில் அறிவினர் செவ்விதின் நடந்து'** **- பதிற்று : 28 : 7-8**
**'நிலம் கொள வெஃகிய பொலம்பூண் கிள்ளி'** **- அகம் : 205 : 10**
**'கொள்பொருள் வெஃகிக் குடியலைக்கும் வேந்தனும்'** **- திரிகடு : 50:1**

இனி, நூலாசிரியரும், இவ்வதிகாரத்தின் கண்ணுள்ள பத்துப் பாடல்களிலும் வெஃகுதல் என்னும் சொல்லை இம்மூன்று பொருள்களிலுமே கையாண்டுள்ளமை காணத்தக்கதாகும்:

விரும்புதல் என்னும் பொருளில்,

**'படுபயன் வெஃகி'** **- 172**
**'சிற்றின்பம் வெஃகி'** **- 173**
**'அருள் வெஃகி'** **- 176**

'பொருள் விரும்புதல்' என்னும் பொருளில்,

**'பொருள் வெஃகி'** **- 176**
**'நன்பொருள் வெஃகின்'** **- 171**

'பிறன் பொருள் விரும்புதல்' என்னும் பொருளில்,

**'இலமென்று வெஃகுதல்'** **- 174**
**'யார்மாட்டும் வெஃகுதல்'** **- 175**
**'வேண்டற்க வெஃகிஆம் ஆக்கம்'** **- 177**
**'வெஃகாமை வேண்டும் பிறன்கைப் பொருள்'** **- 178**

**'அறனறிந்து வெஃகா அறிவுடையார்'** - **179**

**'எண்ணாது வெஃகின்'** - **180**

இனி, 'வெஃகுதல்' என்னும் சொல் விளக்கத்தை மொழிநூலறிஞர் பாவாணர்,

வெள் + கு - வெஃகு; வெள்ளுதல் - விரும்புதல் என்று குறிப்பர்.

- 'தமிழ் மரபுரை' - வெஃகாமை - முன்னுரை.

'வெள்' என்னும் மூலமும், 'வெள்ளுதல்' என்னும் சொல் வடிவமும், பழந்தமிழ் நூல்களுள் யாண்டும் வந்திற்றில.

வெள் + கு - வெள்கு - வெட்கு,

- வெள்குதல் - வெட்குதல் - நாணுதல்.

- என்னும் பொருளிலேயே 'வெள்கு' பயன்படுத்தப் பெற்றுள்ளது.

மற்று, வெள் - 'வேள்' என்னும் சொல் 'விருப்பம்' என்னும் பொருளில் பயன்பட்டு, விரும்பா என்னும் பொருள்தரும் 'வேளா' என்னும் சொல்லாகக் கழக இலக்கியங்களுள் சில இடங்களில் வந்துள்ளது.

வேள் - விருப்பம்; வேளா - விரும்பா.

**'நனவினான் வேறாகும் வேளா முயக்கம்'**

(வேளா - விரும்பாத) - **கலி:68:21**

**'விளங்கிழை பொலிந்த வேளா மெல்லியல்'** - **புறம்:341:10**

(வேளா - மணம் செய்யப்படாத. அஃதாவது ஒருவனால் இன்னும் விரும்பப்படாத)

**'தாளிலாளர் வேளார் அல்லர்'** - **புறம்:207: 5**

(வேளார் - விரும்பார்)

இனி, 'வேள்' எனும் சொல் மூலத்திருந்துதான், வேட்கு, வேட்கை, வேட்குதல், வேட்டல், வேண்டல் முதலிய பல சொற்கள் தோன்றியுள்ளன.

அதேபோல், 'விரும்பு' எனும் சொல் மூலமாகிய 'விள்' என்பதிலிருந்து, விரும்பு, விழை முதலிய சொற்கள் தோன்றியுள்ளன.

எனவே, 'வெள்கு' எனும் சொல், விருப்பம், ஆசை என்னும் பொருளில் வேறு எங்கும் பயன்படுத்தப் பெறவில்லை. 'வெட்கம்' என்னும் பொருளில் பயன்படுத்தப் பெற்றுள்ளதையே காண முடிகிறது.

'வெள்' எனும் சொல்மூலம் 'விருப்பம்' எனும் பொருளுடையாக, 'வெள்ளாட்டி' (- விருப்பப்பெண், பணிப்பெண், காமக்கிழத்தி, வைப்பாட்டி) எனும் ஒரு சொல்லே வழக்குப் பொருளில் உள்ளது. இச் சொல் நூல் வழக்கிலும் இல்லை.

ஆனாலும், 'வெஃகுதல்' என்னும் சொல் விருப்பத்தைக் குறிப்பதாகக் கழக இலக்கிய ஆட்சி, முன்னர் காட்டப் பெற்றது.

இனி, விருப்பம், விரும்பாமை என்னும் இரு சொற்களுங்கூட, இந்நூலுள் கையாளப் பெறவில்லை. 'விருப்பு' என்னும் சொல்லே (522) ஓரிடத்தில் மட்டும், இந்நூலுள் பயிலப் பெறுகிறது.

ஆனால், 'அம்' ஈறு பெறாத 'விருப்பு' என்னும் சொல்லும், 'ஆமை' ஈறு பெறாத 'விரும்பு' என்னும் சொல்லும், கழக இலக்கியங்களுள்ளும், தொல்காப்பியத்துள்ளும், பரவலாகக் காணப்பெறுகின்றன.

மற்று, விரும்பு, விரும்பாமை, விருப்பம் ஆகிய இம் மூன்று சொல் வடிவங்களை உரையாசிரியர்கள் பயன்படுத்தியுள்ளமையும் காண முடிகிறது.

ஆனால், 'வெஃகாமை' எனும் 'ஆமை' ஈற்று எதிர்மறைச் சொல் (விளக்கம், 'அழுக்காறாமை' முன்னுரை பார்க்க.) இந்நூல் தவிர, வேறு கழக நூல்கள் எதிலும் பயிலப் பெறவில்லை. எனவே, இச் சொல்லாக்க வடிவமும் நூலாசிரியர் ஆக்கிக் கொண்டதாகவே கருதலாம்.

இனி, 'விருப்பம்' என்னும் பொருள்தரும் சொற்கள், தமிழில் ஏறத்தாழ முப்பது உள்ளன. அவை பல்வேறு விருப்ப உணர்வுகளைத் தருகின்றன. அவற்றையும் அவற்றின் விளக்கங்களையும், அவற்றுக்கான நேரிய ஆங்கிலச் சொற்களும் கீழே தரப்பெறுகின்றன. தமிழ்ச் சொற்களுக்கு இணையான ஆங்கிலச் சொற்களை அரிதின் முயன்று இங்குத் தொகுத்துத் தந்ததன் நோக்கம், நுண்ணுணர்வுச் சொற்கள் குறித்த மொழியியல் ஒப்பீட்டறிவுக்கும், ஏறத்தாழ முப்பத்தைந்து மொழிச் சொற்களைத் தன்னகத்தே கடன்கொண்டு தழைத்து நிற்கும் உலகப் பெருமொழிகளுள் ஒன்றான ஆங்கிலத்தின் இற்றை வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கின்ற வகையில் பல்லாயிரம் ஆண்டுகட்கும் முன்னரே தூய தமிழில் உணர்வுநிலைச் சொற்கள் எவ்வாறு ஆளுமை பெற்றிருந்தன என்பதையும், அவற்றின் கருத்தியற் பண்பாட்டு வளர்ச்சி நிலைகளையும் நன்கு விளக்குதற்குமே ஆம் என்க.

| விருப்பப் பொருள்தரும் சொற்கள் | அவற்றுக்கான பொருள் விளக்கம் | இற்றைச்சிறந்த ஆங்கில மொழியில் அவற்றுக்கான சொற்கள் |
|---|---|---|
| அன்பு | இயல்பான மக்கள் தொடர்பு விருப்பம் | love, charity. |
| அவா | கூடுதலான தொடர்பு விருப்பம் | anxiety |
| அங்காத்தல், அங்காப்பு | தேங்கி நிற்கும் விருப்பம் | craving, longing |
| அறிவார்வம் | அறிவறிய விருப்பம் | curiosity |

| | | |
|---|---|---|
| *ஆவல்* | *விருப்ப முனைவு* | eager |
| *ஆசை* | *மனத்தாலும் புலன்களாலும் விரும்புதல்* | desirability, inclination. |
| *ஆதரவு (வாஞ்சை)* | *இரக்கம் கொண்டு விரும்புதல்* | tenderness. |
| *உகப்பு* | *மகிழ்வு விருப்பம், விருப்ப நிறைவு* | gratification |
| *உவப்பு* | *கவர்ச்சி விருப்பம், ஈடுபாட்டு விருப்பம்* | allure. |
| *ஏக்கம்* | *நிறைவேறுதற்கான விருப்பம்* | yearning |
| *ஏங்குதல், ஏங்குறல்.* | *கவலையுடன் எதிர் பார்க்கும் விருப்பம்.* | anxious |
| *காதல்* | *கழகக் காலத்தில், பொதுவான அன்பையும் ஆண் பெண் ஈடுபாட்டு அன்பையும் குறித்தது. ஆனால், பிற்காலத்து, ஆண் பெண் ஈடுபாட்டு விருப்பத்தை மட்டும் குறிக்கும்* | love warm attachment warm desire. |
| *காமம்* | *ஆண், பெண் உடல் இணைவு விருப்பம், புணர்வு விருப்பம், சிற்றின்ப விருப்பம்.* | lust, amorousness, lasciviousness, sexual desire. |
| *நசை* | *துய்ப்பு (நுகர்ச்சி) விருப்பம் (இச்சை-வ.சொ.)* | appetite. |
| *நயத்தல்* | *தொடர்பு விருப்பம்* | ardour, woo. |
| *நாட்டம்* | *நோக்க விருப்பம்* | opt |
| *நேயம்,* | *நேசம் நட்பு விருப்பம்* | endearment |
| *பற்று* | *மனமும் அறிவும் பற்று விருப்பம்.* | attachment, Zeal |

| | | |
|---|---|---|
| பத்தி (பக்தி) | வணங்கு விருப்பம்<br>வழிபடு விருப்பம் | Faithfulness<br>Pious. |
| பாசம் | உறவாண்மை விருப்பம் | affection |
| பெட்பு | மிகுநேய விருப்பம்<br>(பெண்மேல் ஆண்கொள்<br>ளும் விருப்பம் போன்றது) | hankering,<br>avidity. |
| பேராசை | அளவு மீறிய ஆசை,<br>பொருளாசை. | avarice |
| வஞ்சகம் | ஏமாற்று விருப்பம்<br>(இச்சகம் வ.சொ.) விருப்ப நடிப்பு. | coax |
| விருப்பம் | ஈடுபாடு கொள்ளும்<br>உணர்வு | liking |
| விழைவு | தன் அகத்தேவை விருப்பம் | wish |
| வேட்கை<br>(வேட்டல்) | மனநாட்ட விருப்பம் | craving |
| வேண்டுதல் | தன்புறத் தேவை விருப்பம் | wanting |
| வேணவா | தன்னலம் கருது விருப்பம் | greediness |
| விடாய் | மனத்தின் தாகம் | thirsty |
| வெஃகுதல் | பிறர் உடைமை விரும்புதல் | covet, covetousness,<br>eupidity. |

இச் சொற்களின் இலக்கியப் பயன்படுத்தங்கள் சில இவற்றின் பொருள்களை நன்கு உணர்ந்துகொள்ள உதவுவன; அவற்றின் கருத்துகளும் மிக இனியன; அவை நந்தமிழ் மொழியின் தொன்மையையும், நம் இலக்கியங்களின் வன்மையையும், அக் கால மக்களின் மிகச் சிறந்த மனப் பண்பையும் நன்கு உணர்த்துவன. எனவே, அவையிற் சிலவற்றை இங்கு அறிதல், இவ்வுரைநூற் பயனை மிகுவிக்கும். ஆகலின் அவை கீழே தரப்பெறுகின்றன. இவை, பெரிதும் பாடாற்றி அரிதின் திரட்டப்பெற்ற தமிழ்க் கருவூலங்கள் ஆகும். இவை போல் வேற்று மொழி உலக இலக்கியங்களுள் காணப்பெறுதல் அரிதாகும்.

அன்பு (இயல்பான மக்கள் தொடர்பு விருப்பம்):

**'அன்பு பொதி கிளவி'** - தொல் : 111-159-1

**'அன்பில் ஆடவர்'** - நற் : 352-2

- புறம் : 161 - 9

'அன்புடையோய்' - நற் : 34-5

'அன்பிலர்' - நற் : 281 - 11

'அன்புடை நெஞ்சம்' - குறுந் : 40-5

'அன்பிலன்' - ஐங் : 119-3

'அன்பு மிக உடைமை' - பதிற் : 22- 2

'அன்புகொள் மடப்பெடை' - கலி - 11-12

'அன்பிலவன்' - கலி : 144-38

'அன்புடை நன்மொழி' - திருமுருகு - 292

'அன்புறு கிளவியான்' - கலி : 138-27.

அவா : (தொடர்பு விருப்பம்)

'இன்னும் ஓர்யான் அவாஅறி யேனே' - புறம் : 137-3

'குழீஇ அவாவினால்' - கலி: 97-24

'மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை அவாவினை' - நாலடி : 59: 1-2

'காதலித்(து)
ஆதுநாம் என்னும் அவாவினைக் கைவிட்டுப்
போவதே போலும் பொருள்' - நாலடி : 181 : 2-4

'அவர் காதல் அவா' - ஐந்.எழு : 29-4

'பற்றுஅறாது ஓடும் அவாத் தேரும்' - திரிகடு : 22-2

'உண்ணாமை நன்று அவா நீக்கி' - சிறுபஞ் : 50-1

'அவாஅறுக்கல் உற்றான் தளரான்; அவ் வைந்தின்
அவாஅறுப்பின் ஆற்ற அமையும் - அவாஅறான்
ஆகும் அவனாயின் ஐங்களிற்றின் ஆட்டுண்டு
போகும் புழையுள் புலந்து' - ஏலாதி : 11

'அரிது அவாவுற்றனை நெஞ்சே!' - குறுந் : 29-4

'கேட்டார்ப் பிணிக்கும் தகைஅவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்' - 643

'அவா இல்லார்க்கு இல்லாகும் துன்பம்' - 368

'ஊடல் உணங்க விடுவாரோடு என்நெஞ்சம்
கூடுவேம் என்பது அவா' - 1310

'வேந்துஅவாம் பண்புடைமை' - 681

ஆர்வம் : (அளவு மிகு அன்பு)

'தன்வயின் ஆர்வம் உடையர் ஆகி' - நற் : 94-8
'ஆர்வம் நின்வயின்' - பரி : 1-36
'அன்பு கலந்து ஆர்வம் சிறந்த சாயல்' - அகம் : 94-13
'ஆர்வமுற் றுள்ளி வருநரும்' - புறம் : 158:13-14
'வாளின் வாழ்நர் ஆர்வமொடு ஈண்டி' - புறம் : 377 : 28
'ஆர்வம் உடையவர் ஆற்றவும் நல்லவை' - இனி. நா. 8-4
'ஆர்வத்தின் ஆர முயங்கினேன்' - ஐந்.எழு : 13-4
'ஆர்வ நெஞ்சமொடு அளைஇ
மார்புறப் படுத்தல்' - நற் : 170-10-11
'ஆர்வ நெஞ்சமொடு ஆய்நலன் அளைஇ' - அகம் : 35 : 12
'ஆர்வ நெஞ்சம் தலைத்தலை சிறப்ப, நின்
மார்பு தருகல்லாய்' - அகம் : 396 : 9-10

அறிவார்கம் (அறிவறிய விருப்பம்)

'அறிவறிந்து ஆற்றின் அடங்கப் பெறின்' - 123
'அறிவறிந்து ஆள்வினை இன்மை பழி' - 618
'எதிரதாக் காக்கும் அறிவினார்' - 429

ஆசை (மனத்தால் மிக விரும்புதல்)

'அவம் செய்வார் ஆசையுட் பட்டு' - 266
'ஆசை உள்ளம் அசைவின்று துரப்ப' - அகம்: - 199- 15
'எண்ணிலா ஆசை ஒழிய உரைத்து' - ஐந்: 524
'ஆசை பிறன்கண் படுதலும்' - திரிகடு: 20-2
'அகம்புகுதும் என்றிரக்கும் ஆசை' - பழமொழி: 462
'தன்ஆசை அம்பாய் உள் புக்கு விடும்' - பழமொழி : 363 - 4
'ஆசையின் தேம்பும் என் நெஞ்சு' - கைநிலை : 3-4

ஆதரவு (வாஞ்சை) (இரக்கம் கொண்டு விரும்புதல்)

'இனி நினைந்து இரக்கமா கின்று' - புறம்:243-1
'காணுநர் கைபுடைத்து இரங்க' பதிற்று :19-26
'வேங்கை மார்பன் இரங்க' - புறம்:21:9
'கூற்றத் தனையை யாகலின் போற்றார்
இரங்க விளிவது கொல்லோ' - புறம்:98:17-18

'பிரிந்தோர் பெயர்வுக்கு இரங்கி' - அகம்: 147:13
'செல்வோன் பெயர்புறத்து இரங்கி, முன்னின்று
தகைஇய சென்ற என் நிறையில் நெஞ்சம்' - அகம்: 330: 8-9
'என் அழிபு இரங்கும் நின்னொடு யானும்' - அகம்: 73: 8
'கழிந்தோர்க்கு இரங்கும் நெஞ்சம்' - அகம்: 215: 16
'இரப்போர் இரங்கும் இன்னாவியன்' - புறம் :368: 12

உவப்பு (கவர்ச்சி விருப்பம்)

'உவப்பே உவகை' - தொல் : 789
'அவர் நமக்கு உவந்த இனிய உள்ளம்' - அகம்: 98: 2-3
'குறுந்தொடி மடந்தை உவந்தனள்' - அகம்: 346: 18
'வருகமாள, என்உயிர்' எனப் பெரிதுவந்து
கொண்டனள் நின்தோள் கண்டு - அகம்: 16: 10-11
'மாலை நாற்றி. உவந்து இனிது அயரும்' - அகம்: 195: 4-5
'வரையக் கருதும் ஆயின், பெரிது உவந்து' - அகம்: 312:3
'இன்முகம் கரவாது உவந்து' - புறம்:130:4
'உவந்து, நீ, இன்புற விடுதி யாயின்' - புறம்:159:23-24
'உள்ளுதும் பெரும, யாம் உவந்துநனி பெரிதே' - புறம்:197: 18
'சிறிதிற்குப் பெரிதுஉவந்து
விரும்பிய முகத்தன் ஆகி' - புறம்: 398:17-18
'பெருங்கண் அயம் உவப்ப' - நற்:140:5
'அன்பிலை; ஆகலின் தன்புலன் நயந்த
என்னும் நாணும் நன்னுதல் உவப்ப
வருவை ஆயினோ' - நற்:375:4-6
'செறிதொடி உள்ளம் உவப்ப
மதியுடை வலவ' - ஐங்:487:2-3
'துப்புத் துவர்போகப் பெருங்கிளை உவப்ப
ஈத்துஆன்று ஆனா இடனுடை வளன்' - பதிற்று:32:5-6
'நாளும், மனைமுதல் வினையொடும் உவப்ப
நினை, மாண் நெஞ்சம்' - அகம்:51:13-14
'கவல்மிசை அசைஇய நிலைதயங்கு உறுமுடி
ஈண்டுபல் நாற்றம் வேண்டுவயின் உவப்ப' - அகம்:379:11-12

'உரைமுடிவு காணான் இளமையோன்' என்ற
நரைமுது மக்கள் உவப்ப - நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் - பழமொழி:21:1-3
'மன்னர் உவப்ப வழிபட்டு ஒழுகினும்' - பழமொழி:120:3
'உடலரு மன்னர் உவப்ப ஒழுகின்' - பழமொழி:225:2
'உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்' - 394
'மகிழ்ந்து உள்ளம் உள்ளுள் உவப்பது' - 1057
'உவப்பினும் காயினும் தான்முந்துறும்' - 707

உகப்பு (மகிழ்வு விருப்பம்; விருப்ப நிறைவு)

'உகப்பே உயர்தல்' - தொல்:789
'மீன் அருந்தும்
பைங்காற் கொக்கினம் நிரைபறை உகப்ப' - அகம்:120:2-3
'குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்
முகந்தனர் கொடுப்ப உகந்தனர் பெயரும்' - புறம்:33:5-6

ஏக்கம் (நிறைவேறு விருப்பம்)

'இணையா' என உணர்ந்தார் என்றுஏக்கற்று, ஆங்கு
கனவினான் எய்திய செல்வத்து அனையதே
ஐய எமக்கு நின் மார்பு' - கலி:68:23-25
'ஏக்கற்று ஆங்கென் மகன்றான் நிற்ப' - ஐந்.ஐம்.:28:3
'ஏக்கற்றும் கற்றார்' - 395

ஏங்குறல் (ஏங்கல்) (கவலையுடன் எதிர்பார்க்கும் விருப்பம்)

'பரிந்தவர் நல்காரென்று ஏங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதைஎன் நெஞ்சு' - 1248
'ஒருநாள் எழுநாள்போல் செல்லும்சேட் சென்றார்
வருநாள்வைத்து ஏங்கு பவர்க்கு' - 1269
'கடும்பனி அறல்இகு கயல்ஏர்கண் பனிமல்க
இடும்பையோடு இனைபுஏங்க, இவளைநீ துறந்ததை' - கலி:127:8-9
'அறிவுஅஞர் உழந்துஏங்கி, ஆய்நலம் வறிதாகச்
செறிவளை தோள்ஊர, இவளைநீ துறந்ததை' - கலி:127:12-13
'இம்மென் பெருங்களத்து இயவர் ஊதும்
ஆம்பல்அம் குழலின் ஏங்கி,

கலங்குஅஞர் உறுவோள் புலம்புகொள் நோக்கே' - நற்:113:10-12
'நிழல்திகழ் சுடர்த்தொடி ஞெகிழ ஏங்கி' - நற்:371:6
'உடையதை எவன்கொல்' என்று ஊறு அளந்தவர்வயின்
நடைசெல்லாய், நனிஏங்கி, நடுங்கற்காண் நறுநுதலால்' - கலி:17:3-4
'இனைஇருள் இதுஎன ஏங்கி, நின்வரல் நசைஇ,
நினைதுயர் உழப்பவள் பாடுஇல்கண் பழிஉண்டோ' - கலி:48:12-13
'பலவும் நூறுஅடுக்கினை; இனைபுஏங்கி அழுதனை' - கலி:122:5
'நோயுடை நெஞ்சத்து எறியா, இனைபு ஏங்கி
யாவிரும்எம் கேள்வற் காணீரோ' என்பவட்கு' - கலி:145:60-61
'மாண்நலம் சிதைய ஏங்கி, ஆனாது
அழல் தொடங் கினளே' - அகம்:120:8-9
'தன்முகத்து
எழுதுஎழில் சிதைய அழுதனள் ஏங்கி' - அகம்:176:21-22
'ஒல்லோம்' என்று ஏங்கி, உயங்கி இருப்பவோ' - ஐந். எழு.:42:1
'ஒலிபுனல் ஊரனைப்
பேதைப்பட்டு ஏங்கன்மின் நீயிரும்' - ஐந்.எழு.:52:2-3
'கண்இனைபு, கலுழ்பு ஏங்கினள்' - கலி:147:62
'ஏங்கு உயிர்ப் பட்ட வீங்குமுலை ஆகம்' - அகம்:240:4
'கான மஞ்சை கடிய ஏங்கும்.... என் பேதை நெஞ்சம்' - குறுந்.:194:3-5

காதல் (கழகக் காலத்தில் பொதுவான அன்பையும், ஆண்பெண் ஈடுபாட்டு அன்பையும் குறித்தது. ஆனால், பிறகாலத்து ஆண்பெண் ஈடுபாட்டு விருப்பத்தை மட்டும் குறிக்கும்.)

பொதுவான விருப்பம் - அன்பு - குறித்தது :

'தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்' - 209
'களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும்' - 284
'காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல்' - 440
'காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாம் தரும்' - 507
'பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை

கையல்ல தன்கட் செயல்' - 822

'உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழுகு வார்' - 921

'இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉம் காதற்று உயிர்' - 940

'கருங்கோட்டு எருமைச் செங்கட் புனிற்றுஆ
காதல் குழவிக்கு ஊறுமுலை மடுக்கும்' - ஐங்.: 99: 1-2

'குன்றக் குறவன் காதல் மடமகள்' - ஐங்.: 255: 1

'காதல் மூதூர் மதில் கம்பலைத் தன்று' - பரி:8:37

'இவள் தந்தை,
காதலின் யார்க்கும் கொடுக்கும் விழுப்பொருள்' - கலி:61:13

'அளித்தமர் காதலோடு அப்புனல் ஆடி' - கலி:98:20

'கருங்கண் எயிற்றி காதல் மகனொடு' - புறம்:181:2

'திண்தேர் அண்ணல்! நின்பா ராட்டிக்
காதல் பெருமையில் கனவிலும் அரற்றும்என்
காமர் நெஞ்சம் ஏமம்மாந் துவப்ப' - புறம்:198:6-8

'தன்பெயர் கிளக்குங் காலை என்பெயர்
பேதைச் சோழன் என்னும் சிறந்த
காதற் கிழமையும் உடையன்' - புறம்:216:8-10

'மணிதுணர்ந் தன்ன மக்குரல் நொச்சி
போதுவிரி பன்மர னுள்ளும் சிறந்த
காதல் நன்மரம் நீ' - புறம்:272:1-3

'செம்முது பெண்டின் காதலஞ் சிறாஅன்' - புறம்:276:3

'பீடுபெறு தொல்குடிப் பாடுபல தாங்கிய
மூதி லாளர் உள்ளும் காதலின்
தனக்கு முகந்து ஏந்திய பசும்பொன் மண்டை
இவற்குஈ கென்னும்' - புறம்:289:5-6

'கரும்ப னூரன் காதல் மகனே' - புறம்:381:26

'அளவிறந்த காதல்தம் ஆருயிர்' - நாலடி:330

'காதற் செவிலியர் தவிர்ப்பவும் தவிராது
ஏதில் சிறுசெரு உறுப மன்னோ' குறுந்.:229:3-4

(காதல் ஆண்பெண் ஈடுபாட்டு அன்பையும், மிகு விருப்பத்தையும் குறித்தது)

‘காதலின் ஒன்றிக் கண்ணிய மரபினும்’ - தொல்:1022:2
‘நிறைந்த காதலிற் சொல்லெதிர் மழுங்கல்’ - தொல்:1057:2
‘காதல் மிகுதி உளப்படப் பிறவும்’ - தொல்:1060:32
‘காதல் கைம்மிகக் கனவின் அரற்றலும்’ - தொல்:1061:6
‘அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக்
காதல் மங்கையர் காணின் நன்றென’ - தொல்:1093:30-31
‘காதல் சோர்வின் கடப்பாட்டு ஆண்மையின்
தாய்போல் தழீஇக் கழறியம் மனைவி’ - தொல்:1097:6-7
‘ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலர் கண்ணே உள’ -1099
‘மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி’ - 1118
‘தாம்வேண்டின் நல்குவர் காதலர்’ - 1150
‘உவக்காண்எம் காதலர் செல்வார்’ - 1185
‘நாம்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாம்காதல் கொள்ளாக் கடை’ - 1195
‘காதலர் செய்யும் சிறப்பு’ - 1208
‘காதலர் தூதொடு வந்த கனவினுக்கு’ - 1211
‘கனவினால் காதலர் நீங்கலர்’ - 1216
‘காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து
ஏதிலர் போல வரும்’ - 1224
‘காதல் அவரில ராகநீ நோவது
பேதைமை வாழிஎன் நெஞ்சு!’ - 1242
‘நெருநற்றுச் சென்றார்எம் காதலர் யாமும்
எழுநாளேம் மேனி பசந்து’ - 1278
‘நோதல் எவன்மற்று நொந்தாரென்று அஃதறியும்.
காதலர் இல்லா வழி’ - 1308
‘நன்மலை நாடன் காதல் மகளே’ - நற்:44:12
‘கடுந்தேர்ச் செல்வன் காதல் மகளே’ - நற்:45:5
‘மடந்தை காதல் தானும் கடலினும் பெரிதே’ - நற்:166:10

'மலையுறை குறவன் காதல் மடமகள்' - நற்:201:1

'கானல்அம் கொண்கன் தந்த
காதல் நம்மொடு நீங்கா மாறே' - நற்:231:9

'சாதலும் இனிதே காதலம் தோழி' - நற்:327:3

'காதலர் காதலும் காண்பாம் கொல்லோ' - கலி:36:20

'காதல் வேண்டி ஏற்றுறந்து
போதல் செல்லாஎன் உயிரோடு புலந்தே' - அகம்:55:16-17

'பிரியாக் காதலொடு உழையர் ஆகியநமர்' - அகம்:241: 4

'முலையிடைத் தோன்றிய நோய்வளர் இளமுளை
அசைவுடை நெஞ்சத்து உயவுத்திறன் நீடி
ஊரோர் எடுத்த அம்பல் அம்சினை
ஆராக் காதல் அவிர்தளிர் பரப்பிப்
புலவர் புகழ்ந்த நார்இல் பெருமரம்
நிலவரை யெல்லாம் நிழற்றி
அலர்அரும்பு ஊழ்ப்ப' - அகம்:273:11-17

'காதலர் செய்த காதல்
நீடுஇன்று மறத்தல் கூடுமோ மற்று' - அகம்:301:17-18

'காதலின் வளர்ந்த மாதர் ஆதலின்
பெருமடம் உடையரோ சிறிதே' - அகம்: 310:8-9

'யாக்கைக்கு
உயிர்இயைந் தன்ன நட்பின், அவ்வுயிர்
வாழ்தல் அன்ன காதல்
சாதல் அன்ன பிரிவு' - அகம்:239:11-14

'பருகுவன்ன காதல் உள்ளமொடு' - அகம்:399:4

'காதலின் தீரக் கழிய முயங்கன்மின்' - ஐந். எழு:52

'காதல்
..............................................
விழுமிதாம் நெஞ்சத்துள் நின்று' - நாலடி:228

'கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவாள்
உட்குடையாள் ஊர்நாண் இயல்பினாள் - உட்கி
இடனறிந்(து) ஊடிஇனிதாய் உணரும்

மடமொழி மாதராள் பெண்' - நாலடி:384

'கண்ணின் மணிபோல் காதலால் நட்டாரும்' - பழமொழி:89:1

காமம் (ஆண்பெண் உடலிணைவு விருப்பம் - புணர்வு விருப்பம் - சிற்றின்ப விருப்பம்)

'அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டம்' - தொல்:1088: 2-3

'காமக் கூட்டம் தனிமையிற் பொலிதல்' - தொல்:1065:1

'கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
..............................................................
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்' - தொல்: 1098: 1/ 4.

'உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று' - 1090

'கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
செம்பாகம் அன்று பெரிது' - 1092

'ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன்' - 1109

'அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு' - 1110

'காமம் உழந்து வருந்தினார்' - 1131

'காமக் கடும்புனல் - 1134

'கடலன்ன காமம் உழந்து' - 1137

'கவ்வையால் கவ்விது காமம்' - 1144

'காமம் வெளிப்படுந் தோறும் இனிது' - 1146

'நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கெளவையால்
காமம் நுதுப்போம் எனல்' - 1148

'காமநோய் போல விடிற்சுடல் ஆற்றுமோ தீ' - 1159

'இன்பம் கடல்மற்றுக் காமம்' - 1166

'காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்' - 1157

'காமநோற் செய்தஎன் கண்' - 1175

'ஒருதலையான் இன்னாது காமம்காப் போல
இருதலை யானும் இனிது' - 1196

'கள்ளினும் காமம் இனிது' - 1201

'மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்பின்றித்
தும்மல்போல் தோன்றி விடும்' - 1253
'காமம் மறையிறந்து மன்று படும்' - 1254
'நாணென ஒன்றோ அறியலம் காமத்தால்
பேணியார் பெட்ப செயின்' - 1257
'உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற்கு உண்டு' - 1281
'தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்
காமம் நிறைய வரின்' - 1282
'மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்' - 1289
'உணலினும் உண்டல் அறல்இனிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது' - 1326
'ஊடுதல் காமத்திற்(கு) இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்' - 1330
'காதல்கொள் காமம் கலக்குற' - கலி:113:20
'காமுறு தோழி! காதலம் கிளவி
இரும்செய் கொல்லன் வெல்உலைத் தெளித்த
தோய்மடல் சில்நீர் போல
நோய்மலி நெஞ்சிற்கு ஏமம்ஆம் சிறிதே!' - நற்:133:8-11
'மகளிர்
ஆராக் காமம் ஆர்பொழிற் பாயல்
வரையகத்து இயைக்கும் வரையா நுகர்ச்சி' - பரி:8:42
சில விளக்கக் குறிப்புகள் :
'வாய்மொழிப் புலவீர் கேண்மின் சிறந்தது
காதற் காமம் காமத்துச் சிறந்தது
விருப்போர் ஒத்து மெய்யுறு புணர்ச்சி' - பரி:9:13-15
'வணர்த்துஒலி ஐம்பாலாள் செய்தஇக் காமம்
உணர்ந்தும் உணரா(து)இவ் வூர்................

..................................................................................................

செறிந்தஏர் முறுவலாள் செய்தஇக் காமம்

அறிந்தும் அறியா(து)இவ் வூர்' - கலி:140:23-24, 26-27

'காமம் கலந்த காதல் உண்டெனில் நன்றுமன்' - அகம்:268:6

'கட்களி செருக்கத்து அன்ன காமம்' - நற்:35:11

'காமம் கைம்மிகின் தாங்குதல் எளிதோ' - நற்:29:3

'காமம் படர்சுட வருந்திய
நோய்மலி வருத்தம்' - நற்:64:12-13

'பரிந்தோர் வந்து நப்புணரப், புணர்ந்தோர்
பிரிதல் சூழ்தலின் அரியதும் உண்டோ
என்றுநாம் கூறிக் காமம் செப்புதும்' - நற்:79:5-7

'நோய் அலைக் கலங்கிய மதன்அழி பொழுதில்
காமம் செப்பல் ஆண்மகற்கு அமையும்' - நற்:94:1-2

'இறந்துசெய் பொருளும் இன்பம் தரும்எனின்
இளமையின் சிறந்த வளமையும் இல்லை.
இளமை கழிந்த பின்றே வளமை
காமம் தருதலும் இன்றே' - நற்:126:7-10

'காமம் பெரிதே களைஞரோ இலரே' - நற்.:335:11

'சிறைஅடு கடும்புனல் அன்ன, என்
நிறைஅடு காமம் நீந்து மாறே' - நற்:369:11

'யாமமும் நெடிய கழியும் காமமும்
கண்படல் ஈயாது பெருகும்' - நற்:378:1-2

'மாஎன மடலும் ஊர்ப; ஆஎன
குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப;
மறுகின் ஆர்க்கவும் படுப;
பிறிதும் ஆகுப; காமம்காழ்க் கொளினே!' - குறுந்:17

'இவள், உயிர்தவச் சிறிது, காமமோ பெரிதே' - குறுந்:18:15

'காலையும் பகலும் கையறு மாலையும்
ஊர்துஞ்சு யாமமும் விடியலும் என்றுஇப்
பொழுதுஇடை தெரியின் பொய்யே காமம்' - குறுந்:32:1-3

'நீர்உறை மகன்றில் புணர்ச்சி போலப்
பிரிவுஅரிது ஆகிய தண்டாக் காமமொடு
உடன்உயிர் போகுக தில்ல' - குறுந்:57:2-4

'நோதக்க தன்றே காமம் யாவதும்
நன்றுஎன உணரார் மாட்டும்
சென்றே நிற்கும் பெரும்பே தைமைத்தே' - குறுந்.:78:4-6

'உள்ளின் உள்ளம் வேமே, உள்ளாது
இருப்பின், எம் அளவைத்து அன்றே; வருந்தி
வான்தோய் வற்றே காமம்;
சான்றோர் அல்லர்யாம் மரீஇ யோரே' - குறுந்.:102

'ஒர்ஊர் வாழினும் சேரி வாரார்;
சேரி வரினும் ஆர முயங்கார்;

.....................................................................

நல்லறிவு இழந்த காமம்
வில்உமிழ் கணையின் சென்றுசேண் படவே' - குறுந்: 231

'காமம் தாங்குமதி' என்போர் தாம்அஃது
அறியலர் கொல்லோ ? அனைமதுகையர் கொல் !
யாம்எம் காதலர்க் காணேம் ஆயின்,
செறிதுனி பெருகிய நெஞ்சமொடு, பெருநீர்க்
கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல இல்லா குதுமே' - குறுந்: 290

'கண்தர வந்த காம ஒள்ளெரி
என்பற நலியினும் அவரொடு பேணிச்
சென்றுநாம் முயங்கற்கு அருங்காட்சியமே
வந்துஅஞர் களைதலை அவர்ஆற் றலரே' - குறுந்.:305:1-4

'காமமும் கள்ளும் கலந்துடன் பாராட்டத்
தாமமர் காதலரொடு ஆடப் புணர்வித்தல்' - பரி:20:109-110

'இளமையும் காமமும் ஓராங்குப் பெற்றார்
வளமைஃவிழைதக்கது உண்டோ ?' - கலி:18:7-8

'ஈரமில் கேள்வன் உறீஇய காமத்தீ
நீருள் புகினும் சுடும்' - கலி:144:61-62

'தேறுகள் நறவுண்டார் மயக்கம்போல் காமம்' - கலி:147:2

'மெய்யின் தீரா மேவரு காமம்' - அகம்:28:1

'கவவுப் புலந்துறையும் கழிபெருங் காமத்து
இன்புறு நுகற்சியின் சிறந்தது ஒன்றில்' - அகம்:261:6
'மணப்பருங் காமம் தணப்ப நீந்தி' - அகம்:50:7
'மணப்பருங் காமம் புணர்ந்தமை அறியார்
தொன்றுஇயல் மரபின் மன்றல் அயர' - அகம்:112:15-16
'கரந்த காமம் கைந்நிறுக் கல்லாது' - அகம்:198:2
'மிகுபெயல்
உப்புச்சிறை நில்லா வெள்ளம் போல
நாணுவரை நில்லாக் காமம் நண்ணி' - அகம் 208:18-20
'உலகத்து
உள்ளோர்க்கு எல்லாம் பெருநகை யாக
காமம் கைம்மிக உறுதர' - அகம்:258:12-14
'நோக்குதொறும் நோக்குதொறும் தவிர்விலை யாகி
காமம் கைம்மிகச் சிறத்தலின் நாண்இழந்து
ஆடினை என்ப' - அகம்:266:7-9
'பல்மாண் நுண்ணிதின் இயைந்த காமம்' - அகம்:303:3
'ஆராக் காமம் அடூஉநின்று அலைப்ப' - அகம்:322:3
'ஆண்மை வாங்கக் காமம் தட்பக்
கவைபடு நெஞ்சம்' - அகம்:339:7-8
'வார்முலை முற்றத்து நூல்இடை விலங்கினும்
கவவுப் புலந்து உறையும் கழிபெருங் காமத்து
இன்புறு நுகர்ச்சியின் சிறந்தது ஒன்றுஇல்' - அகம்:261:5-7
'இற்செறிந்து
காம நெறிபடரும் கண்ணினார்க் கில்லையே
ஏம நெறிபடரும் ஆறு' நாலடி:13:3-4
'அம்பும் அழலும் அவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச் சுடினும் புறஞ்சுடும் வெம்பிக்
கவற்றி மனத்தைச் சுடுதலால் காமம்
அவற்றினும் அஞ்சப் படும்' - நாலடி:89
'ஊருள் எழுந்த உருகெழு செந்தீக்கு
நீருட் குளித்தும் உயலாகும் - நீருட்

குளிப்பினும் காமம் சுடுமேகுன் றேறி
ஒளிப்பினும் காமம் சுடும்' - நாலடி:90
'ஊர்தலைக் கொண்டு கனலும் கடுந்தீயுள்
நீர்பெய்தக் காலே சினந்தணியும் மற்றிஃதோ
ஈரமில் கேள்வன் உறீஇய காமத்தீ
நீருட் புகினும் சுடும்' - கலி.:144:59:62
'காமம் முதிரின் உயிர்க்கு இன்னா' - இன்னா:24:3

நசை (துய்ப்பு (நுகர்ச்சி) விருப்பம்)
(இச்சை வ.சொ.)

பிரிவுரைக்கும் வன்கண்ண ராயின் அரி(து)அவர்
நல்குவர் என்னும் நசை. - 1156
உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரல்நசைஇ இன்னும் உளேன். - 1263
நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்டு
இசையும் இனிய செவிக்கு. - 1199
நச்சப் படாதவன் செல்வம் - 1008
'நம்பும் மேவும் நசையா கும்மே' - தொல்.:812
'எஞ்சா மண்நசை வேந்தனை' - தொல்.:1008
'ஓங்குமலை நாடன்நின் நசைஇ னானே !' - நற்:85:11
'நீர்நசைக்கு ஊக்கிய உயவல் யானை' - நற்:171:1
'பூவுடைக் குட்டம் துழவும் துறைவன்
நல்கா மையின் நசைபழு தாக' - நற்:272:6-7
'கொடுங்கழி
இரைநசை வருத்தம் வீட, மரமிசைப்
புள்ளும் பிள்ளையொடு வதிந்தன' - நற்:385:4-5
'நசைபெரிது உடையர்; நல்கலும் நல்குவர்' - குறுந்:37:1
'நன்னுதல் பசலை நீங்க, அன்ன
நசைஆகு பண்பின் ஒருசொல்
இசையாது கொல்லோ காதலர் தமக்கே' - குறுந்:213:1
'நீர்நசை வேட்கையின் நார்மென்று தணியும்
இன்னாக் கானம்' - குறுந்: 274:5-6

'யாமக் குறைஊடல் இன்நசைத் தேன்நுகர்வோர்' - பரி:10:32

'நசைகொண்டு தம்நீழல் சேர்ந்தாரைத் தாங்கி' - கலி:26:15

'துளிநசை வேட்கையான் மிசைபாடும் புள்ளின்' - கலி:46:20

'பெறல்நசை வேட்கையின் நின்குறி வாய்ப்ப' - கலி:93:17

'கலங்குஅஞர் உற்று, நின் கமழ்மார்பு நசைஇயாள்' - கலி:100:13

'தன்நசை உள்ளத்து நம்நசை வாய்ப்ப
இன்னுயிர் குழைய முயங்குதொறும் மெய்ம்மலிந்து
நக்கனென் அல்லெனோ யானே' - அகம்:22:17-19

'பெருநசை உள்ளமொடு வருநசை நோக்கி' - அகம்:163:5

'உயங்கல் யானை நீர்நசைக்கு அலமர' - அகம்:199:4

'நெடுஞ்சேண் வந்த நீர்நசை வம்பலர்
செல்உயிர் நிறுத்த சுவைக்காய் நெல்லிப்
பல்காய் அம்சினை அகவும் அத்தம்' - அகம்:271:6-8

'ஊன்நசைப் பிணவின் உறுபசி களைஇயர்' - அகம்:285:4

'அசைவின் நோன்றா நசைவளன் ஏத்தி' - புறம்:148:2

'பெறாது பெயரும் புள்ளினம் போலநின்
நசைதர வந்துநின் இசைநுவல் பரிசிலேன்' - புறம்:209:10-11

'நல்குவார் கண்ணே நசை' - நாலடி:263:4

'புணராதென் றெண்ணிப் பொருள்நசையால் தம்மை
உணரார்பின் சென்று நிலை' - நாலடி:365:3-4

'பொருள்நசையால் பன்மார்பு சேர்ந்தொழுகுவார்' - நாலடி:385:3-4

'எம்காதலர் வரல்நசைஇத்
துஞ்சாறு அலமரு பொழுதின்' - நற்:83:7-8

'இருப்பைத்
தேம்பால் செற்ற தீம்பழம் நசைஇ,
வைகுபணி உழந்த வாவல்' - நற்:279:1-3

'ஈன்பிணவு உறையுநர் வரல்நசைஇ
இரைநசைஇப் பரிக்கும்' - நற்.:332:6-7

'வாராது உறையுநர் வரல்நசைஇ
வருந்தி நொந்து உறைய இருந்திரோ' - குறுந்:65:4-5

'இளமை பாரார் வளம்நசைஇச் சென்றோர்' - குறுந்:126:1

'செய்பொருள் தரல் நசைஇச் சென்றோர்' - குறுந்:254:6

'ஊன்நசைஇப் பருந்து இருந்து உகக்கும்
வான்உயர் பிறங்கல் மலைஇறந் தோரே' - குறுந்:285:7-8

'மலையிடைப் போயினர் வரல்நசைஇ, நோயொடு
முலையிடைக் கனலும் என்நெஞ்சு' - கலி.:36:16-17

'துளிநசை வேட்கையான் மிசைபாடும் புள்ளின், தன்
அளிநசைஇ ஆர்வுற்ற அன்பினேன் யான், ஆக' - கலி:46:20-21

'இனைஇருள் இதுவென ஏங்கி, நின் வரல்நசைஇ,
நினைதுயர் உழப்பவள் பாடுஇல் கண்' - கலி:48:12-13

'எல்லையும் இரவும் துயில்துறந்து, பல்ஊழ்
அரும்படர் அவலநோய் செய்தான்கண் பெறல்நசைஇ
இருங்கழி ஓதம்போல் தடுமாறி
வருந்தினை அளியஎன் மடம்கெழு நெஞ்சே! - கலி:123:16-19

'நாணொடு மிடைந்த கற்பின் வாள்நுதல்
அம்தீம் கிளவிக் குறுமகள்
மென்தோள் பெறநசைஇச் சென்றஎன் நெஞ்சே!' - அகம்:9:24-26

'இருங்கழி மலர்ந்த கண்போல் நெய்தல்
கமழ்இதழ் நாற்றம் அமிழ்துஎன நசைஇ,
தண்தாது ஊதிய வண்டினம்' - அகம்:170:4-6

'பைங்கொடிப் பாகற் செங்கனி நசைஇ
கான மஞ்ஞைக் கமஞ்சூல் மாப் பெடை' - அகம்:177:9-10

'அரும்பொருள் நசைஇ, பிரிந்துஉறை வல்லி
சென்று, வினை எண்ணுதியாயின்' - அகம்:191:11-12

'இசைஓர்த் தன்ன இன்தீம் கிளவி
அணங்குசால் அரிவையை நசைஇ' - அகம்:212:7-8

'மெல்இயற் குறுமகள் நல்லகம் நசைஇ' - அகம்:258:8

'தெண்நீர்
ஆய்சுனை நிகர்மலர் போன்ம்' என நசைஇ
வீதேர் பறவை விழையும்
போதுஆர் கூந்தல்நம் காதலி கண்ணே' - அகம்:371:12-14

'இசைநசைஇக் கிடந்த முதுவாய்ப் பல்லி' - அகம்:387:16

'ஆவாம்ஆம் ஆக்கம் நசைஇ அறம்மறந்து' - நாலடி:31:1

'செறுத்தோறு உடைப்பினும் செம்புனலோ(டு) ஊடார்
மறுத்தும் சிறைசெய்வர் நீர்நசைஇ வாழ்நர்' - நாலடி:222:1-2

நயத்தல் (நல் தொடர்பு விருப்பம்)

'பிறனியலாள் பெண்மை நயவாதவன்' - 147

'பிறன்வரையாள் பெண்மை நயவாமை நன்று' - 150

'நயவற்க நன்றி பயவா வினை' - 439

'பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்' - 580

'நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன்' - 1181

'நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்' - 1232

'நினையாம், நயத்தலின் சிறந்தஎம் அடியுறை' - பரி:9:84

'கயத்தக்க பூப்பெய்த காமக் கிழமை
நயத்தகு நல்லாளைக் கூடுமா கூடும்' - பரி.திரட்டு.:2:41-42

'நயந்த காதலற் புணர்ந்தனள்' - நற்:66:6

'தானும் நம்மொடு
ஒன்றுமணம் செய்தனள் இவளெனின்
நன்றே நெஞ்சம் நயந்தநின் துணிவே' - குறுந்:347:4-6

'நின்மார்பு நயந்த நன்னுதல் அரிவை' - ஐங்:46:2

'எம்தோள் துறந்தனன் ஆயின்
வென்கொல் மற்றுஅவன் நயந்த தோளே' - ஐங்:108:3-4

'பயந்து நுதல் அழியச் சாஅய்,
நயந்த நெஞ்சம் நோய்ப்பா லஃதே' - ஐங்:161:3-4

'நயந்த காதலற் புணர்ந்துசென் றனளே !' - ஐங்:386:2

'நயந்த காதலித் தழீஇ' - ஐங்:407:1

'நின்னினும் மடவள் நனிநின் நயந்த
அன்னை அல்லல் தாங்கி' - அகம்:259:15-16

'நீரின்று அமையா உலகம் போலத்
தம்இன்று அமையா நம்நயந் தருளி' - நற்.:1:6-7

'ஆர்கலி வெற்பன் மார்பு நயந்து உறையும்
யானே அன்றியும் ஊர்கொல்' - நற்:104:7-8

'நின்நயந்து உறைவி இன் உயிர் உள்ளாய்' - நற்:168:7
'எம்நயந்து உறைவிஆயின், யாம் நயந்து
நல்கினம் விட்டது என்?' - நற்:176:1-2
'யான்நயந்து உறைவோள் தேம்பாய் கூந்தல்
........................................................ நறுந்தண்ணியவே' - குறுந்:116:1-4
'நனிகொண்ட சாயலாள் நயந்துநீ நகையாகத்
துனிசெய்து நீடினும் துறப்புஅஞ்சிக் கலுழ்பவள்' - கலி:10:14-15
'பூண்அகம் நோக்கி இமையான் நயந்துநம்
கேண்மை விருப்புற்றவனை' - கலி:60:30-31
'எம்மை நயந்து நலம் சிதைத்தான்' - கலி:142:46
'ஒண்தொடி ஆயத்துள்ளும் நீநயந்து
கொண்டனை' என்ப ஓர்குறுமகள்!' - அகம்:96:9-10
'வெறிகமழ் சோலை நயந்துவிளை யாடலும்' - அகம்:302:7
'நினைந்தனம் இருந்தனமாக, நயந்துஆங்கு
உள்ளிய மருங்கின் உள்ளம் போல
வந்து நின்றனரே காதலர்' - அகம்:317:19-21
'நல்எழில் ஆகம் புல்லுதல் நயந்து' - அகம்:343:3
'சாந்துஆர் அகலமும் தகையும் மிகநயந்து
ஈங்குநாம் உழக்கும் எவ்வம் உணராள்
நன்னர் நெஞ்சமொடு மயங்கி' - அகம்:388:16-18
'எம்போல் ஒருத்தி நலன்நயந்து என்றும்
வரூஉம் என்ப' - புறம்:144:11-12
'நன்னாடு பாட என்னை நயந்து
பரிசில் நல்குவை யாயின் குரிசில்நீ' - புறம்:146:4-5
'நின்நயந்து உறைநர்க்கும் நீநயந்து உறைநர்க்கும்' - புறம்:163:1
'நெடுங்கடைத் தோன்றி யோனே அதுநயந்து
உள்ளி வந்த பரிசிலன் இவன்' - புறம்:397:11-12
'துயில்இன் இளமுலையார் தோள்நயந்து வாழ்நின்' - கைந்நிலை:38:3
'திண்தேர்க் கொண்கனை நயந்தோர்
பண்டைத் தம்நலம் பெறுபவோ' - ஐங்:137:2-3
'பனிப்பயந்தன நீ நயந்தோள் கண்ணே' - ஐங்:266:4

நேயம், நேசம் (நட்பு விருப்பம்)

இரு வடிவங்களும் கழகக் காலத்துள் இல்லை. நயம், நயத்தல் மட்டுமே இருந்துள்ளது.

பற்று (மனமும் அறவும் பற்று விருப்பம்)

'பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர்' - 88

'பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்' - 349

'பற்றுள்ளம் என்னும் இவறன்மை' - 438

'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு' - 350

'பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்' - 606

'பற்றாகின்று, நின் காரணமாக' - பரி:8:10

'செய்ததன் பயம் பற்று விடாது;
நயம் பற்று விடின் இல்லை நசைஇயோர் திறத்தே' - கலி:59:25-26

'பயன் இன்மையின் பற்றுவிட்டு ஒரூஉம்
நயன்இல் மாக்கள் போல்' - அகம்:71:2-3

'பற்றுஅமையா வேந்தன்கீழ் வாழாமை முன்னிதே' - இனி.நா.:32:2

'பற்றுஇலனாய்ப் பல்லுயிர்க்கும் பார்த்துஉற்றுப் பாங்கறிதல்
வெற்றவேல் வேந்தர்க்கு இனிது' - இனி.நா.:35:3-4

'பற்றுஎன்னும் பாசத்தளையும், பல்வழியும்
பற்றுஅறாது ஓடும் அவாத் தேரும்' - திரிகடு:22:1-2

'கோல்அஞ்சி வாழும் குடியும், குடிதழீஇ
ஆலம்வீழ் போலும் அமைச்சனும், வேலின்
கடைமணிபோல் திண்ணியான் காப்பும், இம் மூன்றும்
படைவேந்தன் பற்று விடல்' - திரிகடு:33

'மனைவாழ்க்கை பற்றுதல்' - ஏலாதி:73:3

'தெற்றெனக் கண்ணுள்ளே தோன்ற இமைஎடுத்துப்
பற்றுவேன் என்றுயான் விழிக்குங்கால், மற்றும்என்
நெஞ்சத்து ஓடி ஒளிந்து' - கலி:144:55-56

'கையாறு செய்தானைக் காணின் கலுழ்கண்ணால்
பையென நோக்குவேன் தாழ்தானை பற்றுவேன்' - கலி:147:48-49

பத்தி (பக்தி): (வணங்கு விருப்பம்; வழிபடு விருப்பம்)

'பத்திமை சான்ற படையும்' - திரிகடு:100:1

'தீங்குஊக்காப்
பத்திமையின் பாங்கினிய தில்' - இனி.நற்.:32:3-4

பாசம் (உறவு விருப்பம்)

'பாசம் பசிப்ப மடியைக் கொளலும்' - திரிகடு:20:1
'பரந்தொழுகும் பெண்பாலைப் பாசம்என் பானும்' - திரிகடு:73:2
'மனைப்பாசம் கைவிடாய் மக்கட்கென் றேங்கி
எனைத்தூழி வாழிய நெஞ்சே ?' - நாலடி:130:1-2
'பாசத்துள் இட்டு விளக்கினும் கீழ்தன்னை
மாசுடைமை காட்டி விடும்' - நான்மணி:97

பெட்பு (மிகு விருப்பு)

'பிறன்பொருளான் பெட்டொழுகும் பேதைமை' - 141
'நட்டார் குறைமுடியார் நன்றற்றார் நன்னுதலாள்
பெட்டாங்கு ஒழுகு பவர்' - 908
'பேணாது பெட்டார் உளர்மன்னோ' - 1178
'நாணென ஒன்றோ அறியலம் காமத்தால்
பேணியார் பெட்ப செயின்' - 1257
'பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்
காணாது அமையல கண்.' - 1283
'நெஞ்சேநீ பெட்டாங்கு அவர்பின் செலல்' - 1293
'காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும்' - தொல்:1093:40
'குற்றம் காட்டிய வாயில் பெட்பினும்
பெட்ட வாயில்பெற்று இரவுவலி யுறுப்பினும்' - தொல்:1048:9-10
'கற்பினின் வழாஅ நற்பல உதவிப்
பெற்றோர் பெட்கும் பிணையை ஆக 'என' - அகம்:86:13-14
'யாமும், எம்வரை அளவையின் பெட்குவம்' - அகம்:200:13
'காணின் நெகிழும் என்நெஞ்சு ஆயின், என் உற்றாய்
பேணாய்நீ பெட்பச் செயல்' - கலி:97: 23-24
'பெருவகைத் தாயினும் பெட்டவை செய்யார்' - இனி.நா.:22:3
'பெட்டாங்கு ஈயும் பெருவளம் பழுனி' - புறம்:113:3
'பேஎ யாயமொடு பெட்டாங்கு வழங்கும்' - புறம்:238:4
'பெட்பின்று ஈதல் யாம்வேண் டலமே' - புறம்: 205: 2

பேராசை (அளவுமீறிய ஆசை, பொருளாசை)

'உற்றபே ராசை கருதி அறன்ஒரூஉம்
ஒற்கம் இலாமை இனிது' - இனி. நா.:39:3

வஞ்சகம் (ஏமாற்று விருப்பம், விருப்ப நடிப்பு)
(இச்சகம் - வ.சொ.)

'வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம்' - 271

'நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல்' - 276

'ஒருவனை வஞ்சிப்ப தோரும் அவா' - 366

'முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும்' - 824

'நஞ்சத்த பிறவாக, 'நிறையிலள்இவள்' என
வஞ்சத்தான் வந்து ஈங்கு வலி அலைத்தீவாயோ' - கலி:69:14-15

'வருந்தல் நின் வஞ்சம் உரைத்து' - கலி:89:9

'ஆய்மலர் புன்னைக்கீழ் அணிநலம் தோற்றாளை
நோய்மலி நிலையளாத் துறப்பாயால்; மற்றுநின்
வாய்மைக்கண் பெரியதுஓர் வஞ்சமாய்க் கிடவாதோ' - கலி:135:9-11

'வஞ்சம் வெறுமின்' - நாலடி:172:2

'வஞ்சமே என்னும் வகைத்தால்' - திணைமாலை நூ.:9:1

'வஞ்சத்தின் தீர்ந்த பொருள்' - திரிகடு:43:4

'வஞ்ச மலைநாடன் வாரான் கொல்' - கைந்நிலை:2:3

'வணர்ஒலி ஐம்பாலார் வஞ்சித்தல் இன்னா' - இன்னா:14:1

'வரிசையின் நிறுத்த வாய்மொழி வஞ்சன்' - புறம்:398:8

விருப்பம் (ஈடுபாடு கொள்ளும் உணர்வு)

'விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா
ஆக்கம் பலவும் தரும்' - 522

'கவர்வு விருப்பாகும்' - தொல்.:845

'வேளாண் எதிரும் விருப்பின் கண்ணும்' - தொல்:1053:8

'விருந்துஅயர் விருப்பினள் திருந்திழையோளே' - நற்:361:9

'முயங்கல் விருப்பொடு குறுகினே மாக' - நற்.:250:6

'தாய்காண் விருப்பின் அன்ன
சாஅய் நோக்கினள்' - குறுந்.:132:5-6

'மருந்தும் அறியும்கொல் தோழிஅவன் விருப்பே' - ஐங்.:262:4
'தெறுவது அம்ம நும்மகள் விருப்பே' - ஐங்:313:1
'காண்டல் விருப்பொடு கமழும் குளவி' - பதிற்று:12:10
'செங்கள விருப்பொடு கூலம் முற்றிய' - பதிற்று:19:5
'விருப்பு ஒன்றுபட்டவர் உளம்நிறை உடைத்தென' - பரி:6:21
'வேள்வியும் மறனும் விருப்பொடு வெய்யை' - பரி:13:56
'முந்துறல் விருப்பொடு முறை மறந்து அணிந்தவர்' - பரி:20:22
'பொதிர்த்த முலையிடைப் பூசிச் சந்தனம்
உதிர்த்துப் பின்உற ஊட்டுவாள் விருப்பும்' - பரி:21:26
தாவா விருப்பொடு கன்றுயாத் துழிச்செல்லும்
ஆபோல் படர்தக நாம்' - கலி:81:36-37
'திருந்துஅடி நூபுரம் ஆர்ப்ப இயலி, விருப்பினால்
கண்ணும் நுதலும் கவுளும் கவலியார்க்கு
ஒண்மை எதிரியஅம் கையும்' - கலி:83:16-18
'தேன்இமிர் காவில் புணர்ந் திருந்து ஆடுமார்
ஆனா விருப்பொடு அணிஅயர்ப காமற்கு
வேனில் விருந்தெதிர் கொண்டு' - கலி:92:66-68
'கன்றுஅமர் விருப்பொடு மன்றுநிறை புகுதர' - கலி:119:10
'எள்ளல் நோனாப் பொருள்தரல் விருப்பொடு' - அகம்:29:20
'காண்டல் விருப்பொடு தளர்பு தளர்பு ஓடும்
பூங்கண் புதல்வனை நோக்கி' - அகம்:66:11-12
'கோடிக் கலிங்கத்து
ஒடுங்கினள் கிடந்த ஓர்புறம் தழீஇ
முயங்கல் விருப்பொடு முகம்புதை திறப்ப' - அகம்:86:21-23
'அரும்பெறல் உலகத்து ஆன்றவர்
விதும்புறு விருப்பொடு விருந்தெதிர் கொளற்கே' - புறம்:213:24-25
'விருப்பிலார் இல்லத்து வேறிருந்(து) உண்ணும்
வெருக்குக்கண் வெங்கருனை வேம்பாகும்' - நாலடி:210:1-2
'நன்றிசாம் நன்றறியா தார்முன்னர்; சென்ற
விருந்தும் விருப்பிலார் முன்சாம்' நான்மணி:44:1-2
'எனைவிருப் புடையர் ஆயினும் நினைவிலர்' - நற்:130:6

*'விருந்து விருப்புறூஉம் பெருந்தோட் குறுமகள்'* - நற்:221:8
*'நயந்துநம் கேண்மை விருப்புற்றவனை'* - கலி:60:31
*'அவவுஉறு நெஞ்சம் கவவுநனி விரும்பி'* - ஐங்.:360:3
*'ஐய, விரும்பிநீ*
*என்தோள் எழுதிய தொய்யிலும்'* - கலி:18:3
*'சென்றதற் கொண்டு மனையோள் விரும்பி*
*வரகும் தினையும் உள்ளவை யெல்லாம்*
*இரவன் மாக்கள் உணக்கொளத் தீர்ந்து'* - புறம்:333:8-10
*'நல்லார் எனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை*
*அல்லார் எனினும் அடக்கிக் கொளல்வேண்டும்'* - நாலடி:221:1-2

விழைவு *(தன் அகத்தேவை விருப்பம்)*

*'இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்*
*துன்பம் துடைத்தூன்றும் தூண்'* - 615
*'இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்*
*துன்பம் உறுதல் இலன்'* - 628
*'இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்*
*துன்பம் உறுதல் இலன்'* - 629
*'இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகுந்தன்*
*ஒன்னார் விழையும் சிறப்பு'* - 630
*'மன்னர் விழைப விழையாமை மன்னரால்*
*மன்னிய ஆக்கம் தரும்'* - 692
*'கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை*
*விடாஅர் விழையும் உலகு'* - 809
*'மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்*
*வேண்டாப் பொருளும் அது'* - 901
*'பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்*
*நாணாக நாணுத் தரும்'* - 902
*'அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்*
*இன்சொல் இழுக்குத் தரும்'* - 911
*'உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்*
*விட்டேம்என் பார்க்கும் நிலை'* - 1036

'யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனை' - அகம்:16:5
'செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சி' - அகம்:66:3
'விழையா உள்ளம் விழையும் ஆயினும்' - அகம்:286:8
'வீதேர் பறவை விழையும்
போதுஆர் கூந்தல்நம் காதலி கண்ணே' - அகம்:371:13-14
'வீறுசால்
மன்னர் விழையும் குடிஉள' - நான்மணி:51:3
'இன்னா, முலை இல்லாள் பெண்மை விழைவு' - இன்னா. நா.:12:3
'ஒப்ப, விழைவுஇலாப் பெண்டிர்தோள் சேர்வும்' - திரிகடுகம்:5:2
'பொருளல்ல காதற் படுக்கும் விழைவும்' - திரிகடுகம்:93:3
'அறிவு அழுங்கத் தின்னும் பசிநோயும், மாந்தர்
செறிவு அழுங்கத் தோன்றும் விளைவும்' - திரிகடுகம்:95:1-2
'மின்நேர் இடையார் சொல்தேறான், விழைவு ஓரான்' - ஏலாதி:20:1
'விழைந்துஒருவர் தம்மை வியப்ப ஒருவர்
விழைந்திலம் என்றிருக்கும் கேண்மை' - நாலடி:339:1-2
- 'விழைதக்க
மாண்ட மனையாளை இல்லாதான் இல்லகம்
காண்டற் கரியதோர் காடு' - நாலடி:361:2-4
'விழைந்தவரை வேறன்றிக் கொண்டொழுகல் வேண்டா' - பழமொழி:97:3
'விழைந்தார்போல் தீயவை பின்னரும் செய்தல்' - பழமொழி:211:2
'துனையுநர் விழைதக்க சிறப்புப் போல்' - கலி:145 1
'இளமையும் காமமும் ஓராங்குப் பெற்றார்
வளமை விழைதக்கது உண்டோ ?' - கலி:18:7-8
'மன்னவன் புறந்தர வருவிருந்து ஓம்பி
தன்னகர் விழையக் கூடின்
இன்னுறல் வியன்மார்ப அதுமனும் பொருளே' - கலி:8:21-23

வேட்கை (மன நாட்ட விருப்பம்)
(வேட்டல்)

'கேட்டார்ப் பிணிக்கும் தகைஅவாய் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்' - 643
'வேட்பத் தாம் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள்' - 646

'குறிப்பறிந்து காலம் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல்' - 696
'வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும்
கேட்பினும் சொல்லா விடல்' - 697
'வேட்ட பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள்' - 1105
'களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்
வெளிப்படும் தோறும் இனிது' - 1145
'வேட்கையின் மயங்கிய கையறு பொழுதினும்' - தொல்:1053:5
'வேட்கை, ஒருதலை உள்ளுதல், மெலிதல்

..................................................................

சிறப்புடை மரபினவை களவென மொழிப' - தொல்:1046:1,5
'குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை
நெறிப்பட வாரா அவள்வயி னானே' - தொல்:1054:3-4
'எளித்தல் ஏத்தல் வேட்கை உரைத்தல்

.......................................................................

உண்மை செப்பும் கிளவியொடு தொகைஇ' - தொல்:1153:1,3
'வரைதல் வேட்கைப் பொருள என்ப' - தொல்:1156:8
'நோயும் வேட்கையும் நுகர்வும் என்றாங்கு' - தொல்:1193:4
'நிகழ்தகை மருங்கின் வேட்கை மிகுதியிற்
புகழ்தகை வரையார் கற்பினுள்ளே' - தொல்:1174:1-2
'பசும்புளி வேட்கைக்
கடுஞ்சூல் மகளிர் போல' - குறுந்:287:5
'அரும்பொருள் வேட்கையின் உள்ளம் துரப்ப' - கலி:18:1
'கூடுதல் வேட்கையான் குறிபார்த்து' - கலி:46:12
'பெறல்நசை வேட்கையின் நின்குறி வாய்ப்ப' - கலி:93:17
'உடல்நிலை வேட்கையின் மடநாகு தழீஇ' - அகம்:64:12
'வெஞ்சினவேந்தன் வியன்பெரும் பாசறை
வென்றிவேட்கையொடு நம்மும் உள்ளார்' - அகம்:364:10-11
'நின்னசை வேட்கையின் இரவலர் வருவர்' - புறம்:3:24
'அறியுநர்க் காணின் வேட்கை நீக்கும்' - புறம்:154:2

'பருகு வன்ன வேட்கை யில்வழி
அருகிற் கண்டும் அறியார் போல' - புறம்:207:2-3
'ஒருவன்முகன் உரைக்கும் உள்நின்ற வேட்கை' - நான்மணி:68:2
'கெடாஅப்புகழ் வேட்கைச் செல்வர் மனம்போல்' - கார்:32:2
'ஆர்வுற்ற, விட்டகல கில்லாத வேட்கையும்' - திரிகடு:65:2
'கேட்பாரை நாடிக் கிளக்கப் படும்பொருட்கண்
வேட்கை அறிந்துரைப்பார் வித்தகர்' - பழமொழி:4:1-2
'அரும்பொருள் வேட்கையம் ஆகிநிற் றுறந்து' - ஐங்:359:1
'வேட்ட, அண்ணல் உள்ளமொடு அமர்ந்தினிது நோக்கி' - நற்:372:7
'நல்லிசை வேட்ட நயனுடை நெஞ்சின்
கடப்பாட் டாளனுடைப் பொருள் போல' - குறுந்:143:4-5
'உடங்குநீர் வேட்ட உடம்புஉயங்கு யானை' - கலி:12:4
'கொன்று களம்வேட்ட ஞான்றை
வென்றிகொள் வீரர் ஆர்ப்பினும் பெரிதே' - அகம்:36:22-23
'அடுகளம் வேட்ட வடுபோர்ச் செழிய' - புறம்:26:11
'புளிச்சுவை வேட்ட செங்கண் ஆடவர்' - புறம்:177:8
'வேட்ட, இனியவை செய்ப, அமைந்தார்' - நான்மணி:38:3
'அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடாஅது
மருந்து ஆய்ந்து கொடுத்த அறவோன் போல' - நற்:136:2-3
'ஓர்த்தது இசைக்கும் பறைபோல் நின்நெஞ்சத்து
வேட்டதே கண்டாய் கனா' - கலி:92:21-22

வேண்டுதல் (தன் புறத்தேவை விருப்பம்)

'வேண்டுதல் வேண்டாமை இலான்' - 4
'வேண்டற்க வெஃகிஆம் ஆக்கம்' - 177
'அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்' - 178
'வேண்டாமை என்னும் செருக்கு' - 180
'வேண்டாமை அன்ன விழுச்செல்வம்' - 363
'மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது' - 901
'பகையென்னும் பண்பி லதனை ஒருவ..

நகையேயும் வேண்டற்பாற் றன்று' - 871

'ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை' - 1003

'எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு' - 670

'விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையான்
கேளாது நட்டார் செயின்' - 804

'துணைநலம் ஆக்கம் தருஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும்' - 651

'நலம்வேண்டின் நல்குவர் காதலர் யாம்வேண்டும்
கௌவை எடுக்கும்இவ் வூர்' - 1150

'மாமலை நாட! காமம் நல்கென
வேண்டுதும்' - நற்:232:6

'எம்வயின் வருதல் வேண்டுதும் என்பது
ஒல்லேம் போல், யாம் அது வேண்டுதுமே' - ஐங்:88:3-4

'ஆண்டுஒன்று வேண்டுதும் என்பது உரையற்க' - பழமொழி:178:2

'பன்னாளும் சென்றக்கால் பண்பிலார் தம்முழை
என்னானும் வேண்டுப என்றிகழ்வர் - என்னானும்
வேண்டினும் நன்றுமற் றொன்று விழுமியோர்
காண்டொறும் செய்வர் சிறப்பு.' - நாலடி:159

'பகல் வளரார், நோயின்மை வேண்டு பவர்' - ஆசாரக்:57:4

'நின்குறை முடித்த பின்றை என்குறை
செய்தல் வேண்டுமால்; கைதொழுது இரப்பல்' - நற்:102:3-4

'நின்னொடு நீயே சூழ்தல் வேண்டும்' - நற்:122:10

'அருளல் வேண்டும் அன்புடையோய்' - நற்:342: 5

'ஒன்றுமொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமால் சிறிதே' - நற்:73:4-5

'கடவுள் பத்தினிக் கற்கோள் வேண்டி' - பதிற்று.5: பதிகம் 4

'தாம்வேண்டும் பட்டினம் எய்திக் கரைசேரும்
ஏமுறு நாவாய் வரவுஎதிர் கொள்வார்போல்' - பரி:10:38,39

'தாழ்வுழி உய்யாது தான்வேண்டும் ஆறுஉய்ப்ப' - பரி:11:110

'பொருள்வயிற் பிரிதல் வேண்டும் என்னும்
அருளில் சொல்லும்' - கலி:21:4-5

'விரிந்துஆனாச் சினைதொறூஉம்
வேண்டும்தாது அமர்ந்து ஆடி
புரிந்துஆர்க்கும் வண்டொடு' - கலி:30:2-3

'பின்ஈதல் வேண்டும் நீபிரிந்தோள் நட்பு' - கலி:48:21

'இனிநீ, நெடிது உள்ளல் ஓம்புதல் வேண்டும்' - கலி:50: 11

'பொருள்வேண்டும் புன்கண்மை ஈண்டில்லை' - கலி:61:15

'நின்னை யான் கழறுதல் வேண்டுமோ' - கலி:100:22

'தொல்ஊழி தடுமாறி, தொகல் வேண்டும் பருவத்தால்
பல்வயின் உயிர்எல்லாம் படைத்தான்கண் பெயர்ப்பான் போல்'
- கலி:129:1-2

'வருகென வேண்டும் வரிசை யோர்க்கே' - புறம்:207:6

'வான்சோறு கொண்டு தீம்பால் வேண்டும்' - புறம்:250:7

'தெண்ணீர் இருங்கழி வேண்டும் இரைமாந்தி
பெண்ணைமேல் சேர்க்கும் வணர்வாய்ப் புணர்அன்றில்' - ஐந்.எழு.:64:1-2

'வாய்ப்பகையுள்
சொல்வென்றி வேண்டும் இலிங்கியும்' - திரிகடு:17:3

'வெங்கோன்மை வேந்தர்கண் வேண்டும் சிறிதெனினும்' - பழமொழி:248:3

'முட்டாதுஅவரை வியங்கொள வேண்டுமால்' - பழமொழி:279:2

'மற்றுஈண்டு, இடம்பொழிய வேண்டுமேல் ஈகை' - சிறுபஞ்.:4:2

'நச்சல் கூடாது பெரும! இச்செலவு
ஒழிதல் வேண்டுவல்' - கலி:8:19-20

'வதுவை அயர்தல் வேண்டுவல்' - கலி:52:23

'மருளி மடநோக்கின் நின்தோழி என்னை
அருளியல் வேண்டுவல் யான்' - கலி:61:16-17

'வழிமுறைக் காயாமை வேண்டுவல்யான்' - கலி:82:7

'நீஎம்மை வேண்டுவல் என்று விலக்கினை' - கலி:94:7

'கோயிலுள் கண்டார் நகாமை வேண்டுவல்' - கலி:94:39

'செல்லாது நன்றியல் வேண்டுவல்' - கலி:145:28

'அதர்ப்பட அருளல் வேண்டுவல்' - புறம்:159:26

'நாற்கதியும் துன்பம் நவைதீர்த்தல் வேண்டுவான்' - ஏலாதி:77:1

**'இல்லானை**

**இல்லாளும் வேண்டாள்; மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்' - நல்வழி:34:3**

**'பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான்' - நீதிநெறி விளக்கம்:19:1**

**'ஆக்கும் அறிவான் அலது பிறப்பினால்**

**மீக்கொள் உயர்வுஇழிவு வேண்டற்க' - நன்னெறி:22:1-2**

**'எள்ளா திருப்ப இழிஞர்போற் றற்குரியர்;**

**விள்ளா அறிஞரது வேண்டாரே' - நன்னெறி:33:1-2**

**- 'வெற்றிநெடு**

**வேல்வேண்டும் வாள்விழியாய்! வேண்டா புளிங்காடி**

**பால்வேண்டும் வாழைப் பழம்' - நன்னெறி:35:3-4**

**வேணவா (தன் நலம் கருது விருப்பம்)**

**'கேளாய், எல்ல தோழி! அல்கல்**

**வேணவா நலிய வெய்ய உயிரா**

**ஏமான் பிணையின் வருந்தின னாக' - நற்:61:1-3**

*வெஃகுதல் (பிறர் உடைமை கவர்தல் விருப்பம்)*

(இஃது, இம்முன்னுரை முற்பகுதியுள் விளக்கப்பெற்றது)

இங்குக் காட்டப்பெற்ற விருப்பப் பொருள்தரும் பல்வேறு தமிழ்ச் சொற்களும், அவற்றுக்கான நுண்பொருள்களும், அவற்றை உறுதிப்படுத்துவதற்கான கழகக்கால, பிற்கால இலக்கிய எடுத்துக்காட்டுகளும், கூடுதலான முயற்சியும் உழைப்பும், விளக்கமும் என்று கருதத் தோன்றினும், அவை இவ்வதிகார விளக்கத்திற்கும் அது தொடர்பாக விளங்கிக் கொள்ளவேண்டிய நுட்ப உணர்வுகளுக்கும் மிகுதேவையாகும்.

பிறன்பொருள் விரும்புவது அறக்குற்றம் மட்டும் அன்று; மறக்குற்றமுமாகும். இவ்வுணர்வு பொதுமை உணர்வுக்கும் பொதுவுடைமை அமைப்பிற்கும் மிகவும் எதிரானதாகும்.

பிறன்பொருள் விரும்புவது, களவுக்கு அடிப்படையானது; களவு கொள்ளைக்கு வழிகோலுவது; கொள்ளை, கொலைக்குத் தூண்டுவது; கொலை மாந்த இனத்துக்கு மாறானது. எனவே, இவ்வளர்ச்சியுற்ற உணர்வுக்கு முன்னுள்ள பல்வேறு வகையான மாந்த நேய உணர்வுகள் நுட்பமாகக் காட்டப்பெற்றுள்ளன. அவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டு மாந்தப் பண்பைக் குழிதோண்டிப் புதைக்கும் பிறன்பொருள் விரும்புதல் என்னும் உணர்வின் கனத்த மனநிலை விளக்கம் இங்குக் கூற வேண்டுதல் தேவையாயிற்றென்க.

தன்முயற்சியையும், தன்னொழுக்கத்தையும் கெடுக்கும் இப் பிறன் பொருள் விரும்புதல் மிக அறக்கேடாகும்.

இதன் நுட்பமான அறக்கேடுகள் ஆசிரியரால் இவ்வதிகாரத்தின்கண் நன்கு விளக்கப் பெறுகின்றன.

இவ் வதிகாரம், முந்தைய, பிறர் பொருள் கண்டு பொறாமைப் படுதலாகிய 'அழுக்காறாமை' என்னும் அறக்கேட்டினுக்குப் பின்னர் நிகழும், அதனினும் கூடிய அறக்கேடு ஆகலின், அவ்வதிகாரத்தின் பின்னர் வைக்கப்பெற்றது, என்க.

## கஎக. நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக் குற்றமும் ஆங்கே தரும். - 171

**பொருள்கோள் முறை : இயல்பு.**

**பொழிப்புரை :** நடுவுநிலையில்லாமல், பிறனுடைய (நேர்மை உழைப்பால் வந்த) நற்பொருளைக் கவர்ந்து கொள்ள விரும்பினால், (அக்கெடுதலான எண்ணம் செயலாக வளர்ந்து, அக் கொடுமையும் நேருமானால்) அஃது அவ்வாறு செய்தவனின் குடிமுறையையும், அவன் வாழ்தலுற்ற குடிமை நலத்தையும் குறையச் செய்து, அவனுக்கும் பல வகையான குற்றங்களையும், அவற்றுக்கான தண்டனைகளையும் உண்டாக்கித் தரும்.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. **நடுவின்றி - நடுவுநிலையில்லாமல்.**

- தான் முயன்று ஈட்டுவதற்குரிய எண்ணமில்லாமல், தன் மன நிலையில் தாழ்ந்து, பொறாமை உணர்வுடன், பிறன் பொருளும் அவன் முயற்சியால் வந்தது என்று எண்ணும் நடுவுநிலை உணர்வில்லாமல்.
- பிறன்பொருளைக் கண்டு பொறாமை உணர்வு தோன்றியவுடனேயே ஒருவனின் நடுவு நிலையுணர்வு பிறழ்ந்து விடுகின்றது என்க.
- நடுவுநிலையுணர்வு இல்லாமற் போனவுடன்தான், ஒருவன் பிறன் பொருளைக் கவர விரும்புகிறான் ஆகலின், அவன் நடுவுநிலை யில்லாமற்போன மனவுணர்வை முதற்கண் சுட்டினார் என்க.

2. **நன்பொருள் வெஃகின்** - பிறனுடைய நேர்மை உழைப்பால் வந்த நற்பொருளைக் கவர்ந்து கொள்ள விரும்பினால்.

- பிறனது உழைப்பால் நேரிய வழியில் வந்த பொருளாதலின் 'நன்பொருள்' என்றார்.
- அவ்வாறில்லாது, தீய வழியில் பிறனீட்டிய பொருளை வெஃகலாமோ எனின், அஃது அற்றன்று, பிறன்பொருளை விரும்புதற்கு முன், அதைக்

கண்டு பொறாமைப்படுவதே அறக்குற்றமாக முன்னர்க் கூறினாராகலின், அதுவும் குற்றமே ஆதல் பெறப்படும் என்க.

- இதற்குப் பொருள் கூறவந்த உரையாசிரியர் பலரும், 'வெஃகின்' என்பதே, அஃதாவது 'பிறன் பொருளைக் கவர விரும்புவதே', குடிபொன்றவும், குற்றந்தரவும் ஆன குற்றம் என்று பொருள் படும்படி பொருள் தந்துள்ளனர்.

- அது நிறைபொருளன்று. நிகழ்பொருளும் அன்று. பிறன் பொருளை விரும்புவதும், அதன்பின் அதைக் கவர நினைப்பதும், அதைக் கவர்வதும், அதன்வழிப் பல கொடுமை நிகழ்வதும் - என்னும் தொடர் நிகழ்வுகளையும் அப்பொருள் உள்ளடக்கியதாதல் வேண்டும். இல்லையேல், 'பிறன் பொருளைக் கவர விரும்புவது' ஒருவன் மனத்துள் நிகழும் குற்றமாகலின், அதைப் பிறர் கண்டு கொள்வது யாங்கன்? கண்டு கொள்ளாத வழி, குடி பொன்றலும் குற்றம் வருவதும் எவ்வாறு?

ஒருவன் நினைப்பதே இத்தனைப் புற விளைவுகளை உருவாக்கி விடுதல் உலகியலுக்கும் அறிவியலுக்கும் பொருந்துமாறில்லை. அத்துடன் அறவியலைக் கற்பனை சார்ந்த மதவியலாக ஆக்குவதும் இது. அறவியல் உலகியலுக்கும் இயங்கியலுக்கும் மாந்தவியலுக்கும் பொருந்துவதாக அமைவதே இயற்கையானது. கற்பனைகளும் இறும்பூதுகளும் (அதிசய நிகழ்வுகளும்) மதவியலுக்கே பொருந்துவன. அவை மூடநம்பிக்கை உடையன. அறிவியலுக்குப் பொருந்தா.

3. **குடிபொன்றிக் குற்றமும் ஆங்கேதரும்** - அஃது அவ்வாறு செய்தவனின் குடிமுறையையும், அவன் வாழ்தலுற்ற குடிமை நலத்தையும் குறையச் செய்து, அவனுக்கும் பல வகையான குற்றங்களையும் அவற்றுக்கான தண்டனைகளையும் உண்டாக்கித் தரும்.

- இது, படிப்படியாக நிகழும் ஒன்றை, உறுதி காரணமாக அதன் முடிவை மட்டும் கூறி, விளங்க வைக்கும் புலமை உத்தி.

**'கூழும் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்**
**சூழாது செய்யும் அரசு'** - **554**

**'வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்**
**ஒருவந்தம் ஒல்லைக் கெடும்'** - **563**

**'ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து**
**வேந்தனும் வேந்து கெடும்'** - **999**

- என்பன போலும் அது. இதில் மிகைப்படக் கூறுதலும் உடனடி நிகழ்வு என்பதும் இல்லை. உறுதிப்பாடே உளதென்க.

- குடிபொன்றுதலும், குற்றங்கள் நேர்வதும் படிப்படியாக நிகழும் நிகழ்வுகள் என்க.
- பொன்றுதல் குறைதல், கெடுதல், அழிதல்.
- 'பொன்றுவித்து' என்னும் பிறவினைச் சொல், 'பொன்றி' என்னும் தன்வினைச் சொல்லாக வந்தது வினைத்திரிபு.
- பிறர் பொருளைக் கவர்தலால் நேரும் இழுக்கால், தன் குடும்பச் சீர்மை குன்றி, குடும்பநலம் அழிதலும்,
- இத்தகைய நடைமுறை அனைவரிடமும் நிகழ நேரின், அவர்சார்ந்த குடிமை நலமும் சிதைவுறுதலும் - இயல்பாகலின் பின்னர் நிகழப்போகும் அவற்றை முன் வைத்துக் கூறினார், என்க.

## களஉ. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
## நடுவன்மை நாணு பவர். - 172

**பொருள்கோள் முறை :**

**நடுவன்மை நாணுபவர், படுபயன்**
**வெஃகிப் பழிப்படுவ செய்யார்.**

**பொழிப்புரை** - நடுவுநிலையல்லாமைக்கு நாணுபவர், பிறர் பொருளைக் கவர்தலால் வருகின்ற பயன்களை மட்டும் விரும்பிப் பழியேற்படும் செயல்களைச் செய்யமாட்டார்.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. **நடுவன்மை நாணுபவர்** - நடுவுநிலையல்லாமைக்கு நாணுபவர்.

- நடுவன்மை - நடுவுநிலை அல்லாத தன்மை.
- நாணுபவர் - உள்ளத்தால் வெட்கப்படுபவர்.
- நாணம் - மனவுணர்வு குறுகுதல்.
- வெட்கம் - உடலுணர்வு குறுகுதல்.
- கூச்சம் - உடல் நொசிவு.
- 'நாணம்' - சிறப்பாகப் பெண்களிடத்தும், பொதுவாக ஆண்களிடத்தும் இயற்கையாக அமைந்துள்ள ஒரு குறுகுதல் உணர்வு.
- பெண்மைக்கு அது பெண்மைச் சிறப்பாகவும், ஆண்மைக்கு அது

குற்றத்திற்கும் பழிக்கும் மனம் குறுகும் ஓர் நல்உணர்வாகவும் உள்ளதை உணர்க.

நூலாசிரியர் அதுதொடர்பாகக் கூறும் சில கருத்துகள் இங்குக் கவனிக்கத் தக்கன.

1. நாணம் - மனவுணர்வு குறுகுதல் :

**'நாண்அகத் தில்லார் இயக்கம் மரப்பாவை**
**நாணால் உயிர்மருட்டி யற்று' - 1020**
**'நாண் ஆள்பவர்' (மன ஆளுமை) - 1017**
**'தம்நெஞ்சத்து எம்மைக் கடிகொண்டார், நாணார்கொல்**
**எம்நெஞ்சத்து ஓவா வரல்' - 1205**
**'நிறையென்னும் நாணு' - 1251**
(நிறை - மனவுணர்வின் நிறைந்த தன்மை)

2. **நாணம் நல்ல பெண்களுக்கு இயல்பான உணர்வு :**

**'திருநுதல் நல்லவர் நாணுப் பிற' - 1011**
**'நாணுடைப் பெண்ணே பெருமை யுடைத்து' - 907**
**'நாண் என்னும் நல்லாள்' - 924**

3. நாணம் பெண்மைக்கு அழகு தருவது; ஆண்களைக் கவர உதவும் ஓர் உணர்வு :

**'பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்கு**
**அணிஎவனோ ஏதில தந்து' - 1089**

(நாணும் உடையாட்கு என்றதால் பெண்டிர் சிலர்க்கு நாணின்மை உணர்த்தப் பெற்றது)

4. நாணம் மக்கள் பிறவிக்கு உகந்த பொதுத் தன்மை:

**'ஊணுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல**
**நாணுடைமை மாந்தர் சிறப்பு' - 1012**
**'இயல்பாகச் செப்பமும் நாணும்' - 951**

5. சான்றோர்க்கு நாணம் பெருமைக்குரியது :

**'அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கு' - 1014**
**'ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்**
**இழுக்கார் குடிப்பிறந் தார்' - 952**

**'அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு**
**ஐந்துசால்பு ஊன்றிய தூண்'** - **983**

6. பழிக்கும் குற்றத்திற்கும் நாணுபவர் சிறந்தவர் :

**'பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்**
**அறம்நாணத் தக்கது உடைத்து'** - **1018**

**'பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு**
**உறைபதி என்னும் உலகு'** - **1015**

**'குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்**
**நாணுடையான் கட்டே தெளிவு'** - **502**

**'தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்**
**கொள்வர் பழிநாணு வார்'** - **432**

**'குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்**
**கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு'** - **794**

7. நாணம் நன்மைதரும்; நாணின்மை நலங்கெடுக்கும் :

**'ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாண்என்னும்**
**நன்மை குறித்தது சால்பு'** - **1013**

**'நலம்சுடும் நாணின்மை நின்றக் கடை'** - **1019**

8. பழிக்கும் குற்றத்திற்கும் நாணும் நாணம் உயர்ந்தவர்க்கு அவரைக் காக்கும் வேலி போன்றது:

**'நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்**
**பேணலர் மேலா யவர்'** - **1016**

9. நாணம் உள்ளவர்க்கே நல்லாண்மை இருக்கும் :

**'நாணொடு நல்லாண்மை' (1132, 1133)**

- இங்கு நடுவுநிலைமை இல்லாத மனவுணர்வுக்கும் நாணுதல் வேண்டும் என்றார், அதனால் பழி வருதலின் என்க.

2. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார் - பிறர்பொருளைக் கவர்தலால் வருகின்ற பயன்களை மட்டும் விரும்பிப் பழியேற்படும் செயல்களைச் செய்யமாட்டார்.

படுபயன் வெஃகி - பிறர் பொருளைக் கவர்தலால் வருகின்ற பயன்களை மட்டும் விரும்பி.

பழிப்படுவசெய்யார் - பழியேற்படும் செயல்களைச் செய்யமாட்டார்.

- பழியேற்படும் செயல்கள், பிறன்பொருளைக் கவர்தல், இயலாவழி அவனுக்குத் தீங்கு செய்து, அல்லது அச்சுறுத்திப் பொருளைப் பறித்தல், அதனினும் இயலா வழி அவனைக் கொல்லுதல் முதலியன.

- நடுவுநிலை உணர்வு அவனுக்கு இருப்பின், தன் பொருளைப் போலவே அவன் பொருளும் துய்ப்பதற்குரியது என்று கருதி, அதை விரும்புதலோ, கவர்தல் செய்தலோ அவனிடம் நிகழா.

- நடுவுநிலையைக் கைவிடின், அப்பழிச் செயல்கள் ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றும் என்றார்.

- இனி, படுபயன் வெஃகுதலாவது, பிறன் பொருளைக் கவர்ந்த விடத்து, அதால் தனக்கு விளைவித்துக் கொள்ளும் பயன்களை விரும்புதல்.

3. இது, முன்னைய குறளில் கூறப்பெற்ற 'நடுவின்றி நன்பொருள்' வெஃகப்படும் தன்மையால் பயன்கள் விளையா, பழிதான் விளையும் என்று மேலெடுத்துக் கூறுவதால் அதனையடுத்து வைக்கப் பெற்றது, என்க.

**கஎந. சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே**
**மற்றின்பம் வேண்டு பவர் - 173**

**பொருள்கோள் முறை : இயல்பு.**

**பொழிப்புரை :** *(பிறன் பொருளைக் கவர்தலால் வரும்) சிறுமை தரும் நிலையற்ற இன்பத்தை விரும்பி, அறன் அல்லாத, (அதுவும் பிறவுமான) செயல்களைச் செய்ய மாட்டார்கள், பெருமை தரும் நிலையான இன்பத்தை விரும்புபவர்கள்.*

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. **சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யார்** - *(பிறன் பொருளைக் கவர்தலால் வரும்) சிறுமை தரும் நிலையற்ற இன்பத்தை விரும்பி, அறன் இல்லாத (அதுவும் பிறவுமான) செயல்களைச் செய்யமாட்டார்கள்.*

சிற்றின்பம் - சிறுமை தரும் நிலையற்ற இன்பத்தை.

சிற்று இன்பம் - சிற்றின்பம் பயனாலும் காலத்தாலும் சிறுமை உணர்த்தப் பெற்றதால் சிற்றின்பம் ஆனது. இஃது, இங்கு உடலின்பத்தைக் குறித்ததன்று.

- சிற்றின்பம் என்றதால், 'பிறர் பொருளைக் கவர்தலால் வரும்' என்னும் கருத்து அதிகாரப் பொருள் நோக்கி வருவிக்கப் பெற்றது.

*அறனல்ல செய்யார் - பிறன்பொருளைக் கவர்தலும் பிறவுமான அறனல்லாத செயல்களைச் செய்யமாட்டார்.*

*- பிற அறனல்லாத செயல்கள் கவர்தலும், அஃது இயலாவிடத்து, அடித்துத் துன்புறுத்திப் பறித்தலும், அதுவும் இயலாவிடத்துக் கொலை முதலியன செய்தலுமான செயல்கள்.*

*2.* **மற்றின்பம் வேண்டுபவர்** *- பெருமை தரும் நிலையான இன்பத்தை விரும்புபவர்கள்.*

*- காலத்தாலும் பயனாலும் பெருமை உணர்த்தப் பெற்றது.*

*- சிறுமைக்கு எதிரானதால் பெருமை ஆயிற்று.*

*- பேரின்பம் என்று கருதப்பெறும். வீட்டின்பத்திற்கும் பெருமையே முதல் ஆனதால், மற்றின்பத்தை மணக்குடவரும், பரிதியாரும் வீட்டின்பம் என்று கொண்டனர். இதுபொருள் பொருத்தமும் இயங்கியல் இயல்பும் அல்லாத கற்பனையாம்.*

*- வேண்டுபவர் - விரும்புபவர்.*

*- பிறர் பொருளைக் கவர்தலால் பெறும் பயனின்பம், பழியையும் குற்றத்தையும் தண்டத்தையும் வருவித்தலால், சிறுமையும், நிலையற்றதும் ஆகும்.*

*- அவ்வாறின்றித் தன் முயற்சியாலும் உழைப்பாலும் வரும் இன்பம் பெருமைக்குரியதும் நிலையுள்ளதும் ஆகும்.*

*- எனவே, அறனல்லவற்றைச் செய்து சிற்றின்பத்தையும் நிலையற்றதையும் பெறுவதைவிட, அற முயற்சியாலும் நேரிய உழைப்பாலும் வருவதும் பெருமைக்கும் நிலைப்புக்கும் உரியதுமான பொருளைப் பெறுவதே சிறப்பு என்று அறிவுறுத்தினார் என்க.*

*3. இது, முன்னைக் குறளில் கூறப்பெற்ற, 'படுபயன்' என்பதற்கும், 'பழிபடுவ' என்பதற்கும் விளக்கம் கூறுதலால், அதனையடுத்து வைக்கப் பெற்றது.*

**கஎச. இலம்என்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற**
**புன்மையில் காட்சி யவர். - 174**

**பொருள்கோள் முறை :**

***புலம் வென்ற புன்மையில் காட்சியவர்***
***இலம் என்று வெஃகுதல் செய்யார்.***

**பொழிப்புரை :** அல்வழிகளில் செல்லும் ஐம்புலன்களையும் நல்வழிகளில் செலுத்துதலால், அவற்றின் ஆளுமையை வென்ற புல்லிமையில்லாத நல்லறிவுடையவர், தமக்கு இல்லையே என்றெண்ணிப் பிறர் பொருளைக் கவர்ந்து கொள்ளும் தீச்செயலைச் செய்யார்.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. **புலம் வென்ற புன்மையில் காட்சியவர்** - அல்வழிகளில் செல்லும் ஐம்புலன்களையும் நல்வழிகளில் செலுத்துதலால், அவற்றின் ஆளுமையை வென்ற புல்லிமை யில்லாத நல்லறிவுடையவர்.

புலம் வென்ற - மெய், வாய், செவி, மூக்கு, கண் என்னும் ஐம்புலன்களையும், அல்வழிகளில் செல்லாமல், நல்வழிகளில் செலுத்துதலால், அவற்றின் ஆளுமையை வென்ற.

- புலம் - மெய், வாய், செவி, மூக்கு, கண் என்னும் ஐம்புலன்கள்.

- வென்ற - வெல்லுதல் செய்த.

வெல்லுதல் - இயல்பாகவே ஐம்புலன்களும் கவர்ச்சி நோக்கி, மனவழிப்பட்டு, அறமல்லாத வழிகளில் செல்லும் திறத்தன.

- புலன்கள் வழிச் செல்லுதலாவது, அவற்றின் நுகர்ச்சியின்பத்தை விரும்பிப் பொருள்வழி அவற்றைப் பெறவேண்டிப், பிறன் பொருளைக் கவர விரும்புதல்.

அவற்றை அவ்வாறு செல்லவிடாமல், அறமான நல்வழிகளில் செல்லவிடுதலால், அவற்றின் ஆளுமையை வென்ற.

அவை அவற்றின்வழிப் போகாமல், தடுத்து நிறுத்தி, நல்வழிகளில் கொண்டு செலுத்துதல், அதன் வழி அவற்றின் ஆளுமையை வெல்லுதல். என்னை?

'சென்றவிடத்தால் செலவிடாது தீதுஒரீஇ நன்றின் பால் உய்ப்பது அறிவு' (422) என்றாராகலின். இதனையே,

'உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்' (24) என்று முன்னரும் கூறினார்.

- புலன்களை வெல்லுதலாவது, அவற்றை நல்ல வழிகளில் செலுத்தும் ஆளுமை பெறுதல். என்னை?

'தன்வழியில் செல்லும் அடர்த்த குதிரை போன்றவற்றை அடக்கி நல்வழியில் செலுத்துதல் போல', என்க.

- புலன்களை நல்வழிகளில் செலுத்துதலாவது, அவற்றை உழைப்பில்

ஈடுபடுத்தி, நேர்மையாகப் பொருள் ஈட்டும் அறமுயற்சிகளில் செல்லுமாறு உய்த்தல்.

**'மெய்வாய்கண் மூக்கு செவியெனப் பேர்பெற்ற**
**ஐவாய வேட்கை யவாவினைக் - கைவாய்க்**
**கலங்காமல் காத்துஉய்க்கும் ஆற்றல் உடையான்'** **- நாலடி:59**

- என்றார் பிறரும்.

- புன்மை இல் காட்சியவர் - புல்லிமை இல்லாத நல்லறி வுடையவர்.

- புன்மை - புல்லியதன்மை.

- அது, விலங்குகள், பறவைகள் போல், பார்த்தது பார்த்தபடியே, கேட்டது கேட்டபடியே, 'தான் கண்டவாறு காணுதல்' (849).

புன்மை இல் - அவ்வாறு புல்லிய தன்மையில்லாத.

காட்சி- அறிவு. அறிவுக்குக் காணுதல் அடிப்படை என்க.

- பார்த்தபடி, கேட்டபடியே இல்லாமல் அவற்றின் உண்மைத் தன்மையை அறிதல்.

- திரிபின்றி அறிதல். என்னை?

**'எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு'** **- (355)**
**'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு'** **- (423)**

- என்றார் ஆகலின்.

- 'காட்சி'யை 'அறிவு' என்று இந்நூலுள் பலவிடத்தும் கூறுவார்.

**'மருள்தீர்ந்த மாசறுகாட்சி'** **- 199**
**'கடனறி காட்சி'** **- 218**
**'செயிரின் தலைப்பிரிந்த காட்சி'** **- 258**
**'மாசறு காட்சி'** **- 352**
**'நடுக்கற்ற காட்சி'** **- 654**
**'துளக்கற்ற காட்சி'** **- 699**

- 'காட்சி'யை அறிவெனல் பண்டையோர் வழக்கு.

**'திறப்படத் தெரியும் காட்சி'** **- தொல்:83**
**'செயிர்தீர் காட்சி'** **- தொல்:1059**

| | |
|---|---|
| 'ஒத்த காட்சி' | - தொல்:1610 |
| 'புகர்அறு காட்சி' | - பரி:1:48 |
| 'துகள்தபு காட்சி அவையத்தார்' | - கலி:94:42 |
| 'அருள்தீர்ந்த காட்சியான் அறம்நோக்கான்' | - கலி:120:1 |
| 'செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சி' | - அகம்:66:3 |
| 'வேறுஅல் காட்சி' | - அகம்:73:9 |
| 'பொருள்அல் காட்சி' | - அகம்:75:2 |
| 'கல்லாக் காட்சி' | - அகம்:215:7 |
| 'கல்லாக் காட்சி' | - புறம்:170:3 |
| 'திறவோர் காட்சியில் தெளிந்தனம்' | - புறம்:192:11 |
| 'எண்ணில் காட்சி' | - புறம்:213:15 |

(சூழ்ச்சியில்லாத அறிவு)

| | |
|---|---|
| 'கசடீண்டு காட்சி' | - புறம்:214:2 |

(அழுக்குச் செறிந்த அறிவு)

| | |
|---|---|
| 'நில்லாத காட்சி நிறையில் மனிதர்' | - இனி.நா.:25:3 |
| 'ஐயம்தீர் காட்சி' | - கார்.நா.:12:2 |
| 'நிரம்பிய காட்சி' | - பழமொழி:143:2 |
| 'கற்றது உடைமை காட்சியின் அறிப' | - முதுமொழி:14 |
| 'தீக் காட்சி' | - ஏலாதி:27:2 |
| 'கடனறி காட்சியவர்' | - ஆசாரக்:36:5 |
| 'ஐயம்தீர் காட்சியார்' | - ஆசாரக்:38:2 |
| 'மெய்யாய காட்சியவர்' | - ஆசாரக்:89:3 |
| 'ஐயமில் காட்சியவர்' | - ஆசாரக்:94:4 |
| 'நடுக்கு அற்ற காட்சியார்' | - ஆசாரக்:99:2 |
| 'வாயின்பொய்கூறார்;வடுஅறு காட்சியார்' | - நாலடி:157:3 |

2. **இலம் என்று வெஃகுதல் செய்யார்** - தமக்கு இல்லையே என்றெண்ணிப் பிறர்பொருளைக் கவர்ந்துகொள்ளும் தீச் செயலைச் செய்யார்.

இலம் என்று - 'யாம் இலம்' என்று.

'எமக்கு இல்லையே' என்று

வெஃகுதல் செய்யார் - பிறர் பொருளைக் கவர்தற்கு விரும்புதல் செய்யார்.

- அறக்கேட்டிற்குப் பொருள் இல்லாமையும் ஓர் உலகியல் உண்மையாகலின், பொருள் இல்லாமையையும் முன்னிறுத்தி வெஃகுதலாகிய அறக்கேட்டைச் செய்யற்க என்றார், என்க.

- இதுபோல் அவர் பிறவிடத்தும் கூறுகின்றமை கவனிக்கத் தக்கது.

'இலன்என்று தீயவை செய்யற்க' - 205

3. புலம் வென்ற புன்மையில்லாத அறிவுடையாரே, இலம் என்று வெஃகுதல் செய்யார் - என்றது, அத்தகையோரே, பிறர் பொருளைக் கவர்தலால் விளையும் படிப்படியான கேடுகளை உணரமுடியுமாகலின் என்க. என்னை? 'அறிவுடையார் ஆவதறிவார் ஆகலின்' (427)

4. இது, சென்ற பாடலில், 'மற்றின்பம் வேண்டுபவர் அறனல்ல செய்யார்' என்றதற்கு மேல், அவர் புலம் வென்ற அறிவுடையாராகவும் இருத்தல் வேண்டும் என்று தகுதி கூறினார் ஆகலின், அதனை அடுத்து வைக்கப்பெற்றது என்க.

## கஎரு. அஃகி அகன்ற அறிவென்னாம் யார்மாட்டும் வெஃகி வெறிய செயின் - 175

**பொருள்கோள் முறை :**

> **அஃகி அகன்ற அறிவுஎன்னாம் வெஃகி**
> **யார்மாட்டும் வெறிய செயின்.**

**பொழிப்புரை :** ஆழமாகவும் அகலமாகவும் ஒருவன் கற்ற அறிவு என்ன பயனுக்கு ஆகும், அவன் பிறன் பொருளைக் கவர விரும்பி, யாவரிடத்தும் அறிவல்லாத செயல்களைச் செய்வானாயின்?

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. **அஃகி அகன்ற அறிவு என்னாம்?** - ஆழமாகவும் அகலமாகவும் ஒருவன் கற்ற அறிவு என்ன பயனுக்கு ஆகும்?

அஃகி - கூர்த்து, நுண்ணிதாகி.

கூர்த்தலும், நுண்ணிதாகிச் செல்லும் ஆழத்தைக் குறிக்கும்.

**அகன்ற அறிவு** - அகலமாக, பரந்து கற்கின்ற அறிவு.

- ஒருதுறையில் கற்றல் ஆழமாகக் கற்றல்

- பல துறைகளில் கற்றல் அகலமாகக் கற்றல்.

- இனி, ஒவ்வொரு துறையிலும் ஆழமாகவும் அகலமாகவும் கற்ற அறிவு எனப் பொருள்படும்.

**என்னாம்** - என்ன பயனுக்கு ஆம்?

- ஒருவன் கற்பதும் அறிவு பெறுவதும் வாழ்க்கையில் பயன் பெறுவதற்கேயாம்.

- பயன் பெறுதல், பதவிபெறுதல், பொருளீட்டல், அவற்றால் வசதி வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ளுதல்.

- இனி, அறிவு பெற்ற ஒருவன் அதனால், தன்முயற்சியுடன் தன் வாழ்க்கைக்குரிய பயன்களைப் பெறுதல் வேண்டும்.

- அவ்வாறல்லாமல், கற்ற கல்வியையும் அதனால் பெற்ற அறிவையும் தன் கையில் வைத்துக் கொண்டு, அவற்றால் பொருளையோ, வேறு பயன்களையோ பெற்றுக் கொள்ள முயற்சி செய்யாமல் வாளா இருப்பதும், எளிதே பிறன் பொருளைக் கவர நினைப்பதும், அறிவிருந்தும் அறியாமையில் இருக்கும் நிலைகளாகும்.

அதன் பொருட்டாகவே அவ்வறிவு என்ன பயனுக்கு ஆகும்? அஃதாவது, வாழ்க்கை, பொருள் ஆகிய இவற்றை உருவாக்கிக் கொள்ளப் பயன்படுத்தப்பெற வேண்டிய அறிவை, அவ்வகை முயற்சிகளில் அவன் ஈடுபடுத்தாவிடில், வேறு என்ன பயனுக்காக அவன் அவ்வறிவை அவ்வளவு ஆழமாகவும் அகலமாகவும் பெற்றான் என்பார்.

- ஒருவன் தன்முயற்சிக்காகவே காரணமாகிய அறிவைப் பெறுவது? இனி, அதைப் பெற்ற பின், அவன் அம்முயற்சிகளைச் செய்து பயன்பெறாவிடில், அவ் வறிவை வேறு எதற்காகத்தான் பெற்றான் என்று அவன் இழிவையும் அழிவையும் சுட்டிக்காட்டுவார், என்க.

- இனி, இவ்விடத்து நாம் இன்னொரு தடையையும் எண்ணிப் பார்த்தல் வேண்டும். அஃதாவது, இவ்வளவில் கற்றவன், இன்னொருவன் பொருளைக் கவர நினைப்பானோ என்பது,

இஃது அறிவியலுக்குப் பொருந்துவதன்று எனினும் உலகியலுக்கு மிகப் பொருந்துவதாம் என்க. என்னை? பெரும்பாலும் மிகுதியும் கற்றவனே உலகியலில், பெருங் கள்ளனாகவும், கொடியனாகவும், ஒழுங்கைக் கடைப்பிடியாதவனாகவும், அறவுணர்வற்றவ னாகவும் இருத்தலைக் காணலாகும். இதனைக் 'களவென்னும் காரறிவாண்மை' (287) என்றார், ஆசிரியரும்.

- ஆனால், அறிவியல்படியும் இது நிகழ்வதே. என்னை? மிகக் கற்றவன்

ஒருவன் தான் கற்ற அளவுக்கு ஒரு பயனளவை எதிர்பார்த்து, அது கிடையாவிடத்தும், தன்னளவிற் குறைவுறக் கற்றவன், தன்னினும் மிகு நலமாயும் வளமாயும் இருத்தலைக் கண்டவிடத்தும், அவன்மேற் பொறாமை கொள்ளுதலும், அவன் பொருளை வெஃகுதலும் கூடுவனவேயோம் என்க.

2. **யார்மாட்டும் வெஃகி வெறிய செயின்** - (அவன்) பிறன் பொருளைக் கவர விரும்பி, யாவரிடத்தும் அறிவில்லாத செயல்களைச் செய்வானாயின்.

யார்மாட்டும் - யாவரிடத்தும்.

- அஃதாவது ஆழமாகவும் அகலமாகவும் கற்று அறிவு பெற்றவனாகிய இவன், அவ்வாறு கல்லாதவரிடத்தும், அல்லது அதுபோலவே கற்றாரிடத்தும், ஏழையரிடத்தும், அல்லது செல்வரிடத்தும், பெண்டிரிடத்தும் சிறுவரிடத்தும் என்றவாறு.

வெஃகி - அவர்தம் பொருளை, ஈட்டத்தைக் கவர்ந்து கொள்ள விரும்பி.

வெறிய செயின் - வெறுமையான செயல்களை - அஃதாவது அறிவற்ற செயல்களைச் செய்வானாயின்.

வெறிய - வெள்ளிய - வெறுமையான - அறிவற்ற.

- இனி, வெறியுணர்வுச் செயல்களை என்னினும் ஆம்.

வெற்றுணர்வுச் செயல்கள் - அல்லது அறிவற்ற செயல்கள் - அல்லது வெறியுணர்வுச் செயல்களாவன,

- பிறன் தனக்காகத் திரட்டிய பொருளைக் கவர நினைத்தல். அவன் உரிமைக்கும் உடைமைக்கும் ஊறு செய்ய நினைத்தல்;

- அவன் அதைப் பெறுதற்குப் பல வன்மங்களையும் சூழ்ச்சிகளையும்-கையாளுதல்;

- அம் முயற்சிகளால் பயன்பெறாவிடில், அவனைக் கொல்லுதல் முதலியன.

- இவ்வாறான செயல்களின்றிப் பிறன்பொருளைக் கவர எண்ணுதலும் தீது என்பார்.

> **'உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்**
> **கள்ளத்தால் கள்வேம் எனல்'** **282**

3. புலன்கள் வழித்தாய உள்ளத்தாசையால் மட்டுமன்றிக் கற்றவழிப் பெற்ற அறிவாலும் பிறன் பொருளைக் கவர நினைக்கும் குற்றத்தை இது கூறலால், அதன்பின் இதனை அமைத்தார், என்க.

**கஎசு. அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும். - 176**

**பொருள்கோள் முறை :** **இயல்பு.**

**பொழிப்புரை** : *(உலக உயிர்கள் அனைத்துக்கும் வேறுபாடு காணாத) அருள் உணர்வே பெரிதென விரும்பி, அதைப்பெறும் பொதுமை அறவுணர்வால் நின்று ஒழுகுபவன், பிறனுடைய பொருளைக் கவர விரும்பித் தீய வழிகளை எண்ணுவானானால், அவனும் (பலவகைத் துன்பச் சூழல்களால் நெருக்குண்டு) கெடுவான்.*

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. **அருள் வெஃகி ஆற்றின்கண் நின்றான்** - *(உலக உயிர்கள் அனைத்துக்கும் வேறுபாடு காணாத) அருள் உணர்வே பெரிதென விரும்பி, அதைப் பெறும் பொதுமை அறவுணர்வால் நின்று ஒழுகுபவன்.*

*அருள் வெஃகி - (உலக உயிர்கள் அனைத்துக்கும் வேறுபாடு காணாத) அருள் உணர்வே பெரிதென விரும்பி.*

*- அருள் - அன்பின் வளர்ந்த நிலை.*

*- அன்பு - சிறப்பாக நெருங்கியாரிடத்தும் பொதுவாக மாந்தரிடத்தும் காட்டும் நேயவுணர்வு* (Love)

*- அருள் - பொதுவாக மக்களில் ஏழையரிடத்தும், சிறப்பாகப் பிறவுயிர்களிடத்தும் காட்டும் இரக்க உணர்வு (கருணை)* (grace, mercy) *அன்பு முதிர்தல் அருள்.*

**'அருளென்னும் அன்பீன் குழவி' - 757**

*என்பார் ஆசிரியர்.*

**'அன்பு இன்மையின் அருள்பொருள் எண்ணார்' - குறுந்.395:2**

*ஆற்றின்கண் நின்றான் - (அருளை விரும்பி) அதைப் பெறும் பொதுமை அறவுணர்வால் நின்று ஒழுகுபவன்.*

*- அன்பு பழுத்து, அருளாய்க் கனிந்து, அறவுணர்வாய்ச் சுவை பொதுளும் என்க. எனவே, அன்புணர்வே அருளுக்கு அடிப்படை; அருள் உணர்வே அறவுணர்வுக்கு அடிப்படையாய் அமைதல் காண்க.*

*இவ்வுண்மையை, நூலாசிரியர்,*

**'நல்லாற்றால் நாடி அருளாள்க' - 242**

*என்பார். மற்றும், அருளுணர்வில்லாதவன் அறவுணர்வைக்*

கடைப்பிடித்து ஒழுகல் இயலாது என்பதை, நூலாசிரியர்,

**'தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்**
**அருளாதான் செய்யும் அறம்'** - 249

என்பார். இதனையே சான்றோர் பலரும் வலியுறுத்துவர்.

**'அருளொடு புணர்ந்த அகற்சி'** - தொல்:1022:22
**'அருள்முந் துறுத்த அன்புபொதி கிளவி'** - தொல்:1107:1
**'பிறர்க்கென முயலும் பேரருள் நெஞ்சம்'** - நற்.:186:8
**'அருள்குடை யாக அறம்கோல் ஆக'** - பரி.:3:74
**'அருளும் அன்பும் அறனும் மூன்றும்'** - பரி:5:80
**'அருளுறச் செயின்நுமக்கு அறனுமார் அதுவே'** - கலி:140:34
**'அருள்வல்லான் ஆக்கம்போல் அணிபெறும்'** - கலி:38:16
**'அருள்தீர்ந்த காட்சியான் அறம்நோக்கான் நயஞ்செய்யான்'** - கலி:120:1
**'அல்லது கெடுப்பவன் அருள்கொண்ட முகம்போல'** - கலி:148:1
**'அறம்செய்து அருளுடையார் ஆகுமின்'** - நாலடி:7:3
**'அருளின் அறமுரைக்கும் அன்புடையார் வாய்ச்சொல்**
**பொருளாகக் கொள்வர் புலவர்'** - நாலடி:321:1-2
**'அருளில் பிறக்கும் அறநெறி'** - நான்மணிக்:5:3
**'அற்றாக நோக்கி அறத்திற்கு அருளுடைமை**
**முற்றாக அறிந்தார் முதலறிந்தார்'** - பழமொழி:141:1-2
**'அறம்செய்து அருளுடையார் ஆதல்'** - பழமொழி:215:2
**'அறனும் அருளுடையான் கண்ணதே ஆகும்'** - சிறுபஞ்ச:1:2
**'நெகிழ்ந்த அருளினான் ஆகும்அறம்'** - சிறுபஞ்ச:33:4

- மேலும், நூலாசிரியர் அருளை அடையவே அன்பு செய்வார்; அவ்வருளையும் அன்பையும் கைக் கொண்டுதான் பொருள் முயற்சியும் செய்வார் என்று விளக்குவார்.

**'அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்**
**புல்லார் புரள விடல்'** - 755

**'அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்**
**பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்'** - 285

- பிறரும் அதையே எடுத்து மொழிதலும் காண்க:

**'இருள்படு நெஞ்சத்து இடும்பை தீர்க்கும்**

**அருள்நன்கு உடையர் ஆயினும் ஈதல்**
**பொருளில் லோர்க்குஅஃது இயையாது' - அகம்:335:1-3**
**'உயிர்கட்கு அருளுடையெம்' - திரிகடு:36:1**
**'வல்லா ராயினும் வல்லுநர் ஆயினும்**
**வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி**
**அருள வல்லை ஆகுமதி' - புறம்:27:15-17**

- மாந்தர்க்கு அருளுணர்வே காப்புணர்வாக நிற்கும் என்பது ஆசிரியர் கருத்து.

**'மன்னுயிர் ஓம்பி அருள்ஆள்வாற்(கு) இல்லென்ப**
**தன்னுயிர் அஞ்சும் வினை' - 244**
**'அல்லல் அருளாள்வார்க்கு இல்லை' - 245**

- இதனையே,

**'அருளும் அன்பும் நீக்கி நீங்கா**
**நிரையம் கொள்பவர்' - புறம்:5: 5-6**

என்றார் பிறரும்.

2. **பொருள்வெஃகிப் பொல்லாத சூழக்கெடும்** - பிறனுடைய பொருளைக் கவர விரும்பித் தீய வழிகளை எண்ணுவானானால், அவனும் (பலவகைத் துன்பச் சூழல்களால் நெருக்குண்டு) கெடுவான்.

பொருள் வெஃகி - பிறனுடைய பொருளைக் கவர விரும்பி.

பொல்லாத சூழக்கெடும் - தீய வழிகளை எண்ணுவான் ஆனால், அவனும் (பல்வகைத் துன்பச் சூழல்களால் நெருக்குண்டு) கெடுவான்.

- பொல்லாத சூழ- தீய வழிகளை எண்ணுவானானால்.

பொல்லாத - பிறனுடைய பொருளைக் கைப்பற்றுதற்குரிய பல்வேறு முயற்சிகள்.

சூழ - ஆராய்வானானால்.

எண்ணுவானானால்.

- கெடும் - கெடுவான்.

கெடுவது - பல்வகைத் துன்பச்சூழல்களால் நெருக்குண்டு கெடுதல்.

- 'பொல்லாத சூழக் கெடும்' என்பதற்குப் பரிமேலழகர், 'பிறர் பொருளை அவாவி அதனை வருவிக்கும் குற்றநெறிகளை எண்ணக் கெடும்'

*என்றும், 'கெடுதல் - இரண்டறமும் சேர இழத்தல். சூழ்ந்த துணையானே கெடும்' என்றும்,*

- *காலிங்கர், 'அது காரணமாகப் பொல்லாதனவற்றை நினைப்பக் கெடுவர்' என்றும்,*

- *பாவாணர், 'அதைக் கைப்பற்றத் தீயவழிகளை ஆராய்ந்தெண்ணிய மட்டிற் கெட்டுவிடுவான்' என்றும்,*

- *வேறு சிலர், 'பிறர் பொருளை விரும்பித் தீயவழிகளைப் பற்ற எண்ணுவானாயின், அவன் கெட்டு ஒழிவான்' என்றும், 'பிறர் பொருளை விரும்பித் தீய வழிகளை எண்ணினால், (எண்ணிய அளவில்) கெட்டுப் போவான்' என்றும்,*

- *பலவாறாக, 'எண்ணியவுடனேயே கெட்டுவிடுவான்' என்பது போல, 'செயல் உடன்மை' புலப்படுத்திப் பொருள் கூறுவர். இஃது அறிவியலுக்கும் உலக இயங்கியலுக்கும் ஏற்றதன்று.*

- *இக் கெடுதல் நிகழ்வும் படிப்படியேதான் நிகழுமே யன்றி, உடனடியாக ஒருபோதும் எவ்விடத்தும் நிகழாது என்பதையும், அப்படி நிகழும் என்று குறிப்பிடுவது இயற்கைக்கு மாறானது என்பதையும் அறிவினார் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.*

3. *முந்தைய குறளில் கற்ற அறிவுடையார் பிறன்பொருளை வெஃகுதல் பற்றிக் கூறியவர், இதில் அருளறம் கடைப்பிடிப்பார் பிறன்பொருளை வெஃகுதல் பற்றிக் குறிப்பிடுதலால், அதன் பின் இதனை வைத்தார்.*

**கஎஎ. வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்**
**மாண்டற்(கு) அரிதாம் பயன். - 177**

**பொருள்கோள் முறை :**

**வெஃகிஆம் ஆக்கம் விளைவயின்**
**பயன் மாண்டற்கு அரிதாம்; வேண்டற்க.**

**பொழிப்புரை :** பிறன் பொருளைக் கவர்தலால் வரும் செல்வம் விளைவு தருங்கால், அதன் பயன் பெருமையோடு துய்த்தும் ஈந்தும் மகிழ்தற்கு இயலாது; ஆகலின் அதை விரும்பாது விடுக்க.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. **வெஃகிஆம் ஆக்கம்** - பிறன்பொருளைக் கவர்தலால் வரும் செல்வம்.

ஆம் ஆக்கம் - ஆகும் செல்வம் - ஆகி வரும் செல்வம்.

2. **விளைவயின் பயன்** - விளைவு தருங்கால், அதன் பயன்.

வயின் - இடத்து - விளைவு தரும் இடத்து.

விளைவு தருங்கால்.

'விளைவு' என்றது, ஈறு தவிர்ந்து முதனிலையாய் நின்று 'வயின்' சேர்ந்து வினைத்தொகையானது.

பயன் - அதனுடைய பயன்.

3. **மாண்டற்கு அரிதாம்** - பெருமையோடு துய்த்தும், ஈந்தும் மகிழ்தற்கு அரியது - இயலாது.

மாண்டல் + கு - மாண்டற்கு.

மாண்டல் - பெருமை பெறல்.

- பெருமையுடன் துய்ப்பது.

'பயன்' என்று கூறியதால் ஈதலும் துய்ப்பும் காட்டப் பெற்றன. செல்வத்துப் பயன் ஈதலும் துய்த்தலும் ஆகலின், என்னை?

**'செல்வத்துப் பயனே ஈதல்**
**துய்ப்பேம் எனினே தப்புந பலவே'** - **புறம்:189:7-8**

**'ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்'** - **குறுந்:63:1**

**'வழங்கலும் துய்த்தலும் தேற்றாதான் பெற்ற**
**முழங்கு முரசுடைச் செல்வம் - தழங்கருவி**
**வேய்முற்றி முத்(து)உதிரும் வெற்ப அதுவன்றோ**
**நாய்பெற்ற தெங்கம் பழம்.'** - **பழமொழி:151**

- உழைப்பில்லாமல், பிறனுடையதை வவ்வி ஈட்டிய செல்வம் ஆதலின் அதனைப் பிறர்க்குப் பெருமையுடன் ஈதற்கும், மகிழ்வுடன் துய்த்தற்கும் இயலாது என்க. என்னை?

**'தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது**
**உண்ணலின் ஊங்கினிய தில்'** - **1065**

**'மருந்தோமற்று ஊன்ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை**
**பீடழிய வந்த விடத்து'** - **968**

**'இறப்பே புரிந்த தொழிற்றாம் சிறப்புந்தான்**
**சீரல் லவர்கட் படின்'** - **976**

**'பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்**
**கலந்தீமை யால்திரிந் தற்று'** - **1000**

- என்பார் ஆகலின்.

4. **வேண்டற்க** - ஆகலின் அதை விரும்பாது விடுக.

- பிறனிடமிருந்து கவர்ந்து கொள்ளப்பெற்ற செல்வம், தன் முயற்சியால் வந்ததன்று; பெருமை இல்லாமல் வந்தது; செப்பமில்லாதவர்கண் வந்தது; பண்பிலானிடம் வந்தது; ஆகலின் அதைப் பிறர்க்குப் பெருமையுடன் ஈதலும் இயலாது; தாமே துய்த்தலும் இயலாது. எனவே அதனை விரும்ப வேண்டா என்றார், என்க.

5. முன்கூறிய ஆறு குறட்கருத்துகளுக்கும் இயைபாக, அவ்வாறு பிறனிடமிருந்து கவரப்பெற்ற செல்வம், என்ன நோக்கத்திற்காகக் கவரப் பெற்றதோ, அந்நோக்கத்திற்கும் உதவாது ஆகையால், அதனை விரும்பற்க என்று முடிவு கூறினார்; எனவே அவற்றின் பின் இதை வைத்தார்.

## கஎஅ. அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை வேண்டும் பிறன்கைப் பொருள். - 178

**பொருள்கோள் முறை :**

> ***செல்வத்திற்கு அஃகாமை யாதெனின்***
> ***பிறன்கைப் பொருள் வெஃகாமை வேண்டும்.***

**பொழிப்புரை :** ஏற்கனவே தான்கொண்ட செல்வம் குறையாமல் இருக்க வழி யாதெனின், பிறனுக்கு உரிய உடைமைப் பொருளைத் தான் கவராமல் இருப்பதே ஆகும்.

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. இதில் உள்ள 'வெஃகாமை வேண்டும் பிறன் கைப்பொருள்' என்பதனை, முன்னை உரையாசிரியர் பலரும், 'பிறன்வேண்டும் கைப்பொருள் வெஃகாமை' என்று கொண்டு கூட்டுவர்.

இதில் அவ்வாறல்லாது 'பிறன்கைப்பொருள் வெஃகாமை வேண்டும்' என்று கூட்டிப் பொழிப்பு உரைக்கப்பெற்றது என்க. அதன் உண்மை விளக்கத்தாற் புலப்படும்.

2. **செல்வத்திற்கு அஃகாமை யாதெனில்** - ஏற்கனவே தான்கொண்ட செல்வம் குறையாமல் இருக்க வழி யாதெனின்,

செல்வத்திற்கு - ஏற்கனவே தான் கொண்டிருக்கும் செல்வத்திற்கு.

அஃகாமை யாதெனில் - குறையாமை யாதெனில்.

- அஃதாவது, ஏற்கனவே தான் வைத்திருக்கும் செல்வமும் குறையாமல் இருக்க வழி யாதெனில்.

3. **பிறன்கைப் பொருள் வெஃகாமை வேண்டும்** - பிறனுக்குரிய உடைமைப் பொருளைத் தான் கவராமல் இருப்பதே ஆகும்.

- இதற்குப், 'பிறன்வேண்டும் கைப்பொருள் வெஃகாமை' என்றே அனைத்து உரையாசிரியர்களும் கொண்டு கூட்டிப், 'பிறன் வேண்டும் கைப்பொருளைத் தான் வேண்டாமையாம்' என்று பொருள் தருவர்.

- இது தேவையற்றது. 'வேண்டும்' என்னும் சொல்லை, வெஃகாமை என்பதுடன் சேர்த்து, 'வெஃகாமை வேண்டும்' என்று கொள்வதே மிகச் சிறந்த பொருள் வலிவைத் தருகிறது.

- மற்று, 'பிறன்கைப் பொருள்' என்னும் சொற்றொடரே, 'பிறனுக்குத் தேவையான உரிமை உடைமைப் பொருள்' என்று பொருள்பட்டு விடுவதால் 'வேண்டும்' எனும் தேவைச் சொல் அங்கு வேண்டாததாகிவிடுகிறது என்பதை அறிவினார் ஓர்ந்து கொள்க.

- மேலும், 'வெஃகாமை வேண்டும்' என்பதற்கும், 'விரும்பாமை வேண்டும்' என்றே பலர் பொதுப் பொருள் தந்துள்ளதும் நிறைவற்றதே. 'ஒருவன் பிறன்கைப் பொருளை விரும்பின அளவிலேயே, அவன் ஏற்கனவே கொண்டுள்ள செல்வம் குறைந்து போய்விடும்' என்று கொள்வது, உலகியல் பொருத்தமும், அறிவியல் பொருத்தமும் அற்றது என்க.

- இதற்கு, ஒருவன், 'பிறன் கைப்பொருளைத் தான் விரும்பிக் கவர்ந்து கொண்ட பின்னர், புதிதாக வரும் அக் கவர்பொருளை, ஏற்கனவே தன்னிடம் உள்ள பொருளுடன் அவன் கொண்டு வந்து சேர்க்கவும், பின்னர் அவன் களவுநிலை வெளிப்பட்டுக் கவரப்பட்ட அப்பொருளைக் குற்றப் பொருளாகக் கொண்டு, ஆட்சி அதிகாரிகள் அதனைக் கைப்பற்றும்பொழுது, அவன் முன்னரே தன் ஈட்டத்தால் சேர்த்து வைத்திருந்த சிறு செல்வப் பொருள்களும் அதனுடன் சேர்ந்து பறிக்கப்பட்டு, அவன் செல்வம் குறைந்துபடுமே தவிர, அது மற்றுத் தானாகக் குறைந்து போக இயங்கியலில் வாய்ப்பில்லை' என்று பொருள் கொள்வதுதான் உலகியல் பொருத்தம் உடையதும், அறிவியல் பொருத்தம் உடையதுமாம் என்று உய்த்துணர்ந்து கொள்க.

- இது தொடர்பாக, நூலாசிரியர், 'அழக்கொண்ட எல்லாம் அழப்போம்' (659) என்று கூறுவதும் இணைத்து எண்ணத்தக்கதாம் என்க.

4. முன்னைய குறளில், 'கவர்ந்து கொள்ளப்பட்ட பொருளை ஒருவன் பெருமையுடன் துய்க்கவும் பிறனுக்குக் கொடுக்கவும் இயலாது' என்றவர், இதில், அவ்வாறு கவர்ந்து கொள்ளப்பெற்றப் பொருள்

குற்றப் பொருள் எனப் பறிக்கப்படும் பொழுது, அவனுடைமையாக ஏற்கனவே அவன் வைத்துள்ள சிறு செல்வமும் அதனுடன் சேர்ந்து பறிக்கப்பட்டு, இல்லாமலோ, குறைந்தோ போய்விடும் என்று உலகியல் உண்மை கூறலால், அதன் பின்னர் இது வைக்கப் பெற்றது என்க.

## களகூ . அறன்அறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
## திறன்அறிந்து ஆங்கே திரு. - 179

**பொருள்கோள் முறை :**

**அறன்அறிந்து வெஃகா அறிவுடையார்த்**
**திறன்அறிந்து ஆங்கே திரு சேரும்.**

**பொழிப்புரை :** *'அறத்தின் தன்மை இதுதான்' அல்லது, 'இதுதான் பொதுமையறம்' என்று உணர்ந்து, பிறன் பொருளைக் கவர விரும்பாத அறிவுள்ளவரின் நல்திறத்தை அறிந்து செல்வம் அவரிடத்து வந்து தங்கும்.*

**சில விளக்கக் குறிப்புகள் :**

1. *உயிரல்லாத பொருளை உயிர்ப்பொருளாக உருவகம் செய்து, நூலாசிரியர் எழுதிய பாடல்களில் இதுவும் ஒன்று என்க. 'திரு சேரும்' என்றது, 'மழை வரும்' 'காற்று வீசும்' என்பது போலும் ஓர் உலக வழக்காயினும் 'திறனறிந்து ஆங்கே சேரும்' என்றது, பெருமை உருவகமாம் என்க. இதன் பாவியல் ஆளுமை முன்னர் (குறள் எண் : 167இல்) காட்டப் பெற்றது. விளக்கம் ஆங்கே காண்க.*

2. **அறன்அறிந்து வெஃகா அறிவுடையார்** - *'அறத்தின் தன்மை இது தான்', அல்லது 'இதுதான் பொதுமையறம்' என்று உணர்ந்து, பிறன் பொருளைக் கவர விரும்பாத அறிவுள்ளவரின்.*

*அறன் அறிந்து - அறத்தின் தன்மையும், அதன் பொதுமை நலன்களும் அறிந்து; அல்லது 'இதுதான் பொதுமையறம்' என்று உணர்ந்து, என்னை ?*

**'மறந்தும் பிறன்கேடு சூழற்க; சூழின்**
**அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு'** - **204**

*என்று அறங்கூறுவார் ஆகலின்.*

*- அறவுணர்வின் நன்மையும், பொதுமையும் அறிவாரே அறிவுடையார் ஆகலின் என்க.*

வெஃகா அறிவுடையார் - பிறன்பொருளைக் கவர விரும்பாத அறிவுள்ளவர்.

3. **திறனறிந்து ஆங்கே திரு சேரும்** - அவ்வாறான அறிவுள்ளவரின் நல்திறத்தை அறிந்து செல்வம் அவரிடத்து வந்து தங்கும்.

- நல்திறன் உள்ளவர் பிறன்பொருளைக் கவரா எண்ணமும் செயலும் உள்ள அறிவாளர் ஆகையால், இயல்பாகவே அவரின் நல்முயற்சியால் விளைவுறும் செல்வம் சிறிது சிறிதாகச் சேர்ந்து அவரிடத்துத் தங்கியிருக்கும்.

- எண்ணமும் செயலும் மாறுபாடாக அமையாமையின், இயல்பாகவே அவரிடம் வந்து சேரும் செல்வமும் சிதைவின்றி அவரிடத்து வந்து சேர்ந்து நிலைபெற்றிருக்கும் என்றபடி.

**'செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி**
**எச்சத்திற்(கு) ஏமாப்(பு) உடைத்து'** - **112**

- திருசேரும் என்பதைச் செல்வச் செல்வி வந்து சேரும் என்று உருவகமாகத் 'திறன் அறிந்து ஆங்கே சேரும்' என்றார். இஃதொரு பாவியல் நடைமுறை யென்க.

- பாவன்மைச் சான்றோர் இயற்கை நிகழ்வுகளை இவ்வாறு உருவகப்படுத்தி எழுதுவது இலக்கியங்களிற் பரக்கக் காணப்பெறும் ஒரு செய்தியாம்.

**'படுதிரை கொழீஇய பால்நிற எக்கர்த்**
**தொடியோர் மடிந்தெனத் துறை புலம்பின்றே'** - **நற்: 49:1-2**

**'பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்**
**தொகுமுகை இலங்கு எயிறுஆக**
**நகுமே தோழி நறுந்தண் காரே'** - **குறுந்:126: 3-5**

**'மரீஇத்தாம் கொண்டாரைக் கொண்டக்கால் போலாது**
**பிரியுங்கால் பிறர்எள்ள, பீடுஇன்றிப் புறம்மாறும், திரு.'** - **கலி:8:12-14**

- எனப் பலவாய் வரும் அத்தக உருவகங்களை இலக்கியங்களில் கண்டுகொள்க.

4. முன்னைய குறளில் செல்வம் குறையாமைக்குப் பிறன்கைப் பொருள் வெஃகாமை வேண்டும் என்று வழி கூறியவர், இதில் மேலும் செல்வம் சேரும் என்பதற்கும் அவ்வெஃகாமை வேண்டும் என்றதால் அதன் பின்னர் இதை வைத்தார், என்க.

**கஅ0. இறல்ஈனும் எண்ணாது வெஃகின் விறல்ஈனும்**
**வேண்டாமை என்னும் செருக்கு. - 180**

பொருள்கோள் முறை :

**எண்ணாது வெஃகின் இறல்ஈனும்**
**வேண்டாமை என்னும் செருக்கு விறல் ஈனும்.**

பொழிப்புரை : *தனக்கு வந்துசேரும் கேடுகளைப் பற்றிச் சிறிதும் சிந்தியாமல், பிறன்பொருளைத் தான் கவர விரும்பின், அஃது அவனுக்கு இறுதி அழிவைத் தரும். பிறன் பொருள் தனக்குத் தேவையில்லை என்னும் பெருமிதம் அவனுக்கு அனைத்து வெற்றியையும் தரும்.*

சில விளக்கக் குறிப்புகள் :

1. **எண்ணாது வெஃகின் இறல் ஈனும்** - *(தனக்கு வந்து சேரும் கேடுகளைப் பற்றிச்) சிறிதும் சிந்தியாமல், பிறன்பொருளைத் தான் கவர விரும்பின், அஃது அவனுக்கு இறுதி அழிவைத் தரும்.*

*எண்ணாது - தனக்கு வந்து சேரும் கேடுகளைப் பற்றிச் சிறிதும் சிந்தியாமல்.*

*- எண்ணிப் பார்ப்பது - சிந்தித்துப் பார்ப்பது.*

*- இன்னின்ன வழியில் இன்னின்ன கேடுகள் வரும், இன்னின்ன வழியில் இன்னின்ன நன்மைகள் வரும் என்று, எதிர்கால விளைவுகளைச் சிந்தித்துச் செயல்படுவதே அறிவுடைமை ஆகும். என்னை?*

**'எதிராகக் காக்கும் அறிவினார்க் கில்லை**
**அதிர வருவதோர் நோய்' - 429**
**'யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன்' - 341**
**'நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த**
**தன்மையான் ஆளப் படும்' - 511**

*- என்பார், ஆகலின்.*

*இறல் ஈனும் - இறுதி அழிவை உருவாக்கித் தரும். ஈனும் என்றது உருவாக்கித் தருதலை.*

2. **வேண்டாமை என்னும் செருக்கு விறல்ஈனும்** - *பிறன்பொருள் தனக்குத் தேவையில்லை என்னும் பெருமிதம் ஒருவனுக்கு அனைத்து வெற்றியையும் தரும்.*

வேண்டாமை என்னும் செருக்கு - 'பிறன்பொருள் தனக்குத் தேவையில்லை என்று எண்ணும் பெருமிதம்'.

- அனைவரும் பொருளை விரும்பும் பொருள் உலகில், ஒரு பொருளை வேண்டாம் என்பதற்கு உள்ளத்தில் தெளிவும் துணிவும் பற்றற்ற தன்மையும் வேண்டும்.

- இனி, பிறன்பொருளை வேண்டேன், விரும்பேன், அது தனக்குத் தேவையில்லை என்பதற்கு உள்ளத்தில் ஒரு செருக்கு உணர்வு, பெருமித உணர்வு தேவை. அவ் வுணர்வு உள்ளத்தின் செழுமையைக் காட்டும். எனவே, அதைப் பெருமிதம் என்றார்.

- இனி, அதையே சிறந்த செல்வம் என்றும் கூறுவார்.

**'வேண்டாமை அன்ன விழுச்செல்வம்' - 363**

- 'வேண்டும்' என்பதற்கு எல்லையில்லை. எல்லையில்லாத மனவுணர்வை எல்லைப்படுத்தியது 'வேண்டாமை' என்னும் உணர்வு. எனவே அதனைச் 'செருக்கு' (பெருமிதம்) என்றும் 'விழுச்செல்வம்' (பெருமைக்குரிய செல்வம்) என்றும் பெருமைப்படுத்தினார் என்க.

- செருக்கு - மிகையுணர்வு.

- உள்ளத்தின் நிறையுணர்வு.

- இது வடமொழியில் 'கர்வம்' எனப்பெறும். மற்று 'அகங்காரம்' என்பது தூய தமிழ்ச் சொல், 'காரம்' மிகுதி. உள்ளத்தின் மிகையுணர்வு எனப் பொருள் பெறும்.

அது நன்மையை நோக்கியதாயின் 'பெருமிதம்' எனப் பெறும்.

தீமையை நோக்கியதாயின் 'ஆணவம்' எனப் பெறும்.

- இனி, அது பொதுவாக, மனமயக்கத்தையும் மனநிறைவையும் மனக்களிப்பையும்கூடச் சிலவிடத்துக் குறிக்கும்.

**பெருமிதம் குறித்த செருக்கு :**

**'வேளாண்மை என்னும் செருக்கு' - 612**

**'நன்னயம் என்னும் செருக்கு' - 860**

**'பகைவர்கண் பட்ட செருக்கு' - 878**

**ஆணவம் குறித்த செருக்கு :**

**'செறுநர் செருக்கு அறுக்கும்' - 759**

**'ஒண்மை உடையம் யாம் என்னும் செருக்கு' - 844**

**மயக்கம் குறித்த செருக்கு :**

**'தீவினை என்னும் செருக்கு'** - **201**

**'யான்எனது என்னும் செருக்கு'** - **246**

**மனநிறைவு குறித்த செருக்கு :**

**'செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்'** - **431**

**'வள்ளியம் என்னும் செருக்கு'** - **598**

**'தகை செருக்கிப் புன்னலம் பாரிப்பார்'** - **916**

*விறல் ஈனும் - அனைத்து வெற்றியையும் தரும்.*

*விறல் - வெற்றி.*

*- வாழ்வியல் நோக்கி அனைத்து வெற்றியும் என்று பொருள் பெற்றது.*

*ஈனும் - பெற்றுத்தரும்.*

*- 'பெற்று' எனும் சிறப்புநிலை இங்குத் தேவையற்றதாகலின் தவிர்க்கப்பெற்றது.*

*3. வெஃகுதல் உணர்வின் முடிவான தீமையையும், வடிவான நன்மையையும் இக்குறள் உணர்த்துவதால் முன்னதன் பின்னரும், அதிகார முடிவாகவும் வைக்கப் பெற்றது.*



# பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் நூல்கள்

| | |
|---|---|
| ● பாவியக்கொத்து | 22.00 |
| ● ஐயை | 30.00 |
| ● கழுதை அழுத கதை | 35.00 |
| ● கொய்யாக்கனி | 25.00 |
| ● கற்பனை ஊற்று | 40.00 |
| ● திருக்குறள் மெய்ப்பொருளுரை - தொகுதி 1 | 100.00 |
| ● திருக்குறள் மெய்ப்பொருளுரை - தொகுதி 2 | 120.00 |
| ● திருக்குறள் மெய்ப்பொருளுரை - தொகுதி 3 | 120.00 |
| ● திருக்குறள் மெய்ப்பொருளுரை - தொகுதி 4 | 100.00 |
| ● வேண்டும் விடுதலை | 120.00 |
| ● பெரியார் | 40.00 |
| ● கனிச்சாறு(பெருஞ்சித்திரனார் பாடல்கள்) | |
| - முதல் தொகுதி | 50.00 |
| - 2ஆம் தொகுதி | 90.00 |
| ● நூறாசிரியம் | 100.00 |
| ● தன்னுணர்வு | 5.00 |
| ● பாவேந்தர் பாரதிதாசன் | 25.00 |
| ● இலக்கியத் துறையில் தமிழ் வளர்ச்சிக்கான ஆக்கப்பணிகள் | 5.00 |
| ● ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள் | 100.00 |
| ● சாதி ஒழிப்பு | 40.00 |
| ● செயலும் செயல் திறனும் | 90.00 |
| ● ஓ!ஓ! தமிழர்களே! | 11.00 |
| ● தனித்தமிழ் இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும் | 10.00 |
| ● நெருப்பாற்றில் எதிர் நீச்சல் | 6.00 |
| ● இளமை விடியல் | 50.00 |
| ● இட்ட சாவம் முட்டியது | 10.00 |
| ● மொழி ஞாயிறு பாவாணர் | 50.00 |
| ● எண் சுவை எண்பது | (அச்சில்) |
| ● மகபுகுவஞ்சி | (அச்சில்) |
| ● அறுபருவத் திருக்கூத்து | (அச்சில்) |
| ● கனிச்சாறு (பெருஞ்சித்திரனார் பாடல்கள்) | |
| - (தொகுதி 3 முதல் 8 வரை) | (அச்சில்) |
| ● பாவலரேறு பெருஞ்சித்திரனார் கட்டுரைகள் | (அச்சில்) |
| ● வாழ்வியல் முப்பது | (அச்சில்) |
| ● தமிழீழம் | (அச்சில்) |

*மற்றும்*

| | |
|---|---|
| ● பாவலரேறு நினைவேந்தல் மலர் (முதலமாண்டு) | 60.00 |
| ● பாவலரேறு வாழ்க்கைச் சுருக்கம் | 40.00 |
| ● மொழிஞாயிறு பாவாணர் மலர் | 100.00 |